

வணிக வங்கியியல்

(Commercial Banking)

FULL BOOK

இராம. முத்தையன்

தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்

த. பா. நி. (க.வெ.) வரிசை எண் — 706

வணிக வங்கியியல்

[பட்டப்படிப்பிற்குரியது]

(திருத்தப்பட்ட பாடத்திட்டத்தின்படி வெளியிடப்படுகின்றது)

ஆசிரியர்

இராம. முத்தையன், எம்.காம்.,
வணிகவியல் பேராசிரியர்,
பெரியார் ஈ. வெ. ரா. கல்லூரி,
திருச்சி.

தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்

First Edition — May, 1976

T.N.T.B.S. (C.P.) No. 706

© Government of Tamilnadu

COMMERCIAL BANKING

R. MUTHIAN

Price Rs. 7-95

Published by the Tamilnadu Textbook Society under the Centrally Sponsored Scheme of Production of books and literature in regional languages at the University level, of the Government of India in the Ministry of Education and Social Welfare (Department of Culture), New Delhi.

Printed out of the Paper allotted by the Government of India.

KUMARAN PRESS,
298, Mint Street,
Madras-600 001.

பதிப்புரை

வணிக வங்கியியல் என்ற இந் நூல் தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனத்தின் 706ஆவது வெளியீடாகும். கல்லூரித் தமிழ்க் குழுவின் சார்பில் வெளியான 35 நூல்களையும் சேர்த்து இதுவரை 741 நூல்கள் வெளிவந்துள்ளன. இந் நூல் மைய அரசு, கல்வி, சமூக நல அமைச்சகத்தின் 'மாநில மொழியில் பல்கலைக்கழக நூல்கள் வெளியிடும் திட்டத்'தின்கீழ் வெளியிடப்படுகிறது.

மேலாண்மை இயக்குநர்
தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்.

பொருளடக்கம்

			பக்கம்
1.	வங்கியின் வரலாறும் இலக்கணமும்	...	1
2.	வங்கிகளின் வகைகள்	...	7
3.	வணிக வங்கியின் பணிகள்	...	
4.	வணிக வங்கி இருப்புநிலைக் குறிப்பின் பகுப்பாய்வு	...	
5.	கடனுக்கம் செய்தல்	...	
6.	வணிக வங்கிகளின் அமைப்பு முறை	...	10
7.	தீர்வகங்கள்	...	1
8.	கடன் கருவிகள்	...	1
9.	இந்திய வங்கிமுறை வரலாறு	...	1
10.	வணிக வங்கிகளும் தொழில் கடனும்	...	2
11.	இந்திய ஸ்டேட் வங்கி	...	2
12.	நாணய மாற்று வங்கிகள்	...	2
13.	நாட்டு வங்கியரும் வட்டித் தொழிலரும்	...	3
14.	வணிக வங்கிகளின் புதிய திட்டங்கள்	...	3
15.	வணிக வங்கிகள் நாட்டுடைமையாக்கப் படுதல்	...	3
	மேற்கோள் நூற்பட்டியல்	...	3
	கலைச்சொற்கள்	...	

1. வங்கியின் வரலாறும் இலக்கணமும்

'வங்கி' என்ற சொல் நடைமுறையில் வணிக வங்கிகளை மட்டுமே குறிப்பிடும் வகையில் பயன்படுத்தப்படுகிறது. இருப்பினும், 'வங்கி' என்ற சொல் பொதுவான சொல்லாகும். இச் சொல், இதன் பொருள் அடிப்படையில், வணிக வங்கிகளை மட்டுமன்றி, மைய வங்கி, கூட்டுறவு வங்கிகள், நாணய மாற்று வங்கிகள் ஆகியவற்றையும் குறிப்பிடும் என்று கூறின் அது தவருகாது. இருப்பினும், இந் நூலைப் பொறுத்தவரை நாம் வணிக வங்கிகளின் தன்மைகள், அவைகளின் பணிகள், நாட்டின் பொருளாதார நிலையினை நிர்ணயிப்பதில் இத்தகைய வங்கிகள் ஏற்றுக்கொண்டுள்ள பங்கு ஆகியவற்றைக் குறித்து அறிய முற்படுவோம்.

வங்கியத் தொழில், சமீப காலத்தில்தான் தொடங்கப்பட்டதாகத் தோன்றினும், இத்தகைய நிறுவனங்கள் இந்தியாவில் மட்டுமன்றி, உலகின் பிறநாடுகளிலும் நெடுங்காலமாகச் செயல்பட்டு வருகின்றன. மேலும் வங்கியியல் முறையும், தொழில் நிறுவனங்களால் நீண்ட காலமாகக் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. பொருளாதார வளர்ச்சியின் அடைப்படையிலேயே, வங்கியியல் தொழில் உருவாக்கப்பட்டுள்ளதெனின் அது மிகையாகாது.

தொழிற்புரட்சிக்கு முன்பாக, தொழில் நிறுவனங்கள் சிறிய அளவில் செயல்பட்டு வந்ததன் காரணமாக, அவை வணிக வங்கிகளின் முக்கியத்துவத்தை உணர்ந்ததாகத் தெரியவில்லை. ஆனால், தொழிற்புரட்சிக்குப் பிறகு, தொழில் நிறுவனங்கள் விரிவாக்கப்பட்டதன் காரணமாக அவைகள் வணிக வங்கிகளின் முக்கியத்துவத்தினை உணர ஆரம்பித்தன. இன்றைய நிலையில் வணிக வங்கிகள் இல்லையேல் தொழில் நிறுவனங்கள் செயல்படாத

நிலையினை எய்தக்கூடுமென்று கூறலாம். நட்ட அச்சத்தினை (risk) எதிர்நோக்க விரும்பாது நிரந்தரமாக வருவாய் ஈட்ட விரும்பி, முதலீடு செய்ய முனைவோருக்கு வணிக வங்கிகள் பேருதவி புரிகின்றன.

தற்கால வணிக வங்கிகள் கீழ்க்காணும் மூன்று மூதாதையர்களைப் பெற்றுள்ளன :

(அ) வியாபார வங்கியர் (Merchant Bankers)

(ஆ) வட்டித் தொழிலர் (Money Lenders)

(இ) பொற்கொல்லர்கள் (Gold-smiths)

இவ் விவரங்களைப்பற்றிப் பின் பகுதியில் விளக்கலாம். வங்கியியலும் ஒருவிதமான தொழிலேயாகும். எனவே, இதரத் தொழில் நிறுவனங்களைப் போன்றே வங்கிகளும் இலாபமீட்டும் வகையில் தொழில் புரிதல் வேண்டும். ஆகையால், இதரத் தொழில் நிறுவனங்களுக்குப் பொருந்தும் கோட்பாடுகள் வங்கிகளுக்கும் பொருந்தும் என்று கூறலாம். இதரத் தொழில் நிறுவனங்கள்—அவை உற்பத்தி நிறுவனங்களாக விருப்பின், பண்டங்களை உற்பத்தி செய்வதில் ஈடுபட்டுள்ளன. உற்பத்தியில் ஈடுபடாத நிறுவனங்கள் பண்டங்களை வழங்குவதில் ஈடுபட்டுள்ளன. வழங்கல் தொழிலில் ஈடுபட்டுள்ள நிறுவனங்கள். பிற நிறுவனங்கள் உற்பத்தி செய்த பண்டங்களை ஒரு குறிப்பிட்ட விலைக்கு வாங்கி அவற்றைக் கூடுதல் விலைக்கு விற்பதன் மூலம் இலாபமீட்டுகின்றன. அது போன்றே வங்கிகளும் பணத்தைச் சேமித்து வைத்திருப்பவர்களிடமிருந்து குறைந்த வட்டிக்குப் பணம் பெற்று அவ்வாறு பெற்ற பணத்தினைக் கடன் வாங்க விழையும் வாடிக்கைக்காரர்களுக்குச் சற்று அதிக வட்டிக்குக் கடன் கொடுப்பதன் மூலம் இலாபம் ஈட்டுகின்றன. எனவே, வணிக வங்கிகள் பணம் சேமித்து வைத்திருப்பவர்களையும், கடன் வாங்க விழைவோரையும் இணைக்கும் பாலமாகத் திகழ்கின்றன எனக் குறிப்பிடின் அது மிகையாகாது.

வங்கியியல் தொழில் சிறந்த முறையில், வளர்ச்சியடைந்த நிலையில் கடந்த இருநூறு ஆண்டுகளாகத்தான் செயல்பட்டு வருகிறதெனினும், இத் தொழில் மிகப் புதியதன்று. தொன்று தொட்டு இத்தகைய தொழில் இருந்து வந்துள்ளது. இருப்பினும், தொழில் நிறுவனங்கள் மிகச்சிறிய அளவில் இயங்கிவந்த காரணத்தினால் அவைகள் வங்கியியல் தொழிலின் முக்கியத்துவத்தினை உணர்ந்திருக்கவில்லை. ஆனால், பண்பாட்டின் வளர்ச்சியின்

அடிப்படையில் மக்கள் தேவை பெருகியதன் விளைவாகத் தொழில் நிறுவனங்கள் வங்கிகளின் முக்கியத்துவத்தினை உணர ஆரம்பித்தன.

'வங்கி' என்ற சொல்லின் வளர்ச்சி குறித்தும், வங்கித் தொழில் தோன்றிய நிலை குறித்தும் ஒருமித்த கருத்துத் திகழ வில்லை. இருப்பினும், கூட்டு நிதியினைத் திரட்டி முதலீடு செய்யும் தொழில் நிறுவனம் என்னும் பொருள்பட, வங்கி என்ற சொல் செர்மானிய மொழியினின்று வந்த சொல்லாகும் என்னும் கூற்றுச் சற்றுப் பொருத்தமாக அமைகிறது. எனவே, இக் கூற்றினைப் பொதுப்படையாக ஏற்றுக் கொள்வதில் தவறில்லை என்று கூறலாம். கிறிஸ்து பிறப்பதற்கு ஏறத்தாழ 2000 ஆண்டுகளுக்கு முன்பே பாபிலோனிய நாட்டைச் சார்ந்த மக்கள் வங்கியியல் தொழிலை வளர்த்தனர் என்று கூறப்படுகிறது. பாபிலோனைச் சார்ந்த ஆலயங்கள் வங்கிகளாகப் பயன்படுத்தப்பட்டன என்றும் அவ்வாலயங்களால்தாம் வங்கித் தொழில் அந்நாட்டில் வளர்ச்சி யுற்றது என்றும் அறிகிறோம்.

இருப்பினும், நாம் முன் பகுதியில் குறிப்பிட்டது போன்றே இன்றைய வணிக வங்கிகள், வியாபார வங்கியர் (Merchant Bankers), வட்டித் தொழிலர் (Money lenders), பொற்கொல்லர்கள் ஆகிய மூன்று மூதாதையர்களைப் பெற்றுள்ளன. வியாபார வங்கியர், பண்டங்களை விற்பனை செய்வதில் ஈடுபட்டிருந்த வியாபாரிகளாவர். அவர்கள் தங்கள் நிரந்தரத் தொழிலினைத் தவிர்த்துத் தங்களது வாடிக்கைக்காரர்களது பணத்தைப் பாது காப்புக்காக அவர்களிடமிருந்து பெற்றுப் பாதுகாத்து, அவர்கள் விரும்பியபொழுது திருப்பி அளித்துப் பணி புரிந்தனர். அவ் வியாபாரிகள், பல்வேறு நாடுகளிலுள்ள தொழில் நிறுவனங் களுடனும் தொடர்பு கொண்டிருந்தமையின், ஒரு குறிப்பிட்ட வாடிக்கைக்காரர் வெளிநாடு செல்லும் பொருட்டுத் தம்முடைய வைப்புத் தொகையைத் திரும்பப்பெற விரும்பும் பொழுது அவ் வங்கியர், அவருடைய வைப்புத் தொகையினை ரொக்கமாகக் கொடுக்காது அவர் எந்த நாட்டுக்குச் செல்ல விருக்கிறாரோ அந் நாட்டிலுள்ள அவருக்குத் தெரிந்த தொழில் நிறுவனத்திற்கு, அக் குறிப்பிட்ட வாடிக்கைக்காரருக்கு ஒரு குறிப்பிட்ட தொகையினைச் செலுத்தும் வகையில் ஒரு கடிதம் எழுதி அதனை வாடிக்கைக் காரரிடமே கொடுத்து அனுப்பும் பழக்கத்தினைக் கையாண்டனர். இதன் காரணமாக வெளிநாடு செல்லும் வாடிக்கைக்காரர் பணத்தைச் சுமந்து செல்ல வேண்டிய அவசியமில்லை.

வங்கியின் இரண்டாவது மூதாதையர் இன்று பெரும்பாலும் எல்லோராலும் குறைகூறப்படும் வட்டித் தொழிலராகும். பணத் தினைக் கடனுகக் கொடுத்தலும் கடனுகப் பெறுதலும் பழமை மிகுந்த நடவடிக்கையாகும். எனவே, சிற்றூர்களைச் சார்ந்த வட்டித் தொழிலர் பழங்காலங்களிலும் தொழில் புரிந்து இன்றைய வங்கியின் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருந்திருக்கின்றனர். பெரும்பாலும் வட்டித் தொழிலர்கள் தங்கள் சொந்த மூலதனத் தைக்கொண்டே தொழில் புரிந்து வந்தனர். ஆனுல், ஒரு குறிப் பிட்ட நிலைக்குப் பிறகு அவர்களுக்கு நெருங்கிய நண்பர்களோ, உறவினர்களோ தங்களிடமிருந்த சேமிப்புத் தொகையினை வட்டித் தொழிலரிடம் கொடுத்து அவர் மூலம் அதனை முதலீடு செய்ய முனைந்தனர். இந் நிலையினை அடைந்த வட்டித் தொழிலர், வங்கியர் நிலையினை அடைந்துவிட்டதாகக் கூறலாம். ஆரம்ப நிலையில் வட்டித் தொழிலர்கள் தங்கள் நண்பர்கள், உறவினர்கள் ஆகியோரது சேமிப்புத் தொகையினை முதலீடு செய்யும் பணியினை மேற்கொண்டதற்காக அவர்களிடமிருந்து கழிவுத் தொகையினைப் (commission) பெற்றுக்கொண்டனர். ஆனுல், அவ்வாறு கழிவுத் தொகை வாயிலாகப் பெற்ற இலாபம் குறை வாக இருந்த காரணத்தினுல், வட்டித் தொழிலர் நண்பர், உறவினர்களின் சேமிப்புத் தொகையினை ஒரு குறிப்பிட்ட வட்டி வீதத்தில் பெற்று அத் தொகையினை அதிக வட்டி வீதத்தில் கடன் வழங்கி அந் நடவடிக்கையின் வாயிலாகப் பெற்ற இலாபம் முழுவதனையும் வட்டித் தொழிலரே பெறவிழைந்தனர்.

கூடுதலான வட்டி வீதத்தில் கடன் தொகையினை அளிப் தனைத் தடுக்கும் வகையில் இக் காலத்தில் பல்வேறு சட்டங்கள் இயற்றப்பட்டிருப்பினும் அக் காலத்திலேயே கூடுதலான வீதத் தில் வட்டி வசூலிப்பது மதக்கோட்பாடுகளின் அடிப்படையில் கண்டிக்கத்தக்கது என்று கருதப்பட்டது. எனவே, வட்டித் தொழிலர் பொதுவாக நேர்மையான வட்டி வீதத்திலேயே கடன் வழங்கிவந்தனர்.

இன்றைய வங்கிகளில் பெரும்பாலானவை, வட்டித் தொழிலரின் இத்தகைய பணியினைப் புரிகின்றன என்று கூறலாம். ஒவ்வொரு வங்கியும், தனது வருவாயிலிருந்து பணம் சேமித்து வைத்துள்ள நபர்களிடமிருந்து அவர்களுடைய சேமிப்புத் தொகையினைத் திரட்டி அத் தொகையினைக்கொண்டு கடன் வாங்க விழையும் நபர்களுக்குக் கடன் வழங்குகிறது. இத்தகைய பணி இன்றைய உலகில் இன்றியமையாதது என்பதுடன் தவிர்க்க முடியாததும் கூட. பெரும்பாலான வணிக வங்கிகள் இத்தகைய பணியினை மட்டுமே புரிந்து வருகின்றன.

ஆனால், வங்கிகள் பிறருடைய சேமிப்புத் தொகையினைப்பெற்று அதனை முதலீடு செய்வதில் மட்டுமே முனைந்திருக்குமேயானால், இன்றைய உலகில் நிலவும் பொருளாதார, பண நெருக்கடி இருந்திருக்க வாய்ப்பில்லை. வணிக வங்கிகள் மக்களுடைய சேமிப்புத் தொகையினைத் திரட்டி, அதனை முதலீடு செய்து வருவாய் ஈட்டுவதுடன் மட்டும் மனநிறைவெய்துவதில்லை. அவைகள், பணத்தை உற்பத்திசெய்து அதன் வாயிலாகக் கூடுதலான வருவாய் ஈட்ட விழைகின்றன. இந்நிலையில் அவைகள் தங்களுடைய மூதாதையர்களான பொற்கொல்லர்களின் பணிகளைப் பின்பற்றுகின்றன என்று குறிப்பிடலாம்.

(3) பொற்கொல்லர் பின்னணியில் அமைந்துள்ள வங்கியியல் முறை இங்கிலாந்து நாட்டிலிருந்து பரவியதாகும். ஆரம்பநிலையில், பொற்கொல்லர்கள் பொதுமக்களுடைய பொற்காசுகளைப் பாதுகாக்கும் பொருட்டுப் பெற்றுக்கொண்டு அதற்குச் சான்றாக ஓர் இரசீதினை வழங்கினர். இந்நிலையில் சிறிது மாற்றம் செய்து பொற்காசுகளைப் பெற்றுக்கொண்ட பொற்கொல்லர்கள் அதற்குச் சான்றாக ஓர் இரசீதினை வழங்குவதற்குப் பதிலாகப் பல்வேறு மதிப்புள்ள, பாதுகாப்புக்காக அளிக்கப்பட்ட பொற்காசுகளின் மதிப்புக்கான பல இரசீதுகளை வழங்க ஆரம்பித்தது இரண்டாவது நிலையாகும். இவ்வாறு பொற்கொல்லர்கள் பொற்காசுகளைப் பெற்று அதற்கு ஈடான இரசீதினை வழங்க ஆரம்பித்ததன் அடிப்படையிலேயே பிற்காலத்தில் மைய வங்கிகள் நோட்டுகள் அச்சடிக்கும் முறையினைக் கண்டுபிடித்ததாகக் கூறப்படுகிறது.

பொற்காசுகளைப் பாதுகாப்புக்காகப் பொற்கொல்லர்களிடம் கொடுத்து வைத்த பொதுமக்கள், தாங்கள் பிறருக்குப் பணம் கொடுக்க வேண்டி இருந்தால் அக் குறிப்பிட்ட பொற்கொல்லருக்கு, தங்கள் கணக்கிலிருந்து ஒரு குறிப்பிட்ட தொகையினைக் கடிதத்தில் குறிப்பிட்ட நபருக்குச் செலுத்தும் வகையில் கடிதம் எழுதித் தங்கள் நடவடிக்கைகளைப் புரிந்துவந்தனர். அவ்வாறு அவர்களால் அளிக்கப்பட்ட கடிதங்களின் அடிப்படையில் உருவானதே காசோலையாகும். எனவே, வைப்புத் தொகையினைக் கடிதம் வழியாகப் பிறருக்கு மாற்றிக் கொடுத்தது அடுத்தநிலை.

மேற்குறிப்பிட்ட நிலைகளில் பொற்கொல்லர்கள் கையாண்ட முக்கியக் கோட்பாடு, அவர்கள் பொதுமக்களிடமிருந்து பாதுகாப்புக்காகப் பெற்றுக்கொண்ட தொகைக்கு ஈடான மதிப்புக்கு இரசீதினை வழங்கியதேயாகும். சிறிது காலம் சென்ற பிறகு தங்களிடம் பாதுகாப்புக்காகச் செலுத்தப்பட்ட தொகை ஒரு சிலரால் அடிக்கடி பெறப்படவில்லை என்பதனையும் அவ்வாறு

ஒரு சிலரால் திரும்பப் பெறப்பட்ட தொகையும், அவர் பிறருக்குச் செலுத்தியதன்வாயிலாக மீண்டும் தங்களிடமே வேறொரு நபருடைய கணக்கில் வைப்புத் தொகையாக வருவதையும் உணர்ந்தனர். அதாவது, அவர்கள் கொடுக்கும் இரசீதின் மதிப்பு அவர்கள் பெற்றுள்ள பொற்காசுகளின் மதிப்புக்குச் சமமாக இருத்தல் அவசியமில்லை என்பதனை உணர்ந்தனர். இந்நிலையில் நம்பிக்கை வாய்ந்த வாடிக்கைக்காரர்கள் பொற்கொல்லரிடம் கடன் வாங்க விழையும்போது போதிய பொற்காசுகள் இல்லாதிருந்தும், அதற்குரிய சான்றினை (பொற்காசுகளை அவர் வைப்புத் தொகையாகச் செலுத்தியதைப் போன்று) வழங்க ஆரம்பித்தனர். இந்நிலையே வணிக வங்கிகளின் மிக முன்னேற்றமடைந்த நிலையாகும். இந் நிலையினையே 'வணிக வங்கிகள் பணத்தினை உற்பத்தி செய்யும் நிலை' என்று கூறுகிறோம். இவ் விவரங்கள் குறித்துப் பின்னர் அத்தியாயத்தில் விளக்கலாம். இந் நிலையில் பொற்கொல்லர்கள் வழங்கிய இரசீதுகளின் மதிப்பு அவர்கள் பெற்ற பொற்காசுகளின் மதிப்பைப்போன்று பன்மடங்கு அதிகமிருந்தன. இதன் வாயிலாகவே இன்றைய வணிக வங்கிகள் பெரும் இலாபம் ஈட்டுகின்றன. ஒவ்வொரு நாட்டின் பொருளாதார நிலையினையும் இதனால் சீர்குலைய வைக்கின்றன.

எனவே, இன்றைய வங்கி வெவ்வேறு பணிகளின் அடிப்படையில் மூன்று மூதாதையர்களைப் பெற்றுள்ளதென்று குறிப்பிடலாம். வியாபார வங்கியர்களைப் போன்று வணிக வங்கிகள் பல்வேறு முறைகள்மூலம் வெளிநாட்டு வியாபாரத்தில் ஈடுபடுகின்றன. பண்டங்கள் இறக்குமதி செய்ய வழி வகுத்து அதற்குரிய பணத்தினை வெளிநாட்டு விற்பனையாளர்களுக்குச் செலுத்த உதவி புரிகின்றன. வட்டித் தொழிலரைப்போன்று பொதுமக்களிடமிருந்து அவர்கள் சேமிப்புத் தொகையினை வைப்புத் தொகையாகப் பெறுகின்றன. அவ்வாறு பெற்ற வைப்புத் தொகையினைக் கடன்பெற விழையும் நபர்களுக்கும், நிறுவனங்களுக்கும் கடனுதவி கொடுத்து முதலீடு செய்கின்றன. இந் நிலையில் ஒவ்வொரு வங்கியும் கடனுளர், கடனுளி ஆகிய இரு நிலைகளையும் பெறுகிறது. வாடிக்கைக்காரர்களிடமிருந்து வைப்புத் தொகையினைப் பெறும்போது கடனுளி என்ற நிலையினையும், அத் தொகையினை முதலீடு செய்யும்போது கடனுளர் என்ற நிலையினையும் அடைகிறது. பொற்கொல்லர்களைப்போன்று, ஒவ்வொரு வங்கியும், தான் பெற்றுள்ள வைப்புத் தொகையைப்போன்று பன்மடங்கு மதிப்புள்ள தொகைக்குப் பணத்தினை உற்பத்திசெய்ய முனைகிறது.

வங்கியின் இலக்கணம்: வங்கியத் தொழில் நடைபெற வங்கி அல்லது வங்கியர், வாடிக்கைக்காரர் என்ற இரு வகை

யினரது ஒத்துழைப்பு அவசியமாகிறது. வங்கியர் என்ற சொல்லுக்கு இந்தியாவைப் பொறுத்தவரை, 1956ஆம் ஆண்டின் இந்தியக் கம்பெனித் திருத்தச் சட்டம் இயற்றப்பட்டவரை, சட்ட பூர்வமான இலக்கணம் இல்லை என்று கூறலாம். இரண்டாவது சொல் அதாவது வாடிக்கைக்காரர் என்ற சொல்லுக்கு இலக்கணமே சட்ட பூர்வமாகக் கொடுக்கப்படவில்லை. ஒவ்வொரு நிறுவனமும், அது புரிகின்ற பணிகளின் அடிப்படையிலேயே விளக்கப்படுகின்றது. எனவே, வங்கிப் பணிகளைப் புரிகின்ற ஒரு நிறுவனத்தை வங்கி என்று குறிப்பிடலாம். ஆனால், இவ் விலக்கணம் சிறந்ததென்று கூற இயலாது. ஏனெனில், ஒரு சொல்லின் இலக்கணம் முழுமையாக இருக்க வேண்டுமாயின், அவ் விலக்கணம் அதன் தன்மைகளை நன்கு விளக்குதல் வேண்டும். இதன் அடிப்படையில் நோக்குமிடத்து மேற்குறிப்பிட்ட இலக்கணம் வங்கியின் தன்மைகளை முழுமையாக விளக்கவில்லை.

டாக்டர் ஹெர்பர்ட் கார்ட் (Dr. Herbert L. Hart) என்ற வல்லுநருடைய கருத்துப்படி 'எந்த நபரிடமிருந்து அல்லது எந்த நபருக்காக அவருடைய நடைமுறைக் கணக்கில் வைப்புத் தொகை பெறுகிறாரோ, அவரால் எழுதப்படும் காசோலைக்குத் தொழில் முறையில் மதிப்பளிப்பவரே வங்கியர்.' 'வங்கியியல் ஒழுங்காற்றுச் சட்டம்' (Banking Regulation Act, 1949) வங்கித் தொழிலை, 'பொதுமக்களிடமிருந்து வைப்புகளைக் கடன் கொடுப்பதற்காகவும் அல்லது முதலீடு செய்வதற்காகவும் ஏற்றுக் கொள்ளுதலும், காசோலை, வரைதாள் (Draft), ஆணை அல்லது வேறு 'வழி மூலமோ எடுக்கக் கூடியதாகவும், கேட்டவுடனேயோ வேறு வகையிலோ திருப்பித்தரக் கூடியதாகவும் இருத்தலும் ஆகும்' என்று விளக்குகிறது.

அது போன்றே சர் ஜான் பேஜட் (Sir John Paget) என்ற வல்லுநருடைய கருத்துப்படி வங்கியருடன், வங்கியல் தொழில் சம்பந்தப்பட்ட தொடர்புடையவரே வாடிக்கைக்காரர் எனப் படுவர். எனவே, வங்கித்தொழில் சரிவர நடைபெற வங்கியர், வாடிக்கைக்காரர் எனும் இரு வகையினரது பணியும் ஒத்துழைப்பும் தேவைப்படுகின்றதெனக் கூறலாம்.

வியாபார வங்கியர், வட்டித் தொழிலர், பொற்கொல்லர் ஆகிய மூன்று மூதாதையர்களை அடிப்படையாகக்கொண்டு இந்த அளவிற்கு வளர்ச்சி பெற்றுள்ள வங்கிகள், காலப்போக்கில் சிறிது சிறிதாக வளர்ச்சியுற்று இந் நிலையினை அடைந்துள்ளன. வங்கி என்ற சொல்லின் அடிப்படை குறித்துக் கருத்து வேற்றுமைகள்

நிலவுகின்றன. ஒரு சிலருடைய கருத்துப்படி இச் சொல் யூதர்கள் நடத்திய லேவாதேவி நடவடிக்கைகளினின்று வந்ததாகவும், மற்றொரு சாரார் கருத்துப்படி இச் சொல் செர்மானியர்கள் நடத்திய லேவாதேவி நடவடிக்கைகளினின்று வந்ததாகவும் கருத்துத் தெரிவிக்கப்படுகிறது.

வங்கிகளின் வரலாறு : வைப்புகளைப் பெறுதல், பெற்ற வைப்புத் தொகையினை முதலீடு செய்தல் ஆகிய இவ் விரண்டு முக்கியப் பணிகளில் ஈடுபட்டுள்ள வங்கிகள் சமீபகாலத்தில்தான் அமைக்கப்பெற்றவைகளாகத் தோன்றினும், இவைகள் இயேசு பிறப்பதற்கு ஏறத்தாழ இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே பாபிலோனியர்கள் கோயில்களைக் கடன் கொடுத்தல், வாங்கல் ஆகிய தொழில்களைப் புரியப் பயன்படுத்தி இருக்கின்றனர். பொது மக்கள் மதத்தில் நம்பிக்கை இழந்த காலம் வரையிலும், பாபிலோனியாவிலிருந்த மதப் பாதிரியார்கள் நிதியமைச்சர்களாகப் பணியாற்றி வந்துள்ளனர். இத்தகைய வங்கித்தொழில் வேறு பல நாடுகளிலும் பரவியிருந்ததற்குச் சான்றுகள் பல உள. முற்காலத்தில், வைப்புத்தொகை பெறுதல், கடன் கொடுத்தல் ஆகிய பணிகள் மட்டுமே வங்கியியற் பணிகளாகக் கருதப்பட்டன. வைப்புத்தொகை பெறுதல், கடன் கொடுத்தல் என்னும் வங்கித் தொழில் பல்வேறு நாடுகளிலும் அவைகளின் சூழ்நிலைக்கேற்ப அமைந்திருந்ததாக ஏடுகளின் வாயிலாக அறிகிறோம்.

இருப்பினும் வட்டி திரட்டுவது பாவம் நிறைந்த செயல், இயற்கைக்குப் புறம்பானது எனக் கருதப்பட்டதால் ஒரு சில நாடுகளில் வங்கியியல்தொழில் போதிய வளர்ச்சி பெறவில்லை. இன்றும் ஒரு சில முகமதியர்கள், தங்கள் மதக் கோட்பாட்டின்படி வட்டி வாங்குதலைப் பாவச் செயலெனக் கருதி, லேவாதேவித் தொழிலினை வெறுத்தொதுக்குவதை நன்கறிவோம்.

பண்பாட்டு முன்னேற்றத்தின் அடிப்படையில் பன்னிரண்டாம் நூற்றாண்டின் நடுவில்தான் வங்கிகளைச் சிறந்த கட்டுக் கோப்பான முறையில் அமைக்க முயற்சிகள் எடுக்கப்பட்டன. அம் முயற்சிகள் உரிய பயனை அளித்தனவென்றும் கூறலாம். வங்கி என்ற பெயரைப் பயன்படுத்தாவிடினும் வெனிசு நாட்டிலும், ஜெனீவா நாட்டிலும் (Venice and Geneva) தொடங்கப்பட்ட லேவாதேவி நிறுவனங்களே இக் காலத்திய வங்கிகளின் முன்னோடிகளாகக் கருதப்படுகின்றன.

பொற்கொல்லர்கள் பணிகளடிப்படையிலும், வட்டித் தொழிலர் பணிகளடிப்படையிலும் தொடங்கப்பட்ட வங்கிகள் பல்வேறு

நாடுகளில் ஒவ்வொரு நாட்டின் சூழ்நிலைகளுக்கும் தேவைகளுக்கும் ஏற்றவாறு பல்வேறு பணிகளைப் புரிந்து விரிவடையத் தொடங்கின. தொடக்க காலத்தில் அவைகள் மேற்கொண்ட பணிகள், நாட்டு மக்களுக்கு நன்மை பயக்கும் வகையில் அரசுக்கு ஊறுவிளைவிக்காத நிலையிலிருந்தாலும், காலப்போக்கில் அவைகளின் பணிகள் ஒரே தன்மை படைத்தவைகளாகவும், வங்கிகளின் உரிமையாளர்களுக்கு மட்டும் நன்மை பயக்கும் வகையிலும் அமைந்திருந்தன. எனவே, அவ் வங்கிகளின் பணிகளை அரசு கட்டுப்பாடுசெய்து நெறிப்படுத்த வேண்டிய அவசியம் எழுந்தது. இக் காரணத்தினாலேயே பல நாடுகளிலும் வங்கிகளைக் கட்டுப்பாடு செய்யும் வகையில், தனிப்பட்ட சட்டங்கள் நிறைவேற்றப்பட்டன. இச் சட்டங்களின்வழி வங்கிகள் கட்டுப்பாட்டுடன் இயக்கப்பட்டன.

இவ்வாறு வங்கிகளைக் கட்டுப்பாடு செய்யும் முகத்தான் பல்வேறு நாடுகளிலும் நிறைவேற்றப்பட்ட சட்டங்களைச் செயல்படுத்தும் வகையில் ஒரு தனிப்பட்ட நிறுவனத்தை நிறுவவேண்டியதன் முக்கியத்துவத்தினை ஒவ்வோர் அரசும் உணர ஆரம்பித்தது. இந் நிலையின் விளைவே ஒவ்வொரு நாட்டிலும் மைய வங்கி நிறுவப்பட்டதாகும். பல்வேறு வகையான வங்கிகளின் பணிகளைக் கட்டுப்படுத்தி இணைக்கவும் வணிக வங்கிகளுக்கு வழிகாட்டியாக அமைந்து அவைகளின் பணிகளைக் கட்டுப்படுத்தவும் நிறுவப்பட்ட வங்கியே மைய வங்கியாகும்.

இங்கிலாந்து நாட்டில் வங்கிகளின் வளர்ச்சி:- ஒவ்வொரு துறையின் வளர்ச்சிக்கும் ஒரு குறிப்பிட்ட நாடு ஆதாரமாக அமைவதை நாம் நன்கறிவோம். வங்கிகள் கட்டமைப்பான முறையில் இங்கிலாந்து தேசத்தில்தான் முதன்முதல் வளர்ச்சியுற ஆரம்பித்ததன் காரணமாக இங்கிலாந்து, வங்கி முறையின் தாயகமாகக் கருதப்படுகிறது. எனவே, இங்கிலாந்தில் பரவிய வங்கி முறையின் அடிப்படையில்தான் இதர நாடுகளிலும் வங்கிகள் நிறுவப்பட்டனவென்று குறிப்பிடலாம்.

பணம் படைத்த செல்வந்தர்கள், தங்களிடமிருந்த சேமிப்புப் பணத்தைத் தங்கள் நம்பிக்கைக்குப் பாத்திரமான வியாபாரிகளிடம் கொடுத்து வைத்திருந்தனரென்றும், அவர்கள் வியாபார வங்கியரென்றழைக்கப்பட்டனரென்றும் இவ் வத்தியாயத்தின் முன் பகுதியிலேயே விளக்கியுள்ளோம். அவ் வியாபார வங்கியர் அவ்வாறு தாங்கள் பெற்ற பணத்தைப் பாதுகாக்கக் கருதி இங்கிலாந்து அரசின் தூருவூலமாகத் திகழ்ந்த இலண்டன் கோட்டையில் செலுத்திவைத்திருந்தனர். அவர்கள் அவ்வாறு செலுத்தி

யிருந்ததன் உட்கருத்து என்னவெனில், அவ் வியாபார வங்கியருக்குப் பணம் தேவைப்படும்பொழுது அதனை அக் கருவூலத்திலிருந்து மீண்டும் பெற்றுக்கொள்ளலாமென்பதேயாகும். முதலாம் சார்லஸ் மன்னருக்குப் பணம் தேவைப்பட்ட நிலையில், வேறு முறைகளின் மூலம், தம்முடைய அரசியலுக்குத் தேவையான பணத்தைத் திரட்ட முடியாத அவர், கருவூலத்திலிருந்த வியாபார வங்கியரின் பணத்தை எடுத்துச் செலவு செய்துவிட்டதன் எதிரொலியாக இலண்டன் கோட்டையில் பணத்தைக் கொடுத்துவைக்கும் பழக்கம் குறைய ஆரம்பித்தது.

இந் நிலையில்தான் பொற்கொல்லர் வங்கியர் தங்கள் பணிகளைத் தொடங்கினர். இவர்கள் வணிகர்களிடமிருந்தும் பொது மக்களிடமிருந்தும் வைப்புத் தொகையினைப் பெறத்தொடங்கினர். அதாவது பொதுமக்களும், வணிகர்களும் தங்கள் பணத்தைப் பொற்கொல்லர்களிடம் கொடுத்து வைக்கத் தலைப்பட்டனர். பொற்கொல்லர்கள் அவ்வாறு பெற்ற பணத்தினை வணிகர்களுக்குக் கடன் கொடுப்பதன் வாயிலாகவும், மன்னருக்கும் அரசுக்கும் கடனளிப்பதன் வாயிலாகவும் முதலீடு செய்ய முனைந்தனர். மன்னர், தாம் மக்களிடமிருந்து திரட்டவிருந்த பல் வகையான வரிகளைப் பிணையமாகக் காட்டிப் பொற்கொல்லர்களிடமிருந்து கடன் பெற்றார்.

1667ஆம் ஆண்டு பொதுமக்கள் பெரும்பான்மையில் பொற்கொல்லர்களிடம் செலுத்தியிருந்த பணத்தினைத் திரும்பப் பெற விழைய, பொற்கொல்லர்கள் இரண்டாம் சார்லஸ் மன்னரிடமிருந்து தாங்கள் கொடுத்த கடன் தொகையினைத் திரும்பப்பெற முயற்சி செய்தனர். ஆனால், மன்னரால் கடனைத் திருப்பிச் செலுத்த இயலவில்லை. எனவே, இது பொற்கொல்லர்களுடைய தொழிலைப் பாதித்தது மட்டுமன்றி அவர்களுக்கு ஒரு நெருக்கடி நிலையையும் தோற்றுவித்தது. பொற்கொல்லர்கள், தங்களிடம் பணம்கொடுத்துவைத்திருந்த பொதுமக்களுக்கு அவர்கள் பணத்தையே திருப்பிக் கொடுக்க முடியாத நிலையிலிருந்தனர். இரண்டாம் சார்லஸ் மன்னர், இந்நிலையில் எவ்வித மாற்றமுமின்றித் தம்முடைய காலத்தினை முடித்தார். அவருக்குப் பிறகு முடிசூடிய இரண்டாவது ஜேம்ஸ் மன்னரும் பொற்கொல்லர்களுடைய கடனை அடைக்க முயற்சி செய்யவில்லை. ஆனால், அவருக்குப் பின்னர் முடி சூட்டிக்கொண்ட மூன்றாம் வில்லியம் என்னும் மன்னர் பொற்கொல்லர்களுக்கு ஆண்டுதோறும் ஒரு குறிப்பிட்ட தொகையினைச் செலுத்துவதன் வாயிலாக அவர்களுடைய கடனையடைக்க முயற்சி செய்தார்.

மூன்றும் வில்லியம் மன்னர் ஃபிரஞ்சுப் போரை நடத்துவதற்குத் தேவையான பணத்தைப் பொதுமக்களிடமிருந்து திரட்ட முயன்று, அவ்வாறு தேவையான தொகையினைத் திரட்ட முடியாத காரணத்தினால் வில்லியம் பேட்டர்சன் என்பவருடைய திட்டப்படி 1694ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 27ஆம் நாள் மன்னர் தனிப்பட்ட நபர்கள் சிலரிடம் 8 விழுக்காடு வட்டிக்கு 12 இலட்சம் பவுன் கடனுகப் பெற்றுக்கொண்டு அவர்களுக்கு இங்கிலாந்து வங்கியைத் தொடங்கும் உரிமை கொண்ட ஒரு பட்டயத்தினை அளித்தார். எனவே, இங்கிலாந்து வங்கி 1694ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. இவ் வங்கி 12 இலட்சம் பவுன்கள் மூலதனத்துடன் தொடங்கப்பட்டது, மன்னருக்கு எந்த அளவிற்கு இவ் வங்கி கடன் கொடுத்ததோ அந்த அளவிற்குக் காகிதப் பணத்தை அச்சிடும் உரிமையும் அவ் வங்கிக்குக் கொடுக்கப்பட்டது. மேலும் வங்கியின் மேலாண்மை, நிர்வாகச் செலவுகளை ஈடு செய்யும் வகையில் ஆண்டொன்றுக்கு 4000 பவுன்கள் மான்யமாகவும் வழங்கப்பட்டன. ஒரு குறிப்பிட்ட காலத்திற்கென வழங்கப்பட்ட பட்டயம் அவ்வப்பொழுது புதுப்பிக்கப்பட்டு வந்தது. வங்கிகள் செழித்து வளர ஆரம்பித்த நிலையில் இங்கிலாந்து வங்கி காகிதப் பணம் வெளியிடும் முற்றுரிமையினைப் பெற்றது. அவ் வங்கி புரிந்த பணிகளின் அடிப்படையில் அது மைய வங்கியாக நியமிக்கப்பட்டு 1947ஆம் ஆண்டு அது நாட்டுடைமையாக்கப்பட்டது. அந்த நிலையிலிருந்து சிறிது சிறிதாக வளர்ச்சியுற்று அது இன்று உலக மைய வங்கிகளுக்கு வழிகாட்டியாக, ஒரு நாட்டின் பணச் சந்தையினைக் கட்டுப்படுத்தும் சிறந்த மைய வங்கிக்கு எடுத்துக்காட்டாகத் திகழ்கின்றது.

இந்தியாவில் வங்கியியல் வளர்ச்சி : இந்தியப் பொருளாதாரத்தின் தூண் என்ற நிலையிலுள்ள வங்கிகள் இந்தியாவில் தொன்று தொட்டு இயங்கி வருகின்றன. இன்றைய வங்கிகளின் அமைப்பில் முற்காலத்திய வங்கிகள் செயலாற்றவில்லை எனினும் இக் காலத்திய வணிக வங்கிகளின் பணிகள் யாவும் அன்றும் புரியப்பட்டு வந்துள்ளனவென்று கூறலாம். இன்றைய வங்கிகளின் பணிகளில் பல அன்று தனி மனிதர்களால் புரியப்பட்டு வந்துள்ளன. வேத காலத்திலிருந்தே வங்கியியல் தொழில் இந்தியாவில் இருந்து வந்துள்ளதற்கான சான்றுகளை மனுதர்ம சாத்திரத்திலிருந்தும் மகாபாரதத்திலிருந்தும் அறிகிறோம். அறிவுள்ள மனிதன் தன் பணத்தை, நல்ல குடும்பத்தைச் சார்ந்த, சட்ட அறிவுபடைத்த, நன்னடத்தைகொண்ட மனிதனிடம் வைப்புத் தொகையாகச் செலுத்தி வைத்துக்கொள்ளவேண்டுமெனும் மனுநீதிச் சட்டத்

திலுள்ள குறிப்பே இதற்குச் சான்றாகும். மேலும், புத்தசமய இலக்கியங்களும் நம் நாட்டில் நடைபெற்று வந்துள்ள லேவாதேவி நடவடிக்கைகளைப் பற்றிய குறிப்புகளைக் கொண்டுள்ளன.

இந்தியாவைப் பொறுத்தவரை, வட்டித் தொழிலர்களே (money lenders) வங்கியர்களாகக் கருதப்பட்டு வந்துள்ளனர். எனவே, கிழக்கிந்திய நிறுவனத்தினர் நமது நாட்டுக்கு வருவதற்கு முன்பாக வங்கியர்களுக்கும், வட்டித் தொழிலருக்கும் பெரும் வேறுபாடு இருந்ததாகத் தெரியவில்லை. இருப்பினும் வங்கியர், அரசாலும், சமுதாயத்தினராலும் மிக முக்கியமானவர்கள் எனக் கருதப்பட்டு வந்திருக்கின்றனர். அரசு மக்களிடமிருந்து நிலத் தீர்வை திரட்டுவதற்கு வங்கிகளின் உதவியை நாடியிருந்திருக்கின்றது. சொத்துகளுக்குப் போதிய பாதுகாப்பில்லாத நிலையில் மக்கள் பணத்தை வங்கியரிடம் கொடுத்துப் பாதுகாத்து வந்திருக்கின்றனர். பொதுமக்களுடைய நகைகளைப் பாதுகாக்கச் சிறந்த முகமைகளாக வங்கியர் மட்டுமே கருதப்பட்டு வந்துள்ளனர். 'வட்டித் தொழிலரின்றிக் கடன் வசதி இல்லை' என்ற நிலைக்கு அவர்கள் உயர்ந்த நிலையைப் பெற்றிருந்தனர்.

காலப்போக்கில், தொழில் துறையில் ஏற்பட்ட மாறுதல்கள் காரணமாக, இந்தியாவில் பணிபுரிந்த நாட்டு வங்கியர்களுடைய பணிகளிலும் மாற்றங்கள் ஏற்படத் தொடங்கின. இருப்பினும் அவர்களுடைய பணிகள் முற்றிலும் சிறந்த வணிக வங்கிகளின் பணிகளாக அமைந்திருந்தன என்று கூற இயலாது. கிழக்கிந்தியர் இந்தியாவுக்கு வந்த பிறகே இந்திய வங்கியியல் முறையில் மாற்றங்கள் ஏற்படத் தொடங்கின. எனவே, இன்றைய வணிக வங்கி முறை வளர்ச்சிக்குக் கிழக்கிந்திய நிறுவனத்தினரே ஆதாரமாக அமைந்திருந்தனர் எனக் குறிப்பிடின் அது மிகையாகாது. கல்கத்தாவிலும், பம்பாயிலும் செயலாற்றிய முகமையகங்கள் கிழக்கிந்தியக் கம்பெனிக்கு வங்கிகளாகப் பணியாற்றின. அத்தகைய முகமையகங்கள் ஒன்றில் 1770-ல் நிறுவப்பட்டதே இந்துஸ்தான் வங்கியாகும் (Hindustan Bank). இது முதலீடு செய்திருந்த அலெக்சாண்டர் & கம்பெனி என்ற நிறுவனம் தோல்வியடைந்ததன் காரணமாக இவ் வங்கி 1832ஆம் ஆண்டு கலைக்கப்பட்டது. அதன் பிறகு 1785ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட வங்காள வங்கி (Bengal Bank), இந்திய சென்ட்ரல் வங்கி (Central Bank of India) ஆகியவை உரிய முறையில் செயல்புரியாத காரணத்தினாலும், போதிய இலாபம் ஈட்டாத காரணத்தினாலும் மூடப்பட்டுவிட்டன. இவ் வங்கிகள், கிழக்கிந்தியக் கம்பெனி வழங்கிய தனிப்பட்ட சாசனத்தின்மூலம் உருவாக்கப்

பட்டாலும், பின்னர் வங்கிகளை நிறுவுவதற்கென்று தனிப்பட்ட சட்டம் இயற்றப்பட்டது.

தனிப்பட்ட சட்டத்தின்கீழ் நிறுவப்பட்ட வங்கிகளைக் கீழ்க் காணும் இரண்டு வகைகளாகப் பாகுபடுத்தலாம். (1) மாநில வங்கிகள் (Presidency Banks). (2) கூட்டுப் பங்கு வங்கிகள் (Joint Stock Banks). இக் கூட்டுப் பங்கு வங்கிகளே இன்று பொதுவான முறையில் வணிக வங்கிகள் என்றழைக்கப்படுகின்றன. 1806ஆம் ஆண்டு 'கல்கத்தா வங்கி' (Bank of Calcutta) என்ற பெயரில் நிறுவப்பட்டு 1809 ஆம் ஆண்டு வங்காள வங்கி என்ற பெயரில் சாசனம் பெற்ற வங்கியே இந்தியாவில் நிறுவப்பட்ட முதலாவது மாநில வங்கியாகும். பல்வேறு உதவிகளைப் பெற்ற கிழக்கிந்தியக் கம்பெனி இவ் வங்கிக்கு நோட்டுகளை அச்சடிக்கும் உரிமையினை 1823ஆம் ஆண்டு வழங்கியது. இது போன்றே 1840 ஆம் ஆண்டு பம்பாயில் ஒரு மாநில வங்கியும், 1843ஆம் ஆண்டு சென்னையில் ஒரு மாநில வங்கியும் தொடங்கப் பட்டன. இம் மூன்று மாநில வங்கிகளும், அரசுவங்கியியல் நடவடிக்கைகளை ஏற்கும் முற்றுரிமை பெற்றுத் திகழ்ந்தன. 1862ஆம் ஆண்டு இவ் வங்கிகளிடமிருந்து, பணம் அச்சடிக்கும் உரிமையினை அரசு பெற்றுக்கொண்டது. 1868ஆம் ஆண்டு தொழில் துறையில் ஏற்பட்ட தோல்விகளின் காரணமாக பம்பாய் வங்கி கலைக்கப்பட்டாலும், பின்னர் அதே பெயரில் மற்றொரு மாநில வங்கி தொடங்கப்பட்டது குறிப்பிடத்தக்கதாகும்.

பம்பாய் வங்கி தோல்வியுற்றுக் கலைக்கப்பட்டதன் காரணமாக மாநில வங்கிகள் சட்டம் (Presidency Banks Act), மாநில வங்கிகளுக்கு விரும்பத்தக்க சில கட்டுப்பாடுகளை விதித்தது. இக் கட்டுப்பாடுகளின் காரணமாக இவ் வங்கிகள் நிலையான முறையில் தொழில்புரிந்தன என்பதுடன்கூடப் போதிய வளர்ச்சியினையும் பெற்றுத் திகழ்ந்தன. இருப்பினும் 1898 ஆம் ஆண்டு அமைக்கப்பட்ட பௌலர் செலாவணிக் குழுவின் (Fowler Currency Committee) பரிந்துரையின் அடிப்படையிலும், 1913 ஆம் ஆண்டு முதல் 1917ஆம் ஆண்டு வரையிலான காலத்தில் ஏற்பட்ட வங்கியியல் நெருக்கடி காரணமாகவும், ஆரம்பத்தில் சிறிது தயங்கினும் 1919ஆம் ஆண்டில் அரசு தனிப்பட்ட முறையில் ஒரு மைய வங்கியினை அமைக்க ஆவன செய்யத் தொடங்கியது. இந்த நோக்கத்தினை எய்தும் வகையிலேயே, அரசு 1920ஆம் ஆண்டு தனிப்பட்ட சட்டம் ஒன்றை நிறைவேற்றி மூன்று மாநில வங்கிகளையும் ஒருங்கிணைக்க முயற்சி எடுத்தது. இம் முயற்சியின் விளைவே 1921ஆம் ஆண்டு இந்திய இம்பீரியல் வங்கி (Imperial Bank of India) உருவாக்கப்பட்டதாகும்.

ஆனால், பல்வேறு காரணங்களினால் தனிப்பட்டு இயங்கும் வகையில் 1935ஆம் ஆண்டு இந்தியாவின் மைய வங்கியாக ரிசர்வ் வங்கி தொடங்கப்பட்டது. இந்தியாவில் ஏற்பட்ட தொழில் வளர்ச்சி காரணமாக, பின்னர்ப் பல்வேறு கூட்டுப் பங்கு வங்கிகள் (Joint Stock Banks) தோற்றுவிக்கப்பட்டன. அரசு, வங்கிகளின் பணிகளைக் கட்டுப்படுத்தப் பல்வேறு நடவடிக்கை களை எடுத்தது. அவைகளில் 1949ஆம் ஆண்டில் ரிசர்வ் வங்கியினையும், 1955ஆம் ஆண்டில் இம்பீரியல் வங்கியினையும் நாட்டுடைமையாக்கியதும், வங்கிகளைக் கட்டுப்படுத்தும் வகையில் 1949ஆம் ஆண்டு, இப்பொழுது வங்கியியல் ஒழுங்காற்றுச் சட்டம் (Banking Regulations Act) என்ற பெயரில் செயல் படுத்தப்பட்டு வரும் வங்கியியல் கம்பெனிகள் சட்டம் (Banking Companies Act) இயற்றப்பட்டதும் மிக முக்கிய நடவடிக்கை களாகும். 1968ஆம் ஆண்டு வங்கிகளின் மீது சமூகக் கட்டுப்பாடு விதிக்கப்பட்டதும், அதனடிப்படையில் 1969ஆம் ஆண்டு இந்தியாவிலுள்ள பதினான்கு பெரிய வங்கிகள் நாட்டுடைமை யாக்கப்பட்டதும் வரலாற்று முக்கியத்துவம்பெறும் நிகழ்ச்சி களாகும்.

வங்கிகளின் முக்கியத்துவம் : தொழில் நடவடிக்கைகளின் தேவையின் அடிப்படையில் தோன்றிய வங்கிகள் பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்தவையாகத் திகழ்கின்றன; ஒரு நாட்டின் நிதியியல் அமைப்பின் உயிர்நாடியாகக் கருதப்படுகின்றன. ஒரு நாடு வளர்ச்சியுற்ற நாடாக இருப்பினும் சரி, வளர்ச்சி பெற்று வரும் நாடாக இருப்பினும் சரி, செழிப்பு மிக்க நாடாக இருப்பினும் சரி, அல்லது வறுமை கொண்ட நாடாக இருப்பினும்சரி, வங்கிகள் ஒவ்வொரு நாட்டிற்கும் இன்றியமையாதவைகளாகக் கருதப்படு கின்றன. குறிப்பாக வளர்ச்சி பெற்ற நாடுகளைவிட, வளர்ச்சி யுற்று வரும் நாடுகளுக்கு இந்நிறுவனங்கள் ஆற்றும் பணிகள் அளவிட முடியாதவை. கட்டுப்படுத்தப்பட்ட பொருளியல் கொள்கைகளைக் கடைப்பிடிக்கும் நாடுகளைவிடச் சுதந்திரப் பொருளியல் கொள்கைகளைக் கடைப்பிடிக்கும் நாடுகளில் இவ் வங்கிகள் சிறப்பாகப் பணிபுரிகின்றன. மக்களைத் தங்கள் வருவாயில் ஒரு பகுதியினைச் சேமிக்கத் தூண்டி, அவ்வாறு மக்களால் சேமிக்கப்பட்ட தொகைகளை ஒன்று திரட்டி உற்பத் திக்கு முதலீடு செய்தலே வங்கிகளின் பணிகளில் முக்கியமான பணியாகக் கருதப்படுகின்றது.

ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு இப் பணி இன்றி யமையாததாகும். இதன் முக்கியத்துவத்தினை வளர்ச்சியடைந்த நாடுகளைவிட வளர்ந்து வரும் நாடுகளே நன்குணர்கின்றன.

வளர்ந்துவரும் நாடுகளில் மக்கள் சேமிக்கும் பழக்கத்தினை அறியாதவர்கள், அப் பழக்கத்தினை மக்களுக்குக் கற்பிக்கும் பொறுப்பினையும் வங்கிகளே மேற்கொள்ள வேண்டியுள்ளன. மேலும் மக்களுடைய சேமிப்பினைத் திரட்டுவதும், அதனை உரிய முறையில் முதலீடு செய்வதும், எளிதான செயலன்று; அறை கூவத்தக்க பணியாகும். இப் பணியினை வங்கிகளே செம்மை யாகச் செய்கின்றன. வங்கிகளின் பணிகளின்றிப் பின்தங்கிய நாடுகள், மேலும் மேலும் பின்தங்கிய நிலையினைத்தான் அடைய நேரிடும்; முன்னேற வாய்ப்பில்லை.

மக்களுடைய சேமிப்புகளைத் திரட்டுவது, அவைகளை முதலீடு செய்வது மட்டும் வங்கிகளின் பணிகளெனக் கூறுதல் தவறாகும். ஏனெனில், மேற்குறிப்பிட்டுள்ள பணியினைத் தவிர்த்துத் தொழில் நடவடிக்கைகளுக்கு ஏற்றவாறு கடன் உருவாக்குவதன் வாயிலாகக் கூடுதலான பணத்தை அளிப்பதும் வங்கிகளின் பணி களில் முக்கியமானதொன்றாகும். வங்கிகளின் இப் பணியின்றி, தொழில் திறமை படைத்தவர்கள் முதலீட்டு வாய்ப்பின்றி முன்னேற முடியாது முடங்கிக்கிடக்க நேரிடும். வங்கிகள் உரிய முறையில் கடனளிப்பதன் காரணமாகவே ஒவ்வொரு நாட்டிலும், குறிப்பாகப் பின்தங்கிய நாடுகளில் தொழில் வளர்ச்சி ஏற்படு கின்றது எனக் கூறலாம். வைப்புத் தொகையினைச் செலுத்தும் வாடிக்கைக்காரர்கள் தாங்கள் செலுத்திய தொகை முழுவதினையும் திரும்பப் பெறுவதில்லை; அதுபோன்றே வங்கிகள் கடன் வழங்கும்போது கடனாளிகளுக்குக் கடன் தொகையினை ரொக்க மாகச் செலுத்துவதில்லை. எனவே, வங்கிகள் தாங்கள் பெற்ற வைப்புத் தொகையைவிட மிகுதியான அளவிற்குக் கடன்தர முடிகின்றது. இதனைப் பண உற்பத்தி அல்லது 'பண உருவாக்கம்' என்று கூறுகின்றனர்.

வங்கிகள் தங்கள் பணிகளின்மூலம் மிகுந்த வருவாய்கொண்டு அதன் காரணமாகக் கூடுதலான தொகையினைச் சேமிப்பவர் களிடமுள்ள பணத்தை, பணம் தேவைப்படுபவர்களுக்கு மாற்றிக் கொடுக்கின்றன என்பதுடன்கூட ஒரு நாட்டிலுள்ள மக்களுடைய வாங்கும் ஆற்றலைப் பெருக்குகின்றன என்றும் கூறலாம். மக்க ளுடைய வாங்கும் ஆற்றல் பெருகுவதன் வாயிலாக மக்கள் தேவைகள் பெருகி அதன் காரணமாக நாட்டின் பொருளாதார நடவடிக்கைகள் விரிவடைகின்றன.

வங்கிகளில் பணத்தினைச் செலுத்தியவர்கள், வங்கிகளிட மிருந்து பணத்தினை உடன் பெறுவதில்லை. மேலும் தங்களுக்குத் தேவைப்படும்போது பணத்தினைப் பெற்றுக்கொள்ளலாமென்னும் நம்பிக்கையும் கொண்டுள்ளனர். எனவே, அவர்கள் தங்களிடம் மிகக் குறைந்த அளவு பணத்தினையே வைத்திருக்கின்றனர்.

இதன் காரணமாக மக்களுடைய பணம் முடக்கிவைக்கப்படாது, நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்குப் பயன்படுத்தப்படுகின்றது.

நமது நாட்டின் பொருளாதாரநிலை சிக்கல் நிறைந்ததாகவும், முரண்பாடானதாகவும் கருதப்படுவதால், இங்கு வங்கிகளின் முக்கியத்துவம் மிகுதியாக உணரப்படுகின்றது. இங்கு ஒரு பக்கம் மக்களுக்குத் தேவையான உணவு, உடை, கச்சாப் பொருள்கள், அயல்நாட்டு நாணயங்கள் போன்றவை போதிய அளவில் கிடைக்கவில்லை. அதே நேரத்தில், உற்பத்தி செய்யப் பட்ட பண்டங்களை உரிய விலையில் விற்க முடியாத நிலையும் நிலவுகின்றது. இத்தகைய நிலையினைப் 'பின்னிறக்கம்' எனக் கூறுகிறோம். இத்தகைய பின்னிறக்கத்திற்குப் பல காரணங்கள் உள்ளன. இதற்கான சிறப்புக் காரணங்கள் சூழ்நிலைக்கேற்றவாறு மாறுபடலாமெனினும், பற்றுக்குறை நிதியாக்கம், உயர்ந்த வரி, பற்றுக்குறை முதலாக்கம் ஆகியவற்றைப் பொதுக் காரணங்களாகக் குறிப்பிடலாம்.

எனவே, வங்கிகள் பொதுவாக இரு நோக்கங்களைக்கொண்ட முக்கியப் பணியினை மேற்கொள்ளவேண்டும். நாட்டின் சேமிப்பினை ஒன்று திரட்டி உற்பத்தியில் முதலீடு செய்தல் முதல் நோக்கம். போதிய முதல் இல்லாத நாடுகளில் வங்கிகள் மக்களின் சேமிப்பினைத் திரட்டி அதனை மிக முக்கிய வழிகளில் முதலீடு செய்தல் வங்கிகளின் அவசியமான பணியாகும். இந்நிலையில் அதாவது போதிய அளவு முதல் இல்லாத நிலையில், கூடுதலான கிளைகள் திறத்தல் போன்ற பல்வேறு முறைகளைக் கையாண்டு மக்களுடைய சேமிப்புப் பணத்தை முழுமையாகத் திரட்ட முயற்சி எடுத்தல் இரண்டாவது நோக்கமாகும். இந்நோக்கங்களையடைதல், தங்கள் பொறுப்பு மட்டுமல்ல, தங்களுடைய கடமையும்கூட என்கிற நிலையில் வங்கிகள் பணியாற்றினால், வங்கிகளின் வாயிலாக நாட்டுப் பொருளாதாரம் நன்கு முன்னேறும் என அறுதியிட்டுக் கூறலாம்.

வினாக்கள்

1. 'வங்கி' என்ற சொல்லின் இலக்கணம் தந்து அதை விளக்குக.
2. வங்கிகளின் மூதாதையர் யாவர்?
3. பொற்கொல்லர்கள் வங்கிகளின் வளர்ச்சிக்கு எவ்வாறு உறுதுணையாக இருந்தனர்?
4. வங்கிகள் வளர்ந்த வரலாற்றினைச் சுருக்கி வரைக.
5. இந்தியாவில் வங்கிகள் வளர்ந்த முறையினைப்பற்றிக் குறிப்பு வரைக.
6. வங்கிகளின் முக்கியத்துவம் யாது?

2. வங்கிகளின் வகைகள்

'வங்கி' என்ற சொல் நடைமுறையில் வணிக வங்கிகளை மட்டும் குறிக்கும் வகையில் பயன்படுத்தப்படினும் இச் சொல் பொதுவான தென்றும், இது எல்லா வகையான வங்கிகளையும் குறிப்பிடுமென்றும் சென்ற அத்தியாயத்திலேயே குறிப்பிட்டோம். எனவே, வணிக வங்கிகளின் பணிகளை அறிந்துகொள்வதற்கு முன்பாக வங்கிகளை வகைப்படுத்துதல் மிக அவசியமான தொன்றாகும். ஆனால், நடைமுறையில் வங்கிகளின் அமைப்பு முறையும் பணிகளும் நாட்டிற்கு நாடு வேறுபடுவதன் காரணமாக வங்கிகளை வகைப்படுத்துதல் என்பது அவ்வளவு எளிதானதன்று. மேலும், ஒரு குறிப்பிட்ட வகையைச் சார்ந்த வங்கி தனது வழக்கமான பணிகளுடன் ஒரு சில சந்தர்ப்பங்களில் வேறு வகையைச் சார்ந்த வங்கிகளின் பணிகளையும் மேற்கொள்வதால் வங்கிகளை வகைப்படுத்துதல் மேலும் சிக்கல் நிறைந்ததாக அமைகிறது. எனவே, வங்கிகளை வகைப்படுத்துதல் என்பது நடைமுறையில் முரண்பாடாகவே அமையுமென்று கூறலாம். இருப்பினும் வங்கி முறையினைப் பற்றிய விவரங்களை நன்கு அறிந்துகொள்ளவும், வங்கிகளின் பணிகளை விளக்கவும், வங்கிகளை வகைப்படுத்துதல் அவசியமாகின்றது. வகைப்படுத்துதலின் வாயிலாகவே வெவ்வேறு வகையான வங்கிகளின் தனிச் சிறப்பியல்புகளையும், அவற்றிற்கிடையேயுள்ள வேறுபாடுகளையும் நன்கறிந்துகொள்ள முடியும்.

எனவே, வங்கிகளை அவை புரிகின்ற பணிகளின் அடிப்படையில் வகைப்படுத்துதல் சற்றுப் பொருத்தமாக இருக்கும். இத்தகைய வகைப்படுத்துதலைப் 'பணியடிப்படையிலான வகைப்படுத்துதல்' என்று குறிப்பிடலாம். பணிகள் அடிப்படையில் பொதுவாக வங்கிகள் கீழ்க்கண்டவாறு வகைப்படுத்தப்படுகின்றன:

(அ) வணிக வங்கிகள் (Commercial banks).

(ஆ) தொழில் வங்கிகள் (Industrial banks).

(இ) கூட்டுறவு வங்கிகள் (Co-operative banks).
(ஈ) நாணய மாற்று வங்கிகள் (Exchange banks).
(உ) சேமிப்பு வங்கிகள் (Savings banks).
(ஊ) நாட்டு வங்கியர் (Indigenous banks).
(எ) மைய வங்கி (Central bank).

(அ) வணிக வங்கிகள் (Commercial banks): நாட்டு வழக்கில் 'வங்கி' என்ற சொல் இவ்வகை வங்கிகளை மட்டும் குறிக்கும் என்னும் அளவிற்கு இவ்வகை வங்கிகள் முக்கியத்துவம் பெற்றுள்ளன. ஒரு நாட்டின் தொழில் வளர்ச்சி அந்த நாட்டின் வணிக வங்கியின் வளர்ச்சியினைப் பொறுத்தே அமைகிறது. இவை பொதுமக்களுடைய சேமிப்புத் தொகையினை வைப்பு நிதியாகப் பெறுகின்றன. இவ்வாறு பெறப்படும் வைப்புத் தொகையினை, வாடிக்கைக்காரர்கள் தங்கள் விருப்பம்போல் வங்கியிடமிருந்து பெற்றுக் கொள்ளும் உரிமையினைக் கொண்டுள்ளனர். பொதுவாக, வணிக வங்கிகள் பெற்றுக்கொள்ளும் வைப்புத் தொகை பெரும்பாலும் குறுகியகால வைப்புத்தொகையாகவே அமைவதால், வணிக வங்கிகள் குறுகியகாலக் கடன்களை மட்டுமே வழங்க விழைகின்றன. இவ் வகை வங்கிகளில், சேமிப்புக் கணக்கு, நடைமுறைக் கணக்கு ஆகியவற்றில் செலுத்தப்படும் வைப்புத் தொகை காசோலைகள் மூலம் கையாளப் படலாம். அதாவது இத்தகைய கணக்குகளிலிருந்து காசோலைகள் மூலம் பணம் எடுக்கப்படலாம்.

வணிக வங்கிகள் பெரும்பாலும் குறுகிய் காலக்கடன் வசதிகளையே அளித்து வருகின்றன. காலப்போக்கில், அவற்றின் நோக்கில் சிறிது மாற்றம் ஏற்பட்டு அவை 'தவணைக் கடன்' (Term loan) போன்று நீண்டகாலக் கடன் வழங்கினும், இவ் வகைக் கடன்கள் இன்னும் அதிகமான அளவிற்கு வணிக வங்கிகளால் ஏற்றுக்கொள்ளப்படவில்லை. எனவே, வணிக வங்கிகள் தாங்கள் பெற்ற வைப்புத் தொகையைத் தொழில் நிறுவனங்களுக்கு நடைமுறை முதலுக்கு ஈடுசெய்யும் வகையில் குறுகிய காலக் கடன்களையே அளித்து வருகின்றன. நாம் முன்பே குறிப்பிட்டது போன்று வணிக வங்கிகளின் நோக்கில் ஏற்பட்ட மாறுதல்களின் காரணமாக நீண்டகாலக் கடனை, நிலை முதல் வழங்குதல் தங்கள் பணியன்று என்ற அவற்றின் கருத்தில் சிறிது மாற்றம் ஏற்பட்டு இன்று பெரும்பாலான வணிக வங்கிகள் தொழில் நிறுவனங்களுக்கு நிலை முதல் வழங்குவதுடன்கூட வேளாண்மைக்குத் தேவையான, குறுகிய கால, இடைக்காலக்கடன் வசதிகளை அளிப்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

(ஆ) தொழில் வங்கிகள் (Industrial Bank): இவை முதலீட்டு வங்கிகள் (Investment Banks) என்றும் அழைக்கப்படுகின்றன. பெயருக்கேற்ப இவ் வங்கிகள் தொழில் நிறுவனங்களுக்குத் தேவையான நிலமுதலீட்டு நீண்டகாலக் கடனுதவி கொடுக்கும் பணியினை மேற்கொள்கின்றன. இவ் வங்கிகள் தொழில் நிறுவனங்களுக்குத் தேவையான நடைமுறை முதல், கட்டடங்கள் கட்டுதல், இயந்திர சாதனங்கள் வாங்குதல் போன்ற பணிகளுக்குத் தேவைப்படும் நிரந்தர முதலீடாகக் கருதப்படும் நீண்டகாலக்கடன் ஆகியவற்றை அளித்து அத் தொழில் நிறுவனங்களுக்கு உதவுகின்றன. இத்தகைய வங்கிகளின் மூலதனம் வணிக வங்கிகளின் மூலதனத்தைவிடக் கூடுதலாக இருப்பது குறிப்பிடத்தக்கது. இவை, கடன்பத்திரங்கள் வெளியிடுதல், நீண்டகால வைப்புத்தொகை பெறுதல் போன்ற முறைகளைக் கையாண்டு தங்களுக்குத் தேவையான முதலினைத் திரட்டுகின்றன.

தொழில்வளம் மிக்க ஒவ்வொரு நாட்டிலும் தனியாகத் தொழில் வங்கிகள் தொடங்கப்பட்டுள்ளன. எடுத்துக்காட்டாக சப்பான் நாட்டில் 1902-ஆம் ஆண்டிலேயே 'ஜப்பான் தொழில் வங்கி' (Industrial Bank of Japan) தொடங்கப்பட்டுவிட்டது. செர்மன் நாட்டில் தொழில் வங்கிகள் அந்நாட்டினைத் தொழில்மயமாக்கிய தனை இங்குக் குறிப்பிடுதல் சாலப்பொருந்தும். இவ் வங்கிகள் புதிதாகத் தொழில் தொடங்கும் நிறுவனங்களுக்குப் பல வகைகளிலும் உதவிகள் புரிகின்றன. எனவே, புதிய கம்பெனிகள் தொடங்குவதற்கு இவ் வங்கிகள், ஆதாரமாக இருக்கின்றனவென்று கூறின் இது மிகையாகாது.

1944-ஆம் ஆண்டின் தொழில்வளச் சட்டத்தின் (Iudustrial Development Act) கீழ்த் தொடங்கப்பட்ட கனடா தேசத்திய, 'கனடா தொழில் வளவங்கி' அந்நாட்டின் தொழில் வளர்ச்சிக்கு வித்திட்டது என்று குறிப்பிடலாம். அதுபோன்றே நமது நாட்டிலும் 1948-ஆம் ஆண்டு தொழில் நிறுவனங்களை வளர்ச்சியுறச் செய்யும்பொருட்டு, தொழில் நிதியக் கூட்டுரு (Industrial Finance Corporation) என்னும் தனி நிறுவனம் ஒன்று நிறுவப்பட்டதைக் குறிப்பிடலாம்.

தொழில் வங்கிகள் தொழில் நிறுவனங்களுக்கு முக்கியமாக நீண்டகாலக் கடன் கொடுப்பதுடன்கூட, அவற்றிற்கு நிதி குறித்த அறிவுரைகளை வழங்குதல், எந்தெந்த முறைகளின் மூலம் அவை நிதி திரட்டலாமெனக் கருத்துரை அளித்தல், அந் நிறுவனங்களின் பங்குகள், கடன் பத்திரங்கள் போன்றவற்றைப்

பொதுமக்களுக்கு வழங்குதல், போன்ற பணிகளையும் மேற்கொள்கின்றன.

(இ) கூட்டுறவு வங்கிகள் (Co-operative Banks) : வேளாண்மையில் ஈடுபட்டுள்ள விவசாயிகளுக்குக் கடனுதவி அளிக்கும் பொருட்டு நிறுவப்பட்ட வங்கிகளே கூட்டுறவு வங்கிகளாகும். விவசாயிகளுக்கு மூன்று வகையான கடன் வசதிகள் தேவைப்படுகின்றன. குறுகியக்காலக் கடன், இடைக்காலக்கடன், நீண்டகாலக் கடன் ஆகியவைகளே அந்த மூன்று வகைகளாகும்.

வேளாண்மைத் தொழிலுக்கு வேண்டிய விதைகள், உரங்கள் ஆகியவற்றை வாங்கவும், வேளாண்மைத் தொழிலில் ஈடுபட்டுள்ள பணியாட்களுக்குக் கொடுக்கவேண்டிய ஊதியத்திற்காகவும் தேவைப்படுவதே குறுகியக் காலக் கடனாகும். பொதுவாக இத்தகைய கடன்கள் விவசாயிகளுக்கு, வேளாண்மைப் பணி தொடங்கும் பருவத்தில் அளிக்கப்பட்டு அறுவடைக் காலங்களில் அவை விவசாயிகளிடமிருந்து திரும்பப் பெறப்படுகின்றன. எனவே, இத்தகைய கடன்களின் காலம் ஓராண்டு என்று கூறலாம்.

வேளாண்மைக்குத் தேவைப்படும் இரண்டாவது வகைக் கடன் இடைக்காலக் கடனாகும். இவ்வகைக் கடன், சிறந்த, புதிய வேளாண்மைக் கருவிகளை வாங்கவும், வேளாண்மைத்துத் தேவையான கால்நடைகளை வாங்கவும், தேவைப்படுகின்றது. ஓராண்டுக்காலம் முதல் மூன்றாண்டுக் காலம்வரை இவ்வகையில் விவசாயிகள் கடன் பெறுகின்றனர்.

வேளாண்மைக்குரிய விதைகள் வாங்குதல், சிறந்த கருவிகளை வாங்குதல் மட்டும் வேளாண்மைப் பணிகளாகா. வேளாண்மை தொடர்ந்து நன்முறையில் நடைபெற வேண்டுமாயின், நிலத்தில் அவ்வப்பொழுது சில சீர்திருத்தங்கள் செய்யப்படுதல் வேண்டும். அருகிலுள்ள சிறு நிலத்துண்டுகளை வாங்கி நிலத்தின் அளவைப் பெரிதாக்க முயற்சி செய்தல் வேண்டும். கிணறுகள் வெட்டப்படுதல் வேண்டும். இக் காரணங்களுக்காக வாங்கப்படும் கடனே நீண்ட காலக் கடனாகும். இத்தகைய கடன் மூன்றாண்டுக் காலத்திற்கும் அதிகமான பருவத்திற்கு வழங்கப்படுகிறது. பொதுவாக இக் கடன் பல தவணைகளில் விவசாயிகளால் திருப்பிச் செலுத்தப்படுகிறது.

வேளாண்மையிலுள்ள சில சிறப்புத் தன்மைகளின் காரணமாக வேளாண்மைக்கு வேண்டிய கடன்கள் வணிக வங்கிகளால்

பெரிய அளவில் வழங்கப்படுவதில்லை. முதலாவதாக வேளாண்மை ஒரு தனி நபருடைய அமைப்பாக உள்ளது. எனவே, வேளாண்மைக்கு வழங்கப்படும் கடன் அத் தனிநபருக்கு வழங்கப்படும் கடனுக்கு ஒப்பாகின்றது. இரண்டாவதாக, வேளாண்மைப்பணி ஓர் உறுதியற்ற சிக்கல் நிறைந்த தொழிலாகும். வேளாண்மையின் வெற்றி விவசாயியினுடைய திறமையை மட்டும் பொறுத்தமைவதில்லை. வேளாண்மையின் விளைச்சல், பருவ மழையின் சூதாட்டத்தைப் பொறுத்துமுள்ளது. ஆதலின், வேளாண்மையின் விளைச்சலை மட்டும் பிணையமாகக்கொண்டு கடன் வழங்குதல் இயலாததாகும். மூன்றுவதாக வேளாண்மைக்குத் தேவைப்படும் கடனளவு நிலையாக இருப்பினும் வேளாண்மை மூலம் கிடைக்கும் விளைச்சல் நிரந்தரமாக இருப்பதில்லை. இவ்வாறு நிலையில்லாத விளைச்சலைப் பிணையமாகக்கொண்டு கடன் வழங்குவதில் பல இடர்ப்பாடுகள் உள்ளன. நான்காவதாக, வேளாண்மைப் பண்டங்களின் விலை நிலையாக இருப்பதில்லை. இதர பண்டங்களின் விலைகளைவிட அதிக அளவில் இப் பண்டங்களின் விலைகளில் ஏற்றத்தாழ்வுகளைக் காணலாம். ஐந்தாவதாக, வேளாண்மைக்கு வழங்கப்படும் கடனுக்கு, நிலமும், நிலத்திலுள்ள பயிர்களுமே பிணையமாக அமைகின்றன. நிலத்திலுள்ள பயிர்கள் பிணையங்கள் என்ற நிலையில் பயனற்றவை. நிலமும் பிணையம் என்ற முறையில் எளிவரல் தன்மை (liquid feature) படைத்தன்று. எனவே, கடனுளி கடனைத் திருப்பிச் செலுத்தாத நிலையில் நிலத்தினை விற்பதென்பது எளிதானதன்று. ஆறுவதாக, கடன் வாங்க விரும்பும் விவசாயிகளின் எண்ணிக்கை மிக அதிகமான அளவிலுள்ளது. இறுதியாக, பரவலாகச் சிதறிய நிலையிலுள்ள விவசாயிகளுடைய கடன் தகுதியினைக் கணக்கிடுதல் மிகச் சிரமமானதாக அமைகிறது.

மேற் குறிப்பிட்டுள்ள சிறப்புத் தன்மைகளின் காரணமாக வணிக வங்கிகள் பொதுவாக வேளாண்மைக்குக் கடன் கொடுப்பதை அவ்வளவாக விரும்புவதில்லை. எனவே, வேளாண்மைக்குத் தேவையான கடன் வசதிகளையளிக்கத் தனிப்பட்ட நிறுவனங்கள் தேவைப்படுகின்றன. சேர்மானிய நாட்டில் வேளாண்மைக்குத் தேவையான கடன்கள் கூட்டுறவு நிறுவனங்கள்மூலம் வழங்கப்படுகின்றன. இதன் அடிப்படையிலேயே இந்தியாவிலும், வேளாண்மைக்குக் கடன் வழங்கும் பொருட்டுக் கூட்டுறவு நிறுவனங்கள் நிறுவப்பட வேண்டுமென வெவ்வேறு குழுக்கள் பரிந்துரை செய்ததின் அடிப்படையில் இங்குக் குறுகியகால, இடைக்காலக் கடன்கள், கிராம நிலையிலுள்ள கூட்டுறவுச் சங்கங்கள், கூட்டுறவு வேளாண்மை வங்கிகள் போன்ற

நிறுவனங்கள் மூலமாகவும், நீண்டகாலக் கடன்கள் நிலவள வங்கிகள் மூலமாகவும் வழங்கப்படுகின்றன. எனவே, வேளாண்மைக்குத் தேவையான குறுகியகாலக் கடன், இடைக்காலக் கடன், நீண்டகாலக் கடன் ஆகியவற்றை வழங்கும் பொருட்டுக் கூட்டுறவுக் கொள்கைகளின் அடிப்படையிலும், கூட்டுறவுச் சட்டத்தின் கீழும் நிறுவப்பட்ட வங்கிகளே கூட்டுறவு வங்கிகளாகும்.

(ஈ) நாணயமாற்று வங்கிகள் (Exchange Banks): இவற்றைச் செலாவணி வங்கிகள் என்றும், 'வெளிநாட்டுச் செலாவணி வங்கிகள்' என்றும் அழைக்கப்படுகின்றன. வெளிநாட்டு வாணிபத்தில் கடைப்பிடிக்க வேண்டிய நுட்பங்கள் உள்நாட்டு வாணிபத்தில் கடைப்பிடிக்க வேண்டிய நுட்பங்களினின்றும் மாறுபட்டவையாகும். உள்நாட்டு வாணிபத்தில் பண்டங்களை விற்பனை செய்பவரும் வாங்குபவரும் ஒரே நாட்டில் வசிப்பதால் பண்டங்களுக்குரிய விலையினைச் செலுத்துவதில் சிக்கல் எதுவும் எழுவதில்லை. ஆனால், வெளிநாட்டு வாணிபத்தில் பண்டங்களை வாங்குபவர் வசிக்கும் நாட்டிலுள்ள நாணயமும், விற்பனை செய்பவர் வசிக்கும் நாட்டிலுள்ள நாணயமும் மாறுபட்டவை. எனவே, இந்நடவடிக்கை நிறைவு பெறுவதில் பல சிக்கல்கள் எழுகின்றன. இச் சிக்கல்களைக் களைந்து வெளிநாட்டு வாணிபம் செம்மையாக நடைபெறும் வகையில் வெளிநாட்டுச் செலாவணி கிடைக்கவேண்டிய பணிகளைப் புரியும் வங்கிகளே நாணயமாற்று வங்கிகளாகும். இவ் வங்கிகளைப்பற்றிய மேலும் பல விவரங்களைப் பின்னரோர் அத்தியாயத்தில் விளக்கலாம். சில நாடுகளில் நாணயமாற்றுப் பணிகளை வணிக வங்கிகளே மேற்கொள்வதும் உண்டு. இந்தியாவைப் பொறுத்தவரை நாணயமாற்றுத் தொடர்பான பணிகளைப் பெரும்பான்மையில் வெளிநாடுகளில் தகுமையகங்களைக்கொண்ட நாணயமாற்று வங்கிகள் மேற்கொண்டுள்ளன.

(உ) சேமிப்பு வங்கிகள் (Savings Banks): எறும்பும் தனக்குக் கிடைக்கும் உணவில் ஒரு பகுதியினைச் சேமித்து வைக்க விழைகின்ற நிலையில், மனிதர்களிடையே குறைந்த வருவாயீட்டும் மக்கள் சேமிப்புத் தன்மைபெற்றுத் திகழவேண்டுவது அவசியமாகிறது. அவ்வாறு மக்களிடையே சேமிப்பு உணர்ச்சியினைத் தூண்டி, மக்கள் அவ்வாறு சேமித்த தொகையினை ஒன்று திரட்டி முதலீடு செய்து, உற்பத்தியினைப் பெருக்குவதன் வழி, நாட்டின் பொருளாதார முன்னேற்றத்திற்கு வழிகோல விழைவதே சேமிப்பு வங்கிகளின் நோக்கமாகும். ஏழை எளியோரின் சிறிதளவு சேமிப்பைக்கூட நாட்டின் ஆக்கப்பணிகளுக்குப் பயன்படுத்தத் தக்க வழி முறையினைச் சேமிப்பு வங்கிகள் அளிக்கின்றன.

சேமிப்பு வங்கிகள் மக்களிடமிருந்து பெறும் வைப்புத் தொகையினைத் திருப்பிச் செலுத்துகின்றனவெனினும், சேமிப்புக் கணக்கிலிருந்து பணம் பெறுவதற்கு ஒரு சில கட்டுப்பாடுகள் உள்ளன. மக்கள் தங்களுடைய சேமிப்புக் கணக்குகளிலிருந்து ஒரு குறிப்பிட்ட தொகைக்குக் கூடுதலான தொகையினை வங்கிக்கு முன் அறிவிப்புக்கொடுக்காது பெறமுடியாது. இக்கட்டுப்பாடு சேமிப்புக் கணக்கில் பணம் சேமித்துவைத்துள்ள எளிய மக்கள் தேவையற்ற காரணங்களுக்காகக் கணக்கிலிருந்து பணம் பெறுவதைத் தடுக்கிறது. இக் கணக்கிலிருந்து பணத்தினைப் பெற விழைந்த ஒரு நபர் தொடர்ந்து பணம் முழுவதையும் கணக்கிலிருந்து பெற்றுக்கொண்டு சேமிப்பே இல்லாத நிலையினைக்கூட அடையக் கூடும். இந்நிலையினைத் தவிர்க்கும் முகத்தான் இது போன்ற கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன. அஞ்சல் நிலைய சேமிப்பு வங்கிகளைத் தவிர்த்து வணிக வங்கிகளும் சேமிப்புக் கணக்கினைத் தொடங்குவதன் வழி, அவ் வங்கிகளின் பணிகளைப் புரிகின்றன. கனடா, செர்மனி ஜப்பான்ற நாடுகளில், தனிப்பட்ட முறையில் சேமிப்பு வங்கிகளை அரசே நடத்தி வருகிறது.

இருப்பினும் இக்காலத்தில் சேமிப்பு வங்கிகளுக்கும் வணிக வங்கிகளுக்கும் எவ்வித வேறுபாடும் இருப்பதாகத் தெரியவில்லை. ஏனெனில், வணிக வங்கிகளும் சேமிப்புக் கணக்கில் வைப்புத் தொகை பெறுகின்றன என்பதுடன்கூட அவ் வங்கிகளும் தாங்கள் பெறுகின்ற சேமிப்புக் கணக்கு வைப்புத்தொகைக்கு இதுபோன்ற கட்டுப்பாடுகளை விதிக்கின்றன.

முதன்முதலில் தனிப்பட்ட முறையில் ஜப்பான் நாட்டில்தான் சேமிப்பு வங்கி தொடங்கப்பட்டது. 1765-ஆம் ஆண்டு ஆம்பர்க் நகரில் (Hamburg) தொடங்கப்பட்ட சேமிப்பு வங்கியே முதல் சேமிப்பு வங்கியாகும். நமது நாட்டில் அஞ்சலகங்களிலுள்ள சேமிப்பு வங்கிகளைத் தவிர்த்துத் தனியாக சேமிப்பு வங்கிகள் செயலாற்றவில்லை. வணிக வங்கிகளே சேமிப்புக் கணக்கிலும் வைப்புத் தொகையினைப் பெறுகின்றன.

(ஊ) நாட்டு வங்கிகள் (Indigenous Banks): மேற்குறிப்பிட்ட வங்கிகளைத் தவிர்த்து வணிக வங்கிகளின் பணிகளைப் புரிந்துகொண்டு ஆளும், மைய அரசாலும், மைய வங்கியாலும் முழுமையாகக் கட்டுப்படுத்தப்படாத ஒருசில தனியார் நிறுவனங்கள் வங்கிகள் என்ற நிலையில் விளங்கி வங்கிகளின் பணிகளை மேற்கொண்டுள்ளன. அத்தகைய தனி வங்கிகளை 'நாட்டு வங்கிகள்' என்றழைக்கிறோம். இத்தகைய வங்கிகள் ஒரு நாட்டின் ஒழுங்கமைக்கப்படாத பணச் சந்தையின் பகுதி எனக் கருதப்

படுகின்றன. இவற்றின் உரிமையாளர்கள், வேறு தொழில்களை முதன்மைத் தொழில்களாகவும் வங்கியல் தொழிலைத் துணைத் தொழிலாகவும் கருதிச் செயலாற்றுகின்றனர். இவர்களுடைய பணிகள் நாட்டுக்கு நாடு மாறுபடுகின்றன. எனினும், தேவைப் படும் நபர்களுக்கும், நிறுவனங்களுக்கும் கடன் வழங்குதல் அவர்கள் எல்லோரும் புரிகின்ற ஒரு பொதுப்பணியாகும்.

(ஈ) மைய வங்கி (Central Bank): பல்வேறு வங்கிகளைப் பற்றி நாம் கொடுத்த விளக்கம், மைய வங்கியினைப் பற்றி விளக்கம் கொடுக்காது முழுமைபெறாது. மைய வங்கி, ஒரு நாட்டின் தலைமை வங்கியாகக் கருதப்படுகிறது. அந்த நாட்டில் பணிபுரியும் இதரவகை வங்கிகளைக் கட்டுப்படுத்தும் உரிமையினையும் இது கொண்டுள்ளது. மைய வங்கியின் முக்கியத்துவம். வணிக வங்கிகள் வளர்ச்சியடைந்த நிலையிலேயே உணரப்படுகிறது. அரசு வங்கியாகப் பணியாற்றும் மைய வங்கி, பெரும்பாலும் நோட்டுகள் அச்சடிக்கும் முற்றுரிமை பெற்றுத் திகழ்வதுடன்கூட நாட்டின் நிதிநிலைமையை நிலையாக்கம் செய்து அந்த நாட்டு நாணய மதிப் பினைக் காக்கின்றது. இவ் வங்கியின் நோக்கம், இதர வங்கிகளுக் குப் பணிபுரிவதேயன்றி இலாபம் ஈட்டுவதன்று. எனவே, இது இதர வணிக வங்கிகளுடன் போட்டியிட்டுத் தொழில் புரிவதில்லை. வணிக வங்கிகளின் பணிகளை மேற்பார்வை செய்து, அவற்றைக் கட்டுப்படுத்தி அவை அவலநிலையில் உள்ளபோது உதவி செய்து அவற்றைக் காப்பாற்றி, வணிக வங்கிகளின் வளர்ச் சிக்குப் பாடுபடுவதால் மைய வங்கி 'வங்கிகளின் வங்கி' என்றும் அழைக்கப்படுகிறது.

வினாக்கள்

1. வங்கிகளின் வகைகள் யாவை?
2. வணிக வங்கிகளின் பணிகளையும், தொழில் வங்கியின் பணிகளையும் ஒப்பிடுக.
3. வணிக வங்கிகளின் நோக்கில் ஏற்பட்டுள்ள மாறுதல்கள் யாவை?
4. கூட்டுறவு வங்கிகளின் முக்கியத்துவத்தைப்பற்றி விளக்குக.
5. குறிப்பு வரைக:
   (அ) நாணய மாற்று வங்கி
   (ஆ) நாட்டு வங்கியர்
   (இ) முதலீட்டு வங்கி
   (ஈ) எளிவரல் தன்மை.

3. வணிக வங்கியின் பணிகள்

வங்கிகளின் வளர்ச்சியினைப்பற்றி நாம் அறிந்த விளக்கத்திலிருந்து, மக்களுடைய சேமிப்பினைத் திரட்டவும், மக்கள் வைத்துள்ள பணத்தினை வைப்புத் தொகையாகப் பெறவுமே வங்கிகள் தொடங்கப்பட்டன என்று குறிப்பிடலாம். எனவே, வங்கிகளின் முதன்மைப் பணி, முக்கியப் பணி மக்களிடமிருந்து வைப்புத்தொகை பெறுதலேயாகும். இருப்பினும், மக்களிடமிருந்து வைப்புத்தொகையினைப் பெறுதல் மட்டும் வணிக வங்கிகளின் பணி என்று கூறுதல் தவருகும். வைப்புத் தொகையினை மக்களிடமிருந்து திரட்டுவதுடன் கூட பல்வகையான பணிகளை ஒவ்வொரு வணிக வங்கியும் புரிகின்றது. இருப்பினும், வணிக வங்கிகளின் பணிகள் இவை, இவை என அறுதியிட்டுக் கூறுதல் சற்றுக் கடினமான செயலாகும். ஏனெனில், வணிக வங்கிகளின் பணிகள், நாட்டுக்கு நாடு, அந்தந்த நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு ஏற்பவும், மக்களுடைய பண்பாட்டின் வளர்ச்சியடிப் படையிலும் மாறுபடுகின்றன. ஒரே நாட்டில்கூட, பகுதிக்குப் பகுதி, வங்கிகளின் பணிகள் மாறுபடலாம். தொடக்கத்தில் சில பணிகள் மட்டும் புரியும் நோக்குடன் தொடங்கப்பட்டாலும், காலப்போக்கில் அவற்றின் பணிகள் விரிவடைந்து மக்களுக்குப் பல்வேறு முறைகள் மூலம் பணி செய்யத் தொடங்கியுள்ளன. வங்கிகளின் பணிமுறைகளும் அவை மேற்கொள்ளும் பணிகளும் நாட்டிற்கு நாடு, அவற்றின் தன்மை, பொருளாதார நிலை, மக்களுடைய பண்பாட்டு வளர்ச்சி, அவர்களுடைய கல்வி வளர்ச்சி ஆகியவற்றின் அடிப்படையில் வேறுபடினும் அவைகளுடைய நோக்கங்களும் பொதுவான பணிகளும் ஒரு தன்மை பெற்றுத் திகழ்வதை நன்கறியலாம்.

மக்களிடமிருந்து வைப்புத் தொகையினைப் பெறுதல், அதனை முதலீடு செய்தல் என்பவையே வங்கிகளின் பணிகள் என்ற கூற்று பழங் கூற்றாகிவிட்டது. இப் பணிகளை மட்டுமே செய்ய விழையும் வங்கியொன்று போட்டி நிறைந்த இவ்வுலகில் தொடர்ந்து செயலாற்ற முடியாமற் போகலாம். வைப்புத்

தொகையினைப் பெறுதல், வாடிக்கைக்காரர்களுக்குக் கடனுதவீ யளித்தல் போன்ற பணிகளைத் தவிர்த்து ஒவ்வொரு வங்கியும், வாடிக்கைக்காரர்களுடைய மதிப்பு மிக்க பொன், நகை போன்ற வற்றைப் பாதுகாப்புக்காகப் பெறுதல், ஒரு நாட்டின் ஏற்றுமதி, இறக்குமதி ஆகியவற்றிற்கு நிதி வசதியளித்தல், மாற்றுச் சீட்டுகளைக் கழிவு செய்தல் போன்ற பணிகளையும் மேற்கொள் கின்றன.

வங்கிகள் தங்களுடைய பணிகளின் வழி மக்களுக்கும் சமூதா யத்திற்கும் கீழ்க்காணும் பயன்களை அளிக்கின்றன.

(அ) பணத்தைச் சேமித்து வைக்க மக்களைத் தூண்டு கின்றன.

(ஆ) மக்களுக்குப் பணம் செலுத்தவேண்டிய பொறுப்பினை எளிதாக்குகின்றன.

(இ) பொருளாதாரத் தேவைக்கேற்ற வகையில் புதிய பணத்தை உற்பத்தி செய்யும் பொறுப்பினையும், உரிமையினையும் கொண்டுள்ளன.

(ஈ) பணத்தினை உற்பத்தி செய்வதன் வழி பண்டங்களின் உற்பத்தியினைக் கட்டுப்படுத்தும் உரிமையினையும் கொண்டுள்ளன.

(உ) பண்டங்களின் விலைகளும் வங்கிகள் கடைப்பிடிக்கும் கோட்பாடுகளினடிப்படையிலேயே நிர்ணயிக்கப்படு கின்றன.

இவ்வாறு பல்வேறு சேவைகளைப் புரியும் வங்கிகளுடைய பணி களைக் கீழ்க்காணும் இரு விதமாகப் பிரிக்கலாம். (1) முதன்மைப் பணிகள் (Primary functions). (2) துணைப் பணிகள் (Secondary functions). துணைப் பணிகள் மீண்டும் இரு வகை களாகப் பிரிக்கப்படலாம். அவை (அ) பொதுப் பயன் பணிகள் (ஆ) முகமைப் பணிகள் (Agency services). முதன்மைப் பணி களைப் பொறுத்தவரை பல்வேறு நாடுகளின் வணிக வங்கிகளுக் கிடையே எவ்வித வேறுபாடும் இல்லை. எல்லா நாட்டிலுமுள்ள வணிக வங்கிகள் ஏறத்தாழ ஒரே விதமான பணிகளையே புரிகின்றன. ஆனால், துணைப் பணிகளைப் பொறுத்தவரை, அவை ஒரு தன்மைப்பட்டுத் திகழ்வதில்லை. வங்கிகளுக்கு வங்கி, குறிப்பாக அவை பணிபுரியும் நாட்டு நிலைக்கேற்றவாறு மாறுபட லாம்.

முதன்மைப் பணிகள் (Primary functions): எப் பணிகளைப் புரிய வேண்டி வணிக வங்கிகள் தொடங்கப்பட்டனவோ

அப் பணிகளே முதன்மைப் பணிகளெனக் கருதப்படுகின்றன. இத்தகைய முதன்மைப்பணிகள் மூலமாகவே வணிக வங்கிகள் நாட்டின் பொருளாதார வளர்ச்சியினைப் பெருக்க முனைகின்றன. கீழ்க்காணும் பணிகளை வங்கிகளின் முதன்மைப் பணிகளெனக் கூறலாம்.

(1) பொது மக்களிடமிருந்து வைப்புக்களைப் பெறுதல் : வங்கிகளும் இதர வியாபார நிறுவனங்களைப் போன்றே வியாபாரத்தில் ஈடுபட்டுள்ளன. போதிய அளவு தங்கள் தொழில் மூலம் இலாபம் ஈட்டும் நோக்கம் கொண்டுள்ளன. வங்கிகளுக்கும் இதர வியாபார நிறுவனங்களுக்குமிடையே ஒரு வேறுபாடுள்ளது. இதர வியாபார நிறுவனங்கள் பண்டங்களை உற்பத்தி செய்வதன் வழியாகவும் பண்டங்களை வாங்கி விற்பனை செய்வதன் வழியாகவும் இலாபம் ஈட்ட முற்படுகின்றன. குறைந்த விலையில் பண்டங்கள் வாங்கப்பட்டு, சற்றுக் கூடுதலான விலையில் விற்கப்படுகின்றன. இவற்றிற்கிடையேயான வேறுபாடு விற்பனையாளர்களின் இலாபமாகிறது. ஆனால், வங்கிகள் பண்டங்களுக்குப் பதிலாகப் பணத்தினை உற்பத்தி செய்கின்றன. பல்வேறு வைப்புகள் மூலம் பணத்தினைக் குறைந்த வட்டிக்குப் பெற்று, அதனையே கூடுதலான வட்டி வீதத்தில் முதலீடு செய்து இலாபம் ஈட்ட முற்படுகின்றன. மக்களும், தங்களிடமுள்ள சேமிப்பு எவ்வித வருவாயையும் ஈட்டித் தருவதில்லையாதலின் அதனை வங்கிகளிடம் செலுத்தி வட்டி பெறுவதன்மூலம் வருவாய் ஈட்டுகின்றனர்.

வங்கிகள் வைப்புத் தொகையினை மக்களிடமிருந்து பெறுவதன் காரணமாக, அவை கடனளிகள் என்ற நிலையினை எய்துகின்றன. வங்கிகள் மக்களிடமிருந்து வைப்புத் தொகையினைக் கடனளிகள் என்ற நிலையில் பெற்றாலும், அவை அந்த வைப்புத் தொகையினைப் பாதுகாப்பதுடன்கூட, வைப்புத் தொகையினைச் செலுத்தியவர்கள் அதனைப் பெறவிரும்பும்பொழுது உடன் திருப்பிச் செலுத்தும் பொறுப்பினையும் ஏற்றுக்கொள்கின்றன, இத்தன்மை வங்கிகள் கடனளிகள் என்ற நிலையினை அடைவதற்கும், தனி நபர்கள் கடனளிகள் நிலையினை அடைவதற்குமுள்ள வேறுபாட்டினை நன்கு விளக்கும். தனி நபர்கள் கடன் வாங்கும் நிலையில், அவர்கள் கடன் தொகையை அவர்கள் விருப்பப்படி கடனுதவி அளித்தவர்களுக்கு — கடனளர்களுக்குத் திருப்பிச் செலுத்தலாம். கடனளர்கள் அத் தொகையினைக் கேட்ட பிறகுதான் செலுத்தவேண்டுமென்ற நிபந்தனை இல்லை. ஆனால், வங்கிகள் கடனளிகள் என்ற நிலையினை அடையும் பொழுது அவை வாங்கிய கடனைக் கடனளர்கள் அதாவது வைப்புக்களை

வங்கிகளிடம் செலுத்தியவர்கள் கேட்டாலன்றித் திருப்பிச் செலுத்த முடியாது. மேலும் தனி நபர்கள் தங்களுடைய நுகர்வுக்காகவோ முதலீடு செய்யும் நோக்கத்துடனே கடன் வாங்குகின்றனர். ஆனால், வங்கிகள் தனி நபர்களுக்கோ நிறுவனங்களுக்கோ மீண்டும் கடன் கொடுக்கும் நோக்கத்துடன் கடன் பெறுகின்றன.

வங்கிகள் தாங்கள் வாங்கும் கடனை வைப்புத்தொகையினைப் பல்வேறு முறைகள் மூலம் வாங்குகின்றன. அவைகளாவன:

(அ) நடப்புக் கணக்கு (Current Account)
(ஆ) சேமிப்புக் கணக்கு (Savings Account)
(இ) நிலைவைப்புக் கணக்கு (Fixed Deposit Account)
(ஈ) குவிவு வைப்பு (Cumulative Deposit)
(உ) அழைப்பு வைப்பு (Call Deposit)
(ஊ) பருவகால வைப்பு (Seasonal Deposit)

(அ) நடப்பு வைப்பு: எப்பொழுது வேண்டுமாயினும், இக் கணக்கில் பணம் செலுத்தலாம், எப்பொழுது வேண்டுமாயினும் பணம் எடுக்கலாம் என்ற நிலையில் தொடங்கப்படும் கணக்கே நடப்பு வைப்புக் கணக்காகும். இக் கணக்கில் பணம் செலுத்துவதற்கும், இக் கணக்கிலிருந்து பணம் எடுப்பதற்கும் எவ்விதக் கட்டுப்பாடும் விதிக்கப்படுவதில்லை. பெரும்பாலும், பெருமளவில் நடவடிக்கைகள் மேற்கொள்ளும் வியாபாரிகளாலேயே இத் தகைய கணக்குத் தொடங்கப்படுகிறது. இத்தகைய கணக்கிலிருந்து பணம் எடுப்பதற்கு எவ்விதக் கட்டுப்பாடும் விதிப்பதில்லையாதலாலும், தேவைப்படும்போது இக் கணக்கிலிருந்து பணம் பெற்றுக்கொள்ளலாமாதலினாலும் இக் கணக்கு 'தேவை வைப்புக் கணக்கு' (Demand Deposit Account) என்றும் கூறப்படுகிறது.

நடப்பு வைப்புக் கணக்குகளிலுள்ள பணத்தை எவ்வித முன்னறிவிப்புமின்றி எப்பொழுது வேண்டுமாயினும் திரும்பப் பெறலாம் என்ற நிலை உள்ள காரணத்தினால், வங்கிகள் இக் கணக்குகள் மூலம்பெறும் தொகையினை முழு நம்பிக்கையுடன் முதலீடு செய்தல் இயலாது. எனவேதான், பெரும்பாலான வங்கிகள் இத்தகைய கணக்குமூலம் பெறுகின்ற பணத்திற்கு—வைப்புத் தொகைக்கு வட்டி எதுவும் செலுத்துவதில்லை. இருப்பினும் ஒருசில வங்கிகள் அதிகமான தொகையினை நடப்புக் கணக்கில் இருப்பாகக்கொண்ட பெரும் வாடிக்கைக்காரர்களுக்குக் குறைந்த அளவு வீத வட்டி கொடுப்பதுமுண்டு.

வங்கிகளில் நடப்புக் கணக்குகள் இருவகைகளில் தொடங்கப் படுகின்றன. ஒன்று வாடிக்கைக்காரர்கள் தங்களிடமுள்ள பணத்தை வங்கிகளில் ரொக்கமாகக்கட்டி, ரொக்கத்திற்கே தேவை வைப்பாக மாற்றுவதன் வாயிலாக நடப்புக் கணக்குத் தொடங்குதல். இவ்வகை நடப்புக் கணக்கு வைப்பு 'ரொக்க வைப்பு' (Cash Deposit) என்றழைக்கப்படுகின்றது. ஒரு குறிப் பிட்ட வங்கியிடம் கடன்பெற்று, அக் கடன் தொகையினை ரொக்க மாகப் பெற்றுக்கொள்ளாமல், கடனைப் பெறும் வாடிக்கைக் காரர்கள் தங்களுடைய நடப்புக் கணக்கில் அதனை வரவு வைத்துக் கொள்வதாகும். இப்படிப்பட்ட வைப்பு 'கடன் வைப்பு' (credit deposit) என்றும், 'ஆக்கப்பட்ட வைப்பு' (created deposit) என்றும் அழைக்கப்படுகின்றது.

நடப்புக் கணக்கின் முக்கியத்துவம் நாட்டிற்கு நாடு மாறுபடு கின்றதெனினும், இக்காலத்திய வங்கிகளின் நடவடிக்கைகள் பெரும்பாலும் நடப்பு வைப்புகளையே சார்ந்துள்ளனவென்று கூறின் அது மிகையாகாது. வாடிக்கைக்காரர்களைப் பொறுத்தவரை இத்தகைய வைப்புக் கணக்கில் செலுத்தப்படும் தொகையினை எவ்விதக் கட்டுப்பாடுமின்றி எப்பொழுது வேண்டுமாயினும் எடுக்கலாமென்ற நிலையுள்ள காரணத்தினால் இவ் வைப்பிலுள்ள பணம் எளிவரல் தன்மை பெற்றுள்ளது என்று கூறலாம்.

(ஆ) சேமிப்புக் கணக்கு (Savings Account): நிலைப்படுத்தப் பட்ட வருவாய் கொண்டுள்ளோர்களையும், குறைந்த வருவாய் கொண்டுள்ளோர்களையும் தங்கள் வருவாயில் ஒரு பகுதியினைச் சேமிக்கத் தூண்டும் பொருட்டுத் தொடங்கப்படும் கணக்கே சேமிப்புக் கணக்காகும். மக்களிடையே சேமிப்பு உணர்ச்சியினைத் தூண்டும் பொருட்டுத் அஞ்சலகங்களில் தொடங்கப்பட்ட இக் கணக்குகள் பின்னர் வணிக வங்கிகளாலும் தொடங்கப்பட்டன. ஆரம்ப காலத்தில் இக் கணக்கிலிருந்து பணத்தைக் காசோலைகள் மூலம் எடுக்கும் உரிமையினை வங்கிகள் வாடிக்கைக்காரர்களுக்குக் கொடுக்கவில்லை. ஆனால், பிறகு ஒரு சில நிபந்தனைகளுக்குட்பட்டு இக் கணக்கிலுள்ள பணத்தையும் காசோலை மூலம் எடுக்கும் உரிமையினை வங்கிகள் வாடிக்கைக்காரர்களுக்குக் கொடுத்தன. இக் கணக்கிலிருந்து பணத்தைக் காசோலை மூலம் எடுக்க விரும்புபவர்களுக்குப் பொதுவாக விதிக்கப்படும் நிபந்தனை, ஒவ்வொரு வாடிக்கைக்காரரும் அவருடைய நடைமுறைக் கணக்கில் ஒரு குறிப்பிட்ட தொகையினைக் (பெரும்பாலும் ரூ. 100) குறைந்த அளவு ரொக்க இருப்பாக வைத்துக்கொள்ளுதல் வேண்டுமென்பதேயாகும். நடப்புக் கணக்கினைக் கொண் டுள்ள வாடிக்கைக்காரர்களுக்கு அளிக்கப்படும் சலுகைகளுள்

பெரும்பாலான சலுகைகள் இத்தகைய கணக்கினைத் தொடங்கியுள்ளவர்களுக்கும் அளிக்கப்படுகின்றன. ஆனால், ஒவ்வொரு வாரத்திலும் ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கைக்குமேல் அல்லது ஒரு குறிப்பிட்ட ரூபாய்க்குமேல் இக் கணக்கிலிருந்து பணம் எடுத்தல் கூடாது. இது போன்ற கட்டுப்பாடுகள் இக் கணக்கினைத் தொடங்கியுள்ளவர்களுக்கு எல்லா வங்கிகளும் விதிப்பதுண்டு. பொதுவாக இக் கணக்கினைத் தொடங்கியுள்ளவர்களுக்கு அதிகப் பற்று (over draft) மூலம் கடன் வசதி அளிக்கப்படுவதில்லை. இத்தகைய கணக்குகள்மூலம் நிலையான, நிரந்தர வருவாய் கொண்டவர்களுக்கிடையே சேமிப்பு உணர்ச்சி வளர்க்கப்படுகின்றது. மேலும், இத்தகைய கணக்குகள்மூலம் கிடைக்கும் பணத்தினைக் கொண்டு வங்கிகளும் தங்கள் தொழிலை வளர்த்துக் கொள்கின்றன.

(இ) நிலைவைப்புக் கணக்கு (Fixed doposit Account): முதலீடு செய்யும் நோக்கத்துடன் மக்களால் வங்கிகளில் ஒரு குறிப்பிட்ட காலத்திற்கென்று வரையறையாக ஒரு கணக்கில் செலுத்தப்படுவதே நிலைவைப்புத் தொகையாகும். எனவே, ஒரு குறிப்பிட்ட காலத்திற்குப் பின்னர் பணத்தைத் திரும்பிப் பெறும் வகையில் ஒப்பந்தம் செய்துகொண்டு அப் பணத்தை வாங்கிக் கணக்கில் செலுத்துவதையே 'நிலைவைப்பு' (Fixed deposit) என்கிறோம். வங்கிகள் 15 நாட்கள் முதல் எத்துணைக் காலத்திற்கு வேண்டுமாயினும் நிலைவைப்பில் பணத்தினைப் பெறுகின்றன. இக் கணக்கிலுள்ள பணம் ஒரு குறிப்பிட்ட காலம் முடியும்வரை வங்கியிடம் முடக்கம் செய்யப்படுகின்றது. எனவே, அக் காலம் முடியுமுன்னர் வங்கியிடமிருந்து அவ் வைப்பில் பணத்தினைச் செலுத்தியவர் உரிமையுடன் பணத்தினைத் திருப்பிப் பெறுதல் என்பது இயலாது. இத்தகைய வைப்பு இங்கிலாந்து நாட்டில் 'தூல வைப்பு' (Time deposit) என்றழைக்கப்படுகின்றது.

பொதுவாக, இக் கணக்கிலுள்ள பணத்திற்கு வங்கிகள் செலுத்தும் வட்டி வீதம் இதர கணக்கிலுள்ள பணத்திற்குச் செலுத்தப்படும் வட்டிவீதத்தைவிடச் சற்றுக் கூடுதலாக இருக்கும். நிலைவைப்புக் காலம் கூடுதலாகக் கூடுதலாக வட்டி வீதமும் கூடுதலாகின்றது. எடுத்துக்காட்டாக, 12 திங்கள் காலத்திற்குரிய நிலைவைப்புக்கு 9% வட்டி அளிக்கும் ஒரு வங்கி 12 திங்கள் காலத்திற்கு மேற்பட்ட நிலைவைப்புக்கு 10% வட்டி செலுத்தலாம். இவ்வகைக் கணக்கில் வருகின்ற பணம் ஒரு குறிப்பிட்ட காலம் வரை, இவ் வைப்புத்தொகை செலுத்துபவர்களால் திருப்பிக் கேட்கப்படாது என்ற உறுதியுடன் வங்கிகள்

அத் தொகையினை முதலீடு செய்யலாமாதலின் இக் கணக்கில் பெறப்படும் தொகைக்குக் கூடுதலான வட்டி செலுத்தப்படுகிறது.

நிலைவைப்பில் பணத்தினைச் செலுத்தியவர்கள் அப் பணத்தைக் காசோலை எழுதுவதன் மூலம் வங்கியிடமிருந்து திரும்பிப் பெறுதல் இயலாது. குறிப்பிட்ட காலம் முடிவதற்கு முன்பாகவே நிலைவைப்புக் கணக்கினைத் தொடங்கியவர்களுக்குப் பணம் தேவைப்பட்டால் அந்தக் கணக்கினைப் பிணையமாகக்கொண்டு வங்கியிடமிருந்து பிற கடனுளிகளைப்போன்று நிலைவைப்பைத் தொடங்கியவரும் கடன் பெறலாம். ஒருசில வங்கிகள் அவ்வாறு கடன் வழங்கும்போது தனியாக அவர்களிடமிருந்து வட்டித் தொகை பெறுது. அந்தக் காலத்திற்கு, அந்தத் தொகைக்கு வட்டி செலுத்துவதில்லை. ஆனால், பெரும்பாலான வங்கிகள் அவ்வாறு கடன் கொடுப்பதைத் தனி நடவடிக்கையாகவே கருதுகின்றன. ஏனெனில், வங்கிகள் தாங்கள் கொடுக்கும் கடனுக்குப் பெறும் வட்டி வீதம், நிலைவைப்புக்களுக்குக் கொடுக்கும் வட்டி வீதத்தைவிட அதிகமாகவே இருக்கும். இங்கிலாந்து நாட்டில் நிலைவைப்பினைச் செலுத்தியவருக்கும், வங்கிக்கும் இடையே உள்ள ஒப்பந்தப்படி ஒரு குறிப்பிட்ட காலம் முன்னறிவிப்புக் கொடுத்து நிலைவைப்பிலுள்ள பணத்தினைக்கூட, கெடுகாலம் முடிவதற்கு முன்னரே திரும்பிப் பெறும் வழக்கம் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இத்தகைய நிலைவைப்புகள் ஒரு தனி நபர்மீது மட்டும்தான் தொடங்கப்படலாமென்பதில்லை. இரண்டு அல்லது அதற்கும் மேலான நபர்கள் மீதும் கூட்டாகத் தொடங்கப்படலாம்.

(ஈ) குவிவு வைப்பு (Cumulative Deposite): இத்தகைய வைப்பு 'தொடர் வைப்பு' (Recuring Deposit) என்றும் அழைக்கப்படும். இவ்வகை வைப்புக் கணக்கில் வாரம் ஒருமுறை, அல்லது மாதம் ஒருமுறை அல்லது மாதம் இருமுறை ஒரு குறிப்பிட்ட அளவு தொகையைச் செலுத்திவர, ஒப்பந்தம் செய்துகொண்ட கெடு முடிந்த பின்னர், அக் கணக்கில் செலுத்தியமொத்தத் தொகையும் அதற்குரிய கூட்டுவட்டி என்னும் நிலையில் சற்றுக் கூடுதலான தொகையும் சேர்த்து மொத்தத் தொகையும் வங்கியிடமிருந்து இக் கணக்குத் தொடங்குபவர் பெற்றுக் கொள்கிறார்.

(உ) அழைப்பு வைப்பு (Call deposit): பொதுவாக, ஒரு வங்கி தன்னிடமுள்ள கூடுதலான, முதலீடு செய்யப்படாத தொகையினை மற்ற வங்கிகளிடம் தனக்குத் தேவையான போது, தான் கேட்கும்போது, திருப்பித் தருதல் வேண்டும் என்ற நிபந்தனையுடன் செலுத்தும் தொகையே அழைப்புவைப்பு

என்றழைக்கப்படுகிறது. இத்தகைய வைப்புத் தொகையினைப் பெற்ற வங்கிகள், அதனைச் செலுத்திய வங்கிகள் கேட்டவுடன் திருப்பிச் செலுத்தவேண்டுமென்ற நிலை நிலவுவதால், இது 'அழைப்பு வைப்பு' என்றழைக்கப்படுகிறது. ஒரு சில சந்தர்ப்பங்களில் வைப்பினைப் பெறும் வங்கிகள், வைப்பினைச் செலுத்தும் வங்கிகள் அதனைத் திருப்பிப் பெறுவதற்கு ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு முன்னர் அறிவிப்பு ஒன்று தருதல் வேண்டுமென்ற நிபந்தனை விதிப்பதுண்டு. அத்தகைய வைப்பும், அழைப்பு வைப்பின் ஒரு பிரிவே எனினும் இது 'அறிவிப்பு வைப்பு' என்று அழைக்கப்படுகிறது.

(ஊ) பருவகால வைப்பு (Seasonal Deposit) : வேளாண்மை நிறைந்த நாடுகளில், பருவகாலங்களில் வங்கிகளிடமிருந்து அதிக அளவில் விவசாயிகள் கடன்பெற விழைகின்றனர். அத்தகைய கடன் குறுகிய காலக் கடனுகவே அமைவது இயல்பு. எனவே, மூன்று அல்லது நான்கு திங்களில் அக் கடன் திருப்பிச் செலுத்தப் பட்டுவிடும். அப் பருவகாலங்களில் வங்கிக் கடனுக்கு அதிக அளவில் போட்டி நிலவுகிறது. அத்தகைய காலங்களில், வங்கிகள் இதரவகை நிதியினைக்கொண்டு விவசாயிகளுடைய கடன் தேவையைப் பூர்த்திசெய்தல் இயலாது. மேலும், அக் குறுகிய காலத்திற்குக் கடன் கொடுக்கும் பொருட்டு நிரந்தரமாக, நீண்ட காலக் கடனைப் பணச் சந்தையிலிருந்து திரட்டுவதும் வங்கிகளுக்கு இலாபகரமாக இருப்பதில்லை. எனவே, குறிப்பிட்ட பருவங்களில் மட்டும், அக்குறிப்பிட்ட பருவத்திற்கென வங்கிகள் பெறும் வைப்புகள் பருவகால வைப்புகளெனப்படும். பணம் படைத்தோரை இத்தகைய வைப்பில் முதலீடு செய்யத் தூண்டும் வகையில் வங்கிகள் இவ்வகை வைப்புக் கணக்கில் பெறும் பணத்திற்குச் சற்றுக் கூடுதல் வட்டி வீதம் செலுத்துவது இயல்பு. இத்தகைய வைப்புகள் நிலைவைப்புகளுக்கு ஒப்பாக அமைகின்றன. இதில் உள்ள பணம் அக்கெடு முடியு முன்னர் வங்கிகளால் திருப்பிச் செலுத்தப்படுவதில்லை. அக் குறிப்பிட்ட பருவம் முடிந்த பின்னர் அவ் வைப்பு புதுப்பிக்கப்படுவதில்லை.

மேற் குறிப்பிட்ட வகையான வைப்புகளைத் தவிர இக் காலத்தில், வணிக வங்கிகள் பல்வகையான வைப்புகளைப் பெறுகின்றன. ஓய்வுகால நல வைப்பு, குழந்தைகள் திருமண நல வைப்பு போன்றவை அவற்றுள் சில. இத்தகைய வைப்புகள் முன்னர்க் குறிப்பிடப்பட்ட வகையான வைப்புகளைப் போன்று அவ்வளவு பொதுத்தன்மை பெற்றவையல்ல. எல்லா வங்கிகளும் இத்தகைய வைப்புக் கணக்குகளைத் தொடங்கிப் பணம்

பெறுகின்றன வென்று உறுதியாகக் கூறுதல் இயலாது. இருப்பினும் நிரந்தரமாக மாத ஊதியம் பெறுபவர் தங்களுடைய மாத ஊதியத்தில் ஒரு குறிப்பிட்ட தொகையினை வங்கியில் செலுத்தி, ஓய்வு பெற்ற பின்னர் அத் தொகையை அதற்குரிய வட்டியுடன் சேர்த்துப் பெறும் 'ஓய்வுகால நலவைப்பு முறை' (Retirement Benefit Deposit) இப்பொழுது சற்றுப் பரவி வருகின்றது.

(2) **வைப்புத் தொகையினை முதலீடு செய்தல்:** வணிக வங்கிகளின் இரண்டாவது முதன்மைப் பணி, அவை பெற்ற வைப்புத் தொகையினை உரிய முறையில் முதலீடு செய்தலேயாகும். வணிக வங்கிகளும் இதர நிறுவனங்களைப் போன்றே வியாபார நிறுவனங்களாகும். அவை இலாபம் ஈட்ட வேண்டுமென்ற நோக்கம் கொண்டவை. எனவே, அவை தாங்கள் பெற்றுக்கொண்ட வைப்புத் தொகையினை, வாடிக்கைக்காரர்கள் எந்த நேரத்திலும் திரும்பிப் பெற விழைவர், அதனைத் திருப்பிக் கொடுத்தல் வேண்டும் என்ற கருத்துடன், முழுத் தொகையினையும் ரொக்கமாகத் தங்களுடைய பணப் பெட்டியில் வைத்திருத்தல் இயலாதது. ஆகையால், அவை திரட்டிய அல்லது பெற்றுக் கொண்ட வைப்புத் தொகையில் ஒரு பகுதியினை வாடிக்கைக்காரர்களுடைய தேவையைப் பூர்த்தி செய்யும் வகையில், ரொக்கமாக வைத்துக்கொண்டு எஞ்சிய தொகையினை, தொழில், மற்றும் வணிக நிறுவனங்களுக்குக் கடன் கொடுப்பதன் வாயிலாகவும், அந் நிறுவனங்கள் வெளியிடும் கடன் பத்திரங்களை வாங்குவதன் வாயிலாகவும், அவற்றுடைய மாற்றுச் சீட்டுகளைக் கழிவு செய்து பணம் செலுத்துவதன் வாயிலாகவும் முதலீடு செய்ய முனைகின்றன. அவை செலுத்தும் வட்டி வீதத்தைவிடச் சற்றுக் கூடுதலான வட்டி வீதத்தில் முதலீடு செய்கின்றன. இவ்வாறு வங்கிகள் வைப்புத் தொகையில் ஒரு பகுதியினை மட்டும் ரொக்கமாக வைத்துக்கொண்டு எஞ்சிய பகுதியினை முதலீடு செய்ய முனைவதற்கு முக்கிய காரணம் வாடிக்கைக்காரர்கள் எல்லோரும் ஒரே நேரத்தில் தங்கள் வைப்புத் தொகையினைத் திருப்பிப்பெற விழையமாட்டார்கள் என்ற உட்கருத்தேயாகும். வங்கிகள் வழங்கும் கடன் ரொக்கமாக இருப்பதில்லை. கடன் பெறுகின்ற நிறுவனங்களுடைய கணக்கில் வரவு வைக்கப்பட்டு, அக் கணக்கின் நடவடிக்கைகள் காசோலைமூலம் நடைபெறுகின்றன. இது குறித்த விவரங்களைக் 'கடனுக்கம் செய்தல்' என்னும் அத்தியாயத்தில் விளக்கலாம்.

வங்கிகள் தாங்கள் பெற்ற வைப்புத் தொகையினை முதலீடு செய்யுங்கால் பாதுகாப்பு, எளிவரல் தன்மை (liquidity), இலாபம்

ஆகிய மூன்று கோட்பாடுகளையும் கடைப்பிடிக்கின்றன. பிணையங்களின் அடிப்படையில் வங்கிகள் வழங்கும் கடன்களைப் 'பிணையக்கடன்' (secured loan) என்றும், பிணையமற்ற கடன் (unsecured loan) என்றும் இரு வகைகளாகப் பிரிக்கின்றனர். கடன் பெறுபவர்கள், நகைகள், இயந்திர சாதனங்கள், இதர பத்திரங்களைப் பிணையமாக்கக் காட்டி, அல்லது அவற்றை ஈடாக வைத்துக் கடன் பெறுவார்களேயானால் அத்தகைய கடன்களைப் பிணையக் கடன்கள் என்று கூறுகிறோம். அதுபோலன்றி, நற்பெயர் பெற்ற நல்ல பொருளாதார நிலையிலுள்ள தனி மனிதர்களுக்கோ, நிறுவனங்களுக்கோ, எந்த வகையான பிணையமுமின்றி, அவைகள் அவர்களுடைய திறமை, செயலாக்க அடிப்படையில் கொடுக்கப்படுகின்ற கடன் பிணையமற்ற கடன் என்றழைக்கப் படுகின்றது. பெரும் தொழில் நிறுவனங்களுக்குக் கொடுக்கப் படும் கடன் பெரும்பாலும் இரண்டாவது வகையைச் சார்ந்ததாகவே இருக்கும்.

கடன் தொகையைக் கடனாளிகள் பயன்படுத்த, அவர்கள் பெற்றுள்ள உரிமையின் அடிப்படையில் வங்கிகள் அளிக்கும் கடனை, மேல்வரைப்பற்று (over draft) என்றும், ரொக்கக் கடன் என்றும் இரு வகையாகப் பிரிக்கலாம். மேல்வரைப்பற்று முறையில், வங்கிகள், கடன் வசதிபெற விழைந்த வாடிக்கைக் காரர்கள், எந்த அளவுவரை கடன் வசதி பெறும் உரிமையினைப் பெறுகின்றனர் என்னும் உச்ச வரம்பை வரையறுத்து விடுகின்றன. வாடிக்கைக்காரர்கள் தங்கள் தேவைக்கேற்ப வங்கியிலிருந்து பணத்தை எடுத்துக்கொள்ளலாம். வாடிக்கைக்காரர்கள், வங்கியிலிருந்து எடுக்கின்ற தொகைக்கு மட்டுமே வட்டி செலுத்த வேண்டிய பொறுப்பினைப் பெறுகின்றனர். அவர்கள் எவ்வளவு தொகையினை வங்கியிலிருந்து கடனைப் பெறுகின்றனரோ அந்தத் தொகையே அந்த வாடிக்கைக்காரர்களுடைய கணக்கில் பற்று வைக்கப்படும். எந்த நிலையிலும் அவர்களுக்கு நிர்ணயிக்கப் பட்ட உச்ச அளவுத் தொகையைவிட அந்த வங்கியிடமிருந்து கடன் பெற முடியாது. எடுத்துக்காட்டாக, ஒரு குறிப்பிட்ட வாடிக்கைக்காரருக்கு ரூ. 10,000 மேல்வரைப்பற்று முறையில் கடன் வசதியளிக்க ஒரு வங்கி இசைவு அளித்திருக்குமேயானால், அந்நிலையில் அவ் வாடிக்கைக்காரர் அவ் வங்கியிடமிருந்து ஒரு முறை ரூ. 10,000 கடன் பெற்றுத் திருப்பிச் செலுத்திவிட்டால் மீண்டும் அவ் வங்கியிடமிருந்து கடன் வாங்க மறு முறையும் அவர் ஒரு தனிப்பட்ட ஒப்பந்தம் செய்தல் வேண்டும்.

ஆனால், ரொக்கக் கடன் மேல்வரைப்பற்றுக் கடனிலிருந்து சற்று மாறுபட்டதாகும். ஒரு வாடிக்கைக்காரருக்கு ரூ. 10,000

வரை ரொக்கக் கடன் வசதியினை ஒரு வணிக வங்கி அளித்திருக் குமேயானால் அவர், அத் தொகைக்குட்பட்ட எவ்வளவு தொகை யினை வேண்டுமாயினும் கடனுகப் பெற்று, திருப்பிச் செலுத் தலாம். மீண்டும் அதே ஒப்பந்தத்தின் அடிப்படையில் வங்கியிட மிருந்து கடன் பெற்றுக்கொள்ளலாம். இத்தகைய கடனின் முக்கிய தன்மை என்னவெனில், ஒரு குறிப்பிட்ட தொகைக்கு ரொக்கக் கடன் வசதிபெற்ற வாடிக்கைக்காரர், ஒரு குறிப்பிட்ட காலத்தில் அத் தொகையைவிட அதிகமான அளவுக்குக் கடன் வசதி பெறமுடியாது என்பதேயாகும். மேற் குறிப்பிட்டுள்ள எடுத்துக்காட்டில் ரூ. 10,000 ரொக்கக் கடன் வசதிபெற்ற வாடிக்கைக்காரர் முதலில் ரூ. 5,000 கடன் பெற்று அத் தொகை யினைத் திருப்பிச் செலுத்திவிட்டாரேயானால் மீண்டும் அவர் ரூ. 10,000 வரை கடன் வசதி பெறும் உரிமையினைப் பெறுகிறார்.

நடைமுறையில், ரொக்கக்கடனுக்கும், மேல் வரைப்பற்றுக் கடனுக்கும் எவ்வித வேறுபாடும் காட்டப்படுவதில்லை யாயினும் இவ்விருவகைக் கடன் முறைகளுக்கிடையே சில முக்கிய வேற்று மைகள் உள்ளன. அவையாவன :

(1) மேல் வரைப்பற்றுக் கடன், ஒரு வாடிக்கைக்காரருக்கு ஏற்பட்டுள்ள தற்காலிக நிதி நெருக்கடியைத் தவிர்க்கும் பொருட்டு வழங்கப்படும் கடன் முறையாகும். ஆனால், ரொக்கக் கடன் முறை நிரந்தரமாகத் தொழில் நிறுவனங்களுக்குக் கடன் வசதி அளிக்க வணிக வங்கிகள் கையாளும் ஒரு முறையாகும்.

(2) பொதுவாக, மேல் வரைப்பற்றுக் கடன் முறையில் வழங் கப்படும் தொகையைவிட, ரொக்கக் கடன் முறையில் வழங்கப் படும் கடன் தொகை மிகக் கூடுதலாகவே இருக்கும்.

(3) மேல் வரைப்பற்றுக் கடனில், பணத்தைப் பெற்று அதனைத் செலுத்திவிட்டால் அத்துடன் அந்த ஒப்பந்தம் முடி வடைகிறது. மீண்டும் வாடிக்கைக்காரர் கடன் வாங்க வேண்டு மாயின் வங்கியுடன் புதிய ஒப்பந்தம் செய்துகொள்ளவேண்டும். ஆனால், ரொக்கக் கடனில் வங்கியருக்கும் வாடிக்கைக்காரருக்கும் ஏற்பட்ட உடன்பாடு இரத்தாகாமலிருக்கும் வரை ஒரு குறிப்பிட்ட தொகைக்கு மேற்படாமல் எப்போதும் கடன் வாங்கமுடியும். அதாவது இவ்விதக் கடன்முறை தொடர் நடவடிக்கைகளுக்கு வழி வகுக்கின்றது.

(4) மேல் வரைப்பற்றுக் கடன் பொதுவாகச் சிறிய தொழில் நிறுவனங்களுக்கு வழங்கப்படுகின்றது. ஆனால், ரொக்கக் கடன் பெரும் தொழில் நிறுவனங்களுக்கு வழங்கப்படுகின்றது.

(5) ரொக்கக் கடனில், பொதுவாக, வாடிக்கைக்காரர்கள் வங்கியிடமிருந்து கடனுகப் பெற்ற தொகைக்குத்தான் வட்டி செலுத்தவேண்டுமெனினும், தங்களுக்கு ஏற்படும் நட்டத்தினைக் குறைத்துக் கொள்ளும் பொருட்டு ஒருசில வங்கிகள், தாங்கள் வழங்கிய கடன் தொகை முழுவதினையும், வாடிக்கைக்காரர்கள் பயன்படுத்தினும், பயன்படுத்தாவிடினும், அதில் ஒரு குறிப்பிட்ட பகுதிக்குக் கட்டாயமாக வட்டி செலுத்தும் வகையில், ரொக்கக் கடன் ஒப்பந்தத்தில் 'கால் வட்டிச் சரத்து', 'அல்லது அரை வட்டிச் சரத்து' (One-quarter interest clause) or (one-half interest clause) நிபந்தனையைச் சேர்த்தல் இயல்பு. இதன்படி, கால் வட்டிச் சரத்து சேர்க்கப்பட்ட ரொக்கக்கடனில், வாடிக்கைக் காரர் அக் கடன் தொகையினைப் பயன்படுத்தாவிடினும் வழங்கப் பட்ட தொகையில் 25 விழுக்காட்டுப் பகுதிக்குக் கட்டாயமாக வட்டி செலுத்த வேண்டும். அதுபோன்று ரொக்கக் கடன் அரைச்சரத்து (half clause) நிபந்தனை கொண்டிருக்குமேயானுல், அந்த வாடிக்கைக்காரர், தாம் பெற்ற கடன் தொகை அதாவது ரொக்கக் கட்னில் எடுத்த தொகை அல்லது ரொக்கக் கடனில் 50 விழுக்காட்டுத் தொகை இதில் எது மிகுதியாக இருக் கின்றதோ அத்தொகைக்கு வட்டி செலுத்தும் கடமையினைப் பெறுகிறார். அதாவது அவர் அந்த ரொக்கக் கடனிலிருந்து பணம் எடுக்கவில்லை என்றாலும்கூட அவர் அதில் 50 விழுக் காட்டுத் தொகைக்கு வட்டி செலுத்தவேண்டும். ஆனுல், மேல் வரைப்பற்றுக் கடன் முறையில் இதுபோன்ற கால் சரத்து, அரைச் சரத்து நிபந்தனைகள் எதுவுமில்லை.

பதினென்கு வங்கிகள் நாட்டுடைமையாக்கப்பட்ட பிறகு அவ் வங்கிகள் இப்பொழுது வேளாண்மை வளர்ச்சிக்கும் கடன் வசதி யளிப்பதில் முனைந்துள்ளன. இவை குறித்த விவரங்களைப் பின்னேர் அத்தியாயத்தில் விளக்கலாம்.

இவ்வாறு வங்கிகள் மக்களிடமிருந்து வைப்புத் தொகையினைத் திரட்டி, பல்வேறு தொழில் நிறுவனங்களிலும், வேளாண்மை யிலும் முதலீடு செய்வதன்வழி, இவை நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு வழி வகுக்கின்றன. வளர்ந்து வரும் இந்தியா போன்ற நாடுகளுக்கு முதல் பற்ருக்குறை, கச்சாப் பொருள் பற்ருக்குறை போன்ற பிரச்சனைகளை எதிர்நோக்க வேண்டிய நிலையில், வணிக வங்கிகளின் பணிகள் இன்றி யமையாதவையாகின்றன.

(3) பணத்தினை ஓரிடத்திலிருந்து மற்ற இடங்களுக்கு மாற்றுதல்: வணிக வங்கிகளின் மூன்ருவது முதன்மைப்பணி

பணத்தினை ஓரிடத்திலிருந்து மற்ற இடங்களுக்குப் 'பூண விடை' (Draft) அளிப்பதன் வாயிலாக மாற்ற வழி வகுப்பதேயாகும். இப் பணியின் காரணமாக வாடிக்கைக்காரர்கள் ஓர் இடத்திலிருந்து மற்ற இடங்களுக்கும் ஒரு நாட்டிலிருந்து மற்ற நாடுகளுக்கும் எளிய முறையில் பணத்தினைச் செலுத்தும் வாய்ப்பினைப் பெறுகின்றனர்.

(4) காசோலை முறையினைச் செயற்படுத்துதல் : வங்கிகள் இல்லையேல் காசோலை இல்லை. காசோலையின் காரணமாக வாடிக்கைக்காரர்கள் தங்கள் தொழில் நடவடிக்கைகளைச் சிக்கலின்றி எளிதாக மேற்கொள்ள முடிகிறது. காசோலை இன்றைய உலகில், வங்கியிலிருந்து பணம் எடுக்கப் பயன் படுத்தப் படும் கருவியாக மட்டும் கருதப்படாது பணமாகவே கருதப் படுகின்றது. இத்தகைய முக்கியத்துவம் வாய்ந்த காசோலை முறையினை மக்களிடையே பரவச்செய்து செயல்படுத்தும் பணியினை மேற்கொள்வதும் வங்கிகளேயாகும்.

(5) மாற்றுச் சீட்டினைக் கழிவு செய்தல் (Discountings of Bills of Exchange): வணிகத்தைப் பெருக்கும் வகையில், தொழில் நிறுவனங்கள் கொண்டுவரும் மாற்றுச் சீட்டுக்களை வணிக வங்கிகள் கழிவு செய்து, அவற்றிற்குரிய பணத்தினை அச் சீட்டுகளுக்குரிய கெடு காலத்திற்கு முன்பாகவே கொடுத்து உதவி புரிகின்றன. தொழிலுலகில் பண்டங்கள் ரொக்கத்திற்கு மட்டும் விற்பனை செய்யப்படுவதில்லை. கடனுக்கும் பண்டங்கள் விற்கப் படுவதுண்டு, அவ்வாறு பண்டங்கள் கடனுக்கு விற்கப்படும் நிலையில் பண்டங்களை விற்பனை செய்பவர், அவற்றை வாங்குபவர் மீது, விற்கப்படும் பண்டங்களுக்குரிய விலையினை ஒரு குறிப்பிட்ட தேதிக்கு முன்னர் கொடுக்குமாறு ஆணையிட்டு எழுதப்படும் சீட்டே மாற்றுச் சீட்டாகும். இன்றைய உலகில் 50 விழுக்காட்டுக்கு மேலான தொழில் நடவடிக்கைகள் இம்முறை மூலமே நடைபெற்று வருகின்றன. மாற்றுச் சீட்டை எழுதும் பண்டங்களை விற்பவர், மாற்றுச் சீட்டை ஏற்கும் பண்டங்களை வாங்குபவரிடமிருந்து, பணத்தைப் பெறக் குறிப்பிட்ட காலம்வரை காத்திருக்க வேண்டிய நிலையிலுள்ளார். ஆனால், அதற்கு முன்னரே பணம் அவருக்குத் தேவைப்பட்டால், அந்த மாற்றுச் சீட்டைத் தமது வங்கியிடம் கொடுத்துக் கழிவு செய்து பணம் பெறலாம்.

கழிவு செய்யும் வங்கி மாற்றுச் சீட்டில் குறிப்பிட்டுள்ள தொகையில் கழிவுத் தொகையைக் கழித்துக்கொண்டு எஞ்சிய தொகையை வாடிக்கைக்காரரிடம் கொடுக்கின்றது. அவ்வாறு மாற்றுச் சீட்டைக் கழிவு செய்த வங்கி, அம் மாற்றுச் சீட்டின்மீது

உரிமை பெற்று அதனைக் குறிப்பிட்ட காலத்தில், பண்டங்களை வாங்கிய மாற்றுச் சீட்டின் ஏற்குநரிடம் (acceptor) அளித்துப் பணத்தினைப் பெற விழைகின்றது. அவர் பணம் தராவிடின், அத் தொகையினை, வங்கியிடம் அம் மாற்றுச் சீட்டினைக் கழிவு செய்து பணம்பெற்றுக்கொண்ட வாடிக்கைக்காரரே செலுத்த வேண்டிய பொறுப்பினை ஏற்கிறார்.

துணைப் பணிகள் (Subsidiary functions): வங்கிகள் மக்களிடமுள்ள சேமிப்புத் தொகையினைத் திரட்டி முதலீடு செய்யும் நோக்கத்துடன் தொடங்கப்பட்டாலும், அவை மக்களுக்குப் பல்வகையிலும், பணிபுரியும் முகத்தான் தங்களுக்கு நேரிடையாகத் தொடர்பற்ற வேறு பல பணிகளையும் புரிய வேண்டிய பொறுப்பினை ஏற்றன. இவ்வாறு வாடிக்கைக்காரர்களுக்கும் பொதுமக்களுக்கும் உதவி செய்யும் நோக்குடன் வங்கிகள் மேற்கொள்ளும் பணிகள் துணைப் பணிகள் என்றழைக்கப்படுகின்றன. வங்கிகளின் துணைப் பணிகளை (அ) பொதுப் பயன் பணிகள் (ஆ) முகமைப் பணிகள் என இரு கூறுகளாகப் பிரிக்கலாம்.

வங்கிகள் தங்களுடைய வாடிக்கைக்காரர்களுக்குப் பல்வேறு பொதுப்பயன் பணிகளையும் புரிகின்றன. இப் பணிகளைப் புரியுங்கால், வங்கிகளுக்கும் வாடிக்கைக்காரர்களுக்குமிடையே, கொடுக்கல், வாங்கல் நடவடிக்கைகள் நிலவுவதில்லை. அதாவது வாடிக்கைக்காரர்களுக்கும். வங்கிகளுக்குமிடையே கடனாளர், கடனீந்தோர் உறவு நிலவுவதில்லை. இத்தகைய பணிகளை வங்கிகள் சட்டபூர்வமாகச் செய்தல் வேண்டும் என்ற நிலையினையும் பெற்றிருக்கவில்லை. இருப்பினும், தங்களுடைய பணிகளை விரிவாக்கி வாடிக்கைக்காரர்களுடைய வசதிகளைப் பெருக்கும் வகையிலேயே, இத்தகைய பணிகள் வங்கிகளால் புரியப்படுகின்றன.

வங்கிகள் புரியும் பொதுப் பயன்பணிகளில் கீழ்க்காணுபவை குறிப்பிடத்தக்கவை :

(அ) வாடிக்கைக்காரர்களுடைய நகைகள் போன்ற விலை உயர்ந்த பொருள்களையும், அவர்களுடைய 'மாற்றுமுறை ஆவணங்கள்' (Negotiable Instruments) போன்ற பத்திரங்களையும் பாதுகாத்துப்பேணும் பொருட்டு அவற்றை, அவர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளுதல். இப் பணியினைப் புரிவதற்காக, வங்கிகள் வாடிக்கைக்காரர்களிடமிருந்து ஒரு குறிப்பிட்ட தொகையினைக் கட்டணமாக வசூலிப்பது இயல்பு. நகைகளைப் பாதுகாப்புக் காகக் கொண்டுவரும் வாடிக்கைக்காரர்கள் அவற்றைச் சிறிய

உறைகளிலிட்டு, பின் முத்திரையிட்டு வங்கிகளின் பெட்டகங்களில் பாதுகாப்புக்காக அளிக்கின்றனர். சில வங்கிகள், மேலும் வசதியினை அளிக்கும் வகையில் வாடிக்கைக்காரர்களுக்குக் 'காப்பு வைப்பறைகளை' வாடகைக்கு விடுகின்றன. இத்தகைய காப்பு வைப்பறைகள் (Safe deposit Lockers) வசதி வழங்கப்படும் போது ஒவ்வொரு வாடிக்கைக்காரருக்கும் ஒரு சிறிய 'காப்பு வைப்பறை' கொடுக்கப்படுகின்றது. அக் காப்பு வைப்பறை 'இரண்டு பூட்டுகள்' முறையினைக் கொண்டுள்ளது. ஒரு பூட்டின் சாவி வாடிக்கையாளரிடமும், மற்றொன்று வங்கி மேலாளரிடமும் இருக்கும். ஒருவருடைய ஒப்புதலின்றி மற்றவர் காப்பு வைப்பறையிலுள்ள நகைகளையோ பத்திரங்களையோ எடுத்தல் இயலாது.

(ஆ) வாணிப வளர்ச்சிக்கும் விரிவாக்கத்திற்கும் வணிக வங்கிகளின் துணை இன்றியமையாதது. வங்கிகள் உள்நாட்டு வாணிபத்தில் பங்கு கொள்வது மட்டுமின்றி வெளி நாட்டு வியாபாரத்திலும் பங்கு கொள்கின்றன. பண்டங்களை விற்பனை செய்பவர்களும், அவற்றை வாங்குபவர்களும் ஒருவரை ஒருவர் நன்கு தெரிந்திருக்கும் நிலையில் வாணிபம் சிக்கலின்றி நடைபெற வாய்ப்பிருக்கின்றது. வெளிநாட்டு வியாபாரத்தில் இத்தகைய நேரடித் தொடர்பினை எதிர்பார்த்தல் முடியாததாகும். எனவே, பண்டங்களை விற்பனை செய்பவர்களும் அவற்றை வாங்குபவர்களும், முன்னைய நேரடித் தொடர்பற்றிருக்கின்றனர். இந் நிலையில் வங்கிகள் இருபாலரையும் இணைக்கும் பாலமாகச் செயல்படுகின்றன. பண்டங்களை அனுப்புபவர்கள் வங்கிகள்மூலம் அவற்றை அனுப்புகின்றனர். அவற்றை வாங்குபவர்கள் வங்கியில் பணத்தைக் கட்டிவிட்டுப் பண்டங்களைப் பெறுகின்றனர். வெளிநாட்டு வியாபாரங்கள் பெரும்பாலும் மாற்றுச்சீட்டு எழுதப்படுவதன் வாயிலாகவே நடைபெற்று வருகின்றன.

இந்தியாவைப் பொறுத்தவரை, இந்திய வணிக வங்கிகள் வெளிநாட்டு வியாபாரத்தில் அவ்வளவு அக்கறை செலுத்தவில்லை. ஆரம்பகாலத்தில் இந்தநிலை இருந்து இப்பொழுது இந்திய வங்கிகள்கூட வெளிநாட்டு வியாபாரத்தில் ஈடுபட முனைகின்றனவெனினும், பெரும்பாலும் வெளிநாட்டு வியாபாரங்கள் 'நாணயமாற்று வங்கிகள்' (Exchange Banks) என்றழைக்கப்படும் வெளிநாட்டு வங்கிகளாலேயே மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. முக்கிய வணிக வங்கிகள் நாட்டுடைமையாக்கப்பட்டபிறகு இந்திய வணிக வங்கிகள் வெளிநாட்டு வியாபாரத்தில் ஈடுபடுவது சற்றுக் கூடுதலாகி வருகின்றது எனக் கூறலாம். வங்கிகள் மாற்றுச் சீட்டுகளைக் கழிவு செய்து உடன் ரொக்கம்

கொடுப்பதன் வாயிலாக வெளிநாட்டு வியாபாரத்தை மட்டுமின்றி உள்நாட்டு வியாபாரத்தையும் பெருக்க வழி வகுக்கின்றன. வெளி நாட்டிலுள்ள விற்பனையாளர்களிடமிருந்து வங்கிகளின் வாடிக்கைக்காரர்கள் பண்டங்களை வாங்கும் பொழுது அவர் களுக்காகப் பணம் செலுத்தும் பொறுப்பினையும் வணிக வங்கிகளே ஏற்கின்றன.

(இ) வாடிக்கைக்காரர்களுக்குத் தங்களுடைய பணிகள் மூலம் மிகக் கூடுதலான அளவு பயன் அளிக்கும் பொருட்டு வணிக வங்கிகள், தங்களுடைய வாடிக்கைக்காரர்களுக்கு, பயணக் காசோலை (Traveller's cheque) அளித்தல், வணிக உறுதிக் கடிதம் அளித்தல் (Letter of credit) போன்ற பணிகளை யும் மேற்கொள்கின்றன.

(ஈ) வாடிக்கைக்காரர்கள் சார்பாக, அவர்கள் ஒப்பந்தம் செய்துகொண்டுள்ள மூன்றும் நபர்களுக்குப் பெறுப்புறுதி வழங்குதல் வணிக வங்கிகளின் அடுத்த பொதுப்பணியாகும்.

(உ) தொழில் நன்கு செழித்து வளர வணிகர்களுக்கும், உற்பத்தி நிறுவனங்களுக்கும், தொழில் சம்பந்தப்பட்ட பலவகை யான செய்திகள் தேவைப்படுகின்றன. அவற்றை அந்தந்தத் தொழில் நிறுவனங்கள் தனிப்பட்ட முறையில் திரட்டுவதென்பது அவ்வளவு எளிதானதன்று. எனவே, அந்த நிறுவனங்களுக்குத் தேவைப்படும் எல்லாச் செய்திகளையும், சந்தை நிலவரம் பற்றிய விவரங்களையும் திரட்டிக்கொடுக்கும் பணியினையும் வணிக வங்கிகள் ஏற்கின்றன.

(ஊ) வாடிக்கைக்காரர்களுடைய சொத்து நிலைமை, நிதி நிலைமை ஆகிய விவரங்களைப்பற்றியும் குறிப்புகளை, அவ் வாடிக்கைக் காரர்கள், வியாபாரத் தொடர்பு கொண்டுள்ள அல்லது தொடர்பு கொள்ள நினைக்கும் இதர வியாபாரிகளுக்குக் கொடுப்பதன் மூலம் வாடிக்கைக்காரர்களுடைய வியாபாரத்தை விரிவடையச் செய்ய முயலுகின்றன. மேலும் அவ் விவரங்கள் கொடுக்கப் படுவதால், நாணயமற்ற அல்லது பணவசதி இல்லாமலோ, குறைவாகவோ உள்ள வாடிக்கைக்காரர்களால் வணிக சமுதா யத்திற்கு ஏற்படவிருக்கும் நட்டம் தவிர்க்கப்படலாம்.

(எ) புதிதாக நிறுவனங்கள் தோற்றுவிக்கும் நிலையில் அவை தங்களுக்கு வேண்டிய மூலதனத்தைத் திரட்டுதல் என்பது எளிதானதன்று. வணிக வங்கிகள், அத்தகைய நிறுவனங்கள் வெளியிடும் பங்குகள், கடன் பத்திரங்கள் போன்றவற்றை விற்றுத்தரும் வகையில், ஒப்புறுதி செய்துகொண்டு (underwriting) அவ்வாறு விற்கப்படாத ஆவணங்களைத் தாங்களே வாங்கிக் கொள்வதன்மூலம், தொழில் நிறுவனங்களுக்கு உதவிபுரிகின்றன.

முகமைப்பணிகள் (Agency services): இத்தகைய பணிகளைப் புரியும் நிலையிலும், வங்கிகளுக்கும், வாடிக்கைக்காரர்களுக்குமிடையே உள்ள உறவு கடனாளர்—கடனீந்தோர் என்பதன்று; முதல்வர்—முகவர் என்ற உறவேயாகும். எனவே, முகமைப் பணிகளைப் புரிகின்ற நிலையில் வங்கிகள் வாடிக்கைக்காரர்களுடைய முகவர்களாகக் கருதப்படுகின்றன. பொதுவாக வங்கிகள் கீழ்க்காணும் முகமைப் பணிகளை மேற்கொள்கின்றன வெனக் குறிப்பிடலாம்.

(அ) வங்கிகள் வாடிக்கைக்காரர்களுடைய கடன் பத்திரங்களுக்குரிய வட்டித் தொகையினைப் பெறும் பணியினையும், அவர்களுடைய பங்குகளின் மீதான இலாப ஈவினைத் திரட்டும் பணியினையும் மேற்கொள்கின்றன. இத்தகைய பணிக்கு வங்கிகள் வாடிக்கைக்காரரிடமிருந்து தனிப்பட்ட முறையில் ஊதியம் பெறுகின்றன.

(ஆ) வாடிக்கைக்காரர்கள், ஒரு குறிப்பிட்ட காலத்திற்கொரு முறை ஆயுள் காப்பீட்டுத் தவணைப் பணத்தினைச் செலுத்த வேண்டிய பொறுப்பினைக் கொண்டிருக்கலாம். தங்களுடைய பல அலுவல்களுக்கிடையே இப் பணியினை மறந்துவிடக் கூடுமாதலின், இப் பணியினை அவர்கள் சார்பாக, வங்கிகளைப் புரியுமாறு கேட்டுக்கொள்வதுண்டு. இது போன்ற சந்தர்ப்பங்களில் வங்கிகள், தவணைத் தொகையினைச் செலுத்திவிட்டு, அத் தொகையினை அக் குறிப்பிட்ட வாடிக்கைக்காரருடைய கணக்கில் பற்று வைத்துவிடுகின்றன.

(இ) வாடிக்கைக்காரர்களின் சார்பாக அவர்களுக்குத் தேவைப்படும் பங்குகள், பங்குக் கோவைகள் (stocks) ஆகியவற்றை வணிக வங்கிகள் வாங்குதல், அவர்களிடமுள்ள அப் பத்திரங்களை விற்பனை செய்ய முயலுதல், ஆகியவை வணிக வங்கிகள் புரியும் அடுத்த முகமைப் பணியாகும். இப் பணியினைப் புரியும் நிலையில் வணிக வங்கிகள் மிகக் கவனத்துடனும், வாடிக்கைக்காரர்களுடைய கட்டளைகளுக்கு ஏற்பவும், அவர்களுக்கு நட்டம் ஏற்படாத வகையிலும் செயலாற்ற வேண்டிய அவசியம் எழுகிறது.

(ஈ) வாடிக்கைக்காரர்களின் சார்பாக அவர்களுடைய ஊதியத்தினைப் பெறுதல், ஓய்வூதியத்தினைப் (Pension) பெறுதல், வீட்டு வாடகையினைத் திரட்டுதல் போன்றவை அவை புரியும் அடுத்த முகமைப் பணிகளாகும்.

(உ) வாடிக்கைக்காரர்களுடைய பணத்தை ஓர் இடத்திலிருந்து மற்ற இடங்களுக்கு அஞ்சல் வழிமூலமோ, தந்தி மூலமோ மாற்று உதவி புரிதல் அடுத்த முகமைப் பணியாகும்.

(ஊ) வாடிக்கைக்காரர்கள் எந்தெந்த நிறுவனங்கள் வெளியிடும் பங்குகளில் முதலீடு செய்யலாமென வாடிக்கைக்காரர்களுக்கு அறிவுரை கூறுகின்றன.

(எ) வாடிக்கைக்காரர்களுடைய விருப்பத்தினடிப்படையில், வங்கிகள் அவர்களுடைய சொத்துக்களுக்குப் பொறுப்புரிமையாளராகப் (Trustee) பணி புரியும் பொறுப்பினையும் ஏற்கின்றன. வாடிக்கைக்காரர்களுடைய விருப்பத்தின்படி அவர்களுடைய உயில் நிறைவேற்றும் பணியினை ஏற்றுக்கொண்டு நிறைவேற்றுளராகப் (Executor) பணிபுரிகின்றன.

வங்கிகள் பொறுப்புரிமையாளராகப் பணிபுரிவதால் கீழ்க்காணும் நன்மைகள் ஏற்படுகின்றன :

(i) தனி நபர்களைப் போலன்றி வங்கிகள் நிலையான இருப்பினைப் பெற்றுள்ளன.

(ii) வங்கிகளுக்குத் தனிப்பட்ட நிபுணர்களை வேலைக்கு அமர்த்தும் வசதி அதிக முண்டு.

(iii) தனி நபர்களைப் போலன்றி, வங்கிகள், விருப்பு, வெறுப்பின்றிப் பணியாற்றும் நிலைமை பெற்றுள்ளன.

(iv) வங்கிகளைப் பொறுப்புரிமையாளர்களாக நியமித்தல் மிகச் சிக்கனமானதாகும்.

(v) பொறுப்புரிமைப் பணிபுரிவதன் வாயிலாக வங்கிகள் தாங்கள் மக்களுக்குப் புரியும் பணிகளை விரிவாக்கிக் கொள்ளும் வாய்ப்பினைப் பெறுகின்றன.

(ஏ) வாடிக்கைக்காரர்களிடமிருந்து சட்டப்படியான அதிகாரம் பெற்று, அவர்களுடைய சார்பாக வங்கிகள் நீதி மன்றத்திற்கும் செல்லும் உரிமை பெற்றுள்ளன.

(ஒ) வங்கிகள், வாடிக்கைக்காரர்களுக்கு நிருபர்களாகப் பணியாற்றி அவர்கள் சார்பாக வருமானவரி அலுவலர்களுடன் தொடர்புகொண்டு வாடிக்கைக்காரர்களுடைய வருமானவரி விவர அறிக்கையினைத் (Income Tax return) தயாரித்து வருமான வரித்துறை அலுவலகத்திற்கு அனுப்பும் பணியினையும் ஏற்கின்றன.

வணிக வங்கிகளும் பொருளாதார வளர்ச்சியும் : வங்கிகள் இல்லையேல் தொழில் இல்லை, வாணிபம் இல்லை என்னும் அளவிற்கு, அவை பொருளாதார வளர்ச்சிக்கும் மேம்பாட்டிற்கும் துணையாக இருந்து வருகின்றன. நாட்டின் பொருளாதாரம் விரைந்து முன்னேற இவை அடிக்கல் நாட்டியுள்ளன. இவ் வங்கிகள் இல்லாது பத்தொன்பதாம் நூற்றாண்டில் இங்கிலாந்து நாட்டில் தொழிற்புரட்சி ஏற்பட்டிருக்க முடியாது. முன்னேற்ற மடையாத நாடுகள் முன்னேறி இருக்க முடியாது. தொழில் வளர்ச்சிக்கு முதல் தேவைப்படுகிறது. முதல் திரட்டிக்கொடுக்க வங்கிகள் தேவைப்படுகின்றன. எனவே, தொழில் வளர்ச்சிக்கு வங்கிகள் அச்சாணி போன்றவை என்று குறிப்பிடின் அது மிகையாகாது. மேலும், உற்பத்தி செய்யப்பட்ட பண்டங்கள் விற்பனை செய்யக் கடன் வசதி அளிக்கப்படவேண்டும். அவ்வாறு கடன் வசதி அளிக்க வங்கிகள் தேவைப்படுகின்றன. எனவே, சிக்கல்கள் நிறைந்த இத் தொழிலுலகில் எவ்வாறு வங்கிகள் பலவகையான சேவைகள்மூலம் நாட்டு வளத்தைப் பெருக்க முயலுகின்றன என்பதை விளக்கலாம்.

(1) வாணிபத்திற்கும் தொழிலுக்கும் வங்கிகள் இன்றியமையாதவை. இன்றைய உலகில் கடந்த இருநூறு ஆண்டுகளாக ஏற்பட்டுள்ள பேரளவு உற்பத்திக்கும், பேரளவு வாணிபத்திற்கும் வங்கிகளே முக்கிய காரணமாகும். எந்த ஒரு நிறுவனமும் தனது தொழிலைச் சொந்த மூலதனத்தைக் கொண்டே நடத்த முடியாது. எனவே, வங்கிகள் தொழில் நிறுவனங்களுக்குக் கடன் வசதியளிப்பதன்மூலம் அவைகளை வளர்ச்சியுறச் செய்கின்றன. வங்கிகள் பயன்படுத்தும் காசோலை முறையால் வியாபாரம் எளிதாக்கப்படுகிறது. நுகர்வோர்களுக்குக் கடன் வசதியளிப்பதன் மூலம் பண்டங்களின் விற்பனையைப் பெருக்கி வாணிப விரிவாக்கத்திற்குத் துணை புரிகின்றன.

(2) மக்களிடம் சிதறிய நிலையிலுள்ள சிறு சிறு சேமிப்புகளைத் திரட்டி ஒன்று சேர்த்து மொத்தமாகப் பெரிய அளவில் மூலதனமாக்கி உற்பத்தி நிறுவனங்கள், வாணிப நிறுவனங்கள் ஆகியவற்றில் முதலீடு செய்கின்றன. சுருங்கக் கூறின், பெட்டிகளில் முடங்கிக் கிடக்கவேண்டிய பணம், வங்கிகளின் உதவியால் உற்பத்திக்குப் பயன்படுத்தப்படுகிறது.

(3) தேவைப்படாத பகுதியிலுள்ள, அதாவது பயன்படுத்தப்படாத பகுதியிலுள்ள மூலதனத்தைத் தேவைப்படும் பகுதிக்கு மாற்றி அதனை அங்கு முதலீடு செய்து நாட்டில் சமமான தொழில் வளர்ச்சிக்கு வழி வகுக்கிறது.

(4) பொருளாதார நிலைக்கு ஏற்பக் கடன் கொடுப்பதைக் கூடுதலாக்கியோ, குறைத்தோ வங்கிகள் உற்பத்தியையும், வியாபாரத்தையும் பெருக்குகின்றன அல்லது குறைக்கின்றன.

(5) சிறந்து செயல்படும் தொழில் நிறுவனங்களுக்குக் கடன் வசதியளிப்பதன் மூலம், நாட்டில் தொழில்கள் உரிய முறையில் வளர உதவி புரிகின்றன.

(6) நாட்டின் பொருளாதார நடவடிக்கைகளுக்கு ஏற்பப் பணத்தினை உருவாக்கி, சந்தையில் அளிக்க முனைகின்றன. இதனைச் 'சேயர்ஸ்' என்ற வல்லுநர் கீழ்க்கண்டவாறு கூறுகிறார் : 'வங்கிகள் பணத்தில் வாணிபம் செய்பவை மட்டுமல்ல, முக்கியமாக அவை பணத்தை உற்பத்தி செய்பவையும் கூட'.

(7) வங்கிகள் தங்களுடைய வட்டி வீதத்தைக் குறைத்தும், கூடுதலாக்கியும் ஒரு நாட்டின் பொருளாதார நடவடிக்கையில் வேண்டிய மாற்றங்களைச் செய்கின்றன. வட்டிவீதத்தைக் குறைக்குங்கால், கடன் மிகவும் மலிவானதாகிக் கடன் அளவு விரிகிறது. வட்டி வீதத்தைக் கூடுதலாக்குங்கால் கடனளவு குறைகிறது.

(8) வணிக வங்கிகள் மேற்கொள்ளும் 'மாற்றுச் சீட்டுகளை கழிவு செய்தல்' (Discountings Bills of Exchange) முறையின் மூலம், நாட்டில் பணப்புழக்கம் கூடுதலாகிறது. எனவே, தொழில் நடிவடிக்கைகளும் விரிவடைகின்றன.

(9) வங்கிகள் புரிந்துவரும் பொதுப்பயன் பணிகளும், முகமைப் பணிகளும் தொழில் வளர்ச்சிக்கு மறைமுகமாகத் துணை புரிகின்றனவென்று குறிப்பிடலாம்.

(10) வளர்ச்சியடைந்துவரும் நாடுகளிலுள்ள வங்கிகள் மக்களுடைய சேமிப்புகளைத் திரட்டிப் பலவகையான தொழில்கள், வேளாண்மை ஆகியவற்றில் முதலீடு செய்வதன்மூலம், அந்நாடுகள் முன்னேற்றமடைய ஆவன செய்கின்றன.

இன்றைய உலகில் ஒவ்வொரு நாட்டின் பொருளாதார முன்னேற்றத்திற்கும் வங்கிகள் அச்சாணியாகக் கருதப்படுகின்றன. முன்னேற்றமடைந்த வங்கிகளின்மூலம்தான் முன்னேறி வரும் தொழில்கள் முழு முன்னேற்றமடைய முடியும் என்பது ஏற்றுக்கொள்ளப்பட்ட கருத்தாகிவிட்டது. நிதி வசதிகளை அளிப்பது மட்டுமின்றி, தொழில் தொடர்புடைய கருத்துகளை வங்கிகள், தொழில் நிறுவனங்களுக்கு வழங்குவது அவற்றின் முக்கியத்துவத்தினைக் கூடுதலாக்குகின்றது.

வினாக்கள்

(1) வணிக வங்கிகளின் முதன்மைப் பணிகளை விளக்குக.

(2) வணிக வங்கிகளின் துணைப் பணிகள் யாவை?

(3) மேல்வரைப்பற்றுக் கடனுக்கும், ரொக்கக் கடனுக்கும் உள்ள வேறுபாடுகளை விளக்குக.

(4) வங்கிகள் எவ்வகையான வைப்புகளைப் பெறுகின்றன? அவை ஒவ்வொன்றின் தன்மைகள் யாவை?

(5) வங்கிகள் முதலீடு செய்யும்போது கடைப்பிடிக்கும் கோட்பாடுகளை விளக்குக.

(6) வணிக வங்கிகள் எவ்வாறு ஒரு நாட்டின் தொழில் வளர்ச்சிக்குத் துணைபுரிகின்றன?

4. வணிக வங்கி இருப்புநிலைக் குறிப்பின் பகுப்பாய்வு

ஒவ்வொரு தொழில் நிறுவனத்தின், வெற்றி, தோல்வியினை அதனுடைய இருப்புநிலைக் குறிப்பினைப் பகுப்பாய்வு செய்வதன் மூலம் அறியலாம். வணிக வங்கிகள் வாடிக்கைக்காரர்களிடமிருந்து வைப்புகளைப் பெற்று, அவற்றை வாடிக்கைக்காரர்கள் கேட்கின்றபோது திருப்பிக்கொடுக்கும் வரையறையுடன் தொழில் தொடங்கினாலும், வங்கிகளும் இதர நிறுவனங்களைப்போன்று இலாப நோக்குடன் செயல்படும் தொழில் நிறுவனங்களேயாகும். எனவே, அவை தாங்கள் பெறும் வைப்புத்தொகையினை இலாபம் ஈட்டும் வகையில் முதலீடு செய்யவேண்டும். அவை ஈட்டும் இலாபம். அவை கடைப்பிடிக்கும் நிதியக் கோட்பாடுகள், முதலீட்டுக் கோட்பாடுகள் ஆகியவற்றைப் பொறுத்தே, அமையும். மேலும், வங்கிகள் தங்களது சொத்துகளையும் பொறுப்புகளையும் கையாளும் முறையும் அவை ஈட்டும் இலாபத்தினை நிர்ணயம் செய்கின்றன.

வங்கி இலாபமீட்டாவிடின் அது தொடர்ந்து செயல்பட முடியாது. ஒவ்வொரு வங்கியும், நிருவாகச் செலவு செய்ய வேண்டியுள்ளது என்பதுடன்கூட, அது பெறும் வைப்புத் தொகைக்கு வட்டியும் செலுத்தவேண்டியுள்ளது. பிறருடைய பணத்தில் தொழில் நடத்தும் வங்கிகள் இலாபமீட்டவேண்டியது, இதர தொழில் நிறுவனங்கள் இலாபமீட்டவேண்டியதைவிட மிக முக்கியமானதாகும். எனவே, வங்கிகளின் வெற்றி அவை ஒவ்வொன்றும் எந்த அளவிற்கு வாடிக்கைக்காரர்கள் கேட்கும் போது அவர்களுடைய வைப்புத்தொகையைத் திருப்பிக் கொடுக்கின்றது என்பதனையும், எந்த அளவிற்கு அது இலாபம் ஈட்டுகின்றது என்பதனையும் பொறுத்தே அமையும். எனவேதான், ஒரு வங்கியின் வெற்றியினைக் குறித்து அறிந்துகொள்ள, அதனுடைய இருப்புநிலைக் குறிப்பினைப் பகுப்பாய்வு செய்தல் அவசியமாகும்.

வங்கியும் இதர தொழில் நிறுவனங்களைப்போன்றே செயல் படுகின்றது. அவற்றைப் போன்றே வங்கியும் இருப்புநிலைக்குறிப் பினைத் தயாரித்தல் அவசியமானதாகும். ஒரு நிறுவனம், தன்னு டைய சொத்துகள் பொறுப்புகள் ஆகியவற்றைக் குறிப்பிட்டுத் தயாரிக்கும் ஓர் அறிக்கையே இருப்புநிலைக்குறிப்பாகும் இந்த அறிக்கை வங்கிகளால் ஒரு குறிப்பிட்டகாலத்திற்கு ஒரு முறையோ ஆறு திங்களுக்கு ஒரு முறையோ ஆண்டிற்கொரு முறையோ தயாரிக்கப்படுகின்றது.

பணத்தினைக்கொண்டே தொழில் நடத்துவதால் வங்கிகளின் இருப்புநிலைக் குறிப்புகள், இதர நிறுவனங்களின் இருப்புநிலைக் குறிப்புகளைவிட மிக முக்கியத்துவம் வாய்ந்தவையாகக் கருதப் படுகின்றன. இதனடிப்படையில் வங்கிகளுடைய சொத்துநிலை அவற்றின் எளிவரல் தன்மை ஆகியவற்றை நன்கறிந்து கொள்ளலாம். எனவே, இருப்புநிலைக் குறிப்பு ஒவ்வொரு வங்கி யினுடைய நடவடிக்கைகளையும் தெளிவாக விளக்கிக் காட்டும் கண்ணாடியாக அமைகின்றது எனக் குறிப்பிடலாம். இருப்புநிலைக் குறிப்பு எல்லா நாடுகளுக்கும் பொதுவானதாக நிலைப்படுத்தப் பட்டதன்று. நாட்டுக்கு நாடு, அந்தந்த நாட்டின் சட்டதிட்டங் களுக்கேற்றவாறு மாறுபடுகிறது. இருப்பினும் பெரும்பாலான நாடுகளில் கடைப்பிடிக்கப்படும் கோட்பாடுகளின் அடிப்படையில் இருப்புநிலைக் குறிப்பைக் கீழ்க்கண்டவாறு விளக்கலாம்.

இருப்புநிலைக் குறிப்பு இரு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டிருக்கும். இடப் பக்கத்திலுள்ள பகுதி பொறுப்புகள் பகுதி என்றும் வலப் பக்கத்திலுள்ள பகுதி சொத்துகள் பகுதி என்றும் குறிப்பிடப் படுகின்றது. எனவே, ஒரு வங்கியின் இருப்புநிலைக் குறிப்பின் இடப் பக்கத்தில் அதனுடைய பொறுப்புகளையும், வலப் பக்கத்தில் அதனுடைய சொத்துகளையும் குறிப்பிடுகின்றனர். வங்கியால், அதனுடைய பங்குதாரர்களுக்கோ, வாடிக்கைக்காரர் களுக்கோ, பிற வங்கிகளுக்கோ செலுத்தப்படவேண்டிய வகையாக உள்ளவற்றை, வங்கியின் பொறுப்புகள் என்று கூறு கிறோம். எந்தெந்த இனங்களின் வழியாக ஒரு வங்கி வருவாய் ஈட்டுகின்றதோ, எவ்வெவ்வற்றைத் தன் நலனைக் காக்கும் வகையில் கண்போல் பேணிக்காத்து வருகின்றதோ அவற்றை வங்கியின் சொத்துகள் என்று கூறுகிறோம். சுருக்கக்கூறின், வங்கி முன்னரே பெற்றுக்கொண்டு, இனி அது தரவேண்டிய இனத்தைப் பொறுப்பு என்றும், அதுபோலன்றி, அது பிறருக்குக் கொடுத்து, அதனை இனிப்பெற வேண்டிய நிலையிலுள்ள இனங்களை வங்கியின் சொத்துகள் என்றும் கூறுகிறோம். வங்கியினுடைய சொத்துகளும், பொறுப்புகளும் சமமாக இருத்தல்

வேண்டும். ஒரு வங்கியின் சொத்துகள் கூடுகின்றபோது அதனுடைய பொறுப்புகளும் கூடுகின்றன. ஏனெனில், வங்கியினுடைய பொறுப்புகள்தாம் அதனுடைய சொத்துக்களாக மாறுகின்றன.

ஒரு வங்கியின் இருப்புநிலைக் குறிப்பு

பொறுப்புகள் (Liabilites)	சொத்துகள் (Assets)
1. முதல் (i) அனுமதித்த முதல் (ii) வெளியிட்ட முதல் (iii) ஒப்பிய முதல் (iv) அழைத்த முதல் (v) செலுத்திய முதல்	1. கையில் ரொக்கம்
2. ஒதுக்கு நிதியும் பிற காப்பு நிதிகளும்	2. மற்ற வங்கிகளில் இருப்பு (i) மைய வங்கி (ii) இதர வங்கிகள்
3. வைப்புகள் (i) நிலைவைப்புகள் (ii) சேமிப்பு வைப்புகள் (iii) நடப்புக் கணக்கு வைப்புகள்	3. அழைப்புக்கடனும் குறுந்தவணைக்கடனும்
4. பிற வங்கிகளிடமிருந்து கடன்	4. கழிவு செய்யப்பட்ட மாற்றுச் சீட்டுகள்
5. ஏற்புகள், மேலெழுத்துகள்	5. முதலீடுகள்
6. எதிர்பாராப்பொறுப்புகள்	6. கடனும், கடன்வகைகளும் (Loans and Advances)
	7. வாடிக்கைக்காரர்களின் ஏற்புகள்
	8. பிற சொத்துகள்

மேலே குறிப்பிட்டுள்ளபடி வங்கியின் இருப்புநிலைக் குறிப்பில் முதலில் பொறுப்புப் பகுதியை எடுத்துக்கொண்டு, ஒவ்வொரு இனத்தைப் பற்றியும் விவரிப்போம்:

(1) முதல்: ஒரு வங்கி அதனுடைய அமைப்பு முறை யேட்டின்படி [Memorandum of Association] எந்த அளவிற்கு முதல் திரட்டலாமோ அந்தப் பெரும அளவினை அனுமதித்த முதல் என்று கூறுகிறோம். அந்தத் தொகைக்கு மிகையாக ஒரு வங்கி பங்குகள் வெளியிட்டு முதல் திரட்ட விரும்பினால் அந்நிலையில் அதனுடைய அமைப்பு முறையேடு திருத்தப்பட

வேண்டும். பொதுவாக வங்கியின் இயக்குநர்கள் அதனுடைய பெரும அளவுக்குரிய பங்குகளை ஆரம்ப நிலையிலேயே வெளியிட மாட்டார்கள். எனவே, அனுமதித்த முதலில் ஒரு பகுதிக்குரிய அளவிற்கே முதலைத் திரட்ட விழைந்து அதற்கேற்றவாறு பங்குகளை வெளியிடுவர். அவ்வாறு அனுமதித்த முதலில் எந்தப் பகுதி வெளியிடப்படுகிறதோ அப் பகுதியே வெளியிட்ட முதல் எனப்படும். எடுத்துக்காட்டாக, ஒரு வங்கி ஒவ்வொன்றும் ரூ. 100 மதிப்புடைய 30,000 பங்குகளை வெளியிட்டு ரூ. 30,00,000 முதலினைத் திரட்டும் உரிமை பெற்றிருப்பதாகக் கொள்வோம். இந்நிலையில் அவ் வங்கியின் இயக்குநர்கள் 30,000 பங்குகளையும் ஒரே நேரத்தில் வெளியிட விரும்பாது 20,000 பங்குகளை மட்டும் ஒரு குறிப்பிட்ட காலத்தில் வெளியிட விழைவார்களேயானால், இந்நிலையில் அவ் வங்கியின் அனுமதித்த முதல் ரூ. 30,00,000 என்றும் வெளியிட்ட முதல் (Issued Capital) ரூ. 20,00,000 என்றும் கொள்ளுதல் வேண்டும்.

வங்கி வெளியிடும் பங்குகள் எல்லாம் விற்பனையாகி அவ் வங்கி அப் பங்குகளுக்குரிய மதிப்பினை முதலாகத் திரட்டிவிடும் என நிச்சயமாகக் கூறமுடியாது. வெளியிட்ட முதலில் எந்த அளவுக்கு மக்கள், அவ் வங்கியின் பங்குகளை வாங்குகின்றனரோ, அப் பங்குகளின் மதிப்பை ஒப்பிய முதல் (Subscribed Capital) என்று கூறுகிறோம். அவ்வாறு மக்களால் வாங்கப்பட்ட பங்குகளின் மதிப்பு முழுவதும் ஒரே தவணையில் வங்கிகளால் திரட்டப்படுவதில்லை. பல பகுதிகளில் வேண்டும்போது பங்குதாரர்களுக்கு அழைப்பு விடுத்துப் பங்குகளின் மதிப்பு வங்கிகளால் திரட்டப்படும். அவ்வாறு பங்குநர்களை அவர்கள் வாங்கியுள்ள பங்குகளின் மதிப்பில் ஒரு பகுதியினைச் செலுத்துமாறு அழைப்பு விடுத்த நிலையில், மொத்தப் பங்குநர்கள் செலுத்தவேண்டிய தொகையின் மதிப்பினை அழைத்த முதல் (Called up Capital) எனக் குறிப்பிடுகிறோம். அவ்வாறு வங்கிகள் அழைப்பு விடுத்தவுடன் எல்லாப் பங்குநர்களும் முதலைச் செலுத்திவிடுவர் எனக் கூறுதல் இயலாது. ஒருசில பங்குநர்கள் அழைப்புப் பணத்தைச் (call money) செலுத்த முடியாமற் போகலாம். மொத்தமாகப் பங்குநர்கள் எல்லோரும் செலுத்திய பணத்தைச் 'செலுத்திய முதல்' (Paid up Capital) என்று குறிப்பிடுகிறோம்.

பொதுவாக, பங்குகளின் மதிப்பில் 50 விழுக்காட்டுப் பகுதியே அழைப்பித்த முதலாக இருக்கும். எஞ்சிய 50 விழுக்காட்டுப் பகுதியினை வங்கி தனக்கு வேண்டியபொழுது திரட்டிக் கொள்கிறது. அழைக்கப்படாத பகுதியினை 'அழையா முதல்' என்று கூறுகிறோம். அழையா முதல் வங்கியில் வைப்புத்

தொகையினைச் செலுத்தியவர்களுக்கும், வங்கிக்குக் கடனீந்தோர் களுக்கும் பிணையமாக அமைகிறது. ஒருசில நிறுவனங்களில், அனுமதியாமுதல் அந்நிறுவனங்கள் செயல்படாது கணக்கப்படும் நிலையிலேயே திரட்டப்படவேண்டும் என்ற நிபந்தனையை விதிப் பதும் உண்டு. அத்தகைய அனுமதி முதலை 'ஒதுக்கி வைத்த முதல்' (Reserved Capital) என்றும் காப்பு மூலதனம் என்றும் கூறுகிறோம்.

இந்திய வங்கியல் ஒழுங்காற்றுச் சட்டத்தின்படி ஒரு வங்கியின் ஒப்பிய முதல் அதனுடைய அனுமதித்த முதலில் 50 விழுக்காடுக்குக் குறைவாக இருத்தல் கூடாது. அதுபோன்றே செலுத்திய முதல், ஒப்பிய முதலில் 50 விழுக்காடாவது இருத்தல் அவசியமாகும். இத்தகைய கட்டுப்பாடு, தரக்குறை வானவர்கள் வங்கியியல் தொழில் தொடங்குவதைத் தவிர்க்கும் நோக்கத்துடன் விதிக்கப்பட்டுள்ளது.

(2) ஒதுக்கு நிதியும் பிற காப்பு நிதிகளும் (Reserve fund and other Reserves): எதிர்பாராத வகையில் ஏற்படும் நட்டத்தினை ஈடுகட்டும் வகையில், பாதுகாப்பினடிப்படையில் ஒவ்வொரு வங்கியும் முந்திய ஆண்டின் இலாபத்தில் ஒரு பகுதியினை ஒதுக்கு நிதிக்காக ஒதுக்கி வைக்கின்றது. இவ்வாறு ஏற்படுத்தப்படும் ஒதுக்கு நிதியின் நோக்கம், வங்கி பிற்காலத்தில் ஏற்படும் நட்டத் தினைச் சிரமமின்றி எதிர்நோக்க வேண்டுமென்பதேயாகும். அவ்வாறு எதிர்பாராவகையில் வங்கிக்கு நட்டம் ஏற்படும்போது, அதனை ஈடு செய்ய வங்கி நிருவாகத்தினர் ஒதுக்கு நிதியிலிருந்து பணத்தை எடுத்துக் கொள்கின்றனர். இவ்வாறு உருவாக்கப்பட்ட நிதியிலுள்ள பணத்தை, எளிவரல் தன்மைகொண்ட முதலீட்டுப் பத்திரங்களில் முதலீடு செய்கின்றனர். ஒதுக்கு நிதியினைத் தவிர்த்து வங்கிகள், இலாப ஈவு சமன்பாட்டு நிதி (Dividend Equilisation Fund) என்ற தனிப்பட்ட நிதியினை உருவாக்குவது முண்டு. ஒரு குறிப்பிட்ட ஆண்டு வங்கி போதிய இலாபம் ஈட்டாத நிலையில் பங்குதாரர்களுக்கு இலாப ஈவு குறையாது. இந்த நிதியிலிருந்து பணத்தை எடுத்து அவர்களுக்கு இலாப ஈவு வழங்குதல் வேண்டும் என்பதே இந்த நிதியின் நோக்கமாகும்.

இந்தியாவைப் பொறுத்தவரை, வங்கியியல் ஒழுங்காற்றுச் சட்டப்படி ஒவ்வொரு வங்கியும் அதனுடைய இலாபத்தில் (i) விழுக்காட்டுப்பகுதியைக் காப்பு நிதிக்கு ஒதுக்கியபிறகே, அதனுடைய பங்குதாரர்களுக்கு இலாப ஈவு வழங்கமுடியும். இவ்வகை நிதிகளைப்போன்றே வங்கிகள் மறைகாப்புகள்

(Secret Reserves) வரா, ஐயக்கடன் காப்புகள் ஆகியவற்றிற்காகத் தனி நிதிகள் ஒதுக்குவதுமுண்டு.

(3) வைப்புகள் (Deposits): வணிக வங்கிகளின் பொறுப்புகளில் முக்கிய இடம் பெறுவது வைப்புகளேயாகும். இவற்றின் முக்கியத்துவத்தினைக் குறித்து முன்பே விளக்கியுள்ளோம். வளர்ச்சியுற்ற நாடுகளில் இவற்றின் மைய வங்கி வெளியிடும் பணத்திற்கு ஒப்பாக அமைகின்றன. வங்கிகள் பெரும்பாலும் கீழ்வரும் மூன்று வகையான வைப்புகளைப் பெறுகின்றன. எந்த நேரத்திலும், எவ்விதக் கட்டுப்பாடுமின்றி வங்கியிலிருந்து திரும்பப் பெறத்தக்க நடப்பு வைப்புகள் (Current Deposits), சில வரையறைகளுக்குட்பட்டு வங்கியிலிருந்து எடுக்கத்தக்க, நிரந்தர வருவாய் ஈட்டுவோர்களால் செலுத்தப்படும் சேமிப்பு வைப்புகள் (Savings Deposits), ஒரு குறிப்பிட்ட காலத்திற்குப் பின்னரே திரும்பப் பெறத்தக்க நிலை வைப்புகள் (Fixed Deposits), இவற்றைத் தவிர்த்து வங்கிகள் வேறு பலவகையான வைப்புகளையும் பெறுகின்றன. இது குறித்த விவரங்களை முன்னரே விளக்கியுள்ளோம். நடப்பு வைப்புகளிலுள்ள பணம் காசோலை மூலம் திருப்பிப் பெறலாம். நிலை வைப்புகள் குறிப்பிட்ட காலத்திற்குப் பிறகே திரும்பப் பெறத்தக்கவை.

306807

(4) பிற வங்கிகளிடமிருந்து கடன்: தொழில் நிறுவனங்கள், கடன் பெருது தொழில் நடத்துதல் என்பது இயலாததாகும். வணிக வங்கிகள் இதற்கு விலக்கானவையல்ல. அவசியம் நேரும்போது அவை இதர வணிக வங்கிகளிடமிருந்தும், மைய வங்கியிடமிருந்தும் கடன் பெறுகின்றன. இத்தகைய கடன்கள் ஒரு குறிப்பிட்ட காலத்திற்குப் பிறகு திரும்பச் செலுத்தப்படவேண்டியவை. எனவே, அவை வங்கிகளின் பொறுப்புகளாகக் கருதப்படுகின்றன.

332.12
MUT

(5) ஏற்புகள் மேல் எழுத்துகள் (Acceptances and Endorsements): வாடிக்கைக்காரர்களுடைய சார்பாக வங்கிகள் சில மாற்றுச்சீட்டுகளை ஏற்றுக்கொண்டோ, அவற்றில் மேல் எழுத்திட்டிருந்தோ இருக்குமானால், அந்த மாற்றுச் சீட்டுகளுக்கு உரிய காலத்தில் பணம் செலுத்தவேண்டிய பொறுப்பு வங்கிகளின் மீது விழலாம். பொதுவாக வாடிக்கைக்காரர்களுக்கு உதவும் வகையில் வங்கிகள் தங்கள் பெயரைப் பயன்படுத்திக்கொள்ள அனுமதிக்கின்றன. அந்த மாற்றுச் சீட்டுக்குரிய பணம் செலுத்த வேண்டிய காலத்தில் அந்தக் குறிப்பிட்ட வாடிக்கைக்காரர் பணத்தினைச் செலுத்திவிடவேண்டும். அவ்வாறு செலுத்தாத நிலையில்தான் வங்கிக்கு அது பொறுப்பாக அமைகின்றது.

(6) எதிர்பாராப் பொறுப்புகள் (Contigent Liabilities): வங்கியினது பொறுப்புகள், நிர்ணயிக்கப்பட்டவையாக இருத்தல் வேண்டுமென்ற அவசியமில்லை. ஒருசில சந்தர்ப்பங்களில் வங்கிகள் எதிர்பாராத வகையில் பொறுப்புகளை ஏற்க வேண்டியிருக்கும். அத்தகைய பொறுப்புகள் இவ்வகையைச் சார்ந்தவை. ஒருசில வாடிக்கைக்காரர்கள் வாங்கும் கடனுக்கு வங்கி பொறுப்புறுதி அளிப்பதை இதற்கு எடுத்துக்காட்டாகக் கூறலாம்.

இனி, சொத்துகள் பகுதியிலுள்ள இனங்களை விளக்கலாம்:

சொத்துகள் (Assets): இருப்பு நிலைக் குறிப்பின் வலப் பக்கத்தில் குறிக்கப்படும் இனங்களை வங்கியின் சொத்துகள் என்று கூறுகிறோம். ஒரு வங்கியின் சொத்துகளிலிருந்து அவ் வங்கி தனது நிதியினை எவ்வாறு பயன்படுத்தியுள்ளது என்று அறிந்துகொள்ளலாம். சொத்துகளை இருப்புநிலைக் குறிப்பில், எழுதும்பொழுது அவற்றினுடைய எளிவரல் தன்மையின் (Liquidity) அடிப்படையில் எழுதுவர். வங்கிகளின் சொத்துகளைப் பற்றி ஆய்வு செய்வது சுவையானதாகவும் சிக்கல் நிறைந்ததாகவும் அமையும். ஒரு வங்கியின் வெற்றி, அது எவ்வகையான சொத்துகளைக் கொண்டுள்ளது என்பதைப் பொறுத்தே அமையும். வங்கி ஒவ்வொன்றும், வருவாய் ஈட்டும் நோக்குடன் தனது பொறுப்புகளைச் சொத்துகளாக மாற்றுகிறது. அவ்வாறு அது தன்னுடைய நிதியினைப் பல்வேறு சொத்துகளுக்கிடையே முதலீடு செய்யும்போது மூன்று முக்கியக் கோட்பாடுகளைக் கருத்திற்கொள்கிறது. பாதுகாப்புத்தன்மை (Safety) எளிவரல் தன்மை (Liquidity) இலாபத் தன்மை (Profitability) ஆகியவையே அம் மூன்று கோட்பாடுகளாகும்.

வங்கி ஒரு தொழில் நிறுவனம். இலாபம் ஈட்டும் நோக்கம் கொண்டது. இருப்பினும் மற்றத் தொழில் நிறுவனங்களுக்கும் வங்கிகளுக்குமிடையே ஒரு முக்கிய வேறுபாடு உள்ளது. இதர தொழில் நிறுவனங்களைப்போலன்றி வங்கிகள் வாடிக்கைக்காரர்களுடைய நம்பிக்கையினை அடிப்படையாகக் கொண்டு செயல்ற்றுகின்றன. வாடிக்கைக்காரர்களுக்கு ஐயமூட்டும் வகையில் எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் ஒரு வங்கி செயலாற்றினால் அது அதனுடைய தொழிலை முற்றிலும் பாதிக்குமெனக் கூறலாம். வங்கியில் வைப்புத்தொகையைச் செலுத்திய வாடிக்கைக்காரர்கள் காசோலை மூலம் எந்த நேரத்திலும் வங்கியிடமிருந்து பணத்தைப் பெற விழையலாம். அந்த நேரத்தில் வாடிக்கைக்காரர்களுக்குப் பணத்தைக் கொடுத்தல் வங்கியினது கடமையாகும். எனவே,

வங்கி எப்பொழுதும் தேவைக்கேற்றவாறு ரொக்கம் வைத்திருத்தல் அவசியமாகிறது. எஞ்சிய தொகையினைப் பாதுகாப்பான முறையில் முதலீடு செய்தல் வேண்டும். வருவாய் கூடுதலாகக் கிடைக்கின்றது என்ற நோக்கத்துடன் பாதுகாப்புக் குறைவான இனங்களில் வங்கி முதலீடு செய்ய முனையுமேயானால் அது வாடிக்கைக்காரர்களுடைய நம்பிக்கையை இழக்க நேரிடும். எனவே, 'பாதுகாப்பான முதலீடு' வங்கிகள் கடைப்பிடிக்க வேண்டிய முதல் கொள்கையாகும்.

இரண்டாவதாக, வங்கிகள் வாடிக்கைக்காரர்களின் ஆதரவில் செயல்படுகின்றன. எனவே, அவர்களிடையே முழு நம்பிக்கையுடன் அதாவது. அவர்களுக்கு முழு நம்பிக்கையூட்டும் முறையில் செயலாற்ற வேண்டும். வாடிக்கைக்காரர்களின் கணக்கில் போதுமான அளவு பணம் இருக்கும்போது (வரவு இருப்பு) அவர்கள் காசோலையை விடுத்து அல்லது வேறு முறைப்படி பணத்தைக் கேட்டால் அப் பணத்தை அளிப்பது வங்கிகளுடைய சட்டபூர்வமான பணி மட்டுமல்ல, சமூக நியதியும்கூட. எனவே, வங்கிகள் வைப்புத் தொகையில், ஒரு கணிசமான தொகையினை எப்பொழுதும் ரொக்கமாக வைத்திருத்தல் இன்றியமையாததாகும். மேலும், எஞ்சிய வைப்புத் தொகையினை முதலீடு செய்யும்பொழுது அதில் ஒரு பகுதியினை எளிவரல் தன்மை கொண்ட சொத்துகளில் முதலீடு செய்தல் அவசியமானதாகும். ஒரு சில சந்தர்ப்பங்களில் வங்கிகளிடமுள்ள ரொக்கத்தினை மட்டும் கொண்டு வாடிக்கைக்காரர்களுக்குத் தேவையான பணத்தைக் கொடுக்க முடியாமற் போகலாம். அதுபோன்ற சந்தர்ப்பங்களில், எளிவரல் தன்மைகொண்ட சொத்துகளை எவ்விதச் சிரமமுமின்றி ரொக்கமாக மாற்றிக் கொள்ளலாம். இக் கோட்பாட்டினைக் கடைப்பிடித்தால்தான் வாடிக்கைக்கார்கள் கேட்கும்பொழுதெல்லாம் வங்கி பணம் கொடுத்துப் பொதுமக்களுக்கிடையே நம்பிக்கையை உருவாக்க முடியும். எனவே, எளிவரல் தன்மை வங்கிகள் கடைப்பிடிக்கவேண்டிய இரண்டாவது கொள்கையாகும்.

வங்கிகளும் தொழில் நிறுவனங்களே; அவையும் பணியாட்களைப் பணியிலமர்த்தி நிருவாகம் செய்து வருகின்றன. எனவே, நிருவாகத்திற்கென்று செலவு செய்வது அவசியமானதாகும். வங்கிகளில் முதலீடு செய்பவர்களுக்கு ஓரளவாவது இலாபம் ஈட்டித் தருதல் அவசியமாகும். எனவே, வங்கிகள் இலாபம் ஈட்டும் வகையில் செயல்படுதல் வேண்டுமென்பது மூன்றாவது கோட்பாடாகும்.

இனி வங்கி இருப்புநிலைக் குறிப்பின் பல்வகையான சொத்துகளை ஆய்வோம். அவையாவன :

(1) கையில் ரொக்கம் : வங்கியில் பணம் செலுத்துபவர்கள் எல்லோரும், அப் பணத்தை முதலீடு செய்யும் நோக்கத்துடன் வங்கியில் செலுத்துவதில்லை. அவர்களுக்குத் தேவைப்படும் போது வங்கியிலிருந்து பெற்றுக்கொள்ளும் நோக்கத்துடனும் வங்கியில் ஒரு சிலர் பணத்தை வைப்பாகச் செலுத்தலாம். எனவே, வங்கி ஒவ்வொன்றும், வாடிக்கைக்காரர்களுடைய தேவையை நிறைவு செய்யும் வகையில் வைப்புத் தொகையில் ஒரு பகுதியினை ரொக்கமாக வைத்திருத்தல் அவசியமானதாகும். வாடிக்கைக்காரர்கள் கேட்கும்போது அவருக்குப் பணம் கொடுக்க முடியாத நிலையினை வங்கி ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் எதிர் நோக்க வேண்டிய நிலை ஏற்படுமேயானால், அது வங்கியின் தொழிலை முற்றிலும் பாதிக்குமாதலின், ஒவ்வொரு வங்கியும் இது குறித்து மிக்க கவனத்துடன் இருத்தல் அவசியமானதாகும். ஆனால், வங்கி வைப்புத்தொகை முழுவதையும் ரொக்கமாக வைத் திருக்குமேயானால், அந் நிலையில் வங்கி எவ்வித இலாபமும் ஈட்ட முடியாது என்பதுடன்கூட அது தொடர்ந்து செயல்படவும் முடியாது. எனவே, ஒவ்வொரு வங்கியும், வைப்புத் தொகையில் ஒரு பகுதியினையே ரொக்கமாக வைத்துக் கொண்டிருக்கும்.

இந்த ரொக்கப்பணம், வங்கியின் வைப்புத் தொகையில் ஒரு சிறு பகுதியாகவே இருக்கிறது. வைப்புத் தொகையில் எத்தனை விழுக்காடு ஒவ்வொரு வங்கியும் ரொக்கமாக வைத்திருக்குமெனப் பொதுப்படையாகக் குறிப்பிடுவது கடினமானதாகும். இடர்ப்பாடு ஏற்படாத வகையிலும், அதனுடைய நற்பெயருக்கு இழுக்கு ஏற்படாத வகையிலும், ஒவ்வொரு வங்கியும், எவ்வளவு ரொக்கம் வைத்துக்கொள்ள வேண்டுமென முடிவு செய்கின்றது வங்கி ஒவ்வொன்றும் எவ்வளவு ரொக்கம் வைத்திருத்தல் வேண்டு மென்பது குறித்து ஒரு பொதுப்படையான வழக்கம் நிலவவில்லை. இது நாட்டிற்கு நாடு வேறுபடுகின்றது. சில நாடுகளில் இத் தொகை சட்டபூர்வமாக நிர்ணயிக்கப்படுகிறது. அமெரிக்க நாட்டு வணிக வங்கிகள் ரொக்கம் வைத்திருப்பதற்கு இயற்றப் பட்டசட்டத்தினை இதற்கு எடுத்துக்காட்டாகக் கூறலாம். சில நாடுகளில் இது சட்டபூர்வமாக நிர்ணயிக்கப்படுவதில்லை. எடுத்துக்காட்டாக, இங்கிலாந்து நாட்டில் ஒவ்வொரு வணிக வங்கியும் தனது வைப்புத் தொகையில் மரபு வழியாக எட்டு விழுக்காட்டுப் பகுதியினை ரொக்கமாக வைத்துள்ளது. நமது நாட்டில் வங்கிகள் ரொக்கம் வைத்திருப்பது குறித்துச் சட்ட பூர்வமான கோட்பாடுகள் இல்லை எனினும் ஏனைய நாட்டு

வங்கிகள் வைத்துள்ள ரொக்கத்தினை இந்திய நாட்டு வங்கிகள் வைத்துள்ள ரொக்கத்துடன் ஒப்பிடுமிடத்து, நமது நாட்டு வங்கிகள் அதிகமாக ரொக்கம் வைத்துள்ளன என முடிவு செய்யலாம்.

பொதுவாக, வணிக வங்கிகள் வைப்புத் தொகையில் 9 விழுக்காட்டிலிருந்து 11 விழுக்காடு வரை ரொக்கமாக வைத்துள்ள நிலையில் இந்திய வங்கிகள் 15 விழுக்காடுவரை ரொக்கம் வைத்துள்ளன. எனவே, வங்கிகள் வைத்துள்ள ரொக்கம், நாட்டுக்குநாடு, அவற்றினுடைய முன்னேற்றத்திற்கு ஏற்பவும், அந்நாட்டில் ஏற்பட்டுள்ள, வங்கியியல் பழக்க முன்னேற்றத்தின் அடிப்படையிலும் மாறுபடுகிறது. ஒரு வங்கியின் வெற்றி, அது தகுந்த முறையில் கணக்கிட்டுக் குறைந்த அளவில் ரொக்கத்தினைக்கொண்டு தொழில் நடத்துவதைப் பொறுத்தே அமையும். ஒருசில வாடிக்கைக்காரர்கள் தங்கள் வைப்புத் தொகையினைத் திரும்பப் பெற விழையும் நிலையில், ஒருசில வாடிக்கைக்காரர்கள் புதிய வைப்புத் தொகையைச் செலுத்த முன் வருவார்களாதலின் வங்கிகள் எந்தவிதப் பிரச்சனையையும் எதிர்நோக்க வேண்டியிருக்காது. அதிக அளவில், வருவாய் ஈட்டாத சொத்தான ரொக்கத்தை வைத்துக்கொண்டிருத்தல் வங்கியின் மொத்த இலாபத்தைக் குறைக்குமென்பதைக் கருத்தில் கொண்டு அது செயலாற்ற வேண்டும்.

வங்கி ஒவ்வொன்றும் எவ்வளவு ரொக்கம் வைத்துக்கொள்ள வேண்டுமென்பதை வங்கியின் மேலாளர் முடிவு செய்கிறார். பொதுவாகக் கீழ்க்காணும் தன்மைகளைக் கருத்தில் கொண்டே மேலாளர், தம்முடைய வங்கி வைத்துக்கொள்ள வேண்டிய ரொக்கத்தினைக் கணக்கிடுகிறார்.

முதலாவதாக, ஒரு வங்கி வைத்துக்கொள்ள வேண்டிய ரொக்கம் அவ் வங்கி செயலாற்றும் இடத்தின் தொழில் நடவடிக்கைகளைப் பொறுத்து அமைகிறது. தொழில் நடவடிக்கைகள் மிகுதியாக உள்ள இடங்களில் செயலாற்றும் வங்கிகள் சற்றுக் கூடுதலான தொகையினை ரொக்கமாக வைத்துக்கொள்ள வேண்டும். ஏனெனில், இதுபோன்ற இடங்களில் வாடிக்கைக்காரர்கள் சற்றுக் கூடுதலாகவே பணத்தை வங்கியிலிருந்து எடுக்க விழைவர். அதே வங்கிகள் தொழில் மந்த காலங்களில் ரொக்கத்தினைச் சற்றுக் குறைத்துக் கொள்ளலாம்.

இரண்டாவதாக, மக்கள் அவ் வங்கி செயலாற்றும் பகுதியில் எந்த அளவிற்குக் காசோலையினைப் பயன்படுத்துகின்றனர்

என்பதனைப் பொறுத்தும் அமைகிறது அது வைத்துக்கொள்ள வேண்டிய ரொக்கம். மக்கள் பெரும்பாலும் தங்கள் நடவடிக்கைகளுக்கு ரொக்கத்தினைச் செலுத்தாது காசோலையினையே பயன்படுத்துவார்களேயானால் வங்கிகள் குறைந்த ரொக்கத்துடன் தொழில்புரிய முடிகிறது. அதுபோலன்றி, வாடிக்கைக்காரர்கள் தொழில் நடவடிக்கைகளுக்கு வங்கியிடமிருந்து பணத்தைப் பெற்று ரொக்கமாகச் செலுத்துவார்களேயானால், வங்கிகள் அதிக அளவு கையில் ரொக்கம் வைத்துக்கொள்ள வேண்டியிருக்கும். இதன் காரணமாகவே வங்கியியல் பழக்கம் மிகுந்த, அமெரிக்கா, இங்கிலாந்து போன்ற நாடுகளிலுள்ள வங்கிகள் குறைந்த அளவு ரொக்கத்தினைக் கொண்டே தொழில் நடத்தி வருகின்றன.

வங்கிகள் வைத்திருக்க வேண்டிய ரொக்கத்தினைப் பாதிக்கும் மூன்றாவது காரணி, வைப்புகளின் அளவும், எண்ணிக்கையுமாகும். ஒரு வங்கி குறைந்த தொகைக்கான வைப்புகளையும், அதிக எண்ணிக்கைக் கொண்ட வாடிக்கைக்காரர்களையும் கொண்டிருக்குமேயானால் அந்த வங்கியிலிருந்து வாடிக்கைக்காரர்கள் குறைந்த அளவிலேயே பணத்தைத் திரும்பப்பெற விழைவார்களாதலின் அவ் வங்கி குறைந்த அளவில் ரொக்கத்தை வைத்துக்கொண்டே வாடிக்கைக்காரர்கள் கேட்கின்றபோது பணம் கொடுக்க இயலும். அதுபோலன்றி அவ் வங்கி அதிக தொகைக்கான வைப்புகளையும், குறைந்த எண்ணிக்கை கொண்ட வாடிக்கைக்காரர்களையும் கொண்டிருக்குமேயானால், அந்த வங்கியிலிருந்து ஒரு வாடிக்கைக்காரர் பணம் பெற விழைந்தால் கூட, கூடுதலான தொகை கொடுக்க வேண்டியிருக்குமாதலின், அது அதிக அளவில் கையில் ரொக்கம் வைத்திருக்க வேண்டியது அவசியமாகிறது. எடுத்துக்காட்டாக, இரண்டு வங்கிகள் ஒரு பகுதியில் செயல்புரிந்து வருகின்றன எனக் கொள்வோம். இரு வங்கிகளும் மொத்தம் ரூ 10,00,000 வைப்புத் தொகையினைக் கொண்டுள்ளன. ஆனால், முதலாவது வங்கி அந்தத் தொகையினை 10 வாடிக்கைக்காரர்களிடமிருந்து திரட்டியுள்ளது எனக் கொள்வோம். ஒவ்வொருவரும் 1,00,000 செலுத்தியுள்ளனர். இரண்டாவது வங்கி அந்தப் பத்து லட்சம் வைப்புத் தொகையினை ஒவ்வொரு வாடிக்கைக்காரர்களிடமிருந்தும் ரூ. 1,000 என்ற கணக்கில் 1,000 வாடிக்கைக்காரர்களிடமிருந்து திரட்டியுள்ளது. இவை இரண்டில் முதலாவது வங்கி எப்பொழுதும் கூடுதலான அளவிற்குக் கையில் ரொக்கம் வைத்திருக்க வேண்டிய அவசியம் எழும். ஏனெனில், அதனிடமிருந்து ஒரு வாடிக்கைக்காரர் கூடப் பணம் பெற விரும்பினால், அது ரூ. 1,00,000 செலுத்த வேண்டிய நிலை ஏற்படும்.

நான்காவதாக, நாட்டில் தீர்வகங்கள் (Clearing Houses) பணியாற்றுவதைக் கருத்தில் கொண்டும் வங்கிகள் தங்கள் கையிலுள்ள ரொக்கத்தினை நிர்ணயிக்கின்றன. தீர்வகங்கள் செம்மையாகச் செயல்படுமேயானால், வாடிக்கைக்காரர்களால், பல வங்கிகள்மீது எழுதப்படும் காசோலைகளுக்கு நேரிடையாகப் பணம் கொடுக்காமலேயே, வங்கிகள் தங்களுக்கிடையே உள்ள கணக்குகளைத் தீர்வகங்கள் மூலம் சரிக்கட்டிக் கொள்கின்றன. எனவே, வங்கிகள் ஒவ்வொன்றும் குறைந்த அளவு ரொக்கத்தை வைத்துக்கொண்டே செயல்பட முடிகிறது. அவ்வாறு தீர்வக வசதிகள் இல்லாத இடங்களில் வங்கிகள் மிகுதியாக ரொக்கம் வைத்துக்கொண்டு செயல்பட வேண்டிய நிலையிலுள்ளன.

ஐந்தாவதாக, ஒரு வங்கி வைத்திருக்க வேண்டிய ரொக்கம், அப் பகுதியில் செயல்படும் இதர வங்கிகள் வைத்துள்ள ரொக்கத் தினைப் பொறுத்தும் அமைகிறது. அதேபகுதியில் செயல்புரியும் இதர வங்கிகள் கூடுதலான விழுக்காடு ரொக்கத்துடன் தொழில் நடத்தினால், அக் குறிப்பிட்ட வங்கியின் வாடிக்கைக்காரர்கள் அவ் வங்கியினைப் பற்றித் தவருன கருத்துகள் கொள்வராதலின், அந்த வங்கியும் ஏனைய வங்கிகளைப் போன்றே ரொக்கத்தினைக் கொண்டு தொழில் புரிதல் வேண்டும்.

ஆருவதாக, வங்கி முதலீடு செய்துள்ள சொத்துகளின் இயல்பை ஒட்டியும், அது வைத்துக்கொள்ள வேண்டிய ரொக்கத்தின் அளவு அமைகின்றது. அவ் வங்கி எளிவரல் தன்மை கொண்ட (Liquidity) சொத்துகளை அதிகம் பெற்றிருக்குமே யானால் அது குறைந்த அளவு ரொக்கத்துடன் செயல்புரிய முடியும். எடுத்துக்காட்டாக, ஒரு வங்கி கணிசமான தொகையினை மாற்றுச் சீட்டுகளைக் கழிவு செய்வதில் முதலீடு செய்திருந்தால், அவ் வங்கி குறைந்த அளவு ரொக்கத்துடன் செயல்படலாம். ஏனெனில், எதிர்பாரா விதமாக மிகுதியாக ரொக்கம் தேவைப் பட்டால், சிறந்த எளிவரல் தன்மைகொண்ட சொத்துகளை ரொக்கமாக மாற்றி நிலைமையைச் சீர்படுத்தும் வாய்ப்புள்ளது. அதுபோலன்றி, எளிவரல் தன்மைகொண்ட சொத்துகளில் குறைந்த அளவே ஒரு வங்கி முதலீடு செய்திருந்தால், அவ் வங்கி கையில் அதிக அளவு ரொக்கம் வைத்துக்கொள்ள வேண்டிய அவசியம் எழுகின்றது.

ஏழாவதாக, நாட்டின் பொருளாதாரச் செழிப்பையும், மந்த நிலையையும் ஒட்டி வங்கியின் ரொக்கத் தேவை மாறுபடும். நாட்டில் செழிப்பு நிலை நிலவுகின்றபோது வணிக நடவடிக்கைகள் கூடுதலாக இருக்கும். வாடிக்கைக்காரர்கள் வங்கியிடமிருந்து

கூடுதலான அளவு பணத்தைப்பெற விழைவர் ஆதலின், வங்கிகள் கூடுதலாக ரொக்கத்தினை வைத்துக்கொள்ள வேண்டியது அவசியமாகிறது. ஆனால், பொருளாதார மந்த காலங்களில் பொருளாதார நடவடிக்கைகள் முடங்கி இருக்குமாதலின், வங்கிகள் குறைந்த அளவு ரொக்கத்துடனேயே செயல்பட முடிகிறது.

எட்டாவதாக, ஒரு வங்கியின் கணக்குகளின் தன்மையும் வங்கி வைத்திருக்க வேண்டிய ரொக்கத்தினை நிர்ணயிக்கிறது. வாடிக்கைக்காரர்கள் வங்கியிலிருந்து அடிக்கடி பணத்தை எடுக்கும் பழக்கத்தினைக் கொண்டுள்ளதன் காரணமாக அதனுடைய கணக்குகளில் அடிக்கடி ஏற்ற இறக்கம் இருக்குமானால் அதுபோன்ற வங்கிகள் கூடுதலான அளவு ரொக்கத்துடன் செயல்பட வேண்டும். அதுபோலன்றி அதன் கணக்குகளில் அதிக மாற்றமில்லாது ஒரே நிலையிருந்தால் அவ் வங்கி குறைந்த ரொக்கத்துடன் செயல்புரியலாம்.

ஒன்பதாவதாக, வங்கி வைத்திருக்க வேண்டிய ரொக்கம் அதனுடைய வாடிக்கைக்காரர்களுடைய இயல்பினடிப்படையிலும் நிர்ணயிக்கப்படுகின்றது. வங்கியில் வைப்பு செலுத்தியவர்களுள் பெரும்பான்மையினர். மாத ஊதியம் பெறுபவர்களாக இருப்பின் அவர்கள் தங்களுக்குத் தேவையான பணத்தை வங்கியிலிருந்து ஒரு முறையாகப் பெறுது, மாதம் முழுவதும் பரவலாக எடுப்பார்கள், ஆதலின் வங்கி குறைந்த ரொக்கத்துடன் செயல்படலாம். அதுபோலன்றி அதனுடைய வாடிக்கைக்காரர்களில் பெரும்பாலோர் வியாபாரிகளாக இருப்பார்களேயானால், அதுபோன்ற நிலையில் வங்கி கூடுதலான ரொக்கத்தினை வைத்திருத்தல் அவசியமானதாகும்.

இறுதியாக, வங்கியியல் சட்டதிட்டங்களும், வங்கிகள் பெற்றிருக்கவேண்டிய ரொக்கத்தினை நிர்ணயிக்கின்றன. ஒரு சில நாடுகள், வங்கிகள் எவ்வளவு குறைந்த அளவு ரொக்கம் வைத்திருக்கவேண்டுமெனச் சட்டபூர்வமாகவே நிர்ணயித்துள்ளன. அதுபோன்ற நாடுகளில் செயல்படும் வங்கிகள் அச் சட்டத்திலுள்ள குறைந்த அளவு ரொக்கத்தினையாவது பெற்றிருத்தல் வேண்டும். எடுத்துக்காட்டாக, அமெரிக்க நாட்டில் ஒதுக்கப்படாத நகரங்களிலுள்ள வங்கி ஒவ்வொன்றும் அதனுடைய நிலுவைப்பில் மூன்று விழுக்காடும், நடைமுறைக் கணக்கிலுள்ள தொகையில் ஏழு விழுக்காடும் ரொக்கமாக வைத்திருத்தல் வேண்டும். ஒதுக்கப்பட்ட நகரங்களில் செயல்படும் வங்கி ஒவ்வொன்றும் நிலு வைப்பில் மூன்று விழுக்காடும்,

நடைமுறைக்கணக்கிலுள்ள வைப்புத் தொகையில் பத்து விழுக் காடும் ரொக்கமாகக் கொண்டிருத்தல் வேண்டும்.

(2) மற்ற வங்கிகளில் இருப்பு : இந்தவகைச் சொத்து வணிக வங்கி மைய வங்கியில் செலுத்தியுள்ள வைப்பினையும், இதர வணிக வங்கிகளிடம் செலுத்தியுள்ள சொத்தினையும் குறிக் கின்றது. மைய வங்கியிடம் செலுத்தப்பட்டிருக்கும் வைப்பு மரபின் அடிப்படையிலோ, சட்டதிட்டத்திற்குட்பட்டோ இருக் கலாம். ஒரு சில நாடுகளில் வணிக வங்கிகள் மைய வங்கியிடம் ஒரு குறிப்பிட்ட விழுக்காட்டினை வைப்புத் தொகையாகச் செலுத்த வேண்டுமென்ற விதிமுறை உள்ளது. எடுத்துக் காட்டாக, இந்திய வங்கியியல் ஒழுங்காற்றுச் சட்டத்தின்படி ஒவ்வொரு வணிக வங்கியும் அதனுடைய மொத்த வைப்பில், 15 விழுக்காட்டுக்கு மிகாது, ரிசர்வ் வங்கியால் குறிப்பிடப்படும் தொகையினை, அதனிடம் செலுத்த வேண்டும். மைய வங்கியிடம் வைப்புத்தொகை செலுத்துவது தவிரப் பிற வணிக வங்கிகளிடமும் பணத்தைச் செலுத்தி வைத்திருப்பது ஒவ்வொரு வணிக வங்கியின் நடைமுறைச் செயலாக அமைகிறது. இதன் நோக்கம் வங்கிகளுக்கிடையே உள்ள நடவடிக்கைகளைச் சிக்கலின்றிச் சரிக்கட்டிக் கொள்ளுதலும், தேவைப்படும்போது அப் பணத்தைப் பெற்றுக் கொள்ளுதலும் ஆகும்.

(3) அழைப்புக்கடனும் குறுந்தவணைக்கடனும் (Money at call and short notice) : பணம் ரொக்கமாக முடக்கப்பட்டிருப்பது வங்கிக்கு எவ்வித வருவாயையும் ஈட்டிக் கொடுப்பதில்லை யாதலின் வங்கிகள் குறைந்த அளவு ரொக்கத்தினைக் கையில் வைத்துக்கொண்டு எஞ்சியதில் ஒரு பகுதியினை எளிவரல் தன்மை மிக்க, கேட்டவுடன் திரும்பப்பெறத்தக்க கடனுகவோ, குறுகிய கால அறிவிப்புக்குப் பிறகு திரும்பப் பெறக்கூடிய கடனுகவோ அளிக்கின்றன. இத்தகைய முதலீட்டுக்கு எல்லா நாடுகளிலும் வாய்ப்புள்ளது என்று கூறுதல் இயலாது. இங்கிலாந்து நாட்டில் 'கழிவகங்களும்' (Discount Houses) மாற்றுச்சீட்டுத் தரகர்களும் (Bill Brokers) இத்தகைய முதலீட்டுக்கு வாய்ப்பளிக்கின்றனர். இவற்றிற்குக் கொடுக்கப்படும் கடன்கள் 24 மணி நேரத்திற்கும் குறைவான அறிவிப்பைக் கொடுத்துத் திரும்பப் பெறமுடியும். எப்பொழுது திருப்பிச் செலுத்த வேண்டும் என்றறியாத நிலையற்ற முறையில் இவ்வகைக் கடன் அளிக்கப்படுவதால், இவை மிகக் குறுகிய விழுக்காடு வட்டி வீதத்திற்கே வழங்கப்படுகின்றன. இங்கிலாந்து நாட்டில் மாற்றுச்சீட்டுச் சந்தை வளர்ச்சி பெற்றிருப்பது இத்தகைய முதலீட்டுக்கு வாய்ப்பளிக்கின்றது.

இத்தகைய தொழிலில் ஈடுபட்டுள்ள தனிநபர்களும், நிறுவனங்களும் தங்களுடைய முதலுடன், வணிக வங்கிகளிடமிருந்து இம்முறை மூலம் பெறுகின்ற கடனையும் தங்கள் தொழிலுக்குப் பயன்படுத்துகின்றன. சாதாரணமாக, குறுந்தவணைக் கடன்கள் 14 நாட்கள் தவணை வரை கொடுக்கப்படுகின்றன.

மாற்றுச்சீட்டுச் சந்தை வளர்ச்சி பெருத நாடுகளில் இத்தகைய கடன்கள் பங்கு மாற்று நிலையங்களுக்குக் (Stock Exchanges) கொடுக்கப்படுகின்றன. எடுத்துக்காட்டாக, அமெரிக்க நாட்டில் வழங்கப்படும் குறுந்தவணைக் கடன்களைப் பெரும்பாலும் பங்குச் சந்தையில் ஈடுபட்டுள்ளவர்களே பெறுகின்றனர். மாற்றுச்சீட்டுச் சந்தையோ, பங்குச் சந்தையோ நன்கு வளர்ச்சி பெருத இந்தியா போன்ற நாடுகளில், வங்கிகளுக்கிடையே கொடுக்கப்பட்டுவரும் கடன்வகைகளே குறுந்தவணைக் கடன்களாகக் கருதப்படுகின்றன. பெரும் செல்வந்தர்கள் இத்தகைய கடன்களுக்கு விண்ணப்பித்து உதவி பெறுகின்றனர். குறுகியகாலக் கருவூல மாற்றுச்சீட்டில் முதலீடு செய்வதும் குறுந்தவணைக் கடனாகக் கருதப்படுகிறது. குறுந்தவணைக் கடனுக்குரிய வட்டிவீதம் நிரந்தரமாக இருப்பதில்லை. கடன்தேவை, பண அளிப்பு ஆகிய தன்மைகளின் அடிப்படையில் பருவத்திற்குப் பருவம் இது மாறுபடுகிறது.

(4) கழிவுசெய்யப்பட்ட மாற்றுச்சீட்டுகள் (Bills Discounted): வங்கிகள் பொதுவாகத் தங்களுடைய நிதியில் கணிசமான பகுதியினை மாற்றுச்சீட்டுகளைக் கழிவு செய்வதில் முதலீடு செய்கின்றன. அவ்வாறு கழிவு செய்யப்பட்ட மாற்றுச்சீட்டுகள் வங்கியின் சொத்துகள் ஆகும். உரிய காலத்தில் அவை, அவற்றை ஏற்றுக்கொண்டவர்களிடம் அளிக்கப்பட்டு அவற்றிற்குரிய பணம் பெறப்படுகின்றது. இத்தகைய மாற்றுச்சீட்டுகள் எளிவரல் தன்மை பெற்றுள்ளதால் சிறந்த முதலீட்டு வழியாகக் கருதப்படுகின்றன. கடனுக்குப் பண்டங்களை விற்றவர் அப் பண்டங்களை வாங்கியவர்மீது அவற்றின் மதிப்பை ஒரு குறிப்பிட்ட தேதிக்கு முன்னர்க் கொடுக்குமாறு பணித்து எழுதும் ஓர் ஆணையே மாற்றுச்சீட்டாகும். அம் மாற்றுக்குரிய பணத்தைப் பெற, பண்டங்களை விற்றவர் கெடு தேதி வரை பொறுத்திருக்க வேண்டும். அவருக்குப் பணம் தேவைப்பட்டால் தம்முடைய வங்கியிடம் கொடுத்து அந்த மாற்றுச்சீட்டைக் கழிவு செய்து கொள்ளலாம். அக் குறிப்பிட்ட வாடிக்கைக்காரர்மீது நம்பிக்கையுள்ள வங்கி, அவருடைய மாற்றுச்சீட்டைப் பெற்றுக்கொண்டு, கெடு தேதிக்கு ஏற்றவாறு அதனுடைய மதிப்பில் ஒரு குறிப்பிட்ட

தொகையினைப் பிடித்துக்கொண்டு எஞ்சிய தொகையினை வாடிக்கைக்காரருடைய கணக்கில் வரவு வைத்து அவருக்கு நிதி வசதியளிக்கிறது. இவ்வாறு வாடிக்கைக்காரருடைய மாற்றுச் சீட்டுக்கு அதனுடைய கெடு தேதிக்கு முன்னர்ப் பணம் கொடுப்பதை 'மாற்றுச்சீட்டுகளைக் கழிவுசெய்தல்' என்று கூறுகிறோம்.

இவ்வாறு வங்கிகள், மாற்றுச்சீட்டில் முதலீடு செய்வதனால் அவை பல நன்மைகளைப் பெறுகின்றன. முதலாவதாக மாற்றுச் சீட்டுகள் முற்றிலும் மாற்றுமுறைத்தன்மை (Negotiability) பெற்றுள்ளதால் அவற்றை எளிதில் வாங்கலாம், விற்கலாம். இங்கிலாந்து போன்ற நாடுகளில் மாற்றுச்சீட்டுக்களை வாங்கவும், விற்கவும் தனியாகச் சந்தைகள் உள்ளன. எனவேதான், வங்கிகள் தங்களுடைய வைப்புத் தொகையில் இருபது விழுக்காடு வரை மாற்றுச்சீட்டுகளைக் கழிவு செய்வதில் முதலீடு செய்கின்றன. இரண்டாவதாக, இந்த மாற்றுச்சீட்டுகள், மைய வங்கியிடம் மறு கழிவு செய்யப்பட்டு, கடன் வசதி தரக்கூடியவையாதலின் வணிக வங்கிகளுக்கு நிதி வசதி தேவைப்படும் நிலையில் அவை, மாற்றுச்சீட்டுகளை மைய வங்கியிடம் கொண்டுசென்று மறு கழிவு செய்து பணம் பெறலாம். மூன்றாவதாக, வணிக வங்கிகளுக்குப் போதிய அளவிற்கு இத்தகைய முதலீடு வருவாய் ஈட்டிக் கொடுக்கின்றது. இறுதியாக இத்தகைய முதலீட்டின் கெடு தேதி நிச்சயமாகத் தெரிவதால் வங்கி, ஒரு குறிப்பிட்ட காலம்வரை தன்னிடம் உள்ள பணத்தை, அந்தக் கால வரம்பில் பணம் பெறத்தக்க மாற்றுச்சீட்டுகளைக் கழிவு செய்வதில் முதலீடு செய்யலாம்.

இந்தியாவில் மாற்றுச்சீட்டுச் சந்தையை வளர்க்க, இந்திய மைய வங்கி உரிய நடவடிக்கை எடுத்தும், அது முற்றிலும் வெற்றி பெற்றதாகக் கூறமுடியாது. எனவே வணிக வங்கிகள் தங்கள் வைப்புத் தொகையில் 10 விழுக்காட்டுக்குக் குறைவான தொகையினையே மாற்றுச்சீட்டுகளைக் கழிவு செய்வதில் முதலீடு செய்கின்றன. பெரும்பாலான வங்கிகள், மைய, மாநில அரசுகள் வெளியிடும் கருவூல மாற்றுச் சீட்டுகளில் (Treasury Bills) முதலீடு செய்ய முனைந்துள்ளன. இவை மாற்றுச்சீட்டுகளை விடப் பாதுகாப்பானவை என்பதே, இவை இவ்வளவு விரைவில் அதிகப் புழக்கமானதற்குரிய காரணமாகும்.

(5) முதலீடுகள் (Investments): அடுத்து வங்கிகளுக்கு வருவாய் ஈட்டித் தருவது முதலீடுகள் ஆகும். இத்தகைய முதலீடுகள் பலவகைப்படும். எனினும், வங்கிகள் பெரும்பாலும்

மைய, மாநில அரசுகளின் கடன் பத்திரங்களையே தேர்ந்தெடுக்கின்றன. இங்கிலாந்து நாட்டிலுள்ள வணிக வங்கிகள் தங்களுடைய வைப்புத் தொகையில் ஏறத்தாழ 30 விழுக்காடு வரை அரசு கடன் பத்திரங்களில் முதலீடு செய்கின்றன. மாற்றுச் சீட்டுகள் குறைவாக உள்ள நிலையில் இந்திய வங்கிகள் தாங்கள் பெற்றுள்ள வைப்புத் தொகையில் பெரும் பகுதியினை அரசு கடன் பத்திரங்களிலேயே முதலீடு செய்கின்றன. இந்திய வங்கிகள் குறுகியகால மாற்றுச்சீட்டுகளையே விரும்புகின்றன. பொதுத்துறை வளர்ச்சி பெற்றுவிட்ட இக் காலத்தில் வங்கிகள் அரசு கடன்பத்திரங்களை மட்டும் தம்பி இருத்தல் வேண்டுமென்ற அவசியமில்லை. அத்தகைய நிறுவனங்களின் பங்குகள், கடன் பத்திரங்கள் ஆகியவற்றிலும் முதலீடு செய்யலாம். முதலீடுகள் அதிக வருவாய் தருவதால், வங்கிகள் இதனைப் பெரிதும் விரும்புகின்றன.

(6) கடனும் கடன் வகைகளும் (Loans and Advances): வங்கிகளின் தொழிலே கடன் கொடுப்பதை மையமாகக்கொண்டு அமைகிறது. எனவே, வங்கியின் சொத்துகளில் மிக அதிகமான வருவாய் ஈட்டித் தருவது கடனும், கடன் வகைகளுமேயாகும். இத்தகைய சொத்து ஒவ்வொரு வங்கியாலும் விரும்பிப் பெறப்படுவதாகும். தொழிலதிபர்களுக்கும் வியாபாரிகளுக்கும், மேல்வரைப் பற்று அளிப்பதன் வாயிலாகவும், ரொக்கக் கடன் வழங்குவதன் மூலமாகவும், இத்தகைய சொத்துகள் பெறப்படுகின்றன. இத்தகைய சொத்துகள் வங்கிகளுக்கு அதிக வருவாய் ஈட்டித் தந்தாலும் இவை எளிவரல் தன்மையற்றவை. எனவே, இச் சொத்துகளை வங்கி விரும்புகின்ற காலத்தில் ரொக்கமாக மாற்றுதல் மிகச் சிரமமானதாகும். மேலும் குறுகிய கால வைப்பாகப் பெற்ற தொகையினை நீண்டகாலத்திற்கு முதலீடு செய்தல் அவ்வளவு சிறந்ததன்று. எனவேதான், இங்கிலாந்து நாட்டு வங்கிகள் ஆறு திங்கள் வரைதான் கடன் வசதி அளிக்கின்றன. மூடப்பட்ட வங்கிகளில் பெரும்பாலானவை, தவறான முறையில் அவ் வங்கிகள் கடன் கொடுத்ததன் காரணமாகவே அந்த நிலையை எய்தியுள்ளன. எளிவரல் தன்மையின் அடிப்படையிலும், பாதுகாப்புத் தன்மை அடிப்படையிலும் இத்தகைய முதலீட்டினைச் சிறந்ததெனக் கூறமுடியாது. மிகக் கூடுதலான அளவிற்கு வருவாய் ஈட்டித் தருகிறதென்னும் காரணத்தினால், தகுந்த பிணைகளைப் பெற்றுக் கடன் வசதி அளிக்கலாம்.

(7) வாடிக்கைக்காரர்களின் ஏற்புகள் (Constituenis Liabilities for Acceptances): வாடிக்கைக்காரர்கள் நேரிடையாகக்

கடன் வாங்க முடியாத நிலையில், அவர்களுடைய கடன்களுக்கு வங்கிகள் பொறுப்பேற்று அவர்களுக்கு உதவ முன்வரலாம். அந்த நிலையில் வங்கி பொறுப்பேற்றுக்கொண்ட தொகைக்கு வாடிக்கைக்காரர்களிடமிருந்து பொறுப்புகளை எழுதிவாங்குவர். இவை வங்கிகளுடைய சொத்தாகும். வங்கிகள் பொறுப்பேற்பது வங்கிகளுடைய பொறுப்பாக அமைவதால் இந்த வகை மட்டும் வங்கியினுடைய இருப்பு நிலைக்குறிப்பில் பொறுப்புகள், சொத்துகள் ஆகிய இரு பகுதியிலும் காணப்படும்.

(8) **பிற சொத்துகள்:** வங்கித் தொழில் நடத்துவதற்குக் கட்டடம், மேசை, நாற்காலி போன்ற தளவாட சாமான்கள் ஆகியவை தேவைப்படுகின்றன. இவற்றிலிருந்து வங்கி எந்த இலாபமும் ஈட்டவில்லை எனினும் அவையின்றித் தொழில் நடத்துவதென்பது இயலாது. அப்படிப்பட்ட சொத்துகளின் மீது ஆண்டுதோறும் ஒரு குறிப்பிட்ட விழுக்காடு தேய்மானம் குறைக்கப்படும்.

சொத்துகளின் அமைப்பில் மாற்றம்: வங்கியின் இருப்பு நிலைக்குறிப்பில் காணப்படும் சொத்துகள் பொதுவானவையல்ல. அதாவது எல்லா வங்கிகளும் ஒரே விதமாகச் சொத்துகளைப் பெற்றிருக்க வேண்டுமென்பதில்லை. வங்கியின் சொத்துகள் நாட்டிற்கு நாடு அந்தந்த நாட்டின் பொருளாதார வளர்ச்சிக் கேற்றுவாறு மாறுபடலாம். ஒரே நாட்டிலுள்ள வங்கிகளின் சொத்துகள் ஒருதன்மைப்பட்டிருக்க வேண்டுமென்பதில்லை. அவற்றிற்கிடையே கூட மாற்றம் இருக்கலாம். அவ்வாறு மாற்றங்கள் ஏற்படுவதற்குக் கீழ்க்கண்டவை காரணங்களாக அமைகின்றன :

(அ) எது சிறந்த வங்கியியல் முறை என்பது குறித்து ஒருமித்த கருத்து இல்லாத நிலையில், வங்கிகளின் சொத்துகள் மாறுபட வாய்ப்பிருக்கின்றது. எடுத்துக்காட்டாக, இங்கிலாந்தில், வணிக வங்கிகள், நீண்ட காலக் கடன் கொடுப்பதும், நுகர்வுக் கடன் (Consumption loan) வழங்குவதும் அவ்வளவாக ஏற்றுக் கொள்ளப்படுவதில்லை யாதலின் அந்நாட்டு வங்கிகள் குறுகிய காலக் கடன்களையே வழங்குகின்றன. ஆனால், செர்மனி போன்ற நாடுகளில் வணிக வங்கிகள் நீண்டகாலக் கடன் கொடுப்பது ஏற்றுக்கொள்ளப்பட்ட கருத்தாக அமைந்துவிட்ட காரணத்தினால் அந்நாட்டு வங்கிகள் நீண்டகாலக் கடன் கூட வழங்குகின்றன.

(ஆ) ஒரு நாட்டின் பணச்சந்தையின் அமைப்பும், அந்த நாட்டு வணிக வங்கிகளின் சொத்துகளின் தன்மையினை நிர்ணயிக்கின்றது. எடுத்துக்காட்டாக, இங்கிலாந்து நாட்டில் மாற்றுச்சீட்டுத் தரகர்களும் ஏற்பு அகங்களும் உள்ள காரணத்தினால், அந்நாட்டு வணிக வங்கிகள் அந் நிறுவனங்களுக்குக் குறுந்தவணைக்கடன் கொடுக்கும் வாய்ப்புகள் கொண்டுள்ளன. இதர நாடுகள் அந்த வாய்ப்பினைப் பெற்றில்லாத நிலையில் அத்தகைய முதலீட்டினை வளர்க்கும் வாய்ப்பினை அந்த நாட்டிலுள்ள வணிக வங்கிகள் பெறவில்லை.

(இ) வணிக வங்கிகளின் நிதிகளின் தன்மையும், அவற்றுடைய சொத்துகளை நிர்ணயிக்கின்றது. வங்கிகள் பொதுவாக முதல், வைப்புத் தொகை, காப்பு நிதிகள் ஆகியவை மூலம், நிதி திரட்டுகின்றன. ஒரு நாட்டிலுள்ள வங்கிகள், தங்களுடைய நிதியில் பெரும் பகுதியினை, முதல் மூலமாகவும், காப்புநிதிகள் மூலமாகவும் திரட்டினால் அந்நிலையில் அந்த வங்கிகள் நீண்ட காலக் கடன் கொடுக்கும் வாய்ப்பினைப் பெறுகின்றன. செர்மனியிலுள்ள வங்கிகள் இதற்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டாக அமைகின்றன. அமெரிக்க நாட்டில் வேளாண்மை நன்கு வளர்ச்சி பெற்றிருந்தமையின், அந்நாட்டு வணிக வங்கிகள் எவ்விதத் தங்குதடையுமின்றி வேளாண்மைக்குக் கடனுதவி அளித்து வருகின்றன. மேலும் பல்வேறு நாடுகளிலுள்ள சட்ட திட்டங்களுக்கேற்பவும் வங்கிகளுடைய சொத்துகளின் அமைப்பு மாறுபடலாம்.

வங்கியின் முதலீட்டுக் கொள்கைகள் (Investment Policies of a Bank): வணிக வங்கியும் ஒரு தொழில் நிறுவனமாதலால், முடிந்தவரை இலாபம் ஈட்ட ஒவ்வொரு வங்கியும் முயற்சி செய்கின்றது என்று முன்னரே விளக்கினேம். மக்களுக்கு—வாடிக்கைக்காரர்களுக்குப் பலவிதங்களிலும் பணிபுரியவேண்டுமென்பது வணிக வங்கியின் விருப்பமாக இருப்பினும் ஒவ்வொரு வங்கியும் நிலையாகச் செயல்பட, அது, அதனுடைய பங்குநர்களுக்கு ஓரளவுக்கு இலாபம் ஈட்டித்தருதல்வேண்டும். நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகளும் இதற்கு விலக்கானவை அல்ல. நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகளும், அவற்றின் செலவுகளைவிட அதிகமாக இலாபம் ஈட்டினால்தான் அவை தொடர்ந்து செயல்படமுடியும். வங்கிகள் பல்வேறு வழிகளில் இலாபம் ஈட்டுகின்றன. கடன் கொடுத்தல், மாற்றுச்சீட்டுகளைக் கழிவு செய்தல் போன்றவை அவற்றுள்குறிப்பிடத்தக்க சில. இவ்வகை முதலீடுகளின் வழியே வங்கிகள் மிக அதிகமாக வருவாய் ஈட்டுகின்றன.

வங்கிகள் ஈட்டும் வருவாய் அவை கடைப்பிடிக்கும் மூதலீட்டுக் கோட்பாடுகளைப் பொறுத்துள்ளது என்று கூறலாம். மக்கள் ஒரு வங்கியிடம் முழு நம்பிக்கை கொண்டிருக்கும்வரை அது எந்தப் பிரச்சனையையும் எதிர்நோக்குவதில்லை. ஆனால், மக்கள் அதாவது வாடிக்கைக்காரர்கள் அந்த வங்கியிடம் நம்பிக்கை இழக்க ஆரம்பிப்பார்களேயானால், அது தொடர்ந்து செயல்படமுடியாது. வாடிக்கைக்காரர்களுடைய நம்பிக்கையை ஒரு வங்கி முழுமையாகப் பெறவேண்டுமேயானால், அது வாடிக்கைக்காரர்கள் கேட்கின்றபொழுது பணத்தைக் கொடுக்கும் நிலையில் இருத்தல்வேண்டும். எனவே, இலாபம் ஈட்ட விரும்பும் வங்கிகள் வாடிக்கைக்காரர்களுடைய நலனில் அக்கறை கொண்டிருக்கவேண்டியதும் அவசியமானது. சுருங்கக் கூறின், வங்கிகள் மிகச் சிறந்த முறையில், உரிய முதலீட்டுக் கோட்பாடுகளைக் கடைப்பிடித்துப் பல்வேறு சொத்துகளைப் பெறுதல் வேண்டும்.

பாதுகாப்புத் தன்மை, (Safety), எளிவரல் தன்மை (Liquidity) இலாபத் தன்மை (Profitability), ஆகிய மூன்று கோட்பாடுகளும் வணிக வங்கிகள், தங்கள் பணத்தை முதலீடு செய்யுங்கால் கடைப்பிடிக்கப்பட வேண்டியவையாகும். பொதுவாக, மேற் குறிப்பிட்டுள்ள முறையில் முதலீட்டுக் கோட்பாடுகள் குறிப்பிடப் படினும், வங்கிகள் முக்கியத்துவம் கொடுக்கவேண்டியதன் அடிப்படை முதலீட்டுக் கோட்பாடுகளை எளிவரல் தன்மை, பாதுகாப்புத் தன்மை, இலாபத் தன்மை என வரிசைப்படுத்தலாம்.

இம் மூன்று கோட்பாடுகளைப் பற்றிய விவரங்களை அறிந்து கொள்வதற்கு முன்பு, அவற்றுடைய நிலையினை அறிந்து கொள்ளுதல் அவசியமாகும். இம் மூன்று கோட்பாடுகளில் எது முக்கியமானது, எது முக்கிய மற்றது என்று கூறுதல் இயலாது. ஒவ்வொரு கோட்பாடும் ஒரு வகையில், முக்கியத்துவம் வாய்ந்த தாகக் கருதப்படுகிறது. வங்கியின் பங்குநர்கள் அடிப்படையில் இலாபத்தன்மை முக்கியத்துவம் பெறுகிறது. வாடிக்கைக்காரர்களின் அடிப்படையில் எளிவரல் தன்மை முக்கியத்துவம் பெறுகிறது. எனவே, வங்கி ஒவ்வொன்றும் இக் கோட்பாடுகளில் எதற்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டு மென்று முடிவு செய்தல் அவசியமாகும். பொதுவாக வங்கிகள் எளிவரல் தன்மைக் கோட்பாட்டிற்கே முதலிடம் கொடுக்கின்றன. இக் கோட்பாட்டினடிப்படையிலேயே தங்கள் தொழிலைத் தொடர்ந்து நடத்த முடிகிறதெனக் கருதுகின்றன.

முதலாவது கோட்பாடான எளிவரல் தன்மை என்ற கோட் பாட்டினைப் பற்றி முதலில் இங்கு விளக்கலாம். எளிவரல் தன்மை என்பது குறித்து வல்லுநர்களுக்கிடையே ஒருமித்த கருத்து இருப்பதாகத் தெரியவில்லை. பொதுவாக வாடிக்கைக் காரர்கள், அவர்களுடைய வைப்புகளைக் கேட்கின்றபோது கொடுக்கக்கூடிய 'வங்கியின் ஆற்றலே எளிவரல் தன்மை என்று கூறுகிறோம். வாடிக்கைக்காரர்களுடைய காசோலைக்கு, அவர்கள் கணக்கில் போதிய பணம் இருக்கும்வரை பணம் அளிப்பது வங்கிகளின் கடமையும், பொறுப்புமாகும். எனவேதான், வங்கிகள் இத் தன்மைக்கு அதாவது எளிவரல் கோட்பாட்டிற்கு முதலிடம் கொடுக்க விழைகின்றன. இக் கோட்பாட்டினைப் பொறுத்தே, வங்கிகள், வாடிக்கைக்காரர்களிடம் நம்பிக்கையூட்டுவதும் அமைகின்றது.

முன்னரே குறிப்பிட்டதுபோன்று எளிவரல் தன்மை என்பது குறித்து ஒருமித்த கருத்து இல்லை. ஒரு வங்கியின் எளிவரல் தன்மையும், செல்நிலைத் தன்மையும் (Solvency) ஒன்றென்பது ஒரு சிலரது கருத்தாகும். இக் கருத்து ஏற்றுக்கொள்ளத்தக்கதாக அமையவில்லை. ஒரு வங்கியின் பொறுப்புகளைவிடச் சொத்துகள் அதிகமாக இருக்குமேயானால், அவ் வங்கி பொருளாதார நிலையில், செல்நிலைத்தன்மை படைத்துள்ளது என்று கூறலாம். செல் நிலையினைக்கொண்ட வங்கிகள் எளிவரல் தன்மைகொண்டு திகழ்பவை என்று கூற இயலாது. வங்கிகள் தங்கள் சொத்துகளை எளிதாக ரொக்கமாக மாற்ற முடியாவிடின் அவை எளிவரல் தன்மையற்றவை என்று கூறலாம்.

எளிவரல் தன்மையின் பொருள் குறித்து இரு வல்லுநர் களுடைய கருத்துகளை அறிந்துகொள்ளுதல் இங்குப் பொருந்தும். மேனிங் டேசி (Manning Dacey) என்ற இங்கிலாந்து நாட்டு வல்லுநர் ஒரு சொத்தைக் குறுகிய காலத்தில், நட்டமெதுவு மின்றி ரொக்கமாக மாற்ற முடியுமேயானால், அச் சொத்து எளிவரல் தன்மை கொண்டுள்ளது என்று கருதலாமென்று குறிப் பிடுகிறார். ஒரு வங்கி தன்னுடைய சொத்துகளை விரைவில், நட்டமெதுவுமின்றி ரொக்கமாக மாற்றும் திறமை பெற்றிருப்பின், அவ் வங்கி எளிவரல் தன்மைக் கோட்பாட்டினைக் கடைப்பிடிக் கிறது என்று பொருள் என்பது பேராசிரியர் சேயர்ஸ் கருத்தாகும்.

மரபு வழிச் சிந்தனையாளர்கள், எளிவரல் தன்மையின் அடிப் படையில் வங்கிகள் குறுகியகாலக் கடன் அளிப்பதே சரி எனக் கருதினர். அக் கருத்தின்படி சுய எளிவரல் தன்மைகொண்ட அதாவது ஒரு குறிப்பிட்ட காலத்திற்குப் பிறகு தானாகவே ரொக்கமாக எவ்விதச் சிரமமுமின்றி மாறும் தன்மை படைத்

தவையே குறுகியகாலக் கடன்கள் ஆகும். அவர்கள் மாற்றுச் சீட்டுகளின் அடிப்படையில் உற்பத்திக்கும், வாணிப நடவடிக்கைகளுக்கும் கொடுக்கப்படும் கடன்களையே 'சுய எளிவரல் தன்மை (Self Liquidating) கொண்ட கடன்கள்' என்று கருதுகின்றனர். எனவே, அக் கருத்தின்படி மாற்றுச்சீட்டுகளைக் கழிவு செய்து கடன் வழங்கப்படும்பொழுது வங்கிகளுக்குத் தகுந்த பிணையங்கள் கிடைப்பதுடன், அவை எளிவரல் தன்மையும் பெற்றுள்ளன. எனவே, மாற்றுச்சீட்டுகளைக் கழிவு செய்து கடன் கொடுப்பது மிகச் சிறந்த முறையாகவும், இம் முதலீட்டினைச் சிறப்புமிக்க முதலீடு என்றும் கருதுகின்றன.

இவ்வாறு மாற்றுச்சீட்டுகளைக் கழிவு செய்து நிதி வழங்குகின்ற கொள்கையினைச் 'சுய எளிவரல் தன்மைக் கோட்பாடு' (Theory of Self Liquidity) என்று கூறுகின்றனர். இக் கோட்பாடு ஆரம்ப காலத்தில் வங்கிகளுக்குப் பல்வேறு நன்மைகளை அளிப்பதாகக் கருதப்பட்டாலும், இது இப்பொழுது பல்வேறு குறைபாடுகளுக்குட்பட்டு உள்ளது. மாற்றுச்சீட்டுகளைக் கழிவு செய்வதன் மூலம் முதலீடு செய்யப்பட்டுப் பெறப்பட்ட சொத்துகள் சுய எளிவரல் கோட்பாட்டின் அடிப்படையில், ஒரு குறிப்பிட்ட காலத்திற்குப் பிறகே அதாவது மாற்றுச்சீட்டுகளின் உரிய தேதிகளுக்குப் பிறகே ரொக்கமாக மாறுகின்றன. அந்தத் தேதிவரை வங்கி அந்தப் பணத்தை மட்டும் எதிர்நோக்கிப் பேசாமல் இருத்தல் முடியாது. அவசியம் ஏற்படும்பொழுது இச் சொத்துகளை மாற்றிக் கொடுத்து ரொக்கத்தினைப் பெறும் வாய்ப்பும் வசதியும் பெற்றிருத்தல் வேண்டும். பழைய மாற்றுச்சீட்டுகளுக்குப் பணம் வந்த பிறகுதான் புதிய மாற்றுச்சீட்டுகள் கழிவு செய்யப்படும் என்ற கோட்பாட்டினை வங்கிகள் கடைப்பிடித்தால் நாட்டிலுள்ள பணப் புழக்கம் கட்டுப்படுத்தப்பட்டுப் பொருளாதார நடவடிக்கைகள் நிலைத்து நின்றுவிடும்.

எனவே, மாற்றுச்சீட்டில் முதலீடு செய்துள்ள வங்கி, அந்த மாற்றுச்சீட்டுகளுக்குரிய பணம் வந்தபிறகுதான் தொடர்ந்து முதலீடு செய்தல் வேண்டும் என்ற நிலையில்லாது, தொடர்ந்து மாற்றுச்சீட்டுகளைக் கழிவு செய்து பணம் அளிக்க முயல வேண்டும். இல்லையேல் நாம் முன்பே குறிப்பிட்டதுபோன்று புழக்கத்திலுள்ள பணத்தின் அளவு குறைந்து, அதன் காரணமாக மக்களுடைய வாங்கும் ஆற்றலும் குறைகிறது. இவற்றின் எதிரொலியாக மாற்றுச்சீட்டுகளை ஏற்றுக்கொண்ட உற்பத்தியாளர்கள், பண்டங்களை விற்கமுடியாது; கெடு தேதியில்

பணத்தைக் கொடுக்க இயலாது; தினசரி வங்கிகளின் தொழிலையும் பாதிக்கச்செய்வர். எனவே, சுய எளிவரல் தன்மைக் கோட்பாடு வங்கிகளுக்கு அவ்வளவு பொருந்துமெனக் கூறமுடியாது.

ஆகையால், குறுகிய காலத்திற்குக் கடன் கொடுத்தல்மட்டும் எளிவரல் கோட்பாட்டின் முக்கியத் தன்மையன்று. வங்கி தனது முதலீட்டை எவ்வளவு விரைவாக, நட்டமின்றிச் சொத்தாக மாற்ற முடிகிறது என்பதைப் பொறுத்தே எளிவரல் தன்மை அமைகிறது.

எளிவரல் தன்மைக்கும் (Liquidity) மாற்றுமைத் தன்மைக்கும் ஒரு சிலரது கருத்துப்படி வேறுபாடில்லை. இக் கருத்துத் தவருகும். எளிவரல் தன்மை, மாற்றுமைத் தன்மைக்கு (Shitability) மேலானதாகும். இவை இரண்டிற்குமுள்ள வேறுபாட்டை ஓர் எடுத்துக்காட்டுமூலம் விளக்கலாம். ஒரு வங்கியின் நம்பிக்கைமிக்க வாடிக்கைக்காரர் ஒருவர் வெளிநாடு செல்லும் பொருட்டு அதனிடமிருந்து எவ்விதப் பிணையமுமின்றி ரூ. 10,000 கடன் பெறுவதாகக் கொள்ளுவோம். அந்த வாடிக்கைக்காரர் அப் பணத்தைத் திருப்பிச் செலுத்துவதற்கு முன்பே அவ் வங்கிக்குப் பணம் தேவைப்படுமானால், அந்தச் சொத்தைப் பிற வங்கிகளுக்கு மாற்றிக்கொடுத்து, தமக்குத் தேவையான பணத்தை அவ் வங்கி திரட்ட முடியாது. ஏனெனில், இச் சொத்து மாற்றுமைத் தன்மையற்றதாகும். அதுபோலன்றி அதே வங்கி ரூ. 10,000 மதிப்புள்ள கம்பெனியின் பங்குகளை வாங்கியிருக்குமேயானால் அதுபோன்ற அவசர காலங்களில் பிற வங்கிகளுக்கு மாற்றிக் கொடுக்கலாம் அல்லது பங்குச் சந்தையில் விற்று விடலாம். அவ்வாறு அப் பங்குகள் பங்குச் சந்தையில் விற்கப்பட்டால் அவ் வங்கி ரூ. 10,000-க்குக் குறைவாகத்தான் திரட்ட முடியும். எனவே, அப் பங்குகள் மாற்றுமைத் தன்மைபெற்றவை ஆனால் எளிவரல் தன்மை பெற்றவையல்ல. அதுபோலன்றி அவ் வங்கி அப் பணத்தைக் குறுகியகால அரசு பத்திரங்களில் முதலீடு செய்திருக்குமேயானால் எவ்வித நட்டமுமின்றி அல்லது குறைந்த நட்டத்துடன் அப் பங்குகளை ரொக்கமாக மாற்றி இருக்க முடியும். இவ்வாறு நட்டமெதுவுமின்றி அல்லது குறைந்த நட்டத்துடன் விரைவில் ரொக்கமாக்கக்கூடிய சொத்துகளை எளிவரல் சொத்துகள் என்று கூறுகிறோம்.

மேனிங் டேசி, எளிவரல் என்ற சொல்லினுடைய மரபுவழிப் பொருளை ஏற்றுக்கொள்ளவில்லை. மாறாக, புதிய பொருளைக்

கொடுத்துள்ளார். அவரது கருத்துப்படி மேல்வாரியாக எளிவரல் தன்மை படைத்த சொத்துகள் உண்மையில் எளிவரல் தன்மை படைத்த சொத்துகளினின்றும் மாறுபட்டவை. ஒரு வணிக வங்கி தனது சொத்துகளில் ஒரு பகுதியை நட்டமின்றி உடன் ரொக்க மாக்கிய நிலையில், மற்ற வணிக வங்கிகளின் ரொக்கம் குறையு மானால், அத்தகைய சொத்துகள் மேல்வாரியாக எளிவரல் தன்மை பெற்றிருப்பினும் உண்மையில் எளிவரல் தன்மை பெற்ற வையாகக் கொள்ளமுடியாது. எடுத்துக்காட்டாக 'அ' என்னும் வணிக வங்கி தன்னிடமுள்ள ரூ. 10,000 மதிப்புள்ள அரசு கடன் பத்திரங்களை 'ஆ' என்னும் வங்கிக்கு விற்குமேயானால் 'அ' வங்கியின் பணம் கூடுதலாகி, 'ஆ' வங்கியின் பணம் குறை கின்றது. எனவே, நாட்டின் பணப் புழக்கத்தில் எவ்வித மாறுதலும் இல்லை. இது வங்கியினுடைய எளிவரல் தன்மையைக் குறிப்பதன்று. டேசி கீழ்க்காணும் எடுத்துக்காட்டுகள் மூலம் மேல்வாரியாகத் தோன்றும் எளிவரல் தன்மைக்கும் உண்மை எளிவரல் தன்மைக்குமுள்ள வேறுபாட்டை நன்கு விளக்குகிறார்.

ஒவ்வொரு வணிக வங்கியும் அதனுடைய வாடிக்கைக்காரர் களுக்குரிய மற்ற வணிக வங்கிகள்மீது எழுதப்பட்ட காசோலைகளை வசூல் செய்யும்பொருட்டுப் பெறுகின்றது. அக் காசோலைகளை வசூல் செய்யும்பொருட்டு மற்ற வங்கிகளுக்கு அனுப்புகிறது. அவ்வாறு வசூலுக்காக அனுப்பப்படும் காசோலைகள் மொத்த வைப்புத் தொகையைக் [மேலெழுந்தவாரியாக நோக்குமிடத்து] கூட்டுவதுபோல் தோன்றும்; உண்மையில் வைப்புத்தொகை கூடுவதில்லை. இதனைக் கீழ்க்காணும் எடுத்துக்காட்டுகளிலிருந்து நன்கு அறியலாம்.

இனை I.

'அ' வங்கி

பொறுப்புகள்		சொத்துகள்	
வைப்புத் தொகை	ரூ. 1,000	ரொக்கம்	100
		இதர சொத்துகள்	900
மொத்தம்	ரூ. 1,000		1,000

'ஆ' வங்கி

பொறுப்புகள்		சொத்துகள்	
வைப்புத் தொகை	ரூ. 1,000	ரொக்கம்	ரூ. 100-00
		இதர சொத்துகள்	ரூ. 900-00
	ரூ. 1,000		ரூ. 1,000

மொத்த வைப்புத்தொகை வங்கி 'அ' ரூ. 1000 + வங்கி 'ஆ' ரூ. 1000 = ரூ. **2000**

இந்நிலையில் 'அ' வங்கி, 'ஆ' வங்கிமீது எழுதப்பட்ட ரூ. 50 மதிப்புடைய காசோலையையும் வைத்திருந்து அவை வசூல் செய்யப்படாமலிருப்பின் அவற்றுடைய இருப்பு நிலைக் குறிப்புக் கீழ்க்கண்டவாறு இருக்கும்.

நிலை II.

'அ' வங்கி

பொறுப்புகள்		சொத்துகள்	
வைப்புத் தொகை	ரூ. 1000	ரொக்கம்	ரூ. 100
பெறப்பட்ட காசோலை	ரூ. 50	வசூலிலிருக்கும் காசோலை	ரூ. 50
		இதர சொத்துகள்	ரூ. 900
	ரூ. 1050		ரூ. 1050

'ஆ' வங்கி

பொறுப்புகள்		சொத்துகள்	
வைப்புத் தொகை	ரூ 1,000	ரொக்கம்	ரூ. 100
பெறப்பட்ட காசோலை	ரூ. 50	வசூலிலிருக்கும் காசோலை	ரூ 50
		இதர சொத்துகள்	ரூ. 900
	ரூ. 1,050		ரூ. 1,050

இந்நிலையில் மொத்த வைப்புத்தொகை ரூ. 1000-லிருந்து ரூ. 1050தாக உயர்ந்துள்ளதுபோல் தோன்றினாலும் உண்மையில் வைப்புத்தொகையில் எவ்வித மாற்றமுமில்லை. அந்தக் காசோலைகள் வசூலிக்கப்பட்ட பிறகு அந்த வங்கிகளின் இருப்பு நிலைக்குறிப்புகள் நிலை I-ல் உள்ளதுபோன்றே இருக்கும். எனவே, மொத்த வைப்புத் தொகையில் எவ்வித மாற்றமும் இல்லை என்பது தெளிவாகும்.

ஆகையால், டேசியினுடைய கருத்துப்படி விரைவாக, நட்டமெதுவுமின்றியோ அல்லது மிகக் குறைவான நட்டத்துடனோ, மற்ற வங்கிகளின் ரொக்கத்தினைப் பாதிக்காது. ரொக்கமாக மாற்றத்தக்க சொத்துகள் எளிவரல் தன்மை வாய்ந்தவையாகும். சுருங்கக் கூறின் மைய வங்கிக்கு மாற்றத்தக்க எல்லாச் சொத்துகளுமே எளிவரல் தன்மை வாய்ந்தவை; முதல் ரக மாற்றுச் சீட்டுகளே இவ்வகைச் சொத்துக்கு எடுத்துக்காட்டாகக் குறிப்பிடலாம்.

வங்கிகள் கடைப்பிடிக்க வேண்டிய இரண்டாவது கோட்பாடு முதலீட்டினுடைய பாதுகாப்பாகும். நாம் முன்னரே குறிப்பிட்டதுபோன்று வங்கிகள் பிறருடைய பணத்தில் தொழில் புரிபவை மட்டுமல்ல, பணத்திலேயே புழங்குபவையுமாகும். எனவே, இதர தொழில் நிறுவனங்களைவிட வங்கிகள் இன்னும் சற்று எச்சரிக்கையாகத் தொழில் புரிதல் வேண்டும். இக் கோட்பாட்டினடிப்படையில் அதிக வருவாய் வரும் நிலையிலிருந்தாலும், ஊக வணிக நடவடிக்கைகளுக்குக் கடன் கொடுப்பதைத் தவிர்த்தல் வேண்டும். செல்நிலையில் சிறிது ஐயமிருப்பினும்

அத்தகைய தொழில் நிறுவனங்களுக்குக் கடன் ஈதல் தவருகும். வருவாய் சற்றுக் குறைவாக இருப்பினும் பாதுகாப்பு மிக்க இனங்களில் முதலீடு செய்வதே வணிக நலனிற்குநந்ததாகும்.

வங்கி தன்னுடைய முதலீட்டில் கடைப்பிடிக்க வேண்டிய மூன்ருவது கோட்பாடு இலாபத்தன்மை. நாம் முன்னரே குறிப்பிட்டதுபோன்று வங்கிகளும் தொழில் நிறுவனங்களே. வங்கிகளில், பங்குகள் வாங்குவதன் மூலம் முதலீடு செய்துள்ளவர்களும், வங்கி இலாபம் ஈட்டி இலாப ஈவு வழங்குமென்று எதிர் பார்க்கின்றனர். எனவே, இவை இதர தொழில் நிறுவனங்களேப்போன்று இலாபம் ஈட்டுதல் வேண்டும். நல்ல திறமைமிக்க நிருவாகத்தின் அடிப்படையில் வங்கிகள் எவ்விதச் சிரமமுமின்றி எளிதாக இலாபம் ஈட்டலாம். வங்கிகள் வாடிக்கைக்காரர்களுக் கிடையே நம்பிக்கையூட்டித் தொழில் புரிந்துவரும்வரை எவ்விதச் சிக்கலும் ஏற்படுவதில்லே. எனவே, நடைமுறையில் வங்கி ஒவ்வொன்றும் வாடிக்கைக்காரர்களுக்கு நம்பிக்கையூட்டும் அளவிற்குப் போதிய ரொக்கத்திணேக் கொண்டும், எஞ்சிய தொகையிணே இழப்புவாய்ப்பற்ற (Risk) சொத்துகளில் முதலீடு செய்வதன் வழியும் மிகக் கூடுதலான இலாபத்திணே ஈட்டமுடியுமென்பது திண்ணம்.

வங்கிகள் முதலீடு செய்யும்போது கடைப்பிடிக்க வேண்டிய மூன்று கோட்பாடுகளே இதுவரை விளக்கினேம், அக் கோட்பாடுகளில் முதலாவது கோட்பாடும் மூன்ருவது கோட்பாடும் ஒன்றுக்கொன்று முரண்பாடானவைபோல் தோன்றலாம். இதணே ஏ. சி. எல். டே (A. C. L. Day) என்ற வல்லுநர் 'எத்தகைய சொத்துகளே வைத்துக்கொள்வது என்று முடிவு செய்யும்போது வணிக வங்கிகளே இலாபம் ஈட்டவேண்டுமென்ற விருப்பம், எச்சரிக்கை என்னும் இரு முரண்பாடான சக்திகள் ஆட்டுவிக்கின்றன. எச்சரிக்கை, சொத்தில் பெரும் பகுதியிணே ரொக்கமாகக் கொள்ளவேண்டுமெனக் குறிப்பிடுகின்றது. இலாபமீட்டும் விருப்பம் சொத்தில் பெரும் பகுதியை முதலீடுசெய்து குறைந்த அளவு ரொக்கத்தை வைத்துக்கொள்ளத் தூண்டுகிறது' என்று விளக்குகின்ருர். இலாபத் தன்மையின்படி ஒரு வங்கி தனது நிதியைக் கம்பெனிகளின் பங்குகளில் முதலீடு செய்தால் அதிக இலாபம் ஈட்ட முடியும். எளிவரல் கோட்பாட்டின்படி கூட்டுப் பங்குக் கம்பெனிகளின் பங்குகளில் முதலீடு செய்தல் அவ்வளவு உகந்ததன்று. குறுகிய கால அரசு கடன் பத்திரங்களிலேயோ, மாற்றுச்சீட்டுகளேக் கழிவு செய்வதன் மூலமாகவோ முதலீடு செய்தல்தான் சிறந்ததாகும்.

இந் நிலையில் வங்கிகள் எந்த ஒரு கோட்பாட்டினையும் புறக் கணித்தல் இயலாததாகும். வங்கிகளின் சொத்துகள் எளிதில் ரொக்கமாக மாற்றும் தன்மை பெற்றிருத்தல் வேண்டும். அதே நேரத்தில் அவை வங்கிகளுக்குப் போதிய இலாபத்தினையும் ஈட்டிக் கொடுத்தல் வேண்டும். வருவாயைப் புறக்கணித்துவிட்டு எந்த வங்கியும் தொடர்ந்து செயல்பட முடியாது. அதேநேரத்தில் எளிவரல் தன்மையின்றி வாடிக்கைக்காரர்களிடையே வங்கிகள் நம்பிக்கையூட்ட முடியாது. இதனை மிகச் சுருக்கமாக ஏ. கே. பாசு (A. K. Basu) என்ற ஆசிரியர் கீழ்வருமாறு கூறுகிறார் : 'எந்த வங்கியர் மாற்றுச்சீட்டுக்கும், அடைமானத் திற்கும் இடையேயுள்ள வேறுபாட்டை நன்கு அறிந்திருக் கின்றாரோ அவரே சிறந்த வங்கியர்.' மாற்றுச்சீட்டுகளுக்குக் கழிவு செய்து பணம் கொடுத்தால், அது குறுகிய காலத்தில் திரும்பச் செலுத்தப்பட்டுவிடும். மேலும், அவசியம் நேரும்போது அம் மாற்றுச்சீட்டுகளை மறு கழிவு செய்து பணம் பெறலாம். ஆனால், அடைமானத்தில் அவ் வசதி இல்லை என்பதுடன்கூட அது நீண்ட காலத்திற்குப் பிறகே மீண்டும் செலுத்தப்படும்.

இத்தகைய சூழ்நிலையில் வங்கிகள், தங்களுடைய செயலறிவைப் பயன்படுத்தி மிகக் குறைவான அளவு ரொக்கத் தினைக்கொண்டு எஞ்சிய நிதித் தொகையினை முதலீடு செய்யும் போது, இழப்பு வாய்ப்புகள் பரவலாக இருக்கும் வகையில் வெவ்வேறு சொத்துகளில் முதலீடு செய்யவேண்டும். ஒரே வகையான சொத்தில் அதிகமான தொகை முதலீடு செய்வது உகந்ததன்று. எடுத்துக்காட்டாக, ஒரு வங்கி கடன்தொகை முழுவதையும் சர்க்கரை ஆலைகளுக்கே கொடுப்பதோ, நிதி முழுவதையும் கடனில் மட்டும் முதலீடு செய்வதோ சிறந்ததன்று. ஒவ்வொரு வங்கியும் பல்வேறு வகையான சொத்துகளிலும், பல்வேறு நிறுவனங்களிலும் முதலீடு செய்தல் வேண்டும். சுருங்கக்கூறின் 'எல்லா முட்டைகளையும் ஒரே கூடையில் வைக்காதே' என்ற கோட்பாட்டினை ஒவ்வொரு வங்கியும் அதனுடைய நிதித்தொகையினை முதலீடு செய்யும்போது கடைப் பிடிக்க வேண்டும். பல நாடுகளில், பணச்சந்தையின் அமைப்பும், மைய வங்கியின் நிலையும் இதற்கு உறுதுணையாக உள்ளன.

வினாக்கள்

(1) ஒரு வணிக வங்கியின் இருப்புநிலைக் குறிப்பினை வரைந்து, அதன் பல்வேறு பொறுப்புகள், சொத்துகள் ஆகியவற்றை விளக்குக.

(2) வங்கி கையில் வைத்திருக்க வேண்டிய ரொக்கத்தினை நிர்ணயிக்கக் கடைப்பிடிக்கும் கோட்பாடுகள் யாவை?

(3) அழைப்புக் கடன், குறுந்தவணைக் கடன் ஆகியவை குறித்துக் குறிப்பு வரைக.

(4) வங்கிகளின் சொத்துகளில் மாற்றுச் சீட்டுகளின் நன்மைகள் யாவை ?

(5) வங்கிகளுடைய சொத்துகள் எல்லா நாடுகளிலும் ஒரே தன்மை பெற்றிருக்காததன் காரணங்களை விளக்குக.

(6) வங்கிகள் தங்களுடைய நிதியினை முதலீடு செய்யும் போது கடைப்பிடிக்கும் கோட்பாடுகளை விவரிக்க.

(7) எளிவரல் தன்மை, மாற்றுமைத் தன்மை ஆகியவற்றுக் கிடையே உள்ள வேறுபாடுகளை விளக்குக.

(8) வங்கிகளின் முதலீட்டுக் கோட்பாடுகள் ஒன்றுக்கொன்று முரண்பாடாக உள்ள நிலையினால் வங்கிகள் தங்கள் நிதியை எவ்வாறு முதலீடு செய்கின்றன ?

(9) குறிப்பு வரைக :—

(அ) வங்கியின் வெளியிட்ட முதலும், ஒப்பிய முதலும்.

(ஆ) நிலைவைப்புகள்.

(இ) முதலீடுகள்.

(ஈ) கடனும், கடன் வகைகளும்.

(உ) பாதுகாப்புத்தன்மை.

5. கடனுக்கம் செய்தல்
(Credit Creation)

வங்கிகள் பணத்தில் வாணிபம் செய்வதோடு மட்டுமின்றிப் பணத்தை உற்பத்தியும் செய்கின்றன. இந்த அடிப்படையிலும், தொழில் நிறுவனம் என்ற முறையில் வங்கிகள் இதர தொழில் நிறுவனங்களினின்றும் மாறுபடுகின்றன. வங்கிகள் பணத்தினை உற்பத்தி செய்வதனையே 'கடனுக்கம் செய்தல்' என்று கூறுகிறோம். வங்கிகள் இத் திறனைப் பெற்றிருக்கவில்லை என்றால், அவை குறித்து, அவற்றைக் கட்டுப்படுத்தும் முறைகள் குறித்துப் பாராளுமன்றத்தில்கூடப் பேசுகின்ற அளவுக்கு ஒரு நிலை ஏற்பட்டிருக்காது. ஒரு நாட்டில் புழக்கத்திலுள்ள பணத்தின் மதிப்பு, அந் நாட்டு அரசால் வெளியிடப்படும் புணத்தின் மதிப்பும், அந்த நாட்டு மைய வங்கியால் வெளியிடப்படும் பணத்தின் மதிப்பும் மட்டுமே சேர்ந்ததல்ல. வணிக வங்கிகளால் உருவாக்கப் படும் பணமே மொத்தப் பணப் புழக்கத்தில் பேரிடம் வகிக்கின்றது. வங்கிகள் வைப்பாளர்களையும் கடன்பெற விழைபவர்களையும் இணைக்கும் பாலமாக மட்டும் அமைந்துவிட்டால் எவ்விதப் பிரச்சினைக்கும் இடமே இல்லை. வங்கிகள், அவை பெற்ற வைப்புத் தொகைகளை அடிப்படையாகக்கொண்டு, மேலும் வைப்புகளைப் பன்மடங்காக்குகின்றன. அவை பெற்ற சட்ட முறைப் பணத்தைக்கொண்டு (legal tender) மேலும் பணத்தைத் தாங்களாகவே உற்பத்தி செய்கின்றன, அவ்வாறு உற்பத்தி செய்யப்பட்ட பணத்திற்கும், சட்ட முறைப் பணத்திற்கும் எவ்வித வேறுபாடும் இல்லை. சட்ட முறைப் பணத்தைப் போன்றே இதனைக் கொண்டும் மக்கள் வாணிபம் செய்கின்றனர்.

வங்கிகள் பெறுகின்ற வைப்புத்தொகை அவற்றைப் பொறுத்தவரை, பொறுப்புகளாகும். அப் பொறுப்புகளை வங்கிகள் சொத்துகளாக மாற்றுகின்றன. எனவே, ஆயுள் காப்பீட்டுக் கழகம், முதலீட்டுப் பொறுப்புரிமை அமைப்பு (Investment trust) போன்ற நிறுவனங்களைப்போன்று வைப்புகளைச் செலுத்தும்

வாடிக்கைக்காரர்களையும், கடன்பெற விழைபவர்களையும் இணைக்கும் பாலமாக மட்டும் வணிக வங்கிகள் செயல்படுவதில்லை. இந் நிறுவனங்கள் தாங்கள் பெற்ற தொகைக்குமேல் கடன் தருதல் இயலாது. ஆனால், வணிக வங்கிகள் தாங்கள் பெற்ற வைப்புத் தொகையைப்போன்று இரண்டு மடங்குத் தொகைக்குக்கூடக் கடன்தொகையை உற்பத்தி செய்கின்றன. எனவேதான், வங்கிகள் பண வாணிப நிறுவனங்கள் மட்டுமல்ல, பண உற்பத்தி நிறுவனங்களும்கூட என்று கூறப்படுகின்றன. இவ்வாறு வங்கிகள் பணம் உற்பத்தி செய்யும் நிலையில் அவை மிகவும் எச்சரிக்கையுடன் இருத்தல் அவசியமாகும். அவ்வாறு எச்சரிக்கையின்றி, அவை தொழிலுக்குத் தேவையான பணத்திற்கு அதிகமாகஉற்பத்தி செய்து விட்டால், இந்நிலை பணவீக்கத்திற்கு ஆதாரமாக அமைகிறது. அதுபோலன்றி, தேவைக்கு மிகவும் குறைவாகப் பணம் குறைக்கப்பட்டுவிட்டால், பணச் சுருக்கம் ஏற்பட்டு இன்னும் தீய விளைவுகள் ஏற்படக்கூடும்.

கடனுக்க நுட்பச் செயல்முறைகள்: (Techniques of credit creation) வணிக வங்கி வைப்புகள் இரு முறைகளில் உருவாக்கப்படுகின்றன. அதாவது, வங்கியிலுள்ள வைப்புகளை இரு வகைகளாகப் பிரிக்கலாம். அவையாவன: (1) முதன்மை வைப்புகள் (Primary deposits) (2) இரண்டாம் வகை வைப்புகள் (Secondary deposits). வாடிக்கைக்காரர்களால் சட்ட முறைப் பணம் செலுத்தப்பட்டு அதன் வழியாக வைப்புத்தொகை பெறப்பட்டால் அதனை முதன்மை வைப்பு என்றும் அதுபோலன்றி வாடிக்கைக்காரர்களுக்குக் கடன் கொடுப்பதன் வாயிலாக வைப்புகள் தோற்றுவிக்கப்பட்டால் அத்தகைய வைப்புகளை இரண்டாம் வகை வைப்புகளென்றும் கூறுகிறோம். இரண்டாம் வகை வைப்புகள் (Secondary deposits) வருவிக்கப்பட்ட வைப்புகளென்றும் அழைக்கப்படுகின்றன.

வங்கிகளில் செலுத்தப்பட்ட வைப்புத் தொகை, வாடிக்கைக்காரர்களின் தேவையை ஒட்டி எப்பொழுது வேண்டுமாயினும் அவர்களால் பெறப்படலாம். வாடிக்கைக்காரர்களிடம் ரொக்கமாக இருந்த பணம் வங்கியிடம் வைப்பு என்ற நிலையினைப் பெற்றுள்ளது. இத்தகைய வைப்பே முதன்மை வைப்பு (Primary deposits) ஆகும். இரண்டாம் வகை வைப்பு அல்லது பிறப்பிக்கப்பட்ட வைப்புகள் (Derilled deposits) வங்கிகள் கடன் கொடுப்பதன் வாயிலாக உருவாக்கப்படுகின்றனவென்று குறிப்பிட்டோம்.

வங்கிகளும் தொழில் நிறுவனங்களே. அவற்றிற்கும் பல்வேறு விதமான செலவினங்கள் உள்ளன. அவை,

வைப்பாளர்களுக்கு வட்டி செலுத்தவும், நிர்வாகச் செலவை ஏற்கவும், பங்குநர்களுக்கு இலாப ஈவு வழங்கவும் ஓரளவாவது இலாபம் ஈட்டுதல் வேண்டும். இதர தொழில் நிறுவனங்களைப் போன்று குறைந்த வீத வட்டியில் வைப்புத்தொகை பெற்றுச் சற்றுக் கூடுதல் வீத வட்டிக்குக் கடன் கொடுப்பதன் வாயிலாகத் தான் வங்கிகள் தொழில்புரிய வேண்டும் என்ற நிலை நிலவினால் எந்த ஒரு வங்கியாலும் தொழில்புரிய இயலாது. எனவே, ஒவ்வொரு வங்கியும் வேறு பலவிதமான முறைகளில் வருவாய் ஈட்டுதல் அவசியமாகும். ஒரு வங்கி இவ்வாறு வருவாய் ஈட்டாத நிலையில் அது செயல்புரிதல் என்பதே இயலாது. எனவே, வங்கிகள், வைப்புத் தொகையை முதலீடு செய்து வருவாய் ஈட்டுவதுடனின்றிப் பணத்தை உற்பத்தி செய்து முதலீடு செய்வதன் வழியாகவும் வருவாய் ஈட்டுகின்றன என்பது பொதுக் கருத்தாகும். எனவேதான் ஒருசிலர், வங்கிகள், சாதாரணமாகத் தங்கள் எழுதுகோலைக்கொண்டு கோடிக்கணக்கான ரூபாயை உருவாக்கும் திறன் பெற்றுள்ளன என்று கூறுகின்றனர். ஆனால், வங்கி நிர்வாகத்தினர் அதற்கு நேர் எதிர்மாறாக, தாங்கள் இப்படிப்பட்ட திறனைப் பெற விரும்புவதாகவும், ஆனால், நடைமுறையில் அவர்கள் தங்களிடம் இல்லாத பணத்தை முதலீடு செய்தல் இயலாதென்றும், தாங்கள் பணம் உற்பத்தி செய்யும் திறனைப் பெற்றிருக்கவில்லை என்றும் அவர்களிடம் மக்களால் செலுத்தப்பட்ட வைப்புத் தொகையின் அளவுக்கு மட்டுமே அவர்கள் முதலீடு செய்தல் இயலும் என்றும் கருத்துத் தெரிவிக்கின்றனர்.

வங்கிகள் பணம் உற்பத்தி செய்யும் திறமையைப் பெற்றிருக்கவில்லை என்னும் வங்கி நிருவாகத்தினருடைய கருத்தினை ஏற்றுக் கொள்வதற்கில்லை. வங்கி, பணம் உருவாக்கும் திறன் பெற்றில்லாவிடின் ரூ. 1000 கோடி வைப்புத் தொகை பெற்ற வங்கியின் இருப்புநிலைக் குறிப்பு [அது 10 விழுக்காடு வாடிக்கைக்காரர்களுக்காக ரொக்கம் வைத்துள்ளது என்ற நிலையில்] கீழ்க் கண்டவாறு இருக்கும்.

	கோடி		கோடி
வைப்புத் தொகை	ரூ. 1000	ரொக்கம்	ரூ. 100
		முதலீடு	ரூ. 900
	ரூ. 1000		ரூ. 1000

ரூ. 1000 கோடியை வைப்புத் தொகையாகக்கொண்ட வங்கி ரூ. 900 கோடியை முதலீடுசெய்து வரும் வருவாயிலிருந்து வைப்பாளர்களுக்கு வட்டி செலுத்தி நிருவாகச் செலவினையே ஏற்றுக்கொள்ள முடியாது. எனவே, பங்குநர்களுக்கு இலாப ஈவு வழங்க முடியாது. ஆகையால், அது நீண்ட காலத்திற்குத் தொடர்ந்து செயற்படுதலும் இயலாது.

வங்கியில் செலுத்தப்படும் முதன்மை வைப்புகளை வைப்பாளர்கள் எல்லோரும் ஒரே நேரத்தில் வங்கியிடமிருந்து திரும்பப் பெற விழைவதில்லை. செயலறிவின் அடிப்படையில், வங்கி இருக்கும் இடம், வாடிக்கைக்காரர்களின் தன்மை, தொழில், பொருளாதாரநிலை ஆகியவற்றை அடிப்படையாகக்கொண்டு ஒவ்வொரு வங்கியும் தன்னுடைய மொத்த வைப்புத் தொகையில் எத்தனை விழுக்காடு வாடிக்கைக்காரர்களுடைய தேவையைப் பூர்த்திசெய்யும் முகத்தான் ரொக்கமாகப் பெற்றிருத்தல் வேண்டுமென்பதை முடிவு செய்கின்றது. எஞ்சிய ரொக்கத்தினைக் கடனுகப் பலருக்கும் கொடுக்கலாம். அவ்வாறு கடனுகக் கொடுக்கும்பொழுது அது ஓரளவுக்கு இலாபம் ஈட்டலாம். நாம் முன்னரே குறிப்பிட்டதுபோன்று வங்கிகளின் வைப்புகள் (1) முதன்மை வைப்புகள். (2) பிறப்பிக்கப்பட்ட வைப்புகள் என இருவகைப்படும். முதன்மை வைப்புகள் பெறுவதன்வழி வங்கிகள் ஒரு நாட்டின் பணப் புழக்கத்தினைப் பெருக்குவதில்லை. ஆனல், வருவிக்கப்பெற்ற வைப்புகளைப் பெறுவதன்வழி வங்கிகள் நாட்டிலுள்ள பணப் புழக்கத்தைப் பெருக்குகின்றன. மக்களுடைய வாங்கும் சக்தியினைக் கூடுதலாக்குகின்றன. எந்தெந்த வைப்புகளில் வங்கிகள் வாடிக்கைக்காரர்களிடமிருந்து ரொக்கம் பெருது பணத்தினை வரவு வைக்கின்றனவோ அந்த வைப்புகள் வருவிக்கப்பெற்ற வைப்புகளென்றும், அந்த வைப்புகளிலுள்ள பணம், உற்பத்தி செய்யப்பட்ட பணம் என்றும் அழைக்கப் படுகின்றது.

பணம் உற்பத்தி செய்வதற்குரிய வாய்ப்புகள்: ஒரு வங்கி ஒரு வாடிக்கைக்காரருக்குக் கடன் கொடுப்பதன் வாயிலாகத்தான் பணம் உற்பத்தி செய்யமுடிகிறதெனினும், பொதுவாகக் கீழ்க் கண்ட சந்தர்ப்பங்களில் ஒரு வங்கி பணம் உற்பத்தி செய்வதற்கான வாய்ப்பினைப் பெறுகிறது.

(அ) அழைப்புப் பணம், குறுந்தவணைக் கடன் ஆகியவற்றில் கடன் கொடுக்கும்பொழுது

(ஆ) மாற்றுச்சீட்டுகள் கழிவு செய்யப்படும் நிலையில்

(இ) கடனும், கடன் வகைகளும் வழங்கும் நிலையில்

(ஈ) வாடிக்கைக்காரர்களிடமிருந்து பத்திரங்கள் வாங்கி அதற்குரிய விலைக்கான பணத்தை அந்த வாடிக்கைக் காரர்களின் கணக்கில் வரவு வைப்பதன் வழி.

மேற்குறிப்பிட்ட நான்கு சந்தர்ப்பங்களில் வணிக வங்கிகள் பணம் உற்பத்தி செய்வதற்கான அதாவது கடனுக்கம் செய்வதற்கான வாய்ப்பினைப் பெறுகின்றன. அவ்வாறு வாய்ப்புகளைப் பெற்றுள்ள வணிக வங்கிகள் எவ்விதக் கோட்பாடுகளைக் கடைப் பிடிப்பதன்வழி அவ்வாறு பணத்தை உற்பத்தி செய்கின்றன என்பதனையே கடனுக்க நுட்பச்செயல் முறை என்று கூறுகிறோம். இதனை ஒரு வங்கியை மட்டும் எடுத்துக்கொண்டு அதனடிப்படை யிலும், பல வங்கிகளின் நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டு அதன் அடிப்படையிலும் விளக்கலாம்.

கடனுக்கம் செய்வதனை ஒரு வங்கியின் நிலையைமட்டும் எடுத்துக்காட்டாகக்கொண்டு, அவ் வங்கி எவ்வாறு கடனுக்கம் செய்கின்றது என்பதனை விளக்கலாம்.

ஒரு நாட்டின் மைய வங்கி கூடுதலாக ரூ. 1000 மதிப்புள்ள நோய் நோட்டுகளை வெளியிடுவதாகக் கொள்வோம். அந்தத் தொகை முழுவதும் அந்த நாட்டிலுள்ள 'அ' என்னும் வங்கியில் வைப்பாகச் செலுத்தப்படுகின்றது. அந்த நாட்டிலுள்ள மரபுப்படி வங்கிகள் தங்கள் வைப்புத் தொகையில் 10 விழுக்காட்டினை ரொக்கமாகக்கொண்டு மீதித் தொகையினை முதலீடு செய் கின்றன. எனவே, 'அ' வங்கி அந்தக் கூடுதலாகக் கிடைக்கப் பெற்ற ரூ. 1000 வைப்புத் தொகையைக் கீழ்க்கண்டவாறு முதலீடு செய்கின்றது.

'அ' வங்கி

வைப்புத் தொகை	ரூ. 1000	ரொக்கம்	ரூ. 100
		முதலீடு	ரூ. 900
	1000		1000

இந்நிலையில் இந்த வங்கி ரூ. 1000-ஐ வாடிக்கைக்காரர் களுடைய தேவையைப் பூர்த்தி செய்வதற்காக ரொக்கமாகக் கொண்டு எஞ்சிய ரூ. 900-ஐ முதலீடு செய்யலாம். அவ்வாறு

முதலீடு செய்தால் அவ் வங்கிக்கு ரூ. 900-க்கான முதலீட்டின் மீதுதான் வருவாய் வரும். எனவே, அவ் வங்கி ரூ. 1000-யும் ரொக்கமாகக்கொண்டு அந்த 1000 ரூபாய்க்கான அளவிற்கு அதனுடைய முதலீட்டைப் பெருக்கிக் கொள்ளலாம். எடுத்துக் காட்டாக, அந்த வங்கி ரூ. 1000-ஐ ரொக்கமாகக்கொண்டால், மேலும் ரூ. 9000-க்குச் சமமான வைப்புகளைப் பெறலாம். அதற் குரிய அரசுப் பத்திரங்களை வாங்கி முதலீடு செய்யலாம். இவ்வாறு செய்வது இயலாததன்று. அரசுப் பத்திரங்களை விற்பனை செய்பவர் அதே வங்கியில் கணக்கு வைத்திருப்பாரேயானால் வங்கி எவ்விதச் சிக்கலுமின்றி அவரிடமுள்ள கணக்கில் ரூ. 9000 மதிப்புள்ள அரசுப் பத்திரங்களை வாங்கிக்கொண்டு அவருடைய கணக்கில் ரூ. 9000-தை வரவு வைத்து விடலாம். இந்நிலையில் வங்கி செய்யவேண்டியது கணக்கினைச் சரிக்கட்டுதலேயாகும். எடுத்துக்காட்டாக, வங்கி ரூ. 9000 மதிப்புடைய பத்திரங்களை இராமன் என்ற வாடிக்கைக்காரரிடமிருந்து வாங்குவதாகக் கொண்டால் 'அ' வங்கியின் இருப்புநிலைக்குறிப்புக் கீழ்க்கண்டவாறு அமையும் :

வைப்புத்தொகை	ரூ. 1000	ரொக்கம்	ரூ. 1000
இராமன் கணக்கு	ரூ. 9000	அரசுப் பத்திரங்கள்	ரூ. 9000
	10,000		10,000

பத்திரங்களை விற்ற இராமன், வங்கி செயல்புரியும் பகுதியிலேயே வசித்து, அதே வங்கியில் கணக்கு வைத்துக்கொண்டிருப்பாரேயானால், இவ்வாறு வங்கி கடனுக்கம் செய்து முதலீடு செய்வதனால் வங்கிக்கு எவ்வித இடையூறும் இருக்காது. ஆனால், பத்திரங்களை விற்ற நபர், நாட்டின் வேறு பகுதியில் குடியிருந்து அதன் காரணமாக அவர் வேறு வங்கியில் கணக்கு வைத்திருப்பாரேயானால், அந்நிலையில், அந்த வங்கி வாங்கிய பத்திரங்களுக்கான முழு மதிப்பினையும் அதாவது ரூ. 9000-த்தினையும் ரொக்கமாகச் செலுத்த வேண்டும். எனவே, 'வங்கி தன்னிடமுள்ள ரொட்டியைச் சாப்பிட்டுவிட்டு அதனை மீண்டும் வைத்துக்கொண்டிருக்க வேண்டுமென்று விரும்புவது இயலாதது ஆகும்'. அது போன்றே, வங்கி பத்திரங்களையும் வாங்கி, ரொக்கத்தினையும் வைத்துக்கொண்டிருக்க வேண்டுமென்பது இயலாதது. அந்த நிலையில் வங்கி சரியான இருப்புநிலைக் குறிப்பினையும் தயாரித்தல் முடியாது. எனவே, வங்கி இவ்வாறு முதலீடு செய்யும்

நோக்கத்தோடு பத்திரங்கள் வாங்குவதன்வழி, அதனிடமுள்ள முன்னதாகவே வைப்புத்தொகை செலுத்திய வாடிக்கைக்காரர்களுடைய தேவையைப் பூர்த்திசெய்யும் முகத்தான் வைத்துக் கொண்டிருக்கும் ரொக்கத்தை இழந்து அதன் வாயிலாக அது வாடிக்கைக்காரர்களுடைய நம்பிக்கையையும் இழக்க விரும்பாது.

இனி ஒன்றுக்கு மேற்பட்ட வங்கிமுறையில் கடனுக்கம் எவ்வாறு செய்யப்படுகிறது என்பதனைப்பற்றி விவரிப்போம்:

மேற்குறிப்பிட்டுள்ள முறைப்படி வங்கி ரூ. 1000 கூடுதலாகப் பெற்ற வைப்புத் தொகையின் அடிப்படையில் அதனுடைய முதலீட்டை ரூ. 9000-க்கு விரிவாக்க முடியாவிடினும் அத் தொகையில் 10 விழுக்காட்டினை வாடிக்கைக்காரருடைய தேவையினைப் பூர்த்திசெய்யும் வகையில் ரொக்கமாக வைத்துக்கொண்டு எஞ்சிய தொகையினை முதலீடு செய்வதில் எவ்வித இடையூறும் இருக்கமுடியாது. எனவே, கூடுதலாகப் பெற்ற ரூ. 1000 வைப்புத்தொகையில் ரூ. 100-ஐ ரொக்கமாக வைத்துக்கொண்டு எஞ்சிய 900-த்தினைப் பத்திரங்கள் வாங்குதல், கடன்கொடுத்தல் போன்ற முறைகளில் முதலீடு செய்யலாம். அவ்வாறு அந்த வங்கி ரூ. 100-ஐ ரொக்கமாகக் கொண்டு ரூ. 900-த்தை இராமன் என்னும் வாடிக்கைக்காரருக்குக் கடன் கொடுப்பதாகக் கொள்வோம். இந்நிலையில் 'அ' வங்கியின் இருப்புநிலைக்குறிப்பு கீழ்க்கண்டவாறு இருக்கும்:

'அ' வங்கி இருப்புநிலைக் குறிப்பு

வைப்புத்தொகை	ரூ. 1000	ரொக்கம்	ரூ. 100
		கடன்	ரூ. 900
	ரூ. 1000		ரூ. 1000

இராமன் தாம் பெற்ற கடன் தொகையினைக் கொண்டு அவரது நண்பர் சரவணனிடம் வேறு பண்டங்களை வாங்கிக் கொண்டு தாம் பெற்ற கடன் தொகையான ரூ. 900-ஐச் செலுத்துகிறார். அத் தொகையினைப் பெற்ற சரவணன் அதே வங்கியில் கணக்கு வைத்திருந்தால் அந்த வங்கிக்குக் கூடுதலாக வைப்பு கிடைக்கும், ஆனால், சரவணன் 'ஆ' என்ற வங்கியில் கணக்கு வைத்திருப்பாரேயானால் அவர் பெற்ற 900 ரூபாயினை 'ஆ'

வங்கியில் வைப்புத் தொகையாகச் செலுத்துவார். அந்நிலையில் 'ஆ' வங்கியின் இருப்புநிலைக் குறிப்பு கீழ்க்கண்டவாறு இருக்கும்.

'ஆ' வங்கி இருப்புநிலைக் குறிப்பு

வைப்புத்தொகை	ரூ. 900	ரொக்கம்	ரூ. 900
	ரூ. 900		ரூ. 900

'ஆ' வங்கி கூடுதல் வைப்புத் தொகையான ரூ. 900 முழுவதினையும் ரொக்கமாக வைத்துக்கொண்டிருப்பின் அதன் வாயிலாக வருவாய் ஈட்டமுடியாது என்பதுடன்கூட அது தேவையற்றதும் ஆகும். எனவே, அவ் வங்கி கூடுதல் வைப்புத்தொகையான ரூ. 900-த்தில் பத்து விழுக்காட்டுத் தொகையான ரூ. 90-ஐ மட்டும் ரொக்கமாக வைத்துக்கொண்டு எஞ்சிய தொகையான ரூ. 810-ஐ இராமலிங்கம் என்னும் வாடிக்கைக் காரரிடமிருந்து பத்திரங்களாக வாங்கி முதலீடு செய்வதாகக் கொள்வோம். இவ்வாறு முதலீடு செய்யும்போது வங்கி வாடிக்கைக் காரர்கள் விரும்பிப் பணம் கேட்கும்போது கொடுக்கும் நிலையிலுள்ளது என்பதுடன்கூட, ஒரு குறிப்பிட்ட தொகையினை முதலீடு செய்து வருவாய் ஈட்டும் நிலையினையும் பெறுகின்றது. அரசுப் பத்திரங்களை விற்றுப் பணத்தினைப் பெற்ற இராமலிங்கம், நிர்மலா என்பவரிடமிருந்து தம் மனைவிக்குத் தேவையான நகைகளை வாங்கிக்கொண்டு, தாம் வைத்துள்ள அல்லது தமது கணக்கிலுள்ள ரூ. 810-ச் செலுத்துகிறார். நிர்மலா 'ஆ' வங்கியில் கணக்கு வைத்திருந்தால், அவ் வங்கிக்கு வைப்புத் தொகை மேலும் கூடும். ஆனால், நிர்மலா 'இ' வங்கியில் கணக்கு வைத்திருப்பாரேயானால் 'இ' வங்கி கூடுதலாக 810 ரூபாய் வைப்புத் தொகையினைப் பெறுகிறது. இப்பொழுது 'இ' வங்கியின் இருப்பு நிலைக் குறிப்பு கீழ்க்கண்டவாறு இருக்கும்.

வைப்புத் தொகை	ரூ. 810	ரொக்கம்	ரூ. 810
	ரூ. 810		ரூ. 810

இந்நிலையில் 'இ' வங்கி கூடுதலாகப் பெற்ற ரூ. 810 வைப்புத்தொகை முழுவதையும் ரொக்கமாக வைத்திருக்கத் தேவையில்லை. எனவே, கூடுதலான வைப்புத் தொகையான ரூ. 810-ல் பத்து விழுக்காடான ரூ. 81-ஐ 'இ' வங்கி ரொக்கமாக வைத்துக்கொண்டு எஞ்சிய தொகையான ரூ. 729-ஐ முதலீடு செய்கிறது. அத் தொகையும் வேறு வங்கிக்கு வைப்புத் தொகையாகிவிடும். எனவே, இவ்வாறு 'அ' வங்கி பெற்ற வைப்புத் தொகை, 'ஆ' வங்கி பெற்ற கூடுதல் வைப்புத்தொகை, 'இ' வங்கி பெற்ற வைப்புத் தொகை எல்லாவற்றையும் ஒன்று சேர்த்தால் ஆரம்பத்தில் மைய வங்கியால் ரூ. 1000 கூடுதல் பணமாக வெளியிடப்பட்டு, அதன் வழியாக 'அ' வங்கி 'ஆ' வங்கி மற்றும் இதர வங்கிகள் பெற்ற கூடுதல் வைப்புத்தொகை கீழ்க்கண்டவாறு அமையும் :

ரூ. $1000 \times 900 + 810 \times 729$ ... ... $= 9999.999 =$ ரூ. 10,000.

எனவே, மேற்குறிப்பிட்ட எடுத்துக்காட்டின் மூலம், ஒரு தனிப்பட்ட வங்கி செய்ய முடியாததை வங்கிகள் எல்லாம் ஒன்று சேர்ந்த வங்கியியல் முறையினால் செய்யமுடியும் என்பது தெளிவாகிறது. வங்கிகள் மரபினடிப்படையிலோ, சட்டத்தின் அடிப்படையிலோ, அவற்றுடைய வைப்புத் தொகையில் 10 விழுக்காட்டினை ரொக்கமாகப் பெற்றிருக்க வேண்டுமென்ற நிலையில், அவை ஆரம்ப நிலையில் பெற்ற வைப்புத் தொகையைப் போன்று பத்து மடங்கு மொத்தமாக வைப்புத் தொகையினைக் கொண்டுள்ளன. அதாவது அவை மேலும் ஒன்பது மடங்கு வைப்புத் தொகையினைப் பெருக்கியுள்ளன என்று குறிப்பிடலாம். வங்கிகள் வைத்திருக்க வேண்டிய ரொக்கத் தொகையின் விழுக்காடு அதிகரிக்க அதிகரிக்க வங்கிகளுடைய பணம் உருவாக்கும் திறன் குறைகிறது. ரொக்கத் தொகையின் விழுக்காடு குறையக் குறைய, வங்கிகள் உருவாக்கும் பணத்தொகை கூடுதலாகின்றது. எனவே, வங்கிகள் வைத்திருக்கும் ரொக்கத் தொகைக்கும், அவை பெற்றிருக்கும் பணம் உற்பத்தித் திறனுக்கும் எதிர்மறையான உறவு உள்ளது என்று குறிப்பிடலாம்.

வங்கிகள் பெற்றுள்ள பணம் உற்பத்தித்திறனைக் கீழ்க்காணும் விதிமுறையின்படி விளக்கலாம்.

$$K = \frac{1}{r}$$

K = வைப்புப் பெருக்கு மடங்கு.

r = வங்கிகள் வைத்துள்ள ரொக்க விழுக்காடு.

$\Delta D = \Delta M \times K$ ΔD = கூடுதலாக்கப்படும் வைப்புத் தொகை, அதாவது வணிக வங்கிகளால் உற்பத்தி செய்யப் படும் பணமும், வங்கிகள் ஆரம் பத்தில் பெற்ற கூடுதல் வைப்புத் தொகையும் சேர்ந்தது.

ΔM = கூடுதலாக வெளியிடப்படும் பணம். அதாவது ஆரம்ப நிலையில் முதலாவது வங்கிபெற்ற கூடுதல் வைப்புத்தொகை.

இந்த விதிமுறையினைக் கீழ்க்கண்ட எடுத்துக்காட்டு மூலம் விளக்கலாம். ஒரு வங்கி ஆரம்பத்தில் ரூ. 1000 கூடுதலாக வைப்புத்தொகை பெறுவதாகக் கொள்வோம். அந்தப் பகுதியி லுள்ள எல்லா வங்கிகளும் வைப்புத் தொகையில் 10 விழுக் காட்டினை ரொக்கமாக வைத்திருந்தால் அதிகமாக வெளியிடப் பட்ட ரூ. 1000 அடிப்படையில் வங்கிகளில் மொத்தமாகக் கூடும் வைப்புத் தொகை :

$$\Delta D = \Delta M \times K$$

$$K = \frac{1}{r}$$

$$K = \frac{1}{\frac{10}{100}} = \frac{1}{\frac{1}{10}} = 10$$

$$\Delta D = \Delta M \times K = 1000 \times 10 = 10{,}000$$

அதாவது, கூடுதலாகக் கிடைக்கக்கூடிய மொத்த வைப்பு ரூ. 10,000 ஆகும். அதே நிலையில் வங்கிகள் ரொக்கமாக 50 விழுக்காடு பணம் வைத்திருக்க வேண்டிய நிலை இருக்குமாயின் அப்பொழுது மொத்த வைப்புத் தொகையானது கீழ்க்கண்டவாறு இருக்கும் :

$$K = \frac{1}{\frac{50}{100}} = 2$$

$$\Delta D = \Delta M \times R = 1000 \times 2 = \text{ரூ. } 2{,}000.$$

வங்கிகள் வைத்திருக்க வேண்டிய ரொக்க விழுக்காடு அதிகரிக்க அதிகரிக்க வைப்புத்தொகை பெருக்கு மடங்கு

குறைந்து, உருவாக்கப்படும் வைப்புத்தொகையின் அளவும் குறைகிறது. அதுபோலன்றி வங்கிகள் வைத்திருக்க வேண்டிய ரொக்க விழுக்காடு குறையக் குறைய, வைப்புத்தொகை பெருக்கு மடங்கு (Deposit Multiplies) அதிகரித்து வங்கிகள் உற்பத்தி செய்யும் பணத்தின் மதிப்பும் அதிகரிக்கிறது. இதனை மற்றோர் எடுத்துக்காட்டு மூலம் விளக்கலாம்,

மைய அரசு நாட்டை முன்னேற்றும் முகத்தான்வேண்டி ஒரு கோடி ரூபாய் செலவு செய்வதாகக் கொள்வோம். அதாவது நாட்டில் பணப்புழக்கம் மேலும் ஒரு கோடி ரூபாய்க்குக் கூடுகிறது. அந் நாட்டிலுள்ள வங்கிகள், வைப்புத் தொகையில் 10 விழுக் காட்டை ரொக்கமாக வைத்திருப்பதாகக் கொண்டால், ரூ. 1,00,00,000 பணம் வெளியிடப்பட்டதனால் அதிகரிக்கும் பணத்தின் மதிப்பு, அதாவது கூடுதலாக்கப்படும் வைப்புத் தொகையின் மதிப்பு :

$$\triangle D = \triangle M \times K$$

$$K = \frac{1}{\frac{10}{100}} = 10$$

$$\triangle M = 1,00,00,000$$

$$\therefore \quad \triangle D = 1,00,00,000 \times 10 = \text{ரூ. } 10,00,00,000$$

ஆகும்.

இதனையே, குறிக்கணக்கியல் (Algebra) அடிப்படையில் கீழ்க்காணும் முறையில் விளக்கலாம். மைய வங்கி 1000 ரூபாய் பணத்தைக் கூடுதலாகப் புழக்கத்தில் வெளியிடுவதாகக் கொண்டால் அதனால் அதிகரிக்கும் வைப்புத் தொகையின் மதிப்பு :

$$1,000 + 900 + 810 + \ldots \ldots \ldots$$

$$= 1000\left[1 + \frac{9}{10} \times \left(\frac{9}{10}\right)^2 + \left(\frac{9}{10}\right)^3 + \ldots\right]$$

$$= 1000\left(\frac{1}{1 - \frac{9}{10}}\right)$$

$$= 1000\left[\frac{1}{1/10}\right]$$

$$= 1000 \times 10$$

$$= \text{ரூ } 10.000$$

இந்த நிலையில் எல்லா வங்கிகளுடைய இருப்புநிலைக் குறிப்புகளையும் ஒன்றுசேர்த்து வரைந்தால் அதன் நிலைமை கீழ்வருமாறு இருக்கும்.

வைப்புகள்	ரூ. 10,000	ரொக்கம்	ரூ. 1,000
		கடன் முதலீடு	ரூ. 9,000
	ரூ. 10,000		ரூ. 10,000

இவ்வாறு பண விரிவாக்கம் ஏற்படும் நிலையில் எழும் முதல் வினா யார் அவ்வாறு பணத்தை உற்பத்தி செய்வது என்பதேயாகும். இவ்வாறு பணத்தை உற்பத்தி செய்வதற்கு நான்கு வகையானவர்கள் பொறுப்பாளியாகின்றனர். அவை வங்கி, கூடுதலாகப் பணத்தைப் புழக்கத்தில் வெளியிடுவதன் வாயிலாகவும், வங்கிகள் வைத்திருக்கவேண்டிய ரொக்கத்தினை நிர்ணயிப்பதன் மூலமாகவும், பொதுமக்கள் தங்களிடமுள்ள பணத்தை வங்கியில் வைப்புத்தொகையாகச் செலுத்துவதன் மூலமாகவும், வணிக வங்கிகள் வைப்புத்தொகையில் ஒரு பகுதியைமட்டும் ரொக்கமாக வைத்துக்கொண்டு எஞ்சிய பகுதியினை முதலீடு செய்ய விழைவதன் மூலமாகவும், பொதுமக்களும், தொழில் நிறுவனங்களும் வங்கிகளிடமிருந்து கடன் வாங்க முன்வருவதன் மூலமாகவும், கடன் உருவாக்கத்திற்கு ஒத்துழைக்கின்றனர்.

கடன் விரிவாக்கம் செய்ய அல்லது பணம் உற்பத்தி செய்ய வணிக வங்கிகள் உரிமைபெற்றிருப்பது போன்றே, ஒருசில சூழ்நிலைகள் அவை கடன் சுருக்கம், அல்லது வைப்புத்தொகை சுருக்கம் செய்யவேண்டிய அவசியமும் எழலாம். இதனைக் கீழ்க்காணும் எடுத்துக்காட்டு மூலம் விளக்கலாம்:

ஒரு நாட்டிலுள்ள வங்கிகள் ஒவ்வொன்றும் ரூ. 1,00,000 வைப்புத் தொகையாகப் பெற்றுள்ளதெனவும், அது வாடிக்கைக்காரர்கள் கொண்டுவரும் காசோலைக்குப் பணம் செலுத்தும் பொருட்டு ரொக்கமாக வைப்புத் தொகையில் 10 விழுக்காட்டினை வைத்துள்ளதென்றும் கொள்வோம். இந்நிலையில் ஒவ்வொரு வங்கியின் இருப்புநிலைக் குறிப்பும் கீழ்வருமாறு இருக்கும்:

வைப்புத்தொகை	ரூ. 1,00,000	ரொக்கம்	ரூ. 10,000
		கடன் முதலீடு	ரூ. 90,000
	ரூ. 1,00,000		ரூ. 1,00,000

இச் சந்தர்ப்பத்தில் மைய வங்கி ரூ. 1000 பெறுமானமுள்ள அரசுப் பத்திரங்களை விற்பதாகவும், அவற்றை 'அ' வங்கியில் கணக்கு வைத்துள்ள கல்யாணசுந்தரம் என்பவர் வாங்கி அதற்குரிய மதிப்பான ரூ. 1,000-ஐ தமது கணக்கிலிருந்து எடுத்துச் செலுத்திவிடுவதாகவும் கொள்வோம். இந்நிலையில் 'அ' வங்கியின் இருப்புநிலைக் குறிப்பு கீழ்வருமாறு அமையும்:

வைப்புத்தொகை	ரூ. 99,000	ரொக்கம்	ரூ. 9,000
		கடன், முதலீடு	ரூ. 90,000
	ரூ. 99,000		ரூ. 99,000

'அ' வங்கியைப் பொறுத்தவரை வைப்புத்தொகை ரூ. 1000-க்குக் குறைந்ததுடன், ரொக்கமும் ரூ. 1,000-க்குக் குறைந்துவிட்டது. ரூ. 99,000 மதிப்புக்குரிய வைப்புகளைக் கொண்ட 'அ' வங்கி அத் தொகையில் 10 விழுக்காட்டை அதாவது ரூ. 9,900 ரொக்கமாகப் பெற்றிருத்தல் வேண்டும். ஆனால், அவ் வங்கி ரூ. 9,000 மட்டுமே ரொக்கமாக வைத்துள்ளது. அத் தொகை வைப்புத்தொகையான ரூ. 99,000-த்தில் 10 விழுக்காட்டுக்குக் குறைவாக இருப்பதால் 'அ' வங்கி குறைவாக உள்ள ரூ. 900-க்கு மதிப்புடைய முதலீட்டினை ரொக்கமாக மாற்ற வேண்டும்.

அவ்வாறு அந்த வங்கி, அதனிடமுள்ள முதலீட்டினை மாற்றி ரூ. 900 பெறுகிறது. அவ்வாறு அது விற்ற பத்திரங்களை வாங்கிய நபர் 'ஆ' வங்கியில் தம்முடைய கணக்கிலிருந்து ரூ. 900-ஐ ரொக்கமாக எடுத்து 'அ' வங்கிக்குச் செலுத்தினால், 'அ' வங்கியின் இருப்பு நிலைக்குறிப்பும், 'ஆ' வங்கியின் இருப்பு நிலைக் குறிப்பும் கீழ் வருமாறு அமையும்:

'அ' வங்கி இருப்பு நிலைக்குறிப்பு

வைப்புத்தொகை	ரூ. 99,000	ரொக்கம்	ரூ. 9,900
		கடன், முதலீடு	ரூ. 89,100
	ரூ. 99,000		ரூ. 99,000

'அ' வங்கி அதனுடைய வைப்புத் தொகைக்கு ஏற்றவாறு ரொக்கத்திணைக் கொண்டுள்ளது. ஆனால், அதனுடைய வைப்புத் தொகையில் ரூ. 1000 குறைந்துள்ளது.

'ஆ' வங்கியின் இருப்பு நிலைக்குறிப்பு

வைப்புத்தொகை	ரூ. 99,100	ரொக்கம்	ரூ. 9,100
		கடன், முதலீடு	ரூ. 90,000
	ரூ. 99,100		ரூ. 99,100

'ஆ' வங்கி 99,100 ரூ. வைப்புத்தொகையினைப் பெற்றுள்ளதாதலின் அது அத் தொகையில் 10 விழுக்காடாவது ரொக்கமாகப் பெற்றிருத்தல் வேண்டும். அதாவது அவ் வங்கி 9,910 ரூபாயாவது ரொக்கம் வைத்திருத்தல் வேண்டும். ஆனால், அவ் வங்கி ரூ. 9,100 மதிப்புடைய ரொக்கத்திணைத்தான் பெற்றுள்ளது. எனவே, அது ரூ. 810 மதிப்புடைய முதலீட்டினை ரொக்கமாக மாற்றி நிலையைச் சரிசெய்து கொள்ளுகிறது. இப்பொழுது 'ஆ' வங்கியின் இருப்புநிலைக் குறிப்பு கீழ்க்குறிப்பிட்டுள்ளவாறு அமையும்.

'ஆ' வங்கி இருப்புநிலைக் குறிப்பு

வைப்புத்தொகை	ரூ. 99,100	ரொக்கம்	ரூ. 9,910
		கடன், முதலீடு	ரூ. 89,190
	ரூ. 99,100		ரூ. 99,100

மேற்குறிப்பிட்டுள்ள இருப்புநிலைக் குறிப்பின்படி 'ஆ' வங்கி தன்னுடைய ரொக்க நிலையைச் சரிசெய்து கொண்டாலும் அதனுடைய வைப்புத்தொகையில் ரூ. 900 குறைந்துள்ளது. 'ஆ' வங்கி அதனுடைய ரொக்க இருப்பை அதிகரித்துக் கொள்ளும்பொருட்டு விற்ற பத்திரங்களை 'இ' வங்கியில் கணக்கு வைத்துள்ள மகாலிங்கம் என்பவர் வாங்குவதாகக் கொள்வோம். அவர் தான் வாங்கிய ரூ. 810 மதிப்புடைய பத்திரங்களுக்காகத் தம்முடைய வங்கியிலிருந்து அத் தொகையை எடுத்து 'ஆ' வங்கிக்குச் செலுத்தியிருக்க வேண்டும். எனவே, 'இ' வங்கியின் இருப்புநிலைக் குறிப்பு கீழ்க்கண்டவாறு இருக்கும் :

'இ' வங்கி இருப்புநிலைக் குறிப்பு

வைப்புத்தொகை	ரூ. 99,190	ரொக்கம்	ரூ. 9,190
		முதலீடு, கடன்	ரூ. 90,000
	ரூ. 99,190		ரூ. 99,190

ரூபாய் 99,190-ஐ வைப்புத் தொகையாகப் பெற்றுள்ள வங்கி அதில் 10 விழுக்காட்டுப் பகுதியான ரூ. 9,919-ஐ ரொக்கமாகப் பெற்றிருக்க வேண்டும். ஆனால், அது ரூ. 9,190 தான் ரொக்கமாகப் பெற்றிருக்கிறதாதலின் இவ் வங்கி குறைவாக உள்ள ரூ. 729 மதிப்புடைய முதலீட்டினை ரொக்கமாக மாற்றுகிறது. இத் தொகைக்குச் சமமாக மற்றொரு வங்கியில் வைப்புத்தொகை குறைந்து அதனால் ஏற்படும் விளைவுகள் தொடர்கின்றன. எனவே, ஆரம்ப நிலையில் ரூ. 1000 மதிப்புடைய பணம், திரும்பப்பெறப் படுவதால் மொத்தமாகக் குறையும் வைப்புத்தொகையின் மதிப்பு $= 1000 + 900 + 810 + 729 + \ldots \ldots \ldots \ldots = 9999{\cdot}9999$ = ரூ. 10,000

வரையறைகள்
(Limitations)

வங்கிகள் கடனுக்கம் செய்வதுகுறித்து இருவகையான நேர் எதிர்மாறான கருத்துகளை இந்த அத்தியாயத்தின் ஆரம்பப் பகுதியிலேயே விளக்கினோம். வங்கிகள் பணம் உற்பத்திசெய்யும் திறன் பெற்றிருக்கவில்லை ; கூடுதல் பணம் வைத்திருப்போரையும் பணம் தேவைப்படுவோரையும் இணைக்கும் பாலமாகவே பணி புரிகின்றன என்பது ஒரு கருத்து. அதற்கு எதிராக, வங்கிகள்

தங்கள் எழுதுகோலினைக் கொண்டே எந்த அளவிற்கு வேண்டு மாயினும் பணம் உற்பத்திசெய்யும் திறமையும், வலிமையும் படைத்துள்ளன என்பது மற்றொரு கருத்து. இவ்விரு கருத்துகளும் மிகைப்படுத்தப்பட்டவை. வங்கிகள் கடன் வழங்கும் அதாவது பணம் உற்பத்தி செய்யும் திறமை படைத்துள்ளவை மட்டுமல்ல. அவை நடைமுறையில் பணம் உற்பத்தி செய்கின்றன வென்பதனை நடைமுறை எடுத்துக்காட்டு மூலம் இவ்வத்தியாயத்தின் இறுதியில் விளக்கிக்காட்டலாம். இருப்பினும், வங்கிகள் தங்கள் விருப்பப்படி எந்த அளவிற்கு வேண்டுமாயினும் பணத்தை உற்பத்திசெய்யும் திறமைகொண்டவை என்று கூறுதலும் முற்றும் தவருனதாகும். ஒரு வங்கி, பணத்தை உற்பத்திசெய்யும் நிலையில், அவ்வாறு உற்பத்தி செய்யப்படும் பணம், அவ் வங்கியினுடைய பொறுப்பை அதிகமாக்குகின்றது. வங்கிகள், தங்களுடைய பொறுப்புகளை அதிகரித்துக்கொள்ளும் நிலையில் மிகவும் எச்சரிக்கையுடன் இருத்தல் மிகவும் அவசியமாகும். எனவே, வங்கிகள் கடன் உற்பத்திசெய்வதில் கீழ்க்காணும் வரையறைகள் உள்ளனவென்று கூறலாம். அவையாவன :

(1) வங்கிகள் கடன் உற்பத்திசெய்யும் திறன், அவை ஒவ்வொன்றும் எந்த அளவிற்கு ரொக்கம் வைத்துக்கொண்டு செயல்படுகின்றன என்பதனைப் பொறுத்துள்ளது. வங்கிகள் பணம் உற்பத்திசெய்வதில் அவை மிக முக்கியமாகக் கவனிக்க வேண்டிய காரணி, 'K'. அதாவது ரொக்கத்திற்கும், வைப்புத் தொகைக்குமுள்ள விகிதமாகும். $K = 10$ ஆக இருப்பின். அதாவது ரொக்கத்திற்கும், வைப்புத் தொகைக்குமுள்ள விகிதம் 10 என்றிருந்தால், வைப்புத் தொகையைப்போல் பத்து மடங்கு வரை மொத்தமாக வங்கிகள் பணம் உற்பத்தி செய்கின்றன. ஆனால், அந்த விகிதம் 5 என்றுகிவிட்டால் வங்கிகள் ஐந்து மடங்கு வரைதான் பணம் உற்பத்தி செய்யமுடியும். இவ்வாறு ரொக்கத் தொகைக்கும், வைப்புத் தொகைக்குமுள்ள விகிதம் சட்ட முறைப்படியோ அல்லது வங்கிகளின் மரபினடிப்படையிலோ நிர்ணயிக்கப்படுகின்றதே தவிரத் தனிப்பட்ட வங்கியால் நிர்ணயிக்கப்படுவதில்லை. எனவே, இதுவே கடனுக்கத்தின் முதல் வரையறையாக அமைகிறது.

(2) வணிக வங்கிகள் தாங்கள் உற்பத்திசெய்யும் பணத்தில் ஒரு குறிப்பிட்ட விழுக்காட்டுப் பகுதியினைச் சட்ட முறைப் பணமாக, வைத்திருத்தல் அவசியமாகும். எவ்வளவு விழுக்காட்டுப் பகுதியினை அவ்வாறு வைத்துக்கொள்ள வேண்டுமென்பது மரபு வழியிலோ அல்லது சட்டப்படியோ நிர்ணயிக்கப்

படுகின்றது. அவ்வாறு வங்கிகளின் கடன் உற்பத்தித் திறனுக்கும் அல்லது பண உற்பத்தித் திறனுக்கும் நாட்டில் புழக்கத்திலுள்ள சட்ட முறைப் பணத்திற்கும் தொடர்பிருக்கின்றதெனினும் சட்ட முறைப் பணத்தினை வெளியிடுகின்ற உரிமை தனிப்பட்ட வணிக வங்கிகளிடமில்லை. இவ்வுரிமையினை ஒவ்வொரு நாட்டின் மைய வங்கியே பெற்றுள்ளது. எனவே, மைய வங்கி. அது வெளியிடும் சட்டமுறைப் பணத்தை அதிகரித்தால் வணிக வங்கிகளின் முதன்மை வைப்பு அதிகரித்து, அதன் வழியாக அவற்றுடைய கடனுற்பத்தி செய்யும் திறனும் அதிகரிக்கின்றது. அது போலன்றி மைய வங்கி வெளிச்சந்தை நடவடிக்கைகள் (Open Market Operations) மூலம், நாட்டிலுள்ள பணப் புழக்கத்தின் அளவினைக் குறைத்துவிட்டால், வங்கிகளின் பணம் உற்பத்தி செய்யும் திறனும் குறைகின்றது.

(3) வங்கிகள் கடனுற்பத்தி செய்வது. அவை அவ்வாறு உற்பத்திசெய்த கடனை (பணத்தை) முதலீடு செய்வதற்கான வாய்ப்புகளைப் பெற்றிருப்பதனையும் பொறுத்து அமைகின்றது. கிரௌதத்தர் (Crowther) என்ற வல்லுநர் குறிப்பிட்டது போன்று வங்கிகள், வெற்றிடத்திலிருந்து கடனுற்பத்தி செய்வதில்லை. அவை இதர வகையான சொத்துகளைப் பணமாக மாற்றுகின்றன. வைப்புகள் வங்கிகளின் பொறுப்புகளாகும். வங்கிகள் அப் பொறுப்புகளின் வழியாக இலாபம் ஈட்டுவதில்லை. சொத்துகளின் வழியாகவே வருவாய் ஈட்டுகின்றன. எனவே, எந்த அளவிற்கு அவை தங்களுடைய பொறுப்புகளைச் சொத்துகளாக மாற்றும் திறன் படைத்துள்ளனவோ அந்த அளவிற்கே அவை இலாபமீட்ட முடியும், தொடர்ந்து செயல்படவும் முடியும். பொதுவாக, பாதுகாப்பு கருதி, வங்கிகள் வெறும் வாக்குறுதிகளை மட்டும் நம்பிக் கடன் கொடுப்பதில்லை. உரிய பிணையங்களின் அடிப்படையிலேயே கடன்தர முன்வருகின்றன. எனவே, வங்கிகள் முதலீடு செய்வதற்கான வாய்ப்புகளைக் குறைவாகப் பெற்றிருப்பின் அவை குறைவாகவே பணம் உற்பத்தி செய்யமுடியும். அதுபோலன்றி, மிக அதிகமான அளவில் முதலீடு செய்யும் வாய்ப்புகளைப் பெற்றிருப்பின் அவை மிக அதிகமான அளவில் பணம் உற்பத்தி செய்யமுடியும்.

(4) வங்கிகளுடைய கடனுற்பத்தித் திறன், மக்களுடைய ரொக்க விருப்பத்தன்மையினையும் பொறுத்தமைகிறது. அதாவது பொதுமக்கள் எந்த அளவிற்கு, வணிக நடவடிக்கைகளுக்கு ரொக்கம் வைத்துக்கொள்ள விரும்புகின்றனர் என்பதனைப்

பொறுத்துள்ளது. பொதுமக்கள் நல்ல கல்வியறிவு கொண்டவர்களாகவிருந்து அவர்களுக்கிடையே வங்கிமுறை நன்கு கடைப்பிடிக்கப்பட்டு வருமேயானால், வங்கிகள் குறைந்த அளவு விழுக்காட்டு ரொக்கத் தொகையுடன் தொழில்புரியலாமாதலின் மிக அதிகமான அளவிற்குக் கடனுற்பத்தி செய்யமுடியும். அது போலன்றி, மக்கள் போதிய கல்வி அறிவின்றி நடவடிக்கைகளுக்குக் காசோலையினைப் பயன்படுத்தாது ரொக்கம் செலுத்தியே தங்களுக்குத் தேவையான பண்டங்களை வாங்குவார்களேயானால் வங்கிகள், குறைந்த அளவு கடனே உற்பத்தி செய்யமுடியும்.

(5) வங்கிகள், எல்லையற்ற கடனுற்பத்தி செய்யும் திறன் படைத்துள்ளவை, என்ற கருத்தினைத் தெரிவிப்பவர்கள், ஒரு முக்கிய தன்மையினைக் கருத்தில் கொள்வதில்லை. அவர்கள் நாட்டில் புழக்கத்திலுள்ள பணம் முழுவதும் வங்கிகளில் வைப்புத் தொகையாகச் செலுத்தப்படுகின்றது என்ற கருத்து கொண்டுள்ளனர். இக் கருத்து முற்றிலும் தவருனதாகும். மைய வங்கியால் கூடுதலாக வெளியிடப்படும் தொகை முழுவதும் புழக்கத்திற்குக் கொண்டுவரப்படுகின்றது என்று உறுதியாகக் கூறமுடியாது. சேயர்ஸ் என்ற வல்லுநருடைய கருத்துப்படி பல்வேறு நிலைகளிலும் 'பணமறைவு' ஏற்படலாம். அவ்வாறு ஏற்படும் பணமறைவு (Leakage) கடனுற்பத்தித்திறன் கணக்கிடும் போது கருதப்படுவதில்லை.

எடுத்துக்காட்டாக, மைய வங்கி 1,000-க்குரிய பணத்தைக் கூடுதலாகப் புழக்கத்திற்காக வெளியிடுவதாகக் கொள்வோம், அத் தொகை முழுவதும் 'அ' வங்கியில் வைப்புத் தொகையாகச் செலுத்தப்பட்டால் அவ் வங்கியின் இருப்புநிலைக் குறிப்பு கீழ்க் கண்டவாறு இருக்கும் :

'அ' வங்கி இருப்புநிலைக் குறிப்பு

வைப்புத்தொகை	ரூ. 1,000	ரொக்கம்	ரூ. 100
		கடன், முதலீடு	ரூ. 900
	ரூ. 1,000		ரூ. 1,000

'அ' வங்கி கூடுதலாகப்பெற்ற வைப்புத்தொகையான ரூ. 1,000-ல் ரூ. 900-ஐச் சரவணன் என்ற நபருக்குக் கடனுகக்

கொடுப்பதாகக் கொள்வோம், சரவணன் என்ற வாடிக்கைக் காரர், தாம். இராமலிங்கம் என்னும் வாடிக்கைக்காரரிடமிருந்து வாங்கிய அரசுப் பத்திரங்களுக்காக அத் தொகையினை அவருக்குச் செலுத்திவிடுவதாகவும், இராமலிங்கம் 'ஆ' வங்கியில் கணக்கு வைத்துள்ளதாகவும் கொள்வோம். வங்கிகள் வரையறையற்ற கடனுற்பத்தி செய்யும் திறன் பெற்றுள்ளன என்ற கருத்தினை வலியுறுத்துபவர்கள், இராமலிங்கம் தாம்பெற்ற பணமான ரூ. 900-ஐ அப்படியே அவருடைய வங்கியில் வைப்பாகச் செலுத்துவதாகக் கருதுகின்றனர். ஆனால், நடைமுறையில் அவ்வாறு நடைபெறுவதில்லை. இராமலிங்கம் ரூ. 900-ல், ஒரு குறிப்பிட்ட தொகையினை எதிர்பாராவிதமாக ஏற்படும் செலவுத் தொகைக்காக எச்சரிக்கையுடன் ரொக்கமாகக் கையில் வைத்துக் கொண்டு எஞ்சிய தொகையினைமட்டுமே வங்கியில் தமது கணக்கில் வைப்புத் தொகையாகச் செலுத்துகிறார். இவ்வாறு ஏற்படும் 'பண மறைவு' ஒவ்வொரு நிலையிலும் ஏற்படுகிறது. ஆனால், வங்கிகளுடைய கடனுக்கம் செய்யும் திறனைக் கணக்கிடும் போது சுருக்கமாக $\triangle D = \triangle M \times K$ என்று கூறுகிறோமே தவிர $\triangle M$-ல் எவ்வளவு பண மறைவு ஏற்படுகிறது என்று கருதுவதில்லை.

பண மறைவு ஏற்படுவது பண்டங்களின் விலைவாசிகளுடைய நிலையினையும், அரசுக்கோட்பாடுகளையும், பொதுமக்களுடைய மனநிலையையும், அவர்கள் வங்கி நடவடிக்கைகளில் கொண்டுள்ள நம்பிக்கையையும் பொறுத்துள்ளது.

(6) வங்கியில் தொழில் முன்னேற்றமடைந்துள்ள பல நாடுகள், வங்கிகளுடைய மூலதனத்திற்கும், அவற்றுடைய வைப்புத் தொகைக்குமுள்ள விகிதத்தினை நிர்ணயித்துச் சட்டங்கள் இயற்றியுள்ளன. எனவே, வங்கிகள் வைப்புத் தொகையினைப் பெருக்கிக்கொள்ள வேண்டுமேயானால் அவை தங்கள் மூலதனத்தைக் கூடுதலாக்கிக் கொள்ளவேண்டும். எனவே, இத்தகைய சட்டங்கள் வங்கிகள் கடனுக்கம் செய்யும் ஆற்றலை மறைமுகமாகக் கட்டுப்படுத்த முனைகின்றன.

(7) வங்கிகள் உற்பத்தி செய்யும் கடனுக்கான தேவை வாணிபச்சுழல் நிலையினையும் (Trade cycle) பொறுத்துள்ளது. நாட்டில் செழிப்புநிலை நிலவி, தொழில் விரிவடைந்துள்ள நிலையில், மக்கள் அதிகமான அளவு பண்டங்களை வாங்கி நுகர முயலுவர். எனவே, வங்கிகள் உற்பத்தி செய்யும் பணத்தைப் பெறப் பொது மக்கள் முன்வருவர். வங்கிகளும் கடனுக்கம் செய்வதற்கான வாய்ப்புகளையும் பெறுகின்றன. ஆனால், நாட்டில் பொருளாதார

நிலையில் மந்தம் நிலவுமானால், பொருளாதார நடவடிக்கைகள் சுருங்கி இருக்கும். மக்கள் பண்டங்களை வாங்க விழைவதில்லை. எனவே, வங்கிகளும் கடனுற்பத்தி செய்வதற்கான அவசியமும் குறைகிறது. மேலும், பொருளாதார மந்த நிலையில் பொதுவான விலைவாசி நிலை குறைவாக இருப்பதால், வங்கிகள், வாடிக்கைக் காரர்களுடைய நிதி நிலையினை நன்கு அறிந்துகொள்வது சிரமமென்பதுடன்கூட, அவர்களுடைய திருப்பிக் கடனைச் செலுத்தும் நிலை குறித்தும் அவற்றிற்கு நம்பிக்கை ஏற்படு வதில்லை. எனவே, வங்கிகள் பொதுவாக இதுபோன்ற சந்தர்ப் பங்களில் கடன் கொடுப்பதனைத் தவிர்க்கவே விழைகின்றன.

(8) வங்கிகள், வாடிக்கைக்காரர்கள் கேட்கும்போது பணம் கொடுத்துச் செம்மையான முறையில் செயல்படும் வகையில், அவை மொத்த வைப்புத்தொகையில் ஒரு குறிப்பிட்ட விழுக்காட்டை ரொக்கமாக வைத்திருக்க வேண்டுமென ஒருசில நாடுகளில் சட்டங்கள் இயற்றப்பட்டிருக்கின்றன. இங்கிலாந்து போன்ற நாடுகளில். வைப்புத்தொகைக்கும், ரொக்கத்திற்குமுள்ள விகிதம் மரபினடிப்படையில் நிர்ணயிக்கப்படுகிறது. அவ்வாறு சட்டத்தின் அடிப்படையிலோ அல்லது மரபினடிப்படையிலோ நிர்ணயிக்கப்படும் ரொக்க விகிதம் குறைவாக இருக்குமேயானால் வங்கிகள் கடனுக்கம் செய்யும் திறன் மிகுதியாக இருக்கும். அதுபோலன்றி நிர்ணயிக்கப்படும் ரொக்கவிகிதம் கூடுதலாக இருக்குமேயானால், அந்நிலையில் வங்கிகளுடைய கடனுக்கம் செய்யும் திறன் குறைவாகவே இருக்கும். எடுத்துக்காட்டாக, இங்கிலாந்து நாட்டில், வணிக வங்கி ஒவ்வொன்றும் அதனுடைய வைப்புத் தொகையில் 8 விழுக்காட்டிற்குக் குறையாது ரொக்கமாக வைத்திருத்தல் வேண்டுமென்று மரபினடிப்படையில் நிர்ண யிக்கப்பட்டுள்ளது. இந்தியாவைப் பொறுத்தவரை வணிக வங்கிகளுடைய நடப்பு வைப்பு, நிலைவைப்பு ஆகிய இரண்டையும் சேர்த்து மொத்தத்தில் 3 விழுக்காட்டிற்குக் குறையாது, 15 விழுக்காட்டுக்கு மிகாது. ரிசர்வ் வங்கியில் நிர்ணயிக்கப்படுகின்ற அளவிற்கு ஒவ்வொரு வணிக வங்கியும் வைப்பாக ரிசர்வ் வங்கியில் வைத்திருக்க வேண்டும். இன்றைய நிலைப்படி ஒவ்வொரு வணிக வங்கியும் அதனுடைய வைப்புத் தொகையில் 5 விழுக்காட்டிற்குக் குறையாத தொகையினை வைப்புத்தொகை யாக ரிசர்வ் வங்கியில் செலுத்தி இருத்தல் வேண்டும்.

(9) வணிக வங்கிகள் கடனுக்கம் செய்தல், அந்நாட்டின் மைய வங்கி கடைப்பிடிக்கும் நிதிக் கொள்கையினையும் பொறுத் துள்ளது. மைய வங்கி நாட்டிலுள்ள பணப் புழக்கத்தைக் கட்டுப்

படுத்த விரும்பினால், அது தன்னிடமுள்ள பல்வேறு உரிமைகளைக் கொண்டு பணப் புழக்கத்தினை நேரிடையாகவோ அல்லது மறை முகமாகவோ கட்டுப்படுத்த முடியும். அவ்வாறு மைய வங்கி பணப் புழக்கத்தினைக் கட்டுப்படுத்தும் நிலையில் வணிக வங்கி களுடைய பணம் உற்பத்தி செய்யும் திறன், இயல்பாகவே கட்டுப் படுத்தப்படுகின்றது.

(10) வங்கிகள் கடனுற்பத்தி செய்யும் திறனை நிர்ணயிப் பதில் அந்நாட்டிலுள்ள தீர்வகங்களும் (Clearing Houses) அங்கம் வகிக்கின்றன. தீர்வகங்கள் சிறப்பாகச் செயல்பட்டால், நாட்டி லுள்ள வணிக வங்கிகள் அதிகமான அளவிற்குக் கடனுற்பத்தி செய்யும் திறனைப் பெறுகின்றன. அவ்வாறு தீர்வகங்கள் சிறப்பாகச் செயல்படாது, வணிக வங்கிகள் தங்களுக்கிடையே யுள்ள கணக்குகளைப் பணத்தைக் கொடுப்பதன் வழியும், அதனைப் பெறுவதன் வழியும் தீர்க்கும் நிலையில் இருப்பின், வங்கிகள் மிகக் கூடுதலான விழுக்காட்டில் ரொக்கம் வைத்திருக்க வேண்டியிருப் பதால் அவற்றுடைய கடன் உற்பத்தி செய்யும் திறன் குறை கின்றது.

(11) ஒரு நாட்டிலுள்ள வங்கிகளுடைய கடனுற்பத்தி செய்யும் திறனுக்கும், அந்நாட்டினுடைய பணச் சந்தையின் வளர்ச்சிக்கும் நேரடித் தொடர்புள்ளது. ஒரு நாட்டின் பணச் சந்தை நன்கு வளர்ச்சிபெற்றுத் தேவையான பல பிரிவுகளைக் கொண்டு அமைந்திருப்பின், அந்நாட்டிலுள்ள வணிக வங்கி களுடைய கடனுற்பத்தி செய்யும் திறன் கூடுதலாகவே இருக்கும். அதுபோலன்றி, அந்நாட்டினுடைய பணச்சந்தை வளர்ச்சி பெறுமலும், தேவையான பிரிவுகளைக் கொண்டிராமலும், அல்லது அதனுடைய பிரிவுகளுக்கிடையே சீரிய தொடர்பில்லாது இருப்பினும், அந்நாட்டிலுள்ள வணிக வங்கிகளின் கடனுக்கம் செய்யும் திறன் குறைவாகவே இருக்கும்.

(12) வங்கிகள் கடனுக்கம் செய்தல் பொதுமக்கள் வங்கி களிடத்து எந்த அளவிற்கு நம்பிக்கை கொண்டுள்ளனர் என்ப தனையும் பொறுத்துள்ளது. பொதுமக்கள் வங்கிகளின்மீது நல்ல நம்பிக்கை கொண்டு நடவடிக்கைகளில் ஈடுபடுவார்களேயானால், வங்கிகள், குறைந்த ரொக்கத்துடன் தொழில்புரிந்து அதிக அளவில் கடனுக்கம் செய்யமுடியும். அதுபோலன்றி வங்கிக ளிடத்து மக்கள் நம்பிக்கை இழந்து செயல்படும் நிலையில் வங்கி களுடைய கடனுக்கம் செய்யும் திறன் குறைகிறது.

(13) ஒரு வங்கி கடனுக்கம் செய்யும் திறன், அந் நாட்டிலுள்ள இதர வங்கிகள் கடனுக்கம் செய்தலையும் பொறுத்து அமையும். இதர வங்கிகள், அதிக விழுக்காட்டு ரொக்கத்தினைக் கொண்டு குறைந்த அளவில் கடனுற்பத்தி செய்யும் நிலையில் ஒரு வங்கி மட்டும் குறைந்த விழுக்காட்டு ரொக்கத்தினை வைத்துக் கொண்டு அதிக அளவில் கடனுற்பத்தி செய்தல் இயலாது. அவ்வாறு அந்த வங்கி செய்தால், அது காலக்கெடுவில் வாடிக்கைக் காரர்களுடைய நம்பிக்கையை இழந்து, தனது தொழிலை மூடிவிட வேண்டிய நிலையைக்கூட எய்தலாம்.

எட்வின் கேனன் (Edwin Cannan), டாக்டர் வால்டர் லீப் (Dr. Walter Leaf) ஆகிய எழுத்தாளர்கள், வங்கிகள் கடனுக்கம் செய்யும் திறன் பெற்றிருக்கவில்லை என்றும் அவை கடனுற்பத்தி செய்கின்றன எனக் குறிப்பிடுவது தவறு என்றும் குறிப்பிட்டு, கீழ்க்கண்ட தங்களது கருத்துகளைத் தெரிவித்துள்ளனர்,

(1) வங்கிகள் கடனுக்கம் செய்யும் திறன் பெற்றுக் கடனுற்பத்தியில் ஈடுபட்டுள்ளனவென்பதனை ஏற்றுக்கொண்டாலும், அவ்வாறு வங்கிகள் கடனுற்பத்தி செய்வதற்கு, அவை பொறுப்பாளிகள் என்று கூறுதல் தவருகும். அவை கடனுக்கம் செய்ததற்கு, அவற்றிடம் வைப்புத்தொகை செலுத்தும் வாடிக்கைக்காரர்களே பொறுப்பாளியாவர். வாடிக்கைக்காரர்கள், தாங்கள் செலுத்திய முழு வைப்புத் தொகையினையும் வங்கியிடமிருந்து திரும்பப் பெறுவார்களேயானால் வங்கி கடனுக்கம் செய்ய முடியாது. அவ்வாறு வாடிக்கைக்காரர்கள் தங்களுடைய பணத்தை வங்கியிடம் விட்டுவைப்பதன் அடிப்படையிலேயே வங்கி கடனுக்கம் செய்ய முடிகிறது. எனவே, கடனுக்கம் செய்யப் பொறுப்பாளிகளாக இருப்பவர்கள் வாடிக்கைக்காரர்களே தவிர வங்கிகள் அல்ல என்பது அவர்களுடைய முதலாவது கருத்தாகும்.

(2) வங்கிகள் வைப்புகளை உருவாக்கி அதன்மூலம் வாடிக்கைக்காரர்களுக்குக் கடன் வழங்கினால் அக்கடன் தொகையை வாடிக்கைக்காரர்களும் எப்பொழுது வேண்டுமாயினும் வங்கியிடமிருந்து பெறலாமாதலின், கடனுக்கம் செய்த ஒவ்வொரு வங்கியும் 100 விழுக்காட்டு ரொக்கத்தினைப் பெற்றிருத்தல் வேண்டும். எடுத்துக்காட்டாக, ஒரு வங்கி தனது வைப்புத்தொகையில் 10 விழுக்காட்டை ரொக்கமாக வைத்துக்கொண்டிருக்கும் நிலையில் அது கூடுதலாக ரூ. 10 வைப்புத்தொகையாகப் பெறுவதாகக் கொள்வோம். கடனுக்கக் கோட்பாட்டின்படி இந்நிலையில அவ் வங்கி விரும்பினால் அந்த ரூ 10 ரொக்கத்தினை அடிப்படையாகக்

கொண்டு ரூ. 100 வரை வைப்புத்தொகை கொண்டிருக்கலாம். அதன்படி அவ் வங்கி மேலும் ரூ. 90-க்கு வைப்புத்தொகை உருவாக்கி அதனை வாடிக்கைக்காரர்களுக்குக் கடனுக வழங்கினால் அவ் வாடிக்கைக்காரர்கள் அந்தக் கடன் தொகையினை வங்கியிடமிருந்து ரொக்கமாகப்பெற விழைவார்களேயானால் அது கூடுதலாகப்பெற்ற முதன்மை வைப்புத்தொகையான ரூ. 10ஐச் செலுத்தவேண்டியிருப்பதுடன்கூட முன்னரே பெற்ற முதன்மை வைப்புத்தொகைகளில் ரூ. 90ஐயும் இழக்க நேரிடும். இந்நிலையினை எய்த, எந்த வங்கியும் விரும்பாது. எனவே, வங்கிகள் கடனுக்கம் செய்யும் திறன் பெற்றுள்ளனவென்பது தவறு. எந்த ஒரு வங்கியும் தன்னிடமுள்ள ரொக்கத்திற்குமேல் கடன் கொடுத்தல் இயலாதது என்பது அடுத்த கருத்தாகும்.

(3) எட்வின் கேனன் (Edwin Cannan) கருத்துப்படி, வங்கி வாடிக்கைக்காரர்களுக்குக் கடன் கொடுப்பதன் காரணம், அது, தன்னிடம் வைப்புத்தொகை செலுத்திய எல்லா வாடிக்கைக்காரர்களும் ஒரே நேரத்தில் பணத்தைத் திரும்பப்பெற விழையமாட்டார்கள் என்று அறிந்துவைத்திருப்பதே. எனவே, இவ்வாறு வங்கி கடன் கொடுப்பதனால் அது பணத்தை உற்பத்தி செய்யும் திறன் படைத்துள்ளது என்று கூறுதல் தவருகும். அவரது கூற்றுப்படி வங்கிக்கும் பயணமூட்டை அறைமுகவருக்கும் (Cloak Room Agent) எவ்வித வேறுபாடுமில்லை. இதனை அவர் கீழ்க்காணும் எடுத்துக்காட்டு மூலம் விளக்குகிறார். ஓர் இசைக் கச்சேரியினைக் கேட்டு ரசிக்க நூறு நபர்கள் வருகின்றனரெனக் கொள்வோம். அவர்கள் நூறுபேரும் குடையுடன் வருகின்றனர். அவர்கள் தாங்கள் கொண்டுவந்த குடைகளைப் பயணமூட்டை அறையில், முகவரிடம் ஒப்படைத்துவிட்டு, கச்சேரி கேட்கச் சென்றுவிடுகின்றனர். அந்த முகவர், தமது செயலறிவின் அடிப்படையில் கச்சேரி நடைபெறும்போது 10 நபர்கள்தாம் வெளியில் வந்து குடைகளை வாங்கிச்செல்வர் என அறிந்துகொண்டு, இசை நிகழ்ச்சி நடக்கும் நேரத்தில் பத்துக் குடைகளை மட்டும் வைத்துக் கொண்டு இதர 90 குடைகளையும் பல நபர்களுக்கு வாடகைக்கு விட்டுத் திரும்பப் பெற்றுரேயானால் அந்த முகவர் கூடுதலாகக் குடைகளை உற்பத்தி செய்துவிட்டார் என்று கூறுதல் தவருகும். இதனைப்போன்றே வங்கிகள் பணம் உற்பத்தி செய்யும் திறன் பெற்றுள்ளன என்று கூறுதலும் தவறு என்பது எட்வின் கருத்தாகும்.

வால்டர் லீப், எட்வின் கேனன் ஆகியோர் கருத்துகளைக் கருத்தியலின் அடிப்படையிலும், நடைமுறைச் செயல்கள் அடிப்

படையிலும் மறுத்துக்காட்டி வங்கிகள் கடனுக்கம் செய்யும் திறன் பெற்றுள்ளன என்பது மட்டுமல்ல, கடனுற்பத்தியிலும் ஈடுபட்டுள்ளன என்பதை மெய்ப்பிக்கலாமெனக் கிரௌத்தர் (Crowther) என்ற ஆசிரியர் கூறுகிறார்.

முதலாவது கருத்தை எடுத்துக்கொள்வோம். வங்கியில் வைப்புத்தொகையினைச் செலுத்தும் வாடிக்கைக்காரர் பணத்தை வங்கியில் செலுத்துகிறாரே தவிர, அவர் அத் தொகையினை வங்கி முதலீடு செய்ய வேண்டுமென்றோ அல்லது வைப்புத்தொகையில் வங்கி 10 விழுக்காடு அல்லது 15 விழுக்காடு மட்டும் ரொக்கம் வைத்திருக்க வேண்டுமென்றோ குறிப்பிடுவதில்லை. வங்கி ஒவ்வொன்றும் எவ்வளவு விழுக்காடு ரொக்கம் வைத்திருக்க வேண்டுமென்று அதுவாகவேதான் நிர்ணயிக்கிறது. எனவே, கடனுக்கம் செய்வதற்கு வாடிக்கைக்காரர்கள்தாம் பொறுப்பு என்பது அவ்வளவு ஏற்றுக்கொள்ளத் தக்கதாக அமையவில்லை.

மேலும், முடிவு செய்யப்படவேண்டிய பிரச்சினை வங்கிகள் கடன் உற்பத்தி செய்யும் திறன் பெற்றுள்ளனவா இல்லையா என்பதே தவிர, அவை கடன் உற்பத்தி செய்வதற்கு வங்கிகள் பொறுப்பா அல்லது வாடிக்கைக்காரர்கள் பொறுப்பா என்பதல்ல. மேற்குறிப்பிட்ட இரு ஆசிரியர்கள் குறிப்பிடுவதை, அதாவது வங்கிகள் கடனுற்பத்தி செய்வதற்கு வாடிக்கைக்காரர்கள்தாம் பொறுப்பு என்பதை ஏற்றுக்கொண்டாலும், வங்கிகள் கடனுற்பத்தி செய்கின்றன என்ற உண்மையை மறுப்பதற்கில்லை. எனவே, அவர்கள் கூற்றுப்படி நோக்கினும் வங்கிகள் கடனுற்பத்தி செய்வதில் ஈடுபட்டுள்ளன என்பது விளங்கும்.

இரண்டாவது கருத்து, தனித்ததொரு வங்கியினை மட்டும் எடுத்துக்கொண்டால் அது ஏற்றுக் கொள்ளத்தக்கதாக அமையும். வங்கிகள் முழுவதையும் ஒன்று சேர்த்து, கடனுக்கத் திட்டத்தினை விளக்கினால் இக்கருத்தும் தவறு என்பது நன்கு விளங்கும். எடுத்துக்காட்டாக ரூ 10 கூடுதலாகப் பெற்ற ஒரு வங்கி அத் தொகையினை அடிப்படையாகக்கொண்டு மேலும் ரூ 90-க்கு வைப்புத்தொகை உருவாக்கினால், அந்நிலையில் அவ் வங்கி மேலும் ரூ 9ஐ ரொக்கமாகச் செலுத்தவேண்டிய நிலை ஏற்படலாம். ஆனால், அதே வங்கி கூடுதலாகப் பெற்ற வைப்புத் தொகை ரூ. 10-ல் 10 விழுக்காட்டினை அதாவது ரூ. ஒன்றை ரொக்கமாக வைத்துக்கொண்டு எஞ்சிய ரூ. 9 ஐ முதலீடு செய்வதில் எவ்விதப் பிரச்சினையும் இருத்தல் முடியாது. அவ்வாறு முதல் வங்கியால் முதலீடு செய்யப்பட்ட ரூ. 9 இரண்டாவது

வங்கியில் வைப்புத் தொகையாகச் செலுத்தப்பட்டு அதில் ஒரு பகுதி மீண்டும் மூன்றுவது வங்கியில் வைப்புத் தொகையாகச் செலுத்தப்படுகிறது. இந்நிலை தொடர்ந்து மொத்த வைப்புத் தொகை $10 + 9 + 8 + 7 \ldots \ldots = 100$ ரூ. 100 அடைகிறது. எனவே, வங்கிகள் முழுவதையும் எடுத்துக்கொண்டால் இக் கருத்தும் தவறு என்பது விளங்கும்.

மூன்றுவது கருத்து ஓர் எடுத்துக்காட்டுடன் விளக்கப்பட்டுள்ளதால் மேலெழுந்தவாரியாக நோக்குமிடத்து இது சரியான தாகத் தோன்றும். ஏனெனில், வங்கிகள் பணம் உற்பத்தி செய்வதைப் போன்றே பயணமூட்டை அறை முகவரும் குடைகளை வாடகைக்கு விடுகிறார். ஆனால், அவர் குடைகளை உற்பத்தி செய்யவில்லை. அதுபோன்றே வங்கிகளும் பணம் உற்பத்தி செய்யவில்லை என்பதே மேலே குறிப்பிட்டுள்ள இரண்டு ஆசிரியர்களுடைய கருத்துகளாகும். இக் கருத்திணைக் கருத்தியல் அடிப்படையில் விளக்கி இது தவறென மெய்ப்பிப்பதை விட நடைமுறையினடிப்படையில் விளக்கி இது தவறென எளிதில் மெய்ப்பிக்கலாம். ஒரு நாட்டினுடைய மைய வங்கியின் இருப்புநிலைக் குறிப்பைப் பகுப்பாய்வு செய்தால், அதனால் வெளியிடப்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ள பணத்தின் மதிப்பு அந்த நாட்டின் வணிக வங்கிகளுடைய மொத்த வைப்புத்தொகையில் மூன்றில் ஒரு பங்காகவே இருக்கும். எடுத்துக்காட்டாக இந்தியாவில் 1971—72ல் புழக்கத்திலிருந்த பணம், நாணயங்கள் உட்பட ரூ. 4,80,883 இலட்சமாகும். அதாவது அந்த அளவிற்கே மைய வங்கியும், மத்திய அரசும் சேர்ந்து பணம் வெளியிட்டுள்ளன. ஆனால், அந்த ஆண்டு இந்திய வணிக வங்கிகளுடைய வைப்புகளின் மொத்த மதிப்பு ரூ. 12,29,901 இலட்சம் ஆகும். கூடுதலாக உள்ள ரூ. 7,49,018 இலட்சம் மதிப்புடைய பணம் வணிக வங்கிகளால் உருவாக்கப்பட்டது என்பது தெளிவாக விளங்கும்.

எனவே, வங்கிகள், தங்கு தடையின்றிக் கடனுக்கும் உரிமை படைத்துள்ளன என்ற கருத்தும், வங்கிகள் கடனுக்கம் செய்யும் திறன் படைத்தவை அல்ல, வைப்பாளர்களையும் (Depositors) கடன் வாங்க விழைவோரையும் இணைக்கும் பாலமாக மட்டும்தான் செயல்படுகின்றன என்ற கருத்தும் தவருனதாகும். வங்கிகள் கடனுக்கம் செய்யும் திறன் படைத்துள்ளன. இத் திறனில்லையேல் பொருளாதார நடவடிக்கைகள் நிலைத்து நின்றுவிடும். அதே சமயத்தில் இத் திறன் கட்டுப்பாடற்றதன்று. கட்டுப்பாடில்லையேல் பணப்பெருக்கம் ஏற்பட்டு நாட்டின் பொருளாதார நிலை

சீர்குலைந்துவிடும். எனவே, வங்கிகள் கடனுக்கும் திறனுக்கும் தாங்களாகவே கட்டுப்பாட்டுடன் பயன்படுத்துகின்றன. ஒருசில சந்தர்ப்பங்களில் அவை அக்கட்டுப்பாட்டை மீறினால் அவற்றைக் கட்டுப்படுத்தும் திறன் அந்த நாட்டின் மைய வங்கி பெற்றுள்ளது.

வினாக்கள்

(1) வங்கிகள் கடனுக்கம் செய்வதற்குரிய வாய்ப்புகள் யாவை?

(2) வணிக வங்கி கடனுற்பத்தி செய்யும் நுட்பச் செயல் முறையினை விளக்குக.

(3) வங்கிகள் கடனுற்பத்தி செய்வதனை விளக்கும் விதி முறைகளை விவரிக்க.

(4) 'வங்கிகள் பணத்தில் வாணிபம் செய்பவை மட்டு மல்ல, ஒருவகையில் பணத்தை உற்பத்தி செய்பவையும் கூட' — என்ற சேயர்ஸ் கருத்தை விளக்குக.

(5) 'வங்கிகள் எவ்விதக் கட்டுப்பாடுமின்றித் தங்கள் எழுதுகோலினைக் கொண்டே எத்தனை அளவுக்கு வேண்டுமாயினும் பணம் உற்பத்தி செய்யும் திறனுடை யவை.' 'வங்கிகள் பணம் உற்பத்தி செய்வதில்லை; வைப்பாளர்களிடமிருந்து பெற்ற வைப்புத் தொகைக்கு மேல் முதலீடு செய்தல் இயலாது'— இவ்விரண்டு கூற்றுகளையும் பொருந்தச்செய்க.

(6) 'கடன் சுருக்கம்' என்றால் என்ன? அதனுடைய கோட்பாடுகள் யாவை?

(7) கடனுக்கத்தின் வரையறைகளை விவரிக்க.

(8) 'பண மறைவு' கடனுற்பத்தியினை எவ்வாறு பாதிக்கிறது என்று சேயர்ஸ் விளக்குகிறார்?

(9) கடனுற்பத்தி குறித்த வால்டர் லீப், எட்வின் கேனன் ஆகியோருடைய கருத்துகளை விளக்குக.

6. வணிக வங்கிகளின் அமைப்பு முறை

வங்கிகளின் அமைப்புமுறை எல்லா நாடுகளிலும் ஒருதன்மைப் பட்டுத் திகழ்வதில்லை, நாட்டிற்கு நாடு அதனுடைய அரசியல் நிலை, பொருளாதார அமைப்பு, தொழில் வளர்ச்சி ஆகிய தன்மைகளின் அடிப்படையில் மாறுபடுகின்றது. பொதுவாக வங்கிகளை, அவற்றின் அமைப்பு, செயல்படும் முறை ஆகியவற்றினடிப்படையில் இரண்டு வகைகளாகப் பிரிக்கலாம். முதலாவது வகை இங்கிலாந்து முறையினையொட்டி வளர்ந்துள்ள கிளை வங்கி முறையாகும் (Branch Banking). இரண்டாவது வகை அமெரிக்க வங்கி முறையை யொட்டி வளர்ந்துள்ள தனி வங்கி முறையாகும் (Unit Banking). ஆரம்பநிலையில், இங்கிலாந்து நாட்டிலும் ஒவ்வொரு வங்கியும், மிகக் குறைவான கிளைகளுடனே அல்லது கிளைகளின்றித் தனித்தோ செயல்புரிந்து வந்தது. ஆனால், ஒன்றிணைப்பு, ஒருங்கிணைப்பு போன்ற முறைகளின் மூலம் பல சிறிய வங்கிகள் ஒன்றுக்கப்பட்டு இன்று இங்கிலாந்தின் வங்கியியல் தொழில் ஐந்து வங்கிகளால்மட்டுமே கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. இந்த ஐந்து வங்கிகள் ஐம்பெரும் வங்கிகள் என்றழைக்கப்படுகின்றன. இவ்வங்கிகள் நாடு முழுமையிலுமுள்ள 9,000 கிளைகள் மூலம் தொழில் புரிந்து இங்கிலாந்து நாட்டில் வங்கியியல் தொழிலில் ஏறத்தாழ 75 விழுக்காட்டுப் பகுதியினைக் கட்டுப்படுத்தி வருகின்றன. நாட்டின் தலை வங்கியாகக் கருதப்படும் இங்கிலாந்து வங்கியினை (Bank of England) மைய வங்கியாகக்கொண்டு இவை செயல்புரிகின்றன. மிட்லாண்டு வங்கி (Midland Bank), லாயிட்ஸ் வங்கி (Lloyds Bank), நேஷனல் புரவின்ஷியல் வங்கி (National Provincial Bank) வெஸ்ட் மினிஸ்டர் வங்கி (West Minister Bank), மற்றும் பார்க்லேஸ் வங்கி (Barclays Bank) ஆகியவையே அந்த ஐந்து வங்கிகளாகும்.

எனவே, ஒரு குறிப்பிட்ட இடத்தில் பதிவு செய்யப்பட்ட வங்கி, மைய நிருவாகத்தினடிப்படையில், மையப்படுத்தப்பட்ட

கட்டுப்பாட்டிற்குட்பட்டும், அந்த நாட்டின் பல பகுதிகளில் மட்டுமின்றி வெவ்வேறு நாடுகளிலும் கிளைகளமைத்துத் தொழில் புரிந்தால் அத்தகைய வங்கியினைக் கிளை வங்கி என்று கூறுகிறோம். எல்லாக் கிளைகளையும் முழுமையாக ஒரே ஓர் இயக்குநரவை மட்டுமே கட்டுப்படுத்தும் உரிமை பெற்றுள்ளதால், இதன் நிருவாக அமைப்பு முறையினை 'மையமாக்கப்பட்ட நிருவாக முறை' என்று கூறுகிறோம்.

இங்கிலாந்து கிளை வங்கிமுறை உலகில் வேறு பல நாடுகளாலும் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றது. இந்தியா, பிரான்சு, கனடா போன்ற நாடுகள் கடைப்பிடிப்பதும் இம்முறையேயாகும். கனடா நாட்டில் நான்கு வங்கிகள் மட்டும் ஏறத்தாழ 6500 கிளைகளைக்கொண்டு அந்த நாட்டின் வங்கியியல் தொழிலைக் கட்டுப்படுத்தி வருகின்றன. இந்தியாவைப் பொறுத்தவரை நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகளையும் சேர்த்து அட்டவணையில் சேர்க்கப்பட்டுள்ள வங்கிகள் 86 (Scheduled Banks) உள்ளன. அவை 1974 ஆம் ஆண்டு ஜூன் முடிய 16,806 கிளைகளைப் பெற்றுப் பணிபுரிந்தன.

இங்கிலாந்து நாட்டின் கிளை வங்கிக்கு நேர் எதிர்மாறான தனி வங்கி முறை (Unit Banking System) அமெரிக்க நாட்டில் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. தனி வங்கி முறையில் ஒவ்வொரு வங்கியும், கிளைகளெதுவுமின்றித் தனிப்பட்ட முறையில் இயக்குநரவையால் நிருவகிக்கப்பட்டு வருகிறது. ஒவ்வொரு வங்கிக்கும் ஒவ்வோர் அலுவலகம் தான் உண்டு. அந்த அலுவலகத்தின் மூலமாக மட்டுமே வங்கி அதனுடைய எல்லாப் பணிகளையும் மேற்கொள்ளும். இருப்பினும், ஒருசில வங்கிகளுக்குமட்டும் அரசு, ஒரு குறிப்பிட்ட எல்லைக்குள் கிளைகளைத் தொடங்கிச் செயல்புரியும் வகையில் உரிமை வழங்கியுள்ளது. அமெரிக்க நாட்டில் பல்வேறு மாநிலங்களிலும் அந்தந்த மாநிலச் சட்டத்தின் படி வங்கிகள் இயங்கி வருகின்றன. அதன்படி 16 மாநிலங்களில் ஒரு குறிப்பிட்ட எல்லைக்குள் கிளைகள் திறக்கும் வகையில் வங்கியச் சட்டங்கள் அமைந்துள்ளதை இதற்கு எடுத்துக்காட்டாகக் குறிப்பிடலாம். அமெரிக்க மக்கள், தங்கள் வளர்ச்சிக்குத் தனி வங்கி முறையினையே காரணமாகக் காட்டுகின்றனர். இம்முறை மூலம், வங்கியியல் முற்றுரிமை தவிர்க்கப்படுவதாகவும், வங்கிகள் வாடிக்கைக்காரர்களுடன் நேரடித் தொடர்பு கொள்ள முடிகிறதென்றும் கருத்துத் தெரிவிக்கின்றனர்.

அமெரிக்கா, இங்கிலாந்து ஆகிய இரு நாடுகளிலும், வேறுபட்ட வங்கியியல் முறை கடைப்பிடிக்கப்படுவதற்கான காரணம்

அந்த நாடுகளின் தொழிலமைப்புகளின் தன்மையே என்று கூறலாம். அமெரிக்க நாட்டில் தொழில் நிறுவனங்களின் இணைப்பு மிகுதியாக இருந்தது. செல்வம் ஒருசிலரிடம் மட்டும் குவியும் நிலை இருந்தது. இந்நிலையினைத் தடுத்து, செல்வம் பரவலாவதற்கான பல வழிகளையும் அரசு கடைப்பிடிக்க முனைந்தது. அவற்றில் ஒன்றே தனி வங்கி முறையினை வளர்த்ததாகும். இவ்வாறு தனி வங்கி முறை வளர்ந்த காரணத்தினால் சில இயக்குநர்கள் கையில் பணம் குவிவது தடுக்கப்படுகிறது. இந்த நோக்கத்துடனேயே அமெரிக்க அரசு தனிப்பட்ட சட்டத்தின் மூலம் அமெரிக்க வங்கிகளை மிகப் பெரிய அளவில் வளராதவாறு கட்டுப்படுத்தியது.

அமெரிக்க நாட்டில் தனி வங்கிமுறை கடைப்பிடிக்கப் பட்டாலும், கிளை வங்கி முறையின் நன்மைகளைப் பெறும் வகையில் கீழ்க்காணும் மூன்று முறைகள் கடைப்பிடிக்கப்படுகின்றன. அவையாவன :

தொகுப்பு வங்கி முறை (Group Banking System) தொடர் வங்கி முறை (Chain Banking System), தொடர்பு வங்கி முறை (Correspondent Banking System) ஆகியவையே அம் மூன்று முறைகளாகும். அமெரிக்கத் தனி வங்கிகள் கிளை வங்கிகளின் பயன்களைத் தங்களுக்கிடையே இணைப்பு ஏற்படுத்திக் கொள்ளுதலை மேற்குறிப்பிட்ட மூன்று வகையான வங்கிகளின் மூலம் பெறுகின்றன. பல தனி வங்கிகள் ஒரு நிறுவனத்தின் கட்டுப் பாட்டிற்குட்பட்டுச் செயலாற்றி வந்தால் அத்தகைய வங்கிகளைத் தொகுப்பு வங்கிகள் என்று கூறுகிறோம். தொகுப்பு வங்கிகளைச் சார்ந்த தனி வங்கிகள் தங்களுடைய தனிப்பட்ட நிலையினைப் பெற்றுள்ளன ; அவை தனிப்பட்ட நிறுவனங்களாகவே கருதப்படுகின்றன. இருப்பினும் அவை ஒன்றுடன் ஒன்று இணைந்துசெயல்படுகின்றன. ஒவ்வொன்றும் மற்றத் தொகுப்பு வங்கிகளின் கிளை வங்கிகளைக் கொப்பச் செயலாற்றுகின்றன.

தனி வங்கிகளுக்கிடையே உள்ள பொது நிருவாகத்தினடிப் படையில் ஓர் இணைப்பு ஏற்படுமேயானால் அத்தகைய வங்கிகள் தொடர் வங்கிகள் என்றழைக்கப்படுகின்றன. எடுத்துக்காட்டாக, ஒரே குழுவான நபர்கள் பல தனி வங்கிகளில் இயக்குநர்களாகப் பணியாற்றினால், அந்தத் தனி வங்கிகளுக்கிடையே, அப் பொது இயக்குநர்களால் ஓர் இணைப்பு ஏற்படுகிறது. இவ்வாறு பொதுவான இயக்குநர்களின் வழி பல தனி வங்கிகளுக்கிடையே இணைப்பு ஏற்படுமாயின், அவ் வங்கிகளைத் தொடர் வங்கிகள் என்று கூறுகிறோம். தொகுப்பு வங்கி முறையிலுள்ளதைப்

போன்றே தொடர் வங்கி முறையிலும், ஒவ்வொரு தொடர் வங்கியும் இதர தொடர் வங்கிகளின் கிளைகளாகப் பணியாற்றுகின்றன. எனவே, தனி வங்கிகளும் கிளை வங்கி முறையின் நன்மைகளைப் பெற முடிகின்றது.

தொடர்பு வங்கி முறையில், சிறிய வங்கிகள் தங்களுடைய பணிகளை விரைவாகவும், திறமையாகவும் செய்துமுடிக்கும் பொருட்டு, பெரிய வங்கிகளுடன் ஒரு தொடர்பை ஏற்படுத்திக் கொள்கின்றன. அவ்வாறு அவை பெரிய வங்கிகளிடம் ஒரு தொடர்பை ஏற்படுத்திக் கொள்ளும் நிலையில், அவை, பெரிய வங்கிகளில் ஒரு குறிப்பிட்ட அளவு வைப்பு நிதியைச் செலுத்தி வைக்கின்றன. அவ்வாறு நிதியினைச் செலுத்தித் தொடர்பினை ஏற்படுத்திக் கொண்ட பிறகு, சிறியவைக்குப் பெரிய வங்கிகள் பணத்தை ஓர் இடத்திலிருந்து வேறு இடங்களுக்கு மாற்றுதல், அவற்றில் சார்பாளராகப் பணியாற்றுதல் போன்ற செயல்களைப் புரிகின்றன. ஒரு சிறிய வங்கிக்கு ஒரே ஒரு தொடர்பு வங்கிதான் இருத்தல் வேண்டுமென்ற அவசியமில்லை. ஒரு தொடர்பு வங்கிக்கு ஒரு குறிப்பிட்ட இடத்தில் கிளை வங்கி இல்லை என்றால் அங்குக் கிளைகள் உள்ள பெரிய வங்கியினை அந்த இடத்தைப் பொறுத்த வரை அதே சிறிய வங்கி தொடர்பு வங்கியாகக் கொள்ளலாம்.

வங்கியியல் வல்லுநர் சேயர்ஸ் தனி வங்கிகளையும், கிளை வங்கிகளையும் ஒப்பிடுதல், சிற்றளவு நிறுவனங்களையும் (Small Scale enterprises), பேரளவு நிறுவனங்களையும் (Large Scale enterprises) ஒப்பிடுவதுபோலமையும் என்று குறிப்பிட்டு, தனி வங்கிகளைச் சிற்றளவு நிறுவனங்களுடனும், கிளை வங்கிகளைப் பேரளவு நிறுவனங்களுடனும் ஒப்பிடுகிறார். சிற்றளவு நிறுவனங்களும், பேரளவு நிறுவனங்களும் நன்மைகள், குறைபாடுகள் ஆகிய வற்றைக் கொண்டிருப்பதைப் போன்றே தனி வங்கிகள் ஒருசில நன்மைகளைப் பெற்றுள்ளன. அதேபோன்று கிளை வங்கிகளும் ஒருசில நன்மைகளைப் பெற்றுள்ளன. இருவகை வங்கிகளும் குறைபாடுகளையும் கொண்டுள்ளன. தனி வங்கிகளின் நன்மைகள், கிளை வங்கிகளின் குறைபாடுகளாகவும், கிளை வங்கி முறையின் நன்மைகள் தனி வங்கி முறையின் குறைபாடுகளாகவும் அமைகின்றன. முதலில் கிளை வங்கி முறையின் நன்மைகளை விளக்கலாம்.

கிளை வங்கி முறையின் நன்மைகள் :

(1) கிளை வங்கி முறையில், வங்கிகள் சிற்றூர்களில்கூடக் கிளைகளைத் தொடங்குகின்றன. இதனால் நாட்டின் பல பகுதி

களிலும் தொழில் வளர்ச்சிக்கு வாய்ப்பேற்படுகின்றது என்பதுடன் கூட, கிளைகள் மூலம், தகுமை வங்கி பல சிற்றூர்களிலுள்ள சேமிப்புத் தொகையினைத் திரட்டும் வாய்ப்பினைப் பெறுகிறது. இத் தொகை நாட்டு வளத்தைப் பெருக்கப் பயன்படுத்தப் படுகின்றது.

(2) கிளை வங்கி முறையினால், இழப்பு வாய்ப்புகள் பரவலாக்கப் படுகின்றன. இம்முறையில் வங்கி நாட்டின் பல பாகங்களிலும் கிளைகளைத் திறந்து பணியினை மேற்கொள்கிறது. ஒவ்வொரு கிளையும் அது செயல்படும் பகுதியிலுள்ள தொழில் நிலைக்கேற்ப வெவ்வேறு தொழில்களுக்குக் கடன் வழங்கலாம். எனவே, எல்லாக் கிளைகளும் இலாபமீட்டித் தரும் என்று நிச்சயமாகக் கூறுதல் இயலாது. ஒருசில கிளைகளில் நட்டம்கூட ஏற்படலாம். ஆனால், அக் கிளைகளில் ஏற்படும் நட்டம், இதர கிளைகள் ஈட்டும் இலாபத்தால் ஈடுசெய்யப்படலாம். தனி வங்கி முறையில் இவ்வாறு பல சூழ்நிலைகளில் பணியாற்றும் வாய்ப்பும், பல்வேறு பொருள்களைப் பிணையமாகப் பெற்றுக் கடன்தரும் வாய்ப்பும் வங்கிகளுக்கு இல்லை.

(3) கிளை வங்கி முறையின் மூலம், நாட்டின் வளர்ச்சியுற்ற பகுதியிலுள்ள சேமிப்புத்தொகை திரட்டப்பட்டு, வளர்ச்சியடையாப் பகுதியில் முதலீடு செய்யப்படுகிறது. எனவே, நாட்டின் பல பாகங்களிலும் ஒரே சீரான தொழில் வளர்ச்சிக்கு உதவிபுரிகிறது.

(4) கிளை வங்கி முறையில், ஒரு வங்கிக்கு, நாட்டின் பல பாகங்களிலும் கிளைகள் இருக்குமாதலின், அதனால் ஓரிடத்திலிருந்து மற்ற இடங்களுக்குச் சிக்கனமான முறையில் பணம் அனுப்ப முடிகிறது. மேலும், வாடிக்கைக்காரர்கள், தாங்கள் பிற இடங்களிலிருந்து பெறவேண்டிய, மாற்றுச்சீட்டுகள், காசோலைகள் ஆகியவற்றிற்கான பணத்தைக் கிளை வங்கிகள் மூலம் திரட்ட வாய்ப்புள்ளது. தனி வங்கி முறையில் இத்தகைய சூழ்நிலைகளில் பணம் வசூலித்தல் சிரமமானதாகும். அது பணம் வசூலிக்கப் பிற வங்கிகளின் உதவியையே நாடவேண்டியிருக்கும். அவ்வாறு பிற வங்கிகளை நாடுகையில், அதனால் சற்றுக் கூடுதல் செலவாகலாம்.

(5) கிளை வங்கி முறை பேரளவு நிறுவனங்களுடன் ஒப்பிடப் படுகின்றது. எனவே, பேரளவு நிறுவனங்களின் எல்லாச் சிக்கனங்களையும் கிளை வங்கிகள் பெறுகின்றன. இவற்றில் வேலைப் பகிர்வுமுறை கடைப்பிடிக்கப்பட்டு, வங்கியின் ஒவ்வொரு துறைக்கும் தனிப்பட்ட முறையில் திறமைவாய்ந்த வல்லுநரைப்

பணியிலமர்த்தலாம். கிளை வங்கிகள் அதிக வருவாய் ஈட்டும் நிலையிலுள்ளதால், இவை அப்படிப்பட்ட வல்லுநர்களுக்கு அதிக ஊதியம் கொடுக்கும் நிலையிலும் உள்ளன. எனவே, திறமைமிக்க வல்லுநர்களை வேலைக்கமர்த்தி இவ் வங்கிகள் தங்கள் நிலையை உயர்த்திக் கொள்ளுகின்றன.

(6) பொருளாதார மந்த நிலையில் ஏற்படும் பல இடர்ப்பாடுகளைத் திறமையான நிருவாகத்தின் கீழும், மிகுதியான வருவாயுடனும் செயல்படும் கிளை வங்கிகள், தக்கமுறையில் கடந்து திறப்படச் செயல்புரிகின்றன.

(7) கிளை வங்கிகள் பொதுவாக, மிகக் குறைவான அளவில் ரொக்கத்தினைக்கொண்டு தொழில்புரியலாம். வாடிக்கைக்காரர்களுடைய தேவையைப் பூர்த்திசெய்யும் வகையில் வங்கிகள் கையில் ரொக்கம் வைத்திருத்தல் அவசியமாகும். வாடிக்கைக்காரர்களுடைய நம்பிக்கையை இழக்காத நிலையில் வங்கிகள் எந்த அளவிற்குக் குறைந்த அளவு ரொக்கத்தினைக்கொண்டு தொழில் நடத்துகின்றனவோ அந்த அளவுக்கு அவை அதிக இலாபம் ஈட்ட முடியும். கிளை வங்கிமுறையில் ஒரு கிளையில் வாடிக்கைக் காரரால் எதிர்பாராத அளவு கூடுதலான பணம் எடுக்க விழைந்ததன் காரணமாகப் போதிய ரொக்கம் இல்லை என்றால், அக் கிளைவங்கி அருகிலுள்ள கிளையிலிருந்து தேவைப்படும் ரொக்கத்தினைப் பெற்றுக்கொள்ளும் வாய்ப்பு உள்ளது.

(8) கிளை வங்கி முறையில், ஒரு பகுதியில் பணம் தேவை இல்லாது இருந்து, அப் பகுதியில் பணம் முதலீடு செய்யப்படாது இருந்து வேறு பகுதியில் பணம், முதலீட்டுக்குப் போதாமலிருக்குமேயானால், பணம் முதல் பகுதியிலிருந்து இரண்டாவது பகுதிக்கு எளிதாக மாற்றப்பட்டு முதலீடு செய்யப்படலாம். இவ்வாறு முதலீடு செய்யும்போது ஒரு நாட்டின் எல்லாப் பகுதிகளிலும், பணத்தின் தேவையும், அளிப்பும் ஒரே சீராக இருந்து வட்டி வீதமும் ஒரே அளவினதாக அமைகின்றது.

(9) கிளை வங்கி முறையில் ஒருசில கிளை வங்கிகள் எவ்விதத் தயக்கமுமின்றிப் பல்வேறு சொத்துகளில் பணத்தை முதலீடு செய்யலாம். ஒருசில அதிக இலாபமீட்டும் சொத்துகளில்மட்டும் முதலீடு செய்யலாம். வேறு சில கிளைகள் அதிக எளிவரல் தன்மைகொண்ட சொத்துகளில் மட்டும் முதலீடு செய்ய முடியும்.

(10) ஒரு கிளை வங்கியின் மேலாளர் அதிலிருந்து வேறு கிளைக்கு மாற்றம் செய்யப்படலாமாதலின், அவர், தகுதியற்ற வாடிக்கைக்காரர்களுக்குக் கடன் கொடுக்க மறுக்கத் தயங்க

வேண்டியதில்லை. மேலும் அவர், அவ்வாறு தாம் கடன்கொடுக்க முடியாததற்குரிய காரணம், மைய அலுவலகத்தின் கொள்கை என்று, மைய அலுவலகத்தினைக் குறிப்பிட்டுக் கூறி, அத்தகைய வாடிக்கைக்காரர்களிடம் கசப்பான உறவைப் பெற்றுக்கொள்ளாத வகையில் செயல்புரிய வாய்ப்புள்ளது.

(11) கிளை வங்கிகள் கூடுதலான முதலுடன் தொழில் புரிவதால் பெரிய நிறுவனங்களுக்குத் தேவையான கடனை அதிக அளவிலேயே வழங்க முடிகிறது.

(12) கிளை வங்கிகள், செம்மையான முறையில் மைய அலுவலகத்தால் கட்டுப்படுத்தப்படுகின்றன. மேலும் மைய வங்கி தன்னுடைய நிதியியல் கோட்பாடுகளைச் செயல்படுத்த மைய அலுவலகத்துடன் மட்டும் தொடர்புகொண்டால் போதுமானது. ஆனால், தனி வங்கி முறையில் மைய வங்கி பல்வேறு நிறுவனங்களுடன் தொடர்புகொள்ள வேண்டியிருக்கும்.

(13) கிளை வங்கி முறையில் செலவு மிகக் குறைவாக இருக்குமென்று கூறுகின்றனர். ஏனெனில், சிறிய கிளை வங்கிகளைக் குறைந்த அளவில் பணியாளர்களைக் கொண்டு சிறிய கட்டடங்களில்கூட நடத்தலாம், ஆனால், இத்தகைய வாய்ப்பு தனி வங்கி முறையில் இல்லை. தனி வங்கிகள் கவர்ச்சியான பெரிய கட்டடங்களில்தான் அமைக்கப்பட வேண்டும்.

(14) கிளை வங்கி முறையில், பல இடங்களிலும் கிளைகள் திறக்கப்படுவதால், ஒவ்வொரு கிளையும் அந்தந்த இடத்தின் தன்மைக் கேற்றவாறு தன்னுடைய முதலீட்டுப் பணிகளை அமைத்துக்கொள்ள முடிகிறது.

(15) பணியாளர்களைச் சிறிய கிளைகளில் பணியில் அமர்த்தி அவர்கள் போதிய பயிற்சி பெற்றபின் பெரிய கிளைகளில் பணியாற்றச் செய்வதற்குரிய வாய்ப்பு, கிளை வங்கி முறையில் உள்ளது.

அமெரிக்க நாட்டில், தொடர்பு வங்கி முறை மூலம், தனி வங்கிகள், தங்களுக்கென்று தனிக் கிளைகள் இல்லை என்றாலும், தொடர்பு வங்கிகளின் உதவியால் கிளை வங்கிகளின் பயன்களைப் பெறுகின்றன.

கிளை வங்கி முறையிலுள்ள குறைபாடுகள் :

கிளை வங்கி முறையால் பல நன்மைகள் ஏற்படுகின்றனவென்றும், அவை பேரளவு நிறுவனங்களுக்கு கொப்பானவை என்றும் குறிப்பிட்டோம். இருப்பினும், கிளை வங்கி முறை

குறைபாடற்றதன்று. ஒரு குறிப்பிட்ட நிலைக்குப் பிறகு, கிளை வங்கி முறை விரிவடையுமேயானால், இம்முறையில் ஒருசில குறைபாடுகள் காணப்படுகின்றன. அவ்வாறு கிளை வங்கி முறையிலுள்ள குறைபாடுகள் கீழ் வருபவையாகும்.

(1) கிளை வங்கி முறையில், கிளைகளின் எண்ணிக்கை, ஒரு குறிப்பிட்ட நிலையினைக் கடந்துவிடுமேயானால், வங்கிகளை நிருவாகம் செய்தல் மிகச் சிரமமானதாகும்.

(2) கிளை வங்கிகளின் தலைமை அலுவலகம், நாட்டின் வேறு பகுதியில் உள்ளதால், கிளை வங்கிகள் செயல்புரியும் பகுதியிலுள்ள மக்கள், அந்த வங்கிகளை அயல்நாட்டு வங்கிகளுக்கு ஒப்பாகக் கருதுகின்றனர். அவற்றை ஆதரிக்கத் தயங்குகின்றனர். இக் குறைபாடு வளர்ச்சியடையாத நாடுகளுக்கு உகந்ததாக இருக்கும்.

(3) கிளை வங்கி முறையில், வாடிக்கைக்காரர்களுக்கும், வங்கியின் பங்குநர்களுக்கும் நேரடித் தொடர்பு இல்லை. எனவே, வாடிக்கைக்காரர்கள் முழு மனநிறைவெய்துவதாகக் கூறுதல் இயலாது.

(4) கிளை வங்கி முறையில், நாட்டின் ஒரு பகுதியில் திரட்டப்படும் வைப்புத்தொகை, அந்தப் பகுதியிலேயே முதலீடு செய்யப்பட்டு, அதனால் அப் பகுதி முன்னேற்றம் செய்யப்படுவதில்லை. திரட்டப்பட்ட வைப்புத்தொகை, வங்கி நிருவாகத்தினருடைய விருப்பப்படி வேறு பகுதிக்கு மாற்றப்பட்டு அப் பகுதியில் முதலீடு செய்யப்படுகின்றது. எனவே, அந்தந்தப் பகுதியில் திரட்டப்படும் வைப்புத்தொகை அந்ததந்தப் பகுதியின் வளர்ச்சிக்குப் பயன்படாமல் போகின்ற சூழ்நிலை உருவாகக்கூடும்.

(5) பொதுக்கோட்பாடுகள், மைய அலுவலகத்தினரால் நிர்ணயிக்கப்படுவதால் கடன் வாங்க விரும்புபவர்களுக்குக் கடன் கொடுப்பதில் சற்றுக் காலதாமதம் ஏற்படலாம். அவர்கள் விரும்பியவுடன் கடன் கிடைத்துவிடுமென்று கூறமுடியாது.

(6) கிளை வங்கி முறையில், ஒரே இடத்தில் பல்வேறு வங்கிகளின் கிளைகள் திறக்கப்பட்டு, தேவைக்குமேல் வங்கி வசதிகள் ஓர் இடத்தில் அளிக்கப்படலாம். பொருளாதார அடிப்படையில் இது வீண் செலவு நிறைந்தது ஆகும்.

(7) கிளை வங்கி முறையில் பேரளவு நிறுவனத்தின் நன்மை கிளை முழுமையாகப் பெறுவதில்லை. கூடிய வரையில் மிக அதிகமான கிளைகள் திறக்கப்படுகின்றன. எனவே, கிளைகள்

நாட்டிற்குள் மட்டுமின்றி, வெளிநாடுகளிலும் திறக்கப்படுகின்றன. இவ்வாறு கிளைகள் வெளிநாடுகளில் திறக்கப்படும் பொழுது, அக் கிளை வங்கிகளை மைய வங்கி கட்டுப்படுத்தி நிருவகிப்பதில் பல இன்னல்களும், தொல்லைகளும் ஏற்படுகின்றன. எனவே, கிளை வங்கி முறை ஒரு நிலைக்குப் பிறகு கட்டுப்பாடான நிருவாகத்திற்கு இடையூருக இருக்கிறது எனக் கூறலாம்.

(8) வாடிக்கைக்காரர்கள் ஒரு கிளைமீது நம்பிக்கை இழந்து அதிலுள்ள வைப்புத்தொகையினைத் திரும்பப்பெற விழைவார்களேயானால் இது அக் கிளையினை மட்டும் பாதிக்காது. எல்லாக் கிளையினையும் பாதிக்கக்கூடும். இதனால் அவ் வங்கியே முறிவடைந்துபோவதற்குரிய வாய்ப்பு எழலாம்.

(9) ஒரு நாட்டின் பொருளாதாரம் அந்த நாட்டின் வங்கிகளுடைய செயல்களுடன் பிணைக்கப்பட்டுள்ளது. பல கிளைகளைக்கொண்ட ஒரு வங்கி திறமையற்ற மேலாண்மை காரணமாக மூடப்படுமானால், அந் நாட்டின் பொருளாதார நிலை பாதிக்கப்படுவது திண்ணம்.

(10) கிளை வங்கிகளிலுள்ள பணியாட்கள், அடிக்கடி மாற்றப்படும் வாய்ப்புக்கு இடமிருக்கிறதாதலின், பணியாட்களுக்கும், வாடிக்கைக்காரர்களுக்கும், நிரந்தரமான நேரடித் தொடர்பிருக்குமென்று கூறுதல் இயலாது.

(11) கிளை வங்கி முறையில், ஒருசில வங்கிகள் மிகப்பெரிய அளவில் வளர்ந்து விரிவடைந்து பல கிளைகள் திறப்பதன் வாயிலாக, வங்கித் தொழிலில் முற்றுரிமை பெற்றுத் திகழலாம். இவ்வாறு ஒருசில வங்கிகள் முற்றுரிமை பெற்றுச் செயல்படுவது நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு உகந்ததன்று.

தனி வங்கி முறையின் நன்மைகளும் குறைபாடுகளும் :

கிளை வங்கி முறையினைப் போன்றே தனி வங்கி முறையிலும், பல நன்மைகளும் பல குறைபாடுகளும் உள்ளன. முன்னரே குறிப்பிட்டுள்ளதைப்போன்று, தனி வங்கி முறையினைச் சிற்றளவு நிறுவன முறைக்கு ஒப்பிடலாம். சிறு அளவில் தனிப்பட்ட இருப்புடன் பல வங்கிகள் செயல்புரிவதைத் தனி வங்கி முறை என்று கூறுகிறோம். எனவே, இம்முறையில், ஒரு நாட்டில் தனித் தனியே பல வங்கிகள் செயல்புரிவதைக் காணலாம். இத்தகைய வங்கியியல் முறையில் சிற்றளவு உற்பத்தியில் உள்ள எல்லா நன்மைகளும், குறைபாடுகளும் உள்ளன என்று சுருக்கமாகக்

குறிப்பிட்டாலும் அவற்றை விளக்கியுரைத்தல் சாலச்சிறந்தது. எனவே, தனி வங்கி முறையில் கீழ்க்காணும் நன்மைகள் உள்ளன வென்று குறிப்பிடலாம் :

(1) பொதுவாக, கிளைகள் எதுவுமின்றிச் செயல்படுவதால் ஒவ்வொரு வங்கியும் சிறந்த கட்டுப்பாட்டுடன் செயல்புரிகிறது. மேலாண்மையில் ஈடுபட்டுள்ள அலுவலர்கள், வங்கியின் பணி யாளர்களைக் கட்டுப்படுத்திப் பணிக்க வாய்ப்புள்ளது.

(2) இயக்குநரவையால் நிர்ணயிக்கப்பட்ட கோட்பாடுகளை உரிய முறையில் ஒவ்வொரு வங்கியாலும் செயல்படுத்த முடிகிறது.

(3) ஒவ்வொரு வங்கியும் அந்தந்தப் பகுதியிலுள்ள மக்களிட மிருந்து வைப்புத்தொகையினைத் திரட்டிச் செயல்படுவதால், மக்கள், எவ்விதக் கருத்து வேறுபாடுமின்றி வங்கியுடன் ஒத்துழைத்து, வங்கியினை ஆதரிக்கின்றனர்.

(4) ஒவ்வொரு வட்டாரத்திலிருந்தும் வைப்புத்தொகை யாகத் திரட்டப்படும் சேமிப்புத்தொகை அந்தந்த வட்டாரத்தி லேயே முதலீடு செய்யப்படும். எனவே, ஒரு நாட்டின் எல்லாப் பகுதிகளும் நன்கு வளர்ச்சி பெறுவதைக் காணலாம்.

(5) தனி வங்கி முறையில் பணி புரியும் அலுவலர்கள், பணி மாற்றத்திற்கு (Transfer) உட்பட்டு வெவ்வேறு இடங்களுக்கு மாற்றப்படுவதில்லையாதலின் அவர்களை வங்கி மேலாண்மையரின் கோட்பாடுகளைக் கடைப்பிடிக்கும் வகையில் நன்கு இயக்குவிக்க முடிகின்றது.

(6) வங்கி அலுவலர்கள் ஒரே இடத்தில் பணிபுரிவதால், அந்த இடத்தைப்பற்றிய விவரங்களை அவர்கள் நன்கறிந்திருக்க முடியும். எனவே, அவர்கள் அந்தந்தப் பகுதியின் நிலவரத்தையொட்டி எந்தெந்தத் தொழிலுக்கு எவ்வளவு கடன் கொடுக்கலாம் என்பதை முடிவு செய்ய இயலும். ஏதாவது இடையூறுகள் நிகழ்ந்தாலும் அவற்றைக் களைய முடியும்.

(7) வங்கியின் பங்குநர்களுக்கும், வாடிக்கைக்காரர்களுக்கும் நேரடித் தொடர்புள்ளதால், வாடிக்கைக்காரர்கள் மனநிறை வெய்துகின்றனர்.

(8) ஒரு குறிப்பிட்ட நிலைக்குமேல் வளர்ந்துவிட்ட கிளை வங்கி தனது சிக்கனத்தை இழக்க வேண்டியிருக்கும். தனி வங்கி யிலைப் பொறுத்தவரை அத்தகையநிலை ஏற்பட வாய்ப்பில்லை.

(9 வங்கி செயல்படும் இடத்திலிருந்தே கடன் கொடுப்பது குறித்த கோட்பாடுகள் நிர்ணயிக்கப்படுவதால் கடன்கொடுப்பதில் காலதாமதம் ஏற்படுவதில்லை. கடன் வாங்கவிரும்புபவர்கள் உடனே கடன் பெற முடிகிறது.

(10) தனி வங்கி முறையில், கிளைகள் ஒரே இடத்தில் குவிந்து செயல்படுவது தடுக்கப்படுகின்றது.

(11) பல கிளைகளுக்கிடையே ஒருமுகப்படுத்தலின்மை (Non-Coordination) என்ற குறைபாட்டிற்குத் தனிவங்கி முறையில் வாய்ப்பெதுவுமில்லை.

(12) தனி வங்கி முறையில் ஒரு வங்கி சரிவரச் செயல்படாத நிலையில், அதனைப் பொதுவாக வங்கியியல் தொழில் பாதிக்கப் படாதவாறு மூடிவிட வாய்ப்புள்ளது.

(13) தனி வங்கி முறையில், ஒருசில வங்கிகள் மட்டும் முற்றுரிமை பெறுகின்றன என்னும் குறைபாட்டிற்கே இடமில்லை.

தனி வங்கி முறையின் குறைபாடுகள் :

தனி வங்கி முறையிலும் சில குறைபாடுகள் உள்ளன. இக் குறைபாடுகளைச் சிற்றளவு நிறுவனங்களின் குறைபாடுகளுடன் ஒப்பிடலாம். விளக்கமாகக் குறிப்பிட வேண்டுமானால், கீழ்க் கண்டவை தனி வங்கி முறையின் குறைபாடுகளாகும் :

(1) இம்முறையில் வங்கிகள், பெரும் நகரங்களில் மட்டும் தான் தொடங்கப்பட முடியுமாதலின், சிறு கிராமங்கள் இவற்றுல் வளர்ச்சியடைய வாய்ப்பில்லை.

(2) இவ் வங்கிகள், குறைந்த அளவில்தான், மூலதனம் திரட்டுகின்றன. எனவே நாட்டில் பொருளாதார மந்தநிலை ஏற்பட்டால், அதனை எதிர்த்து, இலாபகரமான முறையில், இவற்றுல் செயல்பட முடியாது.

(3) தனி வங்கி முறையில், அலுவலர்கள், மாற்றமெதுவு மின்றி ஒரே இடத்திலிருந்து செயல்படுவதால், ஒரு வங்கியின் மேலாளர், அப் பகுதி மக்களுடன் மிக நெருக்கமாகப் பழக வாய்ப்புள்ளது. இந்நிலையில் அவர் ஒருசிலருக்கு மட்டுமே தனிச் சலுகையினடிப்படையில் கடன் வழங்கக்கூடும்.

(4) தனி வங்கியில் நட்டம் ஏற்பட்டால், அத் தொகை முழுவதும் ஓர் அலுவலகத்தால் ஏற்க வேண்டியிருக்கும். கிளைகளுடன், பகிர்ந்து கொள்ளுதல் என்ற நிலைக்கு வாய்ப்பே இல்லை.

(5) வளர்ச்சியுற்ற பகுதிலுள்ள சேமிப்புத் தொகையினைத் திரட்டி வளர்ச்சியடையாப் பகுதியில் முதலீடு செய்து அப்பகுதியினையும் முன்னேற்றமடையச் செய்யலாம் என்ற நிலை தனி வங்கி முறையிலில்லை.

(6) பணத்தை ஓர் இடத்திலிருந்து சிக்கனமான முறையில் வேறு இடத்திற்கு மாற்றலாம் என்னும் தன்மையும் தனி வங்கி முறையிலில்லை.

(7) பேரளவு நிறுவனங்களிள் சிக்கனங்களைத் தனி வங்கிகள் பெற முடிவதில்லை.

(8) அவசிய மேற்படும்போது பிற கிளை நிறுவனங்களிடமிருந்து ரொக்கம் பெற்றுக் கொள்ளலாம் என்னும் வாய்ப்புஇல்லாத காரணத்தினுல் ஒவ்வொரு தனி வங்கியும் மிகக் கூடுதலான ரொக்கத்தினைக் கொண்டே தொழில்புரிய வேண்டியுள்ளது.

(9) தனி வங்கி முறையில் பணத்தின் தேவை, அளிப்பு ஆகியவற்றின் அடிப்படையில் ஒரே நாட்டில் பல்வேறு பகுதிகளிலும், பல வீத வட்டியில் கடன் வழங்கப்படலாம். நாடு முழுவதும் வட்டி வீதம் ஒரே நிலையாக இருக்கும் என்று கூறுதல் இயலாது.

(10) தனி வங்கி முறையில் ஒவ்வொரு வங்கியில் மேலாளரும் அதே இடத்தில் மாற்றமெதுவுமின்றிப் பணிபுரிய வேண்டியுள்ளதால், தகுதியற்ற வாடிக்கைக்காரர், வங்கியிலிருந்து கடன் பெற விழையும் நிலையில், அவருக்குக் கடன் கொடுத்தல் சிறந்ததன்று. எனினும், அவர் அதனை அவரிடம் வெளிப்படையாகக் கூறத் தயங்கலாம்.

(11) தனி வங்கி முறையினைக்கொண்ட ஒரு நாட்டின் மைய வங்கி, வங்கிகளைக் கட்டுப்படுத்துதல் என்பது சற்றுச் சிரமமானதாகும். இதற்கு முக்கிய காரணம், கட்டுப்படுத்தப்பட வேண்டிய வங்கிகளின் எண்ணிக்கை மிகக் கூடுதலாக இருத்தலேயாகும்.

கிளை வங்கி முறையையும், தனி வங்கி முறையையும் ஒப்பிட்டுப் பார்க்குமிடத்துக் கிளை வங்கி முறையினுல் ஏற்படும் நன்மைகளே அதிகம் என்பதனை அறியலாம். எனவே, கிளை வங்கி முறையே பொதுவானது; சிக்கனமானது; சிறந்தது. இருப்பினும் அரசியல் கோட்பாடுகள் காரணமாக இம்முறை அமெரிக்க நாட்டில் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. அமெரிக்காவில் தனி வங்கி முறையில் வங்கிகள் செயல்பட்டாலும்கூட, சிறந்த முறையில் இயங்கி வரும் தொடர்பு வங்கி முறையின் காரணமாக, ஒவ்வொரு தனி வங்கியும் கிளை வங்கியினுடைய பயன்களைப்பெறும் வாய்ப்பினைப் பெறுகிறது.

கிளை வங்கி முறையின் நன்மைகளின் காரணமாகப் பல்வேறு நாடு களிலும் இம்முறை கடைப்பிடிக்கப்படுவதில் வியப்பொன்றுமில்லை. இதன் காரணமாகவே கிளை வங்கி முறையினைப் பொது விதியாகக் கொண்டு, அமெரிக்கத் தனி வங்கிமுறையை ஒரு விதி விலக்காகக் கொள்ளலாம் எனச் சேயர்ஸ் என்னும் வல்லுநர் கூறுகிறார். கடந்த சில ஆண்டுகளாக, அமெரிக்க நாட்டில் கூடத் தனி வங்கி முறையில், ஒரு சில மாற்றங்கள் ஏற்படத் துவங்கியுள்ளன. நியூயார்க் தேசிய நகர வங்கி' (National City Bank of New York). அமெரிக்க வங்கிக்கு வெளி நாடுகளில் கிளைகள் திறப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. தொடர் வங்கி முறையினடிப் படையில் பல இடங்களில் செயல்பட்டுவரும் வங்கிகள் ஒரே நிருவாகத்தின்கீழ்க் கொண்டுவரப்படுகின்றன. எனவே, நேரிடை யாகவோ, மறைமுகமாகவோ வங்கிகள் கிளை வங்கி முறையின் தன்மைகளைக் கொண்டிருத்தலே சிறந்தது என முடிவு செய்யலாம்.

இந்தியாவில் கிளை வங்கி முறை : இந்தியா ஒரு துணைக் கண்டமாகும். பரந்த நிலப்பரப்பினைக் கொண்ட நமது நாட்டிற்கு நிறைந்த வங்கிப் பணிகள் தேவைப்படுகின்றன. இந்தியா ஆங்கிலேய ஆட்சிக்கு உட்பட்டிருந்ததன் காரணமாக இங்கி லாந்து நாட்டில் கடைப்பிடிக்கப்பட்ட கிளை வங்கி முறையே நமது நாட்டிலும் கடைப்பிடிக்கப்பட்டது. ஆகையால், தனிப்பட்ட வங்கிகள் தொடங்கப்பட்டுச் செயல்பட வாய்ப்பு எழவில்லை, எனவே, இந்தியாவில் கிளை வங்கி முறையே செழித்து வளரலாயிற்று.

1939 ஆம் ஆண்டுமுதல், இந்தியாவில் வங்கிகள் செயல் படுவதில் வளர்ச்சி இருப்பினும், ஏற்பட்டுள்ள வளர்ச்சி, சிறந்த வளர்ச்சி என்று கூற இயலாது. வளர்ச்சியில் ஒருபகுதி திட்ட மிடப்படாத வளர்ச்சியாகும். ஏனெனில், தொடங்கப்பட்ட கிளைகளில், ஒருபகுதி போதிய நிதி வசதியின்றித் தொடங்கப் பட்டவையாகும். எனவே, 1940-லிருந்து 1946 ஆம் ஆண்டு வரையிலான காலத்தில் ஏறத்தாழ 254 கிளைகளை மூடவேண்டிய அவசியமெழுந்தது. தொடங்கப்பட்ட கிளைகளில் பெரும் பகுதி, நகர்ப்புறங்களில் மட்டுமே தொடங்கப்பட்டன. கிராமங்களில் போதிய வங்கியியல் வசதி அளிக்கப்படவில்லை. பெரும் அளவில் நகர்ப்புறங்களில் வங்கிக் கிளைகள், தொடங்கப்பட்டதன் காரண மாகக் கிராமங்கள் புறக்கணிக்கப்பட்டன என்பதுடன்கூட, நகர்ப் புறங்களில் செயல்பட்ட வங்கிகளுக்கிடையே, தேவையற்ற, அளவுக்கு மீறிய போட்டியும் நிலவத் தொடங்கியது. எனவே,

அவற்றுள், சிறந்த இலாபகரமான முறையில், மக்களிடமிருந்து சேமிப்பைத் திரட்ட முடியவில்லை. இந்த நிலையைக் கட்டுப்படுத்தும் வகையில், 1949 ஆம் ஆண்டு வங்கியியல் ஒழுங்காற்றுச் சட்டம், கிளைகள் திறப்பது குறித்தும், கிளைகளை ஓரிடத்திலிருந்து வேறு இடத்திற்கு மாற்றுவது குறித்தும் சில கட்டுப்பாடுகளை விதித்தது. அதன்படி ஒரு வங்கி புதிய கிளையினைத் தொடங்க விரும்பினாலோ, தொடங்கப்பட்ட கிளையினை மூட விரும்பினாலோ, இந்திய மைய வங்கியான, ரிசர்வ் வங்கியிடமிருந்து இணக்கம் பெறுதல் வேண்டும். இத்தகைய கட்டுப்பாட்டின் நோக்கம், ஒரே இடத்தில் தேவைக்கு மேல் கிளைகளைத் திறப்பதனைத் தவிர்ப்பதும், வங்கி வசதிகள் போதிய அளவில் இல்லாத இடங்களில் உரிய முறையில் கிளைகளைத் திறப்பதுவுமேயாகும். போதிய வங்கியியல் வசதிகள் உள்ள இடங்களில் புதிய கிளைகளைத் திறப்பதைவிட, வங்கியியல் வசதியற்ற இடங்களில் கிளைகளைத் திறப்பதே, வங்கிகளுக்கும் இலாபகரமானது, மக்களுக்கும் நன்மை பயப்பது. இதன் வாயிலாக, வங்கிகள், தங்களுக்கிடையே ஏற்படும் கசப்புணர்ச்சியையும் தேவையற்ற போட்டியினையும் தவிர்க்க முடிகின்றது.

இந்தியாவில் கிளை வங்கி முறை வளர்ச்சி பெறுவதற்கான சூழ்நிலைகள் நிலவினும், 1956 ஆம் ஆண்டுக்கு முன்னர் ரிசர்வ் வங்கி கடைப்பிடித்த மேற்குறிப்பிட்ட கொள்கையினால், செயல்பட்டு வந்த வங்கிகள் மேலும் கிளைகளைத் திறக்க முடியவில்லை. இருப்பினும், அக் கொள்கை 1956 ஆம் ஆண்டில் சிறிது தளர்த்தப் பட்டதன் காரணமாக வங்கிகள் எளிதாகக் கிளைகளைத் திறக்க முற்பட்டன. எனவே, வங்கிகளின் கிளைகள் அதிகரித்தன. மீண்டும் 1962 ஆம் ஆண்டு ரிசர்வ் வங்கியின் கொள்கை மதிப்பீடு செய்யப்பட்டு, சில மாற்றங்கள் செய்யப்பட்டன. வங்கியியல் வசதிகள் இல்லாத பகுதிகளில் வங்கிக் கிளைகளைத் திறக்குமாறு பெரும் வங்கிகள் கேட்டுக் கொள்ளப்பட்டன. எனவே, கிளை விரிவாக்க முயற்சி மேலும் தீவிரமாகச் செயல்படுத்தப்பட்டது. 1969 ஆம் ஆண்டுமட்டும் ஏறத்தாழ 1346 கிளைகள் திறக்கப் பட்டன.

14 பெரும் வங்கிகள் நாட்டுடைமையாக்கப்பட்ட பிறகு வங்கிக் கிளைகள் தொடங்குதல் மேலும் ஊக்குவிக்கப்பட்டது. தீட்டப்பட்ட திட்டத்தின்படி 1970 ஆம் ஆண்டு 1350 கிளைகள் தொடங்கப்பட்டிருக்க வேண்டும். அவற்றுள் 1186 கிளைகள் வங்கி வசதியற்ற இடங்களில் தொடங்கத் திட்டமிடப்பட்டிருந்தது. ஆனால், 1969 ஆம் ஆண்டு சூலைத் திங்களிலிருந்து ஆறு திங்களுக்குள் மட்டும் 1456 கிளைகள் தொடங்கப்பட்டு விட்டன.

அவற்றில் பெரும்பகுதி, வங்கி வசதியற்ற கிராமப்புறங்களில் மட்டுமே தொடங்கப்பட்டன. 1971-1972ஆம் ஆண்டில் 1612 கிளைகள் திறக்கப்பட்டன. 1972—1973-ல் 1756 கிளைகள் மேலும் திறக்கப்பட்டன. அதில் 690 கிளைகள், வங்கி வசதியற்ற இடங்களிலேயே திறக்கப்பட்டன. திறக்கப்பட்ட 1756 கிளைகளில் 478 ஸ்டேட் வங்கி, அதனுடைய துணை வங்கிகள் ஆகியவற்றின் கிளைகளாகவும், 926 நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகளின் கிளைகளாகவும் அமைந்தன. இந்த நிலையின் காரணமாகக் கிராமப்புறங்களில் செயல்படும் வங்கிகளின் அளவு 22·3 விழுக்காட்டிலிருந்து 36·5 விழுக்காடாக உயர்ந்துள்ளது.

எனவே, இந்தியா போன்ற பெரும் நாடுகளில், புதிய வங்கிகள் தொடங்குவதைவிட, செயல்படும் வங்கிகள் புதிய கிளைகளைத் திறப்பதே சாலச் சிறந்ததெனக் கருதப்படுகிறது. மிகுந்த கிளைகளுடன் செயல்படும் வங்கிகள் இழப்பு வாய்ப்பினைப் பகிர்ந்துகொள்ளும் சூழ்நிலையைப் பெற்றுள்ளன. மேலும், சிறிய வங்கிகளைவிட இவை துணிகரமான வகையில் செயல்படுவதுடன் கூட, கூடுதலான அளவில் வைப்புத் தொகையினைத் திரட்டி முதலீடு செய்கின்றன. அதன் காரணமாக வங்கியியல் தொழிலுக்கும், நாட்டுக்கும் நற்பெயர் ஈட்டித் தருகின்றன. ஆகையால், கீழ்க்கண்ட குறிப்பிட்ட காரணங்களினால் கிளை வங்கி முறை இந்தியாவிற்கு ஏற்றது என்று கூறலாம்.

(அ) சிறிய வங்கிகள், பெரும் வங்கிகளைப் போன்று, நிரந்தரமாகச் செயல்படுவதில்லை. பொருளாதார நெருக்கடிக் காலங்களில் ஏற்படும் இடர்ப்பாடுகளை எதிர்நோக்க முடியாது. அவை மூடப்பட்டு விடுகின்றன. இந்தியாவில் செயல்பட்டு வரும் வங்கிகளின் எண்ணிக்கை ஆண்டுக்கு ஆண்டு குறைந்து வருவதிலிருந்து இது தெளிவாகும். 1948ஆம் ஆண்டு செயல்பட்ட வங்கிகளின் எண்ணிக்கை 620. ஆனால், அது 1970ஆம் ஆண்டில் 86-க்குக் குறைந்துவிட்டது.

(ஆ) ஏனைய நாடுகளைவிட, வங்கியியல் வளர்ச்சியில் இன்றும் இந்தியா பின்தங்கிய நிலையிலேயே உள்ளது. பெரும்பாலான சிறு கிராமங்களில் வங்கி வசதிகள் இல்லை. சிறு கிராமங்களில், கிளை வங்கி முறை மூலமே வங்கியியல் வசதியளிக்கப்படும்.

(இ) சிறிய அளவில், குறைந்த மூலதனத்துடன் தொடங்கப்படும் வங்கிகள், தொடர்ந்து, நிலையான முறையில் செயல்படுமென உறுதியாகக் கூறமுடியாது. தொடங்கப்பட்ட சிறு வங்கிகளில் ஒரு சில, தொடர்ந்து செயல்பட முடியாது. மூடப்பட்டாலும் அது

நாட்டின் வங்கியியல் தொழிலைப் பாதிக்கும். மக்கள் வங்கிகளின் மீது நம்பிக்கையினை இழப்பர். எனவே, வங்கியியல் முறை வளர்ச்சியுறுவது தடைப்படக் கூடும். இந்நிலை இல்லாதிருக்க வேண்டுமானால் சிறந்த முறையில் செயல்படக் கூடிய கூடுதலான மூலதனத்தைக் கொண்ட கிளை வங்கி முறையே சிறந்தது என முடிவுசெய்யலாம்.

(ஈ) நமது அரசு, நாட்டில் தொழில் விரிவாக்கம் செய்து உற்பத்தியினைப் பெருக்க முற்பட்டிருப்பதுடன்கூட, வேறு வாய்ப்பினைப் பெருக்கவும் ஆவன செய்து வருகிறது. இந்நோக்கத்தினைச் செயல்படுத்த மிகக் கூடுதலான அளவில் முதல் தேவைப்படுகின்றது. அந்த அளவு கூடுதலான முதலினைப் பேரளவில் செயல்படும் கிளை வங்கிகளால்தான் திரட்டமுடியுமே தவிர, சிறிய அளவில் செயல்படும் தனி வங்கிகளால் திரட்டமுடியாது.

இந்தியா போன்ற பெரும் நாடுகளுக்குப் பல கிளைகளைக் கொண்ட பெரும் வங்கிதான் ஏற்றவை எனினும் கீழ்க்கண்ட காரணங்களினால் சிறிய வங்கிகளும் ஊக்குவிக்கப்படவேண்டிய நிலையிலுள்ளன. எனவே, சிறிய வங்கிகளை அறவே அகற்றி விடுதல் என்பது இயலாது. அதற்குரிய காரணங்களாவன :

(அ) இந்திய மக்கள் தாங்கள் வசிக்கும் பகுதிக்கு முக்கியத்துவம் கொடுத்தல் என்ற கோட்பாட்டினை இன்றும் கடைப்பிடிக்கின்றனர். எனவே, அவர்கள் தங்கள் பகுதியில் தொடங்கப்பட்ட வங்கியினையே ஆதரிக்கின்றனர். இந்நிலையில் தனி வங்கிகளை ஊக்குவித்தல் அவசியமாகின்றது.

(ஆ) சிறிய அளவில் ஆரம்பிக்கப்பட்டுள்ள வட்டார வங்கிகள், அந்த வட்டாரத்திலுள்ள, செல்வம் படைத்தோருக்கு முக்கியத்துவம் கொடுத்து, அவர்களை இயக்குநர்களாக்கி. ஊக்குவிக்கின்றன. எனவே, அவர் அதிக அளவில் பங்குத்தொகை செலுத்துவதுடன், தங்கள் நண்பர்கள், உறவினர்கள் ஆகியோரிடமிருந்து வைப்புத்தொகை திரட்டவும் முனைகின்றனர். பெரிய அளவில் செயல்படும் வங்கிகளில் இவர்கள் நேரடியாக ஈடுபடுவதில்லை.

(இ) இவ்வாறு நன்மைகளைப் பெறுவதாலும், தொழில் வளர்ச்சி பெறும் வாய்ப்புகள் பெற்றுள்ளதாலும், தனிப்பட்ட வங்கியர்களான வட்டித் தொழிலரைப் போன்றோர், தங்கள் தொழில் நிறுவனங்களை வங்கிகளாக மாற்ற முனைவர். எனவே, வங்கிகளின் எண்ணிக்கை கூடுதலாக வாய்ப்புள்ளது.

(ஈ) சிறிய வங்கிகள், மிக ஊக்கத்துடனும் ஆர்வத்துடனும் வைப்புத்தொகையினைத் திரட்டி, அதனைச் சிறிய தொழில் நிறுவனங்களில் முதலீடு செய்கின்றன. எனவே, சிறிய வங்கிகள் செயல்படுவதனால், சிறிய தொழில் நிறுவனங்கள் செழிக்க வாய்ப்புள்ளது எனக் குறிப்பிடலாம்.

(உ) 'சிறு துளி பெரு வெள்ளம்' என்பது பொதுக் கூற்று. அது போன்றே சிறிய அளவில் ஆரம்பிக்கப்பட்ட வங்கிகளே, நாளடைவில் பெரும் வங்கிகளாக வளர்கின்றன. எனவே, வங்கி வளர்ச்சிக்கே சிறு வங்கிகள் தொடங்கப்படுவது இன்றியமையாததாகின்றது. மேல் நாடுகளில் சிறு வங்கிகளின் வழியே வங்கியியல் தொழில் வளர்ச்சி பெற்றுள்ளது.

தனி வங்கி முறையை ஊக்குவித்தல் அவசியமெனினும், தனி வங்கி முறை சிறப்பாகப் பணியாற்ற ஒவ்வொரு தனி வங்கியும் ஒரு குறிப்பிட்ட குறும அளவில் அமைந்தாவது செயல்பட வேண்டும். அவ்வாறு குறும அளவில் இல்லாது செயல்படும் வங்கிகள், நீண்ட காலம் நிலைத்து நின்று செயல்புரியுமளவில் தொழிலினைப் பெற்று இலாபமீட்டுவதில்லை. எனவே, இத்தகைய வங்கிகள் அந்த நாட்டின் நிலையைச் செழிக்கவைப்பதில்லை. எதிர்பாரா வகையில் ஏற்படும் இடர்ப்பாடுகளையும், பொருளாதார மந்தத்தால் ஏற்படும் விளைவுகளையும் எதிர்நோக்க முடியாது இத்தகைய வங்கிகள் முறிவடைகின்றன. எனவேதான். தன் நிலையை நிலைநிறுத்தி, அதன்வழி நாட்டில் பொருளாதார நிலையைச் செம்மைப்படுத்துமளவில் கிளை வங்கிகள் தொடங்கப் படுவதே நன்மை பயக்கத் தக்கதென வல்லுநர்கள் கருத்துத் தெரிவிக்கின்றனர். இக் கருத்தினைச் செயல்படுத்துமளவில் கிளை வங்கி முறை போதிய வலுப்பெற்றிராத நாடுகளில், செயலாற்றி வரும் தனி வங்கிகளை இணைப்பதன் வழி கிளை வங்கிப்பயனை அடைய முயற்சி எடுக்கப்பட்டுள்ளன.

இங்கிலாந்தில் வங்கிகளின் இணைப்பு : இங்கிலாந்து நாட்டைப் பொறுத்தவரை, பத்தொன்பதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் தனி வங்கிகள் ஏராளமாகச் செயல்பட்டு வந்தன. அப்பொழுது வங்கிகள் வரையறுக்கப்படாத பொறுப்புடன் செயலாற்றி வந்தன. 1825ஆம் ஆண்டு தோன்றிய பொருளாதார நெருக்கடியினடிப்படையில் 1828ஆம் ஆண்டு ஒரு சட்டமியற்றப்பட்டு வங்கிகளின்மீதான சில தடைகள் நீக்கப்பட்டன. எடுத்துக்காட்டாக வங்கிகள் வரையறுக்கப்படாத பொறுப்புடன் செயலாற்ற வேண்டுமென்ற நிபந்தனை தளர்த்தப்பட்டது. 1833ஆம் ஆண்டில் வங்கி வளர்ச்சியினைப் பெருக்கும் வகையில்

இயற்றப்பட்ட மற்றுமொரு சட்டத்தின் விளைவாக வங்கிகளின் எண்ணிக்கை 86 ஆக உயர்ந்தது. இவ் வளர்ச்சி நாட்டுக்கு உகந்ததன்று என்று இங்கிலாந்தின் மைய வங்கியும், இதர தனியார் வங்கிகளும் கருதியதன் காரணமாக அவை புதிய வங்கிகளுடன் தொடர்பு கொள்ளவில்லை. இந் நிலையிலும் திறமையுடன் தொழில் புரிந்து முன்னேற விழைந்த வங்கிகளால், உரிய முறையில் தொழில் நடத்த முடியவில்லை. இந் நிலையில் பல வங்கிகள் பெரும் நட்டத்திற்குள்ளாகி முறிவடைந்தன. வங்கிகளின் இந்த நிலையைச் சரிப்படுத்தும் பொருட்டு வங்கிகள் இணைத்து அவற்றினுடைய அளவைப் பெருக்கி, அவற்றின் நிதி நிலையைச் செம்மைப்படுத்துதல் சாலச் சிறந்ததென்ற கருத்தும் தெரிவிக்கப்பட்டது. இருப்பினும் இருபதாம் நூற்றாண்டின் தொடக்க காலம் வரை இக் கருத்தினைச் செயல்படுத்துவதற்குரிய வாய்ப்பில்லை. இந்த நூற்றாண்டின் தொடக்கத்தில் வங்கிகளின் இணைப்புக்கான முயற்சி பெருவாரியான ஆதரவுடன் செயல்படுத்தப்பட்டது.

இங்கிலாந்து நாட்டின் பெரும்பாலான தனியார் வங்கிகள் தங்களுடன் இணைத்துக் கொள்வதன் வழி, வணிக வங்கிகள், தங்கள் தொழிலைப் பெருக்க முயன்றன. இணைக்கப்பட்ட தனியார் வங்கிகள் இலண்டன் மாநகரத்தின் வெளிப்புறங்களிலும், இதர நகர்ப்புறங்களிலும் கிளை வங்கிகளாகச் செயல்படுமளவிற்குத் திட்டமிட்டன. இத் திட்டம் மிகத் துரிதமாகச் செயல்படுத்தப் பட்டது. எனவே, நூற்றுக்கணக்கில் செயல்பட்ட வங்கிகளின் எண்ணிக்கை 'ஐந்து' என்ற அளவிற்குக் குறைந்தது. அவ் வங்கிகள் 'இங்கிலாந்தின் பெரும் ஐந்து' (Big Five of England) என்றழைக்கப்பட்டன. இவ்வாறு வங்கிகள் இணைக்கப்பட்ட தனால், வங்கியியல் தொழிலில் முற்றுரிமை ஏற்பட்டது. இந் நிலை தவருகப் பயன்படுத்தப்படும் என்ற கருத்துகூடத் தெரிவிக்கப் பட்டது. எனவே, 1918ஆம் ஆண்டு இந் நிலையினை ஆராயத் தனித்ததொரு குழு அமைக்கப்பட்டது. இக் குழு வங்கிகள் இணைக்கப்படுவதைக் கட்டுப்படுத்துவது குறித்துத் தனிப்பட்ட சட்டம் இயற்றப்படுதல் தேவை இல்லை என்றும், அச் சட்ட மியற்றப்படுவதன் நோக்கத்தை, இணைய விரும்பும் வங்கிகள், இணைப்புக்கு முன்பு, வாணிபக் கருவூல அலை (Treasury and the Board of Trade) யிட மிருந்து இசைவு பெறுதலைக் கட்டாய மாக்குவதன் மூலம் எய்த முடியுமெனக் கருத்துத் தெரிவித்தது. இறுதி நிலையில் இவ்வாறு வங்கிகள் இணைந்தது வங்கிகளுக்கும் நாட்டிற்கும் நன்மை பயப்பதாக விளைந்ததே தவிர, அதனால் எவ்வித இடையூறுகளும் நேரவில்லை. இவ்வாறு வங்கிகள் இணைந்ததன் காரணமாக—'இங்கிலாந்தின் பெரும் ஐந்துகள்'

தோன்றியதன் விளைவாக இன்று இங்கிலாந்து நாடு, செம்மை பெற்ற பணச்சந்தையினைக் கொண்ட நாடுகளுக்கு எடுத்துக் காட்டாகத் திகழ்கின்றது.

பொதுவாக, சிக்கனமான மேலாண்மை, போதிய அளவில் வைப்புத்தொகை திரட்டுதல், பெரும் தொழில் நிறுவனங்களுக்கு நிதிவசதி யளித்தல் போன்றவையே வங்கிகளின் இணைப்புக்கு ஆதாரமாக அமைகின்றன. மேலும், வங்கி இணைப்பு, வங்கிகள் ஒருமித்த பழக்க வழக்கங்களைக் கையாளவும் வழி வகுக்கின்றது.

மேற் குறிப்பிட்டுள்ள பொதுக் காரணங்களைத் தவிர இங்கிலாந்தில் வங்கிகளின் இணைப்புக்கு வேறு சில சிறப்பான காரணங்களும் உள்ளன.

(அ) போக்குவரத்து வசதி மிகுந்துள்ள இங்கிலாந்தில் ஓரிடத்திலிருந்து மற்ற இடங்களுக்குச் சென்று வருவது ஒரு பிரச்சினையாக இல்லை. எனவே, ஒவ்வொரு வங்கியும் நாடு முழுவதும் கிளைகளமைத்து வாடிக்கைக்காரர்களை ஈர்க்க முனைந்தது.

(ஆ) இங்கிலாந்தில் ஏற்பட்ட தொழிற் புரட்சி கிளை வங்கி முறை அந்த நாட்டில் வளர்ந்ததற்கு ஒரு காரணமாகும். தொழிற் புரட்சியின் காரணமாக, தொழில் நிறுவனங்கள் பேரளவு உற்பத்தியில் ஈடுபட்டன. பேரளவு உற்பத்திக்கு ஒவ்வொரு நிறுவனத்திற்கும் அதிக அளவில் முதல் தேவைப்பட்டது. சிறிய அளவில் செயல்பட்ட தனி வங்கிகளால் அந்த நிறுவனங்களுக்குத் தேவையான நிதி வசதியினை அளிக்க முடியவில்லை. எனவே, நாட்டில் பல இடங்களிலுமுள்ள சேமிப்பைத் திரட்டும் வகையில் கிளை வங்கி முறையினை அந்நாட்டில் செயல்படுத்த வேண்டியது அவசியமாயிற்று.

(இ) வங்கித் தொழில் நிலையாகச் செயல்பட வேண்டுமானால், ஒவ்வொரு வங்கியும் மிக அதிக அளவில் மூலதனமும் அதிக அளவில் வைப்புத்தொகையும் திரட்டவேண்டுமென்ற கருத்து நிலவியிருந்தது. சிறிய, தனி வங்கிகள் அந்த அளவிற்கு முதல் திரட்டுவதும், வைப்புத்தொகை திரட்டுவதும் இயலாது. எனவே, கிளை வங்கி முறையினைக் கடைப்பிடிப்பதன் வழி அதிக அளவில் வைப்புத்தொகை திரட்ட இங்கிலாந்து வங்கிகள் முனைந்தன.

(ஈ) இலண்டன் மாநகரம் பல்வேறு நிலைகளிலும் முக்கியத்துவம் பெற்றுத் திகழ்ந்தது. அம் மாநகர் தீர்வகங்களின் மையஇடத்தைப் பெற்றிருந்தது. எனவே, எல்லா வங்கிகளும்

இலண்டன் மாநகரில் செயல்படுகின்ற அளவில் ஒரு கிளை தேவை என்று கருதின. மேலும், தங்களுடைய மூலதனத்தையும், திரட்டிய வைப்புத்தொகையினையும் இலாபகரமாக முதலீடு செய்ய இலண்டன் மாநகரமே சிறந்ததெனக் கருதின. எனவே, வெளி மாநிலங்களில் செயல் புரிந்துவந்த வங்கிகள் இலண்டனிலுள்ள வங்கிகளுடன் இணைந்துகொள்ள ஆவன செய்தன.

(உ) தொழில் வளர்ச்சியில் இங்கிலாந்து சமமான நிலையினைப் பெற்றிருக்கவில்லை. ஒரு சில வட்டாரங்களில் தொழில் வளர்ச்சி பெற்று அவ் வட்டாரங்கள் தொழில் மயமாகத் திகழ்ந்தன. ஆனால், அவ் வட்டாரங்களில் தொழில் வளர்ச்சிக்குத் தேவையான அளவு பணம் திரட்ட முடியவில்லை. அதே நேரத்தில் வேளாண்மை வளர்ச்சி பெற்ற பிற வட்டாரங்களில் முதலீடு செய்யப்படாத பணம் எஞ்சியிருந்தது. இவ்வாறு முதலீடு செய்யப்படாது எஞ்சிய பணத்தினைப் பெற்றுள்ள வங்கிகள், நகரப்புறங்களில் உள்ள வங்கிகளுடன் தொடர்புகொண்டு இணைந்து செயல்பட விரும்பின.

இவ்வாறு வங்கிகள் இணைந்து செயல்பட்டதன் காரணமாக வங்கிகள் சிக்கனமாகவும், திறமையாகவும் செயல் புரியும் வாய்ப்புப் பெற்றிருந்தன. மேலும், அவற்றினுடைய நிருவாகச் செலவும் மிகவும் குறைவாக இருந்தது, சுருங்கக் கூறின், இவ் வங்கிகள் பேரளவு நிறுவனங்களின் நன்மைகளைப் பெற்றுத் திகழ்ந்தன, மேலும் பொருளாதார மந்த காலங்களில் இத்தகைய வங்கிகளே நிலைத்துச் செயல்பட முடிந்தது.

அமெரிக்காவில் வங்கிகளின் இணைப்பு : இங்கிலாந்து நாட்டினைப் போன்று வேறு பல நாடுகளில் வங்கி இணைப்பு மூலம் கிளை வங்கி முறை செயல்படுத்தப் பட்டாலும், அமெரிக்க நாட்டைப் பொறுத்தவரை கிளை வங்கி முறை சிறந்ததாகக் கருதப்படவில்லை. அந் நாட்டில் தனி வங்கி முறைதான் சிறந்ததாகக் கருதப்பட்டது, எனவே, அங்குத் தனி வங்கி முறையை ஆதரிக்கும் வகையிலும், கிளை வங்கி முறையைத் தடை செய்யும் வகையிலும் சட்டம் இயற்றப்பட்டது. 1923 ஆம் நூற்றாண்டில்தான் வங்கிகள் இணைந்து செயல்படுவதற்கான அவசியம் ஏற்பட்டு வங்கிகள் இணைந்து செயல்படத் துவங்கின. 1928 ஆம் ஆண்டுக்குப் பின்னர் அமெரிக்க நாட்டில் வங்கிகள் இணைவது அதிகமாகியது. கிளை வங்கி, முறையற்ற வங்கிகள் அத்தகைய முறையின் நன்மை களைத் தொடர்பு வங்கி முறை, தொகுப்பு வங்கி முறை ஆகியவை மூலம் பெறுகின்றன.

இந்தியாவில் வங்கிகளின் இணைப்பு : இந்தியாவில் கிளை வங்கி முறைதான் கடைப்பிடிக்கப்படுகிறது. அதன்படி பெரும் வங்கிகள் பெரும் நகர்ப் புறங்களில் தேவைக்கு அதிகமாகவும் கிளைகள் திறந்தன. குறிப்பாக 1939ஆம் ஆண்டுக்குப் பிறகு அதிகமான அளவில் கிளைகள் திறக்கப்பட்டன. அவ்வாறு கிளைகள் ஆரம்பிக்கப்பட்டதும், உரிய முறையில் அமைந்ததாக இல்லை. சில வங்கிகள் தேவைக்கு மீறிய அளவில் கிளைகள் திறந்ததாகக்கூடக் கருதப்பட்டது. அக் கூற்றினை மெய்ப்பிக்கும் வகையில் கிளைகள் திறந்த வங்கிகள் பலவற்றில் போதிய நிதி வசதிகூட இல்லாதிருந்தது. இந்நிலையினைச் சமாளிக்கும் வகையில் முறைகேடான வழிகளைக் கையாண்டதன் காரணமாக 1940 முதல் 1945 வரையிலான காலத்தில் ஏறத்தாழ 250 வங்கிகளை மூட வேண்டிய நிலை ஏழுந்தது. தொடங்கப்பட்ட கிளைகளும் உரிய கொள்கையின்படி தொடங்கப்பட்டதாகக் கூறுவதற்கில்லை. வங்கிகள் உள்ள இடங்களிலேயே மேலும், மேலும் கிளைகள் திறக்கப்பட்டன. வங்கி இல்லாத இடமும் இருக்கத்தான் செய்தது. ஒரு சில நகர்ப்புறங்கள் கூடப் புறக்கணிக்கப்பட்டன. பல சிற்றூர் மக்கள் வணிக வங்கி வசதி மட்டுமின்றி, அஞ்சல் வங்கி வசதியோ கூட்டுறவு வங்கி வசதியோகூட இன்றி அவதியுற்றனர். அவ்விடங்களில் வங்கிகள் போதிய இலாபமீட்ட முடியவில்லை என்பதே அந்நிலைக்குக் காரணமென்பது அரசின் கருத்தாக விருந்தது. இதன் விளைவாக, நகரங்களில் வங்கிகளுக்கு இடையே வைப்புத் தொகை திரட்டக் கடும் போட்டி, சிற்றூர் மக்களிடம் பயன்படுத்தப்படாத சேமிப்புத் தேக்கம் என்ற அவல நிலை உருவாயிற்று.

மேற்குறிப்பிட்ட அவல நிலையைச் செம்மைப்படுத்தப் பல முயற்சிகள் எடுக்கப்பட்டன. வங்கியியல் ஒழுங்காற்றுச் சட்டம், கிளைகள் திறப்பது குறித்தும், கிளைகள் மூடுவது குறித்தும் விதித்த கட்டுப்பாடும் அவற்றுள் ஒன்றாகும். அச் சட்டத்தின்படி ஒரு வங்கி புதிய கிளையைத் திறப்பதற்கும் செயல்பட்டுவரும் கிளையை மூடுவதற்கும் மைய வங்கியான ரிசர்வ் வங்கியின் இசைவினைப் பெறுதல் அவசியமாகும். இக் கட்டுப்பாடு பல்வேறு வங்கிகள் ஒரே இடத்தில் தேவைக்கு அதிகமான அளவு கிளைகள் திறப்பதைத் தவிர்க்கிறது. 1956-ஆம் ஆண்டு வரை ரிசர்வ் வங்கி வணிக வங்கிகள் கிளைகள் திறப்பதற்கு எளிதில் இசைவளிக்கவில்லை. இக் கட்டுப்பாடு 1959-இல் சிறிது தளர்த்தப்பட்டது. இதன் காரணமாக 1959-ஆம் ஆண்டுக்குப் பிறகு வங்கிகளின் எண்ணிக்கை சற்றுக் கூடுதலாகி வங்கியியல் வளர்ச்சி பெற ஆரம்பித்தது. எனினும், திறக்கப்பட்ட கிளைகள் யாவும் நகர்ப்

புறங்களிலேயே அமைந்ததன் காரணமாக. கிராமங்களில் வங்கியியல் வசதி வளர்ச்சி பெற வாய்ப்பே இல்லாது போயிற்று. எனவே, இக் கட்டுப்பாடற்ற வளர்ச்சிக் கொள்கை மீண்டும் 1962 - 1963-ல் ஆராயப்பட்டது. அதன்படி எல்லா வங்கிகளும், கிளைகள் திறப்பதற்குரிய திட்டத்தினைத் தீட்டி அத் திட்டத்தினை ரிசர்வ் வங்கியிடம் கொடுத்து அதன் ஒப்புதலைப் பெறுதல்வேண்டுமென முடிவு செய்யப்பட்டது.

மேலும், வங்கி வசதியற்ற இடங்களின் பட்டியல் ஒவ்வொரு வங்கிக்கும் அளிக்கப்பட்டு அந்த இடங்களில் வங்கிகள் திறக்க ஆவன செய்யுமாறு வங்கிகள் கேட்டுக் கொள்ளப்பட்டன. 1969ஆம் ஆண்டில் அது வரை இல்லாத அளவிற்கு 1346 கிளைகள் திறக்கப்பட்டன. அவற்றுள் 785 கிளைகள், வங்கி வசதியற்ற இடங்களில் திறக்கப்பட்டவையாகும். 1969-ஆம் ஆண்டு ஏற்பட்ட வங்கித்தொழில் புரட்சிக்குப் பிறகு 14 வங்கிகள் நாட்டுடைமையாக்கப்பட்ட பிறகு கிளைகள் திறப்பது மேலும் ஊக்குவிக்கப்பட்டது. ரிசர்வ் வங்கியே கிளைகள் திறப்பதற்கான திட்டம் ஒன்றினைத் தீட்டி அதனைச் செயல்படுத்த விழைந்தது. அத் திட்டப்படி புதிதாகத் திறக்கப்படவிருக்கும் கிளை வங்கிகள், வங்கி வசதியற்ற இடங்களிலேயே நிறுவப்படும். இதன் காரணமாகக் கிராமங்களில் திறக்கப்பட்ட வங்கிகளின் எண்ணிக்கை கணிசமான அளவிற்கு உயர்ந்தது.

தொடக்க காலத்தில் இந்தியாவிலும் தனி வங்கி முறையே இருந்திருக்கின்றது. பெரும்பாலான வங்கிகள் சிறிய வங்கிகளாகவே இருந்திருக்கின்றன. நமது நாட்டின் பொருளாதார அடிப்படைக்கு இத்தகைய வங்கிகள் ஏற்றவையல்லவென்றும், பேரளவில் செயல்படும், கிளை வங்கிகளே ஏற்றவை என்றும் பொருளாதார வல்லுநர்கள் கருத்துக் கொண்டிருந்தனர். எனவே ஒரு சில இடர்ப்பாடுகளும், குறைபாடுகளும் இருப்பினும்கூட, பேரளவு நிறுவனத்தின் நன்மைகள் கிடைப்பதனாலும், கட்டுப்பாடற்ற முறையில் கிளைகள் திறக்கும் வாய்ப்புகள்பெற வசதியுள்ளது என்பதனாலும் இந்தியாவிற்குக் கிளை வங்கி முறையே சிறந்ததெனக் கருதப்பட்டது. இருப்பினும் உரிய முறையில் வங்கியியல் முறை வளர்ச்சி பெறுவான் வேண்டி, வங்கிகள் இணைவது குறித்து ஒரு சில கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டன. வங்கியியல் ஒழுங்காற்றுச் சட்டத்தின் 44 (A) பிரிவின்படி ரிசர்வ் வங்கியின் இசைவின்றி வங்கிகள் இணைவது தடுக்கப்பட்டது. வைப்புத்தொகை செலுத்தியவர்கள் நலன் பாதிக்காத அளவில் வங்கிகள் இணையத் திட்டம் தீட்டப்பட்டால், பொதுவாக அத் திட்டத்தினை ரிசர்வ்

வங்கி ஏற்று, வங்கிகள் இணைய இசைவு வழங்குவது இங்குக் குறிப்பிடத்தக்கதாகும். 1950ஆம் ஆண்டில் மேற்கு வங்காளத்தில் அட்டவணையிலிடப்பட்ட நான்கு பெரும் வங்கிகள் இந்திய ஐக்கிய வங்கி (United Bank of India Ltd.) என்ற பெயரில் இணைந்ததை இங்கு எடுத்துக்காட்டாகக் கூறலாம்.

ரிசர்வ் வங்கியின் நோக்கம், தனித்து நின்று செயல்பட முடியாத வங்கிகள், தாமாகவே முன்வந்து இணைய வேண்டுமென்பதாகும். ஆனால், நடைமுறையில் ஒரு சில வங்கிகளே தன்னிச்சையாக இணைப்புக்கு முன்வந்தன. இடையில் ஒரு சில வங்கிகள், குறிப்பாக இரு அட்டவணையிலிடப்பட்ட வங்கிகள் முறிவடைந்ததையொட்டி வங்கியியல் தொழிலில் செய்யப்பட வேண்டிய மாற்றங்கள் குறித்து அலசி ஆராயப்பட்டது, அது போன்ற நிலை ஏற்படாதவாறு செய்வதற்கான வழி முறைகளை நிர்ணயிக்க முயற்சிகள் எடுக்கப்பட்டன. அதன் எதிரொலியே வங்கியியல் ஒழுங்காற்றுச் சட்டத்தின் 45ஆவது பிரிவாகும். இப் பிரிவின்படி, ரிசர்வ் வங்கி ஒரு குறிப்பிட்ட வங்கிக்குக் கடன் தவணை வழங்கும் வகையில் ஆணைபிறப்பிக்குமாறு மைய அரசுக்கு வேண்டுகோள் விடுக்கலாம். ரிசர்வ் வங்கியின் வேண்டுகோளின்படிமைய அரசு, ஆறு திங்கள்களுக்கு மிகாது கடன் தவணை வழங்கலாம். இக் காலத்திற்குள், பொது மக்கள் நலனுக்கும், வைப்பாளர்கள் நலனுக்கும், சிறந்த முறையில் வங்கியை மேலாண்மை செய்வதற்கும் நாட்டின் வங்கியியல் தொழிலுக்கும் ஏற்றதென்று மைய வங்கி கருதினால், அது அக்குறிப்பிட்ட வங்கியின் புனரமைப்புக்கான திட்டம் ஒன்றினைத் தீட்டலாம். அல்லது அவ் வங்கி இதர வங்கிகளுடன் இணைவது குறித்த திட்டம் ஒன்றினைத் தீட்டலாம். எனவே, இப் பிரிவு வங்கிகளை இணைப்பது குறித்த திட்டம் தீட்டும் உரிமையினை மைய வங்கியான ரிசர்வ் வங்கிக்கு அளிக்கின்றது.

வைப்பு வங்கி முறையும் கலப்பு வங்கி முறையும்
(Deposit Banking and Mixed Banking)

வங்கியியல் தொழில் பல வகையைச் சார்ந்ததாகும். அவற்றுள் முக்கியமானவை வணிக வங்கியியல், தொழில் வங்கியியல் ஆகிய இரு வகைகளே. எனவே, ஒரு வங்கி இவ்விரண்டு தொழில்களில் ஒன்றினையோ இவ்விரண்டையுமோ புரிதல் வேண்டும். ஆகையால்தான், பொருளாதார வல்லுநர்கள் வங்கியியலை, வங்கிகளின் பணிகள் அடிப்படையில் வைப்பு வங்கியியல், முதலீட்டு வங்கியியல், கலப்பு வங்கியியல் எனவும், வங்கிகளை வைப்பு

வங்கிகள் முதலீட்டு வங்கிகள், கலப்பு வங்கிகள் என மூன்று வகையாகவும் பிரித்துள்ளனர்.

பொதுவாக, வைப்பு வங்கிகளை, வணிக வங்கிகள் என்றழைக்கிறோம். வைப்புத்தொகையினைப் பெறுதலும், அவ்வாறு பெறப்பட்ட வைப்புத்தொகையினைச் சிறு தொழிலதிபர்கள், சிறு வணிகர்கள் ஆகியோருக்குக் குறுகிய காலக்கடனுக அளிப்பதும், வணிக வங்கிகளின் முக்கிய பணிகளாகுமென மூன்றாம் அத்தியாயத்தில் பார்த்தோம். இவ்வாறு அளிக்கப்படும் குறுகிய காலக்கடன், அத் தொழில் நிறுவனங்களால், நடைமுறை முதலாகப் பயன்படுத்தப்படுகின்றது. இவ்வாறு வைப்புத்தொகை பெறுதல் குறுகிய காலக்கடன் அளித்தல் ஆகிய பணிகளைச் சுருக்கமாக வைப்பு வங்கியியல் அல்லது வணிக வங்கியியல் என்றும் அப் பணிகளை மேற்கொள்ளும் வங்கிகளை வணிக வங்கிகளென்றும் கூறுகிறோம். இவை, மரபு வழியில் செயல்படுகின்றன.

தொழில் நிறுவனங்களுக்குக் குறுகிய காலக்கடன் மட்டும் போதாது. நீண்ட காலக் கடனும் தேவைப்படுகின்றது. அவ்வாறு நீண்டகால நிதியினை வழங்குவதில் மட்டும் ஈடுபட்டுள்ள வங்கிகளை 'முதலீட்டு வங்கிகள்' என்றழைக்கின்றோம், இத்தகைய வங்கிகள் 'தொழில் வங்கிகள்' என்றும் அழைக்கப்படுகின்றன. இவை தொழில் நிறுவனங்களுக்கு, அவற்றினுடைய பங்குகளை வாங்கி முதலீடு செய்வதன் வழியும் அவை வெளியிடும் பங்குகளை ஒப்புறுதி செய்வதன் (Under writting) மூலமும் நிதியுதவியளிக்கின்றன. தொழில் நிறுவனங்களுக்கு நிதியுதவியளித்து அவை வளர்ச்சியுற ஆவன புரிதலே இவற்றின் நோக்கமாகும். இவை, பொதுமக்களிடமிருந்து வைப்புத்தொகை பெறுவதில்லை எனவே, இவைகள், தங்கள் மூலதனத்தையே பெரும்பாலும் முதலீட்டிற்கு நம்பியுள்ளன.

வைப்புத்தொகை பெறுதல், தொழில் நிறுவனங்களில் நீண்ட காலத்திற்கு முதலீடு செய்தல் ஆகிய இரு பணிகளையும் ஒருசேரப் புரியும் வங்கிகளைக் கலப்பு வங்கிகள் என்று கூறுகிறோம். தொடக்க காலத்தில் சேர்மன் நாட்டைத் தவிர, இதர நாடுகளில் வணிக வங்கி முறை தனியாகவும், முதலீட்டு வங்கி முறை தனியாகவும் கடைப்பிடிக்கப்பட்டு வந்தது. சேர்மன் நாட்டில் மட்டும் கலப்பு வங்கி முறை கடைப்பிடிக்கப்பட்டு வந்தது. ஆனால், இந்த நூற்றாண்டில் எல்லா நாட்டு வங்கிகளிலும், சேர்மன் வங்கி முறையினைக் கடைப்பிடித்துக் கலப்பு வங்கி முறையினைச் செயல்படுத்துகின்றன. வைப்பு வங்கிகளின் முறைப்படி இன்றைய

வங்கிகள் வைப்புத்தொகை பெறுகின்றன. முதலீட்டு வங்கிகளின் செயல்படி தொழில் நிறுவனங்களுக்கு நடைமுறை முதலீடு வழங்குகின்றன. இவ்வாறு நடைமுறை முதல் வழங்குவதால் வங்கிகளின் எளிவரல் தன்மை குறைந்து விடுவதில்லை. இருப்பினும் மரபுவழி வல்லுநர்கள், தொழில் நிறுவனங்களுக்குக் கடன்வசதி யளிப்பது வணிக வங்கிகளின் பணியல்லவென்றும் எளிவரல் தன்மையினடிப்படையில் அவை நீண்டகாலக் கடன் கொடுக்கும் பணியை மேற்கொள்ளக் கூடாதென்றும் கூறிவந்தனர்.

வைப்பாளர்கள் நோக்கில், வணிக வங்கியியல் முறை சிறந்தது. ஏனெனில், இம்முறையினடிப்படையில் வங்கிகள் தங்கள் நிதியினை நீண்டகாலத்திற்கு முதலீடு செய்வதில்லை. ஆனால், நாட்டின் தொழில் வளர்ச்சியினடிப்படையில் வணிக வங்கியியல் முறை அவ்வளவு விரும்பத் தக்கதன்று. எனவே, கீழ்க்காணும் சூழ்நிலைகளில் மட்டுமே வணிக வங்கியியல் முறை ஏற்றுக்கொள்ளத்தக்கதெனக் கூறலாம்.

(அ) தொழில் நிறுவனங்களுக்கு நிதிவசதியளிக்கத் தனியாக வங்கிகள் வளர்ந்துள்ள நிலையில் வைப்பு வங்கிகள் குறுகிய காலக் கடன் கொடுக்கும் பணியினை மட்டும் மேற்கொண்டால் போதுமானதாகும். எடுத்துக்காட்டாக, இங்கிலாந்து நாட்டில், வெளியீட்டகங்கள் (Issue Houses) ஒப்புறுதியாளர்கள் புதிய கம்பெனிகள் தொடங்குவதற்கும், அவை வெளியிடும் பங்குகள், கடன் பத்திரங்கள் ஆகியவற்றை விற்பனை செய்வதற்கும் உதவி புரிவதால் இங்கிலாந்து வணிக வங்கிகள் வைப்பு வங்கியியலில் மட்டும் ஈடுபட்டுள்ளன.

(ஆ) வங்கிகள் மிகக் குறைவான வீதத்தில் மூலதனத்தைக் கொண்டிருப்பின், அவை நீண்டகால நிதிவசதி அளிக்கமுடியாது. எடுத்துக்காட்டாக, ஒரு வங்கி, அதனுடைய மொத்தப் பொறுப்புத் தொகையில் மிகக் குறைவான விகிதத்திலேயே, மூலதனத்தையும், ஒதுக்குத் தொகையினையும் பெற்றிருக்குமாயின் அவ்வங்கி, நீண்டகாலக் கடன் கொடுப்பதன்வழி, இழப்பு வாய்ப்பினை (Risk) எதிர்நோக்கமுடியாது. எனவே, அவ்வங்கி தொழில் நிறுவனங்களுக்கு நீண்டகால நிதி வசதியளித்தல் என்பதும் இயலாதது. எனவே, இவ்வங்கிகள், எளிவரல் தன்மையின் அடிப்படையில் குறுகிய காலக் கடன் அளிப்பதே ஏற்றதாகும்.

(இ) ஒரு நாட்டில், தொழில் நிறுவனங்களில் நேரடியாக முதலீடு செய்யும், செல்வந்தர்கள் இருப்பின் அந்நாட்டில் வைப்பு வங்கிகள் செழித்து வளர வாய்ப்புள்ளது. எடுத்துக்காட்டாக, இங்கிலாந்து நாட்டில் தொழில் புரட்சிக்கு முன்னதாக ஏற்பட்ட,

வாணிகப் புரட்சியின் காரணமாகச் செல்வந்தர்கள், தங்களிட மிருந்த பணத்தை, வங்கிகளுடைய துணை இன்றி நேரடியாகப் பல்வேறு நிறுவனங்களில் முதலீடு செய்வதன் விளைவாக, வணிக வங்கிகள் தொழில் நிறுவனங்களின் முன்னேற்றத்தில் நேரடியாக ஈடுபடவேண்டிய அவசியம் எழவில்லை. எனவே, அவை, வைப்பு வங்கிகளாகவே செயலாற்றி அந்த நாட்டில் வைப்பு வங்கியியலில் முன்னேற வாய்ப்பேற்பட்டது.

(ஈ) ஒரு நாட்டில் வைப்பு வங்கிகள் முன்னேறுவது அந் நாட்டின் தொழில் வளர்ச்சியினையும், தொழில் நிறுவனங்கள் வங்கிகளிடம் கொண்டுள்ள ஈடுபாட்டினையும் பொறுத்தே அமையும். தொழில் நிறுவனங்கள், பொதுமக்களிடமிருந்து முதல் திரட்டித் தொழில் தொடங்கி, பின்னர் மறு முதலீட்டுக் கொள்கையின்படி தங்கள் நிலையினை வளர்த்துக்கொண்டால், அவை வங்கிகளிடம் முதல் திரட்டும்பொருட்டு, அவற்றை நாட வேண்டியதில்லை. எடுத்துக்காட்டாக, 1914ஆம் ஆண்டுகளுக்கு முன்னர், இங்கிலாந்து நாட்டில் தொழில் நிறுவனங்கள், தனி நிறுமங்களாகவும், (Companies) கூட்டாண்மை நிறுவனங்களாகவும் தொடங்கப்பட்டன. எனவே, அவற்றிற்குத் தேவையான மூலதனம், அந் நிறுவனங்களின் உரிமையாளர்கள், அவர்களின் நண்பர்கள், உறவினர்கள் ஆகியோரிடமிருந்தே திரட்டப்பட்டுவிட்டமையின் அவை வங்கிகளிடமிருந்து நிதி உதவி பெறவேண்டிய அவசியத்தைப் பெற்றிருக்கவில்லை. ஆகையால், வங்கிகளுக்கும், இங்கிலாந்து நாட்டின் தொழில் நிறுவனங்களுக்குமிடையே நெருங்கிய தொடர்பில்லை. இதன் விளைவாகவே இங்கிலாந்து நாட்டின் வைப்பு வங்கியியல் முறை நன்கு வளர்ச்சிபெற வாய்ப்பேற்பட்டது. இதுபோன்று வைப்பு வங்கியியல் முறை எல்லா நாடுகளிலும் நன்கு வளர்வதற்கான வாய்ப்பு ஏற்படுமென்று கூறுதல் இயலாததாகும்.

தொழில் வங்கி அல்லது முதலீட்டு வங்கி : தொழில் வங்கி முறை, செர்மனி நாட்டுடன் பிணைந்ததென்று கூறலாம். தொழில் வளர்ச்சியில் வணிக வங்கிகள் புரியவேண்டிய பணிகுறித்து ஒருமித்த கருத்து நிலவவில்லை. இங்கிலாந்து நாட்டில் வணிக வங்கிகள் தொழில் நிறுவனங்களுக்குத் தேவையான நீண்டகால நிதியினைக் கொடுத்தல் அவற்றினுடைய எளிவரல் தன்மையினைப் பாதிக்குமென்றும், எனவே, வணிக வங்கிகள் தொழில் நிறுவனங்களுக்குத் தேவையான நீண்டகால நிதியை அளிப்பது உகந்ததல்ல என்றும் தெளிவான கருத்துக் கொண்டிருந்தனர். ஆனால், செர்மனி நாட்டு மக்கள் வேறு வகையான கருத்துக்

கொண்டிருந்தனர். அவர்களுடைய கருத்துப்படி வணிக வங்கிகள், தொழில் நிறுவனங்களுக்கு நீண்டகால மூலதனத்தை வழங்குவதில் தவறெதுவும் இல்லை என்றும், அவ்வாறு வணிக வங்கிகள், அப் பணியினை ஏற்பதன் வழியே, ஒரு நாட்டின் தொழில்வளம் பெருக முடியுமென்றும் தெளிவானதொரு கருத்துக் கொண்டிருந்தனர்.

செர்மானிய நாட்டு மக்கள் மேற் குறிப்பிட்டுள்ள கருத்தினைக் கொண்டிருந்ததற்கு இரு காரணங்களைக் குறிப்பிடலாம். ஒன்று, தொழில் வளர்ச்சியில் ஈடுபட்டிருந்த செர்மானிய நாட்டில், அதற்குத் தேவையான மூலதனம் கிடைக்கவில்லை. இரண்டாவது, முதலீனைக் கொண்டிருந்த பெரும் செல்வந்தர்களும் தொழில்களில் முதலீடு செய்யத் தயங்கினர், எனவே, தொழில் வளர்ச்சிக்கான பல்வேறு முதல்களை அளிப்பது வங்கிகளுடைய கடமையாகக் கருதப்பட்டது. செர்மானிய வணிக வங்கிகள் தொழில்களை நிறுவுவதிலும், தொழில் நிறுவனங்களை வளர்ப்பதிலும் நேரடியாகப் பங்கு பெற்றன.

தொழில் நிறுவனங்களைத் தோற்றுவிக்கும் முகத்தான் 1853 ஆம் ஆண்டுக்குப் பிறகு செர்மானிய நாட்டில் பல வணிக வங்கிகள் தொடங்கப்பட்டன. அவை பெரும்பாலும் தங்கள் சொந்த மூலதனத்துடனேயே செயல்பட்டன. ஆனால், காலப் போக்கில் அவ் வங்கிகள் இலாபகரமான முறையில் செயல் பட்டதன் காரணமாக அவை பொதுமக்களிடமிருந்து வைப்புத் தொகையினையும் திரட்ட முடிந்தது. எனவே, தொழில் வங்கியாகத் தொடங்கப்பட்ட செர்மானிய வங்கிகள், ஒரு நிலைக்குப் பிறகு வைப்புத் தொகையினையும் பெறத் தொடங்கின. இவ்வாறு வைப்புத் தொகையினையும் பெற்று, தொழில் நிறுவனங்களுக்கு நீண்ட காலக் கடனையும் அளிக்கும் வங்கியினைக் 'கலப்பு வங்கி' என்றும், அந்த வங்கி முறையினைக் 'கலப்பு வங்கி முறை' என்றும் கூறுகிறோம்.

கலப்பு வங்கி முறை : பொது மக்களிடமிருந்து வைப்புத் தொகை பெறுவதுடன்கூட, அதனைத் தொழில் நிறுவனங்களில் நீண்ட காலத்திற்கு முதலீடு செய்யும் வங்கிகளைக் 'கலப்பு வங்கிகள்' என்றும், அத்தகைய வங்கி முறையினைக் 'கலப்பு வங்கி முறை' என்றும், கூறுகிறோம். கலப்பு வங்கிகள் தங்களுடைய வாடிக்கைக்காரர்களைப் பற்றிய எல்லா விவரங்களையும் அறிந்து கொண்டிருக்கும். நம்பிக்கை மிக்க நிறுவனங்களுக்குத் தேவைப் படும்பொழுதெல்லாம் உரிய முறையில் அவை கடன் கொடுக்கின்றன. பெருமளவில் முதலீடு செய்யவேண்டிய நிலையில் பல

வங்கிகள் ஒன்று சேர்ந்து ஒரு கூட்டு நிறுவனம் ஒன்றை நிறுவுவதுமுண்டு. கூட்டு நிறுவனத்தின் எல்லா உறுப்பினர்களும் கூட்டாகத் தொழில் நிறுவனத்தை உருவாக்க முதலீடு செய்கின்றன. இவ்வாறு உருவாக்கப்பட்ட தொழில் நிறுவனங்களைக் கட்டிக்காக்கும் பொருட்டு, அத் தொழில் நிறுவனங்களின் இயக்கு நரவைகளில் இவ் வங்கிகள் அங்கம் வகிப்பதுமுண்டு. இவ்வாருக, கலப்பு வங்கி முறையில் தொழில் நிறுவனங்களுக்கும் வங்கிகளுக்கு மிடையே நெருங்கிய உறவு நிலவுகின்றது.

கலப்பு வங்கியியல் முறையில் வங்கிகள் தொழில் நிறுவனங்களின் வளர்ச்சிக்கு ஆதாரமாக அமைகின்றன. அவற்றினுடைய அமைப்புக்கும், விரிவாக்கத்திற்கும் காரணமாகவும் அமைகின்றன. ஆனால், இம் முறையில், வங்கிகள், நிரந்தரமாகச் செயல்பட வேண்டுமாயின், அவை, தங்களுடைய எளிவரல் தன்மையினைக் கடைப்பிடித்தும், அதே நேரத்தில் ஓரளவிற்கு இலாபகரமான முறையிலும் செயல்படவேண்டும். ஒரு வங்கி அதிகமான அளவில் சொந்த முதலினைப் பெற்றிருக்குமேயானால் எவ்வித ஐயமுமின்றி அவ் வங்கி கலப்பு வங்கி முறையினைக் கடைப்பிடிக்கலாம்.

செர்மானிய நாட்டினையும், இதர நாடுகளையும் ஒப்பிட்டுப் பார்ப்போமேயானால், இதர நாடுகளைப்போலன்றி, செர்மானிய நாட்டில் கலப்பு வங்கி முறை நன்கு வளர்ந்திருப்பதைக் காணலாம். அவ்வாறு, அந்த நாட்டில் மட்டும் கலப்பு வங்கி முறை நன்கு வளர்ந்துள்ளதற்குக் கீழ்க் கண்டவை காரணங்களாக அமைகின்றன.

(அ) இதர நாடுகளைப்போலன்றி, செர்மானிய நாட்டில், வங்கிகள் மிகக் கூடுதலான அளவில் சொந்த மூலதனத்தைப் பெற்றுள்ளன. எடுத்துக்காட்டாக, இங்கிலாந்து நாட்டு வங்கிகளில் சராசரியாக ஒவ்வொரு வங்கியும் தனது மொத்த நிதியில் 9 விழுக்காட்டுப் பகுதியினையே சொந்த மூலதனமாகத் திரட்டியுள்ளது. ஆனால், செர்மானிய நாட்டு வங்கி ஒவ்வொன்றும் மொத்த நிதியில் 45 விழுக்காட்டுப் பகுதியினைச் சொந்த நிதியாகப் பெற்றுள்ளது. இவ்வாறு அதிக அளவில் சொந்த மூலதனத்தைப் பெற்றுள்ளதால் செர்மானிய வங்கிகள் நீண்ட காலத்திற்கு முதலீடு செய்யமுடிகிறது.

(ஆ) இரண்டாவதாக, ஒரு வங்கியின், வெற்றி, அது எந்த அளவில், திறமையாக, இழப்பு வாய்ப்பினைக் குறைவாகக் கொண்டு, அதிக அளவில் இலாபமீட்டுமாறு தன்னுடைய நிதியினை முதலீடு செய்கின்றது என்பதனைப் பொறுத்தே உள்ளது. இதனைப் பொறுத்தவரை செர்மானிய வங்கிகள், மிகத் திறமையுடன் செயல்புரிகின்றனவென்று குறிப்பிடலாம்.

(இ) சேர்மானிய வங்கிகள், ஒன்றுடன் ஒன்று பிணைந்து செயல்படுவது குறிப்பிடத்தக்கதாகும். அவசியம் எழுங்கால் பல வங்கிகள் ஒன்றுகச்சேர்ந்து கூட்டு நிறுவனமாகவும் செயல்படுகின்றன. அவ்வாறு கூட்டு நிறுவனமாகச் செயல்படும்போது அவ் வங்கிகள் தங்களுடைய இழப்பு வாய்ப்பினைக் குறைத்துக் கொள்ளும் நிலையினை அடைகின்றன.

(ஈ) இறுதியாக, சேர்மானிய வங்கிகள், கலப்பு வங்கிகளாகச் சிறப்பான முறையில் செயல்படுவதற்கு அவற்றுடைய திறமை மிக்க மேலாண்மையும் ஒரு காரணமாகும். ஒவ்வொரு வங்கியும், திறமை மிக்க வல்லுநர்களால் மேலாண்மை செய்யப்படுவது குறிப்பிடத்தக்கதாகும். மேலும், ஒரு சில வங்கிகள், தங்களுடைய முதலீட்டுக் கோட்பாடுகளை நிர்ணயிக்கும் பொருட்டும், தங்களுக்கு முதலீட்டில் அறிவுரை வழங்கும் பொருட்டும் வல்லுநர் களைப் பணியிலமர்த்தியுள்ளன.

(ஊ) முதலாவது உலகப்போருக்குப்பிறகு வாணிப நிலையில் மந்தம் ஏற்பட்டது. வணிக வங்கிகள், மாற்றுச் சீட்டுகளில் முதலீடு செய்வதற்குப் போதிய வாய்ப்பினைப் பெற்றிருக்கவில்லை. இதனால் எழுந்த நிதி முடக்கத்தினைத் தவிர்க்கும்பொருட்டு வங்கிகள், தொழில் நிறுவனங்களில் நீண்ட கால முதலீடு செய்ய முனைந்தன.

(எ) தொழில் மந்த நிலையின் காரணமாகத் தொழிற் சேர்க்கை உருவாக்கப்பட்டது. தொழிற் சேர்க்கையின் விளைவாக ஒவ்வொரு தொழில் நிறுவனமும், நிதி வசதியினைப் பொறுத்தவரை தனித்து இயங்க ஆரம்பித்தது. எனவே, வங்கிகள் நீண்டகால முதலீடு செய்வதைத் தவிர இதர முதலீட்டு வாய்ப்பினைப் பெற்றிருக்க வில்லை.

கலப்பு வங்கி முறையின் நன்மைகள் : கலப்பு வங்கி முறையில் கீழ்க்காணும் நன்மைகள் உள்ளன:

(1) வங்கி தன்னுடைய வளத்தினைப் பெருக்கிக் கொள்ள வேண்டுமாயின் அதன் வளத்திற்கு ஆதாரமாக உள்ள தொழில் நிறுவனங்களுக்கு முற்றிலும் உதவுதல் வேண்டும். மரபுவழி வணிக வங்கி வாணிபத்தைப் பெருக்கும் வகையில் செயல்படுகிறதே தவிரத் தொழிலைப் பெருக்கும் வகையில் செயல்படுவதில்லை. வாணிகப் பெருக்கத்திற்குத் தொழில் பெருக்கம் ஆதாரமாக அமைகின்றது. எனவே, கலப்பு வங்கி முறையில், வங்கிகள், தொழிலையும், வாணிபத்தையும் விரிவாக்குவதன்வழி, தங்களையே விரிவாக்கிக் கொள்கின்றன.

(2) பங்கு மாற்று நிலையங்கள், நன்கு வளர்ந்துள்ள இக்காலத்தில், தொழிற்பத்திரங்கள் எளிவரல் தன்மை பெற்றுத் திகழ்கின்றன. எனவே, தொழிற்பத்திரங்களில் முதலீடு செய்வதன் வழி வங்கிகள் இலாப மீட்டும் வாய்ப்பினைப் பெறுகின்றன.

(3) நாட்டின் தொழில் வளம் பெருக, கலப்பு வங்கி இன்றியமையாததாகிறது. சேர்மானிய நாட்டின் தொழில்வளம், இதற்குச் சிறந்த எடுத்துக் காட்டாக அமையும்.

(4) பணம் படைத்தவர்கள் அறியாமையின் காரணமாகத் தொழில்களில் நேரிடையாக முதலீடு செய்யத் தயங்கும் காலத்தில் அவர்களுடையப் பணத்தை, வைப்புத்தொகையாகப் பெற்று, இழப்பு வாய்ப்புகளைத் தாங்களே ஏற்று முதலீடு செய்யும் வகையில் கலப்பு வங்கிகள் பணிபுரிகின்றன.

(5) வைப்பு வங்கியியல் மூலம்தான், பயனற்று, உற்பத்திக்குப் பயன்படுத்தப்படாது பாழடிக்கப்படும் சேமிப்புத் தொகையினைத் திரட்ட முடிகிறது. அவ்வாறு திரட்டிய பணத்தைத் தொழில் வங்கியியல் மூலம்தான் தொழில் நிறுவனங்களில் முதலீடு செய்ய முடிகின்றது. பயன்படுத்தப்படாது மக்களிடையே உள்ள பணத்தை, வைப்புத்தொகையாக இன்றி கடன் பத்திரங்கள், அல்லது பங்குகளை விற்பதன் மூலம் திரட்டுதல் என்பது இயலாததாகும்.

(6) வணிக வங்கிகள், தொழில் நிறுவனங்களுக்குக் குறுகிய காலக் கடன் கொடுப்பதன் மூலம், அவற்றினுடைய நாணயம், நேர்மை ஆகியவற்றை நன்கு அறிந்துகொள்கின்றன. எனவே, அவற்றின் அடிப்படையில், அதே வங்கிகள், எந்தெந்தத் தொழில் நிறுவனங்களுக்கு நீண்டகாலக் கடன் கொடுக்கலாம் என்பதனை முடிவுசெய்யும் தன்மையினைப் பெறுதல் முடியும்.

(7) கலப்பு வங்கிகள் பல்வேறு தொழில், வணிக நிறுவனங்களுடன் தொடர்பு கொண்டுள்ளன. எனவே, அவற்றிற்கு நாட்டின் பல்வேறு பொருளாதாரத் துறைகளைப்பற்றிய எல்லா விவரங்களும் தெரிந்திருக்கும். அதனடிப்படையில் அவை தொழில் முன்னேற்றம், சிக்கனம், ஆகியவை குறித்துத் தொழில் நிறுவனங்களுக்கு நன்கு கருத்துரை வழங்கமுடியும்.

(8) இறுதியாக, குறுகியகாலக் கடனுக்குக் கிடைக்கக்கூடிய வட்டி வீதத்தைவிட நீண்டகாலக் கடனுக்குக் கிடைக்கும் வட்டி வீதம் கூடுதலாக இருக்குமாதலின் வங்கிகள் அதிக வருவாய் ஈட்டும் வாய்ப்பினைப் பெறுகின்றன.

கலப்பு வங்கி முறை குறைபாடற்றது, நன்மையே பயக்க வல்லது எனக் கூறுதல் இயலாது. இம்முறையிலும் சில குறைபாடுகள் இருக்கத்தான் செய்கின்றன. கலப்பு வங்கி முறையிலுள்ள குறைபாடுகளாவன :

(1) வணிக வங்கிகளில் செலுத்தப்படும் வைப்புத்தொகை வாடிக்கைக்காரர்களால் எந்த நேரத்திலும் திரும்பப் பெறப்படலாம். அவ்வாறு கேட்டவுடன் செலுத்தத்தக்க வைப்புத் தொகையினை வங்கிகள் நீண்ட காலத்திற்கு முதலீடு செய்தல் சிறந்த வங்கியின் கோட்பாடாகக் கருதப்படவில்லை. அவ்வாறு செய்தல் வங்கியின் தொழிலைக் காலப் போக்கில் பாதிக்கலாமென்ற கருத்து நிலவுகிறது.

(2) பொருளாதார மந்த காலங்களில், பத்திரங்களின் மதிப்பு மிகவும் குறைந்துள்ள நிலையில், கலப்பு வங்கிகளுடைய நிலை மிகவும் பாதிக்கப்படக் கூடும். அவ் வங்கிகளுடைய முதலீட்டு மதிப்பு மிகவும் குறைந்து, அவ் வங்கிகளின் பொருளாதார நிலை சீர்குலையக் கூடும். அமெரிக்க நாட்டில் பொருளாதார மந்த நிலை ஏற்பட்ட காலத்தில் கலப்பு வங்கிகள் பாதிக்கப்பட்டது இதற்குரிய சிறந்த எடுத்துக்காட்டாகும்.

(3) செழிப்பு மிக்க காலங்களில் கலப்பு வங்கிகள் அதிக இலாபமீட்டுகின்றன. அவ்வாறு ஈட்டப்படும் இலாபத்தினை அவ் வங்கிகள், ஊக வணிகத்தில் முதலீடு செய்து அதன் காரணமாக அதிக நட்டமடையக் கூடிய வாய்ப்புள்ளது.

(4) பங்குச் சந்தை நன்கு வளராத நிலையில், கலப்பு வங்கிகள், தங்களிடமுள்ள பத்திரங்களை அவசரமான சூழ்நிலையில் ரொக்கமாக மாற்றமுடியாது. எனவே, அவற்றினுடைய எளிவரல் தன்மை பாதிக்கப்படலாம்.

(5) இறுதியாக, செழிப்புள்ள நிலையில் தொழில் நிறுவனங்கள் அதிக இலாபமீட்டுகின்றன. எனவே, அதிக இலாபமீட்டு முகத்தான் வணிக வங்கிகள், அதிக அளவில் கடனை உருவாக்கி முதலீடு செய்ய விழையலாம். அவ்வாறு அவை அதிக அளவில் கடனுக்கம் செய்து முதலீடு செய்தால், நாட்டில் பண வீக்கம் ஏற்பட வாய்ப்புள்ளது.

தொழில் வளர்ச்சியில் ஈடுபட்டிருந்த செர்மனி. அதற்குத் தேவையான மூலதனத்தைத் தனிப்பட்ட முறையில் மக்களிடமிருந்து திரட்ட முடியாததினாலும், செர்மனிய மக்களிடம் ஓரளவு சேமிப்புத்தொகை இருந்ததாலும், வளர்ச்சி பெற்று வந்த

செர்மானியத் தொழில் நிறுவனங்களுக்கு மிக அதிகமான அளவில் மூலதனம் தேவைப்பட்டதாலும், அந் நாட்டில் கலப்பு வங்கிமுறை தோற்றுவிக்கப்பட்டதென்று முன்னரே குறிப்பிட்டோம்.

செர்மனி நாட்டு வங்கிகளுடைய திறமை மிக்க கலப்பு வங்கி முறையினைக் கண்ணுற்ற இதர நாட்டு வங்கிகளும் அம் முறையினைக் கடைப்பிடிக்க விழைந்தன. வைப்பு வங்கிக்கு உறைவிடம் என்று கருதப்பட்ட இங்கிலாந்து நாட்டில்கூடக் கலப்பு வங்கி முறை பற்றிப் பேசப்பட்டது. ஆனால், ஆரம்ப காலத்தில் இங்கிலாந்து வங்கிகள், கலப்பு வங்கி முறையினை அவ்வளவாக விரும்பவில்லை. தொழில் நிறுவனங்களுக்கு நீண்ட காலக் கடன் கொடுக்க அவ் வங்கிகள் எடுத்துக்கொண்ட இதர முயற்சிகள் உரிய பயனை அளிக்காத காரணத்தினால் 1929 - 30ஆம் ஆண்டில் இங்கிலாந்து வங்கிகளும் தொழில் நிறுவனங்களுக்கு நீண்டகாலக் கடன் கொடுக்கத் தொடங்கின. இங்கிலாந்தின் மைய வங்கியும் இவ்வாறு வணிக வங்கிகள் நீண்டகாலக் கடன் கொடுப்பதனை ஆதரித்தது. இவ்வாறு இங்கிலாந்து நாட்டின் வங்கிகளுக்கிடையே ஏற்பட்ட மாற்றத்திற்குக் கீழ்க்கண்டவை காரணங்களாக அமைந்தன.

(அ) வங்கிகளால், தொழில் நிறுவனங்களுக்குக் குறுகிய காலக் கடனைக் கொடுக்கப்பட்ட தொகை, பொருளாதார மந்த நிலை காரணமாக அவற்றிடமிருந்து மீண்டும் திரட்டப்பட முடியவில்லை. எனவே, அக் குறுகிய காலக் கடன்களை நீண்ட காலக் கடன்களாக மாற்றவேண்டிய அவசியம் எழுந்தது.

(இ) தொழிலுலகில் ஏற்பட்ட புரட்சியினாலும், போக்கு வரத்து வசதிகளில் ஏற்பட்ட முன்னேற்றத்தினாலும் இங்கிலாந்து நாட்டுத் தொழில் நிறுவனங்கள், வேறு வெளி நாட்டுத் தொழில் நிறுவனங்களுடன் போட்டியிட்டுத் தொழில்புரியும் அவசியம் நேர்ந்தது. இந் நிலையில், சிறிய நிறுவனங்களால் செயல்பட முடியவில்லை. எனவே, அவை பெரும் நிறுவனங்களுடன் இணைய வேண்டிய அவசியம் எழுந்தது. இவ்வாறு இணைந்த நிறுவனங்கள் எவ்வித இடையூறுமின்றித் தங்களுக்குத் தேவையான மூலதனத்தைத் தாங்களே திரட்டிக்கொண்டமையின், இங்கிலாந்து வங்கிகள், தங்களிடமிருந்த நிதியினை இலாபகரமான முறையில் முதலீடு செய்ய முடியவில்லை. எனவே, நிதி, முதலீடு செய்யப்படாது முடங்கிக் கிடப்பதனைத் தவிர்க்கும் பொருட்டு அவை தொழில் நிறுவனங்களின் பத்திரங்களில் முதலீடு செய்ய முன்வந்தன.

(ஈ) முதலீட்டுக் கோட்பாடுகளில் ஒன்ருன, எளிவரல் தன்மையில் ஏற்பட்ட மாற்றமும் இங்கிலாந்து வங்கிகளிடம் ஏற்பட்ட மாற்றத்திற்கு ஒரு காரணமாகும். எளிவரல் தன்மைக்கு முக்கியத்துவம் கொடுத்தல் என்ற நிலை மாறி மாற்றுமைத் தன்மை (Shiftability) க்கு முக்கியத்துவம் கொடுத்தல் என்ற நிலை உருவாயிற்று. எனவே, எந்தெந்தச் சொத்துகளை, அவசியம் நேரும்போது, இதர வங்கிகளுக்கோ, மைய வங்கிக்கோ மாற்ற முடியுமோ அந்தச் சொத்துகள் சிறந்தவை என்றும், சிக்கலற்றவை என்றும் கருதப்பட்டது. தொழில் நிறுவனங்களின் பத்திரங்கள், அவசரகாலங்களில் இதர வங்கிகளுக்கோ, மைய வங்கிக்கோ மாற்றப்படலாம் என்ற நிலை நிலவியதால், வங்கிகள், அப் பத்திரங் களில் முதலீடு செய்யச் சிறிதும் தயங்கவில்லை.

(உ) இங்கிலாந்து வங்கி தொழில் வளத்தில் மிகக் கவனம் செலுத்தி வந்தது. இந் நோக்குடனேயே, தொழில் நிறுவனங் களுக்கு அறிவுரை வழங்கும் பொருட்டும் தொழில் நிறுவனங்களைச் சீரமைக்கும் பொருட்டும் ஒரு தனி நிறுவனத்தையே அமைத்தது. இவ்வாறு இங்கிலாந்தின் மைய வங்கியே தொழில் நிறுவனங்களின் வளர்ச்சியில் ஈடுபாடு கொண்டிருந்ததால் இதர வணிக வங்கிகள் தொழில் நிறுவனங்களுக்கு நீண்டகாலக் கடன் கொடுப்பதில் ஈடுபாடு கொள்ளத் தொடங்கின.

மேற் குறிப்பிட்ட காரணங்களினுல், இங்கிலாந்து நாட்டு வணிக வங்கிகளின் நோக்கில் மாற்றம் ஏற்பட்டு அவை, தொழில் நிறுவனங்களின் பத்திரங்களில் முதலீடு செய்ய முன்வந்தன.

ஆனுல், செர்மானிய வங்கிகளின் நோக்கில் எதிர்மாருன தன்மை ஏற்பட்டது. செர்மானிய வங்கிகள் 20 ஆம் நூற்ருண்டின் தொடக்கத்திலிருந்து மிகுதியான அளவிற்கு வைப்புத்தொகை பெற முனைந்தன. எனவே, அவை வைப்பு வங்கிகளாகவே செயல்பட விழைந்தன. மேலும், உலகப் போரை அடுத்து ஏற்பட்ட பணவீக்கம், அதனுல் விதிக்கப்பட்ட அரசுக் கட்டுப்பாடு ஆகியவற்றுல் வங்கிகள், தங்கள் நிதியினை நீண்டகாலம் முடக்கி வைக்க விரும்பவில்லை. எனவே, அவை தங்களிடமிருந்த நிதியினைக் குறுகியகாலக் கடனுகவே கொடுக்க விழைந்தன.

இந்திய வங்கிகளின் தன்மை : இந்திய வங்கிகள், இங்கி லாந்து வங்கிகளின் அடிச்சுவட்டில் தொழில் நிறுவனங்களுக்குக் குறுகியகாலக் கடனுதவிகள் அளிக்கின்றனவே தவிர, நீண்ட காலக் கடனளிக்க விரும்பவில்லை. இருப்பினும், நமது நாட்டிலும் செர்மானிய நாட்டு வங்கிகளைப்போன்று, வணிக வங்கிகள் நீண்ட

காலக்கடன் கொடுக்கவேண்டுமென்ற கருத்தும் தெரிவிக்கப்படுகின்றது. அதற்கேற்பப் பெரும்பாலான வங்கிகளால் கொடுக்கப்படும் குறுகியகாலக் கடன்கள் மீண்டும் மீண்டும் புதுப்பிக்கப்பட்டு அவை நீண்டகாலக் கடன்களின் தன்மையைப் பெற்றுத் திகழ்கின்றன. மேலும், தொழில் நிறுவனங்களுக்கு வங்கிகள் மறைமுகமாக நீண்டகாலக் கடனுதவிபுரிவதாகக் குறிப்பிடலாம். எடுத்துக்காட்டாகத் தொழில் நிறுவனங்களுக்கு நேரிடையாக நீண்டகாலக் கடனுதவிபுரியும் தொழில் நிதியக் கூட்டுருவும் (Industrial finance corporation) மாநில நிதியக் கூட்டுருக்கள் (State financial corporation) போன்ற நிறுவனங்கள் வெளியிடும் பங்குகளை வாங்குவதன் மூலம் அவை தொழில் நிறுவனங்களுக்கு உதவிபுரிகின்றனவென்று குறிப்பிடலாம்.

இவ்வாறு வங்கிகள் தொழில் நிறுவனங்களுக்கு மறைமுகமாக நீண்ட காலக்கடன் கொடுப்பது தவிர, நேரிடையாகவே நீண்ட காலக் கடன் அளிக்கவேண்டுமென்ற கருத்தினையும் இந்தியாவில் சிலர் தெரிவிக்கின்றனர். இக் கருத்தின்படி வங்கிகள் தொழில் நிறுவனங்களுக்கு நீண்டகாலக் கடன் கொடுப்பது ஊக்குவிக்கப்பட்டால்தான் தொழில்கள் நன்கு வளர வாய்ப்புள்ளது என்று கூறப்படுகிறது. இவ்வாறு கருத்தினைத் தெரிவிப்பவர்கள், தங்கள் கருத்தினை வலியுறுத்தும் பொருட்டு, செர்மானிய நாட்டினை எடுத்துக்காட்டாகக் கூறுகின்றனர். இந்தியாவிலும், சுதேசி இயக்க காலத்தில் வங்கிகள் எவ்வித வேறுபாடுமின்றித் தொழில்களுக்கு நீண்டகாலக் கடன் கொடுத்து வந்தன. இவ்வாறு கடனுதவி அளித்ததன் நோக்கம் வங்கிகள் இலாபமீட்ட வேண்டும் என்பதனைவிட, உள்நாட்டுத் தொழில்களை வளரச் செய்யவேண்டுமென்பதேயாகும். இவ்வாறு வங்கிகள் தொழில் நிறுவனங்களுக்கு நீண்டகாலக் கடனுதவி அளித்ததன் பயனாக ஏறத்தாழ 90 வங்கிகள் மூடப்பட்டன. இதன் காரணமாக வங்கிகள் தொழில் நிறுவனங்களுக்கு நீண்டகாலக் கடனளிப்பது சிறிது நிறுத்திவைக்கப்பட்டது. ஆனால், வங்கிகள் தோல்வியடைந்ததும், அவை மூடப்பட்டதும், அவை, நீண்டகாலக் கடன் கொடுத்ததால் அல்லவென்றும் அவை ஊக வணிகத்தில் ஈடுபட்டிருந்ததாலும், மேலும் வேறு பல காரணங்களினாலுமென்றும் கருத்துத் தெரிவிக்கப்பட்டது. இந்தியா விடுதலை பெற்ற பிறகு வங்கியியல் தொழிலில் பல மாற்றங்கள் ஏற்பட்டன. வங்கிகள் மிகக் கூடுதலான அளவில் நிகர வைப்பில் மக்களிடமிருந்து பணத்தைப் பெற்றன. 1962 ஆம் ஆண்டில் அரசு வைப்புக் காப்பீட்டுக் கூட்டுருவை (Deposit insurance corporation) அமைத்தது. எனவே, வைப்புகளின் பாதுகாப்புக் கூடி

யுள்ளதென்றும், வங்கிகள் நீண்டகாலக் கடன் அளிப்பது அவசியமென்றும் கருத்துத் தெரிவிக்கப்பட்டது. ஆனால், இந்தியாவைப் பொறுத்தவரை கீழ்க்காணும் காரணங்களினால், கலப்பு வங்கி முறை ஏற்றதன்று என்று கூறலாம்.

(அ) செர்மானிய வங்கிகளைப் போலன்றி, இந்திய வங்கிகள் அவ்வளவு அதிகமான விழுக்காடு சொந்த மூலதனத்தைப் பெற்றிருக்கவில்லை. வங்கிகளின் நிதியில் பெரும்பகுதி வைப்புத் தொகையாகத் திரட்டப்பட்டதாகும்,

(ஆ) திரட்டப்பட்ட வைப்புகளும் பெரும்பாலும் குறுகிய கால வைப்புகளேயாகும். எனவே, குறுகிய கால வைப்புகளின் மூலம் திரட்டிய பணத்தினைக்கொண்டு, நீண்ட காலக் கடன் அளித்தல் அவ்வளவு உகந்ததல்ல.

(இ) தொழில் நிறுவனங்களில் நீண்ட காலக் கடன் அளிக்க வேண்டுமாயின் வங்கிகள் ஓரளவு தொழில் நுணுக்கம் அறிந்திருத்தல் அவசியம். இந்திய வங்கிகளிடம் அத்தகைய தொழில் நுணுக்கம் போதிய அளவில் இல்லை என்று கூறலாம்.

இருப்பினும், 1931-ல் நிறுவப்பட்ட மைய வங்கி விசாரணைக் குழு (Central Banking Enquiry Committee) வங்கிகள் ஓரளவிற்குத் தொழில் நிறுவனங்களுக்கு நீண்ட காலக் கடனுதவி அளிக்கலாமென்று பரிந்துரை செய்தது. பிறகு 1954 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட ஷராப் குழு (Shroff Committee) வணிக வங்கிகள், தொழில் நிதியக் கூட்டுறவு மாநில நிதியக்கூட்டுறவு ஆகிய நிறுவனங்கள் வெளியிடும், பங்குகள், கடன் பத்திரங்கள் ஆகியவற்றை வாங்குவதின் மூலம், இந்த நிறுவனங்களுக்கு நிதி வசதியளித்து, அதன்வழி, தொழில் நிறுவனங்களுக்கு மறைமுகமாக நிதி உதவியளிக்கலாமென்று பரிந்துரை செய்தது. நடைமுறையில் வணிக வங்கிகளின் கடனில் மூன்றில் ஒரு பகுதி அவற்றுல் தொழில் நிறுவனங்களுக்கு அளிக்கப்பட்டதென்றும், ஆனால் அது குறித்துச் சரியான புள்ளி விவரங்கள் கிடைக்கவில்லை யாதலின், வணிக வங்கிகள், தொழில் நிறுவனங்களுக்கு நீண்ட காலக்கடன் கொடுப்பது குறித்துக் குறைத்து மதிப்பிடப்படுகின்றது என்றும் அக் குழு கருத்துத் தெரிவித்தது.

1959 ஆம் ஆண்டு நடைபெற்ற வங்கியர்களின் கருத்தரங்கில் வங்கிகள், நீண்ட காலக் கடன் அளிப்பது குறித்து ஆதரவாகப் பேசப்பட்டது. அதுபற்றி நேரிடையாக அறிந்து கொள்ளும் பொருட்டு இந்திய வங்கியர்களைக்கொண்ட குழு

ஒன்றை அமெரிக்க நாட்டிற்கு அனுப்புவதெனத் தீர்மானிக்கப் பட்டது. அவ்வாறு அனுப்பப்பட்ட குழு இந்திய வங்கிகள் எந்த வகையில் தொழில் நிறுவனங்களுக்கு நீண்ட காலக்கடனுதவி அளிக்கலாமென்று ஆராயும்படியும் கேட்டுக்கொள்ளப்பட்டது. இந்திய ரிசர்வ் வங்கியும் இத்திட்டத்தில் மிகவும் ஈடுபாடு கொண்டு அமெரிக்க நாட்டில் கடைப்பிடிக்கப்பட்டுவரும் தவணைக் கடன் முறையினை (Term loan scheme) இந்திய நாட்டில் செயல் படுத்த ஆவன செய்ய விழைந்தது. தவணைக் கடன் முறை பற்றிய விவரங்களைப் பின்னர் விளக்கலாம்.

தொழில் நிதியக் கூட்டுரு, மாநில நிதியக் கூட்டுருக்கள், இந்தியத் தொழில் வளவங்கி போன்ற நிறுவனங்கள் தொழில் நிறுவனங்களுக்கு நீண்டகாலக் கடன் வசதி அளித்து உதவும். இக்காலத்தில் வணிக வங்கிகள் தொழில் நிறுவனங்களின் குறுகிய காலக்கடன் தேவைகளை நிறைவு செய்து, நீண்டகாலக் கடன் வழங்கும் பணியினை மேற்குறிப்பிட்டுள்ள நிறுவனங்களுக்கென ஒதுக்கிவிட்டால், அக்குறிப்பிட்ட நிறுவனங்களும் செழித்து வளர்ச்சி பெறலாம். வணிக வங்கிகளும், இடையூறு எதுவுமின்றிச் செயல்புரியலாமென்பது பொதுக்கருத்தாகும்.

வினாக்கள்

(1) வங்கிகளின் அமைப்பு முறை எவ்வாறு நிர்ணயிக்கப் படுகிறதென்பதனை விளக்குக.

(2) தனி வங்கி முறை என்றால் என்ன? கிளை வங்கி முறை என்றால் என்ன?

(3) தனி வங்கி முறை—கிளை வங்கி முறை இவற்றை ஒப்பிடுக.

(4) கிளை வங்கியின் நன்மை, குறைபாடுகளை விளக்குக.

(5) தனி வங்கி முறையின் நன்மைகள், குறைபாடுகள் யாவை?

(6) இந்தியச் சூழ்நிலைக்குக் கிளை வங்கி முறை ஏற்றதா? அல்லது தனி வங்கி முறை ஏற்றதாவென்று ஆராய்க.

(7) 'சிறு வங்கிகளை அகற்றிப் பல கிளைகள் கொண்ட பெரும் வங்கிகள் ஏற்படுத்துதல் இயலாது'—இக்கூற்று ஏற்றுக்கொள்ளத் தக்கதா அல்லவா என்பதனை ஆதாரத்துடன் விளக்குக.

(8) இங்கிலாந்து நாட்டில் வங்கிகள் இணைக்கப்பட்டதைப் பற்றிக் குறிப்பு வரைக.

(9) இங்கிலாந்து நாட்டில் வங்கிகளின் இணைப்புக்குச் சாதக மாக அமைந்த சூழ்நிலைகள் யாவை?

(10) இந்திய நாட்டில் வங்கிகளை இணைக்க எடுக்கப்பட்ட முயற்சிகள் யாவை? அவற்றின் விளைவுகள் என்ன?

(11) வைப்பு வங்கி முறை என்றால் என்ன? கலப்பு வங்கி முறை என்றால் என்ன?

(12) வைப்பு வங்கி முறை செம்மையாகச் செயல்படத் தேவை யான சூழ்நிலைகள் யாவை?

(13) கலப்பு வங்கி முறை சேர்மானிய நாட்டில் வளர்ச்சி யுற்றதற்கான காரணங்களை விளக்குக.

(14) கலப்பு வங்கி முறையின் நன்மைகள், குறைபாடுகள் யாவை?

(15) இங்கிலாந்து வங்கிகள் தங்களுடைய வங்கி முறையினை மாற்றிக்கொண்டதற்கான காரணங்களை விளக்குக.

(16) இந்தியச் சூழ்நிலைக்குக் கலப்பு வங்கி முறை ஏற்றதா அல்லது வைப்பு வங்கி முறை ஏற்றதா என ஆய்க.

(17) குறிப்பு வரைக:

(அ) தொகுப்பு வங்கி முறை

(ஆ) தொடர் வங்கி முறை

(இ) தொடர்பு வங்கி முறை

7. தீர்வகங்கள்
(Clearing Houses)

தொழில் வளர்ச்சிக்கு எவ்வாறு வங்கிகள் இன்றியமையாதவையாகக் கருதப்படுகின்றனவோ அதுபோன்றே வங்கிகளின் வளர்ச்சிக்குத் தீர்வகங்கள் இன்றியமையாதவையாகும். தீர்வகங்களின்றி வங்கிகளின் பணிகள் நிலைத்து நின்று விடுமென்று கூறின் அது மிகையாகாது. வங்கிகள் செம்மையாகச் செயல்பட காசோலை பயன்படுத்தப்படுகின்றது. செலாவணித் தன்மை பெற்ற காசோலையினைக்கொண்டு வங்கிகள், தங்களிடமுள்ள ரொக்கத்தினைவிட அதிக அளவிற்கு, வைப்புகளை உருவாக்குகின்றன என்பதனைக் 'கடனுக்கம் செய்தல்' என்ற அத்தியாயத்திலேயே விளக்கியுள்ளோம். வங்கிக் கணக்குள்ளவர்கள், பொதுவாகத் தாங்கள் செலுத்தவேண்டிய பணத்திற்கும், பெற வேண்டிய பணத்திற்கும் காசோலைகளையே பயன்படுத்துகின்றனர். இவ்வாறு அவர்கள் காசோலைகளைப் பயன்படுத்துகின்ற நிலையில் ஒரு சில காசோலைகள், குறிப்பிட்ட நபரால் எழுதப்பட்டு அவருடைய கணக்கிலிருந்து அவற்றிற்குப் பணம் செலுத்தக் கூடியவையாகவும், ஒரு சில காசோலைகள், அவரால் பெறப்பட்டு அவற்றிற்குப் பணம் பெறக்கூடியவையாகவும் இருப்பதே இயல்பு. எனவே, ஒவ்வொரு வங்கியும் வாடிக்கைக்காரர்களால் எழுதப்பட்ட காசோலைகளுக்குப் பணம் செலுத்துகின்றது. அது போன்றே வாடிக்கைக்காரர்களால் பெறப்பட்ட காசோலைகளுக்குப் பணம் திரட்டும் பொறுப்பினையும் ஏற்கின்றது.

ஒரு வாடிக்கையாளரால் கொடுக்கப்படுகின்ற காசோலைகள் அவரது வங்கியின்மீது எழுதப்பட்டதாகும். ஆனால், அவரால் பெறப்பட்ட காசோலைகள் வேறு வங்கிகளின்மீதோ, அவரது வங்கியின் மீதோ எழுதப்பட்டவையாகும். பிற வங்கிக் காசோலைக்குரிய பணத்தைப்பெற அக் காசோலைகள் அக்குறிப்பிட்ட வங்கிகளுக்கு அனுப்பப்பட வேண்டும். இப் பணியினை வாடிக்கைக்

காரர் நேரிடையாக மேற்கொள்வதென்பது மிகவும் சிரமமான செயலாகும், எனவே, வாடிக்கைக்காரர் ஒவ்வொருவரும், தாம் பெறும் காசோலைகளுக்குப் பணம் திரட்டும் பணியினைத் தமது வங்கியிடம் ஒப்படைக்கின்றனர்.

இப்படியாக வங்கி ஒவ்வொன்றும், வாடிக்கைக்காரர்களால் எழுத்தப்படும் காசோலைகளுக்குப் பணம் செலுத்துவதுடன்கூட வாடிக்கைக்காரர்களால் கொடுக்கப்படும், பிற வங்கிகளின்மீது வரையப்பட்ட காசோலைகளையும், அவர்களிடமிருந்து பணம் வசூலிக்கும் பொருட்டுப் பெறுகின்றது. இதே போன்று, இக்குறிப்பிட்ட வங்கி மீது வரையப்பட்ட இதனால் செலுத்தப்பட வேண்டிய காசோலைகளைப் பணம் வசூலிக்கும் பொருட்டு இதர வங்கிகளின் வாடிக்கைக்காரர்கள். அவற்றிடம் கொடுத்திருக்கலாம். எனவே, இவ்வங்கி, பிற வங்கிகளுக்குப் பணத்தைச் செலுத்திப் பின்னர், அவற்றின் மீது வரையப்பட்ட காசோலைகளுக்காக அவற்றிடமிருந்து பணம் பெற வேண்டிய நிலையினை அடைகின்றது. சாதாரணமாக இந்நிலையில், ஒவ்வொரு வங்கியும் தனது பணியாளரில் ஒருவரை அனுப்பி பல்வேறு வங்கிகளிடமிருந்து அவற்றின் மீது எழுதப்பட்ட வாடிக்கைக்காரர்களால் பெறப்பட்ட காசோலைகளுக்குப் பணம் திரட்டுமாறு செய்ய வேண்டும். இது போன்றே ஒவ்வொரு வங்கியும் செய்ய வேண்டிவரும். இது மிக்க தொல்லைதருஞ் செயலாகும். இத் தொல்லையினைத் தவிர்த்துப் பல்வேறு வங்கிகளுக்கிடையேயான நடவடிக்கைகளைச் சிக்கலின்றி எளிய முறையில் தீர்த்துக்கொள்ளப் பயன்படுத்தப்படும் நிறுவனமே தீர்வகமாகும். எனவே, வங்கிகள், பணத்தை முழுமையாகச் செலுத்தாமலும், முழுமையாகப் பெறாமலும், தங்களுக்கிடையேயுள்ள கணக்குகளைத் தீர்த்துக்கொள்ளத் தீர்வகங்கள் வழிவகுக்கின்றன.

தீர்வகங்கள் எல்லா இடங்களிலும் இன்றியமையாதவை எனினும், ஒரு சில வங்கிகள் மட்டுமே உள்ள நகரங்களிலுள்ள வங்கிகள் தங்களுக்கிடையேயுள்ள நடவடிக்கைகளை நேரடியாகத் தீர்த்துக்கொள்ள வாய்ப்புகள் உள்ளன. ஆனால், பல வங்கிகள் செயல்புரிகின்ற நகரங்களில் தீர்வகங்களின் பணி தவிர்க்க முடியாததாகும்.

தீர்வகங்கள் பணிபுரிவது ஒரு பெரும் நிறுவனம் பணிபுரிவதற்கு ஒப்பாக அமையும். இந்த நிறுவனச் செயற்பாட்டினால் வணிக வங்கிகளின் பணிகள் எளிதாக்கப்படுகின்றனவென்றால் அது மிகையாகாது. எடுத்துக்காட்டாக, திருச்சியில் பல்வேறு வங்கிகள் செயல்புரிகின்றன. ஒரு சில வங்கிகள் பல கிளைகளைக்கொண்டு செயலாற்றுகின்றன. இந்தியன் வங்கியின் வாடிக்கைக்காரர்கள்

20 பேர், வெவ்வேறு வங்கிகளின் மீது வரையப்பட்ட காசோலைகளை, பணம் வசூலித்துத் தங்கள் கணக்கில் வரவு வைக்கும் பொருட்டுக் கொடுப்பதாகக் கொள்வோம். இது போன்றே இந்தியன் வங்கி வாடிக்கைக்காரர்கள் பிற வங்கிகளில் கணக்கு வைத்துள்ள வாடிக்கைக்காரர்களுக்குக் காசோலைகள் வழங்கி இருப்பதாகக் கொள்வோம். இக் காசோலைகளின் எண்ணிக்கை 40 என்று கொள்வோம். தீர்வகங்கள் செயல்படாவிடின் இந்தியன் வங்கி அதன் வாடிக்கைக்காரர்களால் கொடுக்கப்பட்ட 20 காசோலைகளை வெவ்வேறு வங்கிகளுக்கு அனுப்பிப் பணத்தை வசூலிக்கவேண்டும். அதுபோன்றே, இந்தியன் வங்கி வாடிக்கைக்காரர்களால் கொடுக்கப்பட்ட 40 காசோலைகளுக்குப் பணமும் கொடுக்க வேண்டும்.

இந் நிலையினைத் தவிர்க்கும் பொருட்டே தீர்வகங்கள் செயல்படுகின்றன. மேலே குறிப்பிட்ட நிலையில், தீர்வகம் திருச்சியில் செயல்படுவதால், ஒரு குறிப்பிட்ட நேரத்தில், ஒரு குறிப்பிட்ட இடத்தில் திருச்சி வங்கிகளைச் சார்ந்த எல்லாச் சார்பாளர்களும் (Representatives) தங்கள் வங்கிகளால் செலுத்தப்படவேண்டிய அதாவது தங்களுடைய வாடிக்கைக்காரர்களால் வரையப்பட்ட காசோலைகளுக்காகவும் தங்களுடைய வாடிக்கைக்காரர்களால் வசூலுக்காகப் பெறப்பட்ட அதாவது பிற வங்கிகளின்மீது வரையப்பட்ட காசோலைகளுடனும் கூடுவர். இந் நிலையில் ஒவ்வொரு வங்கியின் சார்பாளரும் இதர வங்கியின் சார்பாளர்கள் ஒவ்வொருவருடனும் தனிப்பட்ட முறையில் கணக்கினைச் சரிக்கட்டிக் கொள்வர். எடுத்துக்காட்டாக, இந்தியன் வங்கியின் சார்பாளர், இந்தியன் ஓவர்சீஸ் வங்கியிடமிருந்து பணம் பெறத்தக்க ரூ. 20,000-க்குரிய காசோலைகளைக் கொண்டு வருவதாகக் கொள்வோம். அதுபோன்றே, இந்தியன் ஓவர்சீஸ் வங்கிச் சார்பாளர் இந்தியன் வங்கியிடமிருந்து பணம் பெறும் பொருட்டு ரூ, 25,000-க்குரிய காசோலைகளைக் கொண்டு வருகிறார். இப்பொழுது இந்தியன் வங்கிச் சார்பாளரால் கொண்டு வரப்பட்ட காசோலைகள் இந்தியன் ஓவர்சீஸ் வங்கியின் சார்பாளரிடம் கொடுக்கப்படும். இந்தியன் ஓவர்சீஸ் சார்பாளர், தாம் வசூலுக்குக் கொண்டுவந்த இந்தியன் வங்கியால் செலுத்தப்பட வேண்டிய காசோலைகளை, அதனுடைய சார்பாளரிடம் கொடுப்பார். இந் நிலையில் கைமாற்றிக் கொள்ளப்பட்ட காசோலைகளின் மதிப்பு சமமாக இல்லையாதலின், இந்தியன் வங்கி இந்தியன் ஓவர்சீஸ் வங்கிக்குக் காசோலைகளின் மதிப்புக்குமேல் ரூ. 5000 செலுத்தவேண்டும் என்று குறிப்பிட்டு அவ்விரு வங்கிகளுக்கிடையேயான கணக்குத் தீர்த்துக் கொள்ளப்படுகிறது. இது

போன்றே தீர்வகங்கள் மூலம் பல்வேறு வங்கிகளுக் கிடையேயான கணக்குகள் தீர்க்கப்படுகின்றன.

எனவே, தீர்வகங்கள் செயல்படுவதால், வங்கிகளுக்கிடையேயான கணக்குகள், எளிதாகவும், சிக்கலின்றியும் தீர்க்கப்படுகின்றன என்பது தவிர வங்கிகள், ரொக்கத்திஙீனச் செலுத்தாமலும், பெருமலும் தங்களுக்கிடையேயான கணக்குகஙீளத் தீர்த்துக் கொள்ள முடிகின்றது, இவ்வகை வசதியிஙீல் வங்கிகள் மிகக் குறைவான அளவு ரொக்கத்திஙீனக் கொண்டு செயல்புரிகின்றன.

பொதுவாக, பெரும் நகரங்களில் பல வங்கிகள் பணிபுரிவதால் ஒவ்வொரு நகரிலும் தீர்வகம் நிறுவப்பட்டுச் செயல்பட்டு வருகின்றது. ஒரு சில இடங்களில் ஒன்றுக்கு மேற்பட்ட தீர்வகங்களும் நிறுவப்படுவதுண்டு. எடுத்துக்காட்டாக, கல்கத்தா நகரில் இரு தீர்வகங்கள் செயல்பட்டு வருகின்றன. தீர்வகங்கள் நிருவாகம் குறித்து ஒரு பொதுப்படையான முறை கடைப்பிடிக்கப்படவில்ஙீல. இந்தியாவைப் பொறுத்தவரை, தீர்வகங்கள் பொதுவாக மைய வங்கியான ரிசர்வ் வங்கியின் மேலாண்மையின் கீழ்ச் செயல்பட்டு வருகின்றன. ரிசர்வ் வங்கியின் கிஙீளகள் உள்ள இடங்களில் அவை தீர்வகங்களாகவும், ரிசர்வ் வங்கிக்குக் கிஙீளகள் இல்லாத இடங்களில், அதற்கு முகமை வங்கியாகப் பணியாற்றும் இந்திய ஸ்டேட் வங்கியின் கிஙீளகள் தீர்வகங்களாகவும் செயல்புரிகின்றன. கல்கத்தா தீர்வக மன்றம் பேரன்ற தனித் தீர்வகங்களும் இந்தியாவில் செயல்படுகின்றன.

வங்கியின் சார்பாளர்கள், இவ்வாறு தீர்வகங்களில் கூடி தங்களுக்கிடையேயான கணக்குகஙீள, ரொக்கத்திஙீனச்செலுத்தாது சரிக்கட்டிக் கொள்வதால், வங்கிகள், குறைந்த ரொக்கத்துடன் செயல்படுகின்றன என்பதுடன்கூட அவை, வாடிக்கைக்காரர்களுடைய காசோஙீலகளுக்குப் பணம் பெறும் பொருட்டுத் தங்களுடைய சார்பாளர்களஙீப் பல்வேறு வங்கிகளுக்கு அனுப்ப வேண்டிய அவசியமுமில்ஙீல. மேலும், வெளியூர் வங்கிகளின் மீது வரையப்பட்ட காசோஙீலகளுக்கும் எளிதாகப் பணம் திரட்ட முடிகின்றது.

தீர்வகங்களின் செயல்முறைகஙீள விளக்க முற்பட்ட நாம் தீர்வகங்களுக்கு எடுத்துக்காட்டாகவும், அவற்றிற்கு முன்ஞோடியாகவும் உள்ள இலண்டன் தீர்வகத்திஙீனப்பற்றி அறிந்து கொள்ளுதல் இன்றியமையாததாகும். இதர நாடுகஙீளப்போன்றே இங்கிலாந்து நாட்டிலும் அந் நாட்டின் மைய வங்கியான

இங்கிலாந்து வங்கி தீர்வகங்களுடன் நெருங்கிய தொடர்பு கொண்டுள்ளது. இங்கிலாந்திலுள்ள பெரும் ஐந்து வங்கிகளும் சேர்த்து, பார்க்லேஸ் வங்கி (Barclays Bank), லாயிட்ஸ் வங்கி (Lloyds Bank), மிட்லண்ட் வங்கி (Midland Bank), நேஷனல் புரொவின்ஷியல் வங்கி (National Provincial Bank), வெஸ்ட் மினிஸ்டர் வங்கி (West Minister Bank), கோல்ட்ஸ் வங்கி (Coults Bank), டிஸ்டிரிக்ட் வங்கி (District Bank), கிளின் மில்ஸ் வங்கி (Glyn Mills Bank), மார்டின்ஸ் வங்கி (Martins Bank), நேஷனல் வங்கி (National Bank), மற்றும் வில்லியம்ஸ் டீகான்ஸ் வங்கி (Williams Deacon's Bank) ஆகியவை ஒன்றுசேர்ந்து தீர்வகத்தினை அமைத்துள்ளன. இங்கிலாந்து நாட்டின் மைய வங்கியான இங்கிலாந்து வங்கி, இலண்டன் தீர்வகத்தில் ஓர் உறுப்பினராக இருக்கின்றது. இங்கிலாந்தின் தலைமை வங்கி என்ற நிலையில், இவ்வுறுப்பினர் பதவியை இங்கிலாந்து வங்கி கொண்டுள்ளது. வங்கிகளுக்கிடையேயான நடவடிக்கைகளைச் செம்மையான முறையில் சரிசெய்து கொள்ளும்பொருட்டு வணிக வங்கிகள் ஒவ்வொன்றும் இங்கிலாந்து வங்கியில், தன் பெயரில் கணக்குத் தொடங்கியுள்ளது. இதர தீர்வகங்களைப் போன்றே, வங்கிகளுக்கிடையேயான கணக்குகளைச் சரிக்கட்டும் பொருட்டு, அவற்றுடைய சார்பாளர்கள் ஒரு குறிப்பிட்ட நேரத்தில் தீர்வகத்தில் சந்திக்கின்றனர். தீர்வகம் லொம்பார்டுத் தெருவில் நிறுவப்பட்டுள்ளது. இதனை, ஒவ்வொரு வங்கியினையும் சார்ந்த சார்பாளர்களைக் கொண்ட ஒரு தீர்வு வங்கியர்களின் குழு நிருவகித்து வருகின்றது. ஒவ்வொரு வங்கியின் தலைவரே, நிருவாகக் குழுவில் உறுப்பினராகப் பணியாற்றுகிறார். குழு மாதமொருமுறை கூடிப் பொது நிலையை ஆழ்ந்து ஆராய்கின்றன,

வங்கிகளின் கிளைகள், வெவ்வேறு இடங்களில் தொடங்கப்பட்டிருக்கலாம். காசோலைகளைச் சிரமமின்றி, வெவ்வேறு பகுதிகளுக்கு வசூலுக்காக அனுப்பும் பொருட்டு இலண்டன் தீர்வகம், மூன்று பிரிவுகளாகப்பிரிக்கப்பட்டுள்ளது. வாடிக்கைக்காரர்கள், காசோலைகளை எந்தப் பகுதிக்கு அனுப்பவேண்டும் என்பதை எளிதில் அடையாளம் கண்டுகொள்ளவேண்டும் என்பதற்காகக் காசோலைகளிலேயே அதனைக் குறியிடும் முறை கடைப்பிடிக்கப்படுகிறது. தீர்வகத்தின் பிரிவுக்கேற்ப வெவ்வேறு குறிகள் பயன்படுத்தப்படுகின்றன.

இலண்டன் தீர்வகத்தின் மூன்று பிரிவுகளில் முதல் பிரிவு நகர் தீர்வகமாகும் (Town Clearing). இங்கிலாந்து வங்கியிலிருந்து நடக்கும் தூரத்திலுள்ள வங்கிகள்மீது வரையப்பட்ட காசோலைகள்

இந்தத் தீர்வகத்திற்கு வரும். நகரத் தீர்வக எல்லைக்கு வெளியில், இலண்டன் அஞ்சல் மாவட்ட எல்லைக்குள் செயலாற்றிவரும் வங்கிகளின்மீது வரையப்பட்ட காசோலைகள் இரண்டாவது பிரிவான மெட்ரோபாலிடன் தீர்வகத்திற்கு (Metropolitan Clearing) வருகின்றன. இதர வங்கிகளின்மீது வரையப்பட்ட காசோலைகள் மூன்றுவது பிரிவான நாட்டுப் புறத் தீர்வகத்திற்கு (Country Clearing) அனுப்பப்படுகின்றன.

வசூலுக்காக இலண்டன் தீர்வகத்தால் பெறப்பட்ட காசோலைகள் அவை அனுப்பப்படவேண்டிய பகுதியினை ஒட்டி மேலே குறிப்பிட்டதுபோல் மூன்று பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு, நகர்த்தீர்வகத்திற்கு அனுப்பப்படவேண்டிய காசோலைகளில் '*T*' என்ற குறியும், மெட்ரோபாலிடன் தீர்வகத்திற்கு அனுப்பப்பட வேண்டிய காசோலைகளில் '*M*' என்ற குறியும், நாட்டுப் புறத் தீர்வகத்திற்கு அனுப்பப்படவேண்டிய காசோலைகளில் '*C*' என்ற குறியும் பொறிக்கப்பட்டு அந்தந்தக் காசோலைகள் அந்தந்தத் தீர்வகப் பகுதிக்கு அனுப்பப்படுகின்றன. காசோலைகள் வெளியிட்ட வங்கியின் இருப்பிடத்தை எளிதில் அடையாளம் கண்டு கொள்ளும் பொருட்டுக் காசோலையின் மேல் வலப்புற மூலையில் அப் பகுதியின் தேசிய எண் குறிப்பிடப்படுகின்றது. நகரப் புறத் தீர்வகத்திற்குட்பட்ட வங்கிகள் மூன்று இலக்கங்களைக்கொண்டும், மெட்ரோபாலிடன் தீர்வகத்திற்குட்பட்ட வங்கிகள் நான்கு இலக்கங்களுடனும், நாட்டுப் புறத் தீர்வகத்திற்குட்பட்ட வங்கிகள் ஐந்து இலக்கங்களுடனும் செயல்புரிகின்றன. மேலும், வங்கிகள் எளிதில் அடையாளம் கண்டுகொள்ளும் பொருட்டுஒவ்வொரு வங்கிக்கும் [பெரும் ஐந்து வங்கிகளைப் பொறுத்தவரை] ஒரு குறிப்பிட்ட எண்ணைக்கொண்ட தேசிய எண்கள் அமைகின்றன. அதன்படி ஐம்பெரும் வங்கிகளில் ஒவ்வொரு வங்கியின் எல்லாக் கிளைகளின் காசோலைகளிலும் அச்சிடப்பட்டிருக்கும் தேசீய எண்ணின் முதல் இலக்கம் ஒரு குறிப்பிட்ட எண்ணாகவே இருக்கும். எடுத்துக்காட்டாக, பர்க்லேஸ் வங்கியின் கிளைகள் வெளியிடுகின்ற காசோலைகளில் பொறிக்கப்பட்டுள்ள தொடக்க எண் இரண்டாகவும், லாயிட்ஸ் வங்கிக் காசோலைகளின் தொடக்க எண் மூன்றாகவும், வெஸ்ட் மின்ஸ்டர் வங்கிகள் வெளியிடும் காசோலைகளின் தேசிய எண்ணின் முதல் இலக்கம் '6' உடனும் அமைந்துள்ளன. இதர வங்கிகளின் தேசிய எண் '1' என்ற இலக்கத்துடன் தொடங்குகின்றது. இதர வங்கிகளைப் பிரித்துக் காட்டும் முகத்தான் அந்த வங்கிகளின் தேசிய எண் '1' என்ற இலக்கத்தில் தொடங்கினாலும், ஒவ்வொரு தனிப்பட்ட வங்கியின் இரண்டாவது இலக்கம் மாறுபட்டிருக்கிறது. எனவே, இதர

வங்கிகளைப் பொறுத்தவரை, காசோலைகளில் குறிப்பிடப்பட்டுள்ள தேசிய எண்ணின் இரண்டாவது இலக்கத்தினைக்கொண்டு அந்த வங்கியினை அடையாளம் கண்டு கொள்ளுதல் எளிது. எடுத்துக்காட்டாக, கிளன் மில்ஸ் வங்கியின் கிளைகளுடைய தேசிய எண் 1-ஐ முதல் இலக்கமாகவும், '5'-ஐ இரண்டாவது இலக்கமாகவும் கொண்டு செயலாற்றுகின்றன. எனவே, கிளன் மில்ஸ் (Glayn Mills) வங்கியின் கிளைகள் வெளியிடும் காசோலைகள் யாவும் 16 என்ற முதலீடு இலக்கங்களுடன் வெளியிடப்படுகின்றன.

தீர்வக நடவடிக்கைகளில் பயன்படுத்தப்படும் சொற்களில் மிக முக்கியமானவை வெளித்தீர்வு (Out Clearing) உள்தீர்வு (In clearing) ஆகியவை இரண்டுமாகும். ஒரு வங்கியிடம் வசூலுக்காகப் பிற வங்கிகளின்மீது வரையப்பட்ட காசோலைகளைக் குறிக்கும் வகையில் வெளித்தீர்வு என்ற சொற்றொடர் பயன்படுத்தப்படுகின்றது. ஒரு வங்கியின் கிளையினிடம், அதே வங்கியின் இதர கிளைகள் மீது வரையப்பட்ட காசோலைகள் வசூலுக்கு வருமானால் அக் காசோலைகள், உள்தீர்வுக் காசோலைகள் என்றழைக்கப்படுகின்றன. நகரத் தீர்வகத்தைப் பொறுத்தவரை, ஒவ்வொரு வங்கியும், இதர வங்கிகளுடனான கணக்கினைச் சரி செய்துகொள்ளும்பொருட்டு ஒரு சார்பாளரைத் தீர்வகத்திற்கு அனுப்புகின்றது. ஒவ்வொரு சார்பாளரும், மற்ற வங்கிகளிடமிருந்து பெறத்தக்க காசோலைகளையும், மாற்றுச்சீட்டுகளையும், வசூல் செய்யும் பொருட்டுத் தீர்வகத்திற்குக் கொண்டுவருவார். தீர்வகப் பதிவேட்டில், இந்த விவரங்கள் குறிக்கப்படும். இறுதியாக அக் காசோலைகள், மாற்றுச்சீட்டுகள், ஆகியவற்றிற்கு எந்த வங்கி பணம் செலுத்த வேண்டுமோ அதன் சார்பாளர் மூலம் அவை வங்கியின் அலுவலகத்திற்கு அனுப்பப்படும். வங்கி அலுவலக ஊழியர்கள், அவற்றைச் சரிபார்த்து அவை பணம் செலுத்தத் தகுதி படைத்தவையா என உறுதிப்படுத்தவர். அவை மீண்டும் தீர்வகத்திற்கு அனுப்பப்படும். பின்னர் ஒவ்வொரு வங்கியும் பிற வங்கிகளுக்குக் கொடுக்க வேண்டிய தொகையும், பிற வங்கிகளிடமிருந்து பெறவேண்டிய தொகையும் கணக்கிடப்படும். வங்கிகள் யாவும் இங்கிலாந்து வங்கியில் கணக்கு வைத்திருக்கின்றனவாதலின் ஒரு வங்கி பிறிதொரு வங்கிக்குக் கொடுக்க வேண்டிய தொகையினை, முன்னதின் கணக்கிலிருந்து பின்னர்க்குறிப்பிட்டுள்ள வங்கிக்கு மாற்றப்படும்.

மெட்ரோபாலிடன் தீர்வக எல்லைக்குள் செயல்படும் வங்கிகளின் மீது எழுதப்பட்டு வசூலுக்கு அனுப்பப்படும் காசோலைகளைப் பொறுத்தவரை எவ்விதப் பிரச்சினையுமில்லை. காசோலைகள்

பிரிக்கப்பட்டு அவை பணம் பெறும் பொருட்டு நேரடியாகப் பணியாள்கள் மூலம் அனுப்பப்படும் நாட்டுப்புறத் தீர்வக எல்லைக் குள்ளிருந்து செயல்புரியும் வங்கிகளிடமிருந்து பணம் வசூலிக்கத் தக்க காசோலைகள் சார்பாளர்கள் மூலமாகவே அனுப்பப்பட்டு அவற்றிற்குப் பணம் திரட்டப்படுகின்றன.

இலண்டனிலுள்ள வங்கிகள் யாவும், தீர்வகத்தில் உறுப்பினராக இருத்தல் வேண்டுமென்ற அவசியமில்லை. அவ்வாறு உறுப்பினரல்லாத வங்கி ஒன்றின்மீது காசோலைகள் வரையப்பட்டிருந்தால் அவற்றைத் தீர்வகத்தின் மூலம் வசூலித்தல் என்பது இயலாததாகும். எனவே, அவற்றிற்குப் பணம் வசூலிக்க 'நடைகள்' (walks) கடைப்பிடிக்கப்படுகின்றன. இம்முறைப்படி வசூலுக்காக வழங்கப்பட்ட காசோலைகள் எந்த வங்கியின்மீது வரையப்பட்டுள்ளனவோ அவற்றிடம் நேரிடையாகவே அவை கொடுக்கப்பட்டுப் பணம் திரட்டப்படுகின்றது.

வினாக்கள்

(1) இன்றைய வங்கியல் உலகில் தீர்வகங்களின் முக்கியத்துவத்தினை விளக்குக.

(2) தீர்வகத்தில் வங்கிகளுக்கிடையேயான கணக்குகள் எவ்வாறு சரிக்கட்டப்படுகின்றன ?

(3) தீர்வகங்கள் செயல்படுவதால் வங்கிகள் அடையும் நன்மைகளை விவரிக்க.

(4) இலண்டன் தீர்வகம் எவ்வாறு செயல்படுகின்றது என்பதனை விளக்குக.

8. கடன் கருவிகள்
(Credit Instruments)

'கடன் பட்டார் நெஞ்சம்போல் கலங்கினான் இலங்கை வேந்தன்' என்னும் கம்பனுடைய வாய்மொழி இன்றைய தொழிலுலகுக்குப் பொருந்தாது. கடனின்றி எவ்விதத் தொழில் நிறுவனமும் செயல்புரிதலென்பது இயலாதது. கோடிக்கணக்கில் முதலீடு செய்துள்ள தொழில் நிறுவனம்கூட ஒருசில சந்தர்ப்பத்தில் ஒருசில ஆயிரங்கள் கடன்பெற வேண்டிய அவசியத்தினைப் பெறலாம், தொழில் நிறுவனங்களுக்கே இந்நிலை எனின், வணிக வங்கிகளைப்பற்றிக் கூறத் தேவையில்லை. வணிக வங்கிகள், கடனையே பெரும்பகுதி முதலாகக்கொண்டு தொழில்புரிகின்றன. வங்கிகள் பல்வகையான வைப்புகளைப் பெறுதலின் வழியே, அதாவது கடன் பெறுதலின் வழியே தொழில்புரிகின்றன என்பது இங்குக் குறிப்பிடத்தக்கதாகும். இவ்வாறு வங்கிகள் பெறும் கடன் தொகையினைக்கொண்டே அவை தொழில் புரிகின்றன. பொதுவாக வங்கிகள், குறைந்த விழுக்காடு வட்டி வீதத்தில் கடன் பெற்று, அத் தொகையினைச் சற்றுக் கூடுதலான வீதத்திற்கு வாடிக்கைக்காரர்களுக்குக் கடனாக அளித்து இலாபமீட்டுகின்றன.

பொதுவாகக் கடன் என்ற சொல் தொழில் நிறுவனங்களைப் பொறுத்தவரை அதிகமாகப் பயன்படுத்தப் படுகின்றது. அவ்வாறு தொழில் நிறுவனங்களின் அடிப்படையில் கடன் என்ற சொல்லுக்குக் கீழ்க்கண்ட பொருள் வழங்கலாம். பண்டங்கள் விற்பனை செய்யப்படுவதும், அவற்றிற்குரிய விலை செலுத்தப் படுவதும் காலத்தால் பிரிக்கப்படும்போது கடனுண்டாகிறது. வங்கிகளின் அடிப்படையில் குறிப்பிடும்போது, பணத்தைப் பெற்றுக்கொண்டு அதை ஒரு குறிப்பிட்ட காலத்திற்குப் பின்னர்த் திருப்பிச் செலுத்தத் தக்க நடவடிக்கையினைக் கடனென்று கூறுகிறோம். பொதுப்படையாகக் குறிப்பிடுமிடத்து, பண்டங்களை வாங்கும் திறனை ஒருவரிடமிருந்து மற்றவருக்கு மாற்றிக்கொடுத்தலையே கடன் கொடுத்தல் என்று கூறுகிறோம். இன்றைய

உலகில் தனி மனிதனுக்கு மட்டுமின்றிப் பொதுத்துறை நிறுவனங்கள் போன்ற பெரும் நிறுவனங்களுக்கும் கடன் இன்றியமையாததாகின்றது. சுருங்கக் கூறின், நாட்டின் வளர்ச்சிக்கே கடனின் பங்கு மிகுதி எனலாம்.

கடன் கொடுத்தல், கடன் வாங்குதல் ஆகிய இரு நடவடிக்கைகளுமே சிக்கல் நிறைந்தவையாகும். கடன் கொடுத்தவருக்குக் கடன் தொகையினை மீண்டும் திரட்டவேண்டுமென்ற பொறுப்புள்ளது. கடன் வாங்கியவருக்குக் கடனைச் செலுத்த வேண்டுமென்ற கடமையுள்ளது. இருப்பினும், கடன் வாங்குபவர்கள் எல்லோரும் வாங்கிய கடனைப் பொறுப்புடன் உரிய முறையில் உரிய காலத்தில் திரும்பச் செலுத்திவிடுவர் என்று கூறிவிட முடியாது. கடன் வாங்கியவர் எல்லோரும் கடனைப் பொறுப்புடன் திருப்பிக்கொடுக்கும் நிலையிலிருப்பின் கணக்கில், வராக்கடனுக்கும் ஐயக்கடனுக்கும் இடமில்லை. எனவே, கடன் கொடுப்பவர்கள், கடன் கொடுப்பதற்கு முன்பாகச் சில கோட்பாடுகளைக் கடைப்பிடிக்கின்றனர். கடன் வாங்குபவருடைய சில தன்மைகளை ஆராய்ந்து கடன் கொடுப்பதா வேண்டாமா என முடிவு செய்கின்றனர்.

முதலாவதாக, கடன் வாங்குபவர் நன்னடத்தை உள்ளவரா என்று அறியப்படுகின்றது. ஒருவருடைய நல்ல நடத்தையே (character) அவருடைய வாழ்க்கையினைச் செப்பனிடுகின்றது. ஒருவர் நல்ல நடத்தை உள்ளவராக இருப்பின், அவர் தாம் சொன்ன வாக்கை நிச்சயமாக நிறைவேற்றுவார். எனவே, நல்நடத்தை உள்ள நபர்களுக்கே கடன் கொடுக்கப்படவேண்டும். இரண்டாவதாக, கடன் பெறுபவர் கடனைத் திருப்பிச் செலுத்தும் திறனைப் பெற்றிருத்தல்வேண்டும். கடனைத் திருப்பிச் செலுத்தும் திறனற்றவர்களுக்குக் கொடுக்கப்படும் கடனைத் திரும்பிப் பெறுதல் என்பது அவ்வளவு எளிதான செயலன்று. இறுதியாக, கடன் பெறுபவருடைய மூலதனம் கணக்கிடப்படுகின்றது. கடன் வாங்குபவர் நல்ல நடத்தை பெற்றிருப்பினும்கூட அவருடைய தொழிலில் போதிய மூலதனம் இல்லையேல் அவர் தாம் பெற்ற கடன் தொகையினைத் திருப்பிச் செலுத்துதல் என்பது அவ்வளவு எளிதானதன்று. எனவே, கடன் கொடுப்பதற்கு முன்னர், கடன் பெறுபவருடைய மூலதனமும் அலசி ஆராயப்படுகிறது. இம் மூன்று தன்மைகளைத் தவிர, கடன்வாங்குபவர், தாம் பெற விருக்கும் கடனுக்கு ஈடாகக் கொடுக்கும் பிணையம் (Security) கடன் வசதி அளிக்கும்போது கருத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும்.

எல்லா வகையான கடனும் பிணையங்களுக்குட்பட்டவை என்று கூறுதல் இயலாது. ஒருசில கடன்கள் பிணையமற்றவையாகவும் இருக்கக்கூடும். அது போன்ற கடன்கள் கடனைப் பெறுபவர்கள் தாங்கள் பெற்ற கடன் தொகையினை ஒரு குறிப்பிட்ட காலத்தில் திருப்பிச் செலுத்திவிடுவதாகக் கொடுக்கின்ற வாக்குறுதியை ஆதாரமாகக்கொண்டு அமைகின்றன. இவ்வாறு கொடுக்கப்படும் வாக்குறுதிகள் எழுத்து மூலமாக அமையுமேயானால் அவற்றைக் 'கடன் கருவிகள்' என்று கூறுகிறோம். கடன் கருவிகள் கடன் பத்திரங்கள் என்றும் கூறப்படுகின்றன.

கடன் கருவிகள் அல்லது கடன் பத்திரங்கள் இன்றி இன்றைய தொழிலுலகம் இல்லை என்று கூறலாம். கடன் பத்திரங்களை, அவற்றைப் பெற்றுள்ளவர்கள் கொள்ளும் உரிமையினடிப்படையில் இரு பிரிவுகளாகப் பிரிக்கலாம்: (அ) மாற்றுமுறையற்ற ஆவணங்கள் (Non - Negotiable Instruments), (ஆ) மாற்றுமுறை ஆவணங்கள் (Negotiable Instruments) என்பவையே அவ்விரு பிரிவுகளாகும்.

மாற்று முறையற்ற ஆவணங்களை வைத்திருப்பவர்களுக்கு நல்ல உரிமைகள் தரப்படுவதில்லை. அதாவது, அவற்றைப் பெறுவதற்கு முன்னால் அவற்றில் ஏதும் குறைகளிருப்பின் அக்குறைகள் அவர்களைச் சாரும். மாற்று முறையற்ற ஆவணத்திற்கு உரிமையில்லாத ஒருவரிடமிருந்து, நன்னம்பிக்கையுடன் தகுந்த மதிப்பினைச் செலுத்தி அந்த ஆவணத்தை வேறொருவர் பெற்றிருப்பாரேயானால் அவருக்கு அதன்மேல் உரிமை கிடையாது. ஆனால், மாற்றுபவருக்கு நல்ல உரிமை இருந்தால் மாற்றப்பட்டவருக்கும் நல்ல உரிமை உண்டு. எனவே, இவ்வகை ஆவணங்களைப் பெறுமுன் அவை குறைகளற்றவைதானா என ஆழ்ந்து பார்த்துப் பெறவேண்டும். இங்கிலாந்து நாட்டில் பயன்படுத்தப் பெறுகின்ற ஐ. ஓ. யூ. (I owe you) கடன் ஆவணங்கள், அஞ்சல் ஆணைகள் ஆகியவற்றை எடுத்துக்காட்டாகக் கூறலாம்.

மாறறுமுறை ஆவணத்தின்மூலம், ஒருவர் கடனைப் பிறர் மீது மாற்றிக் கொடுக்கமுடியும். மாற்றுமுறை யாவணங்கள், மாற்றுமுறை யாவணச் சட்டத்தின்படி பயன்படுத்தப்படுகின்றன. மாற்றுமுறை யாவணம் என்ற சொல்லுக்குக் கொடுக்கப்பட்டுள்ள சட்டப்படியான இல்க்கணமெதுவும், பொதுவான முறையில் ஏற்றுக்கொள்ளத்தக்கதாக அமையவில்லை. இருப்பினும், மாற்றுமுறை யாவணங்களின் தன்மைகளை அடிப்படையாகக்கொண்டு அச் சொற்றொடருக்குக் கீழ்க்காணும் இலக்கணம் கொடுக்கலாம்.

நன்னம்பிக்கையுடன், தகுந்த மதிப்பினைச் செலுத்தி ஓர் ஆவணத்தைப் பெற்ற நபர் அதனை, அவரிடம் மாற்றிக் கொடுத்த நபரைவிடச் சிறந்த உரிமை பெற்றிருந்தால், அதாவது அதனை மாற்றிக் கொடுத்தவருக்கு அந்த ஆவணத்தின்மீது உரிமை இருப்பினும், இல்லாவிடினும், அதனைப் பெற்றவர் உரிமைகொள்ளும் தன்மை பெற்றிருப்பாரேயானால், அத்தகைய ஆவணம் மாற்றுரிமை யாவணமாகும். மாற்றுரிமை யாவணம், கைமாறுகின்றபோது இடையிலுள்ளவர்கள் செய்த தவறுகள் இடையிலேற்பட்ட குறைகள் ஆகியவை அதனைப் பெற்றுள்ள முறைப்படி உடையவரைப் (Holder in due course) பாதிக்காது. காசோலைகள், மாற்றுச்சீட்டுகள் (Bills of Exchange), கடனுறுதிச் சீட்டுகள் (Promissory Notes) ஆகியவற்றை இதற்கு எடுத்துக்காட்டாகக் குறிப்பிடலாம்.

மாற்றுமுறை யாவணங்களின் முக்கிய தன்மைகள்:

(1) மாற்றுமுறை யாவணங்கள் மிக எளிதான முறையில் பிறருக்கு மாற்றிக்கொடுக்கப்படலாம். அவற்றைக் கைமாற்றிக் கொடுக்கின்றபோதே சட்டப்படி உரிமைகளும் கைமாறுகின்றன.

(2) மாற்றுமுறை யாவணங்களிலுள்ள குறைகளும் தவறுகளும் அவற்றைப் பெற்றுள்ள 'முறைப்படி உடையவரை'ப் பாதிப்பதில்லை. எனவே, அவற்றை மாற்றிக் கொடுத்த நபருக்கு அந்த ஆவணங்கள் மீது உரிமை இருப்பினும், இல்லாதிருப்பினும் முறைப்படி உடையவர், அப் பத்திரங்கள் மீது முழு உரிமை கொண்டிருக்கலாம்.

(3) முறைப்படி உடையவர் மாற்றுமுறை யாவணங்கள் குறித்துத் தம்முடைய பெயரிலேயே நீதி மன்றத்தில் வழக்குத் தொடுக்க முடியும்.

(4) இத்தகைய பத்திரம் கைமாறுகின்றபோது, இடையிலுள்ளவர்கள் செய்கின்ற தவறுகளுக்கு முறைப்படி உடையவர் பொறுப்பாவதில்லை.

(5) ஆவணத்திற்குரிய பணத்தைச் செலுத்தக் கடமைப்பட்ட நபர்களுக்குப் பணத்தைச் செலுத்துமாறு அறிக்கை விடுக்க வேண்டிய அவசியமில்லை.

(6) ஒருசில ஏற்புக் கோட்பாடுகள் எல்லா மாற்றுமுறை யாவணங்களுக்கும் பொருந்தும்.

பொதுவாக, கடன் பத்திரங்களை மேலெழுத்தின் (Endorsement) மூலம் மாற்றிக்கொடுக்கலாம். மாற்றுமுறை ஆவணங்களைப் பெற்றுக்கொண்டவருக்கு முழு உரிமை கிடைக்கின்றது.

அவருக்கு அவ்வாறு முழு உரிமை கிடைக்க வேண்டுமேயானால், கீழ்க்காணும் நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்படவேண்டும்.

(1) மாற்றுமுறை யாவணம், தகுந்த மதிப்பிற்காகப் பெற்றிருக்கப்பட வேண்டும்.

(2) அதனைப் பெற்றுள்ளவர், முழு நம்பிக்கையுடனும், எவ்வித ஐயமுமின்றிப் பெற்றிருத்தல் வேண்டும்.

(3) மாற்றுமுறை யாவணம், முழுமையான தாகவும் ஒழுங்கான அமைப்பிலும் இருத்தல் வேண்டும்,

கடனுறுதிச் சீட்டு
(Promissory Note)

ஒருவர் கடனைப் பெறுகின்றபோது, அதனைக் கொடுப்பவருக்கு அக் கடனைக் கேட்டவுடனேயோ ஒரு குறிப்பிட்ட காலத்திற்குப் பிறகோ கொடுப்பதாகக் குறிப்பிட்டு எழுத்து மூலமாகக் கொடுக்கும், நிபந்தனையற்ற உறுதிமொழியே கடனுறுதிச் சீட்டாகும். கடனுறுதிச் சீட்டினை எழுதுபவர் கடனாளி எனப் படுவார். யார்மீது அச் சீட்டு எழுதப்படுகின்றதோ அவர் கடனாளர் ஆவார். சட்டப்படி கடனுறுதிச் சீட்டினை எழுதுபவரை 'வரைபவர்' (Drawer) என்றும் அது யார்மீது எழுதப்படுகின்றதோ அவரைப் 'பெறுபவர்' என்றும் கூறுகிறோம்.

கடனுறுதிச் சீட்டின் தன்மைகள்: கடனுறுதிச் சீட்டு ஒரு சில தன்மைகளைப் பெற்றுத் திகழ்கின்றது. அவையாவன :

(அ) கடனுறுதிச் சீட்டு எழுத்து மூலமானது; வாய்ச்சொல் மூலம் கூறப்படும் உறுதிமொழி கடனுறுதிச் சீட்டாகாது.

(ஆ) கடனுறுதிச் சீட்டு கடன் பெற்றிருப்பதை மட்டுமே குறிப்பிட்டால் போதாது. அதனைத் திருப்பிச் செலுத்துவதாக வாக்குறுதியும் கொண்டிருக்க வேண்டும்.

(இ) கொடுக்கப்படும் வாக்குறுதி இறுதியானதாகவும், நிபந்தனையற்றதாகவும் இருத்தல் வேண்டும். நிபந்தனையுடன் இணைந்த வாக்குறுதி கடனுறுதிச் சீட்டாகாது. கீழ்க்கண்டவை வாக்குறுதிச் சீட்டுகளாகா :

(i) 'இராமன் சென்னைக்கு வந்தால் நான் ரூ. 500 செலுத்துகிறேன்'.

(ii) 'கோபால் பண்டங்கள் கொண்டு வந்தால் நான் ரூ. 1000 செலுத்துவேன்'.

(ஈ) கடனுறுதிச் சீட்டு வாக்குறுதி அளிப்பவரால் கையொப்பமிடப்பட்டிருத்தல் வேண்டும்.

(உ) கடனுறுதிச் சீட்டு யாரால் எழுதப்படுகிறதென்பது தெளிவாகக் குறிப்பிடப்பட வேண்டும்.

(ஊ) கொடுக்கப்பட வேண்டிய தொகை கடனுறுதிச் சீட்டில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருத்தல் அவசியமாகும்.

(எ) கடனுறுதிச் சீட்டுக்கான தொகையினைப் பெறத் தக்கவர் யாரென்பது அச் சீட்டில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும்.

(ஏ) கடனுறுதிச் சீட்டுக்கான தொகை ஒரு குறிப்பிட்ட நபரிடமோ, அவருடைய ஆணையின்படியோ செலுத்தப்படும்படி இருத்தல் வேண்டும். கொணர்பவரிடம் செலுத்தும் வகையில் இருத்தல் கூடாது. எனவே, தாள் பணம் (Currency Note) கடனுறுதிச் சீட்டாகாது.

மாதிரிக் கடனுறுதிச் சீட்டு

திருச்சி,
22—6—75

திருச்சி ஆண்டார் தெருவிலுள்ள திரு. கிருட்டிணமூர்த்தி மகனான செந்தில் வேலாகிய நான், திருச்சி கீழ வீதியிலுள்ள திரு. கோபால் அவர்களின் மகனான திரு. கண்ணப்பனுக்கு எழுதிக்கொடுத்த கடனுறுதிப் பத்திரம்.

திரு. கண்ணப்பன் அவர்களோ அவரது ஆணையினைப் பெற்றவரோ கேட்கின்றபோது, மதிப்புள்ள பண்டங்களைப் பெற்றதற்காக ரூபாய் ஒரு ஆயிரத்து ஐந்நூற்றினை ஆண்டிற்கு 4 விழுக்காடு வட்டியுடன் சேர்த்துத் திருப்பிச் செலுத்துவதாக உறுதி கூறுகிறேன்.

இப் பத்திரம் 1975ஆம் ஆண்டு சூன் திங்கள் இருபத்து இரண்டாம் நாள் எழுதப்பெற்றது.

(கையொப்பம்) செந்தில்வேல்.

சான்றாளர்கள் :

1. ஐயப்பன், திரு. சோமசுந்தரத்தின் மகன்.
2. வடிவேலு, திரு. பாலசந்தரின் மகன்.

ஒரு கடனுறுதிச் சீட்டு சட்டப்படியாகச் செல்லுபடியாகத் தக்கதாக இருக்கவேண்டுமாயின் அது முத்திரைப் பத்திரத்திலோ முத்திரை ஒட்டப்பட்ட காகிதத்திலோ எழுதப்பட வேண்டும். மேலும் அப் பத்திரத்தில் கடனை வாங்கியவர் கையொப்பம் இடவேண்டும். கையொப்பத்தின் கீழ் அவர் தேதியினைக் குறிப்பிடுதலும் இன்றியமையாததாகும். கடனுறுதிச் சீட்டினை எழுதுபவர் எந்த வீதத்தில் வட்டி செலுத்துவதாகக் குறிப்பிட்டுக் கடன் பெறுகிறார் என்பதனையும் அப் பத்திரத்தில் குறிப்பிடுதல் வேண்டும். பொதுவாக ஒரு கடனுறுதிச் சீட்டு மூன்றாண்டுக் காலத்திற்கு மட்டுமே செல்லும். கடனுறுதிச் சீட்டில் குறிப்பிட்டுள்ள காலம் முடிந்து, மூன்றாண்டுக் காலம்வரை அச் சீட்டினை எழுதிக் கொடுத்தவரிடமிருந்து, அசலில் ஒரு தொகையோ, வட்டியில் ஒரு பகுதியினையோ வாங்கவில்லை என்றால், அச் சீட்டுச் செல்லாததாகிவிடும். அக் கடனுறுதிச் சீட்டின்மீதான கடனும் காலாவதிக் கடனாகிவிடும்.

மாற்றுச் சீட்டு
(Bill of Exchange)

வணிகமும் கடனும் ஒன்றுடனொன்று பின்னிப் பிணைந்தவை என முன்னரே குறிப்பிட்டோம். எனவே, வணிகத்தில் பண்டங்கள் கடனுக்கு விற்கப்படுவதும், அவை கடனுக்கு வாங்கப்படுவதும் தவிர்க்கற்பாலது. கடனுக்குப் பண்டங்களை விற்பவரும், அவற்றை வாங்குபவரும், நெருங்கிய நண்பர்களாகவோ உறவினர்களாகவோ இருப்பின், வாய்ச்சொல் உறுதி மொழியினடிப்படையில் பண்டங்கள் கடனுக்கு விற்கப்படலாம். அவ்வாறு இல்லாத நிலையில், மாற்றுச் சீட்டு எழுதுவதற்கான அவசியம் எழுகின்றது.

கடனுக்குப் பண்டங்களை விற்பனை செய்தவர், அப் பண்டங்களை வாங்கியவர்மீது, அப் பண்டங்களின் மதிப்பை ஒரு குறிப்பிட்ட காலத்தில், விற்கப்பட்ட பண்டங்களின் மதிப்பாக அப் பத்திரத்தில் குறிப்பிட்டுள்ள தொகையினை ஒரு குறிப்பிட்ட நபருக்கோ அல்லது அவருடைய ஆணைக்கோ அல்லது அதனைக் கொண்டிருப்பவருக்கோ செலுத்துமாறு குறிப்பிட்டு எழுதும் ஆணையே மாற்றுச் சீட்டாகும்.

'மாற்றுமுறை யாவணச் சட்டத்தின்' (Negotiable Instruments Act) பிரிவு 5-ல் மாற்றுச் சீட்டிற்குக் கீழ்க்காணும் இலக்கணம் கொடுக்கப்பட்டுள்ளது. ஒரு குறிப்பிட்ட நபருக்கு மட்டுமோ

அல்லது அவரது ஆணைக்கோ அல்லது அதனைக் கொணர்பவருக்கோ ஒரு குறிப்பிட்ட தொகையைச் செலுத்தும் வகையில் நிபந்தனையற்ற முறையில் ஆணையிட்டு, ஆவணத்தைத் தயாரிப்பவரால் கையொப்பமிடப்பட்ட எழுத்துமூலமான பத்திரமே மாற்றுச் சீட்டாகும்.

மேற் குறிப்பிட்டுள்ள இலக்கணத்தைப் பகுத்தாயுங்கால், மாற்றுச் சீட்டின் முக்கிய தன்மைகள் நன்கு விளங்கும். அவை யாவன :

(1) மாற்றுச் சீட்டு எழுத்து மூலமானதாகவே இருத்தல் வேண்டும். வாய்ச்சொல் உறுதிமொழியினடிப்படையில் மாற்றுச் சீட்டினைத் தயாரித்தலென்பது இயலாததாகும்.

(2) கடனுக்குப் பண்டங்களை விற்பனை செய்தவரால், அவற்றினை வாங்கியவர்மீது, அப் பண்டங்களின் மதிப்புக்கான தொகையினைச் செலுத்துமாறு விடுக்கப்படும் ஆணையே மாற்றுச் சீட்டாகும்.

(3) விடுக்கப்படும் ஆணை நிபந்தனையற்றதாக இருத்தல் வேண்டும்.

(4) மாற்றுச் சீட்டு எழுதுபவரால் கையொப்பமிடப் பட்டிருக்க வேண்டும்.

(5) மாற்றுச் சீட்டில் பங்குபெறும் மூன்றுபேர்களான, கடனுக்குப் பண்டங்களை விற்று அதனடிப்படையில் மாற்றுச்சீட்டினை எழுதும் வரைபவர் (Drawer), மாற்றுச் சீட்டு யார் பெயரில் எழுதப் படுகின்றதோ அதாவது கடனுக்குப் பண்டங்களை வாங்கிய பெயரவர் (Drawee) மாற்றுச் சீட்டின் பணத்தைப் பெற உரிமை பெற்றுள்ள பெறுவோர் (Payee) ஆகிய மூவரும், யாரென்று அறுதியிட்டு நிர்ணயிக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

(6) கொடுக்கப்பட வேண்டிய தொகை எவ்வளவென்று அறுதியிட்டு நிர்ணயிக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

(7) அப் பத்திரம், பணத்தினைக் கொடுக்குமாறு மட்டுமே ஆணையிட்டிருத்தல் வேண்டும்.

(8) எழுதப்பட்ட மாற்றுச் சீட்டு, பெயரவருக்கு அனுப்பப் பட்டு அவருடைய ஒப்புதலைப் பெறுதல்வேண்டும். பெயரவருடைய ஒப்புதல் பெறப்படாத மாற்றுச் சீட்டு மதிப்பற்றதாகும்.

மாற்றுச் சீட்டுகளைப் பல்வேறு தன்மைகளின் அடிப்படையில் வகுபடுத்தலாம். மாற்றுச் சீட்டுகளுக்குப் பணம் கிடைக்கும்

காலத்தினடிப்படையில் அவற்றைக் கேட்பு மாற்றுச் சீட்டு (Demand Bill) என்றும் கெடு மாற்றுச் சீட்டு (Time Bill) என்றும் இரு வகைகளாகப் பிரிக்கலாம். கேட்டவுடன் பணம் கொடுக்கத் தக்க வகையில் எழுதப்படும் மாற்றுச்சீட்டுகளைக் கேட்பு மாற்றுச் சீட்டு என்கிறோம். அவ்வாறின்றி ஒரு குறிப்பிட்ட காலத்திற்குப் பின்னர்ப் பணம் செலுத்தத் தக்க மாற்றுச்சீட்டு கெடு மாற்றுச் சீட்டு என்றழைக்கப்படுகிறது. பெயரவரைப் பொறுத்தவரை கெடு மாற்றுச் சீட்டே சிறந்ததாகும். ஏனெனில், அச் சீட்டிற்கான பணம் எப்பொழுது செலுத்தப்பட வேண்டுமென்பதனை அவர் நன்கு அறிந்திருக்கிறார். ஆனால், கேட்பு மாற்றுச்சீட்டு அவரிடம் பணம் பெறும்பொருட்டு எப்பொழுது அனுப்பப்படுமென்பது அவருக்கே தெரியாது. 'கெடு மாற்றுச்சீட்டு' காலை மாற்றுச் சீட்டு என்றும், தேதி குறிப்பிடப்பட்ட மாற்றுச் சீட்டென்றும் அழைக்கப்படுகிறது. தேதி குறிப்பிடப்பட்ட மாற்றுச் சீட்டினைப் பொறுத்தவரை, பெயரவர், அச் சீட்டில் குறிப்பிட்டுள்ள கெடு தேதிக்குப் பின்னர் மூன்று நாள்கள் வரை பணம் செலுத்தலாம். அவ்வாறு கொடுக்கப்பட்டுள்ள மூன்று நாள்கள், பெயரவர் மாற்றுச் சீட்டிற்குரிய காலத்தில் பணம் செலுத்தாததனால், அவர் மீது இரக்கப்பட்டு கருணையினடிப்படையில் கொடுக்கப்படுவதாகும். எனவே, இம் மூன்று தினங்களும் 'கருணை நாள்கள்' (Grace days) என்றழைக்கப்படுகின்றன.

மாற்றுச் சீட்டுகளை மீண்டும் அவை எழுதப்பட்ட நாட்டினடிப்படையில், அதாவது வரைபவர், பெயரவர் ஆகியோர் வசிக்கும் நாட்டின் அடிப்படையில் உள்நாட்டு மாற்றுச்சீட்டு (Inland Bill), அயல்நாட்டு மாற்றுச்சீட்டு (Foreign Bill) என இரு பிரிவுகளாகப் பிரிக்கலாம். மாற்றுச்சீட்டின் வரைபவர், பெயரவர் ஆகிய இருவரும் ஒரே நாட்டிலிருப்பின் அத்தகைய மாற்றுச் சீட்டினை உள்நாட்டு மாற்றுச்சீட்டு என்றும், அதுபோலன்றி, வரைபவர் ஒரு நாட்டிலும், பெயரவர் மற்றொரு நாட்டிலுமிருப்பின் அத்தகைய மாற்றுச்சீட்டினை அயல்நாட்டு மாற்றுச்சீட்டென்றும் கூறுகிறோம்.

மாற்றுச்சீட்டினை வரைபவர் பண்டகங்களை இரயில் வண்டி மூலம் அனுப்பி, அவற்றிற்குரிய பணத்தைப்பெற விழையும் நிலையில் 'பத்திரங்கள் இணைந்த மாற்றுச்சீட்டு' என்றதொரு வகையான மாற்றுச்சீட்டினைத் தயாரிக்கின்றார். இவ்வாறு தயாரிக்கப்பட்ட மாற்றுச்சீட்டு, பண்டகங்களுக்குரிய பட்டியல், இரயில் இரசீது ஆகியவற்றுடன் இணைக்கப்பட்டுள்ளது. இத்தகைய பத்திரங்கள் இணைந்த மாற்றுச்சீட்டினை வரைபவர் ஒரு வங்கிக்கு அனுப்பி அவ்வாறு அனுப்பப்பட்ட விவரத்தைப் பெயரவருக்குத் தெரிவிக்கிறார். பெயரவர், மாற்றுச்சீட்டின்

தன்மைக்கேற்பப் பணம் செலுத்திய பிறகோ அல்லது மாற்றுச் சீட்டுக்கு ஒப்புதல் கொடுத்த பிறகோ பத்திரங்களைப் பெற்றுக் கொண்டு, அவற்றை இரயில் துறையினரிடம் கொடுத்துப் பண்டங்களைப் பெற்றுக்கொள்கிறார்.

மாற்றுச் சீட்டில் பெயரவர், ஒப்புதல் தெரிவித்துக் கையொப்பமிடாவிடின், அதற்கு அவர் பொறுப்பாளி ஆவதில்லை. எனவே, ஒரு மாற்றுச் சீட்டு பெயரவரிடம் இருமுறை காட்டப்படும். முதல் முறை பெயரவரிடம் அவருடைய ஒப்புதலைப் பெறும் பொருட்டும், இரண்டாம்முறை அதன் தொகையினைப் பெற்றுக்கொள்ளும் பொருட்டும் காட்டப்படுகிறது. பெயரவர், கெடு காலத்தில் மாற்றுச்சீட்டுக்கான பணத்தைக் கொடுக்கத் தவறினால், அம் மாற்றுச்சீட்டு 'மறுக்கப்பட்ட மாற்றுச்சீட்டு' (Dishonoured Bill) எனப்படும்.

கேட்பு மாற்றுச் சீட்டினைப் பொறுத்தவரை வரைபவருக்குக் காலதாமதமின்றி உடன் பணம் கிடைக்க வாய்ப்புள்ளது. ஆனால், கெடு மாற்றுச் சீட்டிற்குரிய பணம், மாற்றுச்சீட்டில் குறிப்பிட்டுள்ள கெடு முடிந்த பின்னர்த்தான் கிடைக்கும். எனவே, அத் தேதிக்கு முன்னர், ஒரு மாற்றுச் சீட்டின் உரிமையாளர் வரைபவர் அதற்குரிய பணத்தைப்பெற விரும்பினால் அதனை அவருடைய வங்கியிடம் கொடுத்துக் கழிவு செய்து கொள்ளலாம். வங்கி அம் மாற்றுச் சீட்டின் மதிப்பில் ஒரு குறிப்பிட்ட தொகையினைக் கழிவுத் தொகையாக எடுத்துக்கொண்டு எஞ்சிய தொகையினை வரைபவருக்குச் செலுத்திவிடும். இவ்வாறுஒருகால மாற்றுச் சீட்டின் கெடு தேதிக்கு முன்னர் அதனுடைய வரைபவர் அதனை ஒரு வங்கியிடம் கொடுத்து அதற்குரிய தொகையினைப் பெறுதலைக் மாற்றுச்சீட்டு கழிவு செய்தல் என்று கூறுகிறோம். மாற்றுச்சீட்டினை கழிவு செய்துகொண்ட வங்கி அதனைக் கெடு தேதியில் வரைபவரிடம் கொடுத்து அதன் மதிப்பைப் பெற்றுக்கொள்கின்றது. மாற்றுச்சீட்டு அதன் உரிமையாளரால் 'மேல் எழுத்து' (Endorsement) செய்வதன் மூலம் பிறருக்கு மாற்றிக்கொடுக்கப் படலாம்.

மாற்றுச் சீட்டுக்கும் கடனுறுதிச் சீட்டுக்குமுள்ள வேறுபாடுகள் : மாற்றுச் சீட்டும் கடனுறுதிச் சீட்டும் மாற்றுமுறை ஆவணங்களாக இருப்பினும் இவை இரண்டிற்கு மிடையே பல வேறுபாடுகள் உள்ளன. அவையாவன :

(1) கடனுறுதிச் சீட்டில் வரைபவர், பெறுபவர் என்ற இரு நபர்களே உள்ளனர். ஆனால், மாற்றுச் சீட்டில் வரைபவர், பெயரவர், பெறுபவர் என மூன்று வகையினர் உளர்.

(2) கடனுறுதிச் சீட்டினை வரைபவர், அச் சீட்டுக்கான தொகையினைத் தம்மிடமே கொடுக்குமாறு குறிப்பிட்டு வரைய முடியாது. ஆனால், மாற்றுச் சீட்டினை வரைபவர், அச் சீட்டுக்கான தொகையினைத் தம்மிடமே செலுத்துமாறு குறிப்பிட்டு வரையலாம். அதாவது கடனுறுதிச் சீட்டில் வரைபவர், பெறுபவர் ஆகிய இருவரும் தனித்தனியாக இருத்தல் வேண்டும். இருவரும் ஒரே நபராக இருத்தல் இயலாது. ஆனால், மாற்றுச் சீட்டில் அவர்கள் இருவரும் ஒரே நபராக இருக்கலாம்.

(3) கடனுறுதிச்சீட்டு கடன் பெறுபவரால் எழுதப்படுகின்றது. மாற்றுச் சீட்டு கடன் கொடுப்பவரால் எழுதப்படுகின்றது.

(4) கடனுறுதிச் சீட்டு நிபந்தனையற்ற வாக்குறுதியினைக் கொண்டதாகும். ஆனால், மாற்றுச் சீட்டு நிபந்தனையற்ற ஆணையினைக் கொண்டதாகும்.

(5) கடனுறுதிச் சீட்டினைப் பொறுத்தவரை 'ஏற்பு' (acceptance) என்பதற்கு அவசியமில்லை. ஆனால், மாற்றுச்சீட்டு ஒரு குறிப்பிட்ட காலத்திற்குப் பிறகு பணம் செலுத்தக்கூடியதாக இருப்பின் அது பெயரவரால் ஏற்றுக்கொள்ளப்படவேண்டும்.

(6) கடனுறுதிச் சீட்டின் வரைபவருடைய பொறுப்பு முதன்மையானது. ஆனால், மாற்றுச் சீட்டின் வரைபவருடைய பொறுப்பு இரண்டாம் நிலையானதுதான்.

(7) கடனுறுதிச் சீட்டில் வரைபவருக்கும் பெறுபவருக்குமிடையே நேரடித் தொடர்புள்ளது. ஆனால், மாற்றுச்சீட்டைப் பொறுத்தவரை வரைபவருக்கும் பெயரவருக்குமிடையேதான் நேரடித் தொடர்புள்ளது. வரைபவருக்கும் பெறுபவருக்குமிடையே நேரடித் தொடர்பில்லை.

(8) மாற்றுச்சீட்டுகள் தொகுப்பாக வரையப்படலாம். ஆனால், கடனுறுதிச் சீட்டுகள் தொகுப்பாக வரையப்படுவதில்லை.

(9) கொணர்பவருக்குச் செலுத்தும் வகையில் கடனுறுதிச் சீட்டு வரைதல் இயலாது. ஆனால், அவ்வாறு செலுத்தும் வரையில் மாற்றுச் சீட்டுகள் வரையப்படலாம்.

(10) மாற்றுச் சீட்டுகளைப் பொறுத்தவரை கெடு தேதிக்குப் பிறகு பணம் செலுத்தும் பொருட்டு மூன்று நாள்கள், கருணை நாள்கள் எனப் பெயரவருக்குச் சலுகை கொடுக்கப்படுகிறது. இது போன்ற கருணை நாள்கள் சலுகை கடனுறுதிச்சீட்டில் இல்லை.

(11) மாற்றுச் சீட்டுகள் பணம் செலுத்தப்படாமல் மறுக்கப் பட்டால் அவை, அதற்கென அமர்த்தப்பட்டுள்ள அலுவலர் களிடம் பதிவு செய்யப்பட வேண்டும். கடனுறுதிச் சீட்டுகளைப் பொறுத்தவரை அத்தகைய நிபந்தனை ஏதும் இல்லை.

மாதிரி மாற்றுச் சீட்டு

ரூ. 2000 திருச்சி
22-6-75

மூன்று மாதங்களுக்குப் பிறகு கண்ணனுக்கோ அல்லது அவரது ஆணைக்கோ பண்டங்களைப் பெற்றுக்கொண்ட வகைக்காக ரூ. இரண்டாயிரம் செலுத்துக.

பெறுநர் :
கோபால்,
40, கீழ வீதி,
திருச்சி-5

ஏற்கப்பட்டது
கோபால்
(பெயரவர்)

கையொப்பம்
(வரைபவர்)

இராமு

முத்திரை

காசோலை (Cheque)

காசோலையினைப் புழக்கத்திற்குக் கொண்டுவரப் பொற்கொல் லர்கள் பெரிதும் உதவினர் என்றும் அவர்கள் வங்கியர்களின் முன்னோடிகளில் ஒரு வகையினராகத் திகழ்ந்தனர் என்றும் முதல் அத்தியாயத்தில் விளக்கினோம். அவ்வாறு பொற்கொல்லர்களால் உருவாக்கப்பட்ட காசோலைகள் இன்று பெருமளவில் பயன்படுத்தப்படுகின்றன. வங்கியிலிருந்து பணத்தைப் பெறக் காசோலை பயன்படுத்தப்படுகின்றது. நடைமுறைக் கணக்கிலுள்ள பணத்தைப்பெறப் பெரும்பாலும் காசோலை முறை பயன்படுத்தப் படுகின்றதெனினும் சேமிப்புக் கணக்கைக் கொண்டுள்ள வாடிக்கைக்காரர்களுள் ஒரு சிலருக்கும், கணக்கிலிருந்து பணத்தைப் பெற, பல வங்கிகள், அக் காசோலை வசதிகள் அளித்துள்ளன.

மாற்று முறை ஆவணங்கள் சட்டத்தின் ஆரும்(6)பிரிவின்படி கேட்டவுடன் செலுத்தும் வகையில் ஒரு குறிப்பிட்ட வங்கியின் மீது எழுதப்பட்ட ஒரு மாற்றுச் சீட்டே காசோலையாகும். இவ் விளக்கத்தின்படி மாற்றுச் சீட்டுகளின் ஒரு பிரிவே காசோலை எனலாம். மாற்றுச் சீட்டுகளில் இல்லாத கீழ்க்காணும் இரு இயல்புகள் காசோலைகளில் உள்ளன :

(i) காசோலைகள் எப்பொழுதும் வங்கிகள்மீது மட்டும் வரையப்படுபவை.

(ii) காசோலைகளுக்கான தொகை எப்பொழுதும் கேட்ட வுடன் கொடுக்கப்படும்.

மாதிரிக் காசோலை

எண்: 78

இந்தியன் ஓவர்சீஸ் வங்கி
அபிஷேகபுரம், திருச்சி-20

சேமிப்புக் கணக்கு எண்: 74 தேதி: 22-6-1975

கண்ணனுக்கு அல்லது கொணர்வோருக்கு ரூபாய் ஆயிரம் செலுத்துக.

ரூ. 1000/-

சரவணன்

எல்லாக் காசோலைகளும் மாற்றுச் சீட்டுகளாகும். ஆனால், எல்லா மாற்றுச் சீட்டுகளும் காசோலைகளாக மாட்டா. எனவே, ஒரு காசோலை மாற்றுச் சீட்டுகளின் தன்மைகளைப் பெற்றிருத்தல் வேண்டும். காசோலைகளின் தன்மைகளாவன :

(i) காசோலை எழுத்து மூலமான ஆணையாகும். இவ்வாணை வாடிக்கைக்காரர்களால் வங்கிமீது எழுதப்படுகின்றது. வங்கியர்க்கும் வாடிக்கைக்காரர்களுக்குமிடையேயுள்ள ஒப்பந்தத்தின் படி, பொதுவாக, வாடிக்கைக்காரர்கள் வங்கிகளால் வழங்கப்படும் காசோலைகளைப் பயன்படுத்துதல்வேண்டும். இவ்வாறு வங்கிகளால் வழங்கப்படும் காசோலைகளைமட்டும் பயன்படுத்துவதால், மோசடிகள் தவிர்க்கப்படுகின்றன. அவ்வாறு வழங்கப்படும் அச்சடித்த காசோலைகளில் பேனாவினால் வாடிக்கைக்காரர்கள் ஆணையினைப் பிறப்பிக்கின்றனர்.

(ii) வங்கிகளின்மீது வாடிக்கைக்காரரால் வழங்கப்படும் ஆணை நிபந்தனையற்றதாக இருத்தல்வேண்டும்.

(iii) வாடிக்கைக்காரரால் வங்கிமீது எழுதப்படும் ஆணையே காசோலையாகுமாதலின், அந்த ஆணை ஒரு வங்கிமீது மட்டுமே எழுதப்படவேண்டும். வேறு நிறுவனங்கள் மீதோ, வேறு தனி நபர்கள் மீதோ எழுதப்படும் ஆணைகள் காசோலைகளாகமாட்டா.

(iv) காசோலை, வாடிக்கைக்காரரால் கையொப்பமிடப் பட்டிருத்தல்வேண்டும். காசோலையில் வாடிக்கைக்காரர் கையொப்பமிடவில்லையென்றால் அது காசோலையாகக் கருதப்பட மாட்டாது.

(v) வங்கி எவ்வளவு பணம் கொடுக்கவேண்டுமென்பது காசோலையில் திட்டவட்டமாகக் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும். தவறு ஏற்படுவதைத் தடுக்கும் வகையில் நடை முறையில் வங்கிகளால் கொடுக்கப்படும் காசோலை இதழ்கள் கொடுக்கப்படும் தொகை எண்ணாலும் எழுத்தாலும் குறிப்பிடப் படும் வகையில் அமைந்துள்ளன.

(vi) காசோலையில் குறிப்பிட்டுள்ள பணம் யாருக்குச் செலுத்தப்படவேண்டும் என்று குறிப்பிடப்படுதல்வேண்டும். காசோலையில் குறிப்பிட்டுள்ள தொகை ஒரு குறிப்பிட்ட நபருக்கு மட்டும் செலுத்தப்படும் வகையில்தான் அதனை வரையமுடியு மென்பதில்லை. அதில் குறிப்பிட்டுள்ள பணத்தை ஒரு குறிப்பிட்ட நபருக்கோ அல்லது அவரது கட்டளை பெற்றவருக்கோ அல்லது அதனைக் கொணர்பவருக்கோ செலுத்தும் வகையில் அமைந் திருக்கலாம்.

(vii) வாடிக்கைக்காரர், காசோலை மூலம் பணம் கேட்கும் போதுதான் காசோலைக்குரிய பணம் செலுத்தப்படுமே தவிர வங்கி தானாகவே பணத்தைக் கொடுக்காது.

மேலே குறிப்பிட்டுள்ளவை வங்கி வழங்கும் காசோலைகளின் சிறப்புத் தன்மைகளாகும். இவற்றைத் தவிர்த்து, காசோலை வழங்கும் நிலையில் வாடிக்கைக்காரர் ஒவ்வொருவரும் சில கோட் பாடுகளைக் கடைப்பிடித்தல் இன்றியமையாததாகும். காசோலை வரையும் வாடிக்கைக்காரர் வங்கியியல் காசோலைக்குப் போதுமான அளவு பணம் உள்ளதா என அறிந்துகொண்ட பிறகே காசோலையினை வழங்குதல்வேண்டும். போதிய பணமின்றி ஒரு வாடிக்கைக்காரர் தமது கணக்கிலிருந்து பணம் செலுத்தும் வகையில் காசோலை வழங்குவாரேயானால் அது அவரது புகழைப் பாதிப்பது மட்டுமின்றி, பணம் பெறவிருப்பவர், அதாவது காசோலையினைப் பெற்றவர் நீதிமன்றத்தில் வாடிக்கைக்காரர்மீது வழக்குத் தொடுத்து நட்ட ஈடு கோரும் நிலையும் ஏற்படலாம்.

காசோலையினை வரைபவர் காசோலை வழங்கும் தேதியினை அதில் குறிப்பிடுதல்வேண்டும். வழக்கிலுள்ளபடி, ஒரு காசோலை அது வழங்கப்பட்ட தேதியிலிருந்து அதாவது அதில் குறிப் பிட்டுள்ள தேதியிலிருந்து ஆறு திங்கள்களுக்குள் வங்கியில்

கொடுக்கப்பட்டுப் பணம் பெறப்பட்டிருக்கவேண்டும். ஆறு திங்கள் களுக்குப் பிறகு கொடுக்கப்படும் காசோலைகளுக்கு வங்கிகள் பணம் கொடுப்பதில்லை. ஆறு திங்கள்களுக்குப் பிறகு வங்கியில் கொடுக்கப்படும் காசோலைகள், அதனால் திருப்பியனுப்பப்படும். அதுபோன்ற காசோலைகள் நாட்பட்ட காசோலைகள் (Stale Cheques) என்றழைக்கப்படுகின்றன.

காசோலையில் அது வழங்கப்படும் தேதியினைத்தான் குறிப் பிடுதல் வேண்டுமென்பதில்லை. அதற்கு முந்திய தேதியினையோ, பிந்திய தேதியினையோ காசோலையில் குறிப்பிடலாம். காசோலை யில், அது வழங்கப்பட்ட தேதிக்கு முந்திய தேதி குறிப்பிடப் பட்டிருந்தால் அதனை 'முன் தேதியிட்ட காசோலை' (Ante-dated Cheque) என்றும், அதுபோலன்றி அது வழங்கப்பட்ட தேதிக்குப் பிந்திய தேதி இடப்பட்டிருந்தால் அதனைப் பின் தேதியிட்ட காசோலை (Post dated Cheque) என்றும், கூறுகிறோம். எடுத்துக் காட்டாக, 22-6-75 அன்று வழங்கப்படும் காசோலை 20-5-75 என்ற தேதியினைக் கொண்டிருப்பின், அது முன் தேதியிட்ட காசோலையாகும். அதுபோலன்றி அதே காசோலை 16-8-75 என்ற தேதியினைக் கொண்டிருப்பின், அது பின் தேதியிட்ட காசோலையாகும். முன் தேதியிட்ட காசோலையில் உள்ள தேதி ஆறு திங்கள்களுக்கு முற்பட்டதாக இருப்பின் அது பயனற்றது. அது சாதாரண தாளுக்கொப்பானது. பின் தேதியிட்ட காசோலை யினை அந்தத் தேதிக்குப் பிறகே வங்கியியலில் கொடுத்துப் பணம் பெற முடியும்.

காசோலை எழுதப்பட்ட பிறகு அதில், பெரும் மாற்றங்களைச் செய்தல் கூடாது. அதில் கருநிலைத் திருத்தங்களைச் (Material alteration) செய்வாரேயானால், அவ்வாறு செய்யப்பட்ட கருநிலைத் திருத்தங்கள் காசோலை வரைபவரால் சான்றொப்பம் செய்யப்படா விட்டால் அக் காசோலைக்கும் வெற்றுக் காகிதத் திற்கும் வேறுபாடில்லை. எனவே, அக் காசோலையினைக் கொடுத்து வங்கியில் பணம் பெறமுடியாது. காசோலையில் செய்யப்படும் எந்தத் திருத்தம் அதனுடைய உண்மைத் தன்மையினை மாற்றம் செய்கின்றதோ அந்தத் திருத்தத்தினைக் கருநிலைத் திருத்தம் என்று கூறுகிறோம். காசோலையிலுள்ள, பெறுபவர் பெயரைத் திருத்துதல், தேதியினைத் திருத்துதல், அதில் குறிப்பிட்டுள்ள தொகையினைத் திருத்துதல் ஆகியவை கருநிலைத் திருத்தங்களுக்கு எடுத்துக் காட்டுகளாகும்.

காசோலை உரிய நபரைச் சென்றடையும் வகையிலும், அதில் குறிப்பிட்டுள்ள தொகை உண்மையான பெறுபவருக்கோ அல்லது

அவரது ஆணையினைப் பெற்றவருக்கோ செலுத்தப்படும் வகையிலும் செய்ய, காசோலையினை எழுதுபவராலோ அல்லது அதனைப் பின்னர்ப் பெற்றவர்களாலோ கடைப்பிடிக்கப்படும் ஒரு முறையினைக் 'காசோலையினைக் கீறல் செய்தல்' என்று கூறுகின்றோம். ஒரு காசோலையில் இடப் பக்கத்தில் மேல் பகுதி மூலையில் குறுக்காக இரு இணைகோடுகளை வரைந்து '& Co' என்ற சொற்களை அவ்விருகோடுகளுக்கிடையே குறிப்பதையோ அல்லது வெறும் இணைகோடுகளை மட்டும் வரைவதையோ 'கீறல் செய்தல்' என்று கூறுகின்றோம். அவ்வாறு கீறல் செய்யப்பட்ட காசோலைக்கான பணத்தைக் கொடுப்பிடத்தின் (Counter) வழியாக வாங்க முடியாது. அதற்குரிய பணம் ஒரு வங்கிக் கணக்கு மூலமே வாங்கப்படுதல் வேண்டுமாதலின் மோசடி நடைபெறுவது தவிர்க்கப்படுகின்றது.

கீறல் செய்தலைப் 'பொதுக் கீறல்' (General Crossing) 'சிறப்புக் கீறல்' (Special Crossing) என இரண்டு வகைகளாகப்பிரிக்கலாம். ஒரு காசோலையின் முன்பக்கம் இடப் பகுதியின் மேலே குறுக்காக இரு இணைகோடுகளைமட்டுமோ அல்லது அத்தகைய இணை கோடுகளுக்கிடையே '& Co' என்னும் சொற்களையும் சேர்த்தோ வரைவதைப் பொதுக் கீறல் என்று கூறுகிறோம். இவ்வாறு பொதுக் கீறல் செய்யப்பட்ட காசோலைக்கான பணத்தை எந்த வங்கியின் மூலமும் பெற்றுக்கொள்ளலாம். ஆனால், அக் காசோலைக்களுக்கான பணத்தை வங்கியின் கொடுப்பிடத்தில் நேரடியாகக் கொடுத்து 'பெறுபவர்' பணத்தைப் பெறமுடியாது. ஒரு வங்கிக் கணக்கின் மூலமே அத்தகைய காசோலைகளுக்குப் பணம் பெறமுடியும். பொதுக் கீறலுக்குக் கீழ்க்கண்ட எடுத்துக் காட்டுகளைக் கூறலாம் :

(1)	(3)	(5)
	& Co	Not negotiable & Co
(2)	(4)	(6)
and company	Not negotiable	N/N & Co

சிறப்புக் கீறல் : ஒரு காசோலையின் முன்பக்க இடப் பக்கத்தின் மேலே மாற்றுமுறைத் தன்மையற்றது என்ற சொற்களுடனே அல்லது அச் சொற்களின்றியோ ஒரு வங்கியின் பெயர்

சேர்க்கப்பட்டிருக்குமாயின், அல்லது ஒரு வங்கியின் பெயர் குறிப்பிடப்பட்டிருக்குமாயின், அத்தகைய சேர்க்கை 'சிறப்புக் கீற'லாகும். அக் காசோலை அக் குறிப்பிட்ட வங்கிக்குக் கீறல் செய்யப்பட்டுள்ளதாகக் கொள்ளப்படும். எனவே, சிறப்புக் கீறல் செய்யப்பட்ட காசோலைகளுக்கான தொகையினைக் கீறலில் குறிப்பிட்டுள்ள வங்கி மூலம் மட்டுமே பெறமுடியும். இத்தகைய கீறல் செய்வதனால் மோசடி செய்வது மேலும் தவிர்க்கப்படுகின்றது. அவ்வாறு கீறலில் இடம்பெற்ற வங்கி மூலம் அக் காசோலைக்கான பணத்தைப் பெற வாய்ப்பில்லை எனில், அவ் வங்கியின் முகமை வங்கிமூலம் அக் காசோலைக்கான பணத்தைப் பெறலாம். சிறப்புக் கீறலில் கட்டாயமாக இரு இணை கோடுகளை வரைதல் வேண்டுமென்ற அவசியமில்லை.

கீழ்க்கண்டவை 'மாதிரிச் சிறப்புக் கீறல்கள்' ஆகும்.

(1)
Bank of India

(2)
Bank of India

(3)
Indian Overseas Bank & Co

(4)
Indian Bank and Company

(5)
Indian Bank and Not Negotiable

(6)
Indian Bank N/N

(7)
Indian Bank
A/C payee

வரையறைக் கீறல்: இவ்வகைக் கீறல் சிறப்புக் கீறலின்கீழ் வருகிறது. நடைமுறையில் வணிக வங்கிகள் இத்தகைய கீறல் முறையினையும் கடைப்பிடிக்கின்றன. காசோலைமீது உரிமை இல்லாதவர்கள் அக் காசோலைக்கான பணத்தை வாங்காது தடுப்பதே இவ்வகைக் கீறலின் உட்கருத்தாகும். பொதுவாக பொதுக் கீறல் அல்லது சிறப்புக் கீறலுடன் 'பெறுபவர் கணக்குக்கு மட்டும்' என்ற பொருள்கொண்ட ஆங்கிலச் சொற்றொடரின் சுருக்கமான 'A/c Payee' என்ற சொற்றொடர் சேர்க்கப்படும். இத்தகைய சொற்றொடர் சேர்க்கப்படுவதன் நோக்கம், பணம்

வசூலிக்கும் வங்கி, அக் காசோலைக்குரிய பணத்தைப் பெறுபவர் கணக்கில் மட்டுமே வரவு வைக்கவேண்டு மென்பதாகும். இம் முறைக் கீறல் கொண்ட காசோலையைப் பெறுபவர், புறக்குறிப்பு மூலம் வேறு யாருக்கும் மாற்றிக்கொடுக்க வியலாது. இது போன்றே மாற்றுமுறைத் தன்மையற்ற என்ற பொருள்கொண்ட ஆங்கிலச் சொற்றொடரான (Not Negotiable) என்றதையும் கொண்டு கீறல் செய்யப்படலாம். இவ்வாறு கீறல் செய்யப்பட்ட காசோலைகள் கைமாறுவதில் தவறெதுவும் இல்லை. ஆனால், அவ்வாறு கைமாற்றம் செய்யும்போது மாற்றிக் கொடுப்பவருக்கு அக் காசோலைமீது உரிமை இல்லையேல், அது அதனைப் பெற்ற வருடைய உரிமையினையும் பாதிக்கும். எனவே, அதனைப் பெற்ற வரும் அக் காசோலையினை உண்மை உரிமையாளருக்குத் திருப்பிக் கொடுத்தல் அவசியமாகும்.

காசோலைகளைக் கீறல் செய்வதன் நோக்கம் நாம் முன்னரே குறிப்பிட்டது போன்று அவை உண்மையான உரிமையாளர் களைச் சென்றடைய வேண்டு மென்பதேயாகும். எனவே, காசோலைக்குப் பணம் செலுத்துவதற்கு முன்னர், செலுத்து வங்கி அக் காசோலை கீறல் செய்யப்பட்ட காசோலையா அல்லது சாதாரணக் காசோலையா என்று அறிந்துகொள்ளுதல் வேண்டும். சாதாரணக் காசோலையாக இருப்பின் அதற்குக் கொடுப்பிடத்தின் வழியாகப் பணம் செலுத்தலாம். அதுபோலன்றி அது கீறல் செய்யப்பட்ட காசோலையாக விருப்பின் அது சாதாரணக் கீறலா அல்லது சிறப்புக் கீறலா என அறிந்துகொள்ளுதல் வேண்டும். சாதாரணக் கீறலாக இருப்பின் அக் காசோலை ஒரு வங்கி மூலம் செலுத்து வங்கிக்குப் பணம் பெறும் பொருட்டு அனுப்பப்பட வேண்டும். அதுபோலன்றி அக் காசோலை சிறப்புக் கீறல் கொண்டதாக இருப்பின், அது அக் குறிப்பிட்ட வங்கிமூலம் பணம்பெற அனுப்பப்பட்டுள்ளதா என்று செலுத்து வங்கி அறிந்து கொள்ளவேண்டும். அதுபோன்று கொடுக்கப்படும் காசோலை, அதில் குறிப்பிட்டுள்ள தேதியிலிருந்து ஆறு திங்களுக்குள் வழங்கப்பட்டுள்ளதா என்று அறிந்து கொள்ளுதல் வேண்டும். ஆறு திங்களுக்கு முன்னர் வழங்கப்பட்ட காசோலைகளுக்கும், அக் குறிப்பிட்ட வாடிக்கைக்காரரால் பணம் செலுத்த வேண்டா மெனத் தடுத்து நிறுத்தப்பட்ட காசோலைக்கும் வங்கி பணம் கொடுத்தல் கூடாது. அவ்வாறு செலுத்தப்படும் காசோலைகளுக் கான தொகையினை வங்கி வாடிக்கைக்காரர்களுடைய கணக்கில் பற்றெழுதும் உரிமையினை இழக்கின்றது.

ஒரு வங்கி மீது எழுதப்பட்ட மாற்றுச் சீட்டே காசோலை என முன்னரே குறிப்பிட்டோம். இருப்பினும் காசோலைக்கும்

மாற்றுச் சீட்டுக்கும் கீழ்க்காணும் வேறுபாடுகள் உள்ளன அவையாவன :

(1) மாற்றுச் சீட்டு எந்த நபர்மீதும், [ஒரு வங்கியர் உள்பட] எழுதப்படலாம். ஆனால், காசோலை வங்கிமீது மட்டும்தான் எழுதப்பட முடியும். இதர நபர்கள்மீது எழுதப்படும் மாற்றுச் சீட்டு காசோலையாகாது.

(2) மாற்றுச் சீட்டுப் பெயரவரால் (Drawee) ஏற்பு செய்யப் பட்டிருத்தல் வேண்டும். ஆனால், காசோலைகளைப் பொறுத்தவரை அவை உடன் செலுத்தப்படத்தக்க வையாதலின், வங்கிகளால் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டுமென்பதில்லை.

(3) மாற்றுச் சீட்டுக்குத் தவணைக் காலம் முடிந்த பிறகு பெயரவரால் பணம் செலுத்த இரக்கப்பட்டு மீண்டும் மூன்று நாட்கள் கருணை நாட்களாகக் கொடுக்கப்படுகின்றன. ஆனால், காசோலையினைப் பொறுத்தவரை அது உடன் பணம் செலுத்தற் குரியதாதலின் அவ்வாறான கருணை நாட்கள் கொடுக்கப்படுவ தில்லை.

(4) மாற்றுச் சீட்டு கேட்டவுடன் பணம் செலுத்தக்கூடிய தாகவோ அல்லது ஒரு குறிப்பிட்ட காலம் முடிந்த பிறகு பணம் செலுத்தக் கூடியதாகவோ இருக்கலாம். ஆனால், காசோலைகள் உடன் பணம் செலுத்தக்கூடியவையாகவே இருக்கும்.

(5) ஒரு மாற்றுச் சீட்டு அதனைப் பெற்றுள்ளவரால், பணம் பெறும் பொருட்டு, உரிய காலத்தில் பெயரவருக்கு அனுப்பப்பட வேண்டும். அவ்வாறு உரிய காலத்தில் அம் மாற்றுச் சீட்டு அனுப்பப்படாவிட்டால், அதனை வரைந்தவர் பெயரவரிடமிருந்து உரிய பணத்தைப் பெறுதல் முடியாது. ஆனால், காசோலையினைப் பொறுத்தவரை அதனை வரைந்தவர் காசோலையினைப்பெற் றுள்ளவர், அதனை உரிய காலத்தில் வங்கியில் கொடுக்கத்தவறிய ஒரே காரணத்தினால் பொறுப்பினின்று விடுவிக்கப்படுவதில்லை. அவ்வாறு உரிய காலத்தில் வங்கியில் கொடுத்துப் பணம் வாங்காததினால் காசோலையினை வரைந்தவர் நட்டமடைவாரே யானால், அந் நிலையில் அவர் பொறுப்பினின்று விடுவிக்கப்படுவார்.

(6) ஒரு காசோலையினைக் கீறல் செய்யலாம். ஆனால், ஒரு மாற்றுச் சீட்டைக் கீறல் செய்தல் முடியாது.

(7) காசோலைக்கு முத்திரைக் கட்டணம் தேவையில்லை. ஆனால், மாற்றுச்சீட்டுக்கு முத்திரைக் கட்டணம் செலுத்தப்பட வேண்டும்.

(8) ஒரு காசோலை அதை வரைந்தவரால், அதற்குரிய பணம் செலுத்தப்படாது தடுத்து நிறுத்தப்படலாம். ஆனால், மாற்றுச் சீட்டினை அவ்வாறு தடுத்து நிறுத்த முடியாது.

(9) மாற்றுச் சீட்டுகள் தொகுப்பாக வரையப்படலாம். ஆனால், காசோலைகள் தொகுப்பாக வரையப்படுவதில்லை.

வினாக்கள்

(1) கடனின் முக்கியத்துவத்தினை விளக்குக.

(2) கடன் கொடுக்கும்பொழுது அறியப்படும் தன்மைகள் யாவை?

(3) கடன் பத்திரங்களை எவ்வாறு வகைப்படுத்தலாம்?

(4) மாற்றுமுறை யாவணங்கள் யாவை? அவற்றின் சிறப்புத் தன்மைகளை விளக்குக.

(5) கடனுறுதிச் சீட்டு என்றால் என்ன? அதன் தன்மைகள் யாவை?

(6) மாற்றுச்சீட்டின் முக்கியத் தன்மைகளை விளக்குக.

(7) மாற்றுச் சீட்டின் வெவ்வேறு வகைகள் யாவை?

(8) மாற்றுச் சீட்டுக்கும் கடனுறுதிச் சீட்டுக்குமுள்ள வேறுபாடுகள் யாவை?

(9) காசோலையின் இலக்கணம் கூறி, அதன் தன்மைகளையும் விவரிக்க.

(10) காசோலைக்கும், மாற்றுச் சீட்டுக்குமுள்ள வேறுபாடுகளை விளக்குக,

(11) கீறலிடல் என்றால் என்ன? வெவ்வேறு வகையான கீறல்கள் யாவை?

(12) கீறலிடலின் முக்கிய நோக்கம் யாது?

(13) வரையறைக் கீறல்களின் தன்மைகளை விவரிக்க.

(14) சிறுகுறிப்பு வரைக :

(அ) கருநிலைத் திருத்தம்

(ஆ) பின் தேதியிட்ட காசோலை

(இ) முன் தேதியிட்ட காசோலை

(ஈ) மாற்றுமுறைத் தன்மையற்ற கீறல்.

9. இந்திய வங்கிமுறை வரலாறு

இக்காலத்திய வணிக வங்கிமுறை ஏறத்தாழ நூறு ஆண்டுகளுக்குள் உருவாக்கப்பட்டதெனினும் இந்தியாவைப் பொறுத்தவரை வட்டித் தொழில் புதுமையானதொன்று எனக் கூறுதல் இயலாது. ஏறத்தாழ நான்காயிரம் ஆண்டுகளுக்கு முன்பிருந்தே வட்டித் தொழில் நடைபெற்று வந்துள்ளதாக இந்திய இலக்கியங்கள் சான்றுரைக்கின்றன. ஆனால், இத் தொழில் ஒரு குறிப்பிட்ட சமூகத்தினரால் மட்டும் மேற்கொள்ளப்பட்டது என்று கூறுவதற்கு எவ்வித ஆதாரமும் இருப்பதாகத் தெரியவில்லை. பொதுப்படையாக, கௌடில்யரின் அர்த்தசாத்திரம் என்னும் நூலிலும், புத்த சமய இலக்கியங்களிலும் வங்கியியல் தொழில் பற்றிய குறிப்புகள் உள்ளன. நாட்டின் பெரும் நகர்ப்புறங்களில் வங்கியர் இருந்ததாகவும், அவர்கள் மக்களிடையே நல்ல செல்வாக்குடன் வாழ்ந்து வந்ததாகவும் அவற்றினுடைய குறிப்புகள் உணர்த்துகின்றன. அவ்வாறு செயல்பட்டு வந்த வங்கியர்கள், வணிகர்களுக்கும், வெளிநாட்டு வியாபாரத்தில் ஈடுபட்டு வந்தவர்களுக்கும் மன்னர்களுக்கும் கடனுதவி அளிப்பதன் வாயிலாகத் தம் தொழில்புரிந்து வந்தனர். அவர்கள் பிணையங்களைப் பெற்றும், பிணையங்களெதுவுமின்றியும் கடன் வழங்கியதாக அறிகிறோம்.

அக் காலத்தில் கடும் வட்டி திரட்டுவது குற்றமாகக் கருதப்பட்டு வந்துள்ளது. மனுச் சட்டங்களிலிருந்து இரண்டு, மூன்றும் நூற்றாண்டுகளிலேயே வட்டித்தொழில் பிரச்சினை பெரும் பிரச்சினையாக விருந்தது என அறிகிறோம். அர்த்தசாத்திரமும் இன்னபிற அற நூல்களும் கடன்தரக் கடைப்பிடிக்க வேண்டிய வழிமுறைகளையும், வட்டித் திரட்டுவதற்கான விதிமுறைகளையும் வரையறுத்துக் குறிப்பிடுகின்றன. கௌடில்யரின் அர்த்தசாத்திரத்தில் அரசு சட்டப்படி எவ்வளவு விழுக்காடு வட்டித் திரட்டலாமென்பது குறித்துக் குறிப்புக் காணப்படுகிறது. அதன்படி 15 விழுக்காடு,

பாதுகாப்பான பிணையக் கடன்களுக்கும், பாதுகாப்பு இல்லாத பிணையமற்ற கடன்களுக்கு 60 விழுக்காடும் அதிகபட்ச வீதமாக நிர்ணயிக்கலாமென அக் குறிப்புச் சுட்டிக்காட்டுகின்றது. கடன் கொடுப்பதில் இழப்பு வாய்ப்பு மிகுந்து இருக்குமானால் 240 விழுக்காடு வரை வட்டி திரட்டலாமென்பது கௌடில்யருடைய கருத்தாகும்.

பன்னிரண்டாம் நூற்றாண்டில், மாற்றுச் சீட்டுகள் தொழில் நிறுவனங்களால் பெரிதும் பயன்படுத்தப்பட்டதாகவும் அப்போது ஆட்சி புரிந்துவந்த முகம்மதிய மன்னர்களின் காலத்தில் வட்டித் தொழிலில் நாட்டு வங்கியர் பெரிதும் ஈடுபட்டிருந்ததாகவும் அறிகிறோம். அவ்வாறு வட்டித் தொழிலில் ஈடுபட்டிருந்த நாட்டு வங்கியர் (Indigenous Bankers) உள்நாட்டு வியாபாரம், வெளி நாட்டு வியாபாரம் ஆகிய இரண்டிற்குமே நிதிவசதி அளித்து வந்தனரென்று முகமதிய வரலாற்றுக் குறிப்புகள் சுட்டிக் காட்டுகின்றன. ஆனால், அவர்கள் திரட்டிய வட்டி வீதத்தைப்பற்றி திச்சயமான விவரங்கள் கிடைக்கவில்லை. இருப்பினும் அவர்கள் கடனுக்காகத் திரட்டிய வட்டி வீதம் கௌடில்யரின் அர்த்த சாத்திரத்தில் குறிப்பிட்டுள்ளதைவிடக் கூடுதலாக இருந்தது என்றுமட்டும் அறிய முடிகின்றது.

முகம்மதிய மன்னர்கள் காலத்தில், நாட்டின் வெவ்வேறு பகுதிகளிலும் வெவ்வேறு உலோக நாணயங்கள் வெளியிடப் பட்டதன் காரணமாக நாட்டு வங்கியர் அந் நாணயங்களை மாற்றிக் கொடுப்பதன் வாயிலாக நிறைந்த இலாபமீட்டித் தொழில்புரிந்து வந்துள்ளனர். அத் தொழிலினடிப்படையில் அவர்களே அரசின் நாணயத்தை வார்க்கும் பகுதியில் அலுவலர்களாகப் பணியிலமர்த்தப்பட்டனர். அவர்களில் பலர், நாட்டில் பெரும் புகழ் பெற்றுத் திகழ்ந்தனர். அவர்களில் சிலர் உலக வங்கியாளர் என்று கருதப்படுமளவுக்கு வட்டித் தொழிலில் ஈடுபட்டிருந்தனர். இருப்பினும் அவர்கள், பொதுமக்களிடமிருந்து வட்டி கொடுப்பதன் வாயிலாகத் தொடர்ந்து வைப்புத்தொகை பெறமுடியாத காரணத் தினாலும், பணத்தைச் சேமித்து வைத்திருந்தவர்கள், அதனைத் தங்களிடமே வைத்துக்கொள்ள விழைந்ததாலும், தங்களுடைய தொழிலை மேன்மேலும் பெருக்கிக்கொள்ள அவர்களால் முடிய வில்லை.

பதினேழாம் நூற்றாண்டில் இந்தியாவுக்கு வந்த ஆங்கிலேய வியாபாரிகளாலும் இந்தியாவிலிருந்த, நாட்டு வங்கியருக்கு, ஆங்கிலமொழி சரியாகத் தெரியாத காரணத்தினால், அவர்களை

உரிய முறையில் பயன்படுத்திக் கொள்ள முடியவில்லை. இருப் பினும், அவர்கள் ஆங்கில வியாபாரிகளுக்குக் கடன் வசதி யளித்தல், வியாபாரம் குறித்துக் கருத்துரை வழங்குதல் போன்ற பணிகளில் ஈடுபட்டிருந்தனர். இருப்பினும், மொழி பெருந் தடையாக இருந்துவந்தது. எனவே, இந்தியாவில் வணிகம் செய்யும்பொருட்டு ஆங்கிலேயர்களால் தொடங்கப்பட்ட வணிக நிறுவனங்களான 'முகமை அகங்கள்' (Agency Houses) ஆங்கிலேய வியாபாரிகளுக்குப் பெரிதும் உதவி புரிந்தனவென்று கூறலாம். முகமையகங்கள் முதலில் கல்கத்தா, பம்பாய் போன்ற நகரங்களில், தேயிலை, அவுரிச்செடி போன்றவற்றை வியாபாரம் செய்யும்பொருட்டு ஆங்கிலேயர்களால் நிறுவப்பட்டவையாகும். ஆங்கிலேய வியாபாரிகளான கிழக்கிந்தியக் கம்பெனியார் மேற்கத்திய முறையிலான வங்கிகளை இந்தியாவில் தொடங்கு வதை விரும்பவில்லை எனினும் முகமை யகங்கள் வங்கிகளாகப் பணிபுரிய உரிய தன்மைகளைப் பெற்றிருந்தமையால், அவ்வாறு வங்கிகள், மேலை நாடுகளின் அமைப்பில் இந்தியாவில் உருவாவதை அவர்களால் தடுக்க முடியவில்லை. இருப்பினும், 'முகமை அகங்கள்' வங்கியியல் தொழிலைத் தங்களுடைய வியாபாரத்துடன் இணைந்ததொரு தொழிலாகவே நடத்தி வந்தனவே தவிர, அதனைத் தனித்து நடத்த முன்வரவில்லை. ஆனால், அவ்வாறு இதர தொழில்களுடன் இணைத்து நடத்தப்பட்ட இந்துஸ்தான் வங்கி (Bank of Hindustan), வங்காள வங்கி (Bank of Bengal) போன்றவை கலைக்கப்பட்டு விட்டமையின் பிற தொழில்களுடன் இணைந்து வங்கி செயல்படுவது உகந்ததல்ல என்ற உண்மையினை அரசு உணரத் தலைப்பட்டது. அதன் காரணமாக வங்கித் தொழிலைமட்டும் மேற்கொள்ளும் நிறுவ னங்களை மட்டும் அமைப்பதே சிறந்ததென அரசு முடிவு செய்தது. அவ்வாறு எடுக்கப்பட்ட முடிவின் எதிரொலியாகவே மாகாண வங்கிகள் உருவாக்கப்பட்டன. இவ்வாறு தொடங்கப்பட்ட மாகாண வங்கிகளை, இந்தியாவின் தற்கால வங்கி முறைக்கான தொடக்கமாக அமைந்ததெனக் குறிப்பிடலாம். ஏனெனில், மாகாண வங்கிகள் தொடங்கப்பட்ட பின்னர்தான் இந்திய வங்கிகள் கட்டுப்பாட்டினும், உரிய முறையிலும் செயல்படத் தொடங்கின.

மாகாண வங்கிகளுள் முதலாவது மாகாண வங்கியாகத் தொடங்கப்பட்டது 1806ஆம் ஆண்டில் நிறுவப்பட்டு 1809ஆம் ஆண்டில் சாசனம் பெற்ற வங்காள வங்கியாகும். ரூ. 50 இலட்சம் முதலுடன் தொடங்கப்பட்ட இவ் வங்கி கிழக்கிந்திய நிறுவனத்திற்கு நிதிவசதி யளிக்கும்பொருட்டே தொடங்கப்

பெற்றது என்றுகூடக் குறிப்பிடலாம். எனவேதான், இதனுடைய முதலில் 10 இலட்சத்தை அரசாங்கமே செலுத்தியது. 1923ஆம் ஆண்டு காகிதப் பணத்தை வெளியிடுகின்ற உரிமையினைப்பெற்ற இவ் வங்கி 1839ஆம் ஆண்டு பல கிளைகளைத் திறக்கும் உரிமையினையும் பெற்றது.

வங்காள வங்கியினைத் தொடர்ந்து 1840ஆம் ஆண்டு ரூ. 50 இலட்சம் முதலுடன் பம்பாய் வங்கியும், 1943ஆம் ஆண்டு ரூ. 30 இலட்சம் முதலுடன் சென்னை வங்கியும் (Bank of Madras) நிறுவப்பட்டன. இவ் வங்கிகளிலும், அரசு முதல் செலுத்தியதுடன் இவற்றிற்கும் ஒரு குறிப்பிட்ட தொகை வரை காகிதப்பணம் வெளியிடுகின்ற உரிமையினையும் வழங்கியது. இம் மூன்று வங்கிகளிலும் பெரும்பாலும் ஐரோப்பியர்களே பங்குதாரர்களாக இருந்தனர். இவ் வங்கிகள் யாவும், அரசு நடவடிக்கைகளை மேற்கொள்ளும் முற்றுரிமையினைப் பெற்றிருந்தன. ஆனால், 1862ஆம் ஆண்டு இவ் வங்கிகள் பெற்றிருந்த காகிதப்பணம் வெளியிடும் உரிமை அரசால் எடுத்துக்கொள்ளப்பட்டது. இம் மாகாண வங்கிகளில் பெரும்பாலான பொதுமக்கள் வைப்புத் தொகையினைச் செலுத்தி இருந்தமையின், பொதுமக்களுக்குப் பாதுகாப்பு அளிக்கும் முகத்தான் மாகாண வங்கிகளின் சட்டம் நிறைவேற்றப்பெற்றது. இச் சட்டம் மாகாண வங்கிகள் செம்மையாகச் செயல்படச் சில கட்டுப்பாடுகளை விதித்தது. அதன்படி மாகாண வங்கிகள் அயல்நாட்டு மாற்றுச் சீட்டுகளைப் பற்றிய நடவடிக்கைகளில் ஈடுபடக்கூடாதென்றும், ஆறு திங்கள்களுக்கு மேல் கடன் கொடுக்கக் கூடாதென்றும், அசையாச் சொத்துகளைப் பிணையமாகக்கொண்டு கடனளிக்கலாகாதென்றும் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டன. இம் மூன்று வங்கிகளும், அரசுக்கணக்கிலிருக்கின்ற தொகையின்மீது வட்டி செலுத்தாது அதனைப் பயன்படுத்தும் உரிமை பெற்றிருந்தன. இவை பல்வேறு பெரும் நகரங்களிலும் தங்கள் கிளைகள் தொடங்கிப் பணிபுரிந்தாலும், இவற்றினுடைய கொள்கைகளில் இணைப்புத்தன்மை இல்லை என்று கூறலாம். 1920ஆம் ஆண்டு இம் மூன்று மாகாண வங்கிகளும் ஒன்றுக இணைக்கப்பட்டு இந்திய இம்பீரியல் வங்கி (Imperial Bank of India) தொடங்கப்பட்டது.

இந்தியக் கூட்டுப் பங்கு வங்கிகள் (Indian Joint Stock Banks) : இந்தியாவில் கூட்டுப்பங்கு வங்கிகள் தொடங்க ஊக்குவிப்பாக அமைந்தது 1813ஆம் ஆண்டில் நிறைவேற்றப்பட்ட ஒரு சட்டமேயாகும். இச் சட்டம் ஐரோப்பியர்கள் இந்தியாவில் வந்து குடியேறுவதில் இருந்த கட்டுப்பாடுகளை நீக்குவதன் வழி

இந்நிலைக்கு வழி வகுத்தது. இச் சட்டம் இயற்றப்பட்ட பிறகு பல வங்கிகள் வரையறைப் பொறுப்புடன் தொடங்கப்பட்டன. இவை, வங்கியியல் தொழில் புரிந்ததுடன், வெளிநாட்டு வியாபாரம், உள்நாட்டு வியாபாரம் ஆகியவற்றிற்கு நிதி உதவியும் புரிந்து வந்தன. அவற்றிலொன்று தொழில் நிறுவனங்களுக்குக் கடன் கொடுத்து வந்ததுடன், நாணய மாற்றுத் தொழிலிலும் ஈடுபட்டிருந்தது. மற்றொன்று கிழக்கிந்தியக் கம்பெனி என்றபெயரில் நிறுவப்பட்டுச் செயல்பட்டு வந்தது. 1813ஆம் ஆண்டு சட்டம் இயற்றப்படுவதற்கு முன்பே 1770இல் கல்கத்தாவில் இந்துஸ்தான் வங்கி (The Bank of Hindustan) என்ற பெயரில் ஒரு வங்கி நிறுவப்பட்டது. ஆனால், இந்த வங்கி 1832இல் மூடப்பட்டுவிட்டது. இது போன்றே ஐரோப்பிய முகமையகங்களால் பல வங்கிகள் தொடங்கப்பட்டன. இவை வரையறைப் பொறுப்புடன் தொடங்கப்பட்டதாலும் தவறான நிருவாகம்போன்ற வேறுபல காரணங்களினாலும் மூடப்பட்டன.

எனவே, கூட்டுப்பங்கு வங்கிகளை நெறியப்படுத்தும் பொருட்டு 1860ஆம் ஆண்டில் ஒரு சட்டம் இயற்றப்பட்டது. அச் சட்டத்தின் அடிப்படையில் வங்கிகள் வரையறுக்கப்பட்ட பொறுப்புடனுடன் தொடங்க அனுமதி வழங்கப்பட்டது. வரையறுக்கப்பட்ட பொறுப்புடன் 1860ஆம் ஆண்டுக்குப்பிறகு பெரும் வங்கிகள் தொடங்கப்பட்டன. எனவே, இந்திய வங்கியியல் வரலாற்றில் 1860ஆம் ஆண்டு மிக முக்கியத்துவம் வாய்ந்தது என்று கூறலாம். 1860ஆம் ஆண்டுக்கு முன்னர் நிறுவப்பட்ட வங்கிகள் வரையறைப் பொறுப்பினடிப்படையில் இயங்கி வந்தன. அவற்றுள் பல நொடித்து மூடப்பட்டமையின் அவற்றினுடைய பங்குநர்கள் பெரும் நட்டத்திற்குள்ளாக்கப்பட்டனர். 1860ஆம் ஆண்டுச் சட்டம் வங்கித் தொழிலை வளர்க்கும் நோக்கத்துடன் இயற்றப்பட்டாலும், 1860ஆம் ஆண்டுக்குப் பிறகும் வங்கிகளின் வளர்ச்சியில் போதிய முன்னேற்றம் இல்லை எனக்கூறலாம். இச் சட்டம் இயற்றப்பட்ட முதல் ஐந்தாண்டுகளில் வங்கியியல் தொழிலில் குறிப்பிடத்தக்க வளர்ச்சி இருந்தது. அதற்கு முக்கிய காரணம் 1860ஆம் ஆண்டில் காந்தியடிகள் சுதேசி இயக்கத்தைத் தொடங்கியதாகும். சுதேசி இயக்கத்தின் காரணத்தினாலும், 1862இல் அமெரிக்க நாட்டில் தொடங்கிய உள்நாட்டுப்போர் காரணமாக அமெரிக்க நாட்டுப் பருத்தியை இங்கிலாந்து நாட்டுக்கு அனுப்ப முடியாத நிலையில், இந்திய நாட்டுப் பருத்திக்குப் பெரிய அளவில் தேவை ஏற்பட்டு இந்தியாவிலிருந்து பருத்தியினை இங்கிலாந்து நாட்டுக்கு ஏற்றுமதி செய்து பலர் பெருமளவில் இலாபம் ஈட்டி, அத் தொகையினை வங்கிகள்

தொடங்குவதில் முதலீடு செய்ய முன்னந்ததினாலும், 1860ஆம் ஆண்டுக்குப் பிறகு இந்தியாவில் வங்கியியல் தொழில் செழித்து வளரத் தொடங்கியது. இவ்வாறு தொடங்கப்பட்ட வங்கிகள், பெரும்பாலும் ஊக வணிகத்தில் தங்களுடைய நிதியினை முதலீடு செய்ததன் காரணமாக, 1865ஆம் ஆண்டில் போர்முடிந்ததும், முந்திய அளவில் இலாப மீட்ட வசதியில்லாத நிலையில் அவ்வங்கிகளுள் பெரும்பாலானவை முறிவுபட்டன.

1865ஆம் ஆண்டு முதல் 1900 ஆண்டு வரையிலான காலப் பகுதியில் வங்கிகளின் வளர்ச்சியில் முன்னேற்றமிருந்ததாகத் தெரியவில்லை. இருபதாம் நூற்றாண்டுத் தொடக்கம் வரை ரூ. 5 இலட்சம் முதல் காப்பு நிதி கொண்ட பெரும் வங்கிகள் என்னும் நிலையில் ஒன்பது வங்கிகளே செயல்பட்டு வந்தன. ஆனால், இருபதாம் நூற்றாண்டின் தொடக்கம் வங்கியியல் வளர்ச்சியில் நல்லதொரு முன்னேற்றத்தைக் கொண்டதாக அமைந்தது. 1906ஆம் ஆண்டு முதல் 1913ஆம் ஆண்டு முடியப் பல இந்தியர் பல வங்கிகளைத் தொடங்குவதில் ஆயத்தமாகி இருந்தனர். நாட்டுடைமையாக்கப்பட்ட பாங்க் ஆப் இந்தியா (Bank of India), இந்தியன் வங்கி (Indian Bank), சென்ட்ரல் பாங்க் ஆப் இந்தியா (Central Bank of India), பாங்க் ஆப் பரோடா (Bank of Baroda) முதலியவை இக்காலத்தில் தொடங்கப்பட்டவையாகும். ஆனால், இக் குறிப்பிட்ட காலப்பகுதியில் பல வங்கிகள் முறிவடைந்தது இந்திய வங்கியியல் வரலாற்றில் குறிப்பிடத்தக்கதாகும். 1913ஆம் ஆண்டு முதல் 1917ஆம் ஆண்டு முடியவுள்ள நான்காண்டுக் காலத்தில் மட்டும் ஏறத்தாழ 87 வங்கிகள் முறிவடைந்தன. இவ் வங்கிகள் மட்டும் 1917ஆம் ஆண்டில் செயல்பட்ட வங்கிகளில் 50 விழுக்காட்டுப் பகுதி செலுத்தப்பட்ட மூலதனத்தைக் கொண்டிருந்தன. அவற்றுள் பெரும்பாலானவை சிறிய வங்கிகளாகவும், போதிய நிதிவசதியில்லாதவையாகவும் இருப்பினும் அவற்றுள் ஏழு வங்கிகள் பெரும் வங்கிகள் எனக் கருதப்பட்டவையாகும்.

இவ்வாறு வங்கிகள் எதிர்பாராத வகையில் முறிவடைந்ததன் காரணமாக மக்களுக்கு வங்கிகளின் மீதான நம்பிக்கை குறைய ஆரம்பித்தது. இந்த நிலை வங்கிகளின் வளர்ச்சிக்குப் பெரிதும் இடையூறு செய்வதாக அமைந்தது. இவ்வாறு எதிர்பாராத வகையில் வங்கிகள் முறிவடைந்ததற்குக் கீழ்க்கண்டவை பொதுக்காரணங்களாக அமைந்தனவென்று கூறலாம்:

(1) போர்க்காலத்திற்கு முன்னர், இந்தியாவில் செழிப்பு நிலவிய நிலையில் நாட்டின் மேற்குப் பகுதியில், திடீர் வளர்ச்சி

(Mushroom grouth) கண்ட பல வங்கிகள், கால ஒத்துழைப்பினுல் நல்ல இலாபமீட்டினமையின், அவை முக்கியமாகக் கடைப்பிடிக்க வேண்டிய வங்கியியல் தொடக்கக் கோட்பாடுகளைக்கூடக் கடைப் பிடிக்கவில்லை. எனவே, நிருவாகத்தினர், தங்கள் விருப்பப்படி, எந்தெந்த முறையில் நல்ல இலாபமீட்ட முடியுமோ அந்தந்த முறையில் இலாப மீட்ட முயன்றனரே தவிர வங்கியியலில் நீண்ட கால வளர்ச்சியில் அக்கறை செலுத்தவில்லை. எனவே இவை மக்களை ஏமாற்றும் வகையில் மிகப்பெரிய அளவில் அனுமதித்த முதலினைக் குறிப்பிட்டு அதில் மிகக்குறைவான பகுதியினையே செலுத்திய முதலாகக் கொண்டிருந்தன. வங்கிகளுடைய ஒப்பிய முதல் அனுமதித்த முதலில் 40 விழுக்காடாகவும் செலுத்திய முதல் 14 விழுக்காடாகவும் இருந்தது இங்குக் குறிப்பிடத்தக்க தாகும். அன்று செயலிலிருந்த சட்டம் இந்நிலையினைக் கட்டுப்படுத் தவில்லை. இதனையும், மக்களுடைய அறியாமையினையும் பயன் படுத்திப் பல வங்கிகள் மக்களையே ஏமாற்றி வந்தன.

(2) போதிய மூலதனமின்மையால் வங்கிகள், வைப்புத் தொகையினையே தங்கள் தொழிலுக்குப் பெரிதும் நம்பி இருக்க வேண்டிய நிலை எழுந்தது. எனவே, மக்களிடமிருந்து வைப்புத் தொகை திரட்டுவதில் வங்கிகளுக்கிடையே கடும்போட்டி ஏற்படத்தொடங்கியது. இப் போட்டியின் காரணமாக வங்கிகள், வாடிக்கைக்காரர்களிடமிருந்து திரட்டிய வைப்புத்தொகைக்கு மிகக்கூடுதலான வீதத்தில் வட்டி செலுத்த முனைந்தன. இவ்வாறு கூடுதலான வட்டி வீதம் கொடுப்பதைச் சமாளிக்கும் வகையில், வங்கிகள் மேற்கொள்ளக்கூடாத ஊக வணிகத்திற்குக் கடன் வழங்குதல், குறுகியகால வைப்புத்தொகையினை நீண்ட காலக்கடன் கொடுக்கப்பயன்படுத்துதல், ஒரே வகைத் தொழிலுக்குப்பெருமளவு கடன் வழங்குதல், கடன் பெறவிழையும் நிறுவனங்களின் நிதிநிலையை ஆராயாது அவை கேட்ட அளவு கடன் வழங்குதல், தங்களுடைய பங்குகளையே பிணைய மாகப் பெற்றுக் கடன் வழங்குதல் போன்ற நடவடிக்கைகளை அவை பெருமளவில் கடைப்பிடித்தன.

(3) பெரும்பாலான வங்கிகளின் இயக்குநர்கள், வங்கியின் கொள்கைகளை அறியாதவர்களாகவும், செயலறிவு இல்லாதவர் களாகவும், திறமையற்றவர்களாகவும் இருந்தனர். செயலறிவு கொண்ட ஒரு சில இயக்குநர்களும் போதிய திறமையற்றிருந்தனர். இதனுல் வங்கிகளின் நிருவாகத்தில் ஊழல்கள் மலிந்திருந்தன. பங்குநர்கள் வங்கிகளில் என்ன நடக்கின்றது என்பதனை அறியா அப்பாவிகளாக இருந்தனர். ஊழல்களைப்பற்றி அறிந்திருந்த

ஒரு சில பங்குநர்கள், ஊழல்களைக் கட்டுப்படுத்தும் உரிமை யற்றிருந்தனர். இந்நிலையினைப் பயன்படுத்திப் பல வங்கிகளின் மேலாளர்களும் இயக்குநர்களும் பல்வேறு ஊழல்முறைகளைக் கையாண்டு வங்கிகளைத் தங்கள் சுயநலத்திற்குப் பயன்படுத்தினர். இவ் வங்கிகளின் தணிக்கையாளர்களும், இவ்வியக்குநர்கள். மேலாளர்களின் கையாட்களாகித் தணிக்கையைப் பயனற்ற, பொருளற்றதொரு முறையாக்கி விட்டனர். ஒரு சிலர் தாங்கள் இயக்குநர்களாகப் பணிபுரிந்த வங்கிகளின் பணத்தைத் தாங்களே எடுத்துக்கொண்டது மட்டுமின்றி, தாங்கள் ஈடுபாடு கொண்டுள்ள தொழில் நிறுவனங்களுக்கும் தாராளமாகக் கடன் வழங்கினர். இம் மோசடிகளை மூடி மறைக்க, வங்கிகளின் கணக்குகள் உரிய முறையில் எழுதப்படவில்லை. கணக்குகளில் புறப்பகட்டு முறை (Window dressing) மிகச் சுலபமாகக் கையாளப்பட்டது. பல வங்கிகள் தங்கள் பங்குநர்களுக்கு முதலிலிருந்து பங்காதாயம் வழங்கி வந்துள்ளன. பல இயக்குநர்கள் வங்கிகளின் சொத்து களைத் தாங்களே கவர்ந்துகொண்டு கணக்குகளில் வங்கி பெறுதற்குரிய கடனைக் காட்டி வந்தனர்.

(4) பெரும்பாலான வங்கிகள், வாடிக்கைக்காரர்களுடைய நலனில் சிறிதும் அக்கறையின்றி மிகக்குறைந்த வீத ரொக்க இருப்பினை மட்டும்கொண்டு செயலாற்றின. வங்கித்தொழில் வளர்ச்சி பெருத நிலையிலும் வங்கிப் பழக்கம் மக்களிடையே போதிய அளவு இல்லாத நிலையிலும் இவ்வாறு போதிய அளவு ரொக்கம் இல்லாது வங்கியியல்தொழில் புரிவது மிகவும் கண்டிக்கத் தக்கது என்றுகூடக்கூறலாம். அவ் வங்கிகள் பெற்றிருந்த எளிவரல் சொத்துகள்கூட தேவைக்கு மிகக்குறைவாக இருந்து வந்தன.

மேலே குறிப்பிட்டுள்ள காரணங்களினால், திடீர் வளர்ச்சி கண்ட வங்கிகள் பாதிக்கப்பட்டாலும், அக் காரணங்கள், இந்திய வங்கிகள் எல்லாவற்றையும் பாதித்ததாகக் கூறமுடியாது. பல பெரும் வங்கிகளும், பழமைவாய்ந்த வங்கிகளும் தங்கள் தொழிலினை உரிய முறையிலேயே நடத்திவந்தன. மேலே குறிப்பிட்ட குறைபாடுகள் 1904ஆம் ஆண்டுக்குப்பிறகு தோற்று விக்கப்பட்ட சிறிய வங்கிகளுக்கே பொருந்துமென்று கூறலாம். வங்கிகளின் முறிவுகளின் அடிப்படையில் இந்தியர்களின் வங்கியியல் நிருவாகத் திறமையைக் குறைத்து மதிப்பிடுதல் தவருகும். ஏனெனில், அக் குறிப்பிட்டுள்ள ஆண்டுகளில் இந்தியாவில் மட்டுமின்றி, மேலை நாடுகளிலும், வங்கிகள் நொடித்தவண்ண மிருந்தன. இந்தியாவைப் பொறுத்தவரை, வங்கிகளுக்கிடையே நிலவிய போட்டி மனப்பான்மையும், கூட்டுற

வின்மையும், நிலைமையை மேலும் மோசமாக்கியது. வங்காள வங்கி போன்ற பெரும் வங்கிகள் சிறு வங்கிகளுக்குக் கடன் கொடுக்கத் தயங்கின. இந் நிலையில் இந்திய வணிக வங்கிகள், அவற்றிற்கு உதவும் வகையிலும், வழிகாட்டும் வகையிலும் செயலாற்றக் கூடிய ஒரு மைய வங்கி (Central Bank) இல்லாத குறையினை உணரத் தலைப்பட்டன.

1918ஆம் ஆண்டு முதல் 1921ஆம் வரையிலான நான்கு ஆண்டுகளிலும் வங்கிகளின் நொடிப்பு அதிகமாக இருந்ததென்று கூறுதல் இயலாது. அக் குறிப்பிட்டுள்ள காலத்தில் ரூ. 14 இலட்சம் செலுத்திய முதலைக்கொண்ட 21 சிறு வங்கிகள் மட்டுமே நொடித்துப்போயின. முதலாவது உலகப்போரின் விளைவாக ஏற்பட்ட செழிப்புநிலை வங்கிகளின் வளர்ச்சிக்கு மிகவும் உறுதுணையாக இருந்தது. எனவே, பல வங்கிகள் தொழில் நிறுவனங்களுக்கு வங்கியியல் தொழில் புரியவும், நிதியுதவி அளிக்கவும் தொடங்கப்பட்டன. 1917ஆம் ஆண்டு தொடங்கப் பெற்ற டாடா தொழில் வங்கி இவற்றுள் முதன்மையானதாகும்.

ஆனால், வங்கியியல் தொழிலில் ஏற்பட்ட இச் செழிப்பு நிலை நீண்டு நிலவவில்லை. 1922ஆம் ஆண்டு தொடங்கிய பொருளாதார மந்தநிலை காரணமாக மீண்டும் வங்கியியல் தொழில் பாதிக்கப் பட்டது. எனவே, 1922ஆம் ஆண்டுக்குப் பிறகு நொடித்த வங்கிகளின் எண்ணிக்கை மிகவும் உயர்ந்துகொண்டே வந்தது. டாடா தொழில் வங்கி, பீப்பிள்ஸ் பாங்க் ஆப் நார்தர்ன் இந்தியா (People's Bank of Northern India) போன்ற பல முக்கிய வங்கிகள் நொடிப்பு நிலைக்குட்பட்டன. டாடா வங்கி குறுகியகால வைப்புத் தொகையினை நீண்டகாலக் கடன் கொடுக்கப் பயன்படுத்தியதால் நொடிப்பு நிலைக்குட்பட்டது. 1922ஆம் ஆண்டு முதல் 1936ஆம் ஆண்டு வரையிலான பதினைந்து ஆண்டுகளுக்குள் ஏறத்தாழ ரூபாய் ஆறு கோடியே எண்பத்திரண்டு இலட்சம் செலுத்திய மூலதனத்தைக் கொண்டிருந்த ஏறத்தாழ 373 வங்கிகள் நொடிப்புநிலைக் குட்பட்டன. நொடிப்புநிலைக் குட்பட்ட பெரும் வங்கிகளுள் ஒன்றான 'டாடா வங்கி' சென்ட்ரல் பாங்க் ஆப் இந்தியாவுடன் (Central Bank of India) இணைக்கப்பட்டது. நொடிப்பு நிலைக்குட்பட்ட அடுத்த பெரும் வங்கியான பீப்பிள்ஸ் பாங்க் ஆப் நார்தர்ன் இந்தியா, பெரும்பான்மையான கிளைகளைக் கொண்டிருந்த பஞ்சாப் மாநிலத்தில் ஏற்பட்ட பொருளாதார சீர்கேடு காரணமாக நொடித்துப் போயிற்று.

1913ஆம் ஆண்டு முதல் 1936ஆம் ஆண்டு முடியவுள்ள 24 ஆண்டுகளில் முறிந்துபோன 481 வங்கிகளில், 89 வங்கிகள்

பஞ்சாப் மாநிலத்திலும், 64 வங்கிகள் ஐக்கிய மாகாணங்களிலும், 57 வங்கிகள் பம்பாயிலும் இயங்கி வந்தவையாகும். இவ்வாறு மேற் குறிப்பிட்டுள்ள மாநிலங்களில் மட்டும் அதிக எண்ணிக்கை யான வங்கிகள் முறிவடைந்ததற்கு முக்கிய காரணம், 1906ஆம் ஆண்டு ஏற்பட்ட சுதேசி இயக்கத்தின் காரணமாக, கோதுமை உற்பத்தி செய்யும் அந்த இடங்கள் பருத்தி, வெள்ளி ஆகிய வற்றின் ஊக வணிகத்தில் ஈடுபட்டுப் பெருமளவில் பணமீட் டியதன் காரணமாக அங்கு வங்கிகள் திடீர் வளர்ச்சி பெற்றதே யாகும்.

1938ஆம் ஆண்டில் திருவாங்கூர்ப் பகுதியில் தொடங்கப் பட்ட 40 சிறு வங்கிகள் முறிவடைந்தன. 1937ஆம் ஆண்டு முதல் 1948ஆம் ஆண்டு வரையிலான 12 வருடங்களில் மேலும் 620 வங்கிகள் முறிவடைந்தன. அவ்வாறு முறிவடைந்த வங்கி களுள் மிக முக்கியமான வங்கி 1938ஆம் ஆண்டு முறிவடைந்த திருவாங்கூர் நேஷனல் அண்டு கொய்லான் பாங்க் ஆகும்.

மக்கள் வங்கிகளின்மீது கொண்டிருந்த நம்பிக்கையையும், அதன் காரணமாக வங்கிகள் எவ்வாறு வளர்ச்சிபெற்று வந்துள்ளன என்பதனையும் கீழ்க்காணும் பட்டியலில் கொடுக்கப் பட்டுள்ள வைப்புத்தொகையினடிப்படையில் அறிந்து கொள் ளலாம்.

பட்டியல் I

இந்திய அட்டவணையிலிடப்பட்ட வங்கிகளின் (இம்பீரியல் அல்லது ஸ்டேட் வங்கி, அட்டவணையிலிடப்படாத வங்கிகள் நீங்கலாக) மொத்தவைப்புத்தொகை

ஆண்டு	மொத்த வைப்பு (ரூ. கோடியில்)	ஆண்டு	மொத்த வைப்பு (ரூ. கோடியில்)
1913 ...	24	1922 ...	65
1914 ...	18	1923 ...	48
1915 ...	19	1924 ...	55
1916 ...	26	1925 ...	58
1917 ...	32	1926 ...	63
1918 ...	42	1927 ...	64
1919 ...	61	1928 ...	66
1920 ...	73	1929 ...	66
1921 ...	80	1930 ...	67

பட்டியல் I (தொடர்ச்சி)

ஆண்டு	மொத்த வைப்பு (ரூ. கோடியில்)	ஆண்டு	மொத்த வைப்பு (ரூ. கோடியில்)
1931 ...	67	1951 ...	587
1932 ...	76	1952 ...	572
1933 ...	76	1953 ...	596
1934 ...	82	1954 ...	653
1935 ...	90	1955 ...	727
1936 ...	104	1956 ...	799
1937 ...	108	1957 ...	909
1938 ...	107	1958 ...	1027
1939 ...	113	1959 ...	1173
1940 ...	130	1960 ...	1185
1941 ...	155	1961 ...	1300
1942 ...	223	1962 ...	1441
1943 ...	365	1963 ...	1637
1944 ...	510	1964 ...	1883
1945 ...	644	1965 ...	2754
1946 ...	673	1966 ...	3119
1947 ...	669	1967 ...	3515
1948 ...	640	1968 ...	3957
1949 ...	581	1969 ...	4560
1950 ...	596		

மேலே குறிப்பிட்டுள்ள அட்டவணையை நோக்கின் 1915 ஆம் ஆண்டு வரை வைப்புத்தொகை குறைவாக இருந்ததையும், 1916 ஆம் ஆண்டு முதல் 1921 ஆம் ஆண்டு முடிய வைப்புத்தொகை வளர்ந்துள்ளதை நன்கு அறியலாம். ஆனால், மீண்டும் 1922 முதல் 1933 ஆம் ஆண்டு வரை வங்கியியல் வளர்ச்சி குன்றிப்போனது, பொருளாதாரச் சூழ்நிலை சாதகமாக இல்லாத காலங்களில் வங்கித்தொழில் பாதிக்கப்படக்கூடிய எவ்வளவு மோசமான நிலையில் இந்தியா இருந்தது என்பதனைக் காட்டுகின்றது. இருப்பினும் 1917 லிருந்து 1937 க்குள் இந்திய வங்கிகளின் வைப்புத்தொகை மூன்று மடங்காகப் பெருகினாலும்,

இம்பீரியல் வங்கியின் வைப்புத்தொகையில் 33 விழுக்காடு வளர்ச்சியும், அயல்நாட்டு வங்கிகளின் வைப்புத்தொகையில் 20 விழுக்காடு வளர்ச்சியும் காணப்படுவது குறிப்பிடத்தக்கதாகும். 1947ஆம் ஆண்டு முதல் 1953ஆம் ஆண்டு வரை இந்தியத் துணைக்கண்டம், இந்தியா பாகிஸ்தான் என இருநாடுகளாகப் பிரிக்கப்பட்டதன் காரணமாக வங்கியியல் தொழிலில் போதிய வளர்ச்சி இல்லாததுடன்கூட, 1946-ல் ரூ. 673 கோடியாக இருந்த வைப்புத்தொகையின் மதிப்பு 1952-ல் ரூ. 572 கோடியாகக் குறைந்தது. இருப்பினும் 1953ஆம் ஆண்டிலிருந்து வங்கிகளின் வளர்ச்சி நல்ல முறையில் அமைந்துள்ளதை அறியலாம். இது சிறிது சிறிதாக வளர்ந்து, வங்கிகளுடைய மொத்த வைப்பு 1971ஆம் ஆண்டு ஏறத்தாழ ரூ. 6900 கோடியாகவும், 1973 சூன் மாதத்தில் ஏறத்தாழ ரூ. 9000 கோடியாகவும் இருந்தது.

அயல்நாட்டு வங்கிகள் (Foreign Exchange Banks): இந்தியச் சட்டதிட்டங்களுக்குட்பட்டும், கிழக்கிந்தியக் கம்பெனி வழங்கிய சாசனங்களுக்குட்பட்டும் நிறுவப்பட்டு இந்தியாவில் செயலாற்றி வந்த வங்கிகளைத் தவிர, வெளிநாடுகளில் தலைமையகங்களைக் கொண்ட பல வங்கிகள் இந்தியாவில் நிறுவப்பட்டிருந்தன. இவற்றில் பெரும்பாலானவை, இங்கிலாந்து அரசியிடமிருந்து சாசனம் பெற்றவையாகவோ அல்லது இங்கிலாந்து நாட்டுச்சட்ட திட்டங்களுக்குட்பட்டவையாகவோ அமைந்தன. இந்தியத்தொழிலதிபர்கள், இங்கிலாந்து நாட்டுடனே அல்லது இங்கிலாந்து நாட்டின் வழி பிற நாடுகளுடனே தொழில் தொடர்பு கொண்டிருந்ததே இதற்கு முக்கிய காரணமாகும். 1953 ஆம் ஆண்டு வரை கிழக்கிந்தியக் கம்பெனி முகமையகங்களுக்கு ஆதரவு கொடுத்து வந்தமையின், இதுபோன்ற அயல்நாட்டு வங்கிகள் இந்தியாவில் தோன்ற வாய்ப்பின்றிப் போய்விட்டது. கிழக்கிந்தியக் கம்பெனியும், முகமையகங்களும் இதுபோன்ற வங்கிகள் வளர்வதையே விரும்பவில்லை. மாகாண வங்கிகளும், இதர இந்தியக் கூட்டுப்பங்கு வங்கிகளும் அந்நியச் செலாவணித் தொழிலில் ஈடுபடவில்லை. அத் தொழிலில் ஈடுபடுதல் மிகவும் இழப்பு வாய்ப்புக் கொண்ட தொழிலெனக் கருதினர். எனவே, அந்நியச் செலாவணித் தொழிலில் ஈடுபடும் வகையில் தனிப்பட்ட வங்கிகள் நிறுவப்படுவதற்கான அவசியம் எழுந்தது. இவ் வங்கிகள் நாணயமாற்றுத் தொழிலையே தங்களது முக்கியத் தொழிலாகக் கொண்டிருப்பினும் இதர வணிக வங்கிகளைப் போன்று இவையும், வைப்புகளைப் பெறுதல், கடன் வழங்குதல் போன்ற பணிகளிலும் ஈடுபட்டுள்ளன. நடைமுறையில் வெளிநாட்டு வாணிபத்திற்கு வேண்டிய நிதி

உதவி அளிப்பதில் இவ் வங்கிகள் முற்றுரிமை பெற்றுத் திகழ்கின்றனவென்று கூறலாம். 1870 ஆம் ஆண்டு ரூ. 0·52 கோடி ரூபா வைப்புத்தொகையுடன் தொடங்கப்பட்ட அயல்நாட்டு வங்கிகள் இன்று ஏறத்தாழ 600 கோடி ரூபாய் வைப்புத்தொகை பெற்றுத் தொழில் புரிகின்றன.

வங்கிகளின் வளர்ச்சி : 1916 ஆம் ஆண்டில் 50,000க்கு மேல் மக்கள் தொகையினைக் கொண்ட 2500 நகரங்களில் 140 நகரங்கள் மட்டுமே வங்கி வசதியினைப் பெற்றிருந்தன. இது தொழில் முன்னேற்றத்தினையும் பாதிப்பதாக அமைந்தது. வங்கிகள் வளர்வதன் அவசியத்தினை மக்கள் ஆரம்பத்தில் உணரவில்லையாயினும் காலம் செல்லச்செல்ல அதனுடைய அவசியத்தை உணரத்தலைப்பட்டனர். ஏனவேதான், 1916 ஆம் ஆண்டில் 140 வங்கிக் கிளைகளை மட்டுமே பெற்றிருந்த நமது நாட்டில் பத்து ஆண்டுகளில் அதாவது 1926 ஆம் ஆண்டில் வங்கி அலுவலகங்களின் எண்ணிக்கை 339 ஆகவும் அடுத்த பத்து ஆண்டுகளில் அதாவது 1936ல் 514 ஆகவும் உயர்ந்தது. 1936 ஆம் ஆண்டு 20,000க்குமேல் மக்கள் தொகை பெற்றிருந்த நகரங்களுள் 62 விழுக்காட்டுப் பகுதியில் வங்கிகள் நிறுவப் பட்டிருந்தன. 10,000 முதல் 20,000 வரை மக்கள் தொகை கொண்ட நகரங்களுள் 14 விழுக்காட்டுப் பகுதிகள் வங்கி வசதி பெற்றிருந்தன. 1926—1936 ஆண்டுகளில் மக்கள் தொகை 10,000க்குக் குறைவாக உள்ள நகரங்களில் வங்கிகளின் எண்ணிக்கை இரண்டு மடங்காகப் பெருகினும், அதே காலப் பகுதியில் மக்கள் தொகை 20,000க்கு மேற்பட்ட நகரங்களில் ஏறத்தாழ 38 விழுக்காடு அளவு இடங்களில் வங்கி வசதி எதுவும் அமையவில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும். வங்கிகள் பஞ்சாப், ஐக்கிய மாகாணங்கள், சென்னை, பம்பாய் போன்ற நகரங்களில் ஓரளவுக்குப் பரவலாகக் காணப்பட்டபோதிலும், மற்ற இடங்களில் அதுவும் குறிப்பாகப் பீகார், ஒரிசா, அஸ்ஸாம், மத்திய மாகாணங்கள் போன்ற இடங்களில் வங்கி வசதி மிகவும் குறைவாக இருந்தது. பல மாநிலங்கள், இம்பீரியல் வங்கியினைத் தங்கள் மாநிலங்களில் கிளைகளைத் திறக்குமாறு வற்புறுத்திக் கிளைகள் திறக்கப்பட்டமையின் அந்த அளவுக்காவது இந்திய மாநிலங்கள் அன்றைய நிலையில் வங்கி வசதி பெற்றிருந்தன என்று கூறலாம். அவ்வாறு இம்பீரியல் வங்கிக் கிளைகள் திறக்கப்படாமலிருந்திருந்தால் இந்திய மாநிலங்களின் நிலைமை மிகமோசமாக இருந்திருக்கக்கூடும்.

இந்தியா பல மாநிலங்களைக்கொண்டமைந்திருந்த போதிலும், ஒருசில மாநிலங்களில் மட்டும் வங்கிகள் வளர்ச்சி பெற்று, வங்கித்

தொழில் உரிய முறையில் பரவலாக வளர்ச்சி பெருததற்குக் கீழ்க் கண்டவை காரணங்களாக அமைந்தன. (1) வங்கி வசதியற்ற ஒரு குறிப்பிட்ட நகரத்தில் முதன் முதலாக ஒரு குறிப்பிட்ட வங்கி அலுவலகத்தினைத் திறந்து தொழில் தொடங்கும். அவ்வாறு அக்குறிப்பிட்ட நகரத்தில் ஒரு வங்கியின் கிளை நிறுவப்பட்டதனைக் கண்ட இதர வங்கிகள், அந்த நகரத்தில் மேலும் கிளைகளைத் திறந்தால் அவற்றிற்குப் போதிய தொழில் இருக்குமா, இருக்காதாவென, நுண்ணிய முறையில் கணக்கிடாது மேலும் பல கிளைகள் அதே நகரில் அவை தொடங்கின. அவ்வாறு போதிய அளவில், புதிதாகக் கிளைகள் தொடங்கவிருக்கும் வங்கிகள், வைப்புத்தொகை திரட்ட முடியுமாவென்று கணக்கிட்ட பின்னர்தான் கிளைகள் திறக்க வேண்டுமென்ற ஒரு முறையினை அக்கால வங்கிகள் அறிந்திருக்கவில்லை.

(2) வங்கிகள், பெரும்பாலும், இம்பீரியல் வங்கியின் கிளைகள் தொடங்கப்பட்டிருந்த இடங்களில் மட்டுமே புதிய கிளைகளைத் திறப்பதில் ஆவல் கொண்டிருந்தனவே தவிர இதர இடங்களில் கிளைகளைத் திறக்க வேண்டும் என்பதில் அவை அவ்வளவு அக்கறை செலுத்தவில்லை. எனவே, வங்கிக் கிளைகள் உள்ள இடங்களில் மட்டுமே மேலும் மேலும் கிளை வங்கிகள் திறக்க முற்பட்டன. எனவே, பெரும் நகரங்கள் மட்டுமே தேவைக்கு மேலும் வங்கி வசதியினைப் பெற்றிருந்தன. சிறிய நகரங்களில் சிறு வங்கிகள் மட்டுமே செயலாற்றிவந்தன. ஒருசில சிறு நகரங்கள் அறவே வங்கி வசதி இன்றித் தொழில் நிறுவனங்களைக் கொண்டிருந்தன.

(3) வங்கித்துறையில் முன்னோடிகளாக விளங்கியவர்கள் வங்கிகளைத் திட்டமிட்டு வளர்க்க வேண்டுமென்பதில் அக்கறை செலுத்தவில்லை. அவர்கள் தங்களுடைய கருத்திற்கு ஏற்றவாறு தாங்கள் விரும்பிய இடங்களிலெல்லாம் வங்கிகளைத் தொடங்க ஆவன செய்தனர்.

(4) இந்திய மன்னர்களுடைய கட்டுப்பாட்டின் கீழிருந்த மாநிலங்களில் ஆங்கிலேயர்களுடைய நிருவாகத்திலிருந்த இந்திய வங்கிகள் கிளைகளைத் திறக்கத் தயங்கின. அந்த மாநிலங்களிலிருந்த சட்ட, நிருவாக முறையிலுள்ள சிக்கல்கள் தங்களுக்குப் பாதகமாக அமையுமென்று நிருவாகத்தினர் கருதியதே அதற்குக் காரணமாகும். 1934ஆம் ஆண்டில் முக்கியமான 108 சுதேசி மன்னர்களின் ஆட்சியிலிருந்த இராச்சியங்களில் 20 இராச்சியங்களில் மட்டுமே வங்கி வசதி அமைந்திருந்தது.

(5) பல பெரும் வங்கியியல் நிபுணர்கள் போதிய திட்டமின்றி வங்கிகளைத் தொடங்க முயன்றது வங்கி வளர்ச்சி சரியான முறையில் அமையாததற்கான இறுதிக்காரணமாகும்.

பெரும் நகரங்களில் ஐம்பெரும் (Big Five) வங்கிகள் என்றழைக்கப்பட்ட பாங்க் ஆப் இந்தியா, சென்ட்ரல் பாங்க் ஆப் இந்தியா, அலகாபாத் பாங்க், பஞ்சாப் நேஷனல் பாங்க், பாங்க் ஆப் பரோடா ஆகிய வங்கிகள் மட்டுமே கிளைகளைக் கொண்டிருந்தன. இதர சிறிய நகரங்களில் சிறிய வங்கிகளே கிளைகளைத் தொடங்க வேண்டிய நிலையிருந்தன. சுருங்கக் கூறின், 'பெரிய நகரம் பெரிய வங்கி, சிறிய நகரம் சிறிய வங்கி, என்பதே அக்காலத் தத்துவமாக அமைந்திருந்தது என்று கூடக் கூறலாம்.

கடந்த சில ஆண்டுகளாக முறையற்ற வகையில் வங்கிகள் தொடங்கப்படுவது இல்லை என்ற நிலை ஏற்பட்டுள்ளது. இதற்கு முக்கிய காரணம், இந்தியாவில் இரண்டாவது உலகப் போருக்குப் பின்னர் ஏற்பட்ட பொருளாதார வளர்ச்சியேயாகும் என்று குறிப்பிடலாம். 1938ஆம் ஆண்டிலிருந்து 1945ஆம் ஆண்டு வரை அட்டவணையிட்ட வங்கிகளின் எண்ணிக்கை 1128-லிருந்து 2933ஆக உயர்ந்தது. ரூ. 1 இலட்சத்திற்கு மேல் முதலும் காப்பு நிதியும் கொண்ட அட்டவணையிலிடப்படாத வங்கிகளின் எண்ணிக்கை 921-லிருந்து 1934ஆக உயர்ந்தது. 1948-இல் அட்டவணையிலிட்ட வங்கிகளின் அலுவலக எண்ணிக்கை 3024ஆக உயர்ந்தது. ஆனால், அட்டவணையில் இடம்பெறு வங்கிகளின் எண்ணிக்கை 1934-லிருந்து 1767ஆகக் குறைந்தது. ஆனால், 1954ஆம் ஆண்டு வங்கிகளின் வளர்ச்சித் தன்மையில் சற்று மாற்றம் ஏற்பட்டு அட்டவணையிலிட்ட வங்கி அலுவலகங்களின் எண்ணிக்கை 2765 ஆகவும், அட்டவணையில் சேர்க்கப்படாத வங்கிகளின் எண்ணிக்கை 1,199ஆகவும் குறைந்தது. அதுபோன்றே இந்திய எல்லைக்கு வெளியில் தொடங்கப்பட்டிருந்த அட்டவணையிலிட்ட வங்கி அலுவலகங்களின் எண்ணிக்கை 1946ஆம் ஆண்டிலிருந்த 628-லிருந்து 1954ஆம் ஆண்டில் 97ஆகக் குறைந்தது. அதுபோன்றே அட்டவணையில் சேர்க்கப்படாத வங்கி அலுவலகங்களின் எண்ணிக்கையும் 1946ஆம் ஆண்டிலிருந்த 183-லிருந்து 1954ஆம் ஆண்டில் 10-க்குக் குறைந்து வந்தது. ஆனால், அட்டவணையிலிட்ட வங்கிகளின் எண்ணிக்கை படிப்படியாக உயர்ந்து 1957ஆம் ஆண்டில் இந்தியாவில் 3,273 அட்டவணையிலிட்ட வங்கி அலுவலகங்களும் 1964-ல் 5,468 அலுவலகங்களும் இருந்தன. ஆனால், அட்டவணையிலிடப்படா வங்கிகளின் எண்ணிக்கையும்,

முக்கியத்துவமும் படிப்படியாகக் குறைந்து வந்தது. 1964ஆம் ஆண்டில் அத்தகைய வங்கி அலுவலகங்களின் எண்ணிக்கை 326ஆகக் குறைந்துவிட்டது. 14 பெரு வங்கிகள் நாட்டுடைமையாக்கப்பட்டபின் வங்கி வளர்ச்சி மேலும் ஆக்கம்பெற்று, நன்கு வளர்ச்சிபெற்று வருகின்றது என்று கூறலாம். 1969ஆம் ஆண்டில் 8,321 வங்கி அலுவலகங்கள் இருந்த நிலைமாறி, வங்கி அலுவலகங்களின் எண்ணிக்கை 1970-ல் 10,131 ஆகவும், சூன் 1971-ல் 12,013 ஆகவும், சூன் 1972-ல் 13,622 ஆகவும், 1973ஆம் ஆண்டு சூன் திங்கள் இறுதிவரை 15,362 ஆகவும் வங்கி அலுவலகங்கள் இந்தியாவில் பெருகிச் செயலாற்றி வருகின்றன. 1969-ல் 14 வங்கிகள் நாட்டுடைமையாக்கப்பட்ட பிறகு 1973ஆம் ஆண்டு சூன் திங்கள் முடிய ஏறத்தாழ 7,043 புதிய வங்கி அலுவலகங்கள் திறக்கப்பட்டுள்ளன.

வங்கிகளும் தொழில் நிறுவனங்களே. அவையும் இலாபம் ஈட்டுதல் வேண்டும். எனவே, எந்தெந்த இடங்களில், வருவாய் ஈட்டப் போதிய வாய்ப்புகள் உள்ளனவோ அந்தந்த இடங்களில் மட்டுமே வங்கிகளும் திறக்கப்படும். எனவே, நடைமுறையில் வங்கி அலுவலகங்கள் மக்கள் நெருக்கமுள்ள நகர்ப்புறங்களில் மட்டுமே திறக்கப்பட்டு வந்தன. கிராமங்களும், சிறிய நகரங்களும் புறக்கணிக்கப்பட்டு வந்தன. குறிப்பாக, கிராமங்கள் அறவே புறக்கணிக்கப்பட்டு வந்துள்ளனவென்று கூறலாம். மாறிவரும் சூழ்நிலையில், இத் தன்மையிலும் மாற்றமுள்ளது. பெரும் வங்கிகளுக்கேற்றவை பெரும் நகரங்களே என்ற நிலைமாறிச் சிறிய கிராமங்களும் அவற்றிற்கேற்றவையே என்ற நிலை இன்று உருவாகி வருகிறது. இதனைக் கீழ்க்காணும் விவரங்கள் மூலம் நன்கு அறியலாம்.

1948ஆம் ஆண்டில் இருந்த மொத்த வங்கி அலுவலகங்களில் 44 விழுக்காட்டுப் பகுதி — அதாவது 2,335 அலுவலகங்கள், 50,000 அல்லது அதற்கும் மிகுதியான மக்கள் தொகையினைக் கொண்ட 134 நகர்ப்புறங்களில் நிறுவப்பட்டிருந்தன. அது தவிர, எஞ்சிய வங்கி அலுவலகங்கள் மக்கள்தொகை 50,000-க்குக் குறைவாக உள்ள நகரங்களில் அமைக்கப்பட்டிருந்தன. அவ்வாறு மக்கள்தொகை 50,000-க்குக் குறைவாக இருந்த 1,400 இடங்களில் நிறுவப்பட்டிருந்த வங்கி அலுவலகங்களின் எண்ணிக்கை 2,942 ஆகும். அந்த நிலையில் 65,884 மக்களுக்கு ஒரு வங்கி என்ற நிலை இருந்தது. 1954ஆம் ஆண்டு வங்கி அலுவலகங்களில் 45 விழுக்காடு — அதாவது 2,207 அலுவலகங்கள் 50,000-க்கு மேற்பட்ட மக்கள் தொகையினைக் கொண்ட

175 இடங்களில் இருந்தன. எஞ்சிய 55 விழுக்காட்டுப் பகுதி— அதாவது 2,582 அலுவலகங்கள் 50,000-க்குக் குறைவான மக்கள்தொகை கொண்ட 1,302 இடங்களில் செயலாற்றி வந்தன. 1957ஆம் ஆண்டு ஓர் இலட்சத்துக்கு மிகையான மக்கள்தொகை கொண்ட 80 நகரங்களில் மட்டும் 1,719 வங்கி அலுவலகங்கள் பணிபுரிந்தன. 25,000 மக்கள் தொகைக்கு மிகுதியான மக்கள் வாழ்ந்த 302 நகரங்களில் 1,443 வங்கிகளும், 25,000-க்குக் குறைவான மக்கள்தொகை கொண்ட 1,244 நகரங்களில் 2,261 வங்கிகளும் பாகுபடுத்தப்படாத 205 இடங்களில் 208 வங்கி அலுவலகங்களும், 1957ஆம் ஆண்டு செயல்பட்டது குறிப்பிடப்பட்டதாகும். வங்கி அலுவலகங்கள் பரவியுள்ள முறைமையைக் கீழ்க்காணும் அட்டவணை மூலம் விளக்கலாம்.

வங்கி அலுவலகங்கள் பரவியுள்ள முறை

	1951		1961		1971	
	மக்கள்தொகை (விழுக்காடு)	வங்கி அலுவலகங்கள் (விழுக்காடு)	மக்கள்தொகை (விழுக்காடு)	வங்கி அலுவலகங்கள் (விழுக்காடு)	மக்கள்தொகை (விழுக்காடு)	வங்கி அலுவலகங்கள் (விழுக்காடு)
மாநகரங்கள் (ஓர் இலட்சத்துக்கு மேல் மக்கள் தொகையுடையவை) ...	9·5	42·8	8·6	39·1	10·4	30·8
நகரங்கள் (பத்தாயிரம்முதல் இலட்சம் வரை மக்கள்தொகை கொண்டவை) ...	7·2	48·2	9·1	48·2	9 8	33·7
கிராமப்புறம் (மக்கள் தொகை 10,000-க்குக் குறைவு) ...	83·3	9·0	83·0	12·7	80·3	35·
மொத்த இடங்கள் ...	100·0	100·0	100·0	100·0	100·0	100·0

1948ஆம் ஆண்டு அட்டவணையிலிடப்பட்ட வங்கிகள் 58 விழுக்காடு பெரிய நகரங்களிலும், மாநகரங்களிலும் மட்டுமே திறுவப்பட்டிருந்தன. ஆனால், அட்டவணையில் சேர்க்கப்படாத வங்கிகளில் 67 விழுக்காட்டுப் பகுதி சிறு நகரங்களிலேயே செயலாற்றி வந்தன. இது அட்டவணையிலிடப்பட்ட வங்கிகள், பெரும்பாலும் பெரும் நகரங்களில் மட்டுமே கிளைகள் திறக்க விரும்புகின்றன என்பதனைத் தெளிவாகச் சுட்டிக்காட்டுகிறது. வங்கி அலுவலகங்களின் எண்ணிக்கை வளர்ந்துகொண்டே சென்றாலும், வங்கிகள் உள்ள இடங்களிலேயே புதிய வங்கிகள் திறக்கப்பட்டன. அவ்வாறு வங்கிகள் உள்ள இடங்களில் வங்கிகள் திறப்பது மிகவும் எளிமையானது என்றதொரு கருத்து நிலவியதே அதற்குக் காரணமாகும். மேலும், சிறு கிராமங்களில் வங்கிகளைத் தொடங்குவது அவ்வளவு இலாபகரமானதாக இருக்குமென்று அக்கால வங்கிகள் கருதவில்லை. ஆனால், 14 வங்கிகள் நாட்டுடைமை யாக்கப்பட்டபிறகு நிலைமை முற்றிலும் மாறி விட்டது. வங்கிகள் இலாபமீட்டுவதே முக்கிய குறிக்கோள் என்ற நிலைமாறி, மக்களுக்குப் பணி புரிவதே வங்கிகளின் குறிக்கோள் என்ற நிலை உருவாயிற்று. எனவே, 1969 ஆம் ஆண்டுக்குப் பிறகு கிராமப்புறங்களிலும் கிளைகள் தொடங்குவதில் பெரும் வங்கிகள் கூடமுனைந்திருந்தன. இவ் வுண்மை கீழ்க்கண்ட அட்டவணை மூலம் நன்கு விளங்கும். (அட்டவணையை 184-185ஆம் பக்கங்களில் பார்க்க).

1969ஆம் ஆண்டு நாட்டுடைமையாக்கப்படுவதற்கு முன்பாக 14 பெரும் வங்கிகள் தங்களுடைய அலுவலகங்களில் 16·9 பகுதியினையே சிற்றூர்களில் கொண்டிருந்தன. ஆனால், நாட்டுடைமை யாக்கப்பட்ட பிறகு வங்கிகளின் முதன்மை நோக்கம் மக்களுக்குப் பணி புரிவதே தவிர இலாபமீட்டுவதன்று என்ற நிலை உருவானவுடன் 1973ஆம் ஆண்டு தங்கள் அலுவலகங்களில் 35·1 விழுக்காட்டுப் பகுதியினைச் சிற்றூர்களில் தொடங்கியுள்ளது குறிப்பிடத் தக்கதாகும். எனவே இன்றைய வங்கிகளின் குறிக்கோள் சிற்றூர்களில் அலுவலகங்கள் தொடங்கப்படுதல் வேண்டும் என்பதேயாகும். 1972—'73ஆம் ஆண்டில் ஏறத்தாழ 690 வங்கி அலுவலகங்கள்-அதாவது தொடங்கப்பட்ட புதிய அலுவலகங்களில் 2/5 பகுதி வங்கி வசதியற்ற இடங்களில் மட்டுமே தொடங்கப்பட்டன. 42 விழுக்காட்டுப் பகுதி அலுவலகங்கள் சிற்றூர்களில் மட்டுமே நிறுவப்பட்டன. இதிலிருந்து மேற்குறிப்பிட்டுள்ள குறிக்கோள் எவ்வாறு செயல்படுத்தப்படுகிறது என்று அறியலாம்.

வைப்புத் தொகை வளர்ச்சி : இந்திய வங்கியியல் வளர்ச்சியில் எவ்வாறு வங்கிகளின் எண்ணிக்கை வளர்ந்துள்ளதென்றும்,

1969ஆம் ஆண்டிலிருந்து 1973ஆம் ஆண்டு முடியப் பல்வேறு பகுதிகளில் தொடங்கப்பட்ட வங்கிகளின் எண்ணிக்கையும் அவற்றினுடைய விழுக்காட்டுப் பகுதிகளும் :

வங்கி அலுவலகங்களின் எண்ணிக்கை

	19—7—1969 அன்று					30—6—1970 அன்று				
	சிற்றூர்கள்	சிறு நகரங்கள்	நகரங்கள்	மாநகரங்கள்	மொத்தம்	சிற்றூர்கள்	சிறு நகரங்கள்	நகரங்கள்	மாநகரங்கள்	மொத்தம்
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)	(9)	(10)	(11)
இந்திய ஸ்டேட் வங்கி (State Bank of India)	462 (29·4)	796 (50·7)	163 (10·4)	150 (9·5)	1,571 (100·6)	651 (34·6)	851 (45·4)	200 (10·7)	174 (9·3)	1,875 (100·0)
இந்திய ஸ்டேட் வங்கியின் துணை வங்கிகள் (Subsidiaries of S.B.I.)	358 (40·0)	375 (42·0)	86 (9·6)	75 (8·4)	894 (100·0)	499 (47.1)	389 (36·7)	95 (9·0)	77 (7·2)	1,060 (100·0)
நாட்டுடைமையாக்கப்பட்ட 14 வங்கிகள்	703 (16·9)	1,465 (35·1)	928 (22·3)	1,072 (25·7)	4,165 (100·0)	1448 (27·2)	1,695 (31·9	1,007 (18·9)	1,168 (22·0)	5,318 (100·0)
இதர வணிக வங்கிகள்	337 (20·0)	708 (41·9)	279 (16·5)	364 (21·6)	1,688 (100·0)	465 (24·7)	760 (40·5)	281 (15·0)	372 (19·8)	1,875 (100·0)
மொத்தம்	1860 (22·3)	3344 (40·2)	1456 (17·5)	1661 (20.0)	8321 (100·0)	(3,062) (30·2)	3,695 (36·5)	1,583 (15·6)	1,791 (17 7)	10,131 (100·0)

	30—6—1971 அன்று					30—6—1972 அன்று					30—6—1973 அன்று				
	சிற்றூர்கள்	சிறு நகரங்கள்	நகரங்கள்	மாநகரங்கள்	மொத்தம்	சிற்றூர்கள்	சிறு நகரங்கள்	நகரங்கள்	மாநகரங்கள்	மொத்தம்	சிற்றூர்கள்	சிறு நகரங்கள்	நகரங்கள்	மாநகரங்கள்	மொத்தம்
	(12)	(13)	(14)	(15)	(16)	(17)	(18)	(19)	(20)	(21)	(22)	(23)	(24)	(25)	(26)
இந்தியன் ஸ்டேட் வங்கி (State Bank of India)	940 (41·1)	891 (39·0)	253 (11·1)	202 (8·8)	2,286 (100·0)	971 (37·6)	1,011 (39·3)	349 (13·6)	244 (9·5)	2,575 (100·0)	1,091 (38 1)	1081 (37·7)	388 (13·5)	307 (10·7)	2 867 (100·0)
இந்திய ஸ்டேட் வங்கியின் துணை வங்கிகள் (Subsidiaries of S.B.I.)	618 (50·1)	408 (33·1)	121 (9·8)	86 (7·0)	1,233 (100·0)	613 (44·3)	516 (37·3)	154 (11·1)	100 (7·3)	1,383 (100·0)	707 (45·2)	547 (35·0)	173 (11·1)	136 (8·7)	1,563 (100 0)
நாட்டுடைமையாக்கப் பட்ட 14 வங்கிகள்	2,123 (33·3)	1,891 (29·7)	1,092 (17·2)	1,262 (19·8)	6,368 (100·0)	2,455 (34·1)	1,988 (27·7)	1,393 (19·4)	1 353 (18·8)	7.189 (100:0)	2,849 (35·1)	2,153 (26 6)	1,542 (19·0)	1,565 (19·3)	8,109 (100·0)
இதர வணிக வங்கிகள்	598 (28·1)	826 (38·9)	312 (14·7)	390 (18·3)	2,126 (100·0)	777 (31·4)	859 (34·7)	427 (17·2)	412 (16·7)	2,475 (100·0)	914 (32 4)	942 (33·4)	470 (16·7)	497 (17·5)	2,823 (100·0)
மொத்தம்	4,279 (35·6)	4,016 (33·4)	1778 (14·8)	1,940 (16·2)	1,2013 (100 0)	4,816 (35·3)	4,374 (32·1)	2,323 (17.1)	2,109 (15·5)	1,3622 (100·0)	5,561 (36·2)	4,723 (30·8)	2,573 (16·7)	2,505 (16·3)	1,5362 (100·0)

எவ்வாறு வங்கிகள் சிற்றூர்களில் தங்கள் கிளைகளமைக்க முனைந்து வருகின்றன வென்றும் குறிப்பிட்டோம். வங்கிகளின் வளர்ச்சியினை அலுவலகங்களின் எண்ணிக்கை உயர்வாதல் மட்டுமின்றி, வைப்புத்தொகை பெருகுவதன் வழியாகவும் நன்கு அறியலாம். 1900ஆம் ஆண்டிலிருந்து 1914ஆம் ஆண்டு முடிவுற்ற ஐந்து ஆண்டுக் காலத்தில் இந்திய வங்கிகளின் வைப்புத்தொகை ரூ. 57 கோடி அதிகரித்தது. 1914ஆம் ஆண்டிலிருந்து 1922 முடிய வுள்ள காலத்தில் வைப்புத்தொகை மேலும் 107 கோடி ரூபாய்க்கு உயர்ந்தது. இடையிலிருந்த பொருளாதார மந்தத்தையும் மீறி 1930ஆம் ஆண்டிலிருந்து 1936ஆம் ஆண்டு முடியவுள்ள ஏழு ஆண்டுக் காலத்தில் வைப்புத்தொகை மேலும் ரூ. 45 கோடி அதிகரித்தது. 1941ஆம் ஆண்டில் மொத்த வைப்புத்தொகை ரூ. 370 கோடியாக இருந்தது. அது அடுத்த பத்து ஆண்டுகளில் மேலும் ரூ. 170 கோடி கூடுதலாயிற்று. 1947ஆம் ஆண்டு இறுதியில் இந்திய வங்கிகளின் மொத்த வைப்புத்தொகை ரூ. 1,118 கோடி என்றிருந்தது. ஆனால், 1952ஆம் ஆண்டுப் பொருளாதார மாற்றம் காரணமாக வைப்புத்தொகை ரூ. 955 கோடியாகக் குறைந்தது. ஆனால், இந்த நிலைமாறி 1957ஆம் ஆண்டு வைப்புத்தொகை ரூ. 1,480 கோடியாகவும் 1964-ல் ரூ. 2,849 கோடியாகவும் உயர்ந்தது. இவ்வாறு வைப்புத் தொகை வங்கிகளால் திரட்டப்படுவது படிப்படியாக உயர்ந்து வங்கிகள் நாட்டுடைமையாக்கப்படுவதற்கு முன்பாக வைப்புத் தொகை ரூ. 4,646 கோடியாக இருந்தது. இந்தத் தொகை சிறிது சிறிதாகப் பெருகி 1972—73ல் ரூ. 8,103 கோடியாக இருந்தது குறிப்பிடத் தக்கது.

தொடக்க காலத்தில் வங்கிகள் பெரும்பாலும் நகர்ப்புறங் களிலிருந்தே வைப்புத்தொகையைத் திரட்டின. நகர்ப்புறங் களில் மட்டுமே கிளைகள் திறந்தன. நகர்ப் புறங்களில்கூட ஒரு குறிப்பிட்ட பகுதியிலேயே மீண்டும் மீண்டும் கிளைகளமைத்து வைப்புத்தொகை திரட்டுவதில் ஈடுபட்டிருந்தன. ஆனால், சில ஆண்டுகளுக்குப் பிறகு வைப்புத்தொகை திரட்டுவதற்குக் கிராமப் புறங்களில் போதிய வாய்ப்புள்ளது என்பதனை உணர்ந்த வங்கிகள் கிராமப்புறங்களிலும் கிளைகள் அமைக்க ஆவன செய்தன. குறிப் பாகப் பெரும் வங்கிகள் நாட்டுடைமையாக்கப்பட்டவுடன் வங்கி களுடைய நோக்கு மாறி இன்று அவை சிற்றூர்களில் தங்கள் கிளை களமைப்பதிலேயே தீவிரமாக உள்ளன வென்று குறிப்பிடலாம்.

வங்கியியல் வளர்ச்சியினைக் கணக்கிட அவை அளிக்கும் கடன் வசதிகளையும் அறிந்துகொள்ளுதல் அவசியமாகும். வங்கிகள் கடனளிப்பது அவை திரட்டும் நடைமுதல் தன்மையினைப்

பொறுத்துள்ளது எனக் கூறலாம். வங்கிகள் தங்கள் நடைமுறை முதலில் பெரும்பகுதியினைப் பங்குத்தொகைவழி திரட்டின் அவற்றை, தொழில் நிறுவனங்களுக்கு நீண்ட காலக்கடன் கொடுக்க முடியும். அது போலன்றி, வங்கிகள், சேமிப்பு வைப்பு, நடப்பு வைப்பு ஆகிய கணக்குகள் மூலம் நடைமுறை முதல் திரட்டின் அவை தொழில் நிறுவனங்களுக்குக் குறுகிய காலக் கடன் மட்டுமே கொடுக்க முடிகின்றது. இந்தியாவைப் பொறுத்த வரை வங்கிகள் கிராமங்களுக்குப் போதிய கடன் வசதி அளிப்பதில்லை. கிராமங்களில் திரட்டப்படும் வைப்புத் தொகைகள்கூட நகரங்களிலேயே முதலீடு செய்யப்படுகின்றன. எனவே, வைப்புத்தொகை திரட்டுவது ஓரிடம், கடன் வசதிகள் அளிப்பது மற்றோரிடம் என்பது இந்திய வங்கிகளின் சிறப்புத் தன்மைகளிலொன்று எனக் குறிப்பிடலாம். இது இந்திய வங்கியியல் வளர்ச்சியிலுள்ள குறைபாடுகளிலொன்று எனக்கூறலாம். ஆனால், இந்திய வங்கிகள் நாட்டுடைமையாக்கப்பட்டதையொட்டி இக் குறைபாடு நீக்கப்படுமளவில் தொடர் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

இந்திய வங்கியியல் வளர்ச்சியில் குறிப்பிடத்தக்க மற்றுமொரு சிறப்புத் தன்மை வங்கிகளின் வட்டார வளர்ச்சியாகும். அதாவது ஒவ்வொரு வங்கியிலும் ஒரு குறிப்பிட்ட பகுதியில் மட்டுமே மிக அதிக அளவில் கிளைகளமைத்து, வைப்புத்தொகை திரட்ட முனைவதாகும். இந்தியன் ஓவர்சீஸ் வங்கி தமிழ்நாட்டிலும், பாங்க் ஆப் இந்தியா மகாராட்டிரத்திலும் பெருமளவுக்குக் கிளைகள் திறந்து தொழிலினைப் பெருக்க முனைந்துள்ளதை இதற்கு எடுத்துக் காட்டாகக் கூறலாம். வங்கிகள் இவ்வாறு வட்டார வளர்ச்சியில் மட்டும் ஈடுபட்டிருந்ததற்குக் கீழ்க்கண்டவை காரணங்களாக அமைந்தனவென்று கூறலாம். (1) வங்கியின் கிளை அலுவலகங்கள் தலைமை அலுவலகத்தின் சிறந்த கட்டுப்பாட்டின் கீழ்ச் செயலாற்ற முடிகின்றது. (2) அக் குறிப்பிட்ட வட்டார மக்களுடைய முழு ஆதரவுடன் வங்கிகள் செயல்படும் வாய்ப்பினைப் பெற்றிருந்தன. (3) பிரிட்டிஷ் இந்திய வங்கிகள் இந்திய மாநிலங்களில் கிளை அலுவலகங்கள் தொடங்குவதை விரும்பவில்லை. எனவே, இந்திய வங்கிகளும், ஒரு மாநிலத்திலிருந்து மற்ற மாநிலங்களில் கிளைகளமைப்பதை விரும்பவில்லை. அந்தந்த வட்டாரத்திலேயே அவை வளர்ச்சி பெற்று வந்தன.

ஆனால், இக்காலத்தில் இவ் வட்டார வளர்ச்சிக் கொள்கை ஏற்றுக்கொள்ளப்படவில்லை. எனவே, நாட்டின் ஒரு முனையிலிருந்து மற்றொரு முனை வரை ஒரே வங்கி தன் கிளை அலுவலகத்தினைத் திறக்கத் தயங்குவதில்லை.

1939-1941ஆம் ஆண்டுக் காலத்தில் வங்கிகளின் வளர்ச்சி மிகவும் குன்றியிருந்தது. 1939ஆம் ஆண்டு பட்டியலிட்ட வங்கிகள் 51 ஆகவும் அவற்றின் கிளைகள் 1328 ஆகவும் இருந்தது. வங்கிகளின் எண்ணிக்கை 51 லிருந்து 1946ஆம் ஆண்டு இறுதியில் 93 ஆகவும் அவற்றின் கிளைகள் 3106 ஆகவும் உயர்ந்தன. அதுபோன்றே வங்கிகளின் வைப்புத் தொகையும் ரூ. 288 கோடியிலிருந்து ரூ. 1097 கோடியாக 1947ஆம் ஆண்டில் உயர்ந்தது. இக்காலத்தில், வங்கியியலில் ஒருசில குறைபாடுகள் இருப்பினும் வங்கிகள் நன்கு வளர்ச்சி பெற்று வந்தன என்று கூறலாம். போர்க் காலத்தில் வங்கிகளுடைய தவணை வைப்புத்தொகை மொத்த வைப்புத் தொகையில் 25 விழுக்காடுதான் இருந்தது. போர் எழுவதற்கு முன்பு தவணை வைப்பு மொத்த வைப்பில் 50 விழுக்காடாக இருந்தது. இவ்வாறு இக்குறிப்பிட்ட காலத்தில் தவணை வைப்பு திடீரெனக் குறைந்ததற்குக் காரணம் போர்க் காலத்தில் மக்கள் தங்களிடமிருந்த பணத்தை முடிந்த அளவு எளிவரல் தன்மையுடன் வைத்துக்கொள்ள விரும்பியதேயாகும். மேலும், தவணை வைப்புத்தொகைக்குக் கொடுக்கப்பட்டுவந்த வட்டி வீதமும் மிகக்குறைவாக இருந்தது.

1942—'46 இக்கால இடைவெளியில் வங்கிகளின் நிலையில் போதிய வளர்ச்சி இருந்தது குறிப்பிடத்தக்கது. இந்தக் கால வெளியில் போர்க் காரணமாகவும், அரசுக் கோட்பாடு காரணமாகவும் மக்களிடையே மிக அதிகமான அளவில் சேமிப்பு இருந்தது. எனவே, அதிகமான அளவில் வங்கிகள் தொடங்கப் பட்டதுடன்கூட அதிகமான கிளை அலுவலகங்களும் திறக்கப் பட்டன. ஆனால், சிறிது காலத்திற்குப் பிறகு போர் காரணமாக வங்கிகள் தங்களிடமிருந்த நிதியினை மாற்றுச்சீட்டுகளைக் கழிவு செய்வதன்வழி முதலீடு செய்வதற்குப் பதில் அரசுப் பிணையங்களில் முதலீடு செய்ததன் காரணமாகவும், பாதுகாப்பினடிப் படையில் சற்றுக் கூடுதலான விழுக்காட்டு ரொக்கம் வைத்திருந்ததினாலும், அவற்றினுடைய இலாபம் குறைந்து வந்தது. இருப்பினும், அவை தாங்கள் பெற்ற வைப்புகளுக்குச் செலுத்திய வட்டிவீதத்தைக் குறைத்துவிட்டதன் காரணமாக அவற்றினுடைய வருவாய் அவ்வளவாகப் பாதிக்கப்படவில்லை.

போர் முடிந்த உடன் வங்கிகளின் நிலைமை சற்று மாறி, அவை சாதாரண நிலையினை எய்தின. எனவே, வங்கிகளும் நல்ல நிலையில் சிறிதுகாலம் செயலாற்றி வந்தன. ஆனால், 1947ஆம் ஆண்டின் இந்தியப் பிரிவினைக்குப் பிறகு, பாகிஸ்தான்

நாட்டின் கொள்கைகள் காரணமாக வங்கிகள் சற்று அல்லலுற்றன. எனவே, மேற்குப் பஞ்சாப் மாகாணத்தில் சற்று நெருக்கடி உண்டாயிற்று. ஆனால், ரிசர்வ் வங்கி அதனுடைய சீரிய பணிகளின் வழி அந் நெருக்கடி நிலையினை நல்ல முறையில் சமாளித்தது எனக் கூறலாம். இருப்பினும் நாட்டுப் பிரிவினையின் காரணமாக, இந்தியாவில் பொருளாதார மந்தநிலை ஏற்பட்டது. எனவே, பொருளாதார மந்தநிலை காரணமாகவும், வங்கிகள் தவருன முறையில் நிர்வகிக்கப்பட்டு வந்ததாலும் பல சிறிய வங்கிகளை மூடவேண்டிய அவசியம் எழுந்தது.

ஆனால், 1948ஆம் ஆண்டில் வங்கிகளின் நிலை முன்னேறி அவை நல்லமுறையில் செயல்படத் தொடங்கின. நாடு பிரிவினை செய்யப்பட்டதையொட்டி ஒரு சில சிக்கல்கள் எழுந்தன. எடுத்துக்காட்டாக, பாகிஸ்தான் பிரிவினைக்கு முன்னர், அப் பகுதியிலிருந்த வங்கிகள் இந்துக்களாலேயே நடத்தப்பட்டு வந்தன. அவ் வங்கிகளின் வாடிக்கைக்காரர்களும் பெரும்பாலும் இந்துக்களாகவே இருந்தனர். ஆனால், பிரிவினையின் காரணமாகச் சிக்கல்களை எதிர்பார்த்த வங்கிகள் தங்கள் தலைமையகங்களை மேற்குப் பஞ்சாபிலிருந்து கிழக்குப் பஞ்சாபிற்கும், டெல்லிக்கும் மாற்றிவிட்டன. ஆயினும், அப் பகுதியிலுள்ள நடவடிக்கைகளை ஒரு குறிப்பிட்ட நிலைக்குப் பிறகு வங்கிகளால் குறைத்துக்கொள்ள முடியவில்லை. எனவே, அப் பகுதியில், இடையூறுகள் ஏற்பட்ட போது, அங்குச் செயலாற்றி வந்த வங்கிகள் பெரும் நட்டமடைய நேர்ந்தது. மேலும், அவ் வலுவலகங்களில் பணிபுரிந்து வந்த இந்து மதத்தைச் சார்ந்த பணியாட்கள் பாதுகாப்பற்ற நிலையிலிருந்தனர், எனவே, பல வங்கிகள், அப் பகுதியிலிருந்த கிளை அலுவலகங்களை மூடிவிட வேண்டிய நிலை எழுந்தது. இந்திய அரசு ரிசர்வ் வங்கியின் உதவியுடன் நிலைமையைச் சமாளிக்க ஆவன செய்தது. இருப்பினும், ஒருசில வங்கிகளே தங்களுடைய சொத்துகளை மேற்குப் பஞ்சாபிலிருந்து வேறு இடங்களுக்கு மாற்றின. இதர வங்கிகள் அவ்வாறு செய்யவில்லை. ஆயினும், அவ் வங்கிகளின் வாடிக்கைக்காரர்கள் மேற்குப் பஞ்சாபிலிருந்து கிழக்குப் பஞ்சாபிற்கு மாறி வந்துவிட்டனர். எனவே, மேற்குப் பஞ்சாபிலிருந்த தங்களுடைய வைப்புத்தொகையைக் கிழக்குப் பஞ்சாப் பகுதியிலிருந்து திரும்பிப்பெற முயன்றனர்.

மேலே குறிப்பிட்ட நிலையின் காரணமாகவும், பொருளாதார மந்தநிலை காரணமாகப் பங்குச் சந்தையில் எதிர்பாராதவிதமாகச் சரிவு ஏற்பட்டதாலும் 1947ஆம் ஆண்டில் மேலும் முப்பது சிறிய வங்கிகள் மூடப்பட்டன. அந் நிலைக்கு முக்கிய காரணங்கள்,

அவ் வங்கிகளை நிருவகிக்கப் போதிய அளவில் பயிற்சி பெற்ற பணியாள்கள் இல்லாததும், நிலைக்கு மீறி அதிக அளவில் கிளைகளமைத்ததுவுமே யாகும். அவ் வங்கிகளில் பெரும்பாலானவை பட்டியலிலிடப்படாத வங்கிகளே யாயினும், ஒருசில பட்டியலிலிடப்பட்ட வங்கிகளும் மேலே குறிப்பிட்ட காரணங்களினால் பெரும் சிக்கலுக்குட்பட்டிருந்தன. ஆனால் அவை, ரிசர்வ் வங்கியில் உரியநேர உதவியினால், நிலையினைச் சமாளித்துச் செயலாற்ற முடிந்தது. இருப்பினும், ஒரு பெரும் பட்டியலிலிடப்பட்ட வங்கி மூடப்பட்டது. இக் காரணத்தினால், இதர வங்கிகளின் மேலாண்மையினர், வங்கி நிருவாகத்தில் மிகக் கவனமாகவும், எச்சரிக்கையாகவும் இருந்தனர் என்று கூறலாம். மேலும், ரிசர்வ் வங்கியின் முன் இசைவின்றி எந்த ஒரு வங்கியும் புதிய கிளைகள் திறப்பது, ஓர் இடத்திலிருந்து அதே நகரத்திலில்லாத வேறு இடத்துக்கு ஒரு கிளை வங்கியை மாற்றுவது ஆகியவற்றைத் தடுக்குமளவில் சட்டங்கள் இயற்றப்பட்டதன் காரணமாக வங்கி அலுவலகங்களைக் கட்டுப்பாடின்றித் திறப்பது தடுக்கப்பட்டதெனக் கூறலாம். இந் நிலையினை மேலும் செம்மைப்படுத்துமளவில் 1949ஆம் ஆண்டு 'வங்கியியல் கம்பெனிச் சட்டம்' (Banking Companies Act) இயற்றப்பட்டது. இச் சட்டம் இன்று 'வங்கியியல் ஒழுங்காற்றுச் சட்டம்' (Banking Regulations Act) எனும் பெயருடன் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இச் சட்டம் வங்கிகளின் பணிகளைப் பொதுவாகக் கட்டுப்படுத்துகின்றது எனக் கூறலாம்.

1942ஆம் ஆண்டு, போர்காரணமாக வளர்ச்சிபெறத் தொடங்கிய வங்கியியல் தொழில், 1948ஆம் ஆண்டு வரை தொடர்ந்து வளர்ச்சி பெற்று வந்தது. இக் காலத்தில் வங்கிகளின் எண்ணிக்கை பெருகியது என்பது மட்டுமின்றி, ஒவ்வொரு வங்கியின் தொழிலும் நன்கு வளர்ச்சி பெற்றிருந்தது. ஆனால், இவ் வளர்ச்சியின் தொடர்ச்சி 1949ஆம் ஆண்டு முற்றுப்பெற்றது என்றுகூறலாம். 1949ஆம் ஆண்டு முதல் 1958ஆம் ஆண்டு முடிய வங்கிகளுடைய தொழிலில் எவ்வித மாற்றமும் இல்லை. அவை ஈட்டிய இலாபமும் மிகக் குறைந்து வந்தது. எனவே, இக்காலத்தில் வங்கிகள் தங்கள் தொழிலை நிலை நாட்டுவதிலேயே கருத்துச் செலுத்தி வந்தன. வாழ்க்கைச் செலவு அதிகரித்ததன் காரணமாகப் பணத்தேவை மட்டும் அதிகரித்து வந்தது, எனவே மக்களுடைய செலவும் அதிகமாக இருந்தது. இதன் விளைவாக மக்கள் பணத்தைச் சேமிக்க வாய்ப்பில்லாமற் போயிற்று. ஆகையினால், மக்கள் வங்கிகளில் பணத்தை வைப்பாகச் செலுத்த முன்வரவில்லை. மேலும், வதந்திகள் காரணமாக மக்கள், வங்கிகள்

மீது கொண்டிருந்த நம்பிக்கையினையும் இழக்கத்தலைப்பட்டனர். இவற்றின் காரணமாக 1953ஆம் ஆண்டில் வங்கியியல் தொழில் பெரிதும் பாதிக்கப்பட்டது என்று கூறலாம். 1948-ல் இருந்த பட்டியலிடப்பட்ட வங்கிகளின் எண்ணிக்கை 78லிருந்து 1953ஆம் ஆண்டில் 72 ஆகக் குறைந்தது.

நிருவாகச் செலவு மிக அதிகமான அளவில் உயர்ந்ததன் காரணமாகவும், தொழில் நடவடிக்கைகள் குறைந்துவிட்டதன் காரணமாகவும், பல வங்கிகள், தங்களுடைய கிளைகளை மூடுவதன் வழி, தொழிலைச் சுருக்கத் தலைப்பட்டன. பட்டியலிடப்பட்ட வங்கிகளுக்கே இந்நிலை எனில், பட்டியலிடப்படா வங்கிகளைப் பற்றிக் குறிப்பிடத் தேவையில்லை. பட்டியலிடப்படா வங்கிகளுடைய எண்ணிக்கையும் 544லிருந்து 432 ஆகக்குறைந்தது. மொத்த வங்கி அலுவலகங்களின் எண்ணிக்கையும் 4674-லிருந்து 3943 ஆகக் குறைந்துவிட்டது. இந்தக் காலத்தில் இந்திய வங்கிகளுடைய வெளி நாட்டுக்கிளை அலுவலகங்களின் எண்ணிக்கையும் 272-லிருந்து 106 ஆகக் குறைந்துவிட்டது. வங்கிகளுடைய மொத்த வைப்புத்தொகை 1948-ல் ரூ. 1,118 கோடியாக இருந்தது. இத் தொகை 1953-ல் ரூ. 969 ஆகக் குறைந்தது. வைப்புத்தொகையின் மதிப்புக் குறைந்து போயினும், வங்கிக் கடனுக்கான தேவை அதிகரித்தே வந்தது. ஆனால், அதிக அளவில் பண்டங்கள் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டதாலும், அரசு, கம்பெனிகளிடமிருந்து பெறவேண்டிய வருமான வரிப்பாக்கியைக் கட்டாயப்படுத்தித் திரட்ட முயன்றதனாலும் பண அங்காடியில் நெருக்கடி நிலைமை நிலவியது. வங்கிகள், உரிய முறையில் தொழில்புரிய முடியவில்லை. வங்கிகளும் நெருக்கடி நிலையினைச் சமாளிக்க வேண்டியிருந்தது. எனவே, பல வங்கிகள், தங்களுடைய முதலீடுகளை ரொக்கமாக மாற்ற விழைந்தன. அவ்வாறு அவற்றால் விற்பனை செய்யப்பட்ட முதலீடுகள் பெரும்பாலும் அரசுப் பத்திரங்களாகவே இருந்தன. விற்கப்பட்ட பத்திரங்களை ரிசர்வ் வங்கியே வாங்க வேண்டிய நிலை நிலவியது என்று கூறலாம். இச் சூழ்நிலையில் 1948ஆம் ஆண்டு 45 வங்கிகளும், 1949ஆம் ஆண்டு 55 வங்கிகளும், 1950ஆம் ஆண்டு 45 வங்கிகளும் 1951ஆம் ஆண்டு 60 வங்கிகளும், 1952ஆம் ஆண்டு 31 வங்கிகளும், 1953ஆம் ஆண்டு 31 வங்கிகளும், 1954ஆம் ஆண்டு 27 வங்கிகளும் முறிந்தன அல்லது செயலற்றுப் போயின. இருப்பினும் வங்கிகளுடைய இலாபம் அதிகரித்தே வந்தது. 1948ஆம் ஆண்டு ரூ. 29·73 கோடியாக இருந்த வங்கிகளுடைய இலாபம், 1953ஆம் ஆண்டில் ரூ. 34·34 கோடியாக உயர்ந்தது. இவ்வளவிற்கும் 1948ஆம்

ஆண்டு செயல்பட்ட வங்கிகளுடைய எண்ணிக்கையைவிட 1953ஆம் ஆண்டு செயல்பட்ட வங்கிகளின் எண்ணிக்கை மிகவும் குறைவாகும். ஆனால், வங்கிகள் இலாபம் அதிகரித்ததே தவிர வங்கிகளுடைய நிருவாகச் செலவும் மிக அதிகமாக அதிகரித்திருந்தது. வங்கிகள் வைப்பாளர்களுக்குச் செலுத்திய வட்டி வீதமும் கூடுதலாக்க வேண்டிய அவசியம் எழுந்தது. எனவே, 1948ஆம் ஆண்டு வங்கிகளுடைய மொத்தச் செலவு ரூ. 21·66 கோடியாக விருந்தது 1953-ல் ரூ. 27·82 கோடியாக உயர்ந்தது. இதன் விளைவாக 1948-ல் ரூ. 8·07 கோடியாக விருந்த நிகர இலாபம் 1953ல் ரூ. 6·52 கோடியாகக் குறைந்தது.

1954ஆம் ஆண்டு மீண்டும் வங்கிகளின் வளர்ச்சியினைக் காணத் தொடங்கியது. அந்த ஆண்டு வங்கிகள் பெற்ற மொத்த வைப்புத்தொகை ரூ. 1,480 கோடிக்கு உயர்ந்தது. இவ்வாறு 1954ஆம் ஆண்டில் வங்கிகளின் வைப்புத்தொகை உயர்ந்ததற்குக் கீழ்க்கண்டவை காரணங்களாக அமைந்தன: (1) ஐந்தாண்டுத் திட்டங்களை யொட்டி மைய அரசு அதிகப் பணம் செலவிட்டதின் வழி மக்களுடைய வருவாய் பெருகியது. (2) வங்கிகள் வைப்புத் தொகைக்குக் கொடுத்துவந்த வட்டி வீதம் அதிகரித்தது. (3) வங்கிகளுடைய அலுவலகம் அதிகரித்திருந்தது. (4) இறக்குமதி முற்றிலும் கட்டுப்படுத்தப்பட்டிருந்ததால், தொழில் நிறுவனங்கள் தங்களுடைய காப்பு நிதியினை வங்கிகளில் வைப்புத்தொகையாகச் செலுத்த முனைந்தன. (5) பி. எல். 480 வழி ஈட்டப்பட்ட நிதியினை இந்திய ஸ்டேட் வங்கி, அயல்நாட்டு வங்கிகள் ஆகியவற்றில் வைப்பாகச் செலுத்தப்பட்டதனால், 1954ஆம் ஆண்டிலிருந்து மூன்று ஆண்டுகள் வங்கி அலுவலகங்களின் எண்ணிக்கை மேலும் 340 அதிகரித்தது. இருப்பினும், சிறு வங்கிகள் செம்மையான முறையில் செயல்பட முடியவில்லை. எனவே, அந்த ஆண்டிலிருந்து 1957ஆம் ஆண்டிற்குள் 112 பட்டியலிடப்பட்ட வங்கிகளும், 252 பட்டியலிடப்படா வங்கி அலுவலகங்களும் மூடப்பட்டன. இந் நிலையினைச் சீர்திருத்தும் வகையில் வங்கிகள் இணைப்புத் திட்டமும், வங்கிகள் சீரமைப்புத் திட்டமும் வகுக்கப்பட்டன. இதற்கான சரத்துகள் 1950ஆம் ஆண்டில் வங்கியியல் கம்பெனிச் சட்டத்தில் சேர்க்கப்பட்டன. இப் புதிய சட்டச் சரத்துகள் சிறிய வங்கிகள் பெரிய வங்கிகளுடன் இணைய வழி வகுத்தன.

1951ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்களில், பாரத் வங்கி, ரிசர்வ் வங்கியின் ஆய்வுக்குப்பின், பஞ்சாப் நேஷனல் வங்கியுடன் இணைய நேர்ந்தது. ரிசர்வ் வங்கியின் ஆய்வு, பாரத் வங்கி கடைப்பிடித்த, கடனளிப்பின் தவருன கோட்பாடுகளைச் சுட்டிக்

காட்டிற்று. இத் தவருன கோட்பாடுகள், பாரத் வங்கியின் இயக்குநர்களுக்குச் சுட்டிக்காட்டப்பட்டன. பாரத் வங்கியின் வைப்புத்தொகைகள் பஞ்சாப் நேஷனல் வங்கியால் ஏற்றுக் கொள்ளப்பட்டன. அதுபோன்றே 1958ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்களில் இந்து வங்கி (Hindu Bank Ltd) பாங்க் ஆப் பரோடா வுடன் இணைக்கப்பட்டது. இருப்பினும், வங்கிகள், தங்கள் இச்சைப்படி இணைப்புக் கொள்வது நடைமுறையில் நடை பெறவில்லை. இவ்வாறு வங்கிகள் இணைவதும், தங்களுடைய தனிப்பட்ட இருப்பினை விடுவதும், வங்கியியல் உலகிற்கும், அவ் வங்கிகளின் வாடிக்கைக்காரர்களுக்கும் ஊறு விளைவிக்குமென்று கருதப்பட்டது. பொருளாதார வளர்ச்சிக்குச் சிறு வங்கிகளே உதவுவதாகவும் கருத்துத் தெரிவிக்கப்பட்டது, சிற்றூர்களிலுள்ள மக்கள் வங்கிகளுடன் நேரடித் தொடர்புகொள்ள விழைகின்றனர். இவ்வாறு நேரடித் தொடர்புகொள்ளச் சிறு வங்கிகளே வாய்ப்பு ஏற்படுத்துகின்றன. எனவே, அச் சிறு வங்கிகளே சிற்றூர்களி லுள்ள மக்களால் பெரிதும் விரும்பப்படுகின்றன. மேலும், ஒவ்வொரு வங்கியும் ஒவ்வொரு வகையான கோட்பாடுகளைக் கொண்டு செயலாற்றி வந்தது. வங்கிகள் இணைப்பு இவ்வாறு முரண்பாடான கோட்பாடுகளால் சாத்தியமற்றுப் போகலா மென்றும் ஒருசில வல்லுநர்கள் கருதினர். எனவே, வங்கிகள் இணைப்பைச் செய்யப் பொதுப்படையான ஒருசில கோட்பாடு களைக் கடைப்பிடித்தல் நடைமுறையில் சாத்தியமாகலாம் என்றும் அவர்கள் கருதினர்.

ஆனால், 1960ஆம் ஆண்டு இந்திய வங்கியியல் வளர்ச்சியில் ஒரு பெரும் அதிர்ச்சியினை ஏற்படுத்தியது என்று கூறலாம். அந்த ஆண்டு பாலாய் சென்ட்ரல் வங்கி, லட்சுமி வங்கி எனும் இருபெரும் அட்டவணையிலிட்ட வங்கிகள் நொடித்துப் போயின. இந் நிகழ்ச்சி யினால் மக்கள் மீண்டும் வங்கிகளின்மீது நம்பிக்கை இழக்க ஆரம் பித்தனர். இதனைச் செம்மைப்படுத்தும் வகையில் மைய அரசு, சரிவர நிருவகிக்கப்படாத வங்கிகளைக் கட்டாயமாக மறுவமைப்புச் செய்யும் வகையிலும் (Re-construction) நன்கு செயல்படும் வங்கிகளுடன் கட்டாயமாக இணைக்கும் வகையிலும் ரிசர்வ் வங்கிக்கு அதிகாரம் கொடுத்தல் அவசியமென்று கருதியது. 1961ஆம் ஆண்டு வங்கியியல் கம்பெனி திருத்தச் சட்டம் ரிசர்வ் வங்கிக்கு இத்தகைய உரிமையினை அளிக்கின்றது. இவ் வுரிமையின் விளைவாக 1961 முதல் 1964ஆம் ஆண்டு வரையி லான நான்கு ஆண்டுகளில் 148 வங்கிகள் பிற வங்கிகளுடன் இணைக்கப்பட்டன. இதன் பயனாக 1964ஆம் ஆண்டின் இறுதியில் 156 வங்கிகள் பணிபுரிந்து வந்தன.

வங்கிகளின் வளர்ச்சிக்கு எடுத்துக்காட்டாக, வங்கிகளின் அலுவலகங்களின் எண்ணிக்கையும், அவற்றினுடைய வைப்புத் தொகையும் உயர்ந்து வந்ததைக் காணலாம். முதலாவது ஐந்தாண்டுத் திட்டக் காலமான 1951—55-ல் வங்கிகளுடைய வைப்புத்தொகையில் ரூ. 129 கோடி உயர்வு காணப்பட்டது. இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் அது 602 கோடியாக உயர்ந்தது. பல்வேறு துறையிலுள்ள மக்கள் வருவாய் பெருகியதே இதற்குரிய காரணமாகும். இந்தக் காலத்தில் நடப்பு வைப்பிலுள்ள தொகை குறைந்து, தவணை வைப்பு அதிகரித்தது குறிப்பிடத்தக்கதாகும். 1961ஆம் ஆண்டிலிருந்து 1964ஆம் ஆண்டுவரையிலான காலத்தில் மொத்த வைப்புத்தொகை ரூ. 771 கோடி அதிகரித்தது. ஆனால், அந்தக் காலத்தில் நடப்பு வைப்புத்தொகை 39·9 விழுக்காட்டிலிருந்து 46·7 விழுக்காடாக உயர்ந்தது. ஆனால், தவணை வைப்பு 60.1 விழுக்காட்டிலிருந்து 53.3 விழுக்காடாகக் குறைந்தது. வங்கிகளின் வளர்ச்சியினைக் கீழ்க்காணும் அட்டவணையிலிருந்து கணக்கிடலாம். (195ஆம் பக்கத்திலுள்ள அட்டவணையைக் காண்க).

வங்கிகளின் வளர்ச்சியை அவற்றினுடைய அலுவலக எண்ணிக்கை உயர்வினடிப்படையில் மட்டுமின்றி, அவற்றினுடைய கடனளிப்புக் கொள்கை மாற்றத்தினடிப்படையிலும் காண்கிறோம். வங்கிகள் கடனளிப்புக் கொள்கைகள் சூழ்நிலை மாற்றத்திற்கேற்ப மாறி வருகின்றன. தொழில் நிறுவனங்களுக்கு மட்டுமே கடனுதவி அளித்துவந்த வணிக வங்கிகள் இன்று வேளாண்மைக்கும் கடனளிக்க முன்வந்துள்ளன. குறுகிய காலக் கடன்களை மட்டுமே அளித்துவந்த இந்திய வங்கிகள் இன்று தவணைக் கடன்களையும் கொடுக்குமளவுக்கு முன்னேறியுள்ளன. இதனை ஊக்குவிக்குமாறு இந்திய மைய வங்கியான ரிசர்வ் வங்கி வணிக வங்கிகளுக்கு மறுநிதி (Re-finance) வசதிகள் அளித்து வருகின்றது.

இதுவரை, வங்கிகள், கடன் வசதி அளிக்கும்போது பாதுகாப்பு எனும் போர்வையில் மதிப்புடைய பிணையங்களைப் பெற்ற பிறகே கடன் வசதி அளித்துவந்தன. எனவே, எளிய மக்கள் தகுந்த பிணையங்களைக் கொடுக்க இயலாது வங்கிகளிடமிருந்து கடன்வசதி பெறும் வாய்ப்பினைப் பெற இயலாதிருந்தனர். அந்த நிலைமாறி இன்று வங்கிகள், நம்பிக்கைமிக்க வாடிக்கைக்காரர்களுக்குத் தனிப்பட்ட பிணையமெதுவுமின்றி அவர்களுடைய திருப்பிச் செலுத்தும் திறன் அடிப்படையிலேயே கடனுதவி அளித்து வருகின்றன. இத்தகைய கடன் சொந்தக் [பிணைக்]

1965—1973 ஆண்டுகளில் வணிக வங்கிகளின் அலுவலகங்கள் வைப்பு வளர்ச்சி

(வைப்பு ரூபாய் கோடிக் கணக்கில்)

ஆண்டு	அலுவலகங்களின் எண்ணிக்கை மொத்தம்	ஆண்டு வளர்ச்சி	கேட்பு வைப்பு	தவணை வைப்பு	மொத்த வைப்பு	ஆண்டு வளர்ச்சி
1964—'65	5,727	+ 498	1,275.1	1,433·0	2,708·1	+ 323·4
1965 - '66	6,139	+ 412	1,477·3	1,645·9	3,123·2	+ 415·1
1966—'67	6,620	+ 481	1,664·6	1,852·4	3,517·0	+ 393·8
1967—'68	7,044	+ 424	1,874·8	2,094·2	3,969·0	+ 452·0
1968—'69	8,045	+ 1,001	2,103·5	2,542·3	4,645·8	+ 676·8
1969—'70	10,131	+ 2,086	2,465·0	3,098·0	5,563·0	+ 917·2
1970—'71	12,013	+ 1,882	2,871·0	3,660·0	6,531·0	+ 968·0
1971—'72	13,622	+ 1,609	3,544·0	4,476·0	8,020·0	+ 1,489·0
1972—'73	15,362	+ 1,740	4,030·0	5,445.0	9,475·0	+ 1,455·0

கடன் ஆகும் (Personal loan). இத்தகைய கடன் வசதிகள் மூலம், நிலையான வருவாயுள்ள மக்கள், தங்களுக்குத் தேவையான நெடும்பயன் நுகர்வுப் பண்டங்களை (Durable Consumer Goods) வாங்கி நுகர்கின்றனர். வானொலிப்பெட்டி, மோட்டார் சைக்கிள், ஸ்கூட்டர், மேசை, அலமாரி போன்றவற்றை வாங்க இம் முறை மூலம் வங்கிகள் கடனுதவி வழங்குகின்றன. இந்தியாவைப் பொறுத்தவரை இம் முறையினை இந்தியன் ஓவர்சீஸ் வங்கியே பெருமளவில் பரப்பிற்று என்று கூறலாம். இது குறித்த விவரங்களைப் பின்னேர் அத்தியாயத்தில் விளக்கலாம். வங்கிகள் எவ்வாறு வெவ்வேறு காரணங்களுக்காகக் கடனளித்தன என்பதை 197ஆம் பக்கத்திலுள்ள அட்டவணை மூலம் நன்கு விளங்கும்.

கீழ்க் குறிப்பிட்டுள்ள அட்டவணைப்படி நோக்கின் வணிக வங்கிகள் கடனுதவி அளிப்பதில் கடந்த 25 ஆண்டுக் காலங்களில் ஏற்பட்டுள்ள மாறுதல்களை நன்கு அறியலாம். வணிக வங்கிகள், வணிகத்திற்கு அதிகக் கடனுதவி அளித்தல் என்ற நிலைமாறி இன்று தொழில்துறைக்கே அதிகக் கடனுதவி அளித்து வருகின்றன. மேலும், வேளாண்மைக்குக் கடனுதவி செய்தலென்பதனையே அறியாத வணிக வங்கிகள் இன்று வேளாண்மைக்கும் கடனுதவி அளித்தல் தங்கள் கடமை என்பதனை உணரும் அளவுக்கு மாறியுள்ளன.

ஒரு நாட்டின் வளர்ச்சி அதனுடைய பொருளாதார வளர்ச்சியினைப் பொறுத்துள்ளது. பொருளாதார வளர்ச்சி செம்மையாக அமைய வேண்டுமாயின், நாட்டின் பல்வேறு துறைகளிலும் சமமான வளர்ச்சி இருத்தல் அவசியமாகும். குறிப்பாகச் சொல்லின், நாட்டின் தொழில், வணிகம், வேளாண்மை ஆகியவற்றில் ஒரே சீரான வளர்ச்சி இருத்தல் வேண்டும். அவ்வாறு பல துறைகளும் ஒரே சீரான நிலையில் வளர அவற்றிற்கு வங்கிகள் சமமான அளவில் கடனுதவி செய்தல் அவசியமாகும். ஆனால், நடைமுறையில், வங்கிகள், வேளாண்மைக்கும், சிறு தொழில் நிறுவனங்களுக்கும் உரிய அளவில் கடன் கொடுப்பதில்லை என்றும், அவை புறக்கணிக்கப்பட்டனவென்றும் ஒரு கருத்து நிலவிவந்தது. இதனைக் கருத்தில் கொண்டு வங்கிகள் செம்மையான முறையில் செயல்பட 1967ஆம் ஆண்டு மைய அரசு வங்கிகளுடைய நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்தி அவை சமுதாயத்திற்கு மேலும் நன்முறையில் பணி புரியுமளவில் ஒரு திட்டத்தினை வகுத்தது. அத் திட்டமே சமூகக் கட்டுப்பாடாகும் (Social Control). வங்கிகள் வேளாண்மைக்கு மேலும் கடனுதவி

வங்கிக் கடனளிப்பு விவரங்கள்

	டிசம்பர் 31		மார்ச்சு 31		மார்ச்சு 31	டிசம்பர் 24	சூன் 30
	1951	1961	1965	1967	1968	1970	1972
1. தொழில் துறை ...	34	54	61·5	...	67·5	63·5	57·6
2. வணிகம் ...	41	29	25·6	...	19·2	17·8	17·4
3. நிதி நிலையங்கள் ...	12	5	4·5	...	—	—	1·8
4. சொந்தக்கடன் தொழிலர் ...	7	9	5·8	...	—	—	
5. வேளாண்மை ...	2	1	0·2	...	2·2	7·1	6·8
6. பிற இனங்கள் ...	4	2	2·4	...	11·1	12·1	16·4
...	100	100	100·0		100.0	100·0	100·0

அளிக்குமாறு தூண்டுதல், செல்வம் ஓரிடத்தில் குவிவதைத் தடுக்கும் வகையில் சிறுதொழில் நிறுவனங்களுக்குக் கடனுதவி அளித்தல், வேலை வாய்ப்புகளைப் பெருக்கும் வகையில் படித்த வேலையற்றவர்களுக்குக் கடனுதவி அளித்தல் ஆகியவை இத் திட்டத்தின் முக்கிய நோக்கங்களாகும். இத் திட்டத்தினைச் செம்மையான முறையில் செயல்படுத்தவும், அத் திட்டம் செயல் படுவது குறித்துக் கருத்து வழங்கவும் மைய அரசு தேசியக் கடன் திட்டக் குழு (National Credit Council) என்னும் ஒரு குழுவினை அமைத்தது. இக் குழுவின் பணி வங்கிகள், சமூகக் கட்டுப் பாட்டைச் செயல்படுத்தும் வகையில் எவ்வாறு பல்வேறு கோட் பாடுகளைக் கடைப்பிடிக்க வேண்டுமென்று அவற்றிற்குக் கருத்துரை வழங்குவதேயாகும்.

வங்கிகளின்மீது, சமூகக் கட்டுப்பாட்டுச் சரத்துகளை முழுவதும் செயல்படுத்தும் வகையில் 1968 ஆம் ஆண்டு வங்கியியல் ஒழுங்காற்றுச் சட்டம் திருத்தப்பட்டது. இத் திருத்தங் களின் படி வங்கிகளின் இயக்குநரவை ஒவ்வொன்றிலும் பெரும் பான்மையான உறுப்பினர்கள் வங்கியியல் துறையில் போதிய செயலறிவும், நுண்ணறிவும் பெற்றவர்களாக இருக்கவேண்டு மென்றும், வங்கியின் முழு நேரத் தலைமை நிருவாகராக வங்கியியல் நிருவாகத்தில் தேர்ச்சி பெற்றவரே பணியிலமர்த்தப்பட வேண்டு மென்றும் நிர்ணயிக்கப்பட்டது. மேலும், இயக்குநர்கள் தொடர்பு கொண்டுள்ள வணிக நிறுவனங்களுக்குக் கடனளிப்பதிலும் பல கட்டுப்பாடுகள் சேர்க்கப்பட்டுள்ளன. ஒரு வங்கியில் இயக்கு நராக உள்ள நபர், மற்றொரு வங்கியில் இயக்குநராவதும் தடைசெய்யப்பட்டது.

இந்திய வங்கியியல் முறையில் காணப்பட்ட குறைபாடுகள் : மற்ற நாடுகளுடன் ஒப்பிடுமிடத்து இந்தியாவில் ஏற்பட்ட வங்கி யியல் வளர்ச்சி மிகத்தாமதமானது என்று கூறலாம். இவ்வாறு வங்கியியல் வளர்ச்சி தாமதமாக ஏற்பட்டதே, நமது நாட்டில் தொழில் வளர்ச்சி பின்தங்கிய நிலையிலிருப்பதற்குரிய காரணங் களுள் ஒன்றாகும். இந்தியாவில் வங்கியியல் வளர்ச்சி மிகத் தாமதமாக அமைந்ததற்குக் கீழ்க்காணும் தன்மைகள் காரணங் களாக அமைந்தனவென்று கூறலாம்.

(1) நெடுங்காலம் வரை வணிக வங்கிகளுக்கு அரசு ஆதரவு கிடைக்கவில்லை. அரசு, கூட்டுறவு வங்கிகளின் வளர்ச்சியில் முக்கிய நாட்டம் கொண்டிருந்ததே தவிர, வணிக வங்கிகளின் வளர்ச்சியில் அக்கறை செலுத்தவில்லை.

(2) பெரும்பாலான இந்திய வணிக வங்கிகள், போதிய நடைமுறை முதல் இல்லாத காரணத்தினாலும், இழப்பு வாய்ப்பு மிகுந்துள்ளதாகக் கருதியதனாலும், அயல்நாட்டு வாணிபத்தில் ஈடுபடவில்லை. எனவே, நல்ல வருவாய் ஈட்டும் வாய்ப்பினை இந்திய வணிக வங்கிகள் இழந்தன. இந்த நிலையினைப் பயன் படுத்திக்கொண்டு அயல்நாட்டு வங்கிகள் அயல்நாட்டு வாணி பத்தில் முற்றுரிமை பெற்றுத்திகழ்ந்து மிக அதிகமான அளவில் வருவாய் ஈட்டிவந்தனவென்று கூறலாம். இந்த நிலையில், இந்திய வணிக வங்கிகள், தங்களுக்குரிய வருவாயை இழந்தன என்பது மட்டுமின்றி, இந்தியாவைச் சார்ந்த வணிகர்கள், அயல் நாட்டு வாணிபத்தில் முன்னேற மிகவும் அவதியுற நேர்ந்தது.

(3) அயல் நாட்டு வாணிபத்தில் ஈடுபட்டு நன்கு இலாபம் ஈட்டி வந்த அயல்நாட்டு வங்கிகளுடன் இந்திய வங்கிகள் போட்டி போட்டுத் தொழில் புரிய முடியவில்லை.

(4) நெடுங்காலம் வரை, இந்தியாவில், வாணிப நிலையங்கள் வெளிநாட்டினரால் கட்டுப்படுத்தப்பட்டு வந்தன. எனவே, அவற்றின் உரிமையாளர்கள், அவற்றினுடைய நாட்டின் வங்கி களுக்கே ஆதரவுதர விழைந்தனர். எனவே, இந்திய வணிக வங்கிகள் முன்னேறுவதற்கான வாய்ப்பு ஆரம்ப நிலையில் போதிய அளவில் இல்லாமற்போயிற்று.

(5) இந்தியாவின் முக்கிய நகரங்களிலெல்லாம், செல்வம் மிகுந்த அயல் நாட்டு வங்கிகள் தொழில் புரிந்து வந்தன. சிறிய நகரங்களில் மட்டுமே இந்திய வங்கிகள் தம் கிளைகள் திறந்தன வாதலின். அவை போதிய இலாபமீட்ட முடியவில்லை என்பதுடன்கூட உரிய அளவில் வளர்ச்சியுமடைய முடியவில்லை.

(6) இந்தியர்களால் நடத்தப்பட்டுவந்த வாணிப நிறுவனங் கள்கூட, அவை வெளிநாட்டு நிறுவனங்களின் கட்டுப்பாட்டின் கீழ்ச் செயல்பட்டு வந்த காரணத்தினால், அயல்நாட்டு வங்கி களிடமே தொழில் நடவடிக்கை கொண்டிருந்தன.

(7) நீண்ட காலம்வரை இதர இந்திய வணிக வங்கிகளுக்கும் இம்பீரியல் வங்கிக்கும் போட்டியினடிப்படையில் தொழில் நடை பெற்றதும் இந்திய வணிக வங்கியியல் முறையில் காணப்பட்ட ஒரு குறைபாடாகும். இம்பீரியல் வங்கி, அரசு வங்கியாகப் பணிபுரிந்து பல சலுகைகளைப் பெற்றுத் திகழ்ந்தது. எனவே, இதர வங்கிகள் அதனுடன் போட்டியிட்டுத் தொழில்புரிய முடிவில்லை.

(8) பல வங்கிகள், எதிர்பாரா வகையில் முறிவடைந்தது, வங்கிகளின் மீது மக்கள் கொண்டிருந்த நம்பிக்கையினைக் குலைத்து விட்டதுடன் கூட வங்கிகள் வெளியிட்ட பங்குகளை வாங்கப் பணம் படைத்தோர் முன் வ ர வி ல் லை. எனவே, புதிய வங்கிகள் தொடங்குவது தடைப்பட்டது.

(9) வங்கிகள், அரசியச் சொத்துகளைப் பிணையமாகப் பெற்றுக் கடன் கொடுக்க முடியவில்லை யாதலின், அவற்றினுடைய தொழில் வளர்ச்சி தடைப்பட்டது.

(10) வணிக வங்கிகள், உடன் ரொக்கமாக மாற்றும் தன்மை படைத்தவை என்ற நோக்குடன், தங்கள் நிதியில் பெரும் பகுதியினை அரசுப் பத்திரங்களில் முதலீடு செய்திருந்தன ஆனால், அவசியம் ஏற்பட்ட நிலையில், அவை அப் பத்திரங்களை இம்பீரியல் வங்கிக்கு மாற்றிக் கொடுத்துப் போதிய நிதிவசதியினைப் பெற முடியவில்லை.

(11) இந்தியாவில் தொடங்கப்பட்ட பெரும்பாலான வங்கிகள் போதிய முதலின்றித் தொடங்கப்பட்டன. எனவே, போதிய நடைமுதலைப் பெறும்பொருட்டுக் கூடுதலான வட்டி வீதத்தில் வைப்புத் தொகையினைப் பெற விழைந்தன. அதனை ஈடு செய்யும் பொருட்டுத் திரட்டிய முதலினை ஊக வணிகத்தில் முதலீடு செய்யத் தலைப்பட்டன. மேலும், அதிக அளவில் வைப்புத்தொகை திரட்டும் பொருட்டு பல வங்கிகள் தங்கள் நிலைக்கு மீறிய நிலையில் கூடக் கிளை அலுவலகங்கள் திறந்து வந்தன. அவற்றுள் சில வங்கிகள், வெளிமாநிலங்களில்கூடக் கிளைகள் திறந்தன. அவற்றில் உரிய முறையில், தகுதி பெற்ற பணியாட்கள் பணியிலமர்த்தப் படாததால், அவை, பெருமளவில் நட்டமடைந்து அவற்றை மூட வேண்டிய அவசியமெழுந்தது.

(12) 1960ஆம் ஆண்டு வரை சிறிய வ ங் கி க ள், தங்களுடைய வாடிக்கைக்காரர்களுக்குக் கடனுதவி வழங்கும் போது மிகக்குறைந்த விழுக்காடு வட்டிக்கே கடன் வழங்கின. கூடுதலான வட்டிக்குக் கடன் வழங்கினால் அவர்கள், தங்களுடைய கணக்குகளை மாற்றி விடுவார்களோ என்ற அவர்களுடைய ஐயப்பாடே அதற்குக் காரணமாகும். குறைந்த வட்டி வீதத்திற்கு வங்கிகள் கடனளித்த காரணத்தினால் அவை போதிய இலாபம் ஈட்ட முடியவில்லை.

(13) இந்திய வங்கிகள், வங்கியியல் ஒழுங்காற்றுச் சட்டம் இயற்றப்படுவதற்கு முன்னர், தங்களுடைய நிலையினைச் செம்மைப்

படுத்திக்கொள்ளுமளவில், அவற்றினுடைய இலாபத்திலிருந்து பல்வேறு காப்புகளை உருவாக்கவில்லை. எனவே, எதிர்பாரா வகையில் அவற்றிற்கு ஏற்பட்ட நட்டத்தினை அவற்றால் ஈடு செய்ய முடியவில்லை.

(14) ஊழியர்களின் ஊதியம் குறித்து நிருவாகத்தினருக்கும் ஊழியர்களுக்கும் அடிக்கடி கருத்து வேறுபாடு நிலவி வந்தது. 1949ஆம் ஆண்டு வரை அவர்களுடைய ஊதியம் பொதுவாக நிர்ணயிக்கப்படவில்லை. அவர்களுடைய ஊதியம், மாநிலத்திற்கு மாநிலம் வேறுபட்டிருந்தது. இதன் காரணமாக, ஒன்றுக்கும் மேற்பட்ட மாநிலங்களில் தங்கள் கிளைகளைப் பெற்றிருந்த வங்கிகள் நடைமுறையில் பல இடையூறுகளைப் பெற்றிருந்தன. ஒரு மாநிலத்திலிருந்து வேறு மாநிலத்திற்கு மாற்றலாகும் ஊழியருடைய ஊதியத்தினை நிர்ணயிப்பதில் பல சிக்கல்கள் எழுந்தன.

(15) அட்டவணையிலிடா வங்கிகள் சிறந்த முறையில், பணியாற்றினும், போதிய முதலின்மையால் அவற்றினுடைய தொழிலை அவற்றால் விரிவுபடுத்த முடியவில்லை.

(16) எளிவரல் தன்மைமிக்க மாற்றுச் சீட்டுகளால் இந்திய வங்கிகளில் போதிய அளவில் முதலீடு செய்யப்படாதது அடுத்த குறைபாடாகும். இதற்கு வங்கிகளைக் குறை கூறுவது பொருளற்றதாகும். இந்தியாவைப் பொறுத்தவரை மாற்றுச் சீட்டுகள் வளர்ச்சியடையாததே அதற்குக் காரணமென்று கூறலாம்.

(17) வாடிக்கைக்காரர்கள் ஒரே வங்கியில் தொழில் தொடர்பு கொண்டிராத காரணத்தினால் இந்திய வணிக வங்கிகள் பிணையங்களைப் பெற்றுக்கொண்ட பிறகே கடன் வழங்கி வந்தன. பிணையமற்ற கடன் வங்கியியல் வளர்ச்சிக்கு மிக முக்கியமானதாகும். ஆனால், அத்தகைய கடனை இந்திய வங்கிகள் வளர்ச்சி பெறச் செய்யவில்லை. இந்த நிலைக்கும் வங்கிகளைப் பொறுப்பாக்குதல் தவருகும். இந்திய நாட்டின் வங்கியியல் வாடிக்கைக் காரர்கள் ஒவ்வொருவரும், ஒரு வங்கியில் மட்டும் தொடர்பு கொண்டிருக்கவில்லை என்பதுடன்கூட, அவர்கள் பல்வேறு காரணங்களினால், தங்களைப் பற்றிய, தங்களுடைய தொழில் பற்றிய முழு விவரங்களையும் வங்கிகளிடம் அறிவிப்பதில்லை. எனவே, வங்கிகள், பிணையமற்ற கடன் வசதிகளை வாடிக்கைக் காரர்களுக்குக் கொடுக்கத்தயங்குகின்றன.

(18) சமீப காலம் வரை வங்கிகள் தங்கள் நடவடிக்கைகள் எல்லாவற்றையும் ஆங்கிலத்திலேயே நடத்திவந்தன. காசோலைகள் கூட ஆங்கிலத்திலேயே எழுதப்பட்டு வந்தன. எனவே,

பெரும்பாலான இந்தியர்கள், போதிய ஆங்கில அறிவு இல்லாத காரணத்தினால் வங்கியியல் நடவடிக்கைகளில் ஈடுபட முடியவில்லை. எனவே, வங்கியியல் தொழிலும் உரிய முறையில் வளர்ச்சி பெற முடியவில்லை.

(19) இந்திய வங்கிகள், நமது நாட்டுக்கேற்ற தொழில் முறைகளைக் கடைப்பிடிக்கவில்லை. அவற்றினுடைய நிருவாகமும் சிக்கனமானதாகவும், எளிமை நிறைந்ததாகவும், திறமைமிக்கதாகவும் அமையவில்லை. இது குறித்து 'இந்திய வங்கி அலுவலகங்கள், குழப்பம்மிகுந்த இந்தியக் கடைகளைப் போன்று காட்சி அளிக்கின்றன' என்ற கருத்துக்கூடத் தெரிவிக்கப்படுகின்றது.

(20) வணிக வங்கிகள், தங்களுடைய நிலைக்கு மீறிய அளவில் பங்குநர்களுக்குப் பங்காதாயம் வழங்கி வந்தன. இவ்வாறு செய்வதன் வழி பொதுமக்களிடையே அவற்றைக் குறித்து நற்பெயரையும் நம்பிக்கையையும் பெருக்க முடியுமென்ற தவருன கருத்தினைக் கொண்டிருந்ததே இதற்குரிய முக்கியமான காரணமாகும். பொருளாதார மந்த காலங்களைத் தவிர, இதர காலங்களில் ஒருசில வங்கிகள், அவை ஈட்டிய இலாபத்தில் 60 விழுக்காடு வரை பங்குநர்களுக்குப் பங்காதாயமாக வழங்கியுள்ளன. இந்நிலையில், புதிய வங்கிகள் போதிய இலாப மீட்டா விடினும், அதுபோன்று அதிக அளவில் பங்காதாயம் அளிக்க முனைந்தது பெருங்குறைபாடாகும்.

(21) ஒருசில வங்கிகளிலிருந்த சில இயக்குநர்கள், திறமையற்றவர்களாகவும், தொழில் நுணுக்கம் தெரியாதவர்களாகவு மிருந்ததால், பொதுமக்கள், அவ் வங்கிகளிடம் போதிய நம்பிக்கை கொண்டிருக்கவில்லை.

(22) சமீப காலம்வரை வங்கிகளுக்கிடையே போட்டி மனப்பான்மை நிலவி அவற்றுக்கிடையே ஒற்றுமையே இல்லாதிருந்ததும் குறிப்பிடத்தக்க குறைபாடாகும்.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள குறைபாடுகளை நீக்கும் வகையில் கீழ்க்கண்ட கருத்துகள் தெரிவிக்கப்பட்டன :

(1) கூட்டுறவு வங்கிகளுக்குக் கொடுக்கப்படும் எல்லாச் சலுகைகளும் வணிக வங்கிகளுக்கும் கொடுக்கப்பட வேண்டும்.

(2) தேவையற்ற, ஊறுவிளைவிக்கக் கூடிய போட்டிகளைத் தவிர்க்கும் வகையிலும் வங்கிகளுக்கிடையே கூட்டுறவை

வளர்க்கும் வகையிலும் அனைத்திந்திய வங்கியர்கள் குழு ஒன்று தொடங்குமாறு கருத்துத் தெரிவிக்கப்பட்டது.

(3) இந்து, முகமதியச் சட்டங்கள் திருத்தப்பட்டு வணிக வங்கிகள் அசையாச் சொத்துகளைத் தாங்கள் கொடுக்கும் கடனுக்குப் பிணையமாகப் பெறுவதற்கான வசதியினைச் செய்தல் வேண்டுமென்ற கருத்து வழங்கப்பட்டது.

(4) வைப்பாளர்களுக்குக் கொடுத்துவந்த வட்டி வீதத்தினைக் குறைப்பதன்வழியும், முதலீட்டிற்கான வட்டி வீதத்தினைக் கூடுதலாக்குவதன்வழியும் வங்கிகள் ஈட்டும் இலாபத்தினைப் பெருக்கிக்கொள்ளுதல் வேண்டும்.

(5) வங்கிகளின் பணியாளர்கள், தங்களுடைய முன்னேற்றம் வங்கிகளின் வளர்ச்சியினைப் பொறுத்துள்ளது என்பதனை உணர்ந்து அவர்களுக்கும், வங்கிகளின் நிருவாகத்தினர்களுக்கு மிடையே உள்ள கருத்து வேறுபாடுகளை அரசு உதவியுடன் உரிய முறையில் தீர்த்துக்கொள்ளுதல் அவசியமாகும். மேலும் வங்கிகளின் பணியாளர்கள் தங்களுடைய வளர்ச்சி வங்கிகளுடைய வளர்ச்சியுடன் பிணைக்கப்பட்டுள்ளது என்பதனைப் புரிந்து கொண்டால் வங்கிகளுடைய நிருவாகத்தினருக்கும், வங்கிகளின் பணியாட்களுக்குமிடையே கருத்து வேறுபாடு இருக்க வாய்ப்பிருக்காது.

(6) அட்டவணையிலிடா வங்கிகள், வங்கியியல் வளர்ச்சியினடிப்படையில், அட்டவணையிலிட்ட வங்கிகளுடன் தாமாகவே முன்வந்து இணைதல் வேண்டும்.

(7) வங்கிகள் வாடிக்கைக்காரர்களை, ஊக்குவிப்பதன்வழி அவர்களை 'ஒரு நபர் ஒரே வங்கிக்' கோட்பாட்டினைக் கடைப் பிடிக்கத் தூண்டுதல் வேண்டும். இக்கோட்பாட்டினை வங்கிகளின் வாடிக்கைக்காரர்கள் கடைப்பிடித்தால், வாடிக்கைக்காரர்களைப் பற்றிய முழு விவரங்களையும் வங்கிகள் அறிந்துகொள்ள முடிகிறது. எனவே, வங்கிகள் வாடிக்கைக்காரர்களுக்குப் பிணையமற்ற கடன்களைக்கூடக் கொடுக்க ஏதுவாகிறது. மேலும் வாடிக்கைக்காரர்களைப்பற்றிய முழு விவரங்களைத் திரட்டித் தருவதற்கான உரிய நடவடிக்கைகளை வங்கிகள் கூட்டாக எடுத்தல் அவசியமானதாகும்.

(8) வங்கிகள் முடிந்தவரை வாடிக்கைக்காரர்கள், தங்கள் வங்கிகளுடன் தொடர்பு கொள்ளும்போது வட்டார மொழியினைப் பயன்படுத்துவதைத் தடைசெய்தல் கூடாது. மேலும் வாடிக்கைக்காரர்கள், காசோலைகளை வட்டார மொழியில் எழுதுவதையும் ஏற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

(9) இந்திய வணிக வங்கிகள், அயல்நாட்டு வங்கிகள் கடைப்பிடிக்கும் திறமையான நுட்பங்களைக் கடைப்பிடித்தல் இந்திய வணிக வங்கியியல் வளர்ச்சிக்கு உறு துணையாகவிருக்கும்.

(10) கிராமப் புறங்களில் வங்கியியல் வளர்ச்சிபெற ஆவன செய்தல் வேண்டுமெனினும், அவ்விடங்களில் ஒருசில சந்தர்ப் பங்கள் கிளைகளைத் தொடங்குதற்கு இலாபகரமானதாக இல்லா திருக்கலாம். அதுபோன்ற இடங்களில், முழுமையான கிளைகளைத் தொடங்காது வாரத்திற்கு, மூன்று அல்லது நான்கு தினங்கள் நடவடிக்கைகள் மேற்கொள்ளுமளவில் துணைக்கிளைகளைத் தொடங்குதல் மிகச் சிறந்ததாக அமையலாம்.

(11) வங்கிகளின் நிருவாகத்தினர், வங்கிக் கிளைகளுக்குப் பணியாட்களைப் பணியிலமர்த்தும் நிலையில், முடிந்தவரை, அந்தந்த வட்டாரத்தைச் சார்ந்தவர்களையே நியமித்தல் பயனுள்ளதாக அமையும். அந்த வட்டார மக்கள், அப் பகுதியின் சூழ்நிலைகளை நன்கு புரிந்துகொண்டு திறமையுடன் பணியாற்றுவர் என்பது பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கருத்தாகும்.

(12) சிற்றூர்களில் தொடங்கப்படும் வங்கிகள் அப் பகுதி மக்களின் வசதிக்கேற்றாற்போல், அவற்றினுடைய வேலை நேரத்தினை மாற்றிக்கொள்ளுதல் வேண்டும். நடைமுறையில் பல வங்கிகள் காலை 10 மணி முதல் மதியம் இரண்டு மணிவரை நடவடிக்கைகள் கொண்டுள்ளன. இதனை மாற்றிக் காலை நேரத்திலும், மாலை நேரத்திலும் தங்கள் செயல் முறைகளை வைத்துக்கொண்டால் அப் பகுதியிலுள்ள மக்கள், தங்கள் பணி நேரத்தினை வீணடிக்காது, வங்கி நடவடிக்கைகளை மேற்கொள்ள ஏதுவாக விருக்குமென்ற கருத்துத் தெரிவிக்கப்பட்டது.

(13) வங்கிகளை ஊக்குவிக்கும் வகையிலும், வங்கியியல் தொழிலை மக்களிடையே பரப்பும் வகையிலும் அரசு வங்கிகளுக்குப் பல்வேறு வகையில் உதவிபுரிவதுடன்கூட வங்கிகளின் பணிகளைப் பற்றியும், அவற்றினுடைய முக்கியத்துவத்தினைப் பற்றியும் மக்களிடம் பரப்புவதற்குத் தேவையான முயற்சிகளை அரசு மேற்கொள்ளுதல் வேண்டும்.

வங்கியியல் தொழில் வளர்ச்சி பெறுவதற்காகக் கொடுக்கப் பட்டுள்ள கருத்துகளில் பல அவ்வப்போது செயல்படுத்தப்பட்டு வந்துள்ளன. வங்கிகளுக்கிடையேயான போட்டிகள் தவிர்க்கப் பட்டுள்ளன. வங்கிகள் தங்களுக்கிடையே ஓர் ஒப்பந்தத்தினை ஏற்படுத்திக்கொண்டு வைப்புக்கான வட்டி வீதத்தினை ஒரு நிலைப்படுத்தியுள்ளன. பல சிறிய அட்டவணையிலிடப்படா வங்கிகள், பெரும் வங்கிகளுடன் இணைக்கப்பட்டுச் சிறிய

வங்கிகளின் எண்ணிக்கை இன்று மிகவும் குறைக்கப்பட்டுள்ளது. வங்கிகள், வாடிக்கைக்காரர்களால், காசோலைகள் வட்டார மொழியில் எழுதப்படுவதைத் தடை செய்வதில்லை. சிற்றூர்களில் தொடங்கப்படும் வங்கிகள் அப்பகுதி மக்கள் வசதிக்கேற்றாற்போல் அவற்றினுடைய வேலை நேரத்தினை மாற்றி வைத்துள்ளன. கிராமப்புற வங்கிகள் காலையிலும் மாலையிலும் பணிபுரிவதன்வழி வாடிக்கைக்காரர்களுக்கு உதவியாகச் செயலாற்றுகின்றன.

வங்கிகளின் சீர்திருத்தத்தில் தலைமையாகத் திகழ்ந்தது பதினான்கு பெரும் வங்கிகள் நாட்டுடைமையாக்கப்பட்டதே யாகும். 1969 ஆம் ஆண்டு சூலைத் திங்கள் 1 ஆம் நாள் ரூ. 50 கோடிக்குமேல் வைப்புத்தொகையினைப் பெற்றிருந்த வங்கிகள் நாட்டுடைமையாக்கப்பட்டன. ஆனால், ரூ. 50 கோடிக்குமேல் வைப்புத் தொகை பெற்றிருந்த அயல்நாட்டு வங்கிகள் நாட்டுடைமை யாக்கப்படவில்லை. இவ்வாறு பதினான்கு பெரும் வங்கிகள் நாட்டுடைமையாக்கப்பட்டதன் காரணமாக வங்கியியல் தொழிலில் 85 விழுக்காடு அரசுக்கு உடைமையாக்கப்பட்டு விட்டது. இவ்வாறு வங்கிகளை நாட்டுடைமையாக்கியதன் மூலம் அரசு வங்கியியல் தொழிலைச் செம்மைப் படுத்தியுள்ளது எனக் கூறலாம். இன்று வங்கிகளுக்கிடையே விரும்பத்தகாத போட்டிகள் இல்லை. ஏறத்தாழ எல்லா வங்கிகளுடைய கோட்பாடுகளும் ஒன்றுக உள்ளன. அரசு முக்கியத் தொழில் நிறுவனங்களுக்குக் கடனுதவி செய்ய முடிகிறது. இன்று வங்கிகள் எவ்விதத் தயக்கமுமின்றி வேளாண்மைக்குக் கடனுதவி அளிக்கின்றன. சிறு தொழிகள் முன்னேற்றமடையப் போதிய வாய்ப்புகள் அளிக்கப்படுகின்றன. வங்கிகள் நாட்டுடைமையாக்கப்பட்டதன் விவரங்கள் குறித்தும், அதன் விளைவுகள் குறித்தும் 15-வது அத்தியாயத்தில் விளக்கலாம்.

வினாக்கள்

(1) இந்தியாவில் வங்கி முறை வளர்ந்ததனைச் சுருக்கி வரைக.

(2) பண்டைக் காலங்களிலும் வங்கியியல் தொழில் இருந்தது என்பதற்கான சான்றுகள் யாவை?

(3) இந்திய வங்கியியல் வளர்ச்சியில் முக்கியமான காலமாகக் கருதப்படுவது எது? அதற்குரிய காரணங்கள் யாவை?

(4) 1913 ஆம் ஆண்டிலிருந்து ஐந்தாண்டுக் காலத்தில் பல வங்கிகள் முறிவடைந்ததற்கான காரணங்களை விளக்குக.

(5) இந்தியாவில் வங்கிகளின் வளர்ச்சி பல்வேறு மாநிலங்களிலும் ஆரம்ப காலத்தில் பரவலாக வளர்ச்சியடையாததன் காரணங்கள் யாவை ?

(6) இந்திய வணிக வங்கிகளின் முதலீட்டுக் கொள்கையில் ஏற்பட்டுவரும் மாறுதல்கள் யாவை ?

(7) வணிக வங்கிகளின் வளர்ச்சி வைப்புத் தொகையினடிப்படையில் கடந்த 50 ஆண்டுக் காலமாக எவ்வாறு அமைந்தது என்பதனை விளக்குக.

(8) 1954ஆம் ஆண்டில் வங்கியியல் வளர்ச்சியில் வரவேற்கத்தக்கதொரு முன்னேற்றம் இருந்ததன் காரணங்கள் யாவை?

(9) வங்கிகளின்மீது சமூகக் கட்டுப்பாடு விதிக்கப்பட்டதன் நோக்கங்கள் யாவை ?

(10) இந்திய வங்கியியல் முறையில் காணப்பட்ட குறைபாடுகள் யாவை ?

(11) இந்திய வங்கிகளிடம் காணப்பட்ட குறைபாடுகளுக்கு எந்த அளவிற்கு வங்கிகளின் நிருவாகத்தினர் பொறுப்பாக முடியும் ?

(12) இந்திய வங்கிகளிடம் காணப்பட்ட குறைபாடுகளைக் களைய அரசும் வங்கிகளின் நிருவாகத்தினரும் எடுத்துக் கொண்ட முயற்சிகள் யாவை ?

10. வணிக வங்கிகளும், தொழில் கடனும்

வணிக வங்கிகள், தங்களுடைய நிதியில் பெரும் பகுதியினைத் தொழில் நிறுவனங்களில் முதலீடு செய்வதையே விரும்புகின்றன. வங்கிகள் பொதுவாக வேளாண்மைக்குக் கடனளிப்பதை விரும்புவதில்லை. பதினான்கு பெரும் வங்கிகள் நாட்டுடைமையாக்கப்பட்ட பிறகு வங்கிகளுடைய நோக்கில் விரும்பத்தகு மாற்றங்கள் உள்ளனவெனினும், வங்கிகள் பழைய காலத்திலிருந்த அளவிற்கு வேளாண்மையை ஒதுக்கிவிடுவதில்லை எனினும், வேளாண்மையிலுள்ள இடையூறுகள் காரணமாக இன்றும் வங்கிகள் வேளாண்மைக் கடனைப் பெரிதும் விரும்புவதில்லை. இதற்குக் கீழ்க்கண்டவை காரணங்களெனக் கூறலாம்.

வணிக வங்கிகள் பிறருடைய மூலதனத்தில் தொழில் புரிபவை. அவற்றினுடைய நடைமுதலின் பெரும்பகுதி வைப்பாளர்களிடமிருந்து திரட்டப்பட்ட வைப்புத்தொகையேயாகும். எனவே, வங்கிகள், தங்களுடைய முதலீட்டினை மிகக்கவனத்துடன் செலவு செய்தல் வேண்டியுள்ளது. 'பாதுகாப்பு' எனும் முதலீட்டுக் கோட்பாட்டிற்கு ஒவ்வொரு வங்கியும் உரிய முக்கியத்துவம் கொடுக்கவேண்டியுள்ளது. பாதுகாப்புக் கோட்பாட்டினடிப்படையில் வணிக வங்கிகள் பிணையமற்ற கடனுக்கு ஆதரவு தருவதில்லை, வேளாண்மையிலீடுபட்டுள்ள எளிமையான விவசாயிகள், எந்தவிதமான வங்கிகளால் ஏற்றுக்கொள்ளக்கூடிய பொருள்களையும் பிணையமாகக் கொடுக்க முடிவதில்லை. எனவே, வங்கிகளும் அவர்களுக்குக் கடனுதவி வழங்க முடிவதில்லை.

இரண்டாவதாக, வங்கிகளுடைய நிதியில் பெரும்பகுதி வைப்பாளர்களிடமிருந்து, கேட்கும்போது திருப்பிச் செலுத்தத்தக்க வைப்புத்தொகை மூலம் பெறப்படுகிறது. எனவே, வைப்புத்தொகையினை வங்கியிடமிருந்து எந்த நிலையிலும் திரும்பப்

பெற விழையலாம். இந்த நிலையில், வங்கிகள், அவ்வாறு வைப்பாளர்களிடமிருந்து திரட்டிய நிதியினை வேளாண்மையிலீடுபட்டுள்ள விவசாயிகளுக்குக் கடனுகக் கொடுத்தால், அக் கடன் தொகை உரிய காலத்தில் விவசாயிகளால் திரும்பச் செலுத்தப்படுமென அறுதியிட்டுக் கூறுதல் இயலாது. விவசாயிகளுடைய வருவாய் நிலையாக இருப்பதில்லை. அது பருவகாலச் சூதாட்டத்தைப் பொறுத்துள்ளது. உரிய அளவில் மழை இருக்குமானால், விவசாயிகள் நல்ல வருவாய் ஈட்டி, தாங்கள் பெற்ற கடனைத் திருப்பிச்செலுத்த இயலும். மிகக் குறைவான அளவில் மழை இருந்தாலோ, தேவைக்கு மீறிய அளவில் மழை இருந்தாலோ, விவசாயிகளின் வருவாய் பாதிக்கப்பட்டு அவர்கள், வங்கிகளிடமிருந்து பெற்ற கடன் தொகையினைத் திருப்பிச்செலுத்த முடியாத நிலையினை அடைவர். அதுபோன்ற சந்தர்ப்பங்களில் வங்கிகளின் நிலை மிக மோசமானதாகிவிடும். இந்தச் சூழ்நிலையினைத் தவிர்க்க வேண்டி வங்கிகள் பொதுவாக வேளாண்மைக்குக் கடனுதவி அளிப்பதில்லை.

மூன்றாவதாக, வங்கிகள் பொதுவாக நிலையான வருவாய் உள்ள மக்களுக்கே கடனுதவி புரிகின்றன. வேளாண்மையிலீடுபட்டுள்ளவர்களோ நிலையான வருவாய் உடையவர்கள் என்று கூறுதல் இயலாது. அவர்கள் ஈட்டும் வருவாய், அவர்களுடைய திறமைக்கு அப்பாற்பட்டதாகவும், அவர்களுடைய திறமைக்குக் கட்டுப்படாததாகவும் உள்ளதால் பொதுவாக வங்கிகள் விவசாயிகளுக்குக் கடன் கொடுப்பதை விரும்புவதில்லை. இந்திய விவசாயிகள், சிறு சிறு துண்டுகளாகவே நிலத்தினைப் பெற்றுள்ளதால், அதிலிருந்து கிடைக்கும் வருவாய் நிலையானதாகவிருக்கும் என்று கூறுதல் இயலாது. எனவே, வங்கிகள் விவசாயிகளுக்குக் கடன் கொடுப்பதில்லை.

நான்காவதாக, வணிக வங்கிகள் பெரும்பாலும் நகரங்களிலேயே அமைக்கப்பட்டுள்ளன. கிராமப் புறங்களிலுள்ள விவசாயிகளைப்பற்றிய விவரங்களை நன்கு அறிந்துகொள்ள அவற்றால் முடிவதில்லை. எனவே, அவை விவசாயிகளுக்குக் கடன் கொடுக்கத் தயங்குகின்றன.

ஐந்தாவதாக, விவசாயிகள் போதிய கல்வியறிவு இல்லாத காரணத்தினால் வணிக வங்கிகளிடமிருந்து அவர்களால் கடன் பெற முடிவதில்லை.

மேற்குறிப்பிட்டுள்ள காரணங்களினால், வணிக வங்கிகள் வேளாண்மைக் கடனில் உரிய அளவிற்குப் பங்குகொள்ள முடிவவில்லை. 1970ஆம் ஆண்டு வங்கிகள் தங்கள் முதலீட்டில்

ஏழு விழுக்காட்டுப் பகுதியினையே வேளாண்மைக் கடனுக்கக் கொடுத்தன. முன்னேறியுள்ள அமெரிக்கா போன்ற நாடுகளில் வணிகவங்கிகள் உரிய அளவில் வேளாண்மைக்குக் கடனுதவி அளித்து வருகின்றன. இந்த நிலையினைத் திருத்தி வங்கிகள், வேளாண்மைக் கடனில் பங்கு கொள்ளும் வகையில் பல முயற்சிகள் எடுக்கப்பட்டன. கிராம வங்கியியல் விசாரணைக்குழுவின் (Rural Bankins Enquiry Committee) பரிந்துரையின்படி, தானியங்களைத் தரப்படுத்த வேண்டியும், அவற்றைப் பாதுகாப்புச் செய்ய வேண்டியும் நாடுமுழுவதும் கிடங்குகள் அமைக்கவும், தானியங்களின் தரத்தினை நிலைப்படுத்தவும், கிராமங்களில் வங்கியியல் வசதிகளைப் பெருக்கவும் உரிய முயற்சிகள் எடுக்கப்பட்டன.

ரிசர்வ் வங்கி, வணிக வங்கிகள், வேளாண்மைக்குக் கடன் கொடுப்பதனை ஊக்குவிக்கும் வகையில், அவ் வங்கிகளுக்குப் பருவ காலங்களில் மாற்றுச் சீட்டுகளைக் கழிவு செய்வதன் வழி கடனுதவி அளித்து வருகின்றது. இம் முயற்சிகளுக்குச் சிகரமாக, வேளாண்மைக்குப் போதிய கடனுதவி அளிக்கும் பொருட்டு வேளாண்மை மறுநிதியக் கூட்டுரு (Agricultural Re-finance Corporation) தொடங்கப்பட்டது. இருப்பினும், பதினொரு பெரும் வங்கிகள் நாட்டுடைமையாக்கப்பட்டதே வணிக வங்கிகள் வேளாண்மைக் கடனில் பங்குபெறுவதை ஊக்குவித்தது என்று கூறலாம்.

இவ் வரலாற்று முக்கியத்துவம் பெறும் நிகழ்ச்சிக்குப் பிறகு ஓர் ஆண்டிற்குள் வங்கிகள் வேளாண்மைக்குக் கொடுத்த கடனின் அளவு இரு மடங்குகளாகப் பெருகியது. வங்கிகள் விவசாயிகளுக்கு உரம், விதை போன்றவை வாங்குவதற்குத் தேவையான குறுகியகாலக் கடன்களையும், டிராக்டர் வாங்கத் தேவையான நீண்டகாலக் கடனுதவிகளையும் அளித்து வருகின்றன. ஒருசில வங்கிகள் சில கிராமங்களை ஏற்றுக்கொண்டு, அவற்றைச் சீர்திருத்தும் வகையில் அக் கிராமங்களுக்குத் தேவையான எல்லாக் கடன் வசதிகளையும் அளித்து வருகின்றன. குறுகிய காலக் கடன்களுக்கு வளரும் பயிர் பிணையமாகவும் நிலம், துணைப் பிணையமாகவும் பெறப்படுகின்றன. டிராக்டர் வாங்கக் கடன் கொடுக்கப்படும்போது அந்த டிராக்டரே வங்கிக் கடனுக்குப் பிணையமாக அமையும். ஒருசில சந்தர்ப்பங்களில் கடன் பெறுபவருடைய நிலமும் அடைமானமாகப் பெறப்படுகிறது.

இவ்வாறு, நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகள் வேளாண்மைக்குக் கடன்வசதி யளிப்பதில் மிகுந்த முயற்சி எடுத்தும்கூட

1968-ல் வங்கிகளின் கடனில் 2 விழுக்காடாக இருந்த வேளாண்மைக் கடன் 1970-ல் ஏழு விழுக்காடாக மட்டுமே உயர்ந்துள்ளது. எனவே, விவசாயிகளுக்கும் வணிக வங்கிகளுக்கும், ஒரு குறிப்பிட்ட நிலைக்கு அதிகமாக நேரடித் தொடர்பு ஏற்படுதல் என்பது இயலாததாகும். இருப்பினும், நாட்டுடைமையாக்கப்பட்ட வணிக வங்கிகள் முடிந்தவரை வங்கியியல் தொழிலினைக் கிராமப் பகுதிகளில் பரப்ப முயன்று வருகின்றன. இதன் விளைவாகவே, கிராமப் பகுதிகளில் 1969ஆம் ஆண்டு செயலாற்றிய 1860 வங்கி அலுவலகங்கள் 1978ஆம் ஆண்டில் 5661 என்ற நிலைக்கு உயர்ந்துள்ளன. இருந்தாலும்கூட, நாட்டின் பல பகுதிகளிலுமுள்ள ஏறத்தாழ ஆறு இலட்சம் கிராமங்களுக்கும் முழுமையாக வங்கியியல் வசதி அளித்தல் என்பது இயலாததாகும். வணிக வங்கிகள் கூட்டுறவுச் சங்கங்களுக்கு நிதியுதவி செய்வதன்வழி மறைமுகமாக வேளாண்மைக்குக் கடன் வசதி செய்துதர வாய்ப்புள்ளது என்று கூறலாம். அதற்கான முயற்சிகள் நடைபெற்று வருவதுடன்கூட இத் திட்டம் ஓரளவுக்குச் செயல்படுத்தப்பட்டும் வந்துள்ளது.

வேளாண்மையில் போதிய அளவு முதலீடு செய்ய வாய்ப்பில்லாத வணிக வங்கிகள் தங்களிடமுள்ள நிதியினைத் தொழில் நிறுவனங்களில்தான் முதலீடு செய்ய வேண்டியுள்ளது. எனவே, வணிக வங்கிகளின் கடனில் 70 விழுக்காடு தொழில் நிறுவனங்களுக்கு மட்டுமே செலுத்தப்பட்டு வருகின்றது. பெரும்பாலும் வங்கிகள் தொழில் நிறுவனங்களின் சொத்துகளை அடைமானமாகப் பெறுவதன்வழி கடனுதவி அளித்து வருகின்றன. பருத்தி நெசவாலைகள், பொறியியல் துறையைச் சார்ந்த நிறுவனங்கள் ஆகியவையே பெரும்பகுதி வங்கிகளிடமிருந்து கடன்வசதி பெறுகின்றன. இருப்பினும், இன்றைய நிலையில்கூடத் தொழில் நிறுவனங்கள் வங்கிகளிடமிருந்து பெறும் கடன் வசதிகள் தேவைக்கு மிகக் குறைவு என்றே கூறுதல் வேண்டும். குறிப்பாக வங்கிகள், தொழில் நிறுவனங்களின் நீண்டகாலக் கடன் தேவைகளைப் பூர்த்திசெய்வது மிகக்குறைவு. இன்றும் இந்திய வங்கிகள் பழைமைக் கோட்பாடுகளைக் கடைப்பிடித்துத் தொழில் நிறுவனங்களின் குறுகியகாலக் கடன் தேவைகளை மட்டுமே பூர்த்திசெய்து வருகின்றன. ஆனால், இவ்வாறு வங்கிகளால் கொடுக்கப்படும் குறுகியகாலக் கடன்கள், மீண்டும் மீண்டும் புதுப்பிக்கப்பட்டுத் தொழில் நிறுவனங்களால் பயன்படுத்தப் படுவதால் தொழில் நிறுவனங்கள் வங்கிகளிடமிருந்து நீண்டகாலக் கடன்பெற முடிவதில்லை என்ற குறைபாட்டிற்கு இடமே இல்லை என்று கூறப்படுகிறது.

குறுகியகாலக் கடன்கள் புதுப்பிக்கப்பட்ட தொழில் நிறுவனங்களால் நீண்டகாலம் பயன்படுத்தப்பட்டாலும், அவை நீண்ட காலக் கடன்களுக்கு ஒப்பாகா. ஏனெனில், நீண்டகாலக் கடன்களைப் பொறுத்தவரை, தொழில் நிறுவனங்கள், குறிப்பிட்டகாலம் முடியும்வரை அக் கடன் தொகையினைப் பயன்படுத்தலாமென்று உறுதியாக நம்பியிருக்க முடியும். ஆனால், குறுகியகாலக் கடன் புதுப்பிக்கப்பட்டு நீண்டகாலப் பயன் பெறுவதைப் பொறுத்தவரை அத்தகைய உறுதிப்பாடு இல்லை என்று கூறலாம். இரண்டாவதாக, நீண்டகாலக் கடனுக்கு வங்கிகள் திரட்டும் வட்டி வீதம் மிகக் குறைவு. ஆனால், குறுகியகாலக் கடன்கள் புதுப்பிக்கப்பட்டு அவை நீண்டகாலக் கடனின் பயன்களை அடைந்தாலும்கூடத் தொழில் நிறுவனங்கள், குறுகியகாலக் கடனுக்குரிய சற்றுக் கூடுதலான வட்டி வீதத்திலேயே வட்டித் தொகையினை வங்கிகளுக்குச் செலுத்த வேண்டியுள்ளது. எனவே, தொழில் நிறுவனங்களைப்பற்றி நன்கு அறிந்த வங்கிகள் அவற்றிற்கு நீண்ட காலக் கடன் கொடுக்கத் தயங்கக்கூடாது.

வங்கிகள், குறுகியகாலக் கடன் வழங்கும்போதுகூடப் பரந்த மனப்பான்மையுடன் வழங்குகின்றன எனக் கூற இயலாது. அவ்வாறு குறுகியகாலக் கடன் அளிப்பதில்கூடக் குறைபாடுகள் காணப்படுகின்றன. முதலாவதாக வங்கிகள் கடனுக்குப் பிணையமாக எளிதில் ரொக்கமாக்கக் கூடிய சொத்துகளை மட்டுமே ஏற்றுக்கொள்கின்றன. இரண்டாவதாக, அவ்வாறு எளிதில் ரொக்கமாகக் கூடிய சொத்துகளில்கூட அவற்றினுடைய மதிப்பில் மிகக் குறைந்த விழுக்காட்டுப் பகுதியினையே கடனுகக் கொடுக்க முனைகின்றன. இதன்விளைவாகத் தொழில் நிறுவனங்கள் தங்களுக்குப் போதுமான அளவிற்குக் கடன்பெற முடிவதில்லை. மேலும், பெரும்பான்மையான வங்கிகள், தொழில் நிறுவனங்கள் அளிக்கும் பிணையங்களை மதிப்பீடு செய்வதற்கு உரிய, தகுதிபடைத்த நபர்களைப் பணியிலமர்த்துவதில்லை. எனவே, பிணையமாகக் கொணரப்படும் சொத்துகள் வங்கிகளில் அலுவலர்களாலேயே ஒருசில சந்தர்ப்பங்களில் மதிப்பீடு செய்யப்படுகின்றன. இந்த நிலையில், அலுவலர்கள், அச் சொத்துகளின் மதிப்பினைக் குறைவாகவே நிர்ணயிக்கின்றனர். எனவே, தன் வாங்க விழையும் தொழில் நிறுவனங்களின் கடன் வாங்கும் திறன் குறைகிறது.

அடுத்து வங்கிகள், அவை அளிக்கும் கடனுக்குத் தொழில் நிறுவனங்களிடமிருந்து திரட்டும் வட்டி வீதமும் மிகவும் கூடுதலாகவே உள்ளது என்று வணிக வங்கிகளின்மீது குற்றம் சாட்டப்படுகிறது. இக் குறைபாடு பொருளற்றது எனக் கூறலாம்.

ஏனெனில், இந்திய வணிக வங்கிகள் திரட்டும் வட்டி வீதம், இதர நாட்டு வணிக வங்கிகள் திரட்டும் வட்டி வீதத்தைவிட மிகக் குறைவானதாகும். இருப்பினும், வணிக வங்கிகள் ஏற்றுமதி வணிகத்திற்கு அளிக்கும் கடன் வசதிகளுக்கு இன்னும் வட்டி வீதத்தைக் குறைக்கலாம். இவ்வாறு ஏற்றுமதி வணிகத்திற்குரிய கடனுக்கு வட்டி வீதம் குறைக்கப்படும்போது, ஏற்றுமதி ஊக்குவிக்கப்பட்டு, நமது நாட்டின் தொழில் வளர்ச்சிபெற உ[illegible] வாய்ப்புள்ளது.

வணிக வங்கிகள், தொழில், வணிக நிறுவனங்களுக்கு ஏறத்தாழ 70 விழுக்காடு கடன் வசதி அளித்தாலும்கூட, கடன் வசதிபெறும் நிறுவனங்களுள் பெரும்பாலானவை பெரும் நிறுவனங்களேயாகும். சிறிய நிறுவனங்களுக்கு வணிக வங்கிகள் போதிய கடன்வசதி அளிப்பதில்லை. எடுத்துக்காட்டாக 1978 ஆம் ஆண்டின் தொழில் கடனில் 12·1 விழுக்காட்டுப் பகுதியே சிறு நிறுவனங்களுக்குக் கடனாக வழங்கப்பட்டுள்ளது. இதற்கு முக்கிய காரணம், இந் நிறுவனங்களால் கொடுக்கப்படும் பிணையங்கள், வங்கிகளால் ஏற்றுக்கொள்ளக் கூடியவையாக இல்லாததேயாகும். மேலும் சிறு தொகைகளாகப் பல்வேறு நிறுவனங்களுக்குக் கடன் கொடுத்தல் அவ்வளவு இலாபமாக இருக்காது என்ற ஒரு பொதுக் கருத்தினையும் வங்கிகள் கொண்டுள்ளன. ஆனால், நாட்டின் தொழில்வளம் முன்னேற வங்கிகள், தங்களுடைய இந்தக் கருத்தினை மாற்றிக்கொண்டு, சிறு தொழில் நிறுவனங்களுக்கும் கடன் வசதி அளித்தல் இன்றியமையாததாகும். இந் நிலைக்கு வங்கிகளை மட்டும் குறைகூறுவது பொருளற்றதாகும். சிறு தொழில் நிறுவனங்கள் உரிய முறையில் கணக்குகளைத் தயாரிப்பதும் இந் நிலைக்குக் காரணமாகும். வங்கிகள் சிறு தொழில் நிறுவனங்களுக்குக் கடன் வழங்க ஏதுவாக இருக்கும் வகையில், அவை, தங்களுக்குரிய கணக்குகளை உரிய முறையில் எழுதுதல் வேண்டும். பெரும் வங்கிகள் நாட்டுடைமையாக்கப்பட்ட பிறகு வங்கிகளின் நோக்குச் சற்று மாறியுள்ளதென்று குறிப்பிடலாம். 1968 ஆம் ஆண்டு வங்கியத் தொழில் கடனில் 6·1 விழுக்காட்டுப் பகுதியே சிறு நிறுவனங்களுக்கு அளிக்கப்பட்டது. இந் நிலை மாறி 1978 ஆம் ஆண்டு 12·1 விழுக்காட்டைச் சிறு தொழில் நிறுவனங்கள் வங்கியத் தொழில் கடனில் தங்கள் பகுதியாகப் பெறுகின்றன.

சிறுதொழில் நிறுவனங்களுக்குக் கொடுக்கப்படும் கடனுக்குப் பெறப்படும் பொறுப்புறுதித் திட்டம் :

இழப்பு வாய்ப்பு மிகுந்து காணப்படுவதால், வங்கிகள் சிறு தொழில் நிறுவனங்களுக்குக் கடன் வசதி அளிக்கத் தயங்குகின்றன

வென்று முன்னரே குறிப்பிட்டோம். 1959ஆம் ஆண்டு, ரிசர்வ் வங்கியால் சிறுதொழில் நிறுவனங்களுக்கு, நிதிவசதி அளிப்பது குறித்து நடத்தப்பட்ட கருத்தரங்கு, தொழில் நிறுவனங்களுக்குக் கடன்வசதி அளிப்பதில் உள்ள இழப்பு வாய்ப்பில் பங்குகொள்ளும் வகையில் ஒரு நிறுவனம் அமைக்கப்படுவதன்வழி, வணிக வங்கிகளே, சிறுதொழில் நிறுவனங்களுக்குக் கடன்வசதி அளிக்கத் தூண்டலாம் என்ற முடிவுக்கு வந்தது. அதன்படி இந்திய அரசு, ரிசர்வ் வங்கியுடன் கலந்தாலோசித்து 'பொறுப்புறுதித் திட்டம்' (Guarantee Scheme) ஒன்றினைத் தீட்டியது. வங்கிகள் சிறுதொழில் நிறுவனங்களுக்கு அதிக அளவில் கடன்வசதி அளிக்க முன்வர வேண்டும் என்பதே இத் திட்டத்தின் நோக்கமாகும். சிறுதொழில் நிறுவனங்களுக்குக் கடன்வசதி அளித்ததனால் ஏற்படும் நட்டத்தினின்றும், கடன் வழங்கும் நிறுவனங்களுக்குப் பாதுகாப்பு அளிப்பதே இத் திட்டத்தின் உட்கருத்தாக அமைந்தது.

இந்திய ரிசர்வ் வங்கியிடம் மைய அரசின் முகவர் என்ற நிலையில் இத் திட்டத்தினை நிர்வகிக்கும் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டது. இதன் காரணமாக, இப் பணியினை ஏற்கும் நிலையில் ரிசர்வ் வங்கி 'பொறுப்புறுதி நிறுவனம்' எனும் பெயரினையும் பெற்றுள்ளது. இத் திட்டம் ரிசர்வ் வங்கியின் தொழில் நிதித் துறையைச் சார்ந்த 'பொறுப்புறுதி அமைப்பால்' (Guarantee Organisation) செயல்படுத்தப்பட்டு வருகிறது. இவ் வமைப்பின் தலைமை அலுவலகம் பம்பாயிலுள்ளது. இவ் வமைப்பு, பம்பாய், கல்கத்தா, சென்னை, புது டில்லி ஆகிய நான்கு இடங்களில் தனது வட்டார அலுவலகத்தைப் பெற்றுள்ளது.

இத் திட்டம், சிறுதொழில் நிறுவனங்களுக்குக் கடன் வசதி அளிப்பதன் காரணமாக நட்டமடையும் அமைப்புகளுக்குப் பாதுகாப்பளிக்கிறது. இத் திட்டம் அவ்வப்பொழுது மைய அரசின் ஒப்புதலுடன், ரிசர்வ் வங்கியால் மறுபரிசீலனை செய்யப்பட்டுச் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. 1969ஆம் ஆண்டு இத் திட்டத்தை மறுபரிசீலனை செய்யும்பொருட்டு உருவாக்கப்பட்ட ஒரு குழுவின் பரிந்துரைகளின்படி, 1970ஆம் ஆண்டு பிப்பரவரி 1ஆம் தேதி முதல் இத் திட்டம் மாற்றப்பட்டது. இத் திருத்தப்பட்ட திட்டத்தின்படி, இதன் வரையறைகளைப் பூர்த்தி செய்து சிறுதொழில் நிறுவனங்களுக்குக் கடன் வழங்கும் அமைப்புகள் தாங்கள் அளித்த கடனுக்குப் பொறுப்புறுதியினைப் பெறுகின்றன.

இத் திட்டத்தின்படி, சிறுதொழில் நிறுவனங்களுக்கு மைய அரசின் அனுமதியுடன் கடன் வழங்கும் அமைப்புகள் பொறுப்புறுதி

பெறும் உரிமையினைக்கொண்டு பணிபுரிகின்றன. இத்தகைய பொறுப்புறுதிப் பயனைக் கொண்டுள்ள அமைப்புகளின் எண்ணிக்கை 486 ஆகும். இப் பொறுப்புறுதிப் பயனில் சேர விரும்பும் நிதி நிறுவனங்கள் பொறுப்புறுதி அமைப்பால் தீட்டப் பட்டுள்ளபடி ஓர் ஒப்பந்தத்தினை எழுதிக்கொடுத்தல் வேண்டும். 1971 ஆம் ஆண்டு முடிய ஏறத்தாழ 148 நிதி நிறுவனங்கள் அதுபோன்ற ஓர் ஒப்பந்தத்தினை எழுதிப் பெற்றுள்ளன. ஸ்டேட் வங்கி, ஸ்டேட் வங்கியின் துணை வங்கிகள், அட்டவணையில் வங்கிகள், மாநில நிதியக் கூட்டுருக்கள் போன்றவை அவற்றுள் சிலவாகும்.

இத் திட்டத்தின்படி சிறுதொழில் நிறுவனங்கள், நடைமுறை முதல், தவணைக்கடன் போன்ற கடன் வசதிகளைப் பெறலாம். இருப்பினும், கீழ்க்காணும் வசதிகளை எந்த ஒரு நிறுவனமும் பெற இயலாது:

(அ) மாநில, மைய அரசுத் திட்டங்களினால் அளிக்கப்படும் கடன் வசதிகள்.

(ஆ) நிறுவனங்களின் சார்பாகக் கொடுக்கப்பட்ட செயல் பொறுப்புறுதிகள்.

(இ) ஏற்றுமதிக் கடன் மற்றும் பொறுப்புறுதிக் கூட்டுறுவால் கொடுக்கப்பட்ட, கொடுக்கப்படும் கடன்கள்.

(ஈ) ரிசர்வ் வங்கியின் நிபந்தனைகளுக் குட்படாத கடன்

(உ) பழைய கடனைத் திருப்பிச் செலுத்தக் கொடுக்கப்படும் கடன்கள்.

இத் திட்டம், உற்பத்தி, பண்டங்களைப் பாதுகாத்தல் போன்ற பணிகளிலீடுபட்டுள்ள சிறு தொழில் நிறுவனங்களுக்குப் பொருந்தும். ஆனால், தொழில் நிறுவனத்தின் முதலீடு ரூ. 7½ இலட்சத்திற்குக் குறைவாக இருத்தல் வேண்டும். கடன் வசதி அளிக்கும் நிறுவனம், கடன் வசதி பெறும் சிறுதொழில் நிறுவனத் திடமிருந்து, அதனுடைய மூலதனம், முதலிய இதர விவரங்களைப் பெற்றுக்கொண்டு, அந் நிறுவனம் கடன் வசதிபெறத் தகுதி படைத்தது. அதாவது அதனுடைய மூலதனம் ரூ. 7½ இலட்சத் திற்குக் குறைவாக உள்ளது என்ற சான்றிதழ் ஒன்றினைப் பெற்றுக் கொள்ள வேண்டும். ஒரு தொழில் நிறுவனத்தின், கட்டடம், இயந்திரத் தளவாடங்களின் மதிப்பு ரூ. 7½ இலட்சத்திற்குக் கூடுதலாகி விடுமேயானால், அது சிறுதொழில் நிறுவனமாகக் கருதப்படுவதில்லை. எனவே, அத்தகைய நிறுவனம் இத் திட்டத்தின்கீழ் வருவதில்லை. கடனுதவி பெற்று வரும் தொழில்

நிறுவனம் வளர்ச்சிபெற்று அதன் இயந்திரத் தளவாடங்களின் மதிப்பு ரூ. 7½ இலட்சத்திற்கும் அதிகமாகுமானால், கடன் வசதி அளித்துவரும் வங்கி அல்லது இதர நிறுவனம், இதுபற்றிய விவரங்களை உடன் பொறுப்புறுதி அமைப்புக்குத் தெரியப் படுத்துதல் வேண்டும். அக் கடன் வசதி யளிக்கும் நிறுவனம், தொடர்ந்து அக் குறிப்பிட்ட தொழில் நிறுவனத்திற்குக் கடன்வசதி அளித்துவரலாம். ஆனால், அவ்வாறு கொடுக்கப்படும் கடனுக்குப் பொறுப்புறுதி அமைப்பு பொறுப்பினை ஏற்றுக்கொள்வதில்லை. அவ்வாறின்றி, அத் தொழில் நிறுவனத்திற்குக் கொடுத்த கடனுக்குப் பொறுப்புறுதி பெறவேண்டுமானால், கடன் வசதி அளித்த தொழில் நிறுவனம், அத் தொழில் நிறுவனம், சிறுதொழில் நிறுவனம் என்ற நிலையினை இழந்தபிறகு அதாவது, அந் நிறுவனத்தின் இயந்திர, தளவாடங்களின் மதிப்பு ரூ. 7½ இலட்சத்தினைத் தாண்டியபிறகு அதற்குக் கடன் வசதி அளிப்பதனை நிறுத்திவிட வேண்டும். அப்பொழுது அக் கடன் வசதி அளித்த வங்கியோ, வேறு நிறுவனமோ அத் தொழில் நிறுவனத்திற்கு அதுவரை கொடுத்த கடனுக்குப் பொறுப்புறுதி அமைப்பு பொறுப்பினை ஏற்றுக்கொள்கிறது.

இத் திட்டத்தின்படி, உற்பத்தி, பண்டங்களைப் பாதுகாத்தல், நிலக்கரி வெட்டி எடுத்தல் போன்ற நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள சிறுதொழில் நிறுவனங்களுக்குக் கடன்கொடுத்த நிறுவனங்களே பயன்பெற முடியும். இவ்வாறு தகுதிபெற்ற நிறுவனங்களுக்குக் கொடுக்கப்பட்ட கடன்பற்றிய விவரங்களை — அதாவது, நிறுவனத்தின் பெயர், ஈடுபட்டுள்ள தொழில், கடன் கொடுத்த தேதி போன்றவற்றை அவ்வப்பொழுது கடன் கொடுக்கும் நிறுவனம், பொறுப்புறுதி அமைப்புக்குத் தன் காலாண்டு அறிக்கையில் சேர்த்துக் குறிப்பிட்டு அனுப்புதல் வேண்டும். இவ்வாறு கடனைக் கொடுக்கப்பட்ட தொகைபற்றிய முழுவிவரங்கள் கொடுக்கப்பட்டால்தான் பொறுப்புறுதி அமைப்பு பொறுப்பினை ஏற்கும். பொறுப்புறுதி அமைப்பு இவ்வாறு பொறுப்புறுதி தருவதற்காகக் கடன் வழங்கும் நிறுவனங்களிட மிருந்து அவை ஒவ்வொன்றும் வழங்கிய கடன் தொகையில் ஒரு விழுக்காட்டில் பத்தில் ஒரு பங்கைக் கட்டணமாகத் திரட்டிக் கொள்கிறது.

கடன் வாங்கிய சிறுதொழில் நிறுவனம் கடன் தொகையைத் திரும்பச் செலுத்தத் தவறினால், பொறுப்புறுதி அமைப்பு அக் கடன் தொகையில் 75 விழுக்காடு அல்லது பொறுப்புறுதி கொடுத்த தொகை இதில் எது குறைவாக உள்ளதோ அத் தொகையினைக்

கடன்கொடுத்த நிறுவனத்திற்குச் செலுத்துகிறது. ஆனால், அவ்வாறு பொறுப்புறுதி அமைப்பிடமிருந்து பெறும் பொறுப்புத் தொகை ஒவ்வொரு நிறுவனத்தைப் பொறுத்தவரை ரூ. 7·5 இலட்சத்திற்கு மிகையாக இருத்தல் கூடாது. இந்த வரையறை நடைமுதலுக்குக் கொடுக்கப்பட்ட கடனுக்குமட்டுமே பொருந்தும். கடன்கொடுத்த நிறுவனம் சிறுதொழில் நிறுவனத்திற்குத் தவணைக் கடன் வழங்கி இருந்தால், அத் தவணைக் கடனுக்காக ஒவ்வொரு நிறுவனத்திற்கும் ரூ. 2·5 இலட்சம் வரை பொறுப்புறுதி உண்டு. பொறுப்புறுதி நிறுவனம், வங்கி போன்ற கடன் நிறுவனங்களால் அனுப்பப்படும் காலாண்டு அறிக்கைகள் எந்த அளவில் சரியாக உள்ளனவென்று சோதனை செய்தலுமுண்டு. பொறுப்புறுதி அமைப்பின் அலுவலர்கள் கடன் வழங்கும் நிறுவனங்களுக்கு நேரிடையாகச் சென்று எவ்வாறு இத் திட்டம் அவற்றுல் செயல் படுத்தப்பட்டு வருகிறது என்று ஆய்வு செய்வதுமுண்டு.

இத் திட்டத்தின் முக்கிய நோக்கம், கடன் நிறுவனங்கள் சிறுதொழில் நிறுவனங்களுக்குக் கடன் வசதி அளிப்பதன் மூலமாக நட்டமடைவதைத் தவிர்ப்பதேயாகும். இதன் காரணமாக நிதி நிறுவனங்கள் எவ்விதத் தடங்கலுமின்றிச் சிறுதொழில் நிறுவனங் களுக்குக் கடனுதவி அளிக்க முன்வரலாம். மேலும் கடன் விண்ணப்பங்கள் உடனுக்குடன் பரிசீலனை செய்யப்பட்டுக் கடன் தாமதமின்றி வழங்கப்படுகின்றது. இத் திட்டம் திறம்படச் செயல்படக் கடன் வழங்கும் நிறுவனங்கள் கீழ்க்காணும் நிபந்தனை களைப் பூர்த்தி செய்யவேண்டும்.

(அ) பொறுப்புறுதி அமைப்பு அவ்வப்பொழுது உருவாக்கும் விதிமுறைகளைக் கடன் வழங்கும் நிறுவனங்கள் கடைப்பிடிக்க வேண்டும்.

(ஆ) கடன்பெறும் சிறுதொழில் நிறுவனங்கள், இத் திட்டத் தின்படி கடன்பெறத் தகுதிபெற்றவைதானா என நன்கு உறுதிப் படுத்திக்கொண்ட பிறகுதான் அவற்றிற்குக் கடன் வழங்குதல் வேண்டும்.

(இ) பொறுப்புறுதி அமைப்புக் கடன் வழங்கும் நிறுவனங்கள் உரிய முறைப்படி, உரிய காலத்தில் காலாண்டு அறிக்கைகளை, அவை வழங்கிய கடன்களைப்பற்றிய விவரங்களைக் குறிப்பிட்டு அனுப்புதல் வேண்டும்.

(ஈ) பொறுப்புறுதி அமைப்புக்குக் கடன் வழங்கும் நிறுவனங்கள், குறிப்பிட்ட காலத்திற்குள் பொறுப்புறுதிக் கட்டணத்தைச் செலுத்துதல் வேண்டும்.

(உ) கடன்பெறும் சிறுதொழில் நிறுவனங்கள் கடன் வசதி அளிக்கும் நிறுவனங்களால் விதிக்கப்பட்ட நிபந்தனைகளைக் கடைப்பிடித்திருத்தல் வேண்டும்.

(ஊ) கடன்பெற விழையும் தொழில் நிறுவனத்தைப்பற்றிய முழு விவரங்களையும் நன்கு அலசி ஆராய்தல் வேண்டும். அந்நிறுவனம் உண்மையில் கடன் வசதிபெற விரும்புகிறதா என்றும், அக்கடன் தொகை உண்மையில் தொழில் நிறுவனத்தை வளர்க்கப் பயன்படுத்தப்படவிருக்கிறதா அல்லது மற்றொரு வங்கியில் வாங்கிய கடனைத் திருப்பிக்கொடுப்பதற்காகப் பயன்படுத்துவதற்காகவா என்றும் நன்கு அறிந்துகொள்ள வேண்டும். மேலும், அக் குறிப்பிட்ட நிறுவனம் எந்த ஒரு கடன் வழங்கும் நிறுவனத்திற்கும் கடன்பாக்கி கொடுக்கவேண்டியதில்லை என்பதையும் உறுதிப்படுத்திக் கொள்ளவேண்டும்.

(எ) பொறுப்புறுதியின்கீழ்க் கடன்பெற்ற தொழில் நிறுவனம் விதிமுறைகளைச் சரியாகக் கடைப்பிடிக்கா விட்டாலோ, தவணைப் பணத்தைச் சரியாகச் செலுத்தாவிட்டாலோ அது குறித்த விவரங்களை உடனுக்குடன் ஒப்புறுதி அமைப்புக்குத் தெரிவித்தல் வேண்டும்.

(ஏ) கடன்பெறும் நிறுவனங்கள், பொறுப்புறுதி அமைப்புக்கு அவற்றை ஆய்வு செய்யும் உரிமையினை வழங்குவதுடன்கூட, பொறுப்புறுதி அமைப்பு விரும்பும்போது தொழில் நிறுவனங்கள் தங்களுடைய நிதி அறிக்கைகளை அனுப்புதல் வேண்டும்.

(ஐ) கடனுக்காகத் தொழில் நிறுவனங்களிடமிருந்து பெற்ற பத்திரங்கள் காலாவதியாகாது பார்த்துக்கொள்ளுதல் வேண்டும்.

இத் திட்டம் போதிய முன்னேற்றத்தினைப் பெற்றுள்ளது எனக் கூறலாம். 1970ஆம் ஆண்டுவரை பொறுப்புறுதியின் கீழ் வழங்கப்பட்ட கடன் தொகை (தொழில் நிறுவனங்களால் செலுத்தப்படாமல் நிலுவையிலுள்ள தொகை) ரூ. 567 கோடியாகும். இந்நிறுவனம் 164 கடன் வகைகளைப் பொறுத்தவரை பொறுப்புறுதியினடிப்படையில் பொறுப்பினை ஏற்க வேண்டியிருந்தது.

சிறிய கடனுளிகளுக்குரிய பொறுப்புறுதித் திட்டம்: பதினான்கு வணிக வங்கிகள் நாட்டுடைமையாக்கப்பட்ட பிறகு சமூகக் கட்டுப்பாட்டு விதிகளினடிப்படையில் அவை சிறிய அளவில் கடன்பெற விழையும் நபர்களுக்குக் கடனுதவி அளிக்க ஆவன செய்ய விழைந்தன. இத் திட்டத்தினைச் செயலாக்கும் வகையில் மைய அரசு திரு. ஷர்லால்கர் (Thiru. Shirlalkar) தலைமையில் ஒரு

செயற்குழுவை நிறுவியது. மைய அரசு இக் குழுவின் பரிந்துரைகளில் ஒருசில மாற்றம் செய்து அவற்றை ஏற்றுச் செயல்படுத்த விழைந்தது. அக் குழுவின் பரிந்துரையின்படி 1971 ஆம் ஆண்டு சனவரி மாதம் 14ஆம் நாள் 'இந்தியக் கடன் பொறுப்புறுதிக் கூட்டுரு' (Credit Guarantee Corporation of India) நிறுவப்பட்டது. இக் கூட்டுரு 10 கோடி ரூபாய் அனுமதிக்கப்பட்ட முதலுடனும் 2 கோடி ரூபாய் செலுத்தப்பட்ட முதலுடனும் ஒரு பொதுச் கம்பெனியாக 'ரிசர்வ் வங்கியால்' தோற்றுவிக்கப்பட்டது. செலுத்தப்பட்ட முதலில் 60 விழுக்காடு ரிசர்வ் வங்கியாலும் எஞ்சிய 40 விழுக்காடு அட்டவணையிலிடப்பட்ட வங்கிகளாலும் செலுத்தப்பட்டுள்ளது. இக் கூட்டுரு ஓர் இயக்குநரவையால் மேலாண்மை செய்யப்பட்டு வருகின்றது. இயக்குநரவையில் மொத்தம் ஆறு உறுப்பினர்கள் உள்ளனர். அவர்களுள் இருவர் ரிசர்வ் வங்கியால் நியமிக்கப்படுகின்றனர், எஞ்சிய நால்வர் அட்டவணையிலிடப்பட்ட வங்கிகளால் நியமிக்கப்படுகின்றனர். இக் கூட்டுரு ஒரு கடன் பொறுப்புறுதித் திட்டத்தினைத் தீட்டி அதனை 1971 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் முதல்நாள் முதல் செயல்படுத்தி வருகின்றது. இத் திட்டத்தின்படி, அட்டவணையிலிடப்பட்ட வணிக வங்கிகள் மேலே குறிப்பிட்டுள்ள தேதிக்குப் பிறகு போக்குவரத்து நிறுவனங்கள், வேளாண்மையிலீடுபட்டுள்ள விவசாயிகள், தொழில் நிறுவனங்கள், சில்லரை விற்பனையாளர்கள் ஆகியவர்களுக்குக் கொடுத்த கடன் தொகைகளுக்கு இந்தியக் கடன் பொறுப்புறுதிக் கூட்டுரு, பொறுப்புறுதி வழங்கலாம்.

மேலே குறிப்பிட்டுள்ள திட்டப்படி கீழ்க்காணும் நபர்களும், நிறுவனங்களும் கடன் வசதிபெறத் தகுதி படைத்தவர்களாகக் கருதப்படுகின்றனர்.

(அ) போக்குவரத்து நிறுவனங்கள் : போக்குவரத்துத் தொழிலில் ஈடுபட்டுள்ள ஒரு நபர் அல்லது 6 நபர்களுக்குக் கூடுதலாகாத நபர்களைக் கொண்ட ஒரு சங்கம் இத் திட்டத்தின் கீழ்ச் செயலாற்றலாம். அந்த நபர், அல்லது அச் சங்கம், ரிக்ஷா, மாட்டுவண்டி, விசைப்படகு ஆகியவற்றைக் கொண்டுகூடப் போக்குவரத்துத் தொழிலில் ஈடுபட்டிருக்கலாம். ஆனால், முன்னரே வாடகைக்குப் போக்குவரத்துச் சாதனங்களைப் பெற்றுத் தொழில் நடத்துபவர்கள் இத் திட்டத்தின்கீழ் நிதிவசதி பெற இயலாது. பொதுவாக ரூ. 50,000-க்கு மேல் கடன்வசதி அளிக்கப்படுவதில்லை. இத் திட்டத்தின்கீழ்ப் போக்குவரத்து நிறுவனங்களுக்கு மூன்றரை ஆண்டுகள்வரை கடன் வசதிகள் வழங்கப்படுகின்றது. ஒருசில நிறுவனங்களுக்கு ஐந்தாண்டுக் காலம் வரைகூடக் கடன்வசதி அளிக்கப்படலாம்.

(ஆ) சில்லரை விற்பனையாளர்கள் : ஆண்டொன்றுக்கு ரூ.1 இலட்சத்திற்கு மிகையாகாது மொத்த விற்பனையுடைய தனியார் சில்லரை விற்பனை நிலையங்கள், விற்பனைக் கூட்டாண்மைகள், கூட்டுறவுச் சங்கங்கள் ஆகியவை கடன்பெறத் தகுதி படைத்தவை.

(இ) உர விற்பனையாளர்கள் : உரங்களை வாங்கி விற்பனை செய்யும் தனிநபர் வியாபாரி, கூட்டாண்மை நிறுவனம், கூட்டுறவு நிறுவனம் ஆகியவற்றிற்கும் இத் திட்டம் பொருந்தும். ஆனால், அந் நிறுவனங்கள் ஆண்டொன்றுக்குக் குறைந்தது ரூ. இரண்டு இலட்சத்திற்காவது வியாபாரம் செய்திருத்தல் வேண்டும். பொதுவாக, தனி நபர்களுக்கும், கூட்டாண்மை நிறுவனங்களுக்கும் 5 திங்கள் வரையிலும், கூட்டுறவு நிறுவனங்களுக்கு ஆறு திங்கள் வரையிலும் கடனுதவி அளிக்கப்படுகின்றன.

(ஈ) தாமே தொழில்புரிபவர்கள் : மருத்துவர்கள், வழக்கறிஞர்கள், தணிக்கையாளர்கள், பொறியாளர்கள் போன்ற தாமே தொழில்புரிபவர்கள் உரிய திறமையும், பட்டம் அல்லது போதிய கல்வித் தகுதியும் பெற்றிருப்பார்களேயானால் இத் திட்டத்தின்படி அவர்களும் கடன்பெற முடியும். மருத்துவ மனைகளைக்கொண்ட மருத்துவர்களுக்கு ரூ. ஓர் இலட்சம் வரையிலும், பொறியாளர்களுக்கு ரூ. 50,000 வரையிலும் இத் திட்டத்தின்கீழ்க் கடன் கொடுக்கலாம்.

(உ) வியாபார நிறுவனங்கள் : வியாபார நிறுவனங்களும் இத் திட்டத்தின்கீழ்க் கடன் வசதி பெறத் தகுதிபடைத்தவை.

(ஊ) விவசாயிகள் : விவசாயிகளுக்கு, பயிரிடவும், நிலச் சீர்திருத்தம் செய்யவும், காய்கறி உற்பத்தி செய்யவும் இத் திட்டத்தின்கீழ்க் கடன் வழங்கப்படுகிறது. வேளாண்மைக்காக விவசாயிகளுக்குக் கொடுக்கப்பட்ட கடனுக்கு ரூ. 1,000 வரை இத் திட்டத்தின்படி பொறுப்புறுதி உண்டு. ஆனால், கடனுக்குரிய காலம் 15 திங்களுக்குள் இருத்தல் வேண்டும். நிலச் சீர்திருத்தம், வேளாண்மைக்குரிய சாதனங்கள் வாங்குதல் ஆகியவற்றிற்காகக் கொடுக்கப்பட்ட கடன் தொகை ரூ. 5,000-க்குள் இருத்தல் வேண்டும். கடனுக்குரிய காலம் 5 ஆண்டுகளுக்கு மிகையாகாதிருத்தல் அடுத்ததொரு நிபந்தனையாகும்.

போக்குவரத்தில் ஈடுபட்டுள்ள நிறுவனங்கள், சொந்தமாகத் தொழிலில் ஈடுபட்டுள்ள பொறியாளர், மருத்துவர் போன்ற வல்லுநர்கள் வாங்கிச் செலுத்தத் தவறிய கடன் தொகையில் 75 விழுக்காடு வரையிலான தொகைக்கு இக் கூட்டுரு பொறுப்புறுதி

அளிக்கலாம். ஆனால், சில்லரை வியாபாரிகளைப் பொறுத்தவரை அவர்கள் செலுத்தத்தவறிய கடனில் 75 விழுக்காட்டுப் பகுதி அல்லது ரூ, 15,000 இதில் எது அதிகத் தொகையோ அதற்கு மட்டுமே இக் கூட்டுரு பொறுப்பாகும். இதுபோன்றே உர விற்பனையாளர்கள் செலுத்தத் தவறிய கடனில் 75 விழுக்காடு அல்லது ரூ. 30,000 இதில் எது மிகுதியோ அத் தொகைவரையில் மட்டுமே கூட்டுருவிற்குப் பொறுப்பாகும்.

இந் நிறுவனங்களுக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள பொறுப்புறுதிக் கட்டணம் சிறுதொழில் நிறுவனங்களுக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள பொறுப்புறுதிக் கட்டணத்தைவிடக் கூடுதலாகும். சிறுதொழில் நிறுவனங்களுக்குத் திரட்டப்படும் கட்டணம் கடன்பெற்ற நிறுவனங்கள் திரும்பச் செலுத்தவேண்டிய தொகையில் ஒரு விழுக்காட்டில் 1/10 பகுதியாகும். ஆனால், இதுபோன்ற நிறுவனங்களுக்குக் கொடுக்கப்படும் கடனுக்கும் பொறுப்புறுதி கொடுப்பதற்கு 1/2 விழுக்காடு பொறுப்புறுதிக் கட்டணம் பெறுகின்றது. ஒரு நிறுவனம் அதுபெற்ற கடனைத் திருப்பிச் செலுத்தத் தவறியதன் காரணமாகப் பொறுப்புறுதி கொடுத்ததன் அடிப்படையில் இக் கூட்டுரு கடனுதவி அளித்த வங்கி, அல்லது நிறுவனத்திற்கு உரிய தொகையினைச் செலுத்திவிட்டால் மீண்டும் அது கடன்பெற்ற நிறுவனத்தின்மீது வழக்குத் தொடுத்து அத் தொகையினைத் திரும்பப்பெறலாம்.

தவணைக் கடன் (Term Loan): தவணைக் கடன்முறை, வங்கிகளால் சமீபகாலத்தில் கண்டுபிடிக்கப்பட்ட ஒரு புதிய கடன் திட்டமாகும். இம் முறையின்கீழ் வணிக வங்கிகள் தொழில் நிறுவனங்களுக்கு அவை எதிர்காலத்தில் ஈட்டக்கூடிய வருவாயைப் பிணையமாகக்கொண்டு கடன் வசதிகள் அளிக்கின்றன. இத்தகைய கடனில் வங்கிகள் முதலீடு செய்தாலும், இம் முதலீடு எளிவரல் தன்மையினையோ மாற்றுமைத் தன்மையினையோ பெற்றிருக்கவில்லை. பொதுவாக இத்தகைய கடன்கள் ஓராண்டுக் காலம் முதல் பத்தாண்டுக் காலம் வரை வழங்கப்படுகின்றன. இவை தொழில் நிறுவனங்களை விரிவுபடுத்தும்பொருட்டு அவற்றிற்கு நிலை முதலாக அளிக்கப்படுகின்றன. இதுவரை இத்தகைய கடன் வசதிகள், தனியாகத் தோற்றுவிக்கப்பட்ட தொழில்நிதிக் கூட்டுரு (industrial Finance Corporation) போன்ற நிறுவனங்களால் அளிக்கப்பட்டு வந்தன. ஆனால், இன்று இத்தகைய கடனில் வணிக வங்கிகளும் பங்கு கொள்ளும் நிலை ஏற்பட்டுள்ளது. இத்தகைய கடன் வசதிகள் பெரும்பான்மையில் அமெரிக்க வணிக வங்கிகளாலேயே அளிக்கப்

பட்டு வந்தன. இன்று ஏனைய நாட்டு வணிக வங்கிகளும் இம் முறையினைக் கையாண்டு இவ் வகைக் கடன் வசதியினை அளித்து வருகின்றன. தவணைக் கடன், வளர்ச்சி வங்கியியல் முறை என்றும் அழைக்கப்படுகிறது.

சமீப காலமாகத் தொழில் நிறுவனங்கள் தவணைக் கடனுக்கு உரிய முக்கியத்துவம் கொடுத்து வருகின்றன. தொழில் நிறுவனங்களுடைய நிதித் தேவைகளை இருவகைகளாகப் பிரிக்கலாம். (அ) குறுகியகால நிதித் தேவை (ஆ) நீண்ட கால நிதித் தேவை ஆகியவையே அவை. குறுகிய கால நிதி தொழில் நிறுவனங்களின் நடை முதலுக்காகத் தேவைப்படுகிறது. இவ் வகை முதல், பங்குகள், கடன் பத்திரங்கள் வெளியிடுதல், வைப்புத்தொகை ஏற்றுக்கொள்ளுதல் ஆகியவை மூலம் திரட்டப் படுகின்றது. நீண்டகால நிதி, தொழில் நிறுவனங்களால், பங்குகள் வெளியிடுவதன் மூலமாகவும், கடன் பத்திரங்கள் வெளியிடுவதன் மூலமாகவும், தவணைக் கடன் மூலமாகவும் திரட்டப்படுகிறது.

வணிக வங்கிகளால், தொழில் நிறுவனங்களுக்குக் கொடுக்கப் படும் இத்தகைய கடனின் எளிவரல் தன்மை, கடன்பெறும் தொழில் நிறுவனங்கள் எதிர்காலத்தில் ஈட்டவிருக்கும் வருவாயைப் பொறுத்துள்ளது எனக் கூறலாம். அதாவது, கடன்பெறும் தொழில் நிறுவனம் எதிர்காலத்தில் எந்த அளவில் இலாபகர மாகவும், வெற்றிகரமாகவும் செயல்படவிருக்கிறது என்பதனைப் பொறுத்து அமையும் என்று கூறலாம். எனவே, இத்தகைய கடன் வழங்குவதற்குத் தனிப்பட்ட திறமை தேவைப்படுகிறது. கடன்பெறும் தொழில் நிறுவனத்தைப் பற்றிய முழு விவரங்கள் திரட்டப்பட வேண்டும். தொழில் நிறுவனத்தின் மேலாண்மைத் திறமையை மட்டும் அடிப்படையாகக்கொண்டு அதனுடைய இலாபத்தினையும், வெற்றிகரமான தொழிலினையும் கணக்கிட முடியாது. ஏனெனில், ஒருசில சந்தர்ப்பங்களில் வெளிப்புறக் காரணிகளாலும், ஒரு தொழில் நிறுவனத்தின் வருவாய் பாதிக்கப் படலாம். சுருங்கக் கூறின், இத்தகைய கடனின் எளிவரல் தன்மை, நாட்டின் பொருளாதார நிலையையும், பொதுமக்கள் அக்குறிப்பிட்ட நிறுவனத்தைத் தொடர்ந்து எந்த அளவிற்கு ஆதரிக்கிறார்கள் என்பதனையும் பொறுத்தே அமைகிறது.

மேற்குறிப்பிட்ட காரணங்களினால் பொதுவாக தவணைக் கடனை வணிக வங்கிகள் ஆதரிப்பதில்லை. இருப்பினும் பொதுவாகக் கருதப்படுகின்ற அளவிற்குத் தவணைக் கடன் எளிவரல் தன்மை யற்றதன்று. ஏனெனில், பொருளாதார மந்தம் தவணைக் கடன்களை

மட்டும் பாதிப்பதில்லை. குறுகிய காலக் கடன்களும் பொருளாதார ஏற்ற இறக்கத்தினால் பாதிக்கப்படலாம். எதிர்பாராவிதமாகப் பண்டங்களின் விலை குறையுமேயானால், வணிக வங்கிகள் தொழில் நிறுவனங்களுக்குக் கொடுத்த குறுகிய காலக் கடனைக் கூடத் திரும்பப் பெறுதல் இயலாது. எனவே, இதுபோன்றவற்றை வணிக வங்கிகளால், தவிர்த்தல் இயலாததாகும். குறுகிய காலக் கடன்கள்கூட மீண்டும் மீண்டும் புதுப்பிக்கப்பட்டு நீண்ட காலக் கடனாக மாற்றக் கூடும். எனவே, தவணைக் கடனில் ஒரு முக்கிய நன்மை உள்ளது. வங்கிக்கும், தொழில் நிறுவனத்திற்கும், நீண்ட காலத்திற்குக் கடன் கிடைப்பதினால் அவை திட்டமிட்டுச் செயலாற்ற வாய்ப்புள்ளது என்பதே அந்த நன்மையாகும்.

சிறிது காலத்திற்கு முன்னர்ப் பல நாடுகளில் பரவாதிருந்த தவணைக் கடன் முறை இன்று பல்வேறு நாடுகளில் நன்கு பரவி அந் நாடுகளின் வங்கிகளால் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. அமெரிக்க நாட்டில் இம் முறை ஏறத்தாழ 25 ஆண்டுகளாகக் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. 1930ஆம் ஆண்டில் இத்தகைய கடனை அமெரிக்க வங்கிகள் கொடுக்கத் தொடங்கின. பொதுவாக அவ் வங்கிகள் தவணைக் கடனை ஓராண்டுக்காலம் முதல் ஐந்தாண்டுக் காலம் வரை வழங்கினாலும், சில சமயங்களில் எட்டாண்டுகள் வரைகூடக் கடன் வழங்குவதுண்டு. 1941ஆம் ஆண்டு அமெரிக்க நாட்டின் வணிக வங்கிகளின் கடனில் ஏறத்தாழ மூன்றில் ஒரு பகுதி இத்தகைய கடனாகவே இருந்தது. 1957ஆம் ஆண்டு அது 38 விழுக்காடு என்ற நிலையினையும் 1960ஆம் ஆண்டு 55 விழுக்காடு என்ற நிலையினையும் இது எட்டியது.

தவணைக் கடனின் தன்மைகள்: தவணைக் கடனின் தன்மைகளைக் கீழ்க்கண்டவாறு பாகுபடுத்தி விளக்கலாம்.

(i) **நோக்கம்:** தொழில் நிறுவனங்களைப் புதிதாகத் தொடங்கவும், செயல்பட்டுவரும் தொழில் நிறுவனங்களை விரிவுபடுத்தவும் அவற்றில் புதியவகை இயந்திரசாதனங்களைப் பொருத்தவும் நீண்டகாலக் கடனும், இடைக்காலக் கடனும் தேவைப்படுகின்றன. இக் கடன்கள் கட்டடம் கட்டவும், இயந்திர சாதனங்கள் வாங்கவும் பயன்படுத்தப்படுகின்றன. எனவே, இவ்வாறு தொழில் நிறுவனங்களுக்கு நிரந்தரமாகத் தேவைப்படும் முதலில் ஒரு பகுதியினைத் தவணைக் கடன் மூலம் வணிக வங்கிகள் அளித்து வருகின்றன.

(ii) **பிணையங்கள்:** கடன்பெறும் நிறுவனங்கள் வாங்கியுள்ள அசையாச் சொத்துகள், வாங்கவிருக்கும் அசையாச் சொத்துகள்

ஆகியவை பிணையங்களாக ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. ஒருசில சந்தர்ப்பங்களில் ஒருசில நிறுவனங்களுக்கு 'மூல ஆவண அடைமானம்' வழியாகவும் (Eamitable Mortgage) இத்தகைய கடன் கொடுக்கப்படுவதுண்டு.

(iii) **கடன் காலம்:** தவணைக்கடன்தொகை சிறிது சிறிதாகக் கடன்பெறும் நிறுவனங்களால் திருப்பிச் செலுத்தப் படலாம். கடன் எட்டாண்டு முதல் பதினைந்தாண்டுக் காலம் வரை வழங்கப்படலாம். கடன்தொகை கடன்பெற்ற தொழில் நிறுவனத்தால் ஆண்டுத் தவணையாகவோ, அரையாண்டுத் தவணையாகவோ (Instalment) செலுத்தப்படலாம். தொழில் நிறுவனங்கள் ஒப்பந்தத்திற்கேற்றவாறு, கடன் வாங்கிய இரண்டு அல்லது மூன்றுண்டுகள் கழிந்தபின்னர்க் கடன்தொகையைத் திருப்பிச் செலுத்தத் தொடங்குகின்றன.

(iv) செயற்பாட்டுக் கட்டணம் (Commitment Charge): தொழில் நிறுவனத்தால் பயன்படுத்தப்பட்ட கடன்தொகைக்கு வட்டி திரட்டுவதுடன், கடன் கொடுக்கும் வங்கி, கடன்பெறும் நிறுவனத்திடமிருந்து அது பயன்படுத்தாத கடன் பகுதிக்கும், கடன் ஒப்பந்தம் எழுதிய தேதியிலிருந்து ஒரு விழுக்காடு வட்டி திரட்டுகிறது,

(v) **திட்டம் தழுவிய கடன்:** தவணைக் கடன், ஒரு குறிப்பிட்ட திட்டத்தினைத் தழுவியதாக இருத்தல் வேண்டும். அதாவது ஒரு நிறுவனம் ஒரு திட்டத்தினைத் தீட்டி இருப்பின் அத் திட்டத்தினைச் செயல்படுத்துவதற்காகத் தவணைக்கடன் வழங்கப்படும். இத்தகைய கடன், கடன்பெறும் தொழில் நிறுவனம் எதிர் காலத்தில் ஈட்டவிருக்கும் வருவாயைப் பிணையமாகக்கொண்டு கொடுக்கப்படுவதால், இத்தகைய கடன் வசதியினையளிக்கும் வங்கிகள் கடன் பெறும் நிறுவனங்கள் பெற்றுள்ள சொத்துகளின் எளிவரல் தன்மை குறித்து அதிகம் கவனம் செலுத்துவதில்லை. எனவே, தவணைக்கடன் வழங்கும் வங்கிகள் கடன்பெறும் தொழில் நிறுவனத்தின் திட்டம் சிறந்த திட்டந்தானென்றும், அத் திட்டம் இலாபகரமாகச் செயல்படுத்தப்படுமாவென்றும், கடன்பெறும் தொழில் நிறுவனம் கடன் தொகையை உரிய முறையில் திருப்பிச் செலுத்திவிடுமாவென்றும் நன்கு அறிந்து கொண்ட பிறகே கடன் வழங்குதல் வேண்டும்.

(vi) **மறுநிதி வசதி:** வணிக வங்கிகள், தொழில் நிறுவனங்களுக்கு வழங்கிய தவணைக் கடன்களின் அடிப்படையில், இந்தியத் தொழில்வள வங்கியிடமிருந்து (Industrial Development Bank of India) மறுநிதி வசதிகளைப் பெறலாம். எனவே, நடைமுறையில் வணிக வங்கிகள் தவணைக் கடன் வழங்குவதனால்

தங்களுடைய நிதியினை நீண்டகாலம் முடக்கி வைப்பதில்லை. இருப்பினும் தவணைக் கடன் வழங்குவதனால் ஏற்படும் நட்டத்தினைக் கடன் வழங்கும் வணிக வங்கிகளே ஏற்கவேண்டி வரும்.

(vii) கூட்டு வழங்கல்: பெரும் தொழில் நிறுவனங்கள் அதிக அளவு தவணைக் கடன் பெற விழைந்தால் அந்த முழுத் தொகையினையும் ஒரு வங்கியால் மட்டும் வழங்க இயலாது. எனவே, இதுபோன்ற சந்தர்ப்பங்களில் வங்கிகள், இந்தியத் தொழில் நிதிக் கூட்டுரு (Industrial finance corporation of India) இந்திய மாநில நிதிக் கூட்டுருக்கள் State Financial corporations of India) ஆயுள் காப்பீட்டுறுதி நிறுவனம் போன்ற இதர நிதிச் சிறப்பீட்டு நிறுவனங்களுடன் இணைந்து கூட்டாகத் தவணைக் கடன் வழங்குகின்றன. இவ்வாறு கூட்டாகக் கடன் வழங்கும் நிலையில் ஒவ்வொரு நிறுவனமும் எவ்வளவு கடன் அளிக்கவிருக்கின்றது என்பது முன்கூட்டியே தெளிவாக நிர்ணயிக்கப்படுகிறது.

(viii) தொடர் மேற்பார்வை: கடன் வழங்கும் வங்கிகள், கடன் பெறும் தொழில் நிறுவனங்களின் திட்டம் வெற்றிகரமாகச் செயல்படுத்தப்படுவதில் உரிய அக்கறை செலுத்துகின்றன. கடன் பெற்ற தொழில் நிறுவனங்களின் திட்டம் வெற்றிகரமாகச் செயல்படுத்தப்பட்டால்தான் வங்கிகள் தங்களுடைய கடன் தொகையைச் சிரமமின்றித் திரும்பப்பெற முடியுமென்பதே அதற்குரிய முதன்மைக் காரணமாகும். ஒரு சில சந்தர்ப்பங்களில் தவணைக் கடன் வழங்கும் நிதி நிறுவனம் கடன் பெறும் தொழில் நிறுவனம், கடன் தொகையையும், வட்டியையும் முழுமையாகச் செலுத்தும் வரை, அது ஒரு குறிப்பிட்ட விழுக்காட்டுக்குமேல் பங்காதாயம் செலுத்தக் கூடாதென்றதொரு வரையறையினையும் நிர்ணயிப்பதுண்டு. ஒரு சில நிதி நிறுவனங்கள், கடன்பெறும் தொழில் நிறுவனத்தின் நிருவாகத்திலும் பங்கு கொள்கின்றன.

தவணைக் கடனும் மறுநிதி வசதியும்: மறுநிதி வசதி இன்றி எந்த ஒரு நிதி நிறுவனமும், தொழில் நிறுவனங்களுக்கு நீண்ட காலக்கடன் வழங்க முடியாது. வணிக வங்கிகளைப் பொறுத்தவரை, குறுகிய கால வைப்புத்தொகை மூலம் திரட்டப்படும் தொகையை நீண்ட காலக்கடன் வழங்குவதன் மூலம் முடக்கி வைத்தல் இயலாததாகும். எனவே, மறுநிதி பெறும் வசதி இல்லையேல் வணிக வங்கிகள் தொழில் நிறுவனங்களுக்குக் கடன் வழங்க முன்வர மாட்டா. இந்நிலையினைத் தவிர்த்து, வணிக வங்கிகள் தொழில் நிதியில் பங்கு கொள்ளத் தூண்டும் முகத்தான் வேண்டி, நீண்ட காலத் தொழில் நிதி நிறுவனங்களுள் தலைமை நிறுவனமென்றழைக்கப்படும் இந்தியத் தொழில்வள வங்கி வணிக வங்கிகளுக்கு மறுநிதி வசதி அளித்து வருகிறது. இதன்படி

வணிகக் கடன் மூலம் தொழில் நிறுவனங்களுக்குக் கடன் வசதி அளித்த வணிக வங்கிகள் அதற்காக, இந்தியத் தொழில்வள வங்கியிடமிருந்து மறுநிதி வசதியினைப் பெறலாம்.

இந்தியத் தொழில்வள வங்கி, தொழில் நிறுவனங்களை வளர்ச்சிபெறச் செய்யுமுகத்தான் வேண்டி 1964ஆம் ஆண்டு ஜூலை மாதம் நிறுவப்பட்டது. இந் நிறுவனம் முழுவதும் இந்திய ரிசர்வ் வங்கியால் உடைமை கொள்ளப்பட்டுள்ளது. இந் நிறுவனம் கீழ்க்காணும் வகைகளில் தொழில் நிறுவனங்களுக்கு நிதிவசதிகளை அளித்து வருகின்றது :

(அ) தொழில் நிறுவனங்களுக்கு நேரிடையாக நிதி வழங்குதல்.

(ஆ) தொழில் நிறுவனங்களுக்குக் கடன் கொடுத்த வங்கிகளுக்கு மறு நிதிவசதி அளித்தல்.

(இ) மாற்றுச் சீட்டுகளைக் கழிவுசெய்து நிதிவசதி அளித்தல்;

(ஈ) பண்டங்களை வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் போது தொழில் நிறுவனங்களுக்குக் கடன் வழங்குதல்.

(உ) தொழில் நிறுவனங்கள் வெளியிடும் பங்குகள், கடன் பத்திரங்கள் ஆகியவற்றை வாங்குவதன் மூலம் நேரிடையாக நிதி வழங்குதல்.

மறுநிதித் திட்டம் : இந்தியத் தொழில் வளவங்கியின் மறு நிதித் திட்டம் கீழ்க்காணும் சிறப்புத் தன்மைகளைப் பெற்றுள்ளது:

(1) பொதுவாக, தவணைக் கடன் நிலைச் சொத்துகளை வாங்குவதற்காகக் கொடுக்கப்பட்டிருக்க வேண்டும். கொடுக்கப் பட்ட கடனில் ஒரு பகுதி நடைமுறை முதலாகக் கொடுக்கப் பட்டிருப்பின் அத் தொகைகூட மறுநிதி வசதிக்கு ஏற்றுக் கொள்ளப்படும். ஆனால், நடைமுறை முதலாகக் கொடுக்கப்பட்ட கடனும் நீண்டகாலக் கடனாக இருத்தல் வேண்டும்.

(2) குறைந்தது இரண்டு இலட்சம் ரூபாய் கடன் தொகைதான் மறுநிதி வசதியாகப் பெறும் தகுதி பெறுகின்றது. ஆனால், முன்னரே இந் நிறுவனத்தால் உதவி செய்யப்பட்டுவரும் திட்டத்தைப் பொறுத்தவரை இந்த விதி பொருந்தாது. அதாவது, வங்கியால் கொடுக்கப்பட்ட கடன் ரூ. 2 இலட்சத்திற்குக் குறைவாக இருப்பினும் அக் கடன் தொகைக்கு வங்கி மறுநிதி பயனைப் பெறலாம். கடன் பொறுப்புறுதித் திட்டத்தின்கீழ்ச் (Credit Guarantee Scheme) சிறுதொழில் நிறுவனங்களுக்குக் கொடுக்கப்

பட்ட கடனுக்குக் குறும அளவு ரூ. 10,000 ஆகவும், சிறு போக்கு வரத்துக் கம்பெனிகளுக்கு ரூ. 20,000 ஆகவும் நிர்ணயிக்கப் பட்டுள்ளது.

(3) மறு நிதிக்குக் கொண்டுவரப்படும் தவணைக் கடன் மூன்றாண்டுக் காலத்திற்குக் குறையாததாகவும், பத்தாண்டுக் காலத்திற்கு மிகாததாகவும் இருத்தல் வேண்டும்.

(4) சாதாரணமாக, தகுதியுடைக் கடன்களில் 80 விழுக்காடுவரை இந்தியத் தொழில்வள வங்கி மறுநிதி அளிக்கிறது. குறிப்பிட்டுள்ள பின்தங்கிய பகுதிகளில் தொடங்கப்பட்டுள்ள சிறுதொழில் நிறுவனங்களுக்குக் கொடுக்கப்பட்ட கடனில் ரூ. 20 இலட்சம் வரையிலும் இதர பகுதிகளிலுள்ள சிறுதொழில் நிறுவனங் களுக்குக் கொடுக்கப்பட்ட கடனுக்கு ரூ. ஐந்து இலட்சம் வரையிலும் இந்தியத் தொழில் வளவங்கி 100 விழுக்காடுவரை மறுநிதி வழங்குகிறது. ஆனால், இச் சிறுதொழில் நிறுவனங் களுக்குக் கொடுக்கப்பட்ட கடன்கள் கடன் பொறுப்புறுதித் திட்டத்திற்குட்பட்டிருத்தல் வேண்டும். அவ்வாறு அத் திட்டத்திற்குட்பட்டிராத கடன்கள் 100 விழுக்காடு மறுநிதி வசதி பெறத் தகுதி படைத்தவையாகக் கருதப்படமாட்டா.

(5) கடன் கொடுக்கும் வங்கிகள், தொழில் நிறுவனங்களிட மிருந்து திரட்டும் வட்டி வீதம் 10·5 விழுக்காட்டிற்கு மிகுதியாக இருத்தல் கூடாது எனும் நிபந்தனையுடன் இந்தியத் தொழில்வள வங்கி அந் நிறுவனங்களுக்கு 7 விழுக்காடு வட்டி வீதத்தில் மறு நிதிவசதி யளிக்கின்றது. கடன் பொறுப்புறுதித் திட்டத் தின்கீழ் இயங்கிவரும் சிறுதொழில் நிறுவனங்களுக்குக் கொடுக்கப் பட்ட கடனைப் பொறுத்தவரை ரூ. 25,000 வரை கடன் கொடுத்த நிறுவனங்கள் அல்லது வங்கிகள் அச் சிறுதொழில் நிறுவனங்களிட மிருந்து 8·5 விழுக்காட்டிற்கு மேல் வட்டி திரட்டலாகாது என்னும் நிபந்தனையுடன் அக் கடன்களுக்கு 5 விழுக்காடு வீதத்தில் மறுநிதி வழங்குகிறது. ரூ. 25,000-க்கு மேற்பட்ட கடனுக்கு 5·5 விழுக்காடு மறுநிதி வட்டி வீதமாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில், கடன் கொடுக்கும் நிறுவனங்கள் கடன்பெறும் தொழில் நிறுவனங்களிடமிருந்து 9 விழுக்காட்டுக்கு மேல் வட்டி திரட்டுதல் கூடாது. பின்தங்கிய பகுதிகளிலுள்ள சிறுதொழில் நிறுவனங்களுக்குத் தவணைக் கடன் வழங்கும் வங்கிகள் 7·5 விழுக்காட்டுக்கு மேல் வட்டி திரட்டாதிருப்பின், அவை 4 விழுக்காடு வட்டி வீதத்தில் இந்தியத் தொழில்வள வங்கியிட மிருந்து கடன்பெறும் தகுதியினைப் பெறுகின்றன.

(6) தொழில்வள வங்கி, பின்தங்கிய பகுதிகளிலுள்ள தொழில் நிறுவனங்களுக்குக் கீழ்க்காணும் சலுகைகளுடன் ஒரு வங்கி கடன் வழங்கி இருப்பின், அவ் வங்கிக்கும் அச் சலுகைகளை அளிக்கின்றது:

(அ) செயற்பாட்டுக் கட்டணம் விதிக்காமல் இருத்தல்.

(ஆ) கடனைத் திருப்பிச்செலுத்த நீண்டகாலத் தவணை அளித்தல்.

(இ) முதல், இரண்டு, மூன்று ஆண்டுகளுக்குக் கடன் தொகையைத் (கடன் தவணைத் தொகையை) திருப்பிச் செலுத்த வேண்டாமென்ற சலுகையினை அளித்தல்.

(ஈ) ஆரம்ப காலத்தில் வட்டித்தொகை திரட்டுவதைத் தள்ளிவைத்தல்.

(7) கடன் வழங்கிய நிறுவனங்களுக்கு நிதிவசதியளித்தலே மறுநிதித் திட்டத்தின் குறிக்கோளாதலின், கடன் வழங்கிய நிறுவனங்கள் உரிய முறையில், மறுநிதி வசதி கேட்டு இந்தியத் தொழில்வள வங்கிக்கு விண்ணப்பித்தல் வேண்டும்.

தவணைக் கடன் விண்ணப்பங்களை மதிப்பீடு செய்தல்: தவணைக்கடன், குறுகிய காலக்கடனினின்றும் மாறுபட்டதாகும். தவணைக்கடன்கள் பொதுவாகப் புதிய நிறுவனம் தொடங்கவும், செயல்பட்டு வரும் நிறுவனத்தை விரிவு படுத்தவும் நீண்ட காலத்திற்கு வழங்கப்படுகின்றன. எனவே, இத்தகைய கடனில் இழப்பு வாய்ப்பு மிகுந்து காணப்படுகின்றது. இத்தகைய கடன்கள் சொத்துகளை விற்றுத்திருப்பி அடைக்கப்படுவதில்லை. கடன் பெற்ற நிறுவனம், அதனை நிலைப்படுத்திக்கொண்டு அதன்மூலம் வருவாயைப் பெருக்கி, அவ் வருவாயினைக்கொண்டு கடனைத் திருப்பிச் செலுத்த வேண்டுமென்பதே இத்தகைய கடனின் உட்கருத்தாகும். எனவே, தொழில் நிறுவனங்களுக்குத் தவணைக் கடன் வழங்கும் வங்கி அக் கடனைப்பெறும் தொழில் நிறுவனம், அக் கடன் மூலம் வளர்ச்சிபெற்று எதிர்காலத்தில் அதனுடைய இலாபத்தினை அது கணக்கிட்டுள்ளபடி பெருக்கிக் கொள்ள வாய்ப்புள்ளதா என்பதனை உறுதிப்படுத்திக் கொண்ட பிறகே கடன் தொகையினை வழங்குதல் வேண்டும். எனவே, மறுநிதி பெற விழைந்தாலும், விழையாவிட்டாலும் தவணைக் கடன் வழங்கும் வங்கி அல்லது இதர நிதி நிறுவனம், கடன்பெற விரும்பும் தொழில் நிறுவனத்தைப் பற்றிய முழு விவரங்களை அது தீட்டியுள்ள திட்டம், அதனுடைய உற்பத்தித்திறன், எதிர்பார்க்கும்

மொத்த விற்பனை போன்றவற்றை அறிந்து கொள்ளுதல் மிக அவசியமாகும்.

பொதுவாக, கடன்பெற விழையும் தொழில் நிறுவனத்தின் தொழில் நுணுக்கம், பொருளாதார நிலை, மேலாண்மைத்திறன், நிதிநிலை ஆகியவற்றைக் கடன் கொடுக்கும் நிதி நிறுவனம் அலசி ஆராய்ந்து தவணைக்கடன் வழங்குவதா இல்லையா என்ற முடிவினை எடுக்கின்றது.

(அ) செயல் படுத்தக்கூடிய தொழில் நுட்பம் : தொழில் நிறுவனத்தால் தீட்டப்பட்ட திட்டம் செயல்படுத்தக் கூடிய தொழில் நுட்பம் கொண்டதாக இருத்தல் வேண்டும். தீட்டப்பட்ட திட்டம் செயல்படுத்த முடியாத ஏட்டளவுத் திட்டமாக இருப்பின் பயனெதுவுமில்லை. எனவே, கடன் கொடுக்கும் வங்கியோ, இதர நிதி நிறுவனமோ கீழ்க்காணும் நிறுவனத்தின் உற்பத்தித் திறனைப் பற்றிய விவரங்களை ஆய்வு செய்கிறது:

(i) திட்டத்திலுள்ள தொழில் நுணுக்கம் இந்தியாவில் செயல் படுத்த முடியுமா என அறிந்து கொள்ளுதல் வேண்டும்.

(ii) தொழில் நிறுவனம், கச்சாப்பொருள்கள், தண்ணீர், உற்பத்தித்திறன் ஆகியவை கிடைக்கக்கூடிய இடத்தில் நிறுவப்பட்டிருத்தல் வேண்டும்.

(iii) இயந்திர சாதனங்கள் போதிய அளவில் உள்ளனவா வென்று அறிந்து கொள்ளுதல் வேண்டும்.

(iv) பணியாளர்களுக்கு உரிய பயிற்சியளிக்கப் போதிய வசதி இருத்தல் வேண்டும்.

(v) தொழில் நிறுவனம் சிறந்த அமைப்பினைக்கொண்டதாக இருத்தல் வேண்டும்.

(vi) தொழில் நிறுவனத்தின் கழிவுப் பொருள்களை வெளியேற்றவும் துணை உற்பத்திகளை உரிய முறையில் பயன்படுத்தவும் போதிய வசதிகளை அத் தொழில் நிறுவனம் பெற்றிருத்தல் வேண்டும்.

(vii) தொழில் நிறுவனம் சிறந்த கட்டட வசதிகளைப் பெற்றிருத்தல் வேண்டும்.

(ஆ) நாட்டு வளம் பெருக்கக் கூடிய தன்மை : குறிப்பிட்ட தொழில் நிறுவனம் போதிய அளவில், சிக்கனமாகப் பண்டங்களை உற்பத்தி செய்து குறைந்த விலையில் நுகர்வோர்களுக்கு அப் பண்டங்களை விற்பனை செய்து அதன்வழி நாட்டின் தொழிலை

வளர்ச்சியுறச் செய்ய வேண்டிய வாய்ப்பினைப் பெற்றிருத்தல் வேண்டும். அந் நிறுவனம், வளர்ந்து பண்டங்களை ஏற்றுமதி செய்து அதன் காரணமாகப் போதிய வேலை வாய்ப்பினைக் கொடுக்கும் தன்மையினைப் பெற்றிருத்தல் வேண்டும்.

(இ) மேலாண்மைத் திறன்: தொழில் நிறுவனத்தின் வெற்றியும் இலாபமீட்டுதலும் அந் நிறுவனத்தின் மேலாண்மைத் திறனைப் பொறுத்தேயுள்ளது என்க்கூறலாம். எனவே, அந் நிறுவனத்தின் இயக்குநரவை நல்ல திறமை படைத்த இயக்குநர்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(ஈ) போதிய நிதி கொண்டிருத்தல்: ஒரு திட்டத்தின் வெற்றி அத் திட்டத்தினைச் செயல்படுத்த அக்குறிப்பிட்ட தொழில் நிறுவனம் போதிய நிதி வசதியினைப் பெற்றிருத்தல் வேண்டும். எனவே, தவணைக் கடனளிப்பதற்கு முன்னர், கடன் வழங்கும் வங்கி, அக்குறிப்பிட்ட தொழில் நிறுவனத்தின் நிதி நிலையினைக் கீழ்க்காணும் தன்மைகளினடிப்படையில் ஆழ்ந்து கவனிக்கிறது:

(i) தொழில் நிறுவனம், குறிப்பிட்ட திட்டத்திற்குரிய எல்லாச் செலவினங்களையும் கணக்கிட்டுக்கொண்டதா வென அறிந்துகொள்ளுதல்.

(ii) திட்டத்தினைச் செயல்படுத்தத் தேவைப்படுவதாகக் கணக்கிடப்பட்ட நிதி போதுமானதா என நிர்ணயித்தல்.

(iii) தீட்டப்பட்ட திட்டம் எந்த அளவிற்கு, அக்குறிப்பிட்ட தொழில் நிறுவனத்தின் உற்பத்தியையும், மொத்த விற்பனையையும் பெருக்க வாய்ப்பளிக்கும் என அறிந்து கொள்ளுதல்.

கொடுக்கப்பட்ட கடன் எத்தனை தவணைகளில் திருப்பிச் செலுத்தப்பட வேண்டும், முதல் தவணை எப்பொழுது செலுத்தப் படவேண்டும் போன்றவை, கடன்பெறும் தொழில் நிறுவனம் எதிர்பார்க்கும் உற்பத்திப் பெருக்கம். வருவாய்ப் பெருக்கம் ஆகியவற்றின் அடிப்படையில் நிர்ணயிக்கப்படுகின்றது. கடன்பெறும் நிறுவனத்தின் ஒரு குறிப்பிட்ட கால நிதி நிலையினைக் கடனளிக்கும் நிதி நிறுவனம் மதிப்பீடு செய்கிறது. எனவே, கடன் வழங்கும் நிறுவனம், தொழில் நிறுவனத்திடமிருந்து அதனுடைய பல்வேறு அறிக்கைகளைப் பெற்றுத் திட்டத்தின் மதிப்பு, எதிர்பார்க்கப்படும் இலாபம் ஆகிய விவரங்களை நன்கு அறிந்துகொண்ட பிறகு கடன் கொடுப்பதா வேண்டாமா என

முடிவு செய்கிறது. திட்டத்தின் மதிப்பினைக் கணக்கிடும்போது, திட்டத்தினைச் செயல்படுத்துவதற்குரிய கட்டடத்திற்காகும் செலவு, இயந்திரம் வாங்குவதற்கான செலவு ஆகியவை கணக்கிடப்படுகின்றன. எந்தெந்த வழிகளில் தேவைப்படும் முதல் திரட்டப்படவிருக்கின்றது என்றும் நிர்ணயிக்கப்படுகின்றது. சாதாரணமாக நடைமுறையில், பங்குகள் வெளியிடுதல், கடன் பத்திரங்கள் வெளியிடுதல், காப்புநிதி பயன்படுத்துதல் ஆகியவை நிதிதிரட்டக் கடைப்பிடிக்கப்படும் முறைகளாகும். இவ் விவரங்களின் அடிப்படையில், ஒரு வங்கியோ, வேறு நிதி நிறுவனமோ ஒரு குறிப்பிட்ட தொழில் நிறுவனத்திற்குக் கடன் கொடுப்பது உகந்ததா அல்லது முறையற்றதா வென முடிவு செய்கின்றது.

இந்தியாவில் தவணைக் கடன் : வெளி நாடுகளை ஒப்பிடுமிடத்து, இந்தியாவில், தவணைக் கடனின் முக்கியத்துவத்தை வங்கிகளோ, தொழில் நிறுவனங்களோ, உணர்ந்ததாகத் தெரியவில்லை. எனவே, நமது நாட்டில் பிற நாடுகளைப் போன்று இவ்வகையான கடன் அவ்வளவாக வழக்கிலில்லை. நாம் முன்னரே குறிப்பிட்டபடி வணிகவங்கிகள், தொழில் நிறுவனங்களுக்குக் கொடுக்கும் குறுகிய காலக்கடனைப் புதுப்பிப்பதன் வழி நீண்டகாலக் கடனின் பயனை, அவற்றிற்கு அளிக்கின்றன. இருப்பினும், குறைந்த வீத வட்டி, தடையற்ற முதலீட்டு வாய்ப்பு போன்ற தவணைக் கடனின் பயன்கள், குறுகிய காலக் கடன்களைப் புதுப்பிப்பதனால் கிடைப்பதில்லை. எனவே, இந்திய வணிக வங்கிகளும் இப்பொழுது தவணைக் கடன் முறையினை வழக்குக்குக் கொண்டுவர ஆவன செய்து வருகின்றன. வைப்புக் காப்புறுதித் திட்டம் செயல் படுத்தப்பட்ட இந்நிலையில் வணிக வங்கிகள் எவ்வித அச்சமுமின்றித் தவணைக்கடன் வழங்க முன்வரலாமென்பது பல வல்லுநர்களின் கருத்தாகும். வைப்புக் காப்புறுதித் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டபின்னரே அமெரிக்காவில் கூடத் தவணைக் கடன் முறை பெருமளவில் வழக்குக்கு வந்ததென்று கூறலாம்.

இருப்பினும் இந்தியாவைப் பொறுத்தவரை இவ்வகைக் கடனை எல்லா வங்கிகளும் வழங்க வேண்டுமென்று குறிப்பிடுதல் சரியானதன்று. தவணைக் கடன் வழங்கச் சில சிறப்பு வசதிகள் தேவைப்படுகின்றன. எனவே, போதிய நிதிவசதியினையும், திறமைமிக்க அலுவலர்களையும் கொண்ட வங்கிகள் மட்டுமே தவணைக்கடன் முறை மூலம் கடன் வழங்க முடியும். மேலும், தவணைக் கடன் பெருமளவில் வழக்கில் வருவது எந்த அளவிற்கு இந்திய வணிக வங்கிகள் வைப்புத்தொகை திரட்டுகின்றன

என்பதனையும் பொறுத்துள்ளது. இது குறித்துத் தவணைக் கடன் மதிப்பீட்டுச் செயற்குழு (Working Group on the Appraisal of Term loans) கீழ்க்காணும் கருத்துகளைத் தெரிவித்துள்ளது. எதிர்பாராவகையில், வாடிக்கைக்காரர்கள் வங்கிகளிடமிருந்து வைப்புத்தொகையினைத் திரும்பப்பெற விழையும் நிலையில், வணிக வங்கிகள், பலவிதமான முயற்சிகளின் மூலம் தங்களுடைய வைப்புத்தொகையினைப் பெருக்கிக் கொண்டாலன்றித் தொழில் நிறுவனங்களுக்குத் தவணைக்கடன் வழங்க இயலாது. எனவே, உரிய நடவடிக்கைகள் எடுப்பதன்வழி இந்திய வணிக வங்கிகள் தவணைக்கடன் முறையினை வழக்குக்குக் கொண்டுவர ஆவன செய்தல் வேண்டும். தவணைக்கடன் மூலமே, ஒருசில தொழில் நிறுவனங்களால் தீட்டப்பட்டுள்ள திட்டங்களைச் செயல்படுத்தி நாட்டின் தொழில் வளத்தைப் பெருக்க முடியும். மேலும், ஒரு நிறுவனத்திற்கு அதிக அளவு கடன் கொடுப்பதன்வழி வங்கி தனது பணி அளவைக் குறைத்துக்கொள்ள முடிகிறது.

இந்திய வங்கியர் கருத்தரங்கின் பரிந்துரைகள்: 1962ஆம் ஆண்டு சூலை 1ஆம் தேதி இந்திய வங்கியர் சங்கம் ஒரு கருத்தரங்கை நடத்தியது. அக் கருத்தரங்கில், தவணைக் கடன் பற்றி விவாதிக்கப்பட்டு, வங்கிகள், இந்தியத் தொழில் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருக்கவேண்டுமென்றும், அவை தொழில் நிறுவனங்களுக்குத் தவணைக் கடன் தாராளமாக வழங்கவேண்டுமென்றும் கருத்துத் தெரிவிக்கப்பட்டது. மைய அரசு கீழ்க்காணும் நடவடிக்கைகளை எடுப்பதன்மூலம் வணிக வங்கிகளைத் தவணைக் கடன் வழங்குமாறு ஊக்குவிக்கலாமென்றும் கருத்துத் தெரிவிக்கப்பட்டது. அவையாவன :

(அ) வணிக வங்கிகள் தவணைக் கடன் வழங்குவதன்மூலம் ஈட்டும் இலாபத்தில் பத்து விழுக்காட்டுப் பகுதித் தொகைக்கு வருமானவரி விலக்களிக்கலாம்.

(ஆ) மறுநிதி வழங்கும் திட்டம் மேலும் எளிமையாக்கப்பட்டுக் கடன் வழங்கிய வங்கி, மறு நிதியினைக் கடன் வழங்கப்பட்ட ஓராண்டுக்குள்தான் பெறவேண்டும் என்ற நிபந்தனையின்றி அவ்வசதியினைக் கடன் வழங்கிய நிறுவனம் எப்பொழுது கேட்டாலும் அளிக்கலாம்.

(இ) இந்திய மைய வங்கியான ரிசர்வ் வங்கியால் செயல்படுத்தப்பட்டுவரும், சிறுதொழில் நிறுவனங்களுக்கான கடன் பொறுப்புறுதித் திட்டத்தினை நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கும் பொருந்தும் வகையில் விரிவுபடுத்த வேண்டும்.

(ஈ) 1951ஆம் ஆண்டு தொழில்வள ஒழுங்காற்றுச் சட்டத்தின் (Industries Development & Regulations Act) 15 (அ) பிரிவின்படி ஒரு தொழில் நிறுவனத்தின் மேலாண்மைப் பொறுப்பினை இந்தியத் தொழில்வள வங்கி ஏற்றுக்கொள்ள வேண்டிய நிலையில், அந்த நிறுவனத்தை மேலாண்மை செய்யும் பொருட்டு ஓர் அரசுச் சார்பாளரைப் பணியிலமர்த்துவதைவிட, கடன் வழங்கிய நிறுவனத்தின் சார்பாளர் ஒருவரையும் உறுப்பினராகக் கொண்ட குழு ஒன்றினை நியமித்தல் சாலச் சிறந்தது.

(உ) தொழில் நிறுவனங்களுக்குக் கடன் வசதி அளிப்பதனால் எந்த ஒரு வங்கிக்கும் நட்டம் ஏற்படுமேயானால் அதில் ஒரு பகுதியினைக் கடன்பெற்ற தொழில் நிறுவனம் செயல்பட்டுவரும் மாநில அரசு ஏற்றுக்கொள்ளுதல் வேண்டும். அவ்வாறு ஏற்றுக் கொள்வதன்மூலம், வணிக வங்கிகளைத் தொழில் நிறுவனங்களுக்குக் கடன் கொடுக்குமாறு ஊக்குவித்துத் தொழில் வளர்ச்சிக்கு வழி வகுக்கலாம்.

(ஊ) ஒப்பந்தத்தை மீறிய நிலையிலோ, வாங்கிய கடனைத் தொழில் நிறுவனம் திரும்பச் செலுத்தாத நிலையிலோ, தொழில் நிதிக் கூட்டுருச் சட்டத்தின் 30வது பிரிவுப்படி அந்த நிறுவனத்திற்குக் கொடுக்கப்படும் பாதுகாப்பினைத் தொழில் நிறுவனங்களுக்குத் தவணைக் கடன் வழங்கும் வணிக வங்கிகளுக்கு கொடுக்கவேண்டும்.

தவணைக் கடன் குறித்த விவரங்கள் நன்கு தெரியவில்லையாதலின், அதுகுறித்த விவரங்களை உரிய முறையில் திரட்ட முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டுமென்றும் அக் கருத்தரங்கு கருத்துத் தெரிவித்தது.

தவணைக்கடன் எளிவரல் தன்மை கொண்டதா?

தவணைக் கடன் எளிவரல் தன்மைகொண்டதா என்பது குறித்து ஐயப்பாடு இருந்துவருகிறது. எந்த ஒரு முதலீட்டினை அதாவது சொத்தினை, உடன், நட்டமெதுவுமின்றி ரொக்கமாக மாற்றமுடியுமோ அச் சொத்து எளிவரல் தன்மை கொண்டுள்ளது எனக் கூறுகிறோம். நீண்டகாலக் கடன், இடைக்காலக் கடன் ஆகியவற்றினை வெளி நிறுவனம் ஒன்றுக்கு மாற்றமுடியுமானால் அத்தகைய கடன்களும் எளிவரல் தன்மை கொண்டவையேயாகும். இது குறித்த, தவணைக்கடன் மதிப்பீட்டுச் செயற்குழுவின் கருத்தினை இங்குக் குறிப்பிடலாம். ஒரு நாட்டின் மைய வங்கி அந்த நாட்டு வணிக வங்கிகளுக்கு, அவை வழங்கிய

இடைக்காலக் கடன்களின்மீது கடன் வழங்கினால், அத்தகைய கடன்களும் எளிவரல் தன்மை கொண்டவை என்று கூறலாம். அமெரிக்க நாட்டைப் பொறுத்தவரை ஐக்கிய காப்பு வங்கிகள் (Federal Reserve Banks) தங்களுடைய உறுப்பினர் வங்கிகளுக்கு இவ்வகை வசதியினை அளிக்கின்றன. இதுபோன்றே இந்தியாவிலும், தவணைக் கடன் வழங்கிய நிதி நிறுவனங்கள் அக் கடன்களை இந்தியத் தொழில்வள வங்கிக்கு மாற்றிக்கொடுப்பதன் மூலம் மறுநிதி வசதிபெற வாய்ப்புள்ளது. சமீப காலத்தில், ஒரு குறிப்பிட்ட திட்டத்திற்கு இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட நிதி நிறுவனங்கள் கூட்டாகக் கடன் வழங்கினாலும் அத் திட்டமும் மறுநிதி வசதிக்குட்பட்டது என, அதாவது அத் திட்டத்திற்குக் கூட்டாகக் கடன் வழங்கிய நிதி நிறுவனங்கள் மறுநிதி வசதிபெற முடியுமென முடிவு செய்யப்பட்டது.

1968ஆம் ஆண்டு சூலை மாதம் நிறுவப்பட்ட வேளாண்மை மறுநிதிக் கூட்டுறு வேளாண்மைக் கடனுக்கு ஓர் ஊக்குவிப்பாக அமைந்துள்ளது. இக் கூட்டுறுவின் முக்கியபணி, வேளாண்மை, கால்நடைப் பராமரிப்பு, கோழியின வளர்ப்புப் பண்ணை ஆகிய வற்றிற்குக் கடனுதவி அளித்த வணிக வங்கிகளுக்கு மறுநிதி வசதியளிப்பதாகும்.

தவணைக் கடனும், சிறு தொழில் நிறுவனங்களும் : இந்தியாவைப் பொறுத்தவரை சிறு தொழில் நிறுவனங்கள் மிக முக்கிய இடத்தினைப் பெற்றிருப்பினும், இந்திய வணிக வங்கிகள் அதனை உணர்ந்துகொண்டதாகத் தெரியவில்லை. எனவே, அவை அச் சிறுதொழில் நிறுவனங்களுக்குப் போதிய கடன் வசதி அளிப்பதில்லை. ஆனால், இந் நிலைக்கு வணிக வங்கிகளை மட்டும் குறை கூறுவது பொருளற்றதாகும். ஏனெனில், கடன் பெற விழையும் சிறு தொழில் நிறுவனங்களே சில குறைபாடுகளைக் கொண்டுள்ளன. அவற்றுள் முக்கியமானவையாவன :

(1) அவை, தங்களுடைய உண்மை நிலையை வங்கி களுக்குத் தெரிவிப்பதில்லை. அதாவது அவற்றினுடைய மொத்த விற்பனை, ஈட்டும் இலாபம் போன்ற விவரங்களை வங்கிகளுக்குத் தருவதில்லை.

(2) வங்கிகள் ஏற்றுக்கொள்ளும் வகையிலான பிணையங்களை அளிப்பதில்லை.

(3) சிறு தொழில் நிறுவனங்கள், தொழிற் சிறப்பீடுபாட்டுக் கோட்பாட்டினைக் கடைப்பிடிப்பதில்லை.

(4) சில வகைப் பண்டங்கள் உற்பத்தி செய்வதற்குத் தேவையான இயந்திர சாதனங்கள் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்ய முடிவதில்லை.

(5) போதிய மேலாண்மைத் திறன் பெற்றிருக்கவில்லை.

(6) தொழில் நிறுவனங்களுக்குத் தேவையான போக்குவரத்து வசதிகளில்லை.

(7) உற்பத்திக்குத் தேவையான மின்சார சக்தியோ, இதர வகைச் சக்தியோ போதிய அளவில் கிடைப்பதில்லை.

(8) பல்வேறு நிறுவனங்களுக்கிடையே ஒற்றுமையின்றிப் போட்டியும் பொறாமையும் நிலவுகின்றன.

(9) இத்தகைய நிறுவனங்களின் கணக்குகள், உரிய முறையில் கட்டாயமாகத் தணிக்கை செய்யப்படுவதில்லை. எனவே, இவை செய்யும் தவறுகள் கண்டுபிடிக்கப்படுவதில்லை.

மேற்குறிப்பிட்ட காரணங்களினாலும், கடன் வசதியளிக்கும் வங்கிகளுக்குத் தேவைப்படும் விவரங்களைத் தொழில் நிறுவனங்கள் கொடுக்க முடியாததாலும், இந்தியத் தொழில் நிறுவனங்கள் வணிக வங்கிகளிடமிருந்து பெருமளவில் தவணைக்கடன் பெறுவதில்லை அல்லது பெற முடிவதில்லை.

இக் குறைபாடுகளைக் களைந்து வணிக வங்கிகள் எளிய முறையில் தவணைக்கடன் வழங்கும் வகையில், தவணைக் கடன் மதிப்பீட்டுச் செயற்குழு கீழ்க்காணும் கருத்துரைகளை வழங்கியுள்ளது :

(1) கடன் வழங்கும் நிதி நிறுவனங்கள் கடன் பெற விழையும் தொழில் நிறுவனங்கள் அளிக்கக் கூடிய பிணையங்களின் தன்மைகளை மட்டும் கருதாது, தொழில் நிறுவனங்களின் தன்மை, அவை உற்பத்தி செய்யும் பண்டங்களின் தன்மை, அவை எந்த அளவிற்கு மக்களால் விரும்பி வாங்கப் படுகின்றன என்னும் விவரம், அவை ஈட்டும் இலாபம் ஆகியவற்றையும் கருத்தில் கொண்டு கடன் கொடுக்க முன்வர வேண்டும்.

(2) ஒருசில பண்டங்களை மட்டும் கடன் வழங்கும் நிறுவனங்கள் பிணையமாகப் பெறுவதனால் பெரும்பாலான சிறு தொழில் நிறுவனங்கள் கடன்பெற முடியவில்லை. எனவே, தொழில் நிறுவனத்தையே பிணையமாக ஏற்றுக் கடன் வழங்குவது மேலும் பல தொழில் நிறுவனங்கள் வாங்குவதற்கு வாய்ப்பேற்படுத்தும்.

(3) தொழில் நுட்பக்கருத்துரைகளைப் பெறுவதற்காகத் தனிப்பட்ட வல்லுநர்களைப் பணியிலமர்த்த முடியாத சிறு தொழில் நிறுவனங்கள் பல ஒன்று சேர்ந்து கூட்டாக வல்லுநர்களைப் பணியிலமர்த்தி, அவர்களிடமிருந்து கருத்துரைகளைப் பெறலாம். இல்லையேல் அரசுத் துறையில் பணிபுரியும், தொழில் மற்றும் வணிகத்துறையைச் சார்ந்த அலுவலர்களிடமிருந்து கருத்துகளைப் பெறவும் வாய்ப்புள்ளது.

(4) கடன் வழங்கும் நிதி நிறுவனங்கள், கடன் பெறும் தொழில் நிறுவனங்களுக்கு, அக் கடன் திருப்பிச் செலுத்தப்படும் வரை அடிக்கடி சென்று அவற்றுடன் தொடர்பு வைத்துக் கொள்ளுதல் நல்லது

(5) தொழில் நிறுவனங்களைக் குறித்த, நுட்ப விவரங்கள் போதிய அளவில் கிடைக்காத நிலையில், தொழில்வள ஆணையாளர், தொழில் மற்றும் வணிக அமைச்சரகம் போன்றவை வெளியிடும் தொழில் நிறுவனங்களைப் பற்றிய கருத்துரைகளை ஏற்றுக்கொள்ளலாம்.

(6) திரட்டப்படும் வட்டி வீதம் முடிந்த வரை குறைவாக இருக்கலாம். தவணைக்கடனின் காலம், தொழில் நிறுவனம் ஈட்டும் இலாபத்தினடிப்படையில் நிர்ணயிக்கப்பட வேண்டும். கொடுக்கப்பட்ட கடன் தொகையினைக் கடன் வழங்கிய ஒன்று அல்லது இரண்டு ஆண்டுகள் முடிந்தபின்னர்த் திரட்டத் தொடங்குதல் கடன்பெற்ற தொழில் நிறுவனத்திற்குப் பேருதவியாக இருக்குமாதலின் இக் கருத்தினைக் கடன் வழங்கும் நிதி நிறுவனங்கள் கடைப்பிடிக்கலாம்.

(7) நிதி நிறுவனங்கள் எளிதாகத் தொழில் நிறுவனங்களுக்குக் கடன் வசதியளிக்க இந்திய அரசு, ரிசர்வ் வங்கியால் நடத்திச் செயல்படுத்தப்பட்டுவரும் கடன் பொறுப்புறுதித்திட்டம் ஒன்றினைத் தீட்டியுள்ளது. நிதி நிறுவனங்கள் தங்களுடைய இழப்பு வாய்ப்பினைக் குறைத்துக்கொள்ளும் பொருட்டு இத் திட்டத்தினைப் பயன்படுத்திக் கொள்ளலாம். ரூ. 1 இலட்சம் வரை இத் திட்டத்தின்படி நிதிநிறுவனங்கள் நட்ட ஈடாகப்பெற முடியும். அத்தகைய பொறுப்புறுதி செய்யப்பட்ட கடன்கள் தவணைக் கடன்களாக வழங்கப்பட்டால், அவை இந்தியத் தொழில் வளவங்கியிடமிருந்து மறு நிதியும்பெற முடியும்.

(8) பல்வேறு நிதி நிறுவனங்கள் கூட்டாக இணைந்து தவணைக் கடன் வழங்கலாம். அவ்வாறு இணைந்து கடன் வழங்கும்போது இழப்பு பிரித்தளிக்கப்படுகிறது.

(9) கடன் வழங்கும் நிறுவனங்கள், முடிந்தவரை மாறுபடும் சூழ்நிலைக்கு ஏற்ப விதிமுறைகளை மாற்றிச் செயல்படுத்துதல் வேண்டும். சட்டதிட்டங்கள், விதிமுறைகள் ஆகியன செயல் படுத்துவதற்காக, நிதிபெற விழையும் நிறுவனங்களுக்காகத் தீட்டப்பட்டவையே தவிர, சட்டதிட்டங்களுக்காகவென்று தீட்டப்பட்டவையல்ல என்பதனை நன்குணர வேண்டும். ஒருசில கடனாளிகள், உரிய காலத்தில் கடனைத் திருப்பிச் செலுத்தும் வாய்ப்பினை இழக்கலாம். ஆனால், அவர்களுக்கு மேலும் நிதியுதவி செய்தால், அவர்கள் நிலை உயர்ந்து அவர்கள் வாங்கிய கடனை எளிய முறையில் திருப்பிச் செலுத்திவிட முடியும். ஆனால், கடனைத் திரும்பிப்பெற இயலாது என்ற நிலையில், நீதி மன்றத்தில் வழக்குத் தொடருதல் போன்ற உரிமையினைக் கடன் கொடுக்கும் நிதி நிறுவனம் விட்டுவிடுதல் வேண்டும் என்ற வரையறை இல்லை. கடனாளிதான் பெற்ற கடனை வேண்டுமென்று கொடுக்கவிரும்ப வில்லை; அவர் கெட்ட நோக்குடன் செயல்படுகிறார் போன்ற விவரங்களை அறிந்துகொண்ட கடன் வழங்கிய நிதி நிறுவனம், நீதி மன்றத்தில், கடனைத் திருப்பித் தரும் வகையில் வழக்குத் தொடரத் தயங்குதல் கூடாது.

இதுபோன்றே பெருமளவில் கடன்பெற விழையும் சிறுதொழில் நிறுவனங்கள், அவற்றினிடமுள்ள சிறு குறைபாடுகளைக் களைந்து தங்களை மேலும் நல்லமுறையில் கடன்பெறும் நிலைக்கு உயர்த்திக் கொள்ளுதல் வேண்டும். தவணைக் கடன் மதிப்புச் செயற்குழு சிறுதொழில் நிறுவனங்களின் கருத்தினைக் கவரும்வண்ணம் கீழ்க் காணும் கருத்துகளை வழங்கியுள்ளது:

(அ) சிறுதொழில் நிறுவனங்கள் தங்கள் தொழில்களைப் பற்றிய எல்லா விவரங்களையும், நிதி நிறுவனங்களுக்குக் கொடுக்க முடியாது. ஏனெனில், அவை அதுபோன்ற விவரங்களைத் திரட்டிப் பழக்கமில்லை. ஆனால், அதுபோன்ற நிலைகளில் முடிந்த வரை, அவற்றிற்குத் தெரிந்த அவற்றினிடம் உள்ள விவரங்களைக் கொடுத்தல் அவசியமாகும்.

(ஆ) முடிந்தவரை நிதி நிறுவனங்கள் கடனளிக்க வசதி செய்யும் வகையில், தொழில் நிறுவனங்கள் உரியமுறையில் தங்களுடைய கணக்குகளை எழுதி, தகுந்த விதிப்படி தணிக்கை செய்து கொள்ளவேண்டும்.

(இ) கடன்பெறும் நிறுவனங்கள் பிணையமாக அளிக்கக்கூடிய சொத்துகள் எளிய முறையில் மதிப்பீடு செய்யும் வகையில் அமைந்திருக்கவேண்டும்.

(ஈ) கடனுகப்பெற்ற தொகை, எந்தக் காரணத்திற்காகப் பெறப்பட்டதோ அந்தக் காரணத்திற்காக மட்டுமே செலவு செய்யப்படவேண்டும்.

(உ) கடன்பெறும் தொழில் நிறுவனத்தினுடைய வெற்றி, ஒரு தனிப்பட்ட நபர், அல்லது ஒருசில தனிப்பட்ட நபர்களுடைய திறமையிலேப் பொறுத்துள்ளதாக அமைந்திருக்கும் நிலையில், கடன் வழங்கும் நிறுவனம், அந்த நபர், அல்லது நபர்கள்மீது ஆயுள்காப்பீட்டுறுதி செய்துகொள்ளுதல் மிக அவசியமாகும். அதற்கான தவணைக் கட்டணத்திலை (Premium) முழுமையாக நிதி நிறுவனம் ஏற்றுக்கொள்ளலாம்; அல்லது ஒரு பகுதியிலை நிதி நிறுவனமும் எஞ்சிய பகுதியிலைக் கடன்பெறும் தொழில் நிறுவனமும் இணைந்து செலுத்தலாம்.

மேற் குறிப்பிட்டுள்ள பரிந்துரைகளைக் கடைப்பிடித்தால் நிதி நிறுவனங்கள் எளிதாகக் கடன் வழங்கமுடியும். சிறுதொழில் நிறுவனங்களும் எளிதாகக் கடன்பெற முடியும். இவ்வாறு செய்தல் கடன் வழங்கும் நிறுவனங்கள், சிறுதொழில் நிறுவனங்கள் ஆகிய வற்றின் நலனேமட்டும் ஒட்டி அமைவதில்லை. நாட்டின் தொழில் முன்னேற்றத்தின் அடிப்படையிலும் இது மிக அவசியமானதாகும்.

வினுக்கள்

1. நிதி நிறுவனங்கள், தொழில்துறைக்கு மட்டும் மிகுந்து கடன்கொடுக்க விழைவதன் காரணங்கள் யாவை?
2. பதினென்கு வங்கிகள் நாட்டுடைமையாக்கப்பட்ட பிறகு வங்கியியல் கடனில் ஏற்பட்டுள்ள மாறுதல்கள் யாவை?
3. நீண்டகாலக் கடனிற்கும், குறுகியகாலக் கடன்கள் புதுப்பிக்கப் படுதலுக்குமுள்ள வேறுபாடுகள் யாவை?
4. சிறுதொழில் நிறுவனங்களுக்கு வணிக வங்கிகள் கடனளிக்கும் வகையில் தீட்டப்பட்டுள்ள பொறுப்புறுதித் திட்டம் குறித்துக் குறிப்பு வரைக.
5. 'பொறுப்புறுதித் திட்டம்' செம்மையாகச் செயல்பட நிறைவு செய்யப்பட வேண்டிய நிபந்தனைகள் யாவை?
6. ஷர்லால்கர் குழுவின் பரிந்துரைகள் யாவை? அப் பரிந்துரைகளின்படி வணிக வங்கிகளிடமிருந்து கடன்பெறத் தகுதிபெற்றவர்கள் யார்? யார்?
7. தவணைக் கடன்பற்றிய விவரங்களைத் தொகுத்தெழுதுக.

8. தவணைக் கடன் எளிவரல் தன்மை பெற்றுள்ளதா இல்லையா என்பதனை விளக்குக.

9. தவணைக் கடனின் சிறப்புத் தன்மைகள் யாவை?

10. தவணைக் கடனுக்களிக்கப்படும் மறுநிதி வசதி யாது? அவ் வசதி எந்தெந்த முறைகள் மூலம் வழங்கப்படுகிறது?

11. இந்தியத் தொழில்வள வங்கியின் மறுநிதித் திட்டத்தின் சிறப்புத் தன்மைகள் யாவை?

12. தவணைக் கடன் வழங்குவதற்கு முன்னர், கடன்பெற விழையும் நிறுவனங்களின் எந்தெந்த விவரங்களை நிதி நிறுவனம் அறிந்துகொள்ளுதல் வேண்டும்?

13. இந்தியாவில் தவணைக் கடன் எந்த அளவிற்குப் பரவியுள்ளது?

14. தவணைக் கடன்பற்றி இந்திய வங்கியர் கருத்தரங்கின் பரிந்துரைகள் யாவை?

15. சிறுதொழில் நிறுவனங்கள் வணிக வங்கிகளிடமிருந்து தவணைக் கடன் பெற முடியாததன் காரணங்கள் யாவை?

16. இந்திய வணிக வங்கிகள், சிறுதொழில் நிறுவனங்களுக்குத் தவணைக் கடன் வழங்கும் வகையில் தவணைக் கடன் மதிப்பீட்டுச் செயற்குழு வழங்கிய கருத்துரைகள் யாவை?

11. இந்திய ஸ்டேட் வங்கி
(State Bank of India)

இன்று இந்திய வணிக வங்கியியல் உலகில் முதன்மை வங்கியாகத் திகழ்வது இந்திய ஸ்டேட் வங்கி. இவ் வங்கி 1955 ஆம் ஆண்டு சூலைத் திங்கள் 1 ஆம் நாள் முதல் பணிபுரியத் தொடங்கியது. இது 1955 ஆம் ஆண்டு இந்திய ஸ்டேட் வங்கிச் சட்டத்திற்குட்பட்டுச் செயலாற்றி வருகிறது. இவ் வங்கி, இந்திய இம்பீரியல் வங்கியின், சொத்துகள், பொறுப்புகள் ஆகியவற்றினை ஏற்றுக்கொள்வதன் வழி அதாவது, இம்பீரியல் வங்கி நாட்டுடைமையாக்கப்பட்டதன் மூலம் நிறுவப்பட்டது. எனவே, ஸ்டேட் வங்கியின் விவரங்களைப்பற்றி அறிந்துகொள்வதற்கு முன்பு, இந்திய இம்பீரியல் வங்கியினைப்பற்றி அறிந்துகொள்ளுதல் அவசியமாகும்.

இந்திய இம்பீரியல் வங்கியின் வரலாறு : 1806 ஆம் ஆண்டு நிறுவப்பட்ட வங்காள வங்கி, 1840 ஆம் ஆண்டு நிறுவப்பட்ட பம்பாய் வங்கி மற்றும் 1843 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட சென்னை வங்கி, ஆகிய மூன்று வங்கிகளும் மாகாண வங்கிகள் என்றழைக்கப்பட்டு வந்தன. இவை இந்தியாவில் உண்மையான வங்கியியல் கோட்பாடுகளைப் பரப்பக் காரணமாகவிருந்தன. 1862 ஆம் ஆண்டுவரை இம் மாகாண வங்கிகள், பணம் அச்சடிக்கும் உரிமை பெற்றிருந்தன. இருப்பினும் இந்த உரிமை அவ் வங்கிகளிடமிருந்து 1862 ஆம் ஆண்டு பறிக்கப்பட்டது.

மாகாண வங்கிகளிடம் காணப்பட்ட குறைபாடுகள் : மேற் குறிப்பிட்டுள்ள மூன்று மாகாண வங்கிகளும், வங்கியியல் கோட்பாடுகளைப் பரப்ப ஆவன புரிந்தவையாயினும், அவற்றுக் கிடையே கீழ்க்காணும் குறைபாடுகள் காணப்பட்டன. அவையாவன :

(1) மாகாண வங்கிகளுக்கிடையே ஒரே தன்மை படைத்த கோட்பாடுகள் நிலவவில்லை.

(2) அவற்றினிடமிருந்த நோட்டு வெளியிடும் உரிமை பறிக்கப்பட்டபின் அவற்றினுடைய பணத்தன்மை சற்றுத் தாழ்ந்து காணப்பட்டது.

(3) மாகாண வங்கிகளுக்கிடையே கடும்போட்டி நிலவி ஒன்றை ஒன்று உரியமுறையில் புரிந்துகொள்ளத் தவறிவிட்டன.

1862ஆம் ஆண்டு இவ் வங்கிகளிடமிருந்து நோட்டு அச்சிடும் உரிமை பறிக்கப்பட்டாலும், அவை அரசின் முகவர் என்ற நிலையில் 1868ஆம் ஆண்டுவரை நோட்டுகளை வெளியிட்டு வந்தன. 1868ஆம் ஆண்டு அரசு, தானே பணம் வெளியிடும் உரிமையினை ஏற்றுக்கொண்டது.

மேற் குறிப்பிட்ட மாகாண வங்கிகளிடம் காணப்பட்ட குறைபாடுகள் காரணமாகவும், 1868ஆம் ஆண்டு முதல் பணம் வெளியிடும் உரிமையினைக்கூட இம் மாகாண வங்கிகள் பெற்றில்லாததனாலும், அப்பொழுது பொதுவாக மாகாண வங்கிகள் உரிய முறையில் செயல்பட முடியவில்லை. இந்நிலையில் முதல் உலகப் போர் தொடங்கியது. முதல் உலகப் போரின் விளைவால் வங்கிகளுக்கிடையே ஒத்துழைப்பு மனப்பான்மை நிலவத் தொடங்கியது. போரின் இன்னல்களை அனுபவித்த வணிக வங்கிகள் ஒற்றுமையுடன் பணிபுரிவதன் அவசியத்தை உணர்ந்தன. இணைந்து செயல்பட வேண்டுமென்ற கருத்தினைக் கற்றன. இந்நிலையில் 1920ஆம் ஆண்டு இம்பீரியல் வங்கிச் சட்டம் (Imperial Bank of India Act) நிறைவேற்றப்பட்டது. இச் சட்டத்தினடிப்படையில் 1921ஆம் ஆண்டு சனவரித் திங்கள் 27ஆம் நாள், வங்காள வங்கி, சென்னை வங்கி, பம்பாய் வங்கி ஆகிய மூன்று மாகாண வங்கிகளையும் இணைத்து, இந்திய இம்பீரியல் வங்கி நிறுவப்பட்டது.

இந்திய இம்பீரியல் வங்கி நிறுவப்பட்டது இந்திய வங்கியியல் வரலாற்றில் மிக முக்கியமானதொரு நிகழ்ச்சியாகும். இவ் வங்கியே இந்தியாவில், வங்கியியல் முறை உரிய முறையில் தொடங்கக் காரணமாகவிருந்தது எனக் குறிப்பிடலாம். இம்பீரியல் வங்கி தொடங்கப்பட்ட நேரத்தில் அது 68 கிளை வங்கிகளைப் பெற்றிருந்தது. அதாவது மூன்று மாகாண வங்கிகளும் மொத்தம் 68 கிளை வங்கிகளைப் பெற்றிருந்தன. இம்பீரியல் வங்கி நிறுவப்பட்ட உடனேயே அது தனிப்பட்ட பொறுப்புக் கொண்ட வங்கியெனக் கருதப்பட்டது; ரூ. 11¼ கோடி அனுமதித்த முதலுடன் அது தொடங்கப்பட்டது.

வங்கி மைய அலுவலகத்திலுள் நிருவகிக்கப்பட்டு வந்ததாலும், வட்டார நலனைப் பாதுகாக்கும் வகையில், மாகாண வங்கிகள் பணியாற்றிய ஒவ்வொரு வட்டாரத்திலும் ஓர் உள்ளூர் அலுவலகம் நிறுவப்பட்டது. எனவே, பம்பாய், கல்கத்தா, சென்னை ஆகிய மூன்று இடங்களிலும் உள்ளூர் அலுவலகங்கள் நிறுவப்பட்டன. அந்த அலுவலகங்கள் ஒவ்வொன்றிலும் மேலாண்மை செய்யும் பொருட்டு ஒவ்வோர் உள்ளூர் அலுவலகத்திற்கும் தனிப்பட்ட முறையில் ஒரு தனி இயக்குநரவை அமைக்கப்பட்டது. அந்தந்த வட்டாரத்திலுள்ள பங்குநர்கள் உள்ளூர் அலுவலக இயக்குநர்களைத் தேர்ந்தெடுக்கும் உரிமை பெற்றிருந்தனர்.

வங்கியின் நிருவாக உரிமையும், உள்ளூர் இயக்குநரவைகளைக் கட்டுப்படுத்தும் உரிமையும் மைய இயக்குநரவைக்கு அளிக்கப் பட்டிருந்தது. மைய இயக்குநரவையின் பணிகள் வங்கியின் துணை விதிகளின்படி (By-laws) நிர்ணயிக்கப்பட்டன. பொதுவாக, நிதியினை நாட்டின் ஒரு பகுதியிலிருந்து இதர பகுதிகளுக்கு மாற்றுதல், வங்கியின் பொதுக் கோட்பாடுகளை நிர்ணயித்தல், வங்கிப் பணி குறித்த வாராந்தர அறிக்கைகள் தயாரித்தளித்தல் போன்றவை அவற்றில் முக்கியமானவையாகக் கருதப்பட்டன. வங்கியின் செயலாக்கப்பணி அதனுடைய மேலாண்மை இயக்குநரிடமும், ஒரு துணை மேலாண்மை இயக்குநரிடமும் ஒப்படைக்கப் பட்டிருந்தது. இவர்கள் பொதுவாக ஐந்தாண்டுக் காலத்திற்கு நியமிக்கப்பட்டனர்.

மைய இயக்குநரவை கீழ்க்காணும் உறுப்பினர்களைக்கொண்டு செயல்புரிந்து வந்தது :

(அ) உள்ளூர் இயக்குநரவையின் தலைவர்கள், துணைத் தலைவர்கள்.

(ஆ) ஒவ்வோர் உள்ளூர் இயக்குநரவையிலிருந்து அந்தந்த அவை உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒருவர்.

(இ) மேலாண்மை இயக்குநர்.

(ஈ) ஓராண்டுக்கு மட்டும் அலுவலகத்திலிருக்கும் வகையில், இரண்டு உறுப்பினர்களுக்கு மிகாது பொது ஆளுநரால் (Governor General) நியமனம் செய்யப்பட்ட உறுப்பினர்கள்.

(உ) துணை மேலாண்மை இயக்குநர்கள்.

(ஊ) உள்ளூர் இயக்குநரவைகளின் செயலாளர்கள்.

(எ) பொது ஆளுநரால் நியமிக்கப்பட்ட அரசு அலுவலர் ஒருவர்.

துணை மேலாண்மை இயக்குநர், உள்ளூர் இயக்குநரவைகளின் செயலாளர்கள், பொது ஆளுநரால் நியமனம் செய்யப்பட்ட அரசு அலுவலர் ஆகியோர் அவைக் கூட்டத்தின் வாக்கெடுப்பில் பங்கு கொள்ளும் தகுதிபடைத்தவர் அல்லர். ஆனால், துணை மேலாண்மை இயக்குநரைப் பொறுத்தவரை, கூட்டத்தில், மேலாண்மை இயக்குநர் பங்கு பெருத நிலையில், அவர் வாக்குறுதியினைப் பெறுகிறார்.

சிறிய நடவடிக்கைகளைக் குறித்துப் பேசுவதற்கு அடிக்கடி மைய அவைக் கூட்டம் நடத்துவது இயலாததாதலின், அதனுடைய பணிகளில் சில மேலாண்மை இயக்குநர், துணை மேலாண்மை இயக்குநர், அரசு அலுவலர் ஆகியோர்களை உறுப்பினர்களாகக்கொண்ட ஒரு மேலாண்மைக் குழுவிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. இக் குழுவின் கூட்டம் எந்தெந்த இடத்தில் நடைபெறுகிறதோ அந்தந்த இடத்தின் உள்ளூர் இயக்குநரவைத் தலைவர், துணைத் தலைவர், செயலர் ஆகியோரும் இம் மேலாண்மைக் குழுவில் அங்கம் வகிப்பர். ஆனால், அவர்களது உறுப்பினர் தன்மை அக் கூட்டத்துடன் முடிந்துவிடும். அடுத்த கூட்டம் வேறு பகுதியில் நடைபெறுமேயானால், அதில் அப் பகுதி உள்ளூர் இயக்குநரவையின் தலைவர், துணைத்தலைவர், செயலர் ஆகியோர் பங்குபெறுவர். பொதுவாக மேலாண்மைக் குழுக் கூட்டங்கள், ஒரே இடத்தில் நடப்பது தவிர்க்கப்பட்டது.

1935ஆம் ஆண்டுவரை மைய இயக்குநரவை கீழ்க்காணும் ஆளுநர்களையும், உறுப்பினர்களாகக் கொண்டிருந்தது :

(அ) பொது ஆளுநரால் நியமிக்கப்பட்டோர் :

(i) இரண்டு மேலாண்மை ஆளுநர்கள்.

(ii) இந்திய சமூகத்தினர் நலனைச் சார்ந்துள்ள நான்கு அலுவல் துறை சாரா ஆளுநர்கள்.

(iii) சென்னை, பம்பாய், கல்கத்தா ஆகியவற்றின் உள்ளூர் இயக்குநரவைகளின் செயலாளர்கள்.

(iv) இந்திய மைய அரசின் சார்பாளர் என்ற நிலையில் செலாவணிக் கட்டுப்பாட்டு அலுவலரும் (Controller of Currency) உள்ளூர் இயக்குநரவைச் செயலாளர்களும், இயக்குநரவைக் கூட்டங்களில் பங்கு கொண்டாலும், வாக்களிப்பில் பங்குபெறும் உரிமை படைத்திலர்.

(ஆ) பங்குநர்களால் தேர்ந்தெடுக்கப்பட்டோர் :

(i) உள்ளூர் இயக்குநரவைகளின் தலைவர்களும், துணைத்தலைவர்களும்.

1935ஆம் ஆண்டுவரை இவ்வங்கி அரசு வங்கியாகப் பணியாற்றியமையினாலும், வங்கிகளுக்கு வங்கியாகத் திகழ்ந்த தாலும், மைய அரசு அவ்வங்கியின்மீது கீழ்க்காணும் முறையில் கட்டுப்பாடுகளைச் செலுத்தி வந்தது.

(1) அரசு, மேலாண்மை ஆளுநர்கள், செலாவணிக் கட்டுப் பாட்டு அதிகாரி, உள்ளூர் இயக்குநரவைச் செயலாளர்கள், மேலும் நான்கு ஆளுநர்கள் ஆகியவர்களை வங்கி மேலாண்மைப் பொறுப்பில் பங்கேற்கும் வகையில் நியமித்தது.

(2) அரசு, அதனுடைய நிதிக் கொள்கைகளைச் செயல் படுத்தும் வகையிலும், அதனுடைய ரொக்க இருப்புகளைப் பாது காக்கும் வகையிலும் வங்கிக்குத் தேவையான கட்டளைகளை விதிக்கலாம்.

(3) மைய அரசு கேட்கும் எல்லா விவரங்களையும் வங்கி வழங்கக் கடமைப்பட்டிருந்தது. மேலும் அரசு விரும்பும் இதர ஆவணங்கள், வங்கியின் கணக்குகள் ஆகியவற்றையும் வங்கி கொடுக்கவேண்டிய நிலையிலிருந்தது.

(4) இவ்வங்கியின் கணக்குகளைத் தணிக்கை செய்யும் பொருட்டுத் தகுந்த தணிக்கையாளர்களை நியமனம் செய்யும் உரிமையினையும் மைய அரசு பெற்றிருந்தது.

(5) வங்கியின் உள்ளூர்த் தலைமையகங்களை ஏற்படுத்தவும், உள்ளூர் இயக்குநரவையை உருவாக்கவும், வங்கி மைய அரசின் முன் இசைவினைப் பெறவேண்டுமென்ற நிலை இருந்தது.

1935ஆம் ஆண்டுமுதல், இது அரசு வங்கியாகவும், வங்கி களுக்கு வங்கியாகவும் பணியாற்றவில்லையாதலின், அந்த ஆண்டிலிருந்தே மேலே குறிப்பிட்டுள்ள கட்டுப்பாடுகளை அரசு நீக்கிவிட்டது.

இம்பீரியல் வங்கியின் பணிகள் : 1935ஆம் ஆண்டுவரை, இவ் வங்கி அரசு வங்கியாகப் பணிபுரிந்தது. அரசு நிதியினை இது கையாண்டு வந்ததுடன், அரசுச் சார்பாகக் கருவூலப் பணியினையும் இது புரிந்துவந்தது. அரசு பெறத்தக்க பணத்தினைப் பெற்றும், அரசு செலுத்தவேண்டிய பணத்தைச் செலுத்தியும் அரசுக்கு உறுதுணையாகவிருந்தது. இது வங்கிகளுக்கு

வங்கியாகவும் பணியாற்றியது குறிப்பிடத்தக்கதாகும். வங்கிகளுக்கு, அவை விரும்பும்போது கடனுதவி அளித்துவந்தது. மாற்றுச் சீட்டுகளைக் கழிவு செய்வதன்வழி வங்கிகளுக்கும், வாடிக்கைக்காரர்களுக்கும் கடனுதவி அளித்தது. தங்கம், வெள்ளி ஆகிய உலோகங்களை நாணயமாக மாற்றி வெளியிட்டதுடன்கூட உலோகமாகவும் விற்பனை செய்தது. இதர வங்கிகளைப் போன்று வாடிக்கைக்காரர்களிடமிருந்து வைப்புத்தொகை பெற்று முதலீடு செய்தது. வாடிக்கைக்காரர்களுடைய நகைகள், உரிமைப் பத்திரங்கள் போன்றவற்றைப் பாதுகாப்பாக வைத்திருக்கும்பொருட்டு அவர்களிடமிருந்து பெற்றது. அதனுடைய தொழிலினை வளர்ச்சி செய்யும்பொருட்டு இந்தியாவிலிருந்து கடன் பெறும் உரிமை பெற்றிருந்தது.

எனவே, இம்பீரியல் வங்கி, மைய வங்கிப் பணிகளுடன் வணிக வங்கிகளின் பணிகளையும் சேர்த்துப் புரிந்துவந்ததெனச் சுருங்கக் கூறலாம். இருப்பினும் 1920ஆம் ஆண்டுச் சட்டப்படி இவ் வங்கி கீழ்க்காணும் பணிகள் புரிவது தடை செய்யப்பட்டிருந்தது :

(அ) ஆறு திங்களுக்குமேல் கடன் கொடுத்தல்.

(ஆ) வங்கியின் பங்குகளைப் பிணையமாகப் பெற்றுக் கடன் வழங்குதல்.

(இ) அசையாச் சொத்துகளைப் பிணையமாகப் பெற்றுக் கடன் வழங்குதல்.

(ஈ) ஒரு குறிப்பிட்ட நிறுவனத்திற்கு ஒரு குறிப்பிட்ட தொகைக்குமேல் கடன் வழங்குதல்.

(உ) அந்நியச் செலாவணி நடவடிக்கைகளில் ஈடுபடுதல்.

(ஊ) பிணையமற்ற முறையில் ஒரு நிறுவனத்திற்கு ஒரு லட்சத்திற்குமேல் வரைப்பற்று மூலம் கடன் வழங்குதல்.

(எ) 1920ஆம் ஆண்டிலிருந்து மூன்று ஆண்டுகளுக்கு முன்பு இந்திய ஸ்டேட் வங்கியிலோ அல்லது மாகாண வங்கிகள் ஒன்றிலோ வாடிக்கைக்காரராக இல்லாத ஒரு நபருக்கு, வங்கியின் இலண்டன் கிளையில் கணக்குத் தொடங்குதல்.

இம்பீரியல் வங்கி தொடங்கப்பெற்ற முதல் ஐந்தாண்டுகளுக்குள் நூறு கிளைகளைத் திறக்க, அது இசைவு தந்தது. புதிதாகத் திறக்கப்படும் கிளைகளில் 25 விழுக்காட்டுப் பகுதியினை அரசு விரும்பும் இடங்களில் திறக்க வங்கி மேலாண்மையினர்

இசைவு தந்தனர். வாடிக்கைக்காரர்களுக்கும், பொதுமக்களுக்கும், பணத்தை ஒரு கிளையிலிருந்து மற்றொரு கிளைக்கு மாற்றியனுப்பும் வசதிகளைத் தரவும் வங்கி நிருவாகத்தினர் ஒப்புக்கொண்டனர். இவ் வங்கி தொடங்கிய ஐந்தாண்டுக் காலத்திற்குள் 102 புதிய கிளைகளைத் திறந்தது. அரசுக் கொள்கைகளைச் செயல்படுத்த ஆவன செய்தது.

1934ஆம் ஆண்டின் திருத்தச் சட்டத்தின்படி இவ் வங்கியின் மீது விதிக்கப்பட்ட ஒருசில கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டு அது விரும்பும் இடங்களில் கிளைகளைத் திறக்கவும், 6 திங்களுக்கு மேலாகாத வெளிநாட்டு மாற்றுச் சீட்டுகளை வாங்கவும், விற்கவும் பண்டங்களை அடைமானமாகப் பெற்றுக் கடன் வழங்கவும் உரிமை பெற்றது.

இவ்வாறு இம்பீரியல் வங்கி மைய வங்கியின் பணிகளையும் புரிந்துவந்த நேரத்தில் ஹில்டன்-யங் குழு (Hilton-Young Commission) இந்திய வங்கியியல் முறையினைச் செப்பனிடும் வகையில், இந்தியாவுக்கு மைய வங்கி ஒன்று ஏற்படுத்த வேண்டுமென்ற பரிந்துரை ஒன்றினை வலியுறுத்தியது. இந் நிலையில், மைய வங்கியின் பணிகளைப் புரிந்துவந்த இம்பீரியல் வங்கியே மைய வங்கியாக நியமிக்கப்படுமெனப் பலர் கருதினர். ஆனால், அவர்கள் எதிர்பார்த்துக்கு மாறாக 1935ஆம் ஆண்டு மைய வங்கியின் பணிகளை மேற்கொள்ளத் தனிப்பட்ட முறையில் ரிசர்வ் வங்கி நிறுவப்பட்டது. இருப்பினும் இவ் வங்கி 1935ஆம் ஆண்டுக்குப் பிறகுகூட இதன் முக்கியத்துவத்தினை இழக்கவில்லை. ரிசர்வ் வங்கி நிறுவப்பட்ட பிறகு இம்பீரியல் வங்கி அரசு வங்கியின் பணிகளினின்றும் விடுவிக்கப்பட்டது. ஆனால், ரிசர்வ் வங்கிக்குக் கிளைகள் இல்லாத இடங்களில், இவ் வங்கியே அதனுடைய முழு முகவராகப் பணிபுரிந்தது. இந்த நிலையில், இதர வணிக வங்கிகளைவிட இவ் வங்கியே மிக அதிகமான கிளைகளையும், மிக அதிகமான வைப்புத்தொகைகளையும் பெற்றிருந்தது.

இத்தகைய தனி நிலையினை இவ் வங்கி கொண்டிருப்பதனையும், இவ் வங்கி தனிப்பட்ட சட்டத்தின்கீழ்ச் செயல்படுவதனையும் பலர் விரும்பவில்லை. எனவே, அவர்கள் இவ் வங்கிக்குத் தனிப்பட்ட சட்டம் தேவை இல்லை என்றும், இவ் வங்கிக்குத் தனிப்பட்ட சலுகைகள் வழங்கப்படக் கூடாதென்றும் கருத்துத் தெரிவித்தனர். ஆனால், இவ் வங்கி, மிகப்பெரிய வங்கி என்ற நிலையில் பல கிளைகளுடன் செயலாற்றியதனாலும், ரிசர்வ் வங்கியின் முகமை வங்கியாகப் பணியாற்றியதனாலும், இக் கருத்தினை அரசு ஏற்கவில்லை. இம்பீரியல் வங்கி இதர வணிக வங்கிகளுக்கு ஒப்பானதுதான்.

ஆனால், அரசு வங்கியாகப் பணியாற்றியதனால், அது மிக அதிகமான அளவிற்கு நிதியினைக் கையாண்டு அதன்வழி அது பெரும் வளர்ச்சியுற்றது என்ற கருத்தினையும் அரசு ஏற்கவில்லை. எனவே, இம்பீரியல் வங்கி ரிசர்வ் வங்கி நிறுவப்பட்ட பின்னரும், தனித்து நின்று, சில தனிப்பட்ட சலுகைகளுடன் செயலாற்றி வந்தது.

ஹில்டன் யங் குழு இந்தியாவிற்கு ஒரு மைய வங்கி நிறுவப் படவேண்டுமென்று பரிந்துரைத்தவுடன் பலர், அதுவரை மைய வங்கியின் பணிகளைப் புரிந்துவந்த இம்பீரியல் வங்கியே முழுமையாக மைய வங்கியாக்கப்படுமெனக் கருதினர். ஆனால், அக் கருத்து செயல்படுத்தப்படவில்லை. மைய வங்கியாக இம்பீரியல் வங்கியினையே நியமிப்பதற்குப் பதிலாகத் தனிப்பட்ட முறையில் ரிசர்வ் வங்கி நிறுவப்பட்டது. அவ்வாறு இம்பீரியல் வங்கியினையே மைய வங்கியாக நியமிக்கப்படாததன் காரணங்களாவன :

(1) மைய வங்கியாகமட்டும் பணிபுரிய வேண்டுமாயின், இம்பீரியல் வங்கி, வணிக வங்கிப் பணிகளைக் கைவிடவேண்டும் என்ற நிலை எழுந்தது. ஆனால், வங்கிகளின் மொத்த வைப்புத் தொகையில் ஏறத்தாழ மூன்றில் ஒரு பகுதியினைப் பெற்றிருந்த இம்பீரியல் வங்கி, மைய வங்கிப் பணியினை ஏற்றுக்கொள்ளும் பொருட்டு வணிக வங்கிப் பணிகளை விடுவது அவ்வளவு உகந்ததல்லவென வங்கியியல் வல்லுநர்கள் கருத்துத் தெரிவித்தனர். மேலும், அவ்வாறு இம்பீரியல் வங்கி வங்கியியல் தொழிலை விடுவது, இந்திய வணிக வங்கியியல் தொழிலினைப் பெரிதும் பாதிக்கும் என்ற கருத்தும் தெரிவிக்கப்பட்டது.

(2) வணிக வங்கி என்ற நிலையில், இம்பீரியல் வங்கி 1934ஆம் ஆண்டில் ஏறத்தாழ 202 கிளை அலுவலகங்களுடன் செயலாற்றிவந்தது. இந்த நிலையில் இம்பீரியல் வங்கி முழுமையாக மைய வங்கியாக மாற்றப்பட்டிருக்குமேயானால் இந்திய வங்கியியல் தொழில் பாதிக்கப்பட்டிருக்கு மென்பதுடன்கூட ஒரு மைய வங்கிக்கு இவ்வளவு கிளைகள் தேவையற்றதுமாகும். எனவே, 202 கிளைகளைக்கொண்ட ஒரு பெரும் வணிக வங்கியினை மைய வங்கியாக மாற்றுவது தேவையற்றது என்ற கருத்துத் தெரிவிக்கப் பட்டது.

(3) இம்பீரியல் வங்கி 1935ஆம் ஆண்டுவரை மைய வங்கியின் பணிகளைப் புரிந்தவரை, இதர வணிக வங்கிகள், அவ் வங்கியை அணுகி உதவிபெறத் தயங்கின. ஏனெனில்

அவற்றுடன் வணிக வங்கியியல் தொழிலில் போட்டியிட்டுச் செயலாற்றிவரும் ஒரு வணிக வங்கியிடம், உதவிபெறுதல் தங்களுடைய தொழிலுக்குகந்ததல்ல என்ற கருத்தினையும் கொண்டிருந்தன. எனவே, இந்த நிலை தொடர்ந்து இம்பீரியல் வங்கியே மைய வங்கியாக நிரந்தரமாக்கப்பட்டால், இதர வணிக வங்கிகள், இம்பீரியல் வங்கியை உதவிபெறும் பொருட்டு அணுக மாட்டாவென்றும், இம்பீரியல் வங்கி மைய வங்கி என்ற நிலையில், வங்கிகளின் வங்கி என்ற பணியினைச் செம்மையாகப் புரிய வாய்ப்பிருக்காதென்றும் கருத்துத் தெரிவிக்கப்பட்டது.

(4) அரசு பயன்படுத்தாத எஞ்சிய நிதியினை வட்டி எதுவும் செலுத்தாது, இம்பீரியல் வங்கி, 1935 ஆம் ஆண்டுவரை பயன் படுத்தி வந்தது. இவ்வாறு அரசின் நிதி வட்டி எதுவுமின்றி ஒரு வங்கிக்கு மட்டும் கிடைக்கும் வசதி இருந்தமையின் அவ் வங்கி மட்டும், இதர வங்கிகளைவிட நன்கு வளர்ச்சிபெற வாய்ப்பிருந்தது. எனவே, இம்பீரியல் வங்கி தொடர்ந்து மைய வங்கியாகப் பணியாற்றும் வாய்ப்பினைப் பெற்றிருந்ததால், அவ் வங்கிக்கு அத் தனிப்பட்ட சலுகை தொடர்ந்து கிடைத்திருக்கக் கூடும். ஆகவே, அவ் வங்கி, இதர வணிக வங்கிகளைவிடச் செழித்து வளர ஒரு வாய்ப்பினைப் பெற்றிருக்கக்கூடும். அது பொதுவாக வணிக வங்கியியல் வளர்ச்சிக்கு உகந்ததாக அமைந்திருக்காது.

(5) வணிக வங்கிகள், வணிக நிறுவனங்கள், இலாப நோக்குடன் செயலாற்றுபவை. ஆனால், மைய வங்கி, வணிக நிறுவனமன்று; இலாப நோக்குடன் பணிபுரிவது கூடாது. அதனுடைய நோக்கு, இதர வங்கிகளுக்குப் பணிபுரிதல் என்பதேயாகும். இந்த நிலையில் ஒரு வணிக வங்கி மைய வங்கி யாகவும் பணிபுரியுமேயானால் அதனுடைய நோக்கங்கள் ஒன்றுக் கொன்று முரண்பாடானவையாக அமைந்துவிடக் கூடும்.

மேலும் ஒவ்வொரு வணிக வங்கியும், அதனுடைய நிதியினை முதலீடு செய்யுங்கால், பாதுகாப்புக் கோட்பாட்டிற்கும், எளிவரல் தன்மைக் கோட்பாட்டிற்கும் முக்கியத்துவம் கொடுத்தால்கூட, 'இலாபமீட்டுதல்' கோட்பாட்டிற்கும் உரிய முக்கியத்துவம் கொடுத்தல் வேண்டும். ஆனால், மைய வங்கி, இலாபமீட்டுதல் என்னும் கோட்பாட்டைவிட, எளிவரல் தன்மைக் கோட்பாடு, பாதுகாப்புக் கோட்பாடு ஆகியவற்றிற்கே அதிக முக்கியத்துவம் கொடுத்தல் வேண்டும். ஒரு வணிக வங்கி மைய வங்கியாகப் பணிபுரியும் நிலையில், குழப்பம் நிகழ வாய்ப்புள்ளது. எனவே, ஒரு வணிக வங்கி, மைய வங்கியாகப் பணிபுரிவது சரியானதன்று என்று கருத்துத் தெரிவிக்கப்பட்டது.

(6) பொதுவாக வணிக வங்கிகள், தங்களுடைய நிதியில் பெரும் பகுதியினைக் கேட்டவுடன் திருப்பிச் செலுத்தத் தக்க நடப்புக் கணக்கு மூலம் திரட்டுகின்றன. இத்தகைய நிதியினை வணிக வங்கிகள் நீண்டகால முதலீட்டில், முதலீடுசெய்வது ஏற்றதன்று. ஆனால் மைய வங்கி, அவசியம் எழும் நிலையில்—இதர வணிக வங்கிகள், நெருக்கடியில் உள்ளபொழுது, அவற்றிற்கு நீண்டகாலக் கடனளிப்பதன் மூலம் உதவிபுரிதல் அவசியமாகும். ஆனால் ஒரே வங்கி, வணிக வங்கியாகவும், மைய வங்கியாகவும் பணிபுரியுமானால், கேட்பு வைப்புத்தொகையினை அவ் வங்கி, நீண்டகாலக் கடனுதவிசெய்யப் பயன்படுத்தவேண்டிய அவசியம் எழும். ஆனால், அது அவ் வங்கியின் தொழிலுக்குகந்ததன்று.

(7) ஒரே வங்கி மைய வங்கிப் பணிகளையும் வணிக வங்கிப் பணிகளையும் மேற்கொண்டால், அதனுடைய கவனம் சிதறி விடுகிறது; எனவே, அது தன்னுடைய நிலைக்கு உரிய பணிகளைச் செம்மையாகச் செய்யமுடியாது.

(8) வணிக வங்கிகள் போதிய தொழிலின்றி நெருக்கடி நிலையில் பணிபுரியுங்கால், அவை மைய வங்கியிடமிருந்து போதிய உதவிகளை எதிர்நோக்குகின்றன. ஆனால், மைய வங்கியே ஒரு வணிக வங்கியாக அமைந்துவிட்டால், அவ்வங்கி, அந்த நெருக்கடி நிலையில் சுயநலத்துடன் அதனுடைய நிலையினைப் பாதுகாக்கும் வகையில்மட்டும் பணிபுரியுமே தவிர, இதர வங்கிகளுக்கு உதவ வேண்டுமென்ற பொதுநோக்கு இருக்காது. எனவே, இம்பீரியல் வங்கி ஒரு வணிக வங்கியாக இருப்பதால் அதனை மைய வங்கியாகவும் பணிபுரிய வைப்பது சரியானதன்று என்ற கருத்தும் தெரிவிக்கப்பட்டது.

(9) மைய வங்கி செலாவணித்தாள் அச்சிடும் உரிமை பெற்றுள்ளது. இத்தகைய உரிமை ஒரு தனிப்பட்ட வணிக வங்கியிடம் கொடுத்தால் அவ்வுரிமையினை அவ் வங்கி தவருன முறையில் பயன்படுத்தக் கூடுமாதலின் இம்பீரியல் வங்கியினை மைய வங்கியாக மாற்றுவது சரியானதன்று என்று தெரிவிக்கப் பட்டது.

இம்பீரியல் வங்கியிடமிருந்து எதிர்பார்க்கப்பட்ட பலன்கள்: இந்திய வணிக வங்கியியல் வரலாற்றில் முதலிடம் பெற்ற இம்பீரியல் வங்கியினால், இந்திய வங்கியியலுக்குக் கீழ்க்காணும் பலன்கள் கிட்டுமென எதிர்பார்க்கப்பட்டது. அவையாவன:

(1) இந்தியா மேலைநாட்டு முறையிலான வங்கியியல் வளர்ச்சியைப் பெறவில்லை. பெரும்பாலும் ஆங்கிலேயர்களைப்

பங்குதார்களாகக்கொண்ட இம்பீரியல் வங்கி, இந்தியாவில் வங்கியியல் முறையினை நன்கு வளர்ச்சியுறச்செய்ய ஆவன செய்யுமென எதிர்பார்க்கப்பட்டது.

(2) நாட்டில் பல்வேறு பாகங்களிலும் கிளை அலுவலகங்கள் திறப்பதன்மூலம் இந்திய மக்களிடையே வங்கியியல் முறையினைப் பரப்புவது மட்டுமின்றி, வங்கிகள் குறித்து மக்களிடையே நல்ல நம்பிக்கையினையும் ஏற்படுத்துமென்றும் எதிர்பார்க்கப்பட்டது.

(3) பல கிளை அலுவலகங்களைக் கொண்டும், அரசுக் கணக்கிலுள்ள மீதி வைப்புத்தொகையினைக் கொண்டும், இம்பீரியல் வங்கி, இந்திய உள்நாட்டு வியாபாரத்திற்குப் போதிய அளவில் நிதிவசதி அளிக்குமென்றும் அதன்மூலம் உள்நாட்டுத் தொழிலினை வளர்க்குமென்றும் எதிர்பார்க்கப்பட்டது.

(4) இம்பீரியல் வங்கி, இந்திய வணிக வங்கிகளுக்கு வழிகாட்டியாகவிருந்து, அவற்றை, வேளாண்மைக்கும் இந்தியத் தொழில் நிறுவனங்களுக்கும் போதிய அளவில் கடன் கொடுக்குமாறு ஊக்குவிக்குமென்று எதிர்பார்க்கப்பட்டது.

(5) இம்பீரியல் வங்கி வெளிநாட்டு வங்கிகளுடன் உடன்பாடு கொண்டு அதன்மூலம், வெளிநாட்டு வங்கிகள், இந்தியத்தொழில் நிறுவனங்களுக்கும் உதவும் வகையில் பணிபுரியத் தூண்டுமெனக் கருதப்பட்டது.

(6) அரசுப் பணத்தை வைப்புத்தொகையாகப் பெற்றுள்ள இவ் வங்கி, அத் தொகையினை இந்திய பணச்சந்தையினைச் செம்மை செய்யும்பொருட்டுப் பயன்படுத்துமென்றும் எதிர் பார்க்கப்பட்டது.

(7) அரசு, அதனுடைய நிதியியல், வங்கியியல் பணிகளில் பெரும் பகுதியினை, அதனுடைய அலுவலர்கள் போதிய செயலறிவு பெற்றில்லையாதலின், இவ் வங்கிக்கு மாற்றிடத் திட்டமிட் டிருந்தது.

(8) இந்தியச் செலாவணித் தன்மை நிலைப்படுத்தப்பட்ட பிறகுதான் பணம் வெளியிடும் பொறுப்பினை இவ் வங்கிக்கு மாற்றிக் கொடுக்க அரசு திட்டமிட்டிருந்தது.

இவ்வாறு இம்பீரியல் வங்கியிடமிருந்து எதிர்பார்க்கப்பட்ட பலன்களின் பெரும் பகுதியினை இந்திய வங்கிச் சமுதாயம் அடைந்தது என்று கூறலாம். 1921ஆம் ஆண்டுமுதல் 1928-ஆம் ஆண்டிற்குள் இவ் வங்கி போதிய கிளை அலுவலகங்

கூடத் திறக்கத் திட்டமிட்டிருந்தது. மேலும் திறக்கவிருக்கும் கிளை அலுவலகங்களில் 25 விழுக்காட்டுப் பகுதியினை அரசு விரும்பும் இடத்தில் திறப்பதற்கும் இசைவளித்திருந்தது. பொது மக்களுக்குப் பணத்தை ஒரு கிளை அலுவலகத்திலிருந்து மற்றொரு கிளை அலுவலகத்திற்குக் குறைந்த கட்டணத்தில் மாற்றியனுப்பும் வசதியினைச் செய்துதர ஒப்புக்கொண்டது. 1920ஆம் ஆண்டில் 70 அலுவலகங்களை மட்டுமே பெற்றிருந்த இவ் வங்கி, 1928ஆம் ஆண்டில் 202 கிளை அலுவலகங்களைக் கொண்டிருந்தது. மேலும், நாட்டிலிருந்த மொத்த வங்கி வைப்புத்தொகையில் மூன்றிலொரு பகுதிக்குமேல் இம்பீரியல் வங்கியிடம் தனியார் வைப்புகளாகவிருந்தது. 1929ஆம் ஆண்டிலிருந்து 1933ஆம் ஆண்டு வரை ஒருசில வங்கி அலுவலகங்களைமட்டுமே இவ் வங்கி திறந்தது. ஆனால், 1934ஆம் ஆண்டிலிருந்து 1945 ஆம் ஆண்டுமுடியவுள்ள 12 ஆண்டுகளுக்குள் இவ் வங்கியின் அலுவலகங்கள் 202லிருந்து 433 ஆக உயர்ந்தன. இந்த நிலையிலும், ஒரு நாட்டின் மைய வங்கிக்கு ஒப்ப அதனுடைய சொத்துகள் எளிவரல் தன்மையுடன் திகழ்ந்தன.

இவ் வங்கி, மாற்றுச் சீட்டுகளைக் கழிவு செய்வதன் வழியும், தொழில் நிறுவனங்களுக்குக் கடனுதவி அளிப்பதன் வாயிலாகவும், இந்தியத் தொழில் நிலையினை வளர்ச்சியுறச்செய்ய ஆவன செய்தது. இந்தியாவிலுள்ள பெரிய வங்கிகளுள் பல தங்களுடைய ரொக்க இருப்பில் ஒரு பகுதியினை இவ் வங்கியிடம் வைப்பாகச் செலுத்தி வைத்திருந்தன. இவ் வங்கி குறைந்த வட்டிவீதத்தில் கடன் அளித்ததன் காரணமாக இதர வணிக வங்கிகளும் அதே வீதத்தில் கடனுதவி அளிக்கவேண்டியநிலை எழுந்தது. எனவே, பல தொழில் நிறுவனங்களும், விவசாயிகளும், வியாபாரிகளும் குறைந்த வட்டி வீதத்தில் கடன்பெற முடிந்தது.

இவ் வங்கி, இந்திய ரிசர்வ் வங்கி நிறுவப்படும்வரை அதாவது 1935ஆம் ஆண்டுவரை வங்கிகளின் வங்கியாகச் செயலாற்றி வந்தது. எனவே இந் நிலையில், இது, பிற வங்கிகள் நெருக்கடி நிலையிலிருந்தபோது அவற்றிற்குத் தக்க உதவியளித்து வந்தது. சிம்லாவின் அல்லயன்சு வங்கி (Alliance Bank of Simla) நொடித்தபோது, அதனுடைய கடனாளர்கள் கேட்ட தொகையில் பாதி அளவுக்கான தொகையினை இவ் வங்கி அளித்துதவி நாட்டில் ஏற்படவிருந்த ஒரு குழப்ப நிலையினைத் தவிர்த்தது. டாட்டா தொழில் வங்கி, வங்காள தேசிய வங்கி, இந்திய சென்ட்ரல் வங்கி முதலிய வங்கிகளில் நெருக்கடி ஏற்பட்ட காலை இம்பீரியல் வங்கி தானே முன்வந்து இவற்றிற்கு உதவியளித்தது. மேலும்

இந்தியாவில் செயலாற்றிவரும் வெளிநாட்டு வங்கிகள் என்றழைக்கப்படும் நாணயமாற்று வங்கிகள் அவசியம் ஏற்பட்ட நிலையில் இவ் வங்கியிடமிருந்து கடனுதவி பெற்றுச் செயலாற்றின. இவ் வங்கி நாட்டு வங்கியரால் மேலெழுத்துச் செய்யப்பட்ட ஒருசில மாற்றுச் சீட்டுகளைக் கழிவு செய்துவந்தது. மேலும், அவர்களுக்கு ஒருசில வரையறைகளுக்குட்பட்டுக் கடனுதவியும் அளித்து வந்தது. இந்தியாவிலுள்ள முக்கிய 11 நகரங்களில் தீர்வகங்கள் ஏற்படுத்தி அவற்றை இம்பீரியல் வங்கி நிர்வாகம் செய்துவந்தது குறிப்பிடத் தக்கதாகும். இவ் வங்கியும், ஒரு வணிக வங்கி என்பதனாலும், இவ் வங்கி, 1920ஆம் ஆண்டு இம்பீரியல் வங்கிச் சட்டத்தின்படி, அரசு அல்லது வேறு பத்திரங்களைப் பிணையமாகக் கொண்டு கடனளிப்பது தவிர்க்கப்பட்டிருந்ததாலும், இது முழுமையாக வங்கிகளின் வங்கியாகப் பணியாற்றியது என்று கூறுதல் இயலாது. இருப்பினும் இன்றைய வணிக வங்கியியல் வளர்ச்சிக்கு இவ் வங்கியே பெருமளவில் பொறுப்பாகுமெனக் குறிப்பிடலாம்.

ஆனால், இம்பீரியல் வங்கிக்கும், இதர வணிக வங்கிகளுக்குமிடையே இருந்த போட்டி பெருமளவில் மிகைப்படுத்தப்பட்டுள்ளது. இவ் வங்கி கிளைகள் இருந்த இடங்களுள் 50 விழுக்காட்டுப் பகுதி இடங்களில் வேறு வங்கி அலுவலகங்களே இல்லை. அதாவது அந்த இடங்களில் இம்பீரியல் வங்கி மட்டுமே தனித்துச் செயலாற்றி வந்தது. வேறு வணிக வங்கிகள் அலுவலகங்களைக் கொண்ட இடங்களில் குறைந்தவீத வட்டியில் கடனளிப்பதன் மூலம் இவ் வங்கி இதர வங்கிகளுடன் போட்டியிட்டது என்று கூறலாம். இவ்வாறு குறைந்த வீத வட்டியில் கடனளித்ததனால், தொழில் நிறுவனங்களும், வியாபாரிகளும் பெருமளவில் பயனடைந்தனர். ஆனால், இதர வங்கிகள், இம்பீரியல் வங்கி, அரசு பயன்படுத்தாத நிதியனைத்தையும் பயன்படுத்துவதால்தான், இது குறைந்தவீத வட்டியில் கடன்கொடுக்க முடிகின்றது எனக் குற்றம் சாட்டினர். ஆனால், புள்ளி விவரங்களுடன் இக் கூற்றை ஆராய்ந்து பார்த்தால் இது உண்மைக்குப் புறம்பானதென்பது நன்கு விளங்கும். அரசு நிதியினால் இவ் வங்கி பெற்ற பலனைவிட அரசுப் பணிக்காக இவ் வங்கி செலவிட்ட தொகை மிகக் கூடுதலாகவிருக்குமென்று கூறலாம். மேலும் அரசு வைப்புத் தொகை, வங்கியின் மொத்த வைப்புத்தொகையில் எந்த நிலையிலும் 17 விழுக்காட்டினைவிடக் கூடுதலாக இருந்ததில்லை. மேலும், நடப்பு வைப்புத்தொகைமீது இவ் வங்கி வட்டியேதும் செலுத்தாமலிருந்தும் இதனுடைய வைப்புத்தொகையில் பெரும்

பகுதி நடப்பு வைப்புத்தொகையாகவிருந்தது, எந்த அளவிற்கு மக்கள் இவ் வங்கிமீது நம்பிக்கை கொண்டிருந்தனர் என்பதனைக் காட்டுகின்றது.

இம்பீரியல் வங்கி, இதர வங்கிகளின் தலைமை வங்கி என்னும் நிலையை அடையும் வகையில், அவற்றினுடைய ஒத்துழைப்பைப் பெற விழைந்தது. ஆனால், அவ்வாறு ஒரு வணிக வங்கி இதர வங்கிகளின் ஒத்துழைப்பைப் பெற்றதாகவோ, அது அவற்றால் தலைமை வங்கியாக ஏற்றுக் கொள்ளப்பட்டதாகவோ வரலாற்றில்லை. எனவே, ஒரு வணிக வங்கியிடம், இதர வணிக வங்கிகள் உதவி நாடுவது அவற்றிற்கு இழுக்கு என்ற கருத்தினை இந்திய வங்கிகள் பொதுவாகக் கொண்டிருந்தன. ஒருசில சிறந்த வணிக வங்கிகளைத் தவிர இதர வங்கிகள், இம்பீரியல் வங்கியின் முக்கியத்துவத்தினை உணர்ந்ததாகத் தெரியவில்லை.

தனிப்பட்ட முறையில் மைய வங்கி நிறுவப்பட்டுவிட்டால் இவ் வங்கியின் முக்கியத்துவம் குறைந்துவிடுமென்று ஒரு பொதுப் படையான கருத்து நிலவி வந்தது. ஆனால், ரிசர்வ் வங்கி நிறுவப் பட்ட பிறகுகூட இம்பீரியல் வங்கி இந்திய வங்கிகளுள் தனிப்பட்ட இடத்தினைப் பெற்றுப் பணியாற்றிவந்தது. அரசின் வைப்புகள், இவ் வங்கியிடமிருந்து ரிசர்வ் வங்கிக்கு மாற்றப்பட்ட பிறகுகூட இவ் வங்கியின் மொத்த வைப்புத்தொகை இதர பெரும் வங்கிகளின் மொத்த வைப்புத்தொகையினைவிடக் கூடுதலாகவிருந்தது என்று கூறலாம். இம்பீரியல் வங்கி அளித்துவந்த கடன் தொகை, இந்திய மைய வங்கியான ரிசர்வ் வங்கி அளித்துவந்த கடன் தொகையினைவிடக் கூடுதலாகும். கருவூலச் சீட்டுகளைத்தவிர இதர சீட்டுகள் ரிசர்வ் வங்கியின் நடவடிக்கையில் இடம் பெறவில்லை. இது இம்பீரியல் வங்கி எந்த அளவிற்கு இந்தியப் பணச்சந்தையில் முக்கியத்துவம் பெற்றிருந்தது என்பதனை விளக்கும். எனவே, இம்பீரியல் வங்கியின் மிகுந்த நிதியின் காரணமாகவும், அது பணச்சந்தையில் கொண்டிருந்த புகழின் காரணமாகவும், இந்திய ரிசர்வ் வங்கி, இம்பீரியல் வங்கியுடன் இணைந்தே இந்தியப் பணச்சந்தையினைக் கட்டுப்படுத்த வேண்டியிருந்தது. இன்றும் இக் கோட்பாட்டினடிப்படையிலேயே ரிசர்வ் வங்கி, இந்தியன் ஸ்டேட் வங்கியுடன் இணைந்து, அதனுடைய நிதிக் கொள்கைகளையும், வங்கியக் கொள்கைகளையும் செயல் படுத்தி வருகிறது. எனவேதான், சட்டப்படி அவசியமெதுவு மில்லாதிருந்தும், ரிசர்வ் வங்கியைப் போன்றே இம்பீரியல் வங்கியும் தனது நடவடிக்கைகளைப்பற்றிய வாராந்தர அறிக்கை ஒன்றினை வெளியிட்டுவந்தது.

இம்பீரியல் வங்கியில் காணப்பட்ட குறைபாடுகள் : இம்பீரியல் வங்கி பணிபுரிவதில் கீழ்க்காணும் குறைபாடுகள் காணப்பட்டன :

(1) இம்பீரியல் வங்கி பம்பாய், கல்கத்தா, சென்னை ஆகிய மூன்று இடங்களிலும் நிரந்தர அலுவலகங்களைக்கொண்டு செயல்பட்டு வந்தது. இம்பீரியல் வங்கிக்கு, அந்த நிலையில் மூன்று அலுவலகங்கள் தேவையற்றவை என்றும், இதனால் வங்கி அதிகம் செலவுசெய்ய வேண்டியுள்ளதென்றும் அவ் வங்கியின் மீது குற்றம் சாட்டினர்.

(2) வங்கி கடன்வசதி யளிப்பதில் நேர்மைக் கோட்பாட்டினைக் கடைப்பிடிக்கவில்லை. இங்கிலாந்து நாட்டைச் சார்ந்த தனிப்பட்ட நபர்களுக்கும். ஆங்கிலேயர்களால் நடத்தப்பட்டு வரும் தொழில் நிறுவனங்களுக்கும் இவ் வங்கி கடனளிப்பதில் சலுகை காட்டியது என்பது அடுத்த குற்றச்சாட்டாகும்.

(3) இந்திய அரசிடம் உதவிபெறும் எந்த ஒரு நிறுவனமும் இந்தியப் பெரும்பான்மையினரால் நடத்தப்படவேண்டுமென்ற கோட்பாடு இருப்பினும்கூட இம்பீரியல் வங்கியின் பங்குநர்களுள் பெரும்பான்மையோர் ஆங்கிலேயர்களாகவே இருந்தனர்.

(4) வங்கி அலுவலர்களைப் பணியிலமர்த்துவதில் வங்கி நேர்மையினைக் கடைப்பிடிக்கவில்லை; ஓரவஞ்சனையாகவே நடந்துவந்தது என்பது அவ் வங்கிமீது எழுப்பப்பட்ட இன்னொரு குற்றச்சாட்டாகும். அதன்படி, வங்கியின் கீழ்நிலை அலுவலர்கள் பணியிலமர்த்தப்படும்போது இவ் வங்கி இந்திய அலுவலர்களுக்கு முக்கியத்துவம் கொடுத்துவந்தது. ஆனால், மேல்நிலை அலுவலர்களைப் பொறுத்தவரை, அப் பணிகளுக்குப் பொதுவாக இந்தியர்களை இவ் வங்கி விரும்பவில்லை. ஆங்கிலேயர்களையே அத்தகைய பணிகளுக்கு நியமித்தது.

(5) இம்பீரியல் வங்கி வளர்ந்துவந்த நிலையில் அது மாபெரும் நிறுவனமாகி, வங்கியியல் தொழிலில், முற்றுரிமை பெறும் நிலையை எய்தக்கூடுமென்ற கருத்துத் தெரிவிக்கப்பட்டது.

(6) இம்பீரியல் வங்கி அயல்நாட்டு வங்கிகளுடன் இணைந்து அவற்றுடன் உடன்பட்டுச் செயல்பட்டு வந்தது. ஆனால், அந்த அளவிற்கு அவை இந்திய வணிக வங்கிகளுடன் ஒத்துழைத்துப் பணிபுரியவில்லை.

(7) நாணயமாற்றுப் பணியினை இவ் வங்கி மேற்கொள்ளவில்லை. இதற்கு முக்கிய காரணம், இத் தொழிலில் ஈடுபட்டுள்ள

நாணயமாற்று வங்கிகள் பெரும்பாலும் ஆங்கிலேயர்களால் உரிமை கொள்ளப்பட்டிருந்ததேயாகும்.

(8) இவ் வங்கி கிராமப்புறங்களில் கிளை அலுவலகங்கள் திறந்து கிராம மக்களிடமிருந்து வைப்புத்தொகை திரட்டியதே தவிர அதனை அப் பகுதியிலேயே, அக் கிராமங்களும், கிராம மக்களும் முன்னேறும் வகையில் முதலீடு செய்யவில்லை.

இம்பீரியல் வங்கி செயல்பட்டதில் மேற்குறிப்பிட்ட குறை பாடுகள் காணப்பட்டன. ரிசர்வ் வங்கி நாட்டுடைமை யாக்கப்பட்ட உடன், மக்கள், இம்பீரியல் வங்கியும் நாட்டுடைமையாக்கப்பட்டு விடுமென்ற கருத்துக் கொண்டிருந்தனர். ஒருசிலர் இவ் வங்கி உடனே நாட்டுடைமையாக்கப்பட வேண்டுமென்று வெளிப்படையாகவே வாதாடவும் தொடங்கினர். ஆனால், வங்கியின் பங்குநர்கள், வங்கி நாட்டுடைமையாக்கப்படும் திட்டத்தினை வன்மையாக எதிர்த்தனர். அவசியமானால், அவ் வங்கி, அதற்கு அளிக்கப்பட்டிருந்த சிறப்புச் சலுகைகள் அனைத் தையும் இழக்கத் தயாராக இருப்பதாகவும் வாதாடினர். இதற் கிடையில் இம்பீரியல் வங்கியினை நாட்டுடைமையாக்க வேண்டு மென்ற கூக்குரல் சற்றுக் குறைந்தது. அதற்கு ஆதரவு தரும் வகையில் கிராம வங்கியியல் விசாரணைக் குழுவின் (Rural Banking Enquiary Committee) பரிந்துரைகள் அமைந்தன.

இந்திய கிராமிய வளர்ச்சிக்குக் கூட்டுறவு இயக்கம் முதுகெலும்புபோல் அமைந்துள்ளதால். கூட்டுறவு இயக்கத்தினைச் செம்மைப்படுத்தப் பரிந்துரைகள் வழங்கும்முகத்தான்வேண்டி, மாநில அரசு, மைய அரசு, மைய வங்கி ஆகியவை அவ்வப் பொழுது குழுக்கள் அமைப்பது மரபு. அவ்வாறு அமைக்கப்பட்ட குழுக்களுள் ஒன்றே இந்திய கிராமக் கடன் விசாரணைக் குழுவாகும். இந்திய மைய வங்கியான ரிசர்வ் வங்கியால், திரு. A. D. கோர்வாலா எனும் வல்லுநரைத் தலைவராகக்கொண்ட இக் குழு, அதனுடைய பரிந்துரைகளைத் தனது அறிக்கைமூலம் 1954ஆம் ஆண்டிறுதியில் வெளியிட்டது. அதனுடைய கூற்றுப்படி 'இந்தியாவில் கூட்டுறவு இயக்கம் தோற்றுவிட்டது. ஆனால், அவ்வியக்கம் வெற்றி பெறவேண்டும்'. இந்தியாவில் கூட்டுறவு இயக்கம் உரியமுறையில் வளர்ச்சி யடையாததற்கான காரணங்களை விளக்கிய இக் குழு, கிராமப் பகுதிகளில் போதிய வங்கி வசதி இல்லாததும் ஒரு காரணமென்பதனைச் சுட்டிக் காட்டிற்று. கிராம வங்கியியல் விசாரணைக்குழு தன் பரிந்துரையில் பாதி அளவுகூட இம்பீரியல் வங்கி, கிராமங்களில் கிளைகளைத் திறக்கவில்லை என்பதனையும் சுட்டிக்காட்டிற்று. ஐந்தாண்டுக்

காலத்தில் 270 கிளை அலுவலகங்கள் திறக்கப்படவேண்டுமென்று அக் குழு பரிந்துரைத்திருப்பினும் வங்கி 1951ஆம் ஆண்டுமுதல் ஐந்தாண்டுகளுக்குள் 114 கிளை அலுவலகங்களை மட்டுமே திறக்கத் திட்டமிட்டிருந்தது.

விரைவாகக் கிளைகள் திறந்து கிராமங்களில் வங்கியியல் முறையினை வளர்ச்சியுறச் செய்தல் வேண்டுமென்பது கிராம விசாரணைக் குழுவின் முக்கிய பரிந்துரையாகும். ஆனால், கிராமங்களில் திறக்கப்படும் வங்கியியல் அலுவலகங்கள் போதிய இலாபமீட்டுமென்று கூறமுடியாது. ஒருசில ஆரம்பகாலங்களில் அதிக அளவில் நட்டமடையவும் கூடும். இந்த நிலையில் தனியார்துறை வங்கிகள் கிராமங்களில் கிளைகளைத் திறக்க முன்வரமாட்டா. இந் நிலையினைச் செம்மைப்படுத்துமளவில் அகில இந்திய கிராமக் கடன் விசாரணைக்குழு, அரசால் தனிப்பட்டமுறையில் ஒரு வணிக வங்கி நிறுவப்பட வேண்டுமென்று பரிந்துரைத்தது. தனிப்பட்ட முறையில் புதிதாக வணிக வங்கி தொடங்குவதைவிட, சில சலுகைகளைப் பெற்றுப் பெருமளவில் தொழில் புரிந்துவந்த இம்பீரியல் வங்கியினை நாட்டுடைமையாக்கி அதனை இந்திய ஸ்டேட் வங்கியாக மாற்றி அதனுடன் அரசுத் தொடர்புள்ள பத்து வங்கிகளை இணைத்துவிடலாமென்றும் பரிந்துரைத்தது. எனவே, மைய அரசு, இக் குழுவின் பரிந்துரையினை ஏற்று இம்பீரியல் வங்கியினை நாட்டுடைமையாக்குவதென்று முடிவு செய்தது. ஆனால், வங்கியின் பங்குநர்கள் இத் திட்டத்தினைப் பெரிதும் எதிர்த்தனர். அந்த எதிர்ப்பையும் பொருட்படுத்தாது அப்போதைய நிதியமைச்சர் இம்பீரியல் வங்கியினை நாட்டுடைமையாக்குவது குறித்த அறிவிப்பினை 1954ஆம் ஆண்டு டிசம்பர்த் திங்கள் 20ஆம் நாள் வெளியிட்டார்.

இம்பீரியல் வங்கி நாட்டுடைமையாக்கப்பட்டதன் காரணங்கள்: இம்பீரியல் வங்கி கீழ்க்காணும் காரணங்களினால் நாட்டுடைமையாக்கப்பட்டதென்று கூறலாம். அவையாவன :

(1) தேவைக்குமீறி, சென்னை, கல்கத்தா, பம்பாய் ஆகிய இடங்களில் நிரந்தர அலுவலகங்களைக் கொண்டு பணிபுரிந்தது.

(2) இவ் வங்கி கடன்வசதி யளிப்பதில் நேர்மையினைக் கடைப்பிடிக்காது, ஆங்கிலேயர்களுக்கும், அவர்களது நிறுவனங்களுக்குமட்டுமே கடனுதவி செய்துவந்தது.

(3) இந்திய அரசிடம் உதவிபெற்றாலும், இவ் வங்கியின் பங்குநர்களுள் பெரும்பாலோர் ஆங்கிலேயர்களாகவே இருந்தனர்.

(4) வங்கியில் அலுவலர்களை நியமிக்கும்போதும் நேர்மைக் கோட்பாட்டினைக் கடைப்பிடிக்கவில்லை. கீழ்நிலைப் பணிகளில் மட்டும் இந்தியர்களை நியமித்துவிட்டு மேல்நிலைப் பணிகளுக்கு ஆங்கிலேயர்களையே நியமித்து வந்தது.

(5) இவ் வங்கி முற்றுரிமை பெறும் நிலையிலிருந்தது. தனியார்துறை வங்கி தொழில் முற்றுரிமை பெறுவது விரும்பத் தக்கதன்று என்று வல்லுநர்கள் கருத்துக் கொண்டிருந்தனர்.

(6) இவ் வங்கி அயல்நாட்டு வங்கிகளுடன் இணைந்து ஒத்துழைத்துப் பணிபுரிந்த அளவுக்கு இந்திய வங்கிகளுடன் இணைந்து ஒத்துழைக்கவில்லை.

(7) நாணயமாற்றுப் பணியினை இவ் வங்கி மேற்கொள்ளாதது இவ் வங்கியின் குறைபாடுகளுள் முக்கியமானதொன்றாகும்.

(8) கிராமப்புறங்களிலிருந்து திரட்டப்பட்ட வைப்புத் தொகை நகர்ப்புறங்களில் முதலீடு செய்யப்பட்டதேதவிர, கிராமங்களும் கிராம மக்களும் முன்னேறும் வகையில் முதலீடு செய்யப்படவில்லை.

(9) நாடு விடுதலைபெற்ற உடன் எல்லா வணிக வங்கிகளையும் நாட்டுடைமையாக்கவேண்டுமென்பதனை அரசு கொள்கையளவில் அப்பொழுதே ஏற்றுக்கொண்டது. அவ்வாறு வணிக வங்கிகளை நாட்டுடைமையாக்குவதன் விளைவு எவ்வாறு இருக்குமென்பதனை அறிந்துகொள்ள ஒரு மாதிரியாகப் பெரும் வணிக வங்கியான இம்பீரியல் வங்கியினை நாட்டுடைமையாக்க விரும்பியது.

(10) இவ் வங்கி பெருமளவில் இலாபமீட்டி வந்தது. அவ்வளவும் வங்கியின் பங்குநர்களுக்குச் செலுத்தப்படுவதை அரசு விரும்பவில்லை. அவ் வங்கி நாட்டுடைமையாக்கப்பட்டு விட்டால் அந்த இலாபத்தொகை நாட்டு வளர்ச்சிக்குப் பயன் படுத்தப்படலாமென்று அரசு கருதியது.

(11) ரிசர்வ் வங்கி தொடங்கப்பட்ட பிறகு, இம்பீரியல் வங்கி, மைய வங்கியின் பணிகளைப் புரியவில்லை எனினும், ரிசர்வ் வங்கிக்குக் கிளை அலுவலகங்கள் இல்லாத இடங்களில் இவ் வங்கியே அதனுடைய முகமை வங்கியாகப் பணியாற்றியது. அரசுக் கணக்குகளையும் நிருவகித்து வந்தது. எனவே, பொது மக்கள், இந்த வங்கியும் நாட்டுடைமையாக்கப்படுவதே சிறந்தது என்ற கருத்துக் கொண்டிருந்தனர்.

(12) நூற்றுக் கணக்கான கிளைகளையும், மிக அதிகமான வைப்புத்தொகையினையும் கொண்டிருந்த இம்பீரியல் வங்கியை,

அது தனியார் துறை வங்கி என்ற காரணத்தினால், ரிசர்வ் வங்கியால் அதனைக் கட்டுப்படுத்த முடியவில்லை. எனவே, அதனை நாட்டுடைமையாக்குவதன் மூலம் கட்டுப்படுத்தி, அதனுடன் இணைந்து செயல்பட முடியுமென்று கருத்துத் தெரிவிக்கப்பட்டது.

(13) இம்பீரியல் வங்கி மைய வங்கியாக 1935ஆம் ஆண்டு வரை பணிபுரிந்தது. அதன்பிறகு மைய வங்கியாக நிறுவப்பட்ட ரிசர்வ் வங்கி நாட்டுடைமையாக்கப்பட்டதனால், அதன் முன்னோடியாகத் திகழ்ந்த இம்பீரியல் வங்கியினையும் நாட்டுடைமையாக்குவதே உரிய முறை என்ற கருத்தும் தெரிவிக்கப்பட்டது.

(14) ரிசர்வ் வங்கி, இம்பீரியல் வங்கியின் ஒத்துழைப்பின்றி, அதனுடைய பணவியல் கோட்பாட்டினை நாட்டில் செயல்படுத்த முடியாது என்றதொரு நிலைமை உருவாயிற்று. எனவே, அவ் வங்கி தனியார்துறை வங்கியாக இருப்பது நாட்டு நலனுக்குகந்ததன்று என்ற கருத்தும் தெரிவிக்கப்பட்டது.

(15) இம்பீரியல் வங்கி நாட்டுடைமையாக்கப்படுவதற்கு முன்னரே அரசு வங்கியின் எல்லாச் சலுகைகளையும் பெற்றுத் திகழ்ந்தது. எனவே, அந்த நிலையில் நாட்டுடைமையாக்குதல் என்பது உடைமையினை அரசுக்கு மாற்றிக்கொடுத்தல் என்பது ஒன்றுதான் வங்கியியலில் ஏற்படக்கூடிய மாற்றமாக இருக்குமென்ற கருத்தும் தெரிவிக்கப்பட்டது.

(16) இம்பீரியல் வங்கி நாட்டுடைமையாக்கப்பட்டு விட்டால் அவ் வங்கிக்கும், இதர வணிக வங்கிகளுக்குமிடையே நிலவிய தேவையற்ற போட்டி, கசப்புணர்ச்சி முதலியன களையப்பட்டு அவற்றிற்கிடையே ஒற்றுமை நிகழ வாய்ப்புள்ளதுமட்டுமின்றி இதர வணிக வங்கிகள், எவ்விதக் கூச்ச மனப்பான்மையுமின்றி இம்பீரியல் வங்கியிடமிருந்து கடன் பெற வாய்ப்பெழும் என்ற கருத்தும் தெரிவிக்கப்பட்டது.

(17) கிராமப்புறங்களில் வங்கிகள் திறப்பது இலாபகரமாக அமைவதில்லை. எனவே, தனியார்துறை வங்கிகள், நிச்சயமாகக் கிராமங்களில் கிளை அலுவலகங்களைத் திறக்க முன்வரமாட்டா. இந்த நிலையில் இம்பீரியல் வங்கியினை நாட்டுடைமையாக்குவதன் மூலம், அவ் வங்கி கிராமப் பகுதிகளில் கிளை அலுவலகங்கள் திறப்பதற்கான சூழ்நிலையை உருவாக்கலாமென்ற திட்டத்தினை வல்லுநர்கள் வெளியிட்டனர்.

(18) கிராமக் கடன் விசாரணைக் குழுவின் பரிந்துரைப்படி கூட்டுறவுச் சங்கங்களுக்கு உதவும் வகையில், அரசுக்

கூட்டுடனை ஒரு வணிக வங்கி நிறுவுதல் அவசியமாயிற்று. அக் குழுவின் இப் பரிந்துரையினை, இம்பீரியல் வங்கியினை நாட்டுடைமை ஆக்குவதன்மூலம் எளிதிற் செயல்படுத்தலாமென்ற கருத்தினையும் அரசுக்கு வல்லுநர்கள் தெரியப்படுத்தினர்.

(19) இம்பீரியல் வங்கியினை நாட்டுடைமையாக்குவதன் மூலம், அதனைச் சிறுதொழில் நிறுவனங்களுக்குக் கடனுதவி அளிக்க ஊக்குவிக்க முடியுமென்றும் கூறப்பட்டது.

(20) இம்பீரியல் வங்கி 1935ஆம் ஆண்டுவரை அரசு வங்கியாகப் பணியாற்றியது. எனவே, அரசுப் பணத்தினைக் கொண்டு எவ்விதச் சிக்கலுமின்றி மிகுந்த அளவில் கிளை அலுவலகங்களைத் திறந்தது. ஆனால், ரிசர்வ் வங்கி நிறுவப்பட்ட பிறகு, அந்த அளவு நிதிவசதி பெற வாய்ப்பில்லையாதலின், இம்பீரியல் வங்கி அதனுடைய கிளை அலுவலகங்களை மூட வேண்டிய அவசியமெழலாமென்றும், ஆனால், இவ் வங்கியினை நாட்டுடைமையாக்கிவிட்டால், அரசு போதிய அளவில் நிதியுதவி அளிக்குமாதலின் அந்த நிலையினைச் சிக்கலின்றி எளிதில் தீர்த்து விடலாமென்றும் ஒருசிலர் கருத்துத் தெரிவித்தனர்.

மேற் குறிப்பிட்ட காரணங்களினால், இந்திய அரசு இம்பீரியல் வங்கியினை நாட்டுடைமையாக்க முடிவு செய்ததனால் அதுகுறித்த ஒரு மசோதா பாராளுமன்றத்தில் அளிக்கப்பட்டு, அது இந்தியக் குடியரசுத் தலைவரின் ஒப்புதலை 1955ஆம் ஆண்டு மே மாதம் 8ஆம் தேதி பெற்று இந்திய ஸ்டேட் வங்கிச் சட்டமாகியது. அந்தச் சட்டத்தின்படி 1955ஆம் ஆண்டு சூலைத் திங்கள் 1ஆம் நாள் இந்திய ஸ்டேட் வங்கி செயல்படத் தொடங்கியது. அவ்வாறு இம்பீரியல் வங்கி நாட்டுடைமையாக்கப்பட்டபோது அது வணிக வங்கிகளின் அலுவலகங்களில் 1/6 பகுதியினையும் மொத்த வங்கிய வைப்புத்தொகைகளில் ஏறத்தாழ 30 விழுக் காட்டுப் பகுதியினையும் கொண்டிருந்தது. இவ்வாறு இம்பீரியல் வங்கி நாட்டுடைமையாக்கப்பட்டதனால் மூன்று விளைவுகள் எதிர்பார்க்கப்பட்டன. இவ் வங்கி நாட்டுடைமையாக்கப்பட்ட ஐந்தாண்டுக் காலங்களில் 400 கிளை அலுவலகங்களைத் திறக்க முடிவுசெய்தது. இலாபங் கருதாது, கிராமப் பகுதிகளிலும் கிளைகள் திறக்க முடிவு செய்தது. நாணயமாற்றுப் பணியினை மேற்கொள்ள முடிவு செய்தது.

இந்திய ஸ்டேட் வங்கியின் அமைப்பும் நிருவாகமும் : 1955ஆம் ஆண்டு இந்திய ஸ்டேட் வங்கிச் சட்டப்படி, இவ் வங்கி அந்த ஆண்டு சூலைத் திங்கள் முதல் தேதியிலிருந்து செயல்படத்

தொடங்கியது. இம்பீரியல் வங்கியின் சொத்துகளும், பொறுப்பு களும் இந்திய ஸ்டேட் வங்கிக்கு மாற்றப்பட்டன. எனவே, இம்பீரியல் வங்கியின் பங்குகள் யாவும் ரிசர்வ் வங்கிக்கு மாற்றம் செய்யப்பட்டன. முற்றும் செலுத்தப்பட்ட பங்குகளைக்கொண்ட பங்குநர்களுக்குப் பங்கு ஒன்றுக்கு ரூ. 1765—10—0 வீதமும், பகுதி செலுத்தப்பட்ட பங்கு ஒவ்வொன்றுக்கும் ரூ. 441—6—6 வீதமும் நிறையீடு (Compensation) வழங்கப்பட்டது. ரூ. 10,000க்கும், அதற்குக் குறைவான நிறையீட்டிற்கு ரொக்கமும், அதற்கு மேற்பட்ட தொகைக்கு இந்திய அரசின், 1965ஆம் ஆண்டு பணம் பெறத்தக்க 3·5 விழுக்காட்டுக் கடன் பத்திரங்களும் தரப்பட்டன. பங்குநர்கள், நிறையீட்டுக்கான பணத்தை, ரொக்கத்திற்குப் பதிலாக ரூ. 100 மதிப்புள்ள இந்திய ஸ்டேட் வங்கிப் பங்கினை ரூ. 350 என்ற கணக்கில் பெற்றுக் கொள்ளவும் அனுமதிக்கப்பட்டனர். வங்கியின் மைய இயக்குநரவை ஆரம்பத்தில் ரூ. 5,62,50,000-யை வெளியிட்ட முதலாகத் திரட்டியது. இத் தொகையினைத் தேவைப்படும்போது உயர்த்தித் திரட்டும் உரிமையினையும் இவ்வியக்குநரவை பெற்றுள்ளது. ஆனால், அவ்வாறு உயர்த்தும்போது வெளி யிட்டுள்ள பங்குகளில் குறைந்தது 55 விழுக்காட்டுப் பகுதியாவது ரிசர்வ் வங்கி பெற்றிருத்தல் வேண்டும். மேலும் மைய அரசின் அனுமதியின்றி வங்கியின் வெளியிட்டமுதல் ரூ.12,50,00,000க்கு மிகக்கூடாது. எந்த ஒரு நபரும், தனியாகவோ, வேறு நபர்க ளுடன் இணைந்து கூட்டாகவோ இவ் வங்கியிடமிருந்து 200க்கு மேற்பட்ட பங்குகளைத் தங்கள் பெயரில், அல்லது தம் பெயரில் வாங்குதல் கூடாது. இத்தகைய கட்டுப்பாடு ரிசர்வ் வங்கி, ஒரு கூட்டுறு, காப்பிட்டுறுதிக் கம்பெனி, உள்ளாட்சி ஆணையம், கூட்டுறவுச் சங்கம், பொது அல்லது தனியார், மத அறப் பொறுப் புரிமை அமைப்பு ஆகியவற்றிற்குப் பொருந்தாது. இந்திய ரிசர்வ் வங்கியைத் தவிர ஏனைய பங்குநர்களில் எவரும் அல்லது எந்த ஒரு நிறுவனமும், வங்கி வெளியிட்டுள்ள முதலில் ஒரு விழுக்காட்டிற்கு மிகுதியான அளவிற்கு வாக்குரிமையினைப் பெற முடியாது.

இந்திய ஸ்டேட் வங்கியின் மைய அலுவலகம் பம்பாயில் நிறுவப்பட்டுள்ளது. பம்பாய், கல்கத்தா, சென்னை, கான்பூர், அகமதாபாத், ஹைதராபாத் ஆகிய இடங்களில் உள்ளூர்த் தலைமையகங்களும் உள்ளன. மைய அரசு, வங்கியின் மைய இயக்குநரவை விருப்பப்படி, வங்கி, இந்தியாவில் இதர இடங் களிலும், உள்ளூர்த் தலைமையகங்களைத் தொடங்கலாம். இம்பீரியல் வங்கியின் கிளை அலுவலகங்கள் எல்லாவற்றையும் தொடர்ந்து

நடத்துவது மட்டுமின்றி ஸ்டேட் வங்கி நிறுவிய ஐந்தாண்டுக் காலங்களுக்குள் மேலும் 400 கிளை அலுவலகங்களைத் திறக்க வங்கி நிருவாகத்தினர் ஒப்புக்கொண்டனர். இக் கிளைகள் மைய அரசு வகுக்கும் திட்டப்படி திறக்கப்பட வேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்டது. ரிசர்வ் வங்கியின் முன் அனுமதியின்றி இந்திய ஸ்டேட் வங்கி எந்த ஒரு கிளை அலுவலகத்தையும் மூடக் கூடாது என்றும் கட்டுப்பாடு விதிக்கப்பட்டது. இவ் வங்கி வெளி நாடுகளில் கிளைகளை நிறுவவும், முகமையகங்களை அமைக்கவும் ஸ்டேட் வங்கிச் சட்டம் இடமளித்தது. பொதுமக்கள் நலத்தைக் காத்தும், வங்கியியல் கோட்பாடுகளைக் கடைப் பிடித்தும் வங்கி நிருவகிக்கப்படும் வகையில் அதனுடைய மேலாண்மைப் பொறுப்பு, கட்டுப்பாடு செய்யும் உரிமையும், வங்கியின் மைய இயக்குநரவையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. பொதுமக்கள் நலனைப் பாதுகாக்கும் வகையில் இவ் வங்கி மேலாண்மை செய்யும் வகையில், இதற்கு ரிசர்வ் வங்கியின் ஆளுநரையும் ஸ்டேட் வங்கியின் பெருந் தலைவரையும் கலந்தாலோசித்து மைய அரசு தக்க ஆணைகளைப் பிறப்பிக்கலாம்.

ஸ்டேட் வங்கியின் மைய அவை முதன் முதலாக அமைக்கப் பட்டபோது அதன் உறுப்பினர்கள் யாவரும் மைய அரசால் நியமனம் செய்யப்பட்டனர். எனவே வங்கியின் பெருந்தலைவர், துணைப் பெருந்தலைவர், மற்றும் நிருவாக இயக்குநர்கள் நீங்கலாக ஏனைய இயக்குநர்கள் யாவரும் இரண்டாண்டுகளில் ஓய்வு பெற வேண்டியிருந்தது. பொதுவாக வங்கியின் மைய இயக்குநரவை, கீழ்க்காணும் இருபது உறுப்பினர்களைக் கொண்டு செயல் படுகின்றது.

(1) மைய இயக்குநரவையின் பரிந்துரையின்படியும், ரிசர்வ் வங்கியின் ஆலோசனையின்படியும் மைய அரசால் நியமனம் செய்யப்படும் ஒரு பெருந்தலைவர் (Chairman), ஒரு துணைப் பெருந் தலைவர் (Vice-Chairman).

(2) மைய அரசின் ஒப்புதலுடன், மைய இயக்குநரவையால் நியமனம் செய்யப்படும் இரண்டிற்கும் மிகையாகாத நிருவாக இயக்குநர்கள்.

(3) ரிசர்வ் வங்கியல்லாத பிற பங்குநர்கள் தேர்ந்தெடுக்கும் ஆறு இயக்குநர்கள்.

(4) ரிசர்வ் வங்கியைக் கலந்தாலோசித்துக்கொண்டு மைய அரசால் நியமனம் செய்யப்படும் எட்டு இயக்குநர்கள். இவர்கள் பொதுவாக நாட்டின் பற்பல பகுதிகளைச் சார்ந்தவர்களாகவும்,

நாட்டின் பல்வேறு பொருளாதார நலன்களைச் சார்ந்தவர்களாகவும் இருத்தல் வேண்டும். அவர்களுள் இருவராவது கிராமப் பொருளாதாரம், கூட்டுறவு அமைப்புகளின் நடைமுறை விவரங்களை அறிந்தவர்களாகவும், எஞ்சியோர் வணிகம், தொழில், வங்கியத் துறை நிதியியல் ஆகியவற்றில் செயலறிவு கொண்டவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

(5) மைய அரசால் நியமிக்கப்படும் ஓர் இயக்குநர்.

(6) ரிசர்வ் வங்கியால் நியமனம் செய்யப்படும் ஓர் இயக்குநர்.

பெருந்தலைவர், துணைப் பெருந்தலைவர், நிருவாக இயக்குநர்கள் ஆகியோர் ஐந்தாண்டுக் காலத்திற்கு மிகாது மைய அரசு நிர்ணயிக்கும் காலம்வரை பதவியிலிருப்பர். அவர்களுடைய பதவிக் காலம் முடிந்தபிறகு, மீண்டும் நியமனம் செய்யப்படலாம். பங்குநர்களால் தேர்ந்தெடுக்கப்படும் இயக்குநர்களும், பல பகுதிகளையும், பொருளாதார நலன்களையும் சார்ந்துள்ள நிலையில் மைய அரசால் நியமனம் செய்யப்படும் இயக்குநர்களும், பங்குநர்களால் தேர்ந்தெடுக்கப்படும் இயக்குநர்களும் நான்காண்டுக் காலம்வரை பதவியிலிருப்பர். இவர்கள் மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட அல்லது நியமனம் செய்யப்படத் தகுதியுடையவர்கள். இதர, நியமனம் செய்யப்பட்ட இயக்குநர்கள் அவர்களை நியமனம் செய்தவர்கள் விரும்பும்வரை பதவியிலிருப்பர்.

ஸ்டேட் வங்கியின் உள்ளூர்த் தலைமை அலுவலகமுள்ள ஒவ்வோர் இடத்திலும், தனியாக ஓர் உள்ளூர் இயக்குநரவை அமைக்கப்பட்டுள்ளது. இந்த உள்ளூர் இயக்குநரவையில், உள்ளூர்த் தலைமை அலுவலகம் செயல்படும் இடத்திலிருந்து மைய இயக்குநரவைக்கு அப் பகுதியிலுள்ள பங்குநர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட இயக்குநர்கள், உள்ளூர் எல்லை, பொருளாதார நலனைக் குறிக்கும் வகையில் அக் குறிப்பிட்ட பகுதியிலிருந்து மைய அவைக்கு மைய அரசு, ரிசர்வ் வங்கியுடன் கலந்தாலோசித்து நியமனம் செய்த இயக்குநர்கள், உள்ளூர்ப் பங்குநர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட நான்கிற்கு மேற்படாத இயக்குநர்கள் ஆகியோர் இடம்பெறுவர். மைய அவை அதன் விருப்பப்படி ஒரு குறிப்பிட்ட உறுப்பினர்களைக் கொண்ட ஓர் உள்ளூர்க் குழு (Local Committee) ஒன்றினையும் நியமிக்கலாம். உள்ளூர்க் குழுவும், உள்ளூர் இயக்குநரவையும் மைய அவை நிர்ணயிக்கும் பணிகளைப் புரிகின்றன. இவற்றினுடைய அதிகாரங்களும் மைய அவையாலேயே நிர்ணயிக்கப்படுகின்றன.

வேறொரு வங்கியக் கம்பெனியில் இயக்குநராகவோ, மேலாள ராகவோ பணிபுரிபவரும், மைய அரசின் தனிப்பட்ட அனுமதி பெறுத அரசு அலுவலர் எவரும், ஊழல் காரணமாக அரசுப் பணியிலிருந்து நீக்கப்பட்ட எவரும், ஸ்டேட் வங்கியின் பெருந் தலைவர், துணைப் பெருந்தலைவர் அல்லது மேலாண்மை இயக்குநர் எனும் நிலையிலிருந்து ஊதியம் பெறும் நபர்களைத்தவிர வேறு முறையில், ஸ்டேட் வங்கியில் பணியாற்றும் எவரும், தொடித்தவர் எனத் தீர்ப்பளிக்கப்பட்டவர் அல்லது தமது கடனுளரும் தமது கடனைத் தீர்க்க ஏற்பாடு செய்துகொண்ட எந்த ஒரு நபரும், சம மன நிலையற்ற எவரும், ஒழுக்கமின்மைக் குற்றத்திற்காகத் தண்டிக்கப்பட்ட எவரும் மைய இயக்குநரவையிலோ, அல்லது உள்ளூர் அவையிலோ அல்லது உள்ளூர்க் குழுவிலோ உறுப்பின ராக இருக்கத் தகுதியற்றவராவார். பங்குநர்களால் தேர்ந்தெடுக் கப்படும் ஒவ்வோர் இயக்குநரும் ரூ. 5,000 இயல்பு மதிப்புள்ள (Nominal Value) பங்குகளை ஸ்டேட் வங்கியின் வில்லங்கமற்ற பங்குகளாகத் தம்முடைய பெயரில் பதிவுசெய்து வைத்திருத்தல் வேண்டும். அதுபோன்றே தேர்ந்தெடுக்கப்படும் ஒவ்வொரு குழு உறுப்பினரும் ரூ. 1000-க்குக் குறையாத இயல்பு மதிப்புள்ள பங்குகளைத் தமது பெயரில் பதிவு செய்துவைத்திருத்தல் வேண்டும். பாராளுமன்ற உறுப்பினர், சட்டமன்ற உறுப்பினர் ஆகியோர், வங்கியின் மைய அவையிலோ, உள்ளூர் அவையிலோ, உள்ளூர்க் குழுவிலோ உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டாலும், அல்லது நியமிக்கப்பட்டாலும், இரண்டு திங்களுக்குள் அப் பதவியிலிருந்து விலகிவிட வேண்டும். இல்லையேல் அந்த இயக்குநர் அல்லது உறுப்பினர் பதவித் தேர்தல் அல்லது நியமனம் செல்லாததாகிவிடும்.

ஸ்டேட் வங்கியின் பணிகள்: இந்திய ஸ்டேட் வங்கி இதர வணிக வங்கிகளைப் போன்றதேயாகும். எனவே இவ் வங்கியும் இதர வங்கிகளைப்போன்று எல்லா வணிக வங்கிகளின் பணிகளையும் புரிகின்றது. எல்லாப் பணிகளையும் சேர்த்து, ஸ்டேட் வங்கி கீழ்க்காணும் பணிகளைப் புரிகின்றது:

(1) இந்திய ரிசர்வ் வங்கிக்குக் கிளை அலுவலகம் இல்லாத இடங்களிலெல்லாம் இவ் வங்கி முகமை வங்கியாகப் பணி புரிகின்றது.

(2) இதர வணிக வங்கிகளைப் போன்று பல்வகையான வைப்புகள் மூலம் பணம் திரட்டுதலும், திரட்டிய பணத்தினை முதலீடு செய்தலும்.

(3) கடன் வாங்கிய நபர், வாங்கிய கடனைத் திருப்பிச் செலுத்தாத நிலையில், அவர் ஈடாகக் கொடுத்த பிணையத்தை விற்பனை செய்தல்.

(4) மாற்றுச் சீட்டுகளையும், இதர செலாவணிப் பத்திரங்களையும், எழுதுதல், ஏற்றுக்கொள்ளுதல், வாங்குதல், விற்பனை செய்தல், கழிவுசெய்து பணம் அளித்தல் போன்ற பணிகளைப் புரிதல்.

(5) பணவிடை அளித்தல், வாடிக்கைக்காரர்களுக்கும், இதர பொதுமக்களுக்கும் பணத்தை ஓரிடத்திலிருந்து வேறு இடங்களுக்கு மாற்றி அனுப்புதல்.

(6) வெள்ளி, தங்கம் போன்ற உலோகங்களை வாங்குதல், விற்பனைசெய்தல்.

(7) கூட்டுறவு வங்கிகளுக்கு முகவராகப் பணியாற்றுதல்.

(8) தொழில் நிறுவனங்கள் வெளியிடும் பத்திரங்களை ஒப்புறுதி செய்தல். அவ்வாறு ஒப்புறுதி செய்யும் பத்திரங்கள் இவ்வங்கியால் முதலீடு செய்யத்தக்க பத்திரங்களாகவே இருத்தல் வேண்டும்.

(9) வாடிக்கைக்காரர்களுக்கு முகமைப் பணிகள் புரிதல்.

(10) பொறுப்பாண்மையராகப் பணிபுரிதல்.

(11) ஒரு கம்பெனி, அல்லது ஒரு கூட்டுறவு நிறுவனம் முறிவுபடுவதைத் தடுக்கும் வகையிலோ அல்லது முறிவுபடுதலைச் செயலாக்கும் வகையிலோ அந் நிறுவனத்திற்குக் கடனுதவி செய்தல்.

(12) ரிசர்வ் வங்கியின் ஒப்புதலுடன், வேறு வங்கிகளின் பங்குகளை வாங்குதலும், ஸ்டேட் வங்கிக்குத் துணை வங்கிகளை நிறுவுதலும்.

(13) அயல்நாட்டுச் செலாவணியில் ஈடுபடுதல்.

(14) மைய அரசால் குறிப்பிடப்படும் இதர பணிகளைப் புரிதல்.

வங்கியால் தவிர்க்கப்படவேண்டிய நடவடிக்கைகள்: ஆரம்ப நிலையில் இவ் வங்கி 6 திங்களுக்குமேல் கடனளிப்பது தடுக்கப் பட்டிருந்தது. இத்தகைய கட்டுப்பாடு இன்று நீக்கப்பட்டு விட்டது.

இரண்டாவதாக, இவ் வங்கி, அதனுடைய பங்கினைப் பிணையமாகக்கொண்டு கடன் வழங்க முடியாது.

மூன்றாவதாக ஆரம்ப நிலையில் இவ் வங்கி அசையாச் சொத்துகளைப் பிணையமாகக்கொண்டு நீண்டகாலக் கடன் கொடுப்பது அனுமதிக்கப்படவில்லை. ஆனால், இக் கட்டுப்பாடு

இன்று இல்லை. எனவே, இவ் வங்கி அசையாச் சொத்துகளைப் பிணையமாகக் கொண்டு நீண்டகாலக் கடன் கொடுக்கலாம்.

நான்காவதாக, மாற்றுச் சீட்டுகளைக் கழிவு செய்வதன்வழி ஒரே நிறுவனத்திற்கு மிகக் கூடுதலான அளவு நிதிவசதியளிப்பது தடை செய்யப்பட்டுள்ளது.

இறுதியாக, பருவகால வேளாண்மை நடவடிக்கைகளுக்கு இவ் வங்கி 15 திங்கள்களுக்குமேல் கடன் வழங்க முடியாது.

இந்திய ஸ்டேட் வங்கிச் சட்டம் 1957ஆம் ஆண்டு திருத்தப் பட்டது. அதன்படி ஸ்டேட் வங்கி ஆறு திங்கள்களுக்குமேல் கடனளிக்கும் உரிமை பெற்றது. இத் திருத்தச் சட்டத்தின்படி இவ் வங்கி அசையாச் சொத்துகளைப் பிணையமாகக்கொண்டும் கடன் வழங்கலாம். மேலும் நிதி நிறுவனங்களின் மூலதனத்தில் பங்குபெறும் உரிமையினையும் இவ் வங்கி இத் திருத்தச் சட்டத் தின்படியே பெற்றது. கிராமப்புறங்களில் கிளைகளைத் திறப்பதனால் ஏற்படும் நட்டத்தினை ஈடுகட்டும் வகையில், இவ் வங்கி இதனுடைய இலாபத்திலிருந்து ஒரு குறிப்பிட்ட தொகையினை ஆண்டுதோறும் ஒதுக்கி 'ஒருங்கிணைப்பு மற்றும் வளநிதி' (Integration and Development Fund) என்ற நிதி ஒன்றினைத் தொடங்கியுள்ளது. இவ் வங்கியின் கணக்குகளும் தகுதிபெற்ற தணிக்கையாளர்களைக் கொண்டு தணிக்கை செய்யப்பட்டு, தணிக்கை செய்யப்பட்ட கணக்குகள் மைய அரசுக்கும், ரிசர்வ் வங்கிக்கும் அனுப்பப்படுதல் வேண்டும். எனவே, இவ் வங்கி இம்பீரியல் வங்கியினைப் போன்றே செயல்பட்டு வருகிறது. இவ் வங்கிக்கும் இம்பீரியல் வங்கிக்கும் மூன்று வேறுபாடுகள் உள்ளன. இவ் வங்கி, இலாப நோக்குடன் செயல்படுவதில்லை; பண நோக்குடன் செயல்படுகின்றது. இரண்டாவதாக, கூட்டுறவு நிறுவனங்களுக்கு நன்கு உதவி புரிகின்றது. இறுதியாக வங்கியியல் வளர்ச்சிப் பணியில் ஈடுபட்டுப் பல இடங்களிலும் கிளைகளைத் திறந்து பணிபுரிந்து வருகின்றது.

இம்பீரியல் வங்கியினை நாட்டுடைமையாக்குவதுடன் பிற அரசு தொடர்புற்ற வங்கிகளையும் இந்த நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகளுடன் இணைக்கவேண்டுமென்பது அனைத்திந்தியக் கிராமியக் கடன் விசாரணைக் குழுவின் பரிந்துரைகளில் ஒன்றாகும். இதற்கு வகைசெய்யும் வகையில் 1959ஆம் ஆண்டு ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா (துணை வங்கிகள்) சட்டம் இயற்றப்பட்டது. இச் சட்டத்தின்படி ஏட்டு அரசுத் தொடர்புற்ற வங்கிகள் இந்திய ஸ்டேட் வங்கியின் துணை வங்கிகளாயின. அவ்வாறு ஸ்டேட் வங்கியின் துணை வங்கிகளாக்கப்பட்ட வங்கிகளாவன :

வங்கியின் பழைய பெயர்	தோற்றுவிக்கப்பட்ட ஆண்டு	துணை வங்கியாக்கப் பட்ட தேதி	வங்கியின் புதிய பெயர்
1. ஸ்டேட் பாங்க் ஆப் ஹைதராபாத் (முன்னர் ஹைதராபாத் ஸ்டேட் பாங்க் என்றழைக்கப் பட்டது)	1942	1-10-1959	ஸ்டேட் பாங்க் ஆப் ஹைதராபாத்
2. ஜெய்ப்பூர் வங்கி (Bank of Jaipur)	1943	1-1-1960	ஜெய்ப்பூர் ஸ்டேட் வங்கி (State Bank of Jaipur)
3. பிக்கானிர் வங்கி (Bank of Bikaner)	1944	1-1-1960	பிக்கானிர் ஸ்டேட் வங்கி (State Bank of Bikaner)
4. இந்தூர் வங்கி (Bank of Indore)	1920	1-1-1960	இந்தூர் ஸ்டேட் வங்கி (State Bank of Indore)
5. திருவாங்கூர் வங்கி (Travancore Bank)	1946	1-1-1960	திருவாங்கூர் ஸ்டேட் வங்கி (State Bank of Tavancore)
6. மைசூர் வங்கி (Bank of Mysore)	1913	1-3-1960	கர்நாடக ஸ்டேட் வங்கி (State Bank of Karnataka)*
7. பாட்டியாலா வங்கி (Bank of Patiala)	1917	1-4-1960	பாட்டியாலா ஸ்டேட் வங்கி (State Bank of Patiala)
8. சௌராஷ்டிரா ஸ்டேட் வங்கி (State Bank of Sourashtra)	1902	1-5-1960	சௌராஷ்டிரா ஸ்டேட் வங்கி (State Bank of Sourashtra)

*கர்நாடக ஸ்டேட் வங்கி சிறிது கால முன்னர் வரை மைசூர் ஸ்டேட் வங்கி என்றழைக்கப்பட்டு வந்தது.

1968ஆம் ஆண்டு பிக்கானிர் ஸ்டேட் வங்கியும், ஜெய்ப்பூர் ஸ்டேட் வங்கியும் இணைந்து பிக்கானிர்—ஜெய்ப்பூர் ஸ்டேட் வங்கி நிறுவப்பட்டது. எனவே இப்பொழுது, இந்த ஏழு வங்கிகள் ஸ்டேட் வங்கிக்குத் துணை வங்கிகளாகப் பணிபுரிகின்றன. இவ் வங்கிகள் தனித்துப் பணிபுரிந்தாலும், இவற்றினுடைய கோட் பாடுகள் இந்திய ஸ்டேட் வங்கியாலேயே நிர்ணயிக்கப்படு கின்றன. இவ் வங்கிகள் ஸ்டேட் வங்கியின் முகவராகப் பணி யாற்றுகின்றன. ஸ்டேட் வங்கி ரிசர்வ் வங்கிக்கு முகமை வங்கி யாகப் பணியாற்றுவதால் ஸ்டேட் வங்கியின் துணை வங்கிகளான இவ் வங்கிகளும் செலாவணிப் பெட்டகங்களை நிருவகிப்பது, கருவூலப் பணிகளை மேற்கொள்வது, இதர வங்கிகளுக்கும் பொது மக்களுக்கும் பணம் அனுப்பவேண்டிய வசதியளித்தல் ஆகிய பணிகளில் ஈடுபட்டுள்ளன.

1959ஆம் ஆண்டு ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா (துணை வங்கிகள்) சட்டப்படி, துணை வங்கி ஒவ்வொன்றும் வெளியிட்டுள்ள முதலில் 55 விழுக்காட்டுக்குக் குறையாது ஸ்டேட் வங்கி செலுத்த வேண்டும். ஆனால், நடைமுறையில் ஹைதராபாத் ஸ்டேட் வங்கி, பாட்டியாலா ஸ்டேட் வங்கி, சௌராஷ்டிரா ஸ்டேட் வங்கி ஆகிய வற்றில் 100 விழுக்காடு மூலதனத்தையும், இதர துணை வங்கிகளில் 53 விழுக்காட்டிலிருந்து 98 விழுக்காடு வரையிலான மூலதனத் தையும் ஸ்டேட் வங்கி செலுத்தியுள்ளது. ஒவ்வொரு துணை வங்கியும், தனியான இயக்குநரவையால் நிருவகிக்கப்பட்டு வருகிறது.

1973ஆம் ஆண்டு டிசம்பர்த் திங்கள் 31ஆம் நாள் துணை வங்கிகளின் நிலை:

துணை வங்கிகளின் பெயர்	செலுத்தப் பட்ட முதலும் காப்பு நிதியும் ரூ. (கோடி)	வைப்புத் தொகை ரூ. (கோடி)	கடன் வசதி ரூ. (கோடி)	அலுவலகங் களின் எண் ணிக்கை
1. பிக்கானிர்–ஜெய்ப்பூர் ஸ்டேட் வங்கி	1·20	84·16	60·28	293
2. ஹைதராபாத் ஸ்டேட் வங்கி	1·14	80·13	58·00	253
3. இந்தூர் ஸ்டேட் வங்கி	0·59	41·67	27·41	109
4. கர்னாடக ஸ்டேட் வங்கி	2·02	63·12	47·14	166
5. பாட்டியாலா ஸ்டேட் வங்கி	0·72	70·46	42·07	138
6. சௌராஷ்டிரா ஸ்டேட் வங்கி	1·79	60·85	42·63	126
7. திருவாங்கூர் ஸ்டேட் வங்கி	1·56	64·49	41·42	218

மேலே குறிப்பிட்டுள்ள துணை வங்கிகளின் பணித் தன்மை, அவ் வங்கிகள், ஸ்டேட் வங்கியின் கட்டுப்பாட்டின்கீழ் இயங்கி வருகின்றன எனும் காரணத்தினால் சிறிது சிறிதாக உயர்ந்து வருகின்றதெனக் குறிப்பிடலாம். ஒவ்வொரு துணை வங்கியும் ஏழு உறுப்பினர்களைக் கொண்ட ஓர் இயக்குநரவையால் நிருவகிக்கப் பட்டு வருகிறது. ஸ்டேட் வங்கியின் பெருந்தலைவர், ரிசர்வ் வங்கியால் நியமனம் செய்யப்படும் அலுவலர் ஒருவர், அந்தந்தத் துணை வங்கியின் பங்குநர்களால் தேர்ந்தெடுக்கப்படும் இரண்டு உறுப்பினர்கள், ஸ்டேட் வங்கியால் அதனுடைய அலுவலர்களிலிருந்து நியமிக்கப்படும் மூன்று உறுப்பினர்கள், ஆகியோரே அந்த ஏழு இயக்குநர்களும் ஆவர்.

ஸ்டேட் வங்கியின் சாதனைகள்: 1975 ஆம் ஆண்டு சூன் திங்கள் 30 ஆம் நாளுடன் இருபது ஆண்டுகளை முடித்துவிட்ட ஸ்டேட் வங்கி, கீழ்க்காணும் சாதனைகளைப் புரிந்துள்ளது. அதனுடைய சாதனைகளாவன:

(1) 1955 ஆம் ஆண்டு 466 கிளை அலுவலகங்களை மட்டுமே கொண்டிருந்த ஸ்டேட் வங்கி, 1975 ஆம் ஆண்டு சூன் திங்கள் முடிய 3487 கிளை அலுவலகங்களைக் கொண்டு பணியாற்றி வருகிறது. இவ்வளவு குறைந்த காலத்தில் இவ்வளவு அதிகமான கிளைகளைத் திறந்த பெருமை ஸ்டேட் வங்கியினைத் தவிர வேறு எந்த வங்கிக்கும் இருக்க முடியாது.

(2) பெரும்பாலான தனியார்துறை வங்கிகள், புதிய கிளைகள் திறக்க விழையும்போது நகரங்களை மட்டுமே அவை தேர்ந்தெடுத்தன. ஆனால், ஸ்டேட் வங்கி புதிய கிளைகள் திறக்க விழையும்போது வங்கிய வசதியற்ற கிராமங்களையும், சிறு நகரங்களையுமே தேர்ந்தெடுத்தது குறிப்பிடத்தக்கதாகும். அதன் விவரத்தைக் கீழ்க்காணும் பட்டியல் மூலம் அறியலாம்:

1969 ஆம் ஆண்டு நிலை	கிராமங்கள்	சிறு நகரங்கள்	நகரங்கள்	மொத்த அலுவலகங்கள்
இந்திய ஸ்டேட் வங்கி ...	462	796	313	1,571
துணை வங்கிகள் ...	358	375	161	894
1973ல் மொத்த அலுவலகங்கள்				
ஸ்டேட் வங்கி ...	1,091	1,081	695	2,867
துணை வங்கிகள் ...	707	547	309	1,563
1974 ஆம் ஆண்டு நிலை				
ஸ்டேட் வங்கி ...	1,167	1,329	898	3,394
துணை வங்கிகள் ...	625	714	380	1,729

1969ஆம் ஆண்டு கிராமங்களில் தொடங்கப்பட்டிருந்த ஸ்டேட் வங்கி அலுவலகங்களின் எண்ணிக்கை 462 ஆக மட்டுமே இருந்தது. ஆனால், 1974ஆம் ஆண்டு கிராமங்களிலிருந்த ஸ்டேட் வங்கி அலுவலகங்களின் எண்ணிக்கை 1169ஆக உயர்ந்தது. இந்த நிலை ஸ்டேட் வங்கி எவ்வளவு தூரம் கிராமங்களில் கிளை அலுவலகங்களைத் திறக்க முயற்சிக்கின்றது என்பதனை நன்கு விளக்கும்.

(3) வங்கி தொடங்கியபோது இருந்த மொத்த வைப்புகளின் மதிப்பு ரூ. 188 கோடியாக இருந்தது. ஆனால், அதே வைப்புத் தொகையின் மதிப்பு 27-6-1975 அன்று 2,875·1 கோடியாக உயர்ந்தது. துணை வங்கிகளின் வைப்புத்தொகை மதிப்பு அதே தேதியில் ரூ. 686·9 கோடியாக இருந்தது.

(4) மாநிலக் கூட்டுறவு வங்கிகளுக்கும், கூட்டுறவு மைய வங்கிகளுக்கும் வாரம் மூன்று முறை கட்டணமெதுவுமின்றிப் பணம் அனுப்புகைக்கு வழி செய்கிறது.

(5) கூட்டுறவு நிறுவனங்களுக்கு, அது திரட்டும் வட்டி வீதத்தைவிட ½ விழுக்காடு குறைவான சலுகைக் கட்டணத்தில் கடன் வசதி யளிக்கின்றது.

(5) நிலவள வங்கிகளுக்கு நேரடியாகக் கடன்வசதி யளிப்பதன்மூலமும், அவற்றினுடைய கடன் பத்திரங்களை வாங்குவதன் மூலமும், அவை வெளியிடும் கடன் பத்திரங்களைப் பிணைய மாகக் கொண்டு பொது மக்களுக்குக் கடன்வசதி அளிப்பதன்வழி பொதுமக்களை இக் கடன் பத்திரங்களை வாங்கத் தூண்டுவதன் மூலமும், ஸ்டேட் வங்கி மேற் குறிப்பிட்டுள்ள நிறுவனங்களுக்கு நிதிவசதி யளித்து வருகிறது.

(6) கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகள், கூட்டுறவுத் தோல் பதனிடும் நிறுவனங்கள் போன்ற அமைப்புகளுக்கு இவ் வங்கி அளித்துள்ள உதவி குறிப்பிடத் தக்கதாகும்.

(7) இவ் வங்கியின் பணியின் காரணமாகவே நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் பண்டகசாலை (Warehouse) வசதிகள் பெருகியுள்ளனவெனின் அது தவருகாது.

(8) வெளிநாட்டு வியாபாரத்திற்கு இவ் வங்கி நிதி உதவி செய்வது ஆண்டுதோறும் அதிகரித்து வருவது குறிப்பிடத்தக்கதாகும். ஏற்றுமதிக்காக இவ் வங்கி அளித்த நிதி உதவி 1968ஆம் ஆண்டு ரூ. 48 கோடியாக இருந்தது. இத் தொகை 1975ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்களில் ரூ. 183 கோடியாக உயர்ந்தது.

(9) இதர நிதி நிறுவனங்கள் புறக்கணிக்கும் சிறு தொழில் களுக்கு ஸ்டேட் வங்கியும் அதன் துணை வங்கிகளும் தாராளமாகக் கடனுதவி செய்வது மெச்சத் தக்கதாகும். 1975 ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் முடிய இவ் வங்கி ரூ. 293 கோடி மதிப்புள்ள தொகையினையும், இதனுடைய துணை வங்கிகள் ரூ. 78 கோடி மதிப்புள்ள தொகையினையும் சிறுதொழில் நிறுவனங்களுக்குக் கடனுக வழங்கியுள்ளன.

(10) நிதி வசதியற்ற சிறிய தொழில் திட்டங்களைக் கொண்ட தொழில் முயல்வோர் (Entre Premeur) தமது திட்டத்தினைச் செயல்படுத்த ஸ்டேட் வங்கியிடமிருந்து கடன் வசதி பெறலாம்.

(11) சிறுதொழில் நிறுவனங்களுக்குக் கடன்வசதி அளிக்கும் வகையில் ஓர் ஒருங்கிணைத்த நிதித் திட்டத்தினைத் தீட்டியுள்ளது. இத் திட்டத்தின்படி, சிறுதொழில் நிறுவனங்களுக்குக் கச்சாப் பொருள்களைக்கூடப் பிணையமாகக் கொண்டு கடன்வசதியளிக்கப் படுகின்றது. இத்தகைய திட்டத்தின்படி, கடன் பெறுபவருடைய நேர்மையும், திறமையுமே சிறந்த பிணையங்களாகக் கருதப் படுகின்றன.

(12) இவ் வங்கி, தளர்த்தப்பட்ட கடன் திட்டம் (Liberalised Credit Scheme) என்னும் புதிய கடன் திட்டத்தினை உருவாக்கியுள்ளது. இதன்படி சிறுதொழில் நிறுவனங்களுக்கு வழக்கமான நிபந்தனைகள் இல்லாது கடன் வழங்குவதுடன், அந் நிறுவனங்கள் வளர்ச்சி பெறுவதற்கான தொழில் நுணுக்கங்களைத் தகுந்த வல்லுநர்கள் மூலம் பயிற்றுவிக்கின்றது.

(13) இந்தியாவில் தவணைக் கடனைப் பரப்பிய பெருமையும் ஸ்டேட் வங்கியினையே சாரும்.

(14) பேருந்துக் கம்பெனிக்கும், பேருந்துகளைக் கடனுக்கு விற்பனை செய்யும் தவணைக் கொள்முதல் கம்பெனிகளுக்கும் நிதி வசதியளிக்கின்றது.

(15) வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்கும் வகையில் வேலையற்ற கைவினைஞர், தொழில்கலைஞர் ஆகியோருக்கு அவர்களே வேலைவாய்ப்பு ஏற்படுத்திக்கொள்ள வழிசெய்யும் முறையில் ஸ்டேட் வங்கி கடன்வசதிகளைச் செய்து தருகின்றது.

(16) 1966ஆம் ஆண்டுமுதல் வேளாண்மைக்கு நேரடி யாகக் கடன்வழங்கி வருகின்றது. நிலத்தை வளப்படுத்தவும், வேளாண்மைக் கருவிகள் வாங்கவும் இவ் வங்கி, கடனுதவி அளித்து வருகின்றது.

(17) 1969ஆம் ஆண்டு இவ் வங்கி குழுக் கடன் வழங்கும் திட்டம் ஒன்றினைத் தீட்டியுள்ளது. இதன்படி ஒருவருக்கொருவர் பொறுப்புறுதி வழங்கிக்கொள்ளும் சில விவசாயிகள் ஒரு குழுவாகக் கூடி, குடிசைத்தொழில், கால்நடைப் பராமரிப்பு, கோழிவளர்ப்பு போன்ற காரியங்களுக்குக் கடன் வாங்கலாம். இத் திட்டம் 'கிராம ஏற்பு நோக்கு' என்றும் அழைக்கப் படுகின்றது.

(18) வேளாண்மைக்கு மேலும் கடன் வசதிகளைச் செய்து தரும்பொருட்டு, நாட்டின் பின் தங்கிய பகுதிகளுள் 150 இடங் களில் வேளாண்மை வளர்ச்சிக் கிளைகள் அமைக்கப்படுகின்றன. இக் கிளைகளில் தொழில்நுட்ப வல்லுநர்கள் பணியாற்றுகின்றனர். இவர்கள், விவசாயிகளின் வருவாயைப் பெருக்க, அவர்கள் கடைப்பிடிக்க வேண்டிய வழிமுறைகளை விளக்குகின்றனர்.

வினுக்கள்

(1) இந்திய இம்பீரியல் வங்கி வளர்ந்த வரலாற்றினைச் சுருக்கி வரைக.

(2) இம்பீரியல் வங்கியின் நிருவாகத் தன்மையினைப்பற்றிக் குறிப்பு வரைக.

(3) இம்பீரியல் வங்கியின் பணிகள் யாவை?

(4) 1920ஆம் ஆண்டுச் சட்டப்படி இம்பீரியல் வங்கிக்கு விதிக்கப்பட்ட தடைகள் யாவை?

(5) இம்பீரியல் வங்கி இந்தியாவின் மைய வங்கியாக நியமிக்கப்படாததன் காரணங்கள் யாவை?

(6) இம்பீரியல் வங்கியிடமிருந்து எதிர்பார்க்கப்பட்ட சாதனைகள் யாவை? அவை எந்த அளவுக்கு எய்தப்பட்டன?

(7) இம்பீரியல் வங்கியிடம் காணப்பட்ட குறைபாடுகளை விளக்குக.

(8) இம்பீரியல் வங்கி நாட்டுடைமையாக்கப்பட்டதன் காரணங்கள் யாவை?

(9) ஸ்டேட் வங்கியின் அமைப்பு முறைபற்றிக் குறிப்பு வரைக.

(10) ஸ்டேட் வங்கியின் பணிகள் யாவை?

(11) ஸ்டேட் வங்கியின் சாதனைகளை விளக்குக.

(12) ஸ்டேட் வங்கியால் தீட்டப்பட்டுள்ள புதுத் திட்டங்கள் யாவை?

12. நாணய மாற்று வங்கிகள்
(Exchange Banks)

மேலை நாடுகளில் நாணயமாற்று வங்கிகள் என்ற சொற்றொடர், பொன் திட்டத்தினைக் கடைப்பிடிக்காத இந்தியா, சீனா ஆகிய நாடுகளுடனான வாணிபத்திற்கு நிதிவசதிகள் அளித்துவரும் வங்கிகளைக் குறிக்கும் விதத்திலேயே பயன்படுத்தப்படுகின்றது. அயல்நாட்டு வாணிபத்திற்கு நிதி வசதியளிக்கும் வங்கிகளே நாணயமாற்று வங்கிகள் என்றும் இச் சொற்றொடருக்குப் பொருள் தருகின்றனர். இந்திய ஆசிரியர்களின் கருத்துப்படி இப் பொருளும் ஏற்றுக்கொள்ளத்தக்கதாக அமையவில்லை. ஏனெனில், உள்நாட்டு வங்கிகள் எனக்கருதப்படும் ஒரு சில வங்கிகள் அயல்நாட்டு வாணிபத்திற்கு நிதி உதவி செய்வதுடன்கூட நாணயமாற்று வங்கிகளெனப்படும் அக் குறிப்பிட்ட வங்கிகள் உள்நாட்டு வாணிபத்திற்கும் நிதி வசதியளிப்பதால் இப் பொருள் ஏற்றுக் கொள்ளத்தக்கதாக அமையவில்லை. எனவே, இன்றைய நிலையில், இவ் வங்கிகளை நாணயமாற்று வங்கிகள் என்று குறிப்பிடுவதைவிட அயல்நாட்டு வங்கிகள் என்று குறிப்பிடுவதே சாலப்பொருந்தும். எனவே, பெரும்பாலான ஆசிரியர்கள் நாணயமாற்று வங்கிகள் என்ற சொல்லுக்குப் பதிலாக அயல்நாட்டு வங்கிகள் என்ற சொல்லையே பயன்படுத்த ஆரம்பித்து விட்டனர்.

எனவே, அயல்நாடுகளில் தலைமை அலுவலகங்களைக் கொண்டு நாட்டின் பல பாகங்களிலும், குறிப்பாகத் துறைமுகப் பட்டினங்களில் தங்களுடைய கிளை அலுவலகங்களைக் கொண்டு செயல்பட்டு வரும் வங்கிகளை நாணயமாற்று வங்கிகள் என்று கூறலாம். 1969ஆம் ஆண்டு பதினான்கு இந்திய வணிக வங்கிகள் நாட்டுடைமையாக்கப்பட்டபோது, அப்பொழுது பணியாற்றிய பெரும் அயல்நாட்டு வங்கிகள் நாட்டுடைமையாக்கப்படவில்லை. இந்தியத் தலைமை அமைச்சர், அவ் வங்கிகளை, வைப்புத் தொகையினை ரூ. 50 கோடிக்குக் குறைவாகப் பெற்றுக்

கொள்ளுமாறு கேட்டுக்கொண்டு, இந்த நாட்டுடைமைத் திட்டத்தில் இவ் வங்கிகள் சேராதவாறு பார்த்துக்கொண்டார்.

இந்தியாவுடன் வணிகத் தொடர்புள்ள அயல்நாடுகளிலுள்ள வணிகர்கள், இந்தியாவில் வங்கியத் தொழில் நல்ல இலாபகரமாகச் செயல்படுவதை அறிந்து இந்தியாவில் வங்கியத் தொழிலை மேற்கொள்ளும் பொருட்டு இங்குக் கிளை அலுவலகங்களைத் திறந்தனர். 1972ஆம் ஆண்டு இறுதியில் இந்தியாவிலிருந்த அயல்நாட்டு வங்கிகளின் எண்ணிக்கை 14 ஆக இருந்தது. இப்பொழுது இந்தியாவில் பதின்மூன்று அயல்நாட்டு வங்கிகள் செயலாற்றுகின்றன.

அவையாவன :

(1) அல்ஜிமின் பாங்க் நெதர்லண்ட் H. V. C. நெதர்லாண்ட் பொது வங்கி (Algemine Bank Netherland H. V. C. General Bank of the Netherlands)

(2) அமெரிக்கன் எக்ஸ்பிரஸ் இன்டர் நேஷனல் பாங்கிங் கார்ப்போரேஷன் (American Express International Banking Corporation)

(3) பாங்க் ஆப் அமெரிக்கா நேஷனல் டிரஸ்ட் அண்டு சேவிங்ஸ் அசோசியேஷன் (Bank of America National Trust and Savings Association)

(4) பாங்க் ஆப் டோக்கியோ (Bank of Tokyo)

(5) பிரிட்டிஷ் பாங்க் ஆப் தி மிடில் ஈஸ்ட் (British Bank of the Middle East)

(6) பாங்க் நேஷனல் டிபாரிஸ் (Bang National de paris)

(7) சார்ட்டர்ட் பாங்க் (Chartered Bank)

(8) ஈஸ்ட்டர்ன் பாங்க் (Eastern Bank)

(9) பர்ஸ்ட் நேஷனல் சிட்டி பாங்க் (First National City Bank)

(10) ஹாங்காங் அண்டு ஷாங்காய் பாங்கிங் கார்ப்போரேஷன் (Hongkong and Shanghai Banking Corporation)

(11) மெர்கன்டைல் பாங்க் (Mercantile Bank)

(12) மிட்சூயி பாங்க் (Mitsui Bank)

(13) நேஷனல் அண்டு கிரிண்ட்லேஸ் பாங்க் (National and Grindlay's Bank)

1965ஆம் ஆண்டு வரை இந்தியாவில் 15 நாணயமாற்று வங்கிகள் செயல்பட்டு வந்தன. அவற்றுள் ஐந்து வங்கிகள் இங்கிலாந்து நாட்டினையும், மூன்று வங்கிகள் அமெரிக்க நாட்டினையும், இரு வங்கிகள் பாகிஸ்தான் நாட்டினையும், இரு வங்கிகள் ஜப்பான் நாட்டினையும், ஒரு வங்கி பிரான்ஸ் நாட்டினையும், ஒரு வங்கி ஹாலண்ட் நாட்டினையும், எஞ்சிய ஒரு வங்கி ஹாங்காங்கையும் சேர்ந்தவையாகும். ஹபீப் பாங்க் லிமிடெட் (Habib Bank Limited) நேஷனல் பாங்க் ஆப் பாகிஸ்தான் லிமிடெட் (National Bank of Pakistan Limited) என்ற இரண்டு பாகிஸ்தான் நாட்டைச் சேர்ந்த வங்கிகளும், இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்குமிடையே ஏற்பட்ட போர் காரணமாக எதிரிச் சொத்து காப்பாளர் வசம் ஒப்படைக்கப்பட்டுவிட்டதனால் அவ்விரண்டு வங்கிகளும் செயலாற்ற முடியவில்லை. எனவே, அவ்விரண்டு வங்கிகளையும் தவிர எஞ்சியுள்ள 13 வங்கிகள் இன்று செயல் புரிந்து வருகின்றன.

அயல்நாட்டு வங்கிகளை அவற்றின் நடவடிக்கைகளின் தன்மைகளைக்கொண்டு கீழ்வரும் இரண்டு பிரிவுகளாகப் பிரிக்கலாம். (1) மொத்த வைப்புத்தொகையில் 25 விழுக்காடு அல்லது அதற்கு மேலாக வைப்புத்தொகையினை இந்தியாவில் கொண்டுள்ள அயல்நாட்டு வங்கிகள் அல்லது நாணயமாற்று வங்கிகள், (2) மொத்த வைப்புத்தொகையில் 25 விழுக்காட்டிற்குக் குறைவாக மட்டும் இந்தியாவில் வைப்புத்தொகை கொண்டுள்ள வங்கிகள், என்பதே இப் பிரிவு. சார்ட்டர்ட் பாங்க், நேஷனல் அண்டு கிரிண்ட்லேஸ் பாங்க், மெர்க்கண்டைல் பாங்க் மற்றும் ஈஸ்டர்ன் பாங்க் ஆகியவை முதல் பிரிவினைச் சார்ந்தவை; இதர வங்கிகள் இரண்டாம் வகையைச் சார்ந்தவையாகும்.

வெளிநாட்டு வாணிபமும், உள்நாட்டு வாணிபமும்: வெளி நாட்டு வாணிபம் வெளித் தோற்றத்திற்குச் சிக்கலேதுமின்றிக் காணப்பட்டாலும் உள்நாட்டு வாணிபத்தினின்றும் முற்றிலும் மாறுபட்டதாகும். கீழ்க்காணும் வேறுபாடுகள் வெளிநாட்டு வாணிபத்தை உள்நாட்டு வாணிபத்தினின்றும் பிரித்துக்காட்ட ஏதுவாக அமையும்.

1. உள்நாட்டு வாணிபத்தில் பண்டங்களை வாங்க முனைபவர் அவற்றை நேரிடையாகப் பார்த்து வாங்க வாய்ப்புள்ளது. ஆனால், வெளிநாட்டு வாணிபத்தில் அத்தகைய வாய்ப்பில்லை.

2. உள்நாட்டு வாணிபத்தில் பண்டங்களை விற்பனை செய்பவருக்கும், வாங்குபவருக்கும் நேரடித் தொடர்பிருக்கலாம்.

ஆனால், வெளிநாட்டு வாணிபத்தில் இத்தகைய தொடர்பு இருத்தல் வெகு அரிதானதாகும்.

(3) உள்நாட்டு வாணிபத்தில் பண்டங்களை வேண்டும் போது உடன் பெற்றுக் கொள்ளலாம். ஆனால், வெளிநாட்டு வாணிபத்தில் இத்தகைய வசதி இல்லை. நாம் விரும்பியவுடன் பண்டங்களைப்பெற முடியாது.

(4) உள்நாட்டு வாணிபத்தில் பண்டங்களை வாங்குபவரும் விற்பனை செய்பவரும் ஒரே நாட்டிலிருப்பதால் பண்டங்களை வாங்குபவர் செலுத்தும் செலாவணியைப் பண்டங்களை விற்பனை செய்பவர் எவ்வித மறுப்புமின்றி ஏற்றுக்கொள்வார். ஆனால், வெளிநாட்டு வாணிபத்தில் பண்டங்களை விற்பனை செய்பவருடைய நாட்டுச் செலாவணியும், வாங்குபவருடைய நாட்டுச் செலாவணியும் மாறுபட்டிருப்பதால், வாங்குநர், தமது நாட்டுச் செலாவணியை விற்குநர் நாட்டுச் செலாவணியாக மாற்றிய பிறகு தான் செலுத்த முடியும்.

நாணயமாற்று வங்கிகளின் முக்கியப்பணி இந்தியாவின் வெளி நாட்டு வியாபாரத்திற்கு நிதிவசதியளிப்பதேயாகும். இப் பணியில் அயல்நாட்டு வங்கிகள் தாம் ஈடுபட வேண்டுமென்று எவ்விதக் கட்டுப்பாடுமில்லை. இந்திய வணிக வங்கிகள் எவ்விதச் சிக்கலு மின்றி இதில் ஈடுபடலாம். இருப்பினும் கீழ்க்காணும் காரணங் களினால் இந்திய வங்கிகள் நாணயமாற்று நடவடிக்கைகளில் அந்த அளவிற்கு ஈடுபட முடியவில்லை :

(1) இந்தியாவின் மிகப்பெரிய வணிக வங்கியாகவிருந்த இம்பீரியல் வங்கி 1935 ஆம் ஆண்டுவரை மைய வங்கியின் பணிகளை மேற்கொண்டிருந்ததால், அந்த ஆண்டுவரை வெளி நாட்டு வாணிபத்திற்கு அதனால் நிதியுதவி செய்ய முடியவில்லை. அதன் பிறகும், இவ் வங்கி, நாணயமாற்று நடவடிக்கைகளிலீடு பட்டிருந்த அயல்நாட்டு வங்கிகளுடன் போட்டியிட விரும்பவில்லை யாதலின், தொடர்ந்து அவ் வங்கி நாணயமாற்றுப் பணியில் ஈடுபடவில்லை. நாட்டிலிருந்த வணிக வங்கிகளுள் தலைமை நிலையினை வகித்த இவ் வங்கியே இப் பணியினை மேற்கொள்ளாத நிலையில் இதர வங்கிகள் அப் பணியினை ஏற்க முன்வரவில்லை. ஆரம்பகாலத்தில் அதாவது, இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் நாணயமாற்று நடவடிக்கைகளிலீடுபட்டிருந்த இத்திய வங்கிகளான அலையன்ஸ் பாங்க் ஆப் சிம்லா, டாடா இண்டஸ்ட்ரியல் பாங்க் ஆகியவை அப் பணியினைத் தொடர்ந்து நடத்த முடியவில்லை.

(2) இந்திய வணிக வங்கிகள், செல்வம் கொழித்த அயல் நாட்டு வங்கிகளுடன் செலாவணி மாற்று நடவடிக்கைத் தொழிலில் போட்டியிட முடியவில்லை. அயல்நாட்டு வாணிப நடவடிக்கைகளுக்குத் தேவையான நிறைந்த நடைமுறை மூலதனம் அன்றைய இந்திய வணிக வங்கிகளிடம் இல்லை.

(3) நாணயமாற்று வங்கிகள் நன்கு அமைக்கப்பட்ட வங்கிகள். மேல்நாட்டு வங்கியியல் நுணுக்கங்களை நன்கு அறிந்தவை. ஆனால், இந்திய வணிக வங்கிகள் அந்த அளவிற்கு வளர்ச்சிபெற்றவையல்ல. திறமைமிக்க மேலாண்மையினை இந்திய வணிக வங்கிகளில் காண்பதென்பது அரிதாக இருந்தது.

(4) அயல்நாட்டு வங்கிகள் பெருமளவில் மூலதனம் கொண்டிருந்ததுடன் குறைந்த வட்டிக்குப் பெருமளவு நிதியை இலண்டன் கழிவுச் சந்தையில் திரட்டக்கூடிய வசதியினையும் பெற்றிருந்தன. இந்திய வணிக வங்கிகளுக்கு இத்தகைய வசதிகள் இல்லை.

(5) அயல்நாட்டு வங்கிகள் பல்வேறு நாடுகளில் தங்கள் கிளைகளைப் பெற்றிருந்தமையின் நாணயமாற்றுப் பணி அவற்றுல் எவ்விதச் சிக்கலுமின்றிச் செய்யப்பட்டது. ஆனால், இந்திய வங்கிகளுக்கு முக்கிய வெளிநாட்டு நகரங்களில் கிளைகள் இல்லாத காரணத்தினுல் இவை நேரடி நாணயமாற்று நடவடிக்கைகளில் ஈடுபட முடியவில்லை.

(6) வெளிநாடுகளில் கிளைகள் திறக்கப்பட்டால் ஆரம்ப காலத்தில் அவை நட்டமடையலாம். அந்த நட்டத்தைப் பொறுத்துக்கொண்டே வங்கிகள் தொழில்புரிந்து தங்களை வெளி நாடுகளில் நிலைப்படுத்திக் கொள்ளவேண்டும். ஆனால், இந்திய வணிக வங்கிகள் ஆரம்ப நிலையில்கூட அந்த அளவிற்கு நட்டத்தினை ஏற்றுக்கொள்ளக்கூடிய நிலையில் இல்லை.

(7) வெளி நாடுகளில் திறக்கப்படும் கிளை அலுவலகங்கள் ஆரம்பநிலையில், அப் பகுதியிலுள்ள பொதுமக்கள், தொழில் நிறுவனங்கள் போன்றவற்றிடமிருந்து வைப்புநிதி திரட்டுவது எளிதன்று. எனவே, தலைமை அலுவலகத்தின் உதவியுடன்தான் செயல்பட வேண்டும். ஆனால், இந்திய வணிக வங்கிகள் அந்தக் காலத்தில், தங்கள் கிளை அலுவலகங்களுக்கு இத்தகைய நிதி வசதிகள் அளிக்கக்கூடிய நிலையில் இல்லை.

(8) உலக நிதி மையமென்று கருதப்படும் இலண்டனில் தலைமையகங்களைக்கொண்ட ஒருசில அயல்நாட்டு வங்கிகளுடன் இந்தியாவில் தலைமையகங்களைக்கொண்ட இந்திய வங்கிகளால் போட்டியிட முடியவில்லை.

(9) நாணயமாற்று வீதத்தில் ஏற்படக்கூடிய ஏற்ற இறக்கத்தினால் ஏற்படும் நட்டத் தொகையினை இந்திய வங்கிகள் தாங்கிக் கொள்ளக்கூடிய நிலையில் இல்லை.

(10) வெளி நாட்டுக் கிளை அலுவலகங்களை மேலாண்மை செய்வதற்குத் தேவைப்படும் மிக அதிகமான செலவுத் தொகையினை இந்திய வங்கிகள் செலவிடும் நிலையிலில்லை.

அயல் நாட்டு வாணிபத்தின் வகைகள்: அயல் நாட்டு வாணிபத்தைக் கீழ்க்காணும் மூன்று பிரிவுகளாகப் பிரிக்கலாம்:

(1) ஏற்றுமதி வாணிபம் (Export Trade)

(2) இறக்குமதி வாணிபம் (Import Trade)

(3) மறு ஏற்றுமதி வாணிபம் (Entrepot Trade)

ஒரு நாட்டில் உற்பத்தியாகும் பண்டங்களை வெளிநாடுகளுக்கு நுகர்வுக்காக அனுப்புவதை ஏற்றுமதி வாணிபம் என்றும், வெளிநாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட பண்டங்களை உள்நாட்டு மக்கள் நுகர்வதற்காக வாங்குதலை இறக்குமதி வாணிபம் என்றும், ஒரு நாட்டில் உற்பத்திசெய்த பண்டங்களை மீண்டும் மற்றொரு நாட்டிற்கு விற்பனை செய்வதற்காக வாங்கும் நடவடிக்கையினை மறு ஏற்றுமதி வாணிபம் என்றும் கூறுகிறோம்.

அயல்நாட்டு வாணிபக் கடனளிப்பு முறை: இதனை 'அயல் நாட்டு வாணிப நிதியளிப்பு முறை' என்றும் கூறலாம். பொதுவாக இந்தியாவில் வெளிநாட்டு வியாபாரத்தில் கீழ்க்காணும் முறைகளே தனியார் துறையினரால் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றன. அவையாவன :

(1) ஆவணஞ்சேர் மாற்றுச் சீட்டுமுறை (Documentary Bill Method).

(2) நாணய உறுதியுடன் கூடிய ஆவணஞ்சேர் மாற்றுச் சீட்டுமுறை (The Method of Documentary Credit with Bills).

(3) நாணய உறுதியுடன் கூடிய ஆவண முறை (Method of Documentary Credit without a Bill of Exchange).

(4) முன்பணம் செலுத்தும் முறை (The Method of clean Payment in advance).

(5) அனுப்பீடு முறை (Consignment Method).

(6) நிரவல் தொகைத் திட்டம் (The Method of Round-sum Remittances)

(7) வெளிநாட்டு முகமையுதவியினுல் நேரடிக் கணக்குத் தீர்த்தல் (Direct Settlement of Bills by the Agency Providing External Assistance).

(1) ஆவணஞ்சேர் மாற்றுச் சீட்டு முறை: இம்முறையில் பண்டங்களை விற்பனை செய்யும், ஏற்றுமதியர், பண்டங்களைக் கப்பல் மூலம் அனுப்பிவிட்டு, வெளிநாட்டிலுள்ள இறக்குமதியருடன் செய்துகொண்ட ஒப்பந்தப்படி, அப் பண்டங்களின் மதிப்புக்குரிய மாற்றுச் சீட்டினை அந்த வெளிநாட்டு இறக்குமதியரின்மீது எழுதுகிறார். அம் மாற்றுச் சீட்டுடன் பண்டங்கள் குறித்த கப்பல் இரசீது (Bill of Loding) காப்பீட்டுறுதி ஒப்பந்தம் (Insurance Policy) விலைப்பட்டியல் (Commercial Invoice) மற்றும் தோற்றுவாய்ச்சான்று (Certificate of Origin) போன்ற ஆவணங்களும் இணைக்கப்படுகின்றன. இம் மாற்றுச் சீட்டே ஆவணஞ்சேர் மாற்றுச் சீட்டு என்று அழைக்கப்படுகிறது. இந்த ஆவணஞ்சேர் மாற்றுச் சீட்டினை ஏற்றுமதியர், தமது நாட்டிலுள்ள அவருடைய வங்கியரிடம் ஆவணங்களை இறக்குமதியரிடம் சேர்ப்பிக்கும் பொருட்டும், மாற்றுச் சீட்டுக்கான பணத்தினைத் திரட்டும் பொருட்டும் அளிக்கிறார். ஏற்றுமதியரின் வங்கி அச் சீட்டினை இறக்குமதியரின் நாட்டிலுள்ள அதனுடைய கிளை வங்கிக்கோ, முகமை வங்கிக்கோ அனுப்புகிறது. ஏற்றுமதியர், தாம் எழுதும் மாற்றுச் சீட்டில், ஆவணங்கள், மாற்றுச் சீட்டு ஏற்கப்பட்டபின் கொடுக்கத்தக்கவையா அல்லது அதற்குரிய பணம் செலுத்தப்பட்டபின் கொடுக்கத்தக்கவையாவெனக் குறிப்பிட்டிருப்பார்.

எனவே, ஏற்றுமதியர் வங்கியின் கிளை அல்லது முகமை வங்கி அம் மாற்றுச் சீட்டினைப் பெற்றவுடன் அது தவணை மாற்றுச் சீட்டா அதாவது இறக்குமதியரால் ஏற்றுக்கொள்ளப்படவேண்டிய மாற்றுச் சீட்டா அல்லது பணம் செலுத்தப்படவேண்டிய மாற்றுச் சீட்டா என்பதனை அறிகிறார். இறக்குமதியரால் ஏற்றுக்கொள்ளப் படவேண்டிய மாற்றுச் சீட்டாக விருப்பின், அவர் அச் சீட்டினை ஏற்றுக்கொண்டவுடன் அத்துடன் இணைக்கப்பட்டுள்ள பண்டங்களின் உரிமை ஆவணங்களை அதாவது சரக்குரிமை ஆவணங்களை இறக்குமதியரிடம் கொடுக்கிறார். இறக்குமதியர் பணம் எதுவும் செலுத்தாது இம் முறையில் சரக்குரிமை ஆவணங்களைப் பெற்றுக் கொண்டு கப்பல் கம்பெனியிடமிருந்து சரக்குகளை எடுத்து விற்பனை செய்த பிறகு மாற்றுச் சீட்டுக்கான பணத்தைச் செலுத்தலாம்.

பொதுவாக, இத்தகைய மாற்றுச்சீட்டுக்கான தவணை 60 நாட்கள் முதல் 90 நாட்கள் வரை இருக்கும். எனவே, இறக்கு

மதியர் இக்கால வெளிக்குள் எப்பொழுது வேண்டுமாயினும் பணத்தைச் செலுத்தலாம். ஆனால், ஏற்றுமதியர், மாற்றுச்சீட்டுக்கான தொகையை இறக்குமதியரால் செலுத்தப்படும்வரை காத்திருக்க வேண்டுமென்ற அவசியமில்லை. அம் மாற்றுச் சீட்டை ஏற்றுமதியர் அவருடைய வங்கியிடமே தள்ளுபடி செய்து பணம் பெற்றுக்கொள்ளலாம். போதிய நிதிவசதியின்றி ஏற்றுமதித் தொழிலிலீடுபட்டுள்ளவர்களுக்கு இம் முறை பெரிதும் பயனுள்ளதாக அமையும்.

(2) நாணய உறுதியுடன் கூடிய ஆவணஞ்சேர் மாற்றுச்சீட்டு முறை: இம்முறையில் ஆவண மாற்றுச் சீட்டுடன் வாணிப உறுதிக்கடிதம் ஒன்றும் இணைக்கப்படுகிறது. இறக்குமதியர், தம்முடைய வங்கியுடன் ஓர் ஒப்பந்தம் செய்துகொண்டு அதன்படி ஏற்றுமதியரின் பெயருக்கு ஓர் ஆவணத்துடன் சேர்ந்த நாணய உறுதி (Documentary Credit) ஏற்படுத்துமாறு கேட்டுக் கொள்கிறார். அந்த வாடிக்கைக்காரர் நம்பிக்கையுள்ள வாடிக்கைக்காரராக விருப்பின் வங்கி நாணய உறுதி வழங்கத் தயங்குவதில்லை. அவ்வாறு நாணய உறுதி வழங்க முடிவு செய்த இறக்குமதியரின் வங்கி ஏற்றுமதியரின் நாட்டிலுள்ள அதனுடைய கிளை வங்கிக்கோ, தொடர்பு வங்கிக்கோ கடிதம் எழுதி, அதனை இறக்குமதியர் சார்பாக, அந் நாட்டிலுள்ள ஏற்றுமதியர் பெயருக்கு ஆவணஞ்சேர்ந்த நாணய வசதியினை ஏற்படுத்தித் தருமாறு வேண்டுகிறது. தொடர்பு வங்கியும் ஏற்றுமதியர் வங்கி அதற்கு அளிக்கவிருக்கும் இதுபோன்ற வசதிகளினடிப்படையிலோ, அது முன்னரே செலுத்தியுள்ள நிதியினடிப்படையிலோ நாணய வசதியினை ஏற்படுத்தித் தருகிறது. இது குறித்த விவரங்கள் ஏற்றுமதியருக்குத் தெரிவிக்கப்படுகிறது.

ஏற்றுமதியர் பண்டங்களைக் கப்பலில் ஏற்றியதும் மாற்றுச் சீட்டினையும், கப்பல் இரசீது போன்ற இதர ஆவணங்களையும் அவர் ஊரிலுள்ள தொடர்பு வங்கியிடம் கொடுக்கிறார். வாணிப உறுதிக் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளபடி அவ் வங்கி ஏற்றுமதியருக்கு மாற்றுச் சீட்டில் குறிப்பிட்டுள்ள பண்டங்களின் மதிப்புக்கான தொகையினைச் செலுத்தி விடுகிறது. ஆவணங்களைப் பெற்றுக் கொண்ட தொடர்பு வங்கி அவற்றை, வாணிப உறுதிக் கடிதத்தை வெளியிட்ட இறக்குமதியருக்கு அனுப்பி, அதற்குச் சேரவேண்டிய தொகையைப் பெற்றுக்கொள்கிறது. தொகை முன்னரே செலுத்தப்பட்டுவிட்டால் கணக்கைச் சரிக்கட்டிக் கொள்கிறது. இறக்குமதியரின் வங்கி, அவருடன் செய்து கொண்டுள்ள உடன்பாட்டின்படி அவரிடமிருந்து மாற்றுச்

சீட்டுக்கான பணத்தைப் பெற்றுக்கொண்ட பின்னரோ, வேறு முறைப்படியோ சரக்குரிமை ஆவணங்களை இறக்குமதியாளரிடம் கொடுக்கிறது. ஒருசில சந்தர்ப்பங்களில், இறக்குமதியாளரின் வங்கி தொடர்பு வங்கிக்கு வாணிப உறுதியினைத் தெரிவிப்பதுடன் அத் தொடர்பு வங்கியினை ஏற்றுமதியாளருக்கு இக் கடனைப்பற்றிய உறுதியினைத் தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்வதுண்டு. இந்த நிலையில் தொடர்பு வங்கி உறுதி தெரிவித்துவிட்டு, தனிப்பட்ட முறையில் உறுதிக் கட்டணமும் திரட்டிக்கொள்கிறது. இம்முறை உறுதி செய்யப்பட்ட நாணய ஏற்பாடு என்றும் கூறுவர்.

(3) நாணய உறுதியுடன் கூடிய ஆவண முறை: இம் முறையில் ஏற்றுமதியாளர் பண்டங்களைக் கப்பலில் ஏற்றிவிட்டுக் கப்பல் இரசீது, காப்பீட்டுறுதி ஒப்பந்தம், விலைப்பட்டியல் போன்ற ஆவணங்களையும் தொடர்பு வங்கிமீது எழுதப்பட்ட பணவிடை ஒன்றையும் நேரிடையாகத் தொடர்பு வங்கியிடம் அல்லது அவருடைய வங்கி மூலம் தொடர்பு வங்கியிடம் அளிக்கிறார். பொதுவாக இப் பணவிடை நாணய உறுதி அளிக்கும் வங்கியின் தொடர்பு வங்கி மீதுதான் எழுதப்படும். இவ்வாறு அவ் வங்கிமீது எழுதுவதால் சிக்கலின்றிப் பணம் கிடைக்கிறது. ஏற்றுமதியாளர் விரும்பினால் அப் பணவிடையினை நாணய உறுதி அளிக்கும் இறக்குமதியாளர் வங்கிமீதும் எழுதலாம். பார்த்தவுடன் அல்லது ஏற்றபின் பணஞ்செலுத்தும் வகையில் இந்த ஏற்பாடு அமைந்திருக்கிறது. பார்த்தவுடன் பணம் செலுத்தும் முறையில் எழுதப்பட்டிருக்குமானால் தொடர்பு வங்கியிடம் இந்த ஆவணங்கள் கொடுக்கப்பட்ட உடன் சரக்குகளுக்குரிய பணம் கொடுக்கப்படுகிறது. ஏற்புக்குப் பிறகு பணம் செலுத்தத்தக்கதாக இருக்குமானால் குறிப்பிட்ட காலத் தவணைக்குப் பிறகு நாணய உறுதியளிக்கும் வங்கியோ, ஏற்றுமதியாளர் நாட்டிலுள்ள அதனுடைய கிளை அலுவலகம், அல்லது முகமை வங்கி, அல்லது தொடர்பு வங்கியோ உரிய பணத்தைச் செலுத்துகிறது. பொதுவாக 30 நாட்கள், 60 நாட்கள், 90 நாட்கள் அல்லது 120 நாட்கள் எனத் தவணை வழங்கப்படும். நான்கு திங்களுக்குமேல் தவணை வழங்கப்படுவது மிக அரிது.

(4) முன்பணம் செலுத்து முறை: இம் முறையில் உள்நாட்டு வாணிபத்தைப் போன்று இறக்குமதியாளர், வாங்கப்பட வேண்டிய சரக்கின் முழு மதிப்பினையும் வங்கிகளின் மூலம் முன் பணமாகவே ஏற்றுமதியாளருக்குச் செலுத்தி விடுகிறார். பொதுவாக விலையுயர்ந்த இயந்திர சாதனங்கள் போன்றவை இம் முறையின் மூலம் வாங்கப்படுகின்றன.

(5) அனுப்பீடு முறை (Consignment Method): இந்தியாவிலிருந்து இலண்டனுக்குத் தேயிலையை அனுப்புவதற்கும், வெளி நாடுகளிலுள்ள நிறுமங்களிடமிருந்து (Companies) அவற்றினுடைய கிளை அலுவலகங்கள் அல்லது துணை நிறுமங்கள் ஆகியவற்றுல், இயந்திர சாதனங்கள் இறக்குமதி செய்யப்படும்போதும் இம் முறை கடைப்பிடிக்கப்படுகிறது. ஏற்றுமதியர் தமது சரக்கினை வெளிநாட்டிலுள்ள தம்முடைய முகவர் அல்லது சார்பாளருக்கு (Representative) விற்பனைக்காக அனுப்புகிறார். ஏற்றுமதியரின் வங்கி பொறுப்புரிமை இரசீது ஒன்றினையும், அனுப்பப்படும் சரக்கின் மதிப்பினைக் காட்டும் அறிக்கை ஒன்றினையும் ஏற்றுமதியரின் முகவர் அல்லது சார்பாளருக்கு அனுப்புகிறது. அந்த அறிக்கையில் அனுப்பப்படும் சரக்கு எந்த விலையில் விற்கப்பட வேண்டும் என்று குறிப்பிட்டிருப்பதுவுமுண்டு. சரக்கு விற்கப்பட்டதும், முகவர் அல்லது சார்பாளர், கழிவு, விற்பனைச் செலவினங்கள் ஆகியவற்றைக் கழித்துக்கொண்டு மீதியை ஏற்றுமதியினரின் வங்கிக்கு அனுப்பிவிடுகிறார். அவ் வங்கி அத் தொகையினை ஏற்றுமதியருக்கு உடன் செலுத்தி விடுகின்றது.

(6) நிரவல்தொகைத் திட்டம்: இந்தியாவில் செயல்பட்டு வரும் வெளிநாட்டு நிறுமங்களின் கிளைகள், அல்லது துணை நிறுமங்கள் தங்களுடைய ஏற்றுமதி, இறக்குமதி நடவடிக்கைகளுக்கு நிதியுதவியளிக்க இம் முறையினைக் கடைப்பிடிக்கின்றன. இம் முறைப்படி ஏற்றுமதி செய்யப்பட்ட சரக்கின் மதிப்புக்கும், இறக்குமதி செய்யப்பட்ட சரக்கின் மதிப்புக்குமுள்ள வேறுபாட்டினை வெளிநாட்டு நிறுவனத்திடமோ, அதனுடைய முகமை யகத்திடமோ செலுத்தப்படுகிறது. அதுபோன்று வெளிநாட்டு நிறுவனம் உள்நாட்டு நிறுவனத்திற்குக் கூடுதலாகச் செலுத்தப்பட வேண்டுமானுல் அத் தொகை உள்நாட்டு நிறுவனத்தால் பெறப் படுகிறது.

(7) வெளிநாட்டு முகமையுதவியினுல் நேரடிக் கணக்குத் தீர்த்தல்: இம் முறை மூலம் வெளிநாட்டு வாணிபம் நடைபெற அமெரிக்க அரசு, உலக வங்கி போன்றவை பணம் அளித்து உதவி புரிகின்றன. மேலும் இம் முறையில், இந்தியாவிலுள்ள இறக்குமதியர் வெளிநாட்டிலுள்ள நிதியுதவி செய்யும் நிறுவனத்தை, அந்த நிதியுதவித் தொகையினை வெளிநாட்டிலுள்ள ஏற்றுமதியருக்கு நேரிடையாகச் செலுத்தும்படி கேட்டுக் கொள்கிறார். ஒருசில நிதியுதவிபெறும் இறக்குமதிகளில், இந்தியாவிலுள்ள இறக்குமதியர், வெளிநாட்டிலுள்ள ஏற்றுமதி

யருக்கு வேறுமுறையில் ஏற்றுமதிக்கான பணத்தைச் செலுத்தி விட்டு அக் குறிப்பிட்ட நிதியுதவியினைப் பின்னர்ப் பெற்றுக் கொள்வார்.

பொதுவாக, மேற்கண்ட முறைகளே வெளிநாட்டு வாணிபத்தில் கடைப்பிடிக்கப்படுகின்றன. எவ்வாறு இருப்பினும், வெளிநாட்டு வாணிபத்திற்கு வங்கிகளின் உதவி மிகுந்த அளவில் தேவைப்படுகிறது. வங்கிகளின் உதவியின்றி வெளிநாட்டு வாணிபம் நடைபெற முடியாது என்றுகூடக் கூறலாம். இப் பணியில் நிறைந்த ஈடுபாடுடன் செயல்படுவது அயல்நாட்டு வங்கிகளேயாகும். கடந்த இருபது ஆண்டுகளாக இந்திய வணிக வங்கிகளும் இத் துறையில் ஈடுபட்டாலும், அயல்நாட்டு வங்கிகளின் முக்கியத்துவம் இன்னும் குறையவில்லை. மேலும் இவ் வங்கிகள் அயல்நாட்டு வாணிபத்திற்கு மட்டுமின்றி உள்நாட்டு வாணிபத்திற்கும் நிதிவசதிகள் அளிக்கின்றன. இவை போதிய அளவில் வைப்புகளைத் திரட்டுகின்றன. மேலும் மாற்றுச் சீட்டு நடவடிக்கைகளிலும், கடன் நடவடிக்கைகளிலும் ஈடுபடு கின்றன. மொத்தத்தில் 70 விழுக்காடு நடவடிக்கைகள் ஆவணஞ்சேர் மாற்றுச்சீட்டு முறை மூலம் நடைபெறுகின்றன.

வாணிபத்திற்கு நிதியளிப்பதுடன்கூட, இதர வங்கியியல் நடவடிக்கைகளையும் மேற்கொள்கின்றன. வைப்புகள் பெறுதல், கடனளித்தல், முகமைப் பணிபுரிதல் ஆகியவற்றில், இவை, ஸ்டேட் வங்கியுடனும், இதர வணிக வங்கிகளுடனும் போட்டி யிட்டுத் தொழில்புரிகின்றன. தவணை வைப்புகளுக்கு இவ் வங்கிகள் இந்திய வணிக வங்கிகளைவிடச் சற்றுக்கூடுதலான வீதத்தில் வட்டி செலுத்துகின்றன. நடப்பு வைப்புகளுக்கும் இவை வட்டி செலுத்துவதால் நடப்பு வைப்பைப் பொறுத்தவரையில்கூட இவை அதிக அளவில் வைப்புத்தொகை பெறுகின்றன.

இவ்வாறு நல்லமுறையில் தொழில் புரிவதால் இவ் வங்கிகள் செழித்து வளர்ந்து வருகின்றன. பங்குநர்களுக்கு அதிக அளவில் பங்காதாயம் வழங்குகின்றன. வளர்ந்துவரும் சூழ்நிலையில் நாணயமாற்று நடவடிக்கைகளிலுள்ள இழப்பு வாய்ப்பும் நீக்கப் பட்டுவிட்டது, அயல்நாட்டு வங்கிகள் யாவும், நல்ல புகழையும் ஈட்டியுள்ளன. கீன்ஸ் (Keynes) என்ற வல்லுநருடைய கருத்துப்படி, இவ் வங்கிகள் தங்களுடைய திறமைமிக்க மேலாண்மையினால் நல்ல இலாப மீட்டுகின்றன. இவ்வாறு இவ் வங்கிகள் செயல்படுவதனால் இவற்றினுடைய ஒத்துழைப்பின்றித் தனிப்பட்ட முறையில் புதிய நாணயமாற்று வங்கிகள் அமைக்க முடியாது என்னும் நிலை ஏற்பட்டுள்ளது.

சில அயல்நாட்டு வங்கிகளின் சொத்துகள், பொறுப்புகள்
(1969 முடிய இந்தியாவில் ஏற்பட்ட நடவடிக்கைகள்)

(ரூ. ஆயிரக்கணக்கில்)

வரிசை எண்	வங்கியின் பெயர்	மொத்த வைப்புகள்	பிறவங்கிகளிடமிருந்து கடன்	பிற பொறுப்புகள்	மொத்தப் பொறுப்புகள்	கையிருப்பு ரொக்கம்
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)
1.	நேஷனல் & கிரிண்ட்லேஸ் பாங்க்	21,98,187	1,13,850	4,80,711	27,92,748	18,982
2.	பர்ஸ்ட் நேஷனல் சிட்டி பாங்க்	8,50,043	1,12,879	1,36,969	8,99,989	6,103
3.	சார்ட்டர்ட் பாங்க்	5,75,058	51,330	1,99,408	8,26,274	5,012
4.	மெர்க்கண்டைல் பாங்க்	3,60,688	56,884	1,14,230	5,30,802	4,952
5.	பாங்க் ஆப் அமெரிக்கா நேஷனல் டிரஸ்ட் & சேவிங்ஸ் அசோசியேஷன்	3,39,322	...	62,700	4,02,022	1,090
6.	அமெரிக்கன் எக்ஸ்பிரஸ் இன்டர் நேஷனல் பாங்கிங் கார்ப்பொரேஷன்	3,38,564	6,414	42,849	3,87,827	1,233

சில அயல்நாட்டு வங்கிகளின் சொத்துகள், பொறுப்புகள்
(1969 முடிய இந்தியாவில் ஏற்பட்ட நடவடிக்கைகள்)

(ரூ. ஆயிரக் கணக்கில்)

வரிசை எண்	வங்கியின் பெயர்	வங்கிகளின் ரொக்கம்	அழைப்பு குறுந் தவணைப் பணம்	வாங்கிய தள்ளுபடி செய்த மாற்றுச் சீட்டு	அளித்த கடன்கள்	அரசுப் பிணையங்களில் முதலீடு	நடப்பு ஆண்டு ஆதாயம் அல்லது நட்டம்
		(8)	(9)	(10)	(11)	(12)	(13)
1.	நேஷனல் & கிரிண்லேஸ் பாங்க்	1,02,737	—	3,97,022	13,91,400	5,20,411	7,270
2.	பர்ஸ்ட் நேஷனல் சிட்டி பாங்க்	34,406	6,000	45,034	4,90,047	1,51,870	7,038
3.	சார்ட்டர்ட் பாங்க்	29,616	25,300	1,24,377	3,15,489	1,37,969	672
4.	மெர்க்கண்டைல் பாங்க்	14,168	3,000	64,351	2,49,926	83,902	53
5.	பாங்க் ஆப் அமெரிக்கா நேஷனல் டிரஸ்ட் & சேவிங்ஸ் அசோசியேஷன்	9,658	1,100	21,553	2,26,086	78,753	3,802
6.	அமெரிக்கன் எக்ஸ்பிரஸ் இன்டர் நேஷனல் பாங்கிங் கார்ப் பொரேஷன்	21,940	4,200	16,782	2,20,577	91,511	2,611

அயல்நாட்டு வங்கிகள் கொண்டிருந்த ரொக்கக் காப்பிருப்பு.
[மொத்த வைப்புத்தொகைக்கு விழுக்காட்டில்]

1965—'66	...	...	4·68
1969—'70	...	...	4·15
1970—'71	...	...	4·42
1971—'72	...	...	4·31
1972—'73	...	...	4·19

அயல்நாட்டு வங்கிகளிடம் காணப்பட்ட குறைபாடுகள் :

(1) ஆங்கிலேயர்கள் நாட்டை ஆண்டுவந்த காலத்தில் இவ் வங்கிகளுக்குத் தனிப்பட்ட சில சலுகைகள் அளிக்கப்பட்டன. இச் சலுகைகள் உரிய முறையில் அளிக்கப்பட்டவையல்ல.

(2) அயல்நாட்டு வங்கிகள் சமீப காலம்வரை சட்டதிட்டங் களின் கட்டுப்பாடுகளுக்குட்பட்டவையாக அமையவில்லை.

(3) இவ் வங்கிகளின் கணக்குகள் தகுதிபெற்ற தணிக்கை யாளர்களால் தணிக்கை செய்யப்படுவதில்லை. இவை தங்க ளுடைய இலாபநட்டக் கணக்கு, இருப்புநிலைக் குறிப்பு ஆகியவற்றை வெளியிடுவதில்லை. எனவே, இவற்றின் நடவடிக் கைகள் மிக இரகசியமாகவே இருந்துவந்தன.

(4) சமீப காலம்வரை இவை இந்திய மக்களிடமிருந்து கணிசமான அளவு வைப்புத்தொகை திரட்டின. ஆனால், இவை உரிய முறையில் அவற்றைப் பாதுகாக்கவில்லை.

(5) இவ் வங்கிகள் நாணயமாற்று நடவடிக்கைகளில் முற்றுரிமைபெற்று நிறைந்த இலாபம் ஈட்டின. இம் முற்றுரிமை இந்திய மூலதனத்தினால் பெறப்பட்டதுடன்கூட, இவற்றால் இந்திய வணிக வங்கிகள் நாணயமாற்று நடவடிக்கைகளில் ஈடுபட முடியவில்லை.

(6) இவ் வங்கிகளின் சார்புத்தன்மை காரணமாக அயல் நாட்டு வாணிபத்தில் ஈடுபட்டுள்ள இந்தியர்கள் பணம் செலுத்திப் பெறும் மாற்றுச்சீட்டு மூலமே பண்டங்களை வாங்க முடிந்தது. ஆனால், இந்தியாவில் வாணிபம் செய்த ஆங்கிலேயர்கள் மாற்றுச் சீட்டினை ஏற்பதன்வழி பண்டங்களை வாங்கும் வாய்ப்பினைப் பெற்றிருந்தனர்.

(7) இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்த மாற்றுச் சீட்டுகளை, கெடு தேதிக்கு முன்னர் இலண்டனில் தள்ளுபடிசெய்து பணத்தை

அளித்தன. ஆனால், இந்திய மாற்றுச் சீட்டுகளைக் கெடு தேதி வரை வைத்திருந்து பணத்தைப் பெறுகின்றன. அவற்றைத் தள்ளுபடிசெய்து பணம் பெறுவதை ஆதரிக்கவில்லை. எனவே, இந்தியாவில் மாற்றுச்சீட்டுச் சந்தை வளர்ச்சி பெறவில்லை.

(8) நாணயமாற்று வங்கிகள், நாணயமாற்று நடவடிக்கைகளில் மட்டும் ஈடுபடாது உள்நாட்டு வாணிபத்திலும் ஈடுபட்டு இந்திய வணிக வங்கிகளுடன் போட்டியிட்டு இந்திய வணிக வங்கிகளின் வளர்ச்சியினைப் பாதித்துள்ளன.

(9) இவ் வங்கிகள் உயர்நிலை அலுவல்களுக்கு ஆங்கிலேயர்களையே பணியிலமர்த்தின. கீழ்நிலைப் பணிகளுக்கு மட்டும் இந்தியர்களை நியமித்தன. பொதுவாக, மேல்நிலைப் பணிகளுக்கு இந்தியர்களைப் பணியிலமர்த்துவதை விரும்பவில்லை.

(10) இந்திய வங்கியியல் சட்டத்தின்படி இவ் வங்கிகள் இந்தியாவில் பதிவு செய்யப்பட்டுப் பணி புரியவில்லையாதலின், சமீப காலம்வரை இவை தனித்து, எவ்விதச் சட்டதிட்டங்களுக்கும் உட்படாது செயல்பட்டு வந்தன.

(11) இவ் வங்கிகள் போதிய விழுக்காடு ரொக்கமின்றித் தொழில் புரிந்தது, இவற்றின்மீது சாட்டப்படும் குற்றங்களுள் மிக முக்கியமானதாகும்.

(12) அயல்நாட்டு வாணிபத்திற்கு வேண்டிய வசதிகளை இவை, இங்கிலாந்து நாட்டைச் சார்ந்த வணிகர்களுக்கு மட்டும் செய்து வந்தனவே தவிர, இந்திய நாட்டு வணிகர்களுக்கு இவ் வசதிகளைச் செய்துதரவில்லை. இதனால், இந்திய வணிகர்கள் அயல்நாட்டு வாணிபத்தில் போதிய அளவு முன்னேற்றம்பெற முடியவில்லை.

(13) வெளி நாட்டிலிருந்த ஏற்றுமதியாளர்கள், இந்தியாவிலுள்ள, இந்திய இனத்தைச் சார்ந்த இறக்குமதியாளர்களைப் பற்றிக் குறிப்புக் கேட்டபோது அவ் வங்கிகள், அவர்களைப் பற்றிக் குறைந்த மதிப்புள்ள குறிப்புகளைக் கொடுத்தன. ஆனால், இங்கு வீசித்து வந்த இங்கிலாந்து நாட்டைச்சார்ந்த இறக்குமதியாளர்களைப் பற்றிச் சற்று உயர்வான குறிப்புக் கொடுத்தன. இந் நிலை காரணமாக, இந்திய இறக்குமதியாளர்கள், வெளி நாடுகளிலிருந்து பண்டங்களைக் கடன்பேரில் வாங்க முடியவில்லை.

(14) இவ் வங்கிகள் கடைப்பிடித்த கொள்கைகளின் காரணமாக இறக்குமதி, ஏற்றுமதிக்கான மாற்றுச் சீட்டுகள், இந்திய

நாணயப்படி வரையப்படாமல், இங்கிலாந்து நாணயத்தினடிப் படையிலேயே வரையப்பட்டன. எனவே, பொதுவாக, இம் மாற்றுச் சீட்டுகள் கழிவு செய்யப்படும்பொருட்டு இலண்டனுக்கே அனுப்பப்பட்டன. இக் காரணத்தினலும் இந்தியாவில் மாற்றுச் சீட்டுச் சந்தை வளர்ச்சியுறவில்லை.

(15) இந்தியாவைச் சேர்ந்த இறக்குமதியாளர்களுக்குரிய பண்டங்கள் வெளிநாட்டிலிருந்து அனுப்பப்பட்டதற்கான மாற்றுச் சீட்டு, இதர ஆவணங்களோப்பெற்ற நாணயமாற்று வங்கிகள், இவ் விறக்குமதியாளர்களுக்கு இது குறித்த செய்தியினைக் கொடுத்து அவர்களை வங்கி அலுவலகத்திற்கு அழைத்து, அந்த ஆவணங்களை, அவர்களுடைய பார்வைக்கு வைத்தன. ஆனுல், அந்த ஆவணங்கள், இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்த இறக்குமதியாளர்களுக்காக அனுப்பப்பட்டிருந்தால், அவை இறக்குமதியாளர்களின் அலுவலகத்திற்கே அனுப்புப்பட்டன. ஏனவே, இவ் வகையிலும் நாணயமாற்று வங்கிகள், ஆங்கிலேயர்களுக்கு ஆதரவாகச் செயல்பட்டு வந்தன.

(16) மாற்றுச் சீட்டுகளுக்கான பணம், இந்திய இறக்குமதியாளர்களால் நாணயமாற்று வங்கிகளிடம் செலுத்தப்பட்ட பின்னரும், அத் தொகை வெளிநாட்டு ஏற்றுமதியாளர்களுக்குச் செலுத்தப்படும் வரையிலான காலத்திற்கும், இந்திய இறக்குமதியாளர்கள் 2 விழுக்காடு வீதத்தில் வட்டி செலுத்தவேண்டியிருந்தது.

(17) இவ் வங்கிகள் இந்திய ஏற்றுமதியாளர்களை, அவற்றுடன் தொடர்புகொண்ட, காப்புறுதிக் கம்பெனிகள், கப்பல் கம்பெனிகள் ஆகியவற்றிடம் பணிகளைப் பெறுமாறு கட்டாயப் படுத்திவந்தன.

(18) இவை, இந்திய வணிக வங்கிகள், வெளிநாட்டு வாணிபத்தில் ஈடுபடுவதைத் தடை செய்வதற்கான நடவடிக்கைகளில் ஈடுபட்டன. இந்திய வணிக வங்கிகள் நாணயமாற்று நடவடிக்கையில் ஈடுபடாததற்கு இவ் வங்கிகளே காரணமாகும்.

(19) இவை, இந்திய வங்கிகளின்மீது அவற்றைக் கட்டுப்படுத்தும் அளவுக்கு உரிமையினைப்பெற்று அவற்றைத் தங்களுடைய சுய நலத்திற்காகப் பயன்படுத்தி வந்தன.

(20) இவை, அரசு நிருவாகத்தில் உயர் பதவியிலிருந்த அலுவலர்கள் மூலம், தங்களுக்குச் சாதகமான முறையில் சட்டங்கள் இயற்றிக்கொள்ள முயன்றன.

(21) நாணயமாற்று வங்கிகளின் செய்கைகளிஞல், இந்தியப் பண அங்காடி, இந்தியர் பண அங்காடி என்றும், இந்தியரல்லாதார் பண அங்காடி என்றும் இரண்டாகப் பிரிக்கப்பட்டிருந்தது. இந்த இரு பிரிவுகளும் ஒற்றுமையுடன் செயலாற்றாது ஒன்றுடன் ஒன்று போட்டியிட்டதன் காரணமாக இந்திய வங்கியியல் துறை முன்னேற வாய்ப்பில்லாதுபோயிற்று.

(22) இந்தியாவில் திரட்டிய இந்திய வைப்புத்தொகையினை இந் நாட்டினை முன்னேற்றம் செய்யும் வகையில், இந்தியத் தொழில் நிறுவனங்களில் முதலீடு செய்யாது, அதனை அயல் நாட்டுத் தொழில் நிறுவனங்களில் முதலீடு செய்துவந்தன.

(23) இந்திய நாட்டைச்சேர்ந்த ஏற்றுமதியாளர்களுடைய மாற்றுச் சீட்டுகளைக் கழிவு செய்யும்போது, மாற்றுச் சீட்டின் முழுத்தொகையினையும் கொடுக்காது ஒரு பகுதியினை நிறுத்தி வைத்துக்கொண்டதுடன், அவ்வாறு மாற்றுச் சீட்டுகளைக் கழிவு செய்யும்போது உரிமையாளர்களிடமிருந்து மேலும் பிணையங்களை அளிக்க வற்புறுத்தின. எனவே, இந்திய ஏற்றுமதியாளர்கள், தகுந்த பிணையம் கொடுத்தபிறகே அவர்களுடைய மாற்றுச் சீட்டுகளைக் கழிவுசெய்ய முடிந்தது.

(24) இந்தியாவைச் சேர்ந்த ஏற்றுமதியாளர்களுக்கு, வெளி நாட்டுச் சந்தை நிலவரம், பண்டங்களின் விலை நிலவரம் போன்ற விவரங்களை இவ் வங்கிகள் கொடுக்கவில்லை.

(25) இவ் வங்கிகளிடமிருந்து உறுதியாக்கப்பட்ட வாணிப உறுதிக் கடிதம் பெறவிரும்பும் இந்திய இறக்குமதியாளர்கள், தாங்கள் இறக்குமதி செய்ய விரும்பும் பண்டங்களின் மதிப்பில் 10 முதல் 15 விழுக்காட்டுத் தொகைவரை வைப்புத்தொகையாக இவற்றினிடத்தில் செலுத்த வேண்டியிருந்தது. ஆனால், இங்கிலாந்து நாட்டைச்சேர்ந்த, இறக்குமதியாளர்களுக்கு இத்தகைய நிபந்தனைகள் விதிக்கப்படவில்லை.

(26) நாணயமாற்று நடவடிக்கைகளுக்கான ஒப்பந்தத்தை உரியகாலத்தில் செயல்படுத்தாத வாணிகர்களுக்கு இவ் வங்கிகள் தண்டக் கட்டணம் விதித்தன.

(27) எந்தெந்த நாட்டு வங்கிகள் இந்தியாவில் இல்லையோ அந்த நாடுகளிலிருந்து சரக்குகள் இறக்குமதி செய்வதற்காக இந்திய இறக்குமதியாளர்கள் இவ் வங்கிகளிடமிருந்து நாணய மாற்று வசதிகளைக் கேட்பின், இவை மிகக் கூடுதலான வீதத்தில் அவ் வசதிகளை அளித்துவந்தன.

(28) இவ் வங்கிகளினுல், வெளிநாடுகளில் இந்தியாவுக்கு, அரசியல் நீதியிலும், பொருளாதார நீதியிலும், தொழில் நீதியிலும் அதிக அவப்பெயரே ஏற்பட்டது. இந்திய நாட்டின் நற்பெயருக்குக் களங்கம் ஏற்பட்டது.

நாணயமாற்று வங்கிகளைக் கட்டுப்பாடு செய்தல் : நாணயமாற்று வங்கிகள் கட்டுப்பாடற்ற முறையில், தன்னிச்சையாகச் செயல்படுவது. இந்தியத் தொழில் வளர்ச்சிக்கும், இந்திய வங்கியியல் வளர்ச்சிக்கும் மிகவும் பாதகமான முறையிலமையுமென்றதொரு பொதுக்கருத்துத் தெரிவிக்கப்பட்டது. இக் கருத்தினை ஆதரிக்கும் வகையில் மைய வங்கியக்குழுவும், நாணயமாற்று வங்கிகளைக் கட்டுப்பாடற்ற முறையில் செயல்படவிடுவது உகந்ததன்று என்ற ஒருமித்த கருத்தினை வெளியிட்டது. மேலும், இக் குழு, இவ் வங்கிகளுக்கு, சேர்மனி, சப்பான் போன்ற நாடுகளில் கடைப்பிடிக்கப்படும் உரிமம் வழங்கும் முறையினைக் கடைப்பிடிக்கலாமென்ற கருத்தினையும் வெளியிட்டது. இக் குழுவின் கருத்துப்படி இந்தியாவில் எந்த நாணயமாற்று வங்கியும் உரிமம் பெறுது கிளைகள் திறக்க அனுமதி வழங்கப்படுதல் கூடாது. இவ்வாறு உரிமம் வழங்கும் உரிமை இந்திய ரிசர்வ் வங்கிக்கே கொடுக்கப்படவேண்டும். இவ்வாறு உரிமம் வழங்கப்படுவதால், இந்திய வைப்பாளர்கள் நலன் பாதுகாக்கப்படுகிறது; இந்திய வங்கிகளுக்கு நாணயமாற்று நடவடிக்கைகளில் ஈடுபட மேலும் வாய்ப்புண்டாகலாம். மேலும் இம் முறையினுல், இந்திய ரிசர்வ் வங்கி இந்த நாணயமாற்று வங்கிகளைக் கட்டுப்பாடு செய்ய முடிகிறது.

மைய வங்கியக் குழு உறுப்பினர்களில் பெரும்பான்மையோர் இந்தியாவில் செயல்பட்டுவரும் நாணயமாற்று வங்கிகளின் பணிகளைக் கருத்தில்கொண்டு மிக அதிகமான கட்டுப்பாடுகளின்றி அவற்றிற்கு உரிமம் வழங்கலாமென்ற கருத்தினை வெளியிட்டனர். உரிமம் ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு வழங்கப்படலாமென்றும், அதன்பிறகு, உரிமத்தில் குறிப்பிடப்படும் இவ் வங்கிகள், ரிசர்வ் வங்கிக்கு அவற்றினுடைய இந்தியத் தொழிலின் வாயிலாகப் பெற்ற சொத்துகள், பொறுப்புகள், இந்தியாவையன்றி வேறு நாடுகளின்மூலம் பெற்ற சொத்துகள், பொறுப்புகள் ஆகியவை குறித்த அறிக்கையினை ரிசர்வ் வங்கிக்கு அனுப்புதல் போன்ற நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்பட்டால், இவ் உரிமம், எவ்விதச் சிரமமுமின்றித் தானுகவே புதிப்பிக்கப்படலாமென்றும் கருத்துக் கொண்டிருந்தனர்.

மேலும், இக் குழு உறுப்பினர்களில் பெரும்பான்மையோர், இவ் வங்கிகளின் மீதான குற்றச்சாட்டுகளை நீக்கும் வகையிலும், இவை மேலும் சிறப்பாகச் செயல்படும் வகையிலும் கீழ்க் காணும் கருத்துகளை வெளியிட்டனர்:

(அ) இந்திய இறக்குமதியாளர்கள், வெளிநாட்டு ஏற்றுமதியாளர்கள், மாற்றுச் சீட்டுகளை, இந்திய நாணயத்தில் எழுத வேண்டுமென்று விரும்பினால், அந்த வெளிநாட்டு ஏற்றுமதியாளர்கள் அவ்வாறு மாற்றுச் சீட்டுகளை இந்திய நாணயத்தில் எழுத இந்த நாணயமாற்று வங்கிகள் ஆவன செய்யவேண்டும்.

(ஆ) நாணயமாற்று வங்கிகள், இந்தியக் காப்புறுதி நிறுவனங்களுடன் கலந்துரையாடி, அவற்றினுடைய திட்டாவணத்தினை ஏற்கும் வகையில் முடிவு செய்யவேண்டும்.

(இ) ஒவ்வொரு கிளை வங்கியிலும் அது கடன் கொடுப்பது குறித்து முடிவுசெய்து வங்கிக்கு அறிவுரை வழங்கும் முகத்தானும், வங்கிகளில் மேல்நாட்டு மேலாளர்களையும், இந்திய வாடிக்கைக் காரர்களையும் இணக்கும் முகத்தானும், இவ் வங்கிகள் இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்தவர்களுக்கே கடன் வசதிகள் அளிக்கின்றன என்னும் குற்றச்சாட்டினைக்களையும் முகத்தானும், அக் கிளை செயல் படும் இடத்திலுள்ள, உள்ளூர் வாடிக்கைக்காரர்களைக்கொண்ட உள்ளூர்க் கருத்துரைக்குழு ஒன்று நியமிக்கப் படவேண்டும்.

(ஈ) திறமைமிக்க இந்தியர்களை இவ் வங்கிகளின் உயர் பதவியில் நியமிக்க வேண்டும்.

உரிமம் வழங்குவதற்குரிய நிபந்தனைகள்: திரு. சுபேதார் (Mr. Subedar), திரு. சர்க்கார் (Mr. Sarkar) போன்ற வங்கியியல் வல்லுநர்கள், கீழ்க்காணும் நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்பட்ட பிறகே நாணயமாற்று வங்கிகளுக்கு உரிமம் வழங்கவேண்டு மென்று கருத்துத் தெரிவித்தனர். இவ்வாறு இவ் வங்கிகளுக்கு வரையறைகள் விதிப்பதன்வழி, இவ் வங்கிகள் மிகப் பெருமளவில் இலாபமீட்டுவது தவிர்க்கப்படுவதுடன்கூட இந்திய வங்கிகளும் நாணயமாற்று நடவடிக்கைகளிலீடுபட்டு வளர்ச்சியுற வாய்ப்பேற்படுகின்றது. எனவே, கீழ்க்காணும் வரையறைகளை நாணய மாற்று வங்கிகளின்மீது விதிக்கலாமென்ற கருத்தினை அவர்கள் வெளியிட்டனர்.

(1) ஒவ்வொரு நாணயமாற்று வங்கியும் அதனுடைய நடைமுறை முதலில் ஐம்பது விழுக்காட்டுத் தொகையை வெளிநாட்டிலிருந்து திரட்டிக்கொண்டு வருதல் வேண்டும்.

(2) இந்தியர்களுடைய அயல்நாட்டு வாணிபத்திற்கு நிதி உதவி செய்யும் அளவிற்குமட்டும் இவ் வங்கிகள் இந்தியர்களிட மிருந்து வைப்புத்தொகை திரட்ட அனுமதிக்கப்படவேண்டும். வேறு தொழிலுக்கு முதல் தேவைப்பட்டால் இவை ஆங்கிலேயர் களிடமிருந்து வேண்டிய அளவு வைப்புத்தொகை திரட்டிக் கொள்ளலாம்.

(3) இந்தியாவில், ரூபாய் மூலதனத்தில் பதிவு செய்யப்பட் டிருந்தால்தான் இந்தியாவிலிருந்து அவை வைப்புத்தொகை திரட்ட அனுமதிக்கப்பட வேண்டும். இக் கட்டுப்பாட்டின் மூலம், நாணயமாற்று வங்கிகள் இந்தியாவில் குறைந்த வட்டி வீதத்தில் வைப்புத்தொக்க திரட்டி அதனை உள்நாட்டு வாணிபத்தில் முதலீடு செய்து இந்திய வங்கிகளுடனும், நாட்டு வங்கியருடனும் போட்டியிடுகின்றன என்னும் குற்றச்சாட்டினை ஓரளவு தவிர்க் கலாம்.

ஆனால், இவ்வாறு நாணயமாற்று வங்கிகள் வைப்புத்தொகை பெறுவதன்மீது கட்டுப்பாடுகள் விதிப்பதனைப் பெரும்பாலான மைய வங்கியியக் குழு உறுப்பினர்களும் வெளிநாட்டு வல்லுநர் களும் ஏற்றுக்கொள்ளவில்லை. இவ்வாறு தடை விதிப்பது இந்திய வங்கியிய வளர்ச்சிக்கே உகந்ததன்று என்று அவர்கள் கருத்துத் தெரிவித்தனர்.

(4) உரிமம் வழங்க நாணயமாற்று வங்கிகளுக்கு விதிக்கப் பட்ட அடுத்த கட்டுப்பாடு அவை துறைமுகம் உள்ள நகரங்களில் மட்டுமே கிளை அலுவலகங்களைக் கொண்டிருக்க வேண்டுமென்ப தாகும். இக் கட்டுப்பாட்டின் மூலம் நாணயமாற்று வங்கிகள் உள்நாட்டு வாணிபத்தில் ஈடுபடுவதைத் தவிர்க்கலாமென்று கூறப்பட்டது.

ஆனால், வங்கியியக்குழு உறுப்பினர்கள், இக் கட்டுப்பாடு வெளிநாட்டு வாணிபத்தில் ஈடுபட்டுள்ளவர்களைப் பெருமளவில் பாதிக்குமென்ற காரணத்தினால், இதனைப் பெரிதும் எதிர்த்தனர். ஆனால், இக் கட்டுப்பாடு விதிக்கப்படா விட்டால், உள்நாட்டு வாணிபத்தில் நாணயமாற்று வங்கிகள் ஈடுபட்டு இந்தியநாட்டு வணிக வங்கிகளின் வளர்ச்சி பெருமளவில் பாதிக்கப்படுமென்ற காரணத்தைக் குறிப்பிட்டு அக் குழுவின் ஆறு உறுப்பினர்கள் அம் மறுப்புக்கு எதிர்ப்புத் தெரிவித்தனர்.

(5) நேரிடையாகவோ, மறைமுகமாகவோ எந்த நாணய மாற்று வங்கியும், இந்திய வங்கிகளைக் கட்டுப்படுத்துமளவிற்கு

உரிமையினையோ பங்கினையோ பெறக்கூடாது எனும் கருத்துத் தெரிவிக்கப்பட்டது. இதனைக் கடைப்பிடித்துச் செயல்படுத்துமளவில் இந்திய வங்கிகள் இந்தியப் பங்குநர்களுக்கென்றும், இந்தியரல்லாத பங்குநர்களுக்கென்றும் தனித்தனியாகப் பதிவேடுகள் வைத்துக்கொள்ள வேண்டுமென்றும், இந்தியரல்லாத பங்குநர் பதிவேட்டிலிருந்து எவ்விதத் தடையுமின்றி இந்தியப் பங்குநர் பதிவேட்டிற்குப் பங்குகள் மாற்றம் செய்யப்படலாமென்றும், ஆனால், இந்தியப் பங்குநர் பதிவேட்டிலிருந்து இந்தியரல்லாத பங்குநர் பதிவேட்டிற்கு மாற்றங்கள் செய்யும்போது, வங்கிகளின் இயக்குநர்கள் மிகக் கவனத்துடன் செயல்பட்டு மாற்றத்திற்குப் பிறகும் இந்தியரல்லாத பங்குநர்கள், வங்கிகளின் பங்குகளில் 40 விழுக்காட்டுக்கு மிகாத பங்குகளை மட்டும் பெற்றுக்கொள்ளும் வகையில் செயல்படவேண்டுமென்றும் கருத்துத் தெரிவிக்கப்பட்டது.

(6) ஒவ்வொரு நாணயமாற்று வங்கியிலும், அதனுடைய மேலாளர், மேலும் ஓர் அலுவலரைத் தவிர, இதர அலுவலர்கள் அனைவரும் இந்தியர்களாகவே இருத்தல் வேண்டும். தவிர்க்க முடியாத நிலையில், ஒருசில வங்கிகளைப் பொறுத்தவரை இந்த நிபந்தனை விலக்களிக்கப்படலாம்.

(7) நாணயமாற்று வங்கிகள், இந்தியாவில் செய்யும் தொழில்பற்றிய முழு விவரங்களையும்—அவற்றினுடைய இருப்பு நிலைக் குறிப்பு, இதர அறிக்கைகள் ஆகியவற்றை—அவற்றின் தலைமை அலுவலகங்களுக்கு அனுப்பும்போது, அவற்றினுடைய படிகளை உரிமம் வழங்கும் அதிகாரிகளுக்கும் அனுப்புதல் வேண்டும். உரிமம் வழங்கும் அதிகாரிகள், விரும்பினால் அவற்றினைப் பொதுமக்கள் நலனையொட்டி வெளியிட்டுப் பொதுமக்களுக்கு அறிவிக்கலாம்.

(8) நாணயமாற்று வங்கிகள் தீர்வகங்களிலிருந்து பணிவசதி பெறுதலும், ரிசர்வ் வங்கியிடமிருந்து மறுகழிவு வசதி பெறுதலும், உரிமம் வழங்கும் அதிகாரிகளின் விருப்பப்படி அமைந்திருக்க வேண்டும்.

நாணயமாற்று வங்கிகளும், வங்கியியல் ஒழுங்காற்றுச் சட்டமும்: வங்கியியல் ஒழுங்காற்றுச் சட்டமும், இவ் வயல்நாட்டு வங்கிகளைக் கட்டுப்படுத்துமளவில் விதிமுறைகளைக் கொண்டுள்ளது. எனவே, 1949 ஆம் ஆண்டு இயற்றப்பட்ட வங்கியியல் ஒழுங்காற்றுச் சட்டமே நாணயமாற்று வங்கிகளைக் கட்டுப்படுத்த எடுக்கப்பட்ட முயற்சிகளில் முக்கியமானதென்று கூறலாம். இச் சட்டம், இந்திய வணிகர்களாலும், இந்திய வணிக வங்கிகளாலும்,

நாணயமாற்று வங்கிகள்மீது சாட்டப்பட்ட குற்றங்களைக் கருத்தில் கொண்டு இயற்றப்பட்டது. இச் சட்டம் நாணயமாற்று வங்கிகளைப் பொறுத்தவரை கீழ்க்காணும் கட்டுப்பாடுகளை விதித்துள்ளது எனக் கூறலாம்:

(1) எந்த வங்கியும் புதிய கிளைகளைத் திறக்க, ரிசர்வ் வங்கியிடம் முன் அனுமதி பெறவேண்டும். இந்த விதி, நாணயமாற்று வங்கிகள் தடையின்றிக் கிளைகள் திறந்து, இந்திய வங்கிகளுடன் போட்டியிடுவது இதன்மூலம் தவிர்க்கப்படலாம் என்று கருத்துத் தெரிவிக்கப்பட்டது.

(2) இந்திய வணிக வங்கிகளைப் போலவே நாணயமாற்று வங்கிகளும் தகுந்த அலுவலர்களிடமிருந்து கட்டாயமாக உரிமம் பெறவேண்டும்.

(3) அவ்வாறு உரிமம் வழங்குவதற்கு முன்பு, நாணயமாற்று வங்கி நிறுவப்படுவதால், இந்திய வணிக வங்கிகளின் தொழில் பாதிக்கப்படாது என்று நன்கு தெரிந்தபின்னரே உரிமம் வழங்கப்படும்.

(4) இந்திய ஒழுங்காற்றுச் சட்டத்தின் பதினெண்ரும் பிரிவின்படி, பம்பாய், கல்கத்தா ஆகிய இடங்களில் தொழில் புரியும், வெளிநாட்டில் பதிவுசெய்யப்பட்ட வங்கிகள் நடைமுறை முதலும், காப்பு நிதியுமாகச் சேர்ந்து குறைந்தது ரூ. 20 இலட்சம் தொகையினையும், இதர இடங்களில் தொழில் புரியும் வங்கிகள், ரூ. 10 இலட்சம், நடைமுறை முதலும், காப்புநிதியும் பெற்றிருத்தல் வேண்டும்.

(5) நாணயமாற்று வங்கி பதிவுசெய்யப்பட்ட நாட்டின் அரசு, இந்தியாவில் பதிவு செய்யப்பட்டு அந்த நாட்டில் பணியாற்றும் இந்திய வங்கிகளை வேறுபாடுசெய்து தனிப்பட்ட முறையில் நடத்துதல் கூடாது.

(6) அயல்நாட்டு வங்கிகள் கொண்டுள்ள குறைந்த அளவு நிதியை முழுவதும் ரொக்கமாகவோ, ஒரு பகுதியை ரொக்கமாகவும், ஒரு பகுதியை ஆவணங்களாகவுமோ ரிசர்வ் வங்கியிடம் வைப்பாகக் கொடுக்கவேண்டும்.

(7) இவ்வாறு செலுத்தப்படும் வைப்புத்தொகை, அக் குறிப்பிட்ட வங்கி இந்தியாவில் தொழில் புரியமுடியாத நிலை ஏற்படும்போது, அவ் வங்கியின் கடனாளர்களுக்கு ஈடுசெய்யப் பயன்படுத்தப்படும்.

(8) அவ் வங்கிகள் இந்தியாவில் பெற்றுள்ள சொத்தின் மதிப்பு அவை இந்தியாவில் திரட்டியுள்ள வைப்புத்தொகையில் 75 விழுக்காட்டளவாவது இருத்தல் வேண்டும்.

(9) இந்தியாவில் தொழில்புரியுமளவுக்காவது இவ் வங்கிகள், ஆண்டுதோறும் தங்கள் கணக்குகளை உரிய முறையில் தயாரித்து அவற்றைத் தகுதிபெற்ற தணிக்கையாளர்களைக் கொண்டு தணிக்கைசெய்து வெளியிட வேண்டும்.

(10) இவ்வாறு தணிக்கைச் செய்யப்பட்ட கணக்குகளின் படிகள் ஒவ்வொரு நாணயமாற்று வங்கியாலும், அதன் கிளை அலுவலகங்களின் முதன்மை அலுவலகத்தில் ஒவ்வோர் ஆண்டும் ஆகஸ்ட் மாதம் முதல் திங்கள் கிழமைக்குள் எல்லோருக்கும் தெரியும்வகையில் ஒட்டப்படவேண்டும். அவ்வாறு ஒட்டப்படும் படிகள் அடுத்த ஆண்டு இதுபோன்ற கணக்குகளின் படிகள் மீண்டும் அங்கு ஒட்டப்படும்வரை நீக்கப்படக் கூடாது.

(11) 1962ஆம் ஆண்டு வங்கியியல் ஒழுங்காற்றுச் (திருத்தப்பட்ட) சட்டத்தின்படி வெளிநாட்டில் பதிவு செய்யப்பட்ட ஒவ்வொரு வங்கியும் அது இந்தியாவில் தொழில் புரிந்ததன்மூலம் ஈட்டிய இலாபத்தில் குறைந்தது 20 விழுக்காட்டையாவது இந்திய ரிசர்வ் வங்கியில் வைப்பாகச் செலுத்தவேண்டும். இத் தொகை அக் குறிப்பிட்ட வங்கியின் கணக்கில் ரிசர்வ் வங்கியால் வைப்புத்தொகையாகப் பெறப்படும்.

தொழிலுலகில் முக்கிய இடம்பெறும் இந்தியா, அதனுடைய தொழியினை மேலும் வளர்த்துக்கொள்ள, அதனுடைய அயல்நாட்டு வாணிபத்திற்கு, அயல்நாட்டு வங்கிகளைமட்டும் நம்பியிருத்தல் உகந்ததன்று. ஏற்றுமதி வாணிபத்தில் ஈடுபட்டுள்ள இந்தியத் தொழிலகங்களுக்குக் கடன் வசதிகள்தர இந்திய வணிக வங்கிகள் உரிய முயற்சிகள் எடுக்கவேண்டும். மைய வங்கியியக் குழு உறுப்பினர்கள் குறிப்பிட்டபடி இந்தியத் தொழிலகங்கள் அயல் நாட்டு வாணிபத்திற்கு அயல்நாட்டு வங்கிகளை மட்டும் நம்பியிருத்தல் கூடாது. தொழிலகங்களின் வாணிபம் அவை எந்த அளவிற்குக் கடன் வசதிகள் பெற முடிகின்றன என்பதனைப் பொறுத்தே அமையும். எனவே, அயல்நாட்டு வங்கிகள் தம் நாட்டிலிருந்து வந்துள்ளவர்கள் தொடங்கியுள்ள தொழில் நிறுவனங்களுக்கே கடன் வசதிகளை முதன்மையாக அளிக்க விரும்புவது இயல்பே. அயல்நாட்டு வங்கிகள் அதிலும் குறிப்பாக இங்கிலாந்து நாட்டைச் சார்ந்த வங்கிகள் இங்கிலாந்து நாட்டைச் சார்ந்தில்லாத நபர்களுக்குக் கடன் வசதிகள் அளிப்பதில் மிகவும்

கடுமையாக இருக்கின்றன. இந் நிலையினைக் கருத்தில் கொண்டே அமெரிக்கா, சப்பான், பிரான்ஸ் நாட்டினர் தங்கள் நாட்டின் வங்கிகள் கிளைகளை இந்தியாவில் நிறுவித் தங்களுடைய அயல் நாட்டு வாணிபத்தைத் தழைக்கச் செய்தனர்.

இங்கிலாந்து நாட்டு வங்கிகள் மரபுவழிக் கோட்பாடுகளை இன்னும் கடைப்பிடித்து வருகின்றன. எனவே, அவை கடன் வசதி யளிப்பதில் மிகவும் எச்சரிக்கையாகவிருப்பதுடன், கூடிய வரை கடனளிப்பதைக் குறைத்துக்கொள்ள முயலுகின்றன. அவை கடனளிக்கும் கால எல்லையும் மிகக் குறைவு. எனவே தான், அயல்நாட்டு வாணிபத்தை விரிவாக்கும் வகையில் செர்மன், சப்பான் ஆகிய நாடுகள், வெளிநாடுகளில் தங்கள் நாட்டு வங்கிகளின் கிளைகளை யமைத்து அந்தந்த நாடுகளிலுள்ள, தங்கள் நாட்டு மக்களுக்கு எளியமுறையில் கடனுதவி அளிக்க உரிய முயற்சிகள் எடுத்துள்ளன. எனவே, மைய வங்கியியக் குழுவும், அயல்நாட்டு வங்கிகளைப்போன்று நன்கு செயல்பட்டு வரும் இந்திய வணிக வங்கிகளும் வெளிநாடுகளில் கிளை அலுவலகங்களைத் திறப்பதன்மூலம் இந்தியாவின் அயல்நாட்டு வாணிபத்தைப் பெருக்க வழிவகுக்கலாமென்ற கருத்தினை வெளியிட்டது.

இந்திய அரசும், அரசினைச் சார்ந்த நிறுவனங்களும் இவ்வாறு இந்திய வங்கிகளால் நிறுவப்படும் அயல்நாட்டுக் கிளைகளை ஊக்குவிக்கும் வகையில், தங்களுடைய வாணிபத் தொடர்புகள், நாணயமாற்று நடவடிக்கைகள் ஆகியவை முழுவதையும் இந்திய வங்கிகளின் வழியே செய்தல்வேண்டும். கடந்த சில ஆண்டுகளாக இந்திய வங்கிகள் நாணயமாற்று நடவடிக்கைகளில் ஈடுபட்டு நல்லமுறையிலும், இலாபகரமாகவும் செயலாற்றி வருவது குறிப்பிடத்தக்கது. இந்திய வங்கிகள் இத் தொழிலில் ஈடுபட்டதன் காரணமாகவே அயல்நாட்டு வங்கிகள், அயல்நாட்டு நாணயங்களை வாங்கும்விலை, விற்கும்விலை ஆகியவற்றிற்கிடையே கொண்டிருந்த இடைவெளி வெகுவாகக் குறைந்துவிட்டது. இதற்குமுன் மிக அதிகமாக இடைக்கால வட்டி திரட்டிய நாணயமாற்று வங்கிகள் இப்பொழுது பணச்சந்தை நிலையினைக் கருத்தில் கொண்டு நியாயமான வட்டியினையே திரட்டுகின்றன.

வங்கியியப் பழக்கம் படிப்படியாக வளர்ந்துவரும் நமது நாட்டில், இந்திய வங்கிகளின் வைப்புத்தொகையும் ஆண்டுக்கு ஆண்டு பெருகிவருவதை நாம் நன்கறிவோம். எனவே, அயல்நாட்டு வாணிபத்திற்குத் தேவைப்படும் நிதியுதவி செய்ய வேண்டிய அளவுக்குப் பணம் இந்திய வங்கிகளால் திரட்ட முடியுமா என்ற

ஐயத்திற்கு இனி இடமேயில்லை. அயல்நாட்டு வங்கிகள், அயல் நாட்டு வாணிபத்திற்குத் தேவையான மூலதனத்தில் பெரும் பகுதியினை இந்தியாவிலிருந்து வைப்புத்தொகை மூலமே திரட்டிக் கொள்வதால், இந்திய வங்கிகள், தங்கள் நிதியினை மேலும் பெருக்கிக்கொள்ளப் போதிய வாய்ப்பிருக்கின்றது எனக் கூறலாம். அயல்நாட்டு வாணிபத்தில் அதிக காலம் முதல் முடங்கிக் கிடக்க வேண்டுமென்ற தவருன தொரு கருத்து உள்ளது. ஆனால், நடை முறையில் அவ்வாறு நடைபெறுவதில்லை. அயல்நாட்டு வாணிபத் திற்குத் தேவைப்படுவது அதிக விற்பனையோட்டமே (Turn over) தவிர அதிக மூலதனமன்று. எனவே, எவ்விதத் தயக்கமுமின்றி இந்திய வணிக வங்கிகள் அயல்நாட்டு வாணிபத்தில் ஈடுபடலாம்.

மேலும், நாணயமாற்று நடவடிக்கைகளில் ஈடுபட்டுவரும் இந்திய வணிக வங்கிகளின் எண்ணிக்கை சிறிது சிறிதாகக் கூடி வருகின்றது. அயல்நாட்டு வங்கிகள் அயல்நாட்டு நாணயங்களை விற்கும் விலைக்கே இந்திய வங்கிகளும் விற்குமளவுக்கு இந்திய வங்கிகள் வளர்ந்துள்ளன. இந்திய வங்கிகள் முடிந்த அளவு வெளிநாடுகளில் கிளை அலுவலகங்கள் திறக்க உரிய நடவடிக் கைகள் எடுத்துள்ளன. இலங்கை, ஹாங்காங், ஜப்பான், கென்யா, மலேசியா, நைஜீரியா, தாய்லாந்து, உகாண்டா, இங்கிலாந்து போன்ற நாடுகளில் இந்திய வங்கிகள் தமது கிளை அலுவலகங்களைத் திறந்துள்ளன. இதர நாடுகளில் இவ் வங்கிகள் முகமை வங்கிகளை நியமித்துள்ளன.

இந்தியாவைப் பொறுத்தவரை அரசுத்துறைகளே கணிசமான அளவுக்கு ஏற்றுமதி, இறக்குமதி வியாபாரத்தில் ஈடுபட்டுள்ளன. இதற்கு வேண்டிய நிதிவசதிகள் யாவும், இந்திய வங்கிகள் மூலமே பெறுவது என்ற நிலை உருவாக்கப்பட்டால், இந்திய வங்கிகள் இத் துறையில் இன்னும் வளர்ச்சியுற வாய்ப்புள்ளது. ஸ்டேட் வங்கியினைத் தவிர மேலும் பெரும் பதினைந்து வணிக வங்கிகள் நாட்டுடைமையாக்கப்பட்ட இந்த நேரத்தில் இத் திட்டம் நிறை வேற்ற முடியாததன்று. இந்திய அரசின் பல்வேறு துறைகளும், இந்தியாவிலுள்ள பல்வேறு கூட்டுருக்களும் பெருமளவில் இங்கிலாந்து, அமெரிக்கா ஆகிய இரு நாடுகளுடன் வாணிபத் தொடர்பு கொண்டுள்ளன. இவை அமெரிக்க நாட்டு வங்கிகளிடமும், இங்கிலாந்து நாட்டு வங்கிகளிடமும் ஒப்படைக்கப் பட்டுள்ளன. இந்த நிலைமாறி, இவை யாவும் இந்திய வங்கி களின் கிளைகளிடம் ஒப்படைக்கப்பட்டால், இந்திய வங்கிகள் அயல்நாட்டு வாணிபத்தில் பங்கு பெறுவது மேலும் வளர்ச்சி யடையலாம்.

இறுதியாக, தனியார்துறை நிதியக்குழு (Committee on Finance for the Private Sector) இது தொடர்பாகச் சில பரிந்துரைகளை வெளியிட்டுள்ளது. ரிசர்வ் வங்கியால் நியமிக்கப்பட்ட இக் குழு, வெளிநாடுகளில் கிளைகளுள்ள இந்திய வங்கிகள், அயல்நாட்டு வாணிபத்தில் நன்கு ஈடுபட ரிசர்வ் வங்கி உதவும்வகையில் அவ் வணிக வங்கிகள் ரிசர்வ் வங்கியில் கணக்கு ஆரம்பிப்பதற்கு வழி வகுக்கும் வகையில் ரிசர்வ் வங்கிச் சட்டத்தின் பிரிவு 17 உட்பிரிவு 13 உரிய முறையில் திருத்தப்பட வேண்டுமெனப் பரிந்துரைத்தது. ரிசர்வ் வங்கி, ஸ்டேட் வங்கியுடன் சேர்ந்து போதிய அளவில் நாணயமாற்று நடவடிக்கைகளில் முன்னேற்றம் செய்ய முடியாவிட்டாலோ, ஸ்டேட் வங்கி நாணயமாற்று நடவடிக்கைகளில் ஈடுபடுவதில் இடர்ப்பாடு எதுவுமிருந்தாலோ, இந்திய அரசு இந்திய நாணயமாற்று வங்கி (Indian Exchange Bank) ஒன்றினை நிறுவுதல் வேண்டுமென்று மேலும் பரிந்துரை செய்தது. இக் குழுவின் கருத்துப்படி இப் புதிய வங்கி ரூ. மூன்றுகோடி முதலைப் பெற்றிருக்க வேண்டும். மூடிந்த அளவு இத் தொகை இந்திய வங்கிகளிடமிருந்து திரட்டப்பட வேண்டும். குறையும் தொகையினை மைய அரசிடமிருந்து திரட்டிக்கொள்ளலாம். அவ்வாறு மைய அரசு செலுத்தும் முதலுக்கான பங்குகளை அது பின்னர்ப் பொதுமக்களுக்கு விற்றுக்கொள்ளலாமென்றும் பரிந்துரைத்தது. மைய அரசு முதலில் 50 விழுக்காட்டிற்குமேல் செலுத்தியுள்ள நிலைவரை அது இயக்குநரவையில் பெரும்பான்மையான உறுப்பினர்களை நியமனம்செய்யும் உரிமையினைப் பெற்றிருக்கும். திரட்டப்படும் ரூ. மூன்று கோடி மூலதனம், அயல்நாட்டு வாணிபத்திற்கு நிதி உதவி அளிக்கப் போதுமானதாக அமையாது. மேலும் தொடக்க நிலையிலுள்ள இவ் வங்கி பொதுமக்களிடமிருந்தும் வைப்புத்தொகை திரட்டுதல் என்பது இயலாததாகும். எனவே, இவ் வங்கிக்கு ரிசர்வ் வங்கி தாராளமாக நிதியுதவி வழங்கவேண்டும். ரிசர்வ் வங்கி இவ் வங்கியினை அரசின் அனுப்புகை நடவடிக்கைகளுக்குத் தனது முகவராக நியமிக்க வேண்டும். இந்திய நாணயமாற்று வங்கியும் இந்த நடவடிக்கைகளுக்கு எவ்வித ஆதாயமும் எதிர்பாராது அவற்றைச் செய்துவரவேண்டும்.

கூட்டுவங்கித் திட்டம்: அயல்நாட்டு வாணிப நிதிப் பிரச்சினைகள் நிரந்தரமாகத் தீர்க்கப்பட வேண்டுமாயின், இந்தியா வாணிபத் தொடர்பு கொண்டுள்ள நாட்டைச் சார்ந்தவர்களாலும், இந்தியர்களாலும் கூட்டாகக் கூட்டு வங்கிகள் (Joint Banks) தொடங்கப்பட்டு அவை இரு சாராராலும் நிருவகிக்கப்பட வேண்டுமென்று மைய வங்கியியக் குழு பரிந்துரை செய்தது. ரூபாய் முதல்

இந்தியப் பங்குநர்களாலும் வெளிநாட்டு முதல் வெளிநாட்டுப் பங்குநர்களாலும் செலுத்தப்படலாம். இவ் வங்கிகள் ஈட்டும் இலாபத்தினை இரு சாராரும் பகிர்வு செய்துகொள்ளலாமென்றும் இக் குழு கருத்துத் தெரிவித்தது. இத் திட்டத்தின் மூலம் இந்திய வங்கிகளுக்கும், நாணயமாற்று வங்கிகளுக்கும் இடையேயுள்ள தேவையற்ற போட்டி தவிர்க்கப்பட்டு அவை ஒருங்கிணைந்து ஒன்றுகவும், கூட்டாகவும் செயல்பட வாய்ப்பேற்படும். இவ் வங்கிகளில் பணிபுரியும் வல்லுநர்களின் பணிகள், இவ்விருவகை வங்கிகளுக்கும் கிடைக்கும்.

வங்கிகளுக்கிடையே ஒற்றுமையை வலுப்படுத்தும் இத் திட்டத்தினை மைய வங்கியியக் குழு உடன் செயல்படுத்தவேண்டு மென்று பரிந்துரைசெய்தது. மேலும் இத் திட்டம் சட்டத்தின் அடிப்படையில் செயல்படுத்தப்படுவதென்பதும் இயலாதது. எனவே, இவ்விருவகை வங்கிகளின் பங்குநர்களும், இயக்குநர்களும் தாங்களாகவே முன்வந்து இதனைச் செயல்படுத்த வேண்டு மென்றும் இக் குழு கருத்துத் தெரிவித்தது. ஆனால், சர்க்கார் (Mr. Sarkar) போன்ற வல்லுநர்கள், கட்டாயப்படுத்தப்பட்டா லன்றி, இத் திட்டத்தினை அயல்நாட்டு வங்கிகள் ஏற்றுக்கொள்ள மாட்டா என்ற காரணத்தினாலும், இந்தியர்களால் இந்த அளவிற்கு முதல் அளிக்க இயலாது என்ற காரணத்தினாலும் இதை நடை முறையில் செயல்படுத்துதல் மிகச் சிரமமானதென்று கருத்துத் தெரிவித்தனர்.

எனவே, மேலே குறிப்பிட்டுள்ள பரிந்துரைகளில் ஒன்றுகூட இதுவரை முழுமையாகச் செயல்படுத்தப்படவில்லை. ஆனால், அயல்நாட்டு வங்கிகள் மாறுபட்டுவரும் அரசியல், பொருளியல் சூழ்நிலைகளைக் கருத்தில்கொண்டு, இந்திய வங்கிகளுக்கு ஒத்துழைப்பை நல்கி வருகின்றன. எனவே, இந்திய வங்கிகளும் முன்னேறி வருகின்றன. நாணயமாற்று நடவடிக்கைகளில், ஈடுபட்டுவரும் இந்திய வங்கிகளும், அயல்நாட்டு வங்கிகளும் இணைந்து 'இந்திய நாணயமாற்று விற்பனையாளர்கள் சங்கம்' என்னும் ஓர் அமைப்பை நிறுவியுள்ளன. இந்த அமைப்பும் ரிசர்வ் வங்கியால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. நாணயமாற்று வங்கிகள் நாட்டின் பல்வேறு இடங்களிலும் கிளைகள் திறக்க விரும்புகின்றன. ஆனால், இந்திய அரசு, நாணயமாற்று வங்கிகளின் அலுவலர்கள், நாட்டு முன்னேற்றத்திற்குக் குந்தகம் செய்யும் வகையில் செயல்படுவதைத் தடைசெய்வதில் முனைந்துள்ளது. இதனையொட்டியே நாணயமாற்று வங்கிகளின் நடவடிக்கைகளைக் கண்காணிக்கவும், அவற்றைக் கட்டுப்படுத்தவும் ரிசர்வ் வங்கிக்கு அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

நாட்டு நலனுக்குக் குந்தகம் விளைவிக்கும் வகையில் செயலாற்றும் எந்த வங்கிக்கும் உரிமம் வழங்குவது மறுக்கப்படலாம். அல்லது வழங்கப்பட்ட உரிமம் ரிசர்வ் வங்கியால் ரத்து செய்யப்படலாம். இதனடிப்படையிலேயே சைனு வங்கியின் சில அலுவலர்கள் நாட்டுக்குக் குந்தகம் விளைவிக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்ததால், பம்பாய், கல்கத்தா ஆகிய நகரங்களிலிருந்த அவ் வங்கியின் கிளைகள் 1968ஆம் ஆண்டு மூடப்பட்டன.

ஒருசிலர். அயல்நாட்டு வங்கிகளை நாட்டுடைமையாக்கலாமென்ற கருத்தினைத் தெரிவித்துள்ளனர். ஆனால், வெளிநாடுகளில் போதிய அளவில் இந்திய வங்கிகளுக்குக் கிளைகள் இல்லாத இந்த நிலையில், இத் திட்டம், இந்தியாவின் அயல்நாட்டு வாணிபத்திற்குப் பெரும் இடையூறாக அமையும். எனவே, ரிசர்வ் வங்கிக்குப் போதிய அதிகாரங்கள் கொடுக்கப்பட்டுள்ளதாலும், வங்கியிய அமைப்பின் பெரும்பகுதி அரசின் ஆதிக்கத்தின்கீழ்க் கொண்டு வரப்பட்டுவிட்டதனாலும் அயல்நாட்டு வங்கிகள் தங்கள் வலுக் குறைந்த நிலையினையுணர்ந்து செயற்பட்டு வருகின்றன. எனவே, இவ் வங்கிகளை நாட்டுடைமையாக்குவதைவிட அவை நாட்டுடைமை அச்சத்துடன் தனியாகச் செயல்படுவதே சாலச் சிறந்ததாகும்.

வினாக்கள்

(1) நாணயமாற்று வங்கிகள் என்றால் என்ன? அவற்றின் முக்கியத்துவம் யாது?

(2) வெளிநாட்டு வாணிபத்திற்கும், உள்நாட்டு வாணிபத்திற்குமுள்ள வேறுபாடுகள் யாவை?

(3) அயல்நாட்டு நாணயமாற்று நடவடிக்கைகளில் இந்திய வணிக வங்கிகள் பங்கேற்காததன் காரணங்கள் யாவை?

(4) அயல்நாட்டு வாணிபத்திற்குக் கடனளிக்கும் முறைகள் யாவை?

(5) 'ஆவணஞ்சேர் மாற்றுச் சீட்டு முறை' யினை விளக்குக.

(6) நாணய உறுதியுடன் கூடிய ஆவண முறைக்கும், நாணய உறுதியுடன் கூடிய ஆவணஞ்சேர் மாற்றுச் சீட்டு முறைக்குமுள்ள வேறுபாடுகள் யாவை?

(7) அயல்நாட்டு வங்கிகளிடம் காணப்படும் குறைபாடுகள் யாவை?

(8) நாணயமாற்று வங்கிகளைக் கட்டுப்படுத்தப் பரிந்துரைக்கப்பட்ட பரிந்துரைகள் யாவை ?

(9) நாணயமாற்று வங்கிகள் உரிமம் பெறப் பூர்த்திசெய்ய வேண்டிய நிபந்தனைகள் யாவை ?

(10) இந்திய வங்கியியல் ஒழுங்காற்றுச் சட்டம் எவ்வாறு நாணயமாற்று வங்கிகளைக் கட்டுப்படுத்துகின்றது ?

(11) இந்திய வணிக வங்கிகள் அயல்நாட்டு நாணயமாற்றுத் தொழிலில் வளர்ச்சிபெறக் கொடுக்கப்பட்டுள்ள பரிந்துரைகள் யாவை ?

(12) கூட்டு வங்கித் திட்டத்தினை விளக்குக.

13. நாட்டு வங்கியரும் வட்டித் தொழிலரும்

இந்தியா ஒரு வேளாண்மை நாடு. நாட்டு மக்களில் 75 விழுக்காட்டினர் நேரடியாகவும், மறைமுகமாகவும், தங்களுடைய வருவாய்க்கு வேளாண்மையினையே நம்பியுள்ளனர். எனவே, வேளாண்மைக்கு உரிய முக்கியத்துவம் கொடுத்தல் இன்றியமையாததாகும். இந்திய வேளாண்மையில் இன்றும் தலையாய பிரச்சினையாக உள்ளது கிராமிய நிதி நிலையேயாகும். இந்தியா முக்கியமாக ஒரு வேளாண்மை நாடாகத் திகழ்ந்தாலும் இந்திய விவசாயிகள், வறுமைமிக்கவர்கள். இந்திய விவசாயிகள் கடனில் பிறந்து, கடனுடன் வாழ்ந்து, கடனுடனேயே மடிகின்றனர் என்னும் பொதுக்கூற்று அவர்களுடைய நிலையினை விளக்கும். பிரிட்டிஷ் இந்தியாவில் இந்திய விவசாயி ஒருவனுடைய சராசரி ஆண்டு வருவாய் ரூ. 42 ஆக இருந்தது என மைய வங்கியியக்குழு கணக்கிட்டுள்ளது. 1940ஆம் ஆண்டு விவசாயிகளின் மொத்தக் கடன் ரூ. 1200 கோடி என்றும் மதிப்பிடப்பட்டது. இந்திய விவசாயிகள் தங்கள் மூதாதையர்களிடமிருந்து சொத்துகளுடன் கடனையும் பெறுவதால் அவர்களுடைய கடன்பளு கூடிவிடுகின்றது. மேலும் மரபுவழியில் இவர்கள் கொண்டாடும் பண்டிகைகள், திருமணங்கள் ஆகியவையும், விவசாயிகளுடைய கடன் பளுவைக் கூட்டிவிடுகின்றன.

இந்திய விவசாயிகளுடைய கடன் தொல்லைக்குப் பல்வேறு காரணங்களைக் குறிப்பிட்டாலும், கீழ்க்காணும் காரணங்கள் குறிப்பிடத்தக்கவை என்று கூறலாம்.

(1) இந்திய விவசாயிகள் வறுமை மிக்கவர்கள். அவர்கள் வேளாண்மைக்கு முழுமையாகப் பிறரிடமிருந்து கடன் பெறுவதையே நம்பியுள்ளனர். அவ்வாறு அவர்கள் கடன் பெற்று வேளாண்மை செய்வதால் அவர்களுடைய வருவாய் அவர்கள்

பெற்ற கடன் தொகையினைத் திருப்பிச் செலுத்தவே போதுமான தாகி விடுகிறது.

(2) முன்னோர் பெற்ற கடனைத் திருப்பிச் செலுத்தவேண்டிய பொறுப்பினையும் இந்திய விவசாயிகள் பெறுகின்றனர்.

(3) வேளாண்மையைப் பொறுத்தவரை, கணக்கின்றி உள்ளீடு (input) செய்தல் இலாபகரமாக அமைவதில்லை. தொழில் நிலையங்களைப் போலன்றி வேளாண்மையில் குறைந்து செல்பயன் பாட்டுவிதி (Law of Diminishing Returns) வெகு சீக்கிரத்திலேயே செயல்படத் தொடங்கி விடுகிறது.

(4) விவசாயிகளுடைய வருவாய் பெருகும் வகையில் கிராமங்களில் குடிசைத் தொழில்கள் வளர்ச்சிபெற வேண்டும். ஆனால், நாளுக்கு நாள் குடிசைத்தொழில் குறைந்து வருவது வேதனை தருவதொன்றாகும்.

(5) இந்துச் சட்டம் செயல்படுத்தப்படுவதனால், நிலங்கள் பிரிக்கப்பட்டுத் துண்டுதுண்டாக்கப்படுகின்றன. ஒரே நபர் தம்முடைய நிலத்தைச் சிறுசிறு துண்டுகளாகப் பல இடங்களில் பெறவேண்டிய நிலை எழுகின்றது. எனவே, இந்திய விவசாயிகள் தற்காலச் சாகுபடி முறையினைக் கடைப்பிடிக்க முடிவதில்லை.

(6) இந்திய விவசாயிகள் இன்னும் பழமையில் ஊன்றியவர் களாகத் திகழ்கின்றனர். இன்னும், பழைய முறைகளையே சாகுபடிக்குப் பயன்படுத்துவதால், நிலத்திலிருந்து போதிய அளவில் அவர்களுக்கு வருவாய் வருவதில்லை.

(7) இந்திய விவசாயிகளுடைய வருவாய், பருவ மழையின் வெற்றியினைப் பொறுத்துள்ளது. 1974ஆம் ஆண்டு தமிழ் நாட்டில் பருவமழை பொய்த்ததுபோன்று நிகழ்ந்தால் விவசாயி களுடைய வருவாய் பெருமளவில் பாதிக்கப்படக்கூடும்.

(8) இந்தியாவில் விவசாயிகள் தாங்கள் உற்பத்திசெய்யும் தானியங்களைச் சந்தையிடக் கடைப்பிடிக்கும் முறை தவருன தாகும். அவர்கள் கூட்டுறவு உற்பத்தியாளர் சங்கங்கள் மூலம் விற்பனை செய்தால், தானியங்கள் விலையேற்றத்தின் முழுப் பயனையும் அவர்களே அடைய முடியும். அவ்வாறின்றி அவர்கள், தானியங்களை இடைநிலையர்கள் மூலம் விற்பனை செய்வதால் விலையேற்றத்தின் பயனை விவசாயிகள் அடையாது இடைநிலை யர்களே அடைகின்றனர்.

(9) இந்திய விவசாயிகள், விழாக்களுக்கும், பண்டிகை களுக்கும் தங்களுடைய நிலைக்குமீறிய அளவில் செலவிடு கின்றனர்.

(10) கிராமங்களுக்கு உரியமுறையில் கடன் வசதியளிக்கச் சிறந்த திட்டங்களைச் செயல்படுத்த முடியவில்லை.

(11) மிகச்சிறிய சச்சரவுகளுக்கும், இந்திய விவசாயிகள் நீதிமன்றம்வரை சென்று வழக்காடி, தங்கள் சொத்துகளை இழக்கின்றனர்.

(12) இந்தியாவைப் பொறுத்தவரை கால்நடை வளமும் சரியாக அமையவில்லை.

விவசாயிகளின் கடன் தேவைகள்: இதர தொழில் நிறுவனங்களைப் போன்றே விவசாயிகளும், குறுகியகாலக் கடன், இடைக்காலக் கடன், நீண்டகாலக் கடன் என்னும் மூன்று வகையான கடனைப்பெற விழைகின்றனர். விதைகள் மற்றும் உரம் வாங்க, வேளாண்மைச் செலவுசெய்ய—போன்றவற்றிற்குக் குறுகிய காலக் கடனும், நிலத்தைச் செப்பனிட, வேளாண்மைக் கருவிகள் வாங்க, ஆகியவற்றிற்கு இடைக்காலக் கடனும், நிலத்தினில் நிரந்தரப் பராமரிப்புச் செய்ய, நிலத்தைச் சுற்றியுள்ள சிறு நிலங்களை வாங்கிப் பேரளவு வேளாண்மைக்கு வாய்ப்பேற்படுத்திக் கொள்ள, கிணறுவெட்ட போன்றவற்றிற்கு நீண்டகாலக் கடனும் தேவைப்படுகின்றன.

கடனளிக்கும் முகமையகங்கள்: விவசாயிகளுக்குத் தேவையான நிதி வசதிகளை வணிக வங்கியர், நாட்டு வங்கியர், வட்டித் தொழிலர் போன்றவர்களாலும், கூட்டுறவுச் சங்கங்கள், ரிசர்வ் வங்கி மற்றும் அரசு ஆகியவற்றாலும் அளிக்கப்படுகின்றன. இருப்பினும் வணிக வங்கிகள், விவசாயிகளுக்குக் கடனளிப்பது மிகவும் குறைவாகும். கீழ்க்காணும் காரணங்களினால் வணிக வங்கிகள் வேளாண்மைக்கு மிகுந்த அளவில் கடன்வசதியளிப்பதில்லை.

(1) பிறருடைய பணத்தை மூலதனமாகக் கொண்டு தொழில் புரியும் வணிக வங்கிகள், நிகரியாக வருவாய் ஈட்டுதல் வேண்டும். பருவமழையினை நம்பியுள்ள விவசாயிகளுக்குக் கடன் கொடுத்தல் சிக்கல் நிறைந்தது மட்டுமன்று, அவை நிகரியான வருவாயை நிரந்தரமாகப் பெறுதல் இயலுமா என்பது ஐயமே.

(2) இந்திய விவசாயிகள் சிறுசிறு துண்டுகளாக நிலத்தினைக் கொண்டுள்ளதால், முன்னேற்ற வேளாண்மை முறையினைக் கடைப்பிடித்துத் தங்கள் வருவாயினைப் பெருக்கிக்கொள்ள வாய்ப்பின்றிப் போகலாம்.

(3) தானியங்களை விற்பனைசெய்யக் கடைப்பிடிக்கப்படும் சந்தையிடுகை முறை தவருனது.

(4) பொதுவாக வணிக வங்கிகள், பிறருடைய நிதியினைக் கொண்டு தொழில் புரிவதால் போதிய பிணையமின்றிக் கடன் கொடுப்பதில்லை. ஆனால், இந்திய விவசாயிகளிடம் தகுந்த பிணையங்கள் இல்லை. எனவே, அவர்கள் வங்கிகளிடமிருந்து போதிய அளவில் கடன்பெற முடிவதில்லை.

(5) வணிக வங்கிகள், கிராமங்களுக்கு வெகு தொலைவி லிருந்து தொழில்புரிந்து வருகின்றன. எனவே, அவை கடன் பெற விழையும் விவசாயிகளைப்பற்றிய விவரங்களை அறிந்து கொள்ள முடிவதில்லை. எனவே, அவை அவர்களுக்குக் கடன் கொடுக்கத் தயங்குகின்றன.

(6) கொடுக்கப்படும் கடனை உரிய காரணங்களுக்குப் பயன் படுத்துகின்றனரா இல்லையா என்பதனை அறிந்துகொள்ளுதலும் மிகச் சிக்கல் நிறைந்ததாகும்.

(7) கடன் கொடுக்கும்போது செய்யப்பட வேண்டிய சடங்குகள் மிக அதிகமாக உள்ளன. எனவே, இந்திய விவசாயிகள் இத்தகைய கடன் முறையினை விரும்புவதில்லை.

(8) கடன்பெற விரும்பும் விவசாயிகளின் எண்ணிக்கை மிகவும் அதிகம். எனவே, வணிக வங்கிகள், அவர்கள் எல்லோ ருக்கும் கடன் வசதியளித்தல் என்பது இயலாததாகும்.

(9) விவசாயிகளுக்குக் கடன் வசதியளிக்கக் கூட்டுறவுச் சங்கங்கள் இருக்கும் காரணத்தினால் வணிக வங்கிகள் வேளாண்மைக்குக் கடனளிக்க அவ்வளவு விரும்பவுவதில்லை.

(10) வணிக வங்கிகள், தங்களுடைய முதலில் பெரும் பகுதியினைக் கேட்புவைப்பு மூலம் பெறுகின்றன. எனவே, அத் தொகை வைப்பாளர்கள் திருப்பிக் கேட்கும்போது செலுத்தப்பட வேண்டும். ஆனால், வேளாண்மைக்கு அத் தொகை கடனாகக் கொடுக்கப்படும் நிலையில் அது தேவைப்படும்போது விவசாயிக ளிடமிருந்து அதனைத் திரும்பப்பெறுதல் என்பது இயலாதது. எனவே, வணிக வங்கிகளின் தொழில் இதன் காரணமாகப் பாதிக்கப்படலாம். ஆகையால், வணிக வங்கிகள், பொதுவாக வேளாண்மைக்குக் கடனளிப்பதை விரும்புவதில்லை.

வட்டித் தொழிலர்: வட்டித் தொழிலரும், நாட்டு வங்கியரும் ஒழுங்கமைதியற்ற பணச்சந்தைப் பிரிவில் இடம் பெறுகின்றனர். இவர்கள் சிறந்த அமைப்பினையும், நிரந்தரக் கோட்பாடுகளையும்

கொண்டில்லாததே அதற்குக் காரணமாகும். இந்தியாவில் தொழில் புரிந்துவரும் நாட்டு வங்கியரும், வட்டித் தொழிலரும் ஒரே வகையான தொழில் முறையினையோ, பழக்க வழக்கத் தினையோ கடைப்பிடிப்பதில்லை. தாங்கள் செயலாற்றிவரும் பகுதி களுக்கேற்பப் பல்வேறான பழக்க வழக்கங்களைக் கடைப்பிடிக் கின்றனர். எனவேதான், பெரும்பாலோர், வட்டித் தொழிலரையும், நாட்டு வங்கியரையும் பிரித்துக் கூறுவதில்லை. இரு சாராரையும் ஒன்றாக இணைத்தே விளக்குகின்றனர். இது சரியான முறையன்று. செயலால், மூலதனத்தால், தொழில் நுட்பத்தால், வட்டித் தொழிலர் நாட்டு வங்கியரிடமிருந்து தனித்தியங்குகின்றனர்.

விவசாயிகளுக்குக் கடன்வசதி யளிக்கும் தனியார் முகமை களில் முதன்மை இடம் பெறுவது வட்டித் தொழிலர்களுடைய நிறுவனங்களேயாகும். இந்தியாவைப் பொறுத்தவரை, எண்ணிலும், தொழில் வலுவாலும், வட்டித் தொழிலர் மிக முக்கிய இடத்தைப் பெறுகின்றனர். பிணையத்தினைப் பெற்றோ, பிணைய மின்றியோ, வழக்கமான வழிமுறைகளுக்கு முக்கியத்துவ மளிக்காது, தம்முடைய சொந்த மூலதனத்தினின்று கடன் வசதி யளிக்கும் ஒரு நபரே வட்டித் தொழிலராவர். மேற் குறிப்பிட்டுள்ள விளக்கத்தினின்று வட்டித் தொழிலருடைய முக்கியத் தன்மைகளை விளக்கலாம்,

வட்டித் தொழிலரின் முக்கியத் தன்மைகள் :

(1) பொதுவாகத் தங்கள் சொந்த மூலதனத்தைக் கொண்டே தொழில் புரிகின்றனர். பொது மக்களிடமிருந்து வைப்புத்தொகை பெறுவதில்லை.

(2) உண்டியலில் ஈடுபடுவதில்லை. உண்டியலைத் தள்ளுபடி செய்து பெறுவதில்லை.

(3) இவர்கள் கடன் வழங்கும்போது, கடனாளி என்ன காரணத்திற்குக் கடன் பெறுகிறார் என்பது குறித்து வினவுவதில்லை.

(4) இவர்கள், உற்பத்திச் செலவு மட்டுமின்றி, வீட்டுச் செலவு போன்ற காரணங்களுக்கும் கடனுதவி செய்கின்றனர்.

(5) இழப்பு வாய்ப்பு அதிகம் பெற்றுள்ளதனால் பொதுவாக இவர்கள் திரட்டும் வட்டி வீதம் மிகக் கூடுதலாக உள்ளது.

(6) பொதுவாக, பிணையமெதுவுமின்றிக் கடனாளியின் வாக்குறுதியினை நம்பியே கடனளிக்கின்றனர். அவ்வாறு அளித் தாலும் நீண்டகாலக் கடனுக்கு வீடு, நகை, நிலம் போன்ற சொத்துகளை அடைமானமாகப் பெறுகின்றனர்.

(7) கடன் பெறுபவருடன் நெருங்கிய தொடர்பு கொண்டுள்ளனர்.

(8) இவர்கள் தனியாக அலுவலகம் என்றே, அலுவலக நேரம் என்றே வரையறைகளைக் கொள்வதில்லை.

(9) பெரும்பாலும், வட்டித் தொழிலர்கள், கிராமத்திலேயே செயலாற்றுகின்றனர்.

(10) இவர்கள் தற்கால வங்கியக் கோட்பாடுகளைக் கடைப்பிடிப்பதில்லை.

(11) பெருமளவில் இவர்களால் கடன் வழங்க முடியாது. பெரும்பாலும் குறைந்த தொகையினையே கடனாக வழங்குகின்றனர்.

(12) இவர்கள் உரிய முறையில் கணக்குகள் வைத்துக் கொள்வதில்லை; கடன் கொடுக்கும்போது தங்கள் கணக்கு ஏடுகளில் பதிந்து வைத்துக் கொள்கின்றனர்.

(13) கடன் ரொக்கமாகவும், பிற இனங்களாகவும் தேவைக் கேற்றவாறு வழங்கப்படும்.

(14) கடன் பெறுபவர் அளிக்கும் பிணையங்கள் முழுமையாகப் பாதுகாப்பாக, உரிய முறையில் வட்டித் தொழிலரால் திருப்பி அளிக்கப்படும் என்று கூறுதல் இயலாது.

(15) கடன் பெறுபவர் அளித்த பிணையங்களை மறு ஈடு வைத்து வட்டித் தொழிலரே கடன் வாங்குவதுமுண்டு.

(16) கடன் என்ன காரணத்திற்காகப் பெறப்படுகிறது என்று விழைவதில்லை.

(17) குறிப்பிட்ட கால இடைவெளிக்கு ஒருமுறை வட்டித் தொகையை அசல் தொகையுடன் சேர்த்துக் கூட்டுவட்டி வசூலிப்பது இவர்கள் கடைப்பிடிக்கும் வழக்கமாகும்.

(18) இவர்கள் தங்களுடைய கணக்குகளைச் செய்திதாள்களில் பிரசுரிப்பதில்லை. அவர்கள் நடவடிக்கைகள் மிக இரகசியம் வாய்ந்தவை.

(19) ஒருசில வட்டித் தொழிலர் வங்கியில் கணக்குக்கூட வைத்திருப்பதில்லை. பெரும்பாலும் எல்லா வட்டித்தொழிலரும் வங்கிகள் மூலம் தங்கள் நடவடிக்கைகளை மேற்கொள்வதில்லை.

(20) மிகக்குறைந்த பணியாளர்களைக்கொண்டே தொழில் புரிகின்றனர்.

(21) இவர்கள் வங்கியத் தொழிலுடன், இதர தொழில் களையும் இணைத்தே தொழில் புரிந்து வருகின்றனர்.

(22) வட்டி வீதத்தைப் பொறுத்தவரை இவர்கள் நீண்ட காலக் கடனிற்கும், குறுகிய காலக் கடனிற்கும் வேறுபாடு காட்டாது ஒரே வட்டி வீதத்தில வட்டி திரட்டுகின்றனர். இவர்கள் திரட்டும் வட்டி வீதம் மிக அதிகமானதாகும்.

வட்டித் தொழிலரின் வகைகள் : வட்டித் தொழிலரை மூன்று வகையினராகப் பிரிப்பதுண்டு. முழு தொழில் வட்டித் தொழிலர், இதர வகை வட்டித் தொழிலர் ஆகியவரே இவ்விரு பிரிவினராவர் மகஜன், சௌகார், பனியா என்று பல பெயர்களுடன் செயலாற்றும் வட்டித் தொழிலர் முழு தொழில் வட்டித் தொழிலராவர். இவர்கள் வாய்ச் சொல் ஒப்புறுதியின் வழியுங்கூடக் கடன் வழங்குகின்றனர். இவர்கள் குறுகியகாலக் கடன்களைப் பெரும்பாலும் வழங்குகின்றனர். விவசாயிகளுக்கு வழங்கும் கடன் அறுவடைக் காலத்தில் திருப்பிச் செலுத்தப்படும். விவசாயிகள் தானியங்களை இவர்கள் மூலம் விற்பனை செய்ய வேண்டுமென்ற நிபந்தனைகளை விதிப்பதுமுண்டு. இவர்கள் கொடுக்கும் கடன் அதிகத் தொகைக்கானதாகவும், நீண்ட காலக் கடனுகவும் இருப்பின், பொதுவாக நிலம், அல்லது வீடு போன்ற சொத்துகளை அடைமானமாகப் பெற்றுக்கொண்டே கடன் வழங்குவர்.

வட்டிக்குக் கடன் கொடுப்பதை மட்டும் தங்கள் முழு நேரத் தொழிலெனக் கொள்ளாத நிலச்சுவான்தார், வியாபாரிகள் போன்றோர் இரண்டாவது வகையைச் சேர்ந்தவர்கள். இத்தகைய வட்டித் தொழிலர்கள் முழு தொழில் வட்டித் தொழிலர்களைவிடப் பேராசை மிக்கவர்கள். இவர்கள், வயல்களிலுள்ள பயிர்களைப் பிணையமாகக் கொண்டு கடன் வழங்குகின்றனர். இவர்கள், விதை களாகவும், உரங்களாகவும் கூடக் கடன் வழங்குவதுண்டு. அறுவடைக் காலத்தில் விவசாயிகளின் வருவாயில் பெரும் பகுதியினை இவர்கள் பிடுங்கிக் கொள்கின்றனர்.

நடமாடும் வட்டித் தொழிலர் மூன்றுவது வகை வட்டித் தொழிலராவர். பட்டாணியர்கள் (Pathans) காபுலிவாலாக்கள் (Kabulis) போன்றோர் இவ்வகையினைச் சேர்ந்தவர்கள். இவர்கள் எளிய மக்களுக்கு, அதாவது வேறு வழிகள் மூலம் கடன் பெற வாய்ப்பற்றவர்களுக்கு மிகக் குறைவான தொகையினைக் கடனாக வழங்குகின்றனர். இவர்கள் கொடுக்கும் கடன் தவணையும் மிகக் குறைவானதேயாகும். கடன் பெறுபவர், எவ்விதப் பிணையமுமளிப்பதில்லை. வாய்மொழி வாக்குறுதி வழியே கடன்

பெறுகிறார். உரிய கெடுகாலத்தில் கடனாளி உள்ள இடத்திற்கு வந்தே கடன் தொகையைத் திரட்டிக் கொள்கிறார். கடன் பெற்றவர் கடன் தொகையைத் திருப்பிச் செலுத்தாத நிலையில் இவ்வகை வட்டித் தொழிலர் நீதி மன்றத்திற்குப் போவதில்லை. கடன் பெற்றவரை அச்சுறுத்தியே கடன் தொகையைத் திருப்பிப் பெற விழைகிறார்.

வட்டித் தொழிலர்கள், கடன் தொகையினைத் திருப்பிச் செலுத்தத் தவணை வழங்குவதில் நேர்மையாகவே உள்ளனர். குறுகியகாலக் கடன்களை அறுவடைக் காலத்தில் திருப்பிச் செலுத்தக் கோருகின்றனர். போதிய வருவாய் இல்லாத நிலையில், தவணையை நீடித்துத் தரவும் தயங்குவதில்லை. கடன்தொகையைத் திருப்பிச் செலுத்தாத நிலையில், கடனாளிகள்மீது வழக்குத் தொடுத்துக் கடன் தொகையைத் திருப்பிப்பெற விழைவதில்லை. அவர்களை அச்சுறுத்தியே அத் தொகையினைத் திரும்பப்பெற முயற்சி செய்கின்றனர். இவர்கள் வட்டித் தொகையினைத் தொடர்ந்து பெறும்வரை, அசல் தொகையினைத் திரும்பிச் செலுத்த வற்புறுத்துவதில்லை.

வட்டித் தொழிலரின் பணிகள் : வட்டித் தொழிலர்கள் கீழ்க் காணும் பணிகளைப் புரிகின்றனர் :

(1) உற்பத்திக்கும், இதர காரணங்களுக்கும் கடன் வசதி அளிக்கின்றனர்.

(2) உள்நாட்டு வாணிபத்திற்கு நிதி வசதி அளிக்கின்றனர்.

(3) தானியங்களைச் சந்தையிடுகை செய்யப் பெருமளவில் உதவி புரிகின்றனர்.

வட்டித் தொழிலர்கள் கடைப்பிடிக்கும் தவருன முறைகள் : வட்டித் தொழிலர்கள் கீழ்க்காணும் வழக்குக் கொவ்வாத முறைகளைக் கையாளுகின்றனர். அவற்றில் முக்கியமானவையாவன :

(1) கடன்தொகை வழங்கும்போதே ஒரு குறிப்பிட்ட காலத்திற்கான வட்டித் தொகையினையும் கழித்துக் கொள்கின்றனர்.

(2) கடன் பெறுபவர்களிடமிருந்து பல்வேறு பண்டங்களை விலை ஏதுவும் கொடுக்காது இலவசமாகப் பெறுகின்றனர்.

(3) வெற்றுக் காகிதத்தில் கடன் பெறுபவரிடம் கையொப்பம் வாங்கிக்கொள்கின்றனர். தேவைப்படும்போது அக் காகிதத்தில் எந்த அளவிற்கு வேண்டுமாயினும் எந்தத் தேதியிட்டும் கடன் கொடுத்ததாக எழுதிக் கொள்ளலாம்.

(4) கடன் பெறுபவருக்குப் பாதகமாகக் கணக்குகளைத் திருத்துகின்றனர்.

(5) கூடுதலான தொகைக்கான வாக்குறுதிச் சீட்டினைக் கடன் பெறுபவரிடமிருந்து எழுதி வாங்கிக் கொள்கின்றனர்.

(6) வட்டித் தொழிலர் நிறுவனங்களில் பணிபுரியும் பணியாள்களுக்கான ஊதியத்தினையும், கடன் பெறுபவர்களிடமிருந்து திரட்டிக்கொள்கின்றனர்.

(7) கடன் தொகையைக் கடனுளர் குறிப்பிட்டுள்ள மாவட்டத்தில் திருப்பிச் செலுத்துமாறு கடன் பெறுபவரிடமிருந்து ஓர் ஒப்பந்தச் சீட்டினைப் பெறுகின்றனர். இவ்வாறு பெறுவதால் கடன் பெறுபவர் கடன் தொகையினைத் திருப்பிச் செலுத்தாத நிலையில் அவர்மீது அக் குறிப்பிட்ட மாவட்டத்தில் வழக்குத் தொடுத்து, கடன் பெற்றவர் அந்த இடத்துக்கு வரமுடியாத நிலையில், வழக்கு தமக்குச் சாதகமாக முடிய வாய்ப்பேற்படுத்திக் கொள்கின்றனர்.

மேலே குறிப்பிட்டுள்ள வட்டித் தொழிலர் கடைப்பிடிக்கும் தவருன முறைகள் இந்திய வட்டித் தொழிலருக்கு மட்டும் உரித்தானதல்ல. எல்லா நாட்டிலுமுள்ள வட்டித் தொழிலர்களுக்கும் பொதுவானதேயாகும். இருப்பினும் இன்று, வட்டித் தொழிலர்கள் தங்கள் தவற்றினை உணர்ந்து முடிந்தவரை நேர்மையுடன் செயலாற்ற விழைகின்றனர்.

வட்டித் தொழிலர்கள் திரட்டும் வட்டிவீதம் : பல்வேறு வாகாண வங்கியக் குழுக்களும் வட்டித் தொழிலர் திரட்டும் வட்டி வீதங்களைப்பற்றி விரிவாக ஆராய்ந்து தங்கள் அறிக்கைகளில் இது பற்றித் தனியாகவும் குறிப்பிட்டுள்ளன. வட்டித் தொழிலர்கள் திரட்டும் வட்டி வீதம் ஒரே அளவினதாக அமையவில்லை. பகுதிக்குப் பகுதி, வெவ்வேறு வீதத்தில் அவர்கள் வட்டி திரட்டுவது குறிப்பிடத் தக்கதாகும். வட்டிவீதம், கடன் தொகையின் அளவு, அளிக்கப்படும் பிணை ஆகியவற்றைப் பொறுத்தே நிர்ணயிக்கப்படுகிறது. நகர்ப்புறத்திலுள்ள வட்டித் தொழிலர் திரட்டும் வட்டி வீதம், கிராமப் பகுதிகளிலுள்ள வட்டித் தொழிலர் திரட்டும் வட்டி வீதத்தைவிடக் குறைவாகவிருப்பது குறிப்பிடத் தக்கதாகும். தங்க நகை, வெள்ளிப் பாத்திரம் போன்ற நல்ல பிணையங்கள் கொண்ட கடன்களுக்கு 12 விழுக்காடு முதல் 37·5 விழுக்காடு வரை வட்டி திரட்டப்படுகின்றது. பிணையமேதுமின்றித் தரப்படும் கடனுக்கு மிக அதிக வட்டி திரட்டப்படுகிறது. மிகக் குறைந்த காலத்திற்கு வழங்கப்படும் கடன்களுக்கும் மிகக் குறைவான

தொகை கொண்ட கடன்களுக்கும் 4000 விழுக்காடு வரைகூட வட்டி திரட்டப்படுகிறது. காலையில் ரூ. 5 கடனுகக் கொடுத்து மாலையில் ரூ. 5-50 திருப்பிப் பெறுவது இதற்கு ஓர் எடுத்துக் காட்டாகும். எல்லா மாநிலங்களிலுமுள்ள வட்டித் தொழிலர்களை விடப் பஞ்சாப் மாநிலத்திலுள்ள வட்டித் தொழிலர்களே மிகக் குறைவான வீதத்தில் வட்டி திரட்டுகின்றனர்.

கூடுதலான வீதத்தில் வட்டி திரட்டக் காரணம்: வட்டித் தொழிலர்கள் கீழ்க்காணும் காரணங்களினால் கடும் வட்டி திரட்டுகின்றனர்:

(1) அவர்கள் தொழில் முற்றுரிமை பெற்றுள்ளது முதற் காரணமாகும். பிணையமெதுவுமின்றி, ஏழை மக்களுக்கு இந்த வட்டித் தொழிலர்களைத் தவிர வேறு எவரும் கடன் வழங்க முன்வர மாட்டார்கள். இதுவே அவர்களை அதிக வீதத்தில் வட்டி திரட்டத் தூண்டுகிறது.

(2) அளவுக்கு அதிகமாகத் தங்களிடம் மக்கள் கடன் பெறுவதைத் தவிர்க்கும் வகையில் இவர்கள் கூடுதலான வீதத்தில் வட்டி திரட்டுகின்றனர் என்றும் கூறப்படுகின்றது.

(3) மக்கள் இவர்களிடமிருந்து எவ்வித இடர்ப்பாடும் சிக்கலுமின்றி, எளிதில் கடன்பெற முடியுமென்று இவர்களையே நாடிச்செல்வதால் வட்டித் தொழிலர் வட்டி வீதத்தைக் கூட்டி விடுகின்றனர்.

(4) வட்டித் தொழிலர் தங்கள் சொந்த மூலதனத்தைக் கொண்டே தொழில் புரிகின்றனர். எனவே, குறைந்த தொகையுடன் தொழில் புரியும் இவர்கள் சற்றுக்கூடுதலான வீதத்தில் வட்டி திரட்டுவது தவறில்லை என்று கருதுகின்றனர்.

(5) அவர்கள் அளிக்கும் கடன்கள் பெரும்பாலும் பிணைய மற்ற கடன்களேயாகும். பிணையமற்ற கடன்கள் இழப்பு வாய்ப்பு அதிகம் கொண்டவை. எனவே, அதனை ஈடு செய்யும் பொருட்டுச் சற்றுக் கூடுதலான வீதத்திலேயே வட்டி திரட்ட வேண்டியுள்ளது.

(6) அறியாமை காரணமாக, கிராம மக்கள், குறைந்த வட்டிக்குக் கடன் கொடுக்கக் கூட்டுறவுச் சங்கங்கள் போன்ற வேறுபல அமைப்புகள் இருப்பினும் வட்டித் தொழிலரையே அணுகி, அவரிடமிருந்து கடன் பெறுகின்றனர். கூடுதல் வட்டி வாங்கப்படுவதற்குப் பொதுமக்களிடமிருந்து எதிர்ப்பும் இருப்பதில்லை.

(7) அதிகக் கடனுளிகளுக்குச் சிறு தொகைகளைக் கடனாக அளித்து, அதனை அவர்களிடமிருந்து திரட்டுவது நடைமுறைச் செலவுகளை அதிகமாக்கி விடுகிறது. இச் செலவுகளை ஈடுகட்டக் கூடுதலான வட்டி வசூலிப்பது அவசியமாகிறது.

(8) வட்டித் தொழிலர் பெரும்பாலோர் தங்களுடைய சொந்த மூலதனத்தைக்கொண்டே தொழில் செய்து வருகின்றனர்.

இந்நிலையில், கடன் தேவையில் ஒருசிறு பகுதியினையே இவர்களால் நிறைவு செய்ய முடிகிறது. இவர்கள் பணச்சந்தையில் தொடர்பெதுவும் வைத்திருப்பதில்லையாதலின், அவர்களுக்குப் பணம் தேவைப்படும்போது அதனைத் திரும்பப்பெற வாய்ப்பில்லை. மேலும் இவர்கள் கொடுக்கும் குறுகியகாலக் கடன்கூட (கடனுளிகள் உரிய முறையில் திருப்பிச் செலுத்தாது அவர்களிடமே முடங்கிவிட்டால்) நீண்ட காலக் கடனாகக் கூடும். எனவே, வட்டித் தொழிலர்கள் சற்றுக் கூடுதலான வீதத்திலேயே வட்டி திரட்டுகின்றனர்.

வட்டித் தொழிலர்களைக் கட்டுப்படுத்தும் சட்டங்கள்: வட்டித் தொழிலர்கள், கிராமக் கடன் வசதிகளுக்கு இன்றியமையாதவர்களாக இருப்பினும்கூட அவர்கள் திரட்டும் கடும் வட்டியினையும், கடைப்பிடிக்கும் தவறான முறைகளையும் பொறுத்துக்கொண்டிருத்தல் இயலாது. அவர்கள் திரட்டும் வட்டி வீதம் நாளுக்குநாள் கூடிக்கொண்டே போவது விரும்பத்தக்கதன்று. எனவே, பல்வேறு மாநிலங்களிலும் தனிப்பட்ட முறையில் சட்டங்கள் இயற்றி வட்டித் தொழிலர்களின் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்தியுள்ளனர். அவ்வாறு எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகளுள் முக்கியமானவை பின்வருவன :

(1) 1918ஆம் ஆண்டு வரை, எந்த வட்டி வீதத்தில் கடன் பெறப்பட்டதோ அந்த வட்டி வீதத்திலேயே கடன் திருப்பிச் செலுத்தப்பட வேண்டுமென்று நீதி மன்றங்கள் தீர்ப்பளித்தன. ஆனால், 1918ஆம் ஆண்டுக்குப் பிறகு நிலை மாறிவிட்டது. 1918ஆம் ஆண்டு இயற்றப்பட்ட கடும் வட்டிக் கடன்கள் சட்டத்தின்படி (Usurious Loans Act), கடன் வாங்குவோருக்கு நியாய மற்ற முறையில் கடனளிப்பு நடவடிக்கை அமைந்திருந்தாலும் நிர்ணயிக்கப்பட்ட வட்டி வீதம் மிகக் கூடுதலாக இருந்தாலும் நீதி மன்றம் அக் கடன் நடவடிக்கையினைப் பரிசீலனை செய்து வட்டி வீதத்தினைத் திருத்திக்கூட அமைக்கலாம். இச் சட்டம் திறம்படச் செயல்படுத்தப்பட்டால் கடும் வட்டியால் ஏற்படும் தீமைகள் சற்றுக் குறையலாம்.

(2) இந்து சட்டத்திலுள்ள, செலுத்தப்படும் மொத்த வட்டித் தொகை அசல் தொகையினிடக் கூடுதலாக இருத்தல் கூடாது என்ற விதியினைச் செயல்படுத்தலாம்.

(3) வங்காளம், மகாராஷ்டிரம் போன்ற மாநிலங்கள் செயல் படுத்துவது போன்று, வட்டித் தொழிலர் கட்டாயமாக உரிமம் பெற வேண்டுமென்ற நிபந்தனையை விதிக்கலாம். தவருன முறைகளைக் கடைப்பிடிக்கும் வட்டித் தொழிலர்களுடைய உரிமம் நீக்கப்படலாம். வட்டித் தொழிலர்கள் உரிமம் இல்லாது தொழில் புரிவார்களேயானால் அவர்களைச் சட்டப்படி தண்டிக்கலாம்.

(4) பஞ்சாப் மாநிலம் போன்று எல்லா மாநிலங்களும் சட்டமியற்றி வட்டித் தொழிலர்கள் தங்களுடைய நடவடிக்கை களைத் தக்க ஏடுகளில் பதிவு செய்து வைக்க வேண்டுமென்றும் கடனுளி ஒவ்வொருவருடைய கணக்கும் தனியாக எழுதப்பட வேண்டும் என்றும் அவர்கள் திருப்பிச் செலுத்தும் அசல் தொகை தனியாகவும், அவர்கள் செலுத்தும் வட்டியினைத் தனியாகவும் எழுத வேண்டுமென்றும், அவர்கள் செலுத்தும் தொகைக்குக் கட்டாயமாக இரசீது வழங்க வேண்டுமென்றும் கட்டாயப் படுத்தலாம்.

(5) உத்திரப்பிரதேசம், மத்தியப்பிரதேசம் போன்ற மாநிலங்கள், வட்டித் தொழிலர் கட்டாயமாக ஒவ்வொரு கடனுளிக்கும் அவரது கணக்கின் நிலையினை அறிவிக்கும் வகையில் குறிப்பிட்ட காலத்திற்கு ஒருமுறை குறிப்பு ஒன்றை அனுப்ப வேண்டுமென்று சட்டங்கள் இயற்றியுள்ளன. இது போன்ற சட்டங்களை இதர மாநிலங்களும் இயற்றலாம்.

(6) உச்ச வரம்பு வட்டி வீதத்தினை நிர்ணயம் செய்து பல்வேறு மாநிலங்களும் சட்டம் இயற்றி ஒரு குறிப்பிட்ட விழுக் காட்டிற்குமேல் வட்டித் தொழிலர் வட்டி திரட்டக்கூடாதென்று தடை செய்யலாம்.

(7) கடனைத் திரும்பிச் செலுத்தாத காரணத்தினுல் கடனுளி களுடைய சொத்துகள் விற்பனை செய்யப்படும்போது ஒருசில சொத்துகள் விற்பனை செய்வது தடை செய்யப்பட்டுள்ளது.

வட்டித் தொழிலர் நலிவடைவு: கடந்த சில ஆண்டுகளாக வட்டித் தொழிலர்களின் நடவடிக்கைகள் சரிந்தவண்ணமிருக் கின்றன. இதற்குப் பல காரணங்கள் உள்ளன. அவற்றுள் முக்கிய காரணங்களாவன :

(1) கொடுத்த கடனைத் திரும்பப்பெற வட்டித் தொழிலர் கடனுளிகளுடன் போர் தொடுக்க வேண்டியுள்ளது. நீதி

மன்றத்தை அணுகி அத் தொகையினைத் திரும்பப்பெற முயன்றால் அதிகம் செலவாகிறதென்பதுடன் கூட, மிக அதிக காலதாமதமும் ஆகிறது.

(2) மக்களுடைய நோக்கில் மாற்றம் ஏற்பட்டு அவர்கள் பொதுவாக அதிக அளவு கடன் வாங்க விரும்புவதில்லை. அதுவும் குறிப்பாகக் கல்வி அறிவு கொண்டவர்கள் வட்டித் தொழிலரைக் கடன்பெறும் பொருட்டு அணுகுவதில்லை.

(3) வட்டித் தொழிலர்கள் கடைப்பிடித்த தவறான முறைகள் மிகைப்படுத்தப்பட்டு மக்கள் அவர்கள்மீது அளவுக்கு மீறிய வெறுப்புக் கொண்டுள்ளனர்.

(4) அரசால் இயற்றப்பட்ட கடும் வட்டிக் கடன்கள் சட்டம் போன்ற சட்டங்கள், வட்டித் தொழிலர் அளித்த கடன் தொகையினை மீண்டும் பெறுவதில் பலவகையான சிக்கல்களை ஏற்படுத்தியுள்ளன. ஒருசிலர் இச் சட்டத்தின்வழி தப்பிக்கும் பொருட்டே வட்டித் தொழிலர்களிடமிருந்து கடன்பெற்று அதனைத் திருப்பிச் செலுத்துவதில்லை.

(5) வணிக வங்கிகளும், கூட்டுறவுச் சங்கங்களும் பெருமளவில் விவசாயிகளுக்குக் கடன் வழங்குவதில் ஈடுபட்டுள்ளன.

(6) கடன் வாங்கிய பலர், வட்டித் தொழிலர்களை ஏமாற்றும் பொருட்டே, தாங்கள் நொடித்துவிட்டதாக அறிவித்துவிடுகின்றனர்.

(7) வழங்கிய கடனைத் திரட்ட வட்டித் தொழிலர் மிக அதிகமாகச் செலவிட வேண்டியுள்ளது.

(8) பொதுவாக ஏற்பட்டுள்ள பொருளாதார மந்தநிலை காரணமாக வட்டித் தொழிலர்களிடமே போதிய நிதிவசதிகளில்லை.

(9) வட்டித் தொழிலர்கள், வங்கியத் தொழிலைவிட இதர வகைத் தொழில்கள் இலாபகரமானவை என்று கருதி வேறு தொழில்களில் ஈடுபடத் தலைப்பட்டுள்ளனர்.

(10) வட்டித் தொழிலர்களுக்கும், கடனாளிகளுக்குமிடையே நிலவும். சுமுகமற்ற உறவு காரணமாக வட்டித் தொழிலர்கள் இத் தொழிலையே வெறுக்கத் தலைப்பட்டுள்ளனர்.

(11) அரசியல் காரணமாகவும், வட்டித் தொழிலர், இத் தொழிலைத் துறக்க முன்வந்துள்ளனர்.

வட்டித் தொழிலர்களுடைய நடவடிக்கைகளைப்பற்றிய குற்றச் சாட்டுகள் பெரிதும் மிகைப்படுத்தப்பட்டுள்ளன. எனவே, வட்டித் தொழிலர்களுடைய நடவடிக்கைகளில் மாபெரும் மாற்றத்தினை இப்பொழுது கண்டு வருகிறோம். இப்பொழுதெல்லாம் வட்டித் தொழிலர்கள், அவர்கள் வழங்கும் கடனுக்குக் கடனுறுதிச் சீட்டினை எழுதித்தரக் கடனாளிகளைக் கட்டாயப்படுத்துகின்றனர். வாய்மொழி உறுதியினடிப்படையில் கடன் வழங்குவதில்லை. மேலும், கடனை ரொக்கமாகவே திருப்பிச் செலுத்த வேண்டுமென்று வலியுறுத்துகின்றனர். பெரும்பாலோர் வேறு சிக்கலில்லாத இலாபகரமான தொழில்களில் ஈடுபட முனைந்துள்ளனர்.

வட்டித் தொழிலர்களின் புனரமைப்பு : வட்டித் தொழிலர்களின் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்தும் வகையில் பல மாநிலங்கள் பல சட்டங்களை இயற்றியுள்ளன. இவற்றுள் மிக முக்கியமானது வட்டித் தொழிலை மேற்கொள்ள விரும்புபவர்கள் அதற்கென நியமிக்கப்பட்டுள்ள பதிவாளரிடம் தங்களைப் பதிவு செய்துகொண்டு உரிமம் பெற்றுக்கொள்ள வேண்டுமென்பதேயாகும். உரிமம் பெற்றுத் தொழில் புரியும் வட்டித் தொழிலர் தமது நடவடிக்கைகளைக் கொண்ட ஏடுகளை ஆய்வுக்கு வழங்கக் கடமைப்பட்டவராவார். மாநில அரசு ஆய்வுக்கும், கண்காணிப்புக்கும் தக்க ஏற்பாடுகளைச் செய்யவேண்டும். இத்தகைய பரிந்துரையை வங்காளம் மற்றும் மத்திய மாகாண வங்கியக்குழுக்கள் அளித்துள்ளன. இதன்படி ஒவ்வொரு மாநிலமும் சட்டமியற்றி, வட்டித் தொழிலர் கட்டாயமாகப் பதிவு செய்துகொள்ள வேண்டுமென்று கட்டாயப்படுத்தப்படவேண்டும். இத்தகைய உரிமம் மைய அரசால் வழங்கப்படும். உரிமம் பெறுது வட்டித் தொழில் புரிவது சட்டப்படி தவருகும். அத்தகைய தொழில்புரியும் வட்டித் தொழிலர்கள் தண்டிக்கப்பட வேண்டும்.

ஆனால், நடைமுறையில் வட்டித் தொழிலர்களை உரிமம் பெறுமாறு கட்டாயப்படுத்துவதில் சில இடையூறுகள் உள்ளன. ஏனெனில், வட்டித் தொழிலர் உரிமம் பெறுமாறு கட்டாயப்படுத்தப்பட்டால் கீழ்க்காணும் விளைவுகள் ஏற்படுமெனக் கூறப்பட்டது :

(அ) வட்டித் தொழிலர் இதனை எதிர்த்து மறுப்புத் தெரிவிப்பர்.

(ஆ) அவர்கள் வட்டித் தொழிலினை நிறுத்திவிடக் கூடும்.

(இ) முழுத்தொழில் அல்லாத இதர வட்டித் தொழிலர்களை வேறுபடுத்திக் கண்டுபிடிப்பது மிகச் சிரமமானதாகும்.

(ஈ) வட்டித் தொழிலரைக் கட்டாயமாகக் கட்டுப்படுத்தினுல் அவர்கள் கட்டுப்பாட்டை மீறுவதில் முனைப்பாய் இருப்பர்.

எனவே, உரிமம் வழங்குதலைக் கட்டாயமாக்காது, வட்டித் தொழிலர்கள் விரும்பினுல் பெறலாம் என்ற நிலைக்கு அவரை உள்ளாக்குதல் சிறந்தது. அவர்களுக்குக் கீழ்க்காணும் நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்பட்டால் உரிமம் வழங்கப்படலாமென்ற கருத்தும் தெரிவிக்கப்பட்டது.

(1) வட்டித் தொழிலர், அந்த மாநில அரசால் நிர்ணயிக்கப் படும் பெரும அளவுக்குட்பட்டு வட்டி திரட்டுதல் வேண்டும்.

(2) அவர்கள், அரசால் நிர்ணயிக்கப்படும் படிவங்களில் தங்கள் நடவடிக்கைகளைப் பற்றிய கணக்குகளை எழுதிவர வேண்டும்.

(3) அவர்கள் தங்களுடைய கணக்குகளை இரகசியம் எதுவு மின்றி, அரசு அலுவலர்களால் தணிக்கை செய்யும்படி செய்தல் வேண்டும்.

(4) ஒவ்வொரு கடனுளிக்கும் தனித்தனியாகக் கணக்கு வைத்திருப்பதுடன்கூட, அவர்கள் கணக்குநிலைகுறித்து அவர் களுக்குக் குறிப்பிட்ட காலத்திற்கொருமுறை அறிக்கைகள் மூலம் தெரிவித்தல் வேண்டும்.

(5) கடனுளிகள் பணம் செலுத்தும்போது அவர்களுக்கு இரசீதுகள் கொடுத்தல் வேண்டும்.

(6) கூட்டு வட்டி திரட்டும் ஒப்பந்தம் செய்துகொண்டால் வட்டி ஆண்டுக்கு ஒருமுறைதான் அசலுடன் சேர்க்கப்பட வேண்டும்.

(7) வட்டித் தொழிலர்களுடைய கணக்குகள், தகுதிபெற்ற தணிக்கையாளர்களால் தணிக்கை செய்யப்பட்டுச் சான்றுரைக் கப்படவேண்டும்.

(8) தங்கள் நடவடிக்கைகளைக் குறித்துக் குறிப்பிட்ட காலத் திற்கு ஒருமுறை ரிசர்வ் வங்கிக்கு அறிக்கை ஒன்று அனுப்புதல் வேண்டும்.

(9) வங்கியியல் தொழிலினை இதர தொழில்களுடன் இணைத்தல் கூடாது.

இந்த நிபந்தனைகளைப் பூர்த்திசெய்து உரிமம் பெறும் வட்டித் தொழிலர்களுக்குக் கீழ்க்காணும் சலுகைகள் வழங்கப்படலாம் :

(1) வேளாண்மை உண்டியல்கள், பண்டக இரசீதுகள் ஆகியவற்றைப் பிணையமாகப் பெற்று வழங்கப்பட்ட கடன்களைத் திரும்பப் பெறுவதில் வட்டித் தொழிலர்களுக்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டும்.

(2) வணிக வங்கிகள், இவர்களுக்குத் தாராளமாகக் கடன் வழங்கலாம்.

(3) ஸ்டேட் வங்கி, இதர வங்கிகளுக்குக் கொடுப்பதுபோல் பணத்தை ஓரிடத்திலிருந்து இதர இடங்களுக்கு மாற்றும் வசதியினை வட்டித் தொழிலர்களுக்கும் கொடுக்க வேண்டும்.

(4) அஞ்சல் அலுவலகங்களில் காசோலைகள் மூலம் இயக்கப் படக்கூடிய நடைமுறைக் கணக்குகளைத் திறக்க அனுமதி வழங்கப்படலாம்.

ஆனால், பஞ்சாப், அஸ்ஸாம் ஆகிய மாநிலங்களைச் சார்ந்த குழுக்கள் வட்டித் தொழிலருக்கு எந்த வகையிலும் உரிமம் வழங்கும் திட்டத்தினை ஏற்றுக்கொள்ளவில்லை. இக் குழுக்களின் கருத்துப்படி வட்டித் தொழிலர்களுக்குப் பின்வரும் இரு நோக்கங்களுடனேயே உரிமம் வழங்கப்பட வேண்டும்: (அ) வட்டித் தொழிலர்கள் திரட்டிய வட்டி வீதத்தைக் குறைத்தல்; (ஆ) அவர்கள் கடைப்பிடித்த தவறான முறைகளைத் தடை செய்தல். முதல் நோக்கம் நாளடைவில் மக்களுக்கு உரிய பயிற்சி அளிப்பதன் மூலம் எய்தப்படலாம். அதுவரை, கடும் வட்டிக் கடன்கள் சட்டம் செயல்படுத்தப்படுவதன்வழியும், வட்டித் தொழிலர்களுக்கு அவர்கள் வழங்கிய கடன் தொகையினை அதிகச் செலவின்றித் திரும்பப் பெற உதவி செய்யும் வழியாலும், தனிப் பட்ட முறையில் கடனளிப்பதில்லை என்ற நிபந்தனையுடன் வட்டித் தொழிலர்களைக் கூட்டுறவுச் சங்கங்களுடன் இணைப்பதன் மூலமாகவும், ஒருசில தேர்ந்தெடுத்த வட்டித் தொழிலர்களைக் கிராமங்களில் கூட்டு வங்கிகளின் முகவர்களாகப் பணியாற்றும்படி அமர்த்தியும், அவர்களை நிரந்தரமாக வணிகவங்கிகளின் கிளை நிறுவனங்களாகப் பணியாற்றும்படி கேட்டுக்கொள்வதன் மூலமும், வணிக வங்கித் தொழிலை மட்டும் புரியும்படி வட்டித் தொழிலர்களை ரிசர்வ் வங்கியில் உறுப்பினராக்குவதன் மூலமாகவும் அவர்களை மாற்றுச் சீட்டுகளைக் கழிவு செய்யும் தொழிலில் சிறப்பீடுபாடு கொள்ளக் கேட்டுக்கொள்வதன் வழியும், குறுகிய காலத்தில் தற்காலிகமாக அந்த நோக்கத்தினை எய்தப்பெறலாம்.

வட்டித் தொழிலர் கடைப்பிடிக்கும் தவருன முறைகளைத் தடுக்க 1918 ஆம் ஆண்டின் கடும் வட்டிக் கடன்கள் சட்டத்தினைச் செயல்படுத்துதல் பஞ்சாப் மாநிலத்தைப் போன்று கணக்கு ஒழுங்காற்றுச் சட்டம் இயற்றுதல், வட்டித் தொழிலர் வட்டிக்கு மேலும், தங்கள் நிருவாகச் செலவுக்காகப் பணம் திரட்டுவதைத் தடை செய்யும் வகையில். ஆங்கிலேய வட்டித் தொழிலர் சட்டம் (English Money-lenders' Act) போன்றதொரு சட்டம் இயற்றுதல், காவல் துறையினர், காபூலி வட்டித் தொழிலர் வன்முறையினைக் கடைப்பிடிப்பதைத்தடுத்தல், வெளி மாவட்டங்களிலுள்ள வட்டித் தொழிலர் அந்தந்த மாவட்டத்தினை விட்டு வேறு மாவட்டத்தில் தொடுக்கும் வழக்கினைத் தள்ளிவிடுதல், வட்டித் தொழிலர் கடைப்பிடிக்கும் தவருன செய்கைகளைத் தடுக்கும் வகையில் பல்வேறு சட்டங்கள் இருப்பதை மாநில அரசு மக்கள் கவனத்துக்குக் கொண்டுவருதல் போன்ற செயல்களைக் கடைப்பிடிக்கலாம்.

பல மாநிலங்கள் வட்டித் தொழிலர் செயல்களைக் கட்டுப்படுத்தும் வகையில் அவர்களைக் கட்டாயமாக உரிமம் பெறும்படி குறிப்பிட்டுச் சட்டங்கள் இயற்றியுள்ளன. ஒருசில மாநிலங்கள், வட்டித் தொழிலர் உரிமம் பெற வேண்டியதைக் கட்டாயமாக்கி, அவர்கள் உரிமமின்றி வட்டித்தொழில் செய்தல் சட்டப்படி விரோதமான செயல் எனக் குறிப்பிட்டுள்ளன. ஒருசில மாநிலங்கள் உரிமம் பெருத வட்டித்தொழிலர் தாங்கள் வழங்கிய கடனுக்காக நீதி மன்றத்தின் துணையை நாட முடியாது என்று வரையறை செய்துள்ளன. அவர்கள் வழக்குத் தொடுக்க விரும்பின் முதலில் உரிமம் பெற்ற பிறகே வழக்குத் தொடுக்கலாம். மிக அதிகமான வீதத்தில் வட்டித் தொழிலர் வட்டி திரட்டினால், அவர்களுக்கு வழங்கப்பட்ட உரிமம் நீக்கப்பட்டுவிடும். மாநிலங்களால் இயற்றப்பட்ட சட்டங்கள் பொதுவாகக் கீழ்க்கண்ட செயல்களைத் தடை செய்கின்றன:

(அ) வட்டித் தொழிலர் கூட்டு வட்டி திரட்டுதல்.

(ஆ) கடன் பெற்றவரிடமிருந்து, வட்டித் தொகை தவிர, வட்டித் தொழிலர் நிருவாகச் செலவுத் தொகையினைப் பெறுதல்.

(இ) அசல் தொகையைத் தவருகக் கணக்கிடுதல்.

(ஈ) கடன் பெறுபவர்களை அச்சுறுத்துதல், துன்பப்படுத்துதல்.

(உ) கொடுத்த கடனைக் கடனாளிகள், வேறு மாநிலங்களில் திருப்பிச் செலுத்த வேண்டுமென்று நிபந்தனை விதித்தல்.

(ஊ) நிலக்குத்தகை பாக்கியிஙை்க கடன் தொகையுடன் சேர்த்துக் கொள்ளுதல்.

(எ) உரிய முறையில் கணக்குகளை வைத்துக் கொள்ளாதிருத்தல்.

வட்டித் தொழிலரின் எதிர்காலம்: வணிக வங்கியியல் முற்றிலும் வளர்ச்சி பெருத இந்தியா போன்ற நாடுகளைப் பொறுத்தவரை வட்டித் தொழிலரை அறவே நீக்குதல் என்பது இயலாததாகும். வட்டித் தொழில் தொன்றுதொட்டு நடந்து வரும் தொழில்களில் ஒன்றாகும். பணம் என்றதொரு சாதனம் கண்டுபிடிக்கப்பட்ட நாள்தொட்டுக் கடன் வழங்குதலும் இருந்து வருகின்றது. பல்லாயிரக்கணக்கான கிராமங்கள் நிறைந்த இந்தியாவைப் பொறுத்தவரை வட்டித் தொழிலர் பணிகளை நீக்குதல் என்பது இயலாதாகும். வட்டித் தொழிலரின் பணி மக்களுக்குப் பல்வேறு வகைகளிலும் தேவைப்படுகின்றது. இவர்களிடமிருந்து விவசாயிகள் எந்த நேரத்திலும் கடன்பெற முடிகிறது. அலுவலகமென்ற, அலுவலக நேரமென்ற இவர்களுக்குச் சட்டதிட்டங்கள் கிடையாது. மேலும், கடன்பெற விழைபவர்களைப் பற்றிய முழு விவரங்களையும் நன்கு அறிந்துகொண்ட பிறகே இவர்கள் கடன் வசதிகளளிக்கின்றனர். எனவே, சட்டதிட்டங்களை வலியுறுத்தாது, கடன் பெறுபவர்களுடைய நேர்மையைப் பிணையாகக் கொண்டு கடன் வழங்குகிறார்கள். இருப்பினும் வட்டித் தொழிலர் பல்வேறு தவருன முறைகளைக் கடைப்பிடிப்பதால், அவர்களைக் குறித்த தவருன கருத்து மேலும் மேலும் பெருகி வருகிறது. பொதுமக்களும், சட்டமும் அவர்களுக்கு எதிராக இயங்கி வருகின்றன. இவர்களுடைய முக்கியத்துவத்தினைக் குறைத்திடும் முகத்தான் வேண்டியே அரசு கூட்டுறவுச் சங்கங்களை விரிவாக்க முயற்சி எடுத்து வருகின்றது. இன்றும் இவர்கள் சமூக விரோதிகள் என்று சுருதப்படுகின்றனர். இவர்களை முற்றிலும் நீக்க முடியாத நிலையில், வட்டித் தொழிலர்களும், தங்கள் நிலையினை உணர்ந்து, அவர்களை, அவர்களே திருத்திக்கொள்ள வேண்டும். பொதுமக்கள் நல்வாழ்விலேயே தங்களுடைய வளர்ச்சியுள்ளது எனும் உண்மையினை வட்டித் தொழிலர் உணர்ந்தால் போதுமானதாகும்.

நாட்டு வங்கியர்
(Indigenous Bankers)

கடன் வழங்கும் முகமை என்ற நிலையில், பல வகையான அரசியல் அலைகளையும், பொருளாதார நெருக்கடியையும் கடந்து தொடர்ந்து பல நூற்றாண்டுகளாகக் கிராம மக்களுக்குக் கடன்

கொடுத்து அவர்களது பல வகையான தேவைகளையும் நிறைவு பெறச் செய்பவர்களே நாட்டு வங்கியராவர். இந்நிலை இவர்களுடைய முக்கியத்துவத்தினைக் குறிப்பிடுகிறது. வைசியர்கள், சைனர்கள், மார்வாரிகள், நாட்டுக்கோட்டைச் செட்டியார்கள் என்ற குறிப்பிட்ட சில இனத்தைச் சேர்ந்த மக்கள் பரம்பரைத் தொழிலாகக் கடன் கொடுக்கும் தொழிலை நமது நாட்டில் மேற்கொண்டு வந்துள்ளனர். இவர்களையே நாட்டு வங்கியர் என்று கூறுகிறோம்.

மேற்கத்திய நாடுகளைப்போன்று, இந்தியாவில் வணிக வங்கிகள் தான் தொடங்கப்பட்டனவெனினும், அவ் வணிக வங்கிகளின் கொள்கைகள் இந்தியாவில் கடைப்பிடிக்கப்படவில்லை என்பது பொருளன்று தொன்றுதொட்டே, இவ் வங்கிகளின் கோட்பாடுகளை நாட்டு வங்கியர் கடைப்பிடித்து வந்துள்ளனர். எனவே, வரலாற்று அடிப்படையில், நாட்டு வங்கியரே இந்தியாவைப் பொறுத்தவரை வணிக வங்கிகளின் முன்னோடிகளாக இருந்தனர் என்று கூறலாம். இவர்கள், பழங்கால வங்கி முறையினைக் கடைப்பிடித்து நகரங்களிலிருக்கும் சிறு தொழில் நிறுவனங்களுக்குக் கடனுதவி அளித்து வருகின்றனர். வணிக வங்கிகள் இந்தியாவில் தொடங்கப்படுமுன்னர், வங்கித் தொழிலில் முற்றுரிமை பெற்றுத் திகழ்ந்தனர். வணிக வங்கிகள் தொடங்கப்பட்ட பின்னரும் அவர்களுடைய முக்கியத்துவம் குறைந்ததாகத் தெரியவில்லை. வங்கித் தொழிலில் பெரும்பகுதி இன்றும் நாட்டு வங்கியர்களாலேயே கட்டுப்படுத்தப்பட்டு வருகின்றது.

'நாட்டு வங்கியர்' எனும் சொல்லுக்குச் சட்ட பூர்வமான வரைவிலக்கணம் இல்லை. இச் சொல்லுக்கு அவர்கள் ஆற்றும் பணிகளை விளக்கும் வகையில், வரைவிலக்கணம் கொடுக்கப் பட்டுள்ளது. இந்திய மைய வங்கி விசாரணைக்குழு, நாட்டு வங்கியர் என்ற சொல்லுக்குக் கீழ்க்காணும் வரைவிலக்கணம் கொடுத்துள்ளது. உண்டியலில் ஈடுபட்டு, பொது மக்களிடமிருந்து வைப்புத்தொகை பெற்றுக் கடனளிக்கும் ஒரு தனி நபரோ அல்லது ஒரு கூட்டு வணிகமோ நாட்டு வங்கியரெனப்படும். இக் குழுவின் கருத்துப்படி, வைப்புத்தொகை பெறுவதன் வழியும், உண்டியலில் ஈடுபடுவதன் வழியும் நாட்டு வங்கியர் தங்களை, வட்டித் தொழிலரினின்றும் வேறுபடுத்திக் கொள்கின்றனர். எனவே, வைப்புத்தொகை பெறுதல் என்பது நாட்டு வங்கியர்களுடைய தன்மைகளுள் தலை சிறந்ததாகும். இருப்பினும் நடைமுறையில் பல நாட்டு வங்கியர் வைப்புத்தொகை பெருது முரண்பாடாக அமைந்துள்ளது. வட்டித் தொழிலர்மீது பல கட்டுப்பாடு விதிக்கப்பட்டதன் காரணமாகப் பல வட்டித் தொழிலர்கள்

தங்களையே நாட்டு வங்கியர் என்று கூறிக்கொள்கின்றனர். ஒருசில குறிப்பிட்ட இனத்தைச் சேர்ந்தவர்களே நாட்டு வங்கியர்களாகத் திகழ்வது குறிப்பிடத்தக்கதாகும்.

நாட்டு வங்கியரின் வகைகள்: நாட்டு வங்கியரை இருவகைகளில் பாகுபடுத்தலாம். முதல் வகைப் பாகுபாட்டின்படி நாட்டு வங்கியரைக் கிராம நாட்டு வங்கியர், நகர நாட்டு வங்கியர் என இருவகைகளாகப் பிரிக்கலாம். கிராமங்களில் தொழில் புரியும் நாட்டு வங்கியர் கிராம நாட்டு வங்கியரென்றும், நகரங்களில் பணிபுரியும் நாட்டு வங்கியர், நகர நாட்டு வங்கியரென்றும் அழைக்கப்படுகின்றனர்.

இரண்டாவது வகைப் பாகுபாட்டின்படி நாட்டு வங்கியரை, முழுமையாக வங்கித் தொழிலில் ஈடுபட்டுள்ள நாட்டு வங்கியர், வாணிபத்தில் முக்கியமாகவும், வங்கித் தொழிலில் ஓரளவும் ஈடுபட்டுள்ள நாட்டு வங்கியர், வாணிபத்திற்கும், வங்கித் தொழிலுக்கும் தங்கள் நிதியினைச் சமமாகப் பிரித்து முதலீடு செய்யும் நாட்டு வங்கியர் என்று மூன்று பிரிவுகளாகப் பிரிக்கலாம். நாட்டு வங்கியரில் பெரும்பாலோர் நாடு முழுவதும் கிளை அலுவலகங்கள் கொண்டு தொழில் புரிகின்றனர். கிளை அலுவலகங்கள் முகவர்களால் நிருவகிக்கப்பட்டு வருகின்றன. அவ்வாறு கிளை அலுவலகங்களை நிருவகிக்கும் முகவர்கள் குமாஸ்தாக்கள் என்றழைக்கப்படுகின்றனர். அவர்கள் நேர்மையுடனும், கடுமையாகவும் உழைப்பதால் அவர்களுக்கு முழு உரிமைகள் வழங்கப்பட்டுள்ளன. குமாஸ்தாக்கள் தலைமை அலுவலகங்களுக்குக் குறிப்பிட்ட காலத்திற்கொருமுறை நடவடிக்கைகள் குறித்த அறிக்கையினை அனுப்பி வருகின்றனர். தலைமை அலுவலகத்திலிருந்து தொழில் நடவடிக்கைகள் குறித்த செயல்முறைகளைப் பெறுகின்றனர். கிளை அலுவலகங்களின் கணக்குகள் நாட்டு வங்கியர்களாலேயே தணிக்கை செய்யப்படுகின்றன.

நாட்டு வங்கியர்கள் தனித்துச் சுதந்திரத்துடன் செயலாற்றினும் அவர்கள் தங்கள் நலனைப் பாதுகாத்துக் கொள்ளும் வகையில் சங்கங்கள் ஏற்படுத்திக் கொள்ளுதலுமுண்டு. இச் சங்கங்கள் பெரும்பாலும் மத, சமூக நடவடிக்கைகளில்மட்டும் ஈடுபட்டாலும், இவை, தங்கள் உறுப்பினர்களுக்கிடையேயுள்ள வேறுபாடுகளைக் களையவும் பாடுபடுகின்றன. ஒரு சங்கத்தின் உறுப்பினர்கள் இதர சங்கங்களின் உறுப்பினர்களுடன் பழகி, பல்வேறு சங்கங்களும் ஒன்றுகூடிக் கூட்டம் நடத்தும் வாய்ப்பினை ஏற்படுத்துதலுமுண்டு. ஆனால், இச் சங்கங்கள், உறுப்பினர்கள் தங்களுக்குள் கடனுதவி செய்வதற்கான வாய்ப்பினையோ, அவர்கள் பொதுப்படையான தொழில் கோட்பாடுகளைக்

கடைப்பிடிப்பதற்கான வாய்ப்பினையோ ஏற்படுத்திக் கொடுப்பதில்லை.

நாட்டு வங்கியரின் பண்புகள் கட்டுப்பாடற்றவை. தாமதமின்றி உடனுக்குடன் நிறைவேற்றப்படுபவை. இவர்கள் தங்கள் கணக்குகளை எளிய முறையில் எழுதி வருகின்றனர். கணக்குகள் தணிக்கை செய்யப்படுவதில்லை. இதர நிறுவனங்களைப் போன்று உரிய கோட்பாடுகளுடன் இறுதிநிலைக் குறிப்புத் தயாரிக்கப்படுவதில்லை. அவர்கள் எந்த நேரத்திலும் கடனுதவி அளிக்கக் காத்திருக்கின்றனர். அவர்கள் கணக்குமுறை எளிதானது. அதே நேரத்தில் சரியானதாகவும் உள்ளது. கடன் பெறுபவர்களுடன் கொண்டுள்ள சொந்தத் தொடர்பினடிப்படையில் கடன் வழங்கப்படுகின்றது. கடன்வசதி யளிக்கப்பட்ட பிறகு கடன், உரிய காரணத்திற்குப் பயன்படுத்தப் படுகின்றதா என அறிந்துகொள்கின்றனர். இவர்கள் வட்டித் தொழிலர்களைவிட மிகுந்த பொறுப்புடன் தொழில்புரிந்து வருகின்றனர்.

இவர்கள் பொதுமக்களிடமிருந்து தவணைவைப்பு, நடப்புவைப்பு ஆகியவை மூலம் நிதி திரட்டித் தங்களுடைய மூலதனத்தைப் பெருக்கிக் கொள்கின்றனர். அவர்கள் பெறும் வைப்புத் தொகைக்கு வணிக வங்கிகளைப் போன்று வட்டியும் செலுத்துகின்றனர். அவர்கள் செலுத்தும் வட்டி வீதம், வைப்புத் தொகையின் அளவு, வைப்பின் காலம் ஆகியவற்றைப் பொறுத்தமைகிறது. அவர் தங்களுடைய வாடிக்கைக்காரர்களிடம் கொண்டுள்ள உறவு மிகப் புதுமையானது. வைப்புத்தொகை வாடிக்கைக்காரரால் நேரடியாகச் செலுத்தப்பட்டாலோ, நேரடியாகத் திருப்பிப் பெறப்பட்டாலோ இரசீதுகள் கொடுப்பதுவுமில்லை; அவர்களிடமிருந்து இரசீதுகள் வாங்குவதுமில்லை. வேற்றூர் மூலம் பணம் செலுத்தப்படும்போதும், பெறப்படும்போதும் இரசீதுகள் பயன்படுத்தப்படுகின்றன. நேரடியாக நடவடிக்கைகள் நடைபெறும்போது கணக்கிலெழுதப்படும் பதிவுகளே போதுமெனக் கருதுகின்றனர். வணிக வங்கிகள் தங்கள் முதலுக்கு வைப்புத் தொகையினையே நம்பியுள்ள இக்காலத்தில், இவ் வங்கியர் தங்கள் சொந்த மூலதனத்தையே பெரிதும் நம்பியுள்ளனர். மூல்தானியர்கள், மார்வாரி போன்ற நாட்டு வங்கியியர், பெரும்பாலும் வைப்புத்தொகை திரட்டுவதே இல்லை.

நாட்டு வங்கியரின் சிறப்புத் தன்மைகள்: நாட்டு வங்கியர் கீழ்க்காணும் சிறப்புத் தன்மைகள் பெற்றுள்ளனர்:

(1) வட்டித் தொழிலரைப் போன்றே இவர்களும் தனிப்பட்ட முறையில் அலுவலகம் வைத்திருப்பதில்லை.

(2) ஒருசில நாட்டு வங்கியரைத் தவிர்த்து இதர நாட்டு வங்கியர்கள் வேலை நேரமென்று தனியாக நிர்ணயித்துக் கொள்வதில்லை. எந்த நேரத்திலும் கடன் கொடுத்து வாங்குவர்.

(3) பெரும்பாலும் கடன் பெறுபவர்களிடம் கொண்டுள்ள சொந்தப் பழக்க வழக்கத்தினடிப்படையிலேயே கடன் வழங்குகின்றனர். கடன் கொடுக்கும்போது கடைப்பிடிக்கப்படும் வழக்கமான முறைகள் இவர்களால் கடைப்பிடிக்கப்படுவதில்லை.

(4) பொதுவாக விவசாயிகளுக்கு இவர்கள் நேரடியாகக் கடன் கொடுப்பதில்லை. வட்டித் தொழிலர் மூலமாகவே இவர்கள் கடன் கொடுத்து வருகின்றனர். வணிகர்களுக்குமட்டும் நேரிடையாகக் கடன் வசதி அளிக்கின்றனர்.

(5) மிகக் குறைவான பணியாட்களுடனேயே தொழில் புரிந்து வருகின்றனர்.

(6) இவர்கள் தங்களுடைய தொழில் நடவடிக்கைகள் குறித்த விவரங்களை வெளியிடுவதில்லை. தொழில் நடவடிக்கைகளை இரகசியமாகக் காப்பாற்றுகின்றனர்.

(7) பெரும்பாலான நாட்டு வங்கியர் வங்கியியல் தொழிலையும், இதர வகையான தொழிலையும் இணைத்தே மேற்கொள்கின்றனர்.

(8) பிணையக் கடனையே இவர்கள் விரும்புகின்றனரெனினும் ஒருசில சந்தர்ப்பங்களில் வட்டித் தொழிலரைப்போன்று சொந்தப் பிணையிலும் கடன் கொடுப்பதுண்டு.

(9) கொடுக்கப்படும் கடன் உரிய முறையில் உரிய காரணத்திற்குச் செலவு செய்யப்படுகின்றதாவெனக் கண்காணிக்கின்றனர்.

(10) இவர்கள் ஆலைகளுக்குத் தவணை வைப்பின் மூலம் நீண்டகாலக் கடன் அளித்து வருகின்றனர். தவணைக்காலம் முடிந்தபிறகு அந்த வைப்பு மீண்டும் புதுப்பிக்கப்படுவதுமுண்டு.

(11) சிறு தொழில் உற்பத்தியாளர்களுடனும், சிறு வணிகர்களுடனும் நெருங்கிய தொடர்புகொண்டு அவர்களுடைய பண்டங்கள் விற்பனையாகவும் உறுதுணையாக விருக்கின்றனர்.

(12) உண்டியல்களைக் கழிவுசெய்து கடன் வசதிகளை அளிக்கின்றனர்.

* வட்டித் தொழிலருக்கும் நாட்டு வங்கியருக்குமுள்ள வேறுபாடுகள்: வட்டித் தொழிலரும், நாட்டு வங்கியரும் சிறிய

அளவில் கடனுதவி செய்துவருகின்றனர். இருசாராரும் முறைப்படி யமையாத பணச்சந்தைப் பிரிவில் சேர்க்கப்படுகின்றனர். இருப்பினும், கொள்கைகளிலும், செயல்முறையிலும் இவர்கள் இருசாராரும் ஒத்திருப்பதில்லை; இவர்களுக்கிடையே கீழ்க்காணும் வேறுபாடுகள் உள்ளன:

(1) நாட்டு வங்கியர் பொதுமக்களிடமிருந்து வைப்புத் தொகை திரட்டுகின்றனர். ஆனால், வட்டித்தொழிலர் அவ்வாறு வட்டித்தொகை திரட்டுவதில்லை.

(2) நாட்டுவங்கியர் உண்டியல்களைக் கழிவுசெய்து கடன் வசதி யளிக்கின்றனர். ஆனால், வட்டித் தொழிலர் அவ்வாறு உண்டியல்களில் ஈடுபடுவதில்லை.

(3) நாட்டு வங்கியர் விவசாயிகளுக்குப் பெரும்பாலும் நேரடியாகக் கடன் வழங்குவதில்லை. வட்டித் தொழிலர் மூலமே கடன் வழங்குகின்றனர். ஆனால். வட்டித் தொழிலர் நேரிடை யாகவே விவசாயிகளுக்குக் கடன் வழங்குகின்றனர்.

(4) நாட்டு வங்கியர் கடன் பெறுவதற்கான காரணத்தை அறிந்துகொண்டு கடன் பெற்றவர் அக் குறிப்பிட்ட காரணத்திற் காக அப் பணத்தைச் செலவிடுகின்றாரா என்பதனையும் அறிந்து கொள்ள முற்படுகிறார். ஆனால், வட்டித் தொழிலர் இவை குறித்து அக்கறை செலுத்துவதில்லை.

(5) நாட்டு வங்கியர் பெரும்பாலும் உற்பத்திப் பெருக்கத் திற்காகக் கடன் வழங்குகின்றனர். நுகர்வுக்காகக் கடன் வழங்குவது அரிது. வட்டித் தொழிலர் நுகர்வுக்காகவும் கடன் வழங்குகின்றனர்.

(6) நாட்டு வங்கியர், உரிய முறையில், தொடர்ந்தாற்போல் கடன் தொகையினைக் கடனாளிகளிடமிருந்து திரட்டுகிறார். கடன் தொகை தவணைமுறையில் திரட்டப்படுவதுமுண்டு. வட்டித் தொழிலர் இதுபோன்ற சிறந்த முறைகளைக் கடைப்பிடிப்பதில்லை.

(7) நாட்டு வங்கியர்கள் தங்களுடைய கடனுக்குத் திரட்டும் வட்டி வீதம் வட்டித் தொழிலரின் வட்டி வீதத்தைவிட மிகக் குறைவு.

(8) பொதுவாக நாட்டு வங்கியர் பிணையங்களைப் பெற்றே கடன் வழங்குகின்றனர். வேறு பிணையங்கள் இல்லையேல் கடன் பெறுபவரிடமிருந்து கடனுறுதிச் சீட்டினையாவது பெற்றிடுவது இயல்பு. ஆனால், நாட்டு வங்கியர் பெரும்பாலும் பிணையமற்ற கடனையே வழங்குகின்றனர்.

(9) நாட்டு வங்கியர் கொடுக்கும் கடன் தொகை வட்டித் தொழிலர் கொடுக்கும் கடன் தொகையைவிட மிக அதிகமாகவே இருக்கும்.

(10) நாட்டு வங்கியர் வட்டித் தொழிலர்களைவிட வங்கியியக் கோட்பாடுகளை அதிகமாகக் கடைப்பிடித்துத் தொழில் புரிகின்றனர்.

(11) நாட்டு வங்கியரின் மூலதனம், வட்டித் தொழிலரின் மூலதனத்தைவிட மிகவும் அதிகம்.

(12) வட்டித் தொழிலர்களைப் போலன்றி, நாட்டு வங்கியர், அவர்களிடம் கடன் பெற்றுள்ளவர்களுக்கு, அவர்களுடைய நடவடிக்கைகளைப்பற்றிய விவரங்களை — அசல் தொகையில் எவ்வளவு செலுத்தப்பட வேண்டும், வட்டி எவ்வளவு செலுத்தப் படவேண்டும் போன்றவற்றைக் கடிதம்மூலம் அனுப்புகிறார்கள்.

(13) நாட்டு வங்கியர் ஒருசில இனத்தைச் சார்ந்தவர் களாகவே இருக்கின்றனர். ஆனால், வட்டித் தொழிலர்கள் எந்த இனத்தைச் சேர்ந்தவர்களாகவும் இருக்கலாம்.

நாட்டு வங்கியருக்கும் வணிக வங்கிகளுக்குமிடையே உள்ள வேறுபாடுகள் : நாட்டு வங்கியர், வணிக வங்கிகளின் வங்கியியக் கோட்பாடுகளில் சிலவற்றைக் கடைப்பிடித்தாலும், நாட்டு வங்கி யருக்கும், வணிக வங்கிகளுக்குமிடையே கீழ்க்காணும் வேறு பாடுகள் உள்ளன.

(1) வங்கிகள் வங்கியிய ஒழுங்காற்றுச் சட்டத்தின்கீழ் நிறுவப் பட்டுள்ள நிறுவனங்கள்; வங்கியிய ஒழுங்காற்றுச் சட்டத்தின்படி செயல்படுபவை; ஆனால், நாட்டு வங்கியர் அவ்வாறு பதிவு செய்யப்பட்டவர்களல்லர்.

(2) எல்லா வங்கிகளும் வைப்புத்தொகை பெறுகின்றன. எல்லா நாட்டு வங்கியரும் வைப்புத்தொகை பெறுவதாகக் கூற இயலாது. ஒருசில நாட்டு வங்கியர் தங்கள் சொந்த மூலதனத் துடனேயே தொழில் புரிகின்றனர்.

(3) வங்கிகள் நிர்ணயிக்கப்பட்ட வேலை நேரத்தினைக் கொண்டுள்ளன. ஆனால், எல்லா நாட்டு வங்கியரும் நிர்ண யிக்கப்பட்ட வேலை நேரத்தினைக் கொண்டுள்ளனர் எனக் கூற முடியாது.

(4) வங்கிகள் பெற்றுக்கொண்ட வைப்புத்தொகை காசோலை மூலம் திருப்பிப் பெறலாம். ஆனால், நாட்டு வங்கியர் பெற்ற வைப்புத்தொகை காசோலைமூலம் திரும்பப் பெறமுடியாது.

(5) வங்கிகள் வங்கியியத் தொழில்மட்டும் புரிகின்றன. நாட்டு வங்கியர், வங்கியியத் தொழில் மட்டுமின்றி இதர் தொழில் களையும் இணைத்துப் புரிகின்றனர்.

(6) நாட்டு வங்கியர் அசையாச் சொத்துகளையும் பிணையமாகப் பெற்றுக் கடன் வழங்குகின்றனர். ஆனால், பொதுவாக வணிக வங்கிகள் அசையாச் சொத்துகளைப் பிணையமாகப் பெற்றுக் கடன் வழங்குவதில்லை.

(7) வணிக வங்கிகள் திரட்டும் வட்டி வீதத்தை ஒப்பிடு மிடத்து நாட்டு வங்கியர் திரட்டும் வட்டிவீதம் மிக அதிகமாகும்.

(8) வணிக வங்கிகளைப் போலன்றி நாட்டு வங்கியர் பெருமளவில் தொழில் நிறுவனங்களுக்கு நீண்ட காலக் கடன் வழங்குகின்றனர்.

(9) அயல்நாட்டு வாணிபத்தில் வணிக வங்கிகள் பெரும் பங்கேற்கின்றன. அயல்நாட்டு வாணிபத்தில் நாட்டு வங்கியர் களுடைய பங்கு மிகக் குறைவானதாகும்.

(10) வணிக வங்கிகள் உரிய முறையில் கணக்குகள் எழுதி வருகின்றன. அவற்றுடைய கணக்குகள் ஆண்டுதோறும் தகுதிபெற்ற தணிக்கையாளர்களால் தணிக்கை செய்யப்படு கின்றன. ஆனால், நாட்டு வங்கியர்களுடைய கணக்குகள் அவ்வாறு தணிக்கை செய்யப்படுவதில்லை என்பதுடன்கூட, ஒருசில நாட்டு வங்கியர் தொழில் நுட்ப முறையில் கணக்குகள் வைத்துக்கொள்வதில்லை என்றுகூடக் கூறலாம்.

(11) வணிக வங்கிகள் ரிசர்வ் வங்கியுடன் நெருங்கிய தொடர்புகொண்டு அவற்றுடைய கட்டுப்பாட்டின் கீழ்ச் செயலாற்றுகின்றன. ஆனால், நாட்டு வங்கியர் ரிசர்வ் வங்கியுடன் அவ்வாறு நெருங்கிய தொடர்பு கொண்டிருப்பதில்லை.

நாட்டு வங்கியரின் பணிகள்: (அ) கடனுறுதிச் சீட்டினைப் பிணையமாகக்கொண்டு கடன் வழங்குகின்றனர். எனவே, நாட்டு வங்கியரின் முதல்பணி கடன் வழங்குவதேயாகும். பொதுவாகப் பிணையங்களைப் பெற்றே கடன் வழங்குகின்றனர் எனினும் ஒருசில சந்தர்ப்பங்களில் பிணையமின்றியும் கடனளிக்கின்றனர். ஆனால், பிணையமற்ற கடனுக்குச் சற்றுக் கூடுதலாக வட்டிதிரட்டுகின்றனர். கடன் வழங்க நாட்டு வங்கியர் கடைப்பிடிக்கும் முறை ஒரே தன்மையுடையதாக இருப்பதில்லை. ஒருசில நாட்டு வங்கியர் கடன்பெற விழைபவர்களிடமிருந்து கையொப்பமிட்ட இரசீதினைப் பெற்றுக்கொண்டுகூடக் கடன் வழங்குகின்றனர். ஒருசில நாட்டு

வங்கியர் நிலம், வீடு போன்ற அசையாச் சொத்தைப் பிணைய மாகக் கொண்டு கூடக் கடன் வழங்குகின்றனர்.

வட்டி வீதம் இடத்திற்கு இடம் மாறுபடுகின்றது. ஒரே நாட்டு வங்கியர்கூட வாடிக்கைக்காரருக்கேற்றவாறு வெவ்வேறு வீதத்தில் வட்டி திரட்டுகின்றனர். பொதுவாக அவர்கள் விவசாயி களுக்கு நேரடியாகக் கடன் கொடுப்பதில்லை, தொழில் நிறுவனங் களுக்கும் வாணிப நிறுவனங்களுக்குமே நேரிடையாகக் கடன் கொடுக்கின்றனர்.

(ஆ) நாட்டு வங்கியர் ஆற்றும் இரண்டாவது பணி வைப்புத் தொகை பெறுதலேயாகும். மக்களிடையே உள்ள சேமிப்புத் தொகையினைத் திரட்டி உற்பத்திக்காகப் பயன்படுத்துகின்றனர். இவர்கள் கேட்பு வைப்பு, தவணை வைப்பு ஆகிய இருவகையான வைப்புகளையும் பெறுகின்றனர்.

(இ) உண்டியல்களைக் கழிவுசெய்து பண உதவியளித்தல் நாட்டு வங்கியர்களுடைய மூன்றாவது பணியாகும்.

(ஈ) இப் பணிகளைத் தவிர வாணிபத்தினையும் வங்கியியல் தொழிலுடன் இணைத்துப் புரிகின்றனர். வணிக வங்கிகள், கூட்டுறவு நிறுவனங்கள் ஆகியவை காரணமாக நாட்டு வங்கிய ருடைய வங்கியியல் தொழில் கணிசமான அளவில் பாதிக்கப்பட்டு விட்டதால் இவர்கள் நகை வியாபாரம், மருந்து வியாபாரம் போன்ற இதர வகை வாணிபத்தில் ஈடுபடத்தொடங்கியுள்ளனர்.

தொழிலாற்றும் முறையும் இடங்களும் : பொதுவாக நாட்டு வங்கியர் நகர்ப்புறங்களிலேயே தம் தொழிலை நடத்தி வருகின்றனர். எங்கெங்கு வணிக வசதிகள் பெருகியுள்ளனவோ அங்கங்கெல்லாம் நாட்டு வங்கியர் சுறுசுறுப்பாக இயங்கி வருகின்றனர். பொதுவாக மேற்கிந்தியாவிலும், தென்னிந்தியா விலும் நாட்டு வங்கியர் பரந்து காணப்படுகின்றனர். கடனளிக்க அவர்கள் கடைப்பிடிக்கும் முறை எளிமை வாய்ந்தது. அவர்கள் கடன் பெறுபவர்களுடன் நேரடித் தொடர்பு கொள்ளாமல் வட்டித் தொழிலர் மூலம் கடனை வழங்குகின்றனர். மாறிவரும் சூழ் நிலைக் கேற்பத் தங்கள் தொழில் முறைகளை மாற்றிக்கொள்வது இவர்களுடைய தொழிலின் முக்கிய தன்மையாகும்.

நாட்டு வங்கியர்களில் முக்கியமானவர்கள் மூல்தானியர்கள், குஜராத்திய ஷராப்புகள், நாட்டுக்கோட்டைச் செட்டியார்கள், கல்லிடைக்குறிச்சிப் பிராமணர்கள், மார்வாடிகள் ஆகியோர். 1972ஆம் ஆண்டு வங்கியியக்குழு அறிக்கையின்படி, பம்பாயில்

மட்டும் 253 மூல்தானியர் நிறுவனங்களும், இந்தியா முழுவதும் ஏறத்தாழ 400 நிறுவனங்களும் செயலாற்றுகின்றன. இவர்கள் சிறு, நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்குத் தேவையான கடன் வசதிகளை அளித்து வருகின்றனர். இவர்கள் பெரும்பாலும் பிணையமற்ற கடன் வசதிகளையே அளிக்கின்றனர். இவர்கள் தங்களுடைய சொந்த முதல் தவிரத் தங்களுடைய உறவினர்கள், நண்பர்கள் ஆகியோரிடமிருந்தும் வைப்புகளைப் பெறுகின்றனர்.

குஜராத்திய ஷராப்புகள் பம்பாய், அகமதாபாத் ஆகிய பகுதிகளில் செயலாற்றி வருகின்றனர். இவர்களிலேயே இரு பிரிவினர் உண்டு. ஒரு பிரிவினர் வங்கியியத் தொழிலில் மட்டும் ஈடுபட்டுள்ளவர்கள், மற்றொரு பிரிவினர் வங்கியியத் தொழிலுடன் கழிவு முகமைத் (Commission Agences) தொழிலையும் புரிபவர்கள். வங்கியியத் தொழிலில் மட்டுமீடுபட்டுள்ள ஷராப்புகள் வைப்புகளை ஏற்றுக்கொள்கின்றனர். பிணையம்பெற்றும், பிணையமெதுவுமின்றியும் கடன்களை வழங்குகின்றனர். ஒருசில ஷராப்புகள் கூட்டாண்மை அமைப்பு மூலமும் வங்கியியத் தொழிலை மேற்கொண்டுள்ளனர். மூல்தானியர்களைப் போலன்றி இவர்கள் வணிக வங்கிகளிடமிருந்து கடன் பெறுவதில்லை.

நாட்டுக்கோட்டைச் செட்டியார்களும், கல்லிடைக் குறிச்சிப் பிராமணர்களும் தென்னிந்தியாவில் நெடுங்காலமாக வங்கியியத் தொழில் புரிபவர்கள் ஆவர். கல்லிடைக்குறிச்சிப் பிராமணர்கள் திருநெல்வேலி மாவட்டத்தில் மட்டுமே செயலாற்றும் நிலையில், நாட்டுக்கோட்டைச் செட்டியார்கள் மதுரை, இராமநாதபுரம், தஞ்சை, திருச்சி ஆகிய மாவட்டங்களிலும், பிரான்சு, இந்தோசீனா, பர்மா, சிலோன் போன்ற வெளி நாடுகளிலும் தொழில் புரிகின்றனர். இவர்கள், வைப்புகள் ஏற்பது, கடன் கொடுப்பது, உண்டியல் எழுதுவது, தள்ளுபடி செய்து கொடுப்பது போன்ற பணிகளில் ஈடுபட்டுள்ளனர். கூட்டுறவு வங்கிகள் முழுமுரமாகச் செயல்படத் தொடங்கிவிட்டதால் இவர்களும் வங்கியியத் தொழிலை விட்டு வேறு தொழில்களில் நாட்டம் காட்டத் தொடங்கியுள்ளனர்.

மார்வாடிக்காரர்கள் அஸ்ஸாம் மாநிலத்தில் தொழில் புரிபவர்கள். இவர்கள், தேயிலைத் தோட்டங்களுக்குக்குறுகிய காலக்கடன் வசதியளித்து வருகின்றனர். மேலும், தேயிலையை வாங்கும், விற்கும் பணிகளையும் மேற்கொள்கின்றனர். தேயிலைத் தோட்டக்காரர்கள் கொண்டுவரும் உண்டியல்களைத் தள்ளுபடி செய்து, அவர்களுக்குக் கடன் வசதி அளித்து வருகின்றனர்.

நாட்டு வங்கியர் தங்கள் தொழிலை இந்தியாவில் எவ்வித இடர்ப்பாடுமின்றிப் பத்தொன்பதாம் நூற்றாண்டுவரை செய்து வந்தனர். எனவே, இவர்கள், இந்தியத் தொழில்நிதி வரலாற்றில் முக்கிய இடத்தைப் பெற்றுள்ளனர். ஆனால், நமது நாடு ஆங்கிலேயரின் ஆதிக்கத்திற்குட்பட்ட பிறகு, அவர்கள் மேலை நாட்டு வங்கியியமுறையினை வளர்ப்பதற்கு உரிய நடவடிக்கைகள் எடுத்துக்கொண்டதன் காரணமாக நாட்டு வங்கியிய முறை இந்தியாவில் நலிவுறத் தொடங்கியது, அரசின் ஆதரவும், மேலை நாட்டு முறையில் தொடங்கப்பட்ட வணிக வங்கிகளுக்கே கிட்டியது. வணிக வங்கிகள் தீவிரமாகச் செயல்பட்டத் தொடங்கியதாலும் நாட்டு வங்கியரிடம் காணப்பட்ட ஒருசில குறைபாடுகளாலும், நாட்டு வங்கியரின் முக்கியத்துவம் குறையத் தொடங்கியது.

நாட்டு வங்கியரிடம் காணப்பட்ட குறைபாடுகள் :

(1) நாட்டு வங்கியர் மிகப் பழமையான வங்கியிய முறைகளைக் கடைப்பிடித்தனர். அவர்களுக்குள் போட்டியும் பொறாமையும் நிலவியது. தொழில் நடவடிக்கைகளை மிக இரகசியமாகக் காப்பாற்றி வந்தனர். எனவே, அவர்கள், மக்களிடையே முழு நம்பிக்கைபெற முடியவில்லை.

(2) நாட்டு வங்கியர், பொதுமக்களிடமிருந்த சேமிப்பை வைப்புத்தொகையாகத் திரட்டப் போதிய நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளவில்லை. எனவே, மக்களுடைய சேமிப்பு உற்பத்திக்குப் பயன்படுத்தப்படாதிருந்தது.

(3) அவர்கள் தங்கள் தொழிலை முக்கியமாக ரொக்க அடிப்படையில் செய்து வந்ததால், உண்டியல் முறை வளர்ச்சி பெறவில்லை.

(4) இவர்கள் வணிக வங்கிகளிடம் நேரடித் தொடர்பு கொள்வதை விரும்பவில்லை. எனவே, நாட்டில் இரு பிரிவான பணச்சந்தை இருந்துவந்தது.

(5) நாட்டு வங்கியர்களை மைய வங்கி கட்டுப்படுத்த முடியவில்லை.

(6) அவர்கள் திரட்டிய வட்டி வீதம் மிக அதிகமாக இருந்தது.

(7) இவர்கள் வங்கியியத் தொழிலையும், இதரவகைத் தொழிலையும் இணைத்து நடத்துகின்றனர். அவர்கள் கணக்குகளை உரிய முறையில் எழுதுவதில்லை, அவர்களுடைய கணக்குகள் உரிய முறையில் தணிக்கை செய்யப்படுவதில்லை.

(8) அவர்கள் வழங்கிய கடனைத் திரும்பப்பெறக் கடைப் பிடிக்கும் முறை சில சந்தர்ப்பங்களில் கொடூரமானதாக அமை கின்றது.

(9) அவர்கள் நிரந்தரமான அலுவலகங்களையும் நிரந்தரமான பணி நேரத்தினையும் கொண்டிலர்.

(10) இவர்கள் விவசாயிகளுக்கு நேரடியாகக் கடன் கொடுப்பதில்லை.

(11) கடன் கொடுப்பதில் அளவுக்குமீறி எச்சரிக்கையாகச் செயல்படுகின்றனர். எனவே, இவர்களிடமிருந்து கடன் பெறுதல், வட்டித் தொழிலர்களிடமிருந்து கடன் பெறுவதைவிடக் கடினம் நிறைந்ததாகும்.

(12) இவர்கள் கடனுளிகளிடமிருந்து பெறும் பிணைகளுக்குப் போதுகாப்பில்லை.

(13) வட்டி வீதம் நிர்ணயிப்பதில் நாட்டு வங்கியர் குறுகியகாலக் கடனிற்கும், நீண்டகாலக் கடனிற்கும் எவ்வித வேறுபாடும் காட்டுவதில்லை. நீண்டகாலக் கடனிற்கும், குறுகிய காலக் கடன் வீதத்திலேயே வட்டி திரட்டுகின்றனர்.

(14) வட்டித் தொகையை அசலிலிருந்து ஆரம்பத்திலேயே கழித்துக் கொள்கின்றனர்.

(15) போதிய மூலதனமின்றி இவர்கள் தொழில் தொடங்கி விடுவதால், கடனுளிகளால் கொடுக்கப்படும் பிணையங்களை, வணிக வங்கிகளிடம் ஈடுவைத்துக் கடன் பெறுகின்றனர்.

(16) கடனுளிகள் கடனைத் திருப்பிச் செலுத்தும்போது உரிய முறையில் அவர்களுக்கு இரசீது கொடுப்பதில்லை.

நாட்டு வங்கியர் நலிவுறக் காரணங்கள் :

(1) மக்களால் ஏற்றுக்கொள்ளப்படாத பழைய தொழில் முறைகளைக் கடைப்பிடிக்கின்றனர்.

(2) நாட்டு வங்கியர் செய்யும் தவறான செய்கைகள் திரிக்கப்பட்டு மிகைப்படுத்தப்பட்டுள்ளன.

(3) கூட்டுறவு நிறுவனங்கள் மக்களுடைய பல்வேறு கடன் தேவைகளை நிறைவுபெறச் செய்துவிடுகின்றன.

(4) நாட்டு வங்கியருக்கிடையே போட்டியும் பொறுமையும் நிலவி அவர்களுக்கிடையே ஒற்றுமை இல்லாததும் ஒரு காரண மாகும்.

(5) இரகசியம் என்னும் கொள்கையில் பொதுமக்களிடம் வெளிப்படையாக அவர்களுடைய நடவடிக்கைகளை விளக்காதது.

(6) உண்டியல்கள் மீதான மிக அதிக முத்திரைவரி (Stamp duty) நாட்டு வங்கியரின் தொழிலைப் பாதித்துவிட்டது.

(7) கடன் பணத்தைத் திரும்பிப்பெற நாட்டு வங்கியர் செலவழிக்க வேண்டிய தொகைகளுக்கு நாள் அதிகமாகிவிட்டது.

(8) வங்கியியல் இல்லாத இதர வகையான தொழில்கள் இன்று மேலும் அதிகமாக இலாபகரமாக அமைந்ததும் ஒரு காரணமாகும்.

நாட்டு வங்கியரின் முக்கியத்துவம்: சிறு தொழில் நிறுவனங்களுக்குத் தேவையான கடன்தொகை முழுவதும் வணிக வங்கிகள் அளிக்கமுடியாததாதலின் நாட்டு வங்கியரிடம் காணப்படும் குறைபாடுகளை நீக்க உரிய நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளுதல் அவசியமாகும். அவர்களுடைய குறைபாடுகளைக் களைந்து அவர்களைப் பொது வங்கியிய முறையுடன் இணைத்தல் நாட்டு வளத்துடன் பிணைந்துள்ளது. கீழ்க்காணும் காரணங்களால் நாட்டு வங்கியரை அறவே நீக்குதல் இயலாததெனக் கூறலாம்:

(1) இவர்கள் சிறு தொழில் நிறுவனங்களுக்குப் பெருமளவில் கடன் வழங்கி வருகின்றனர். இவர்கள் இல்லையேல் சிறு தொழில் நிறுவனங்களுக்குத் தேவையான கடன் வசதி இல்லாது போகும் எனக்கூடக் கூறலாம்.

(2) இவர்கள் திரட்டும் வட்டிவீதத்தைப் பொறுத்தவரை கூட, இவர்களுடைய வட்டிவீதத்திற்கும், வணிக வங்கிகளுடைய வட்டிவீதத்திற்கும் மிகுந்த வேறுபாடு இருந்தாலும் இவர்கள் போதிய அளவில் வைப்புத்தொகை திரட்டினால் அவர்களும் குறைந்த வட்டிவீதத்தில்கூடக் கடன் வழங்க முடியும். ஆனால், தவறான அமைப்புமுறை காரணமாக அவர்களால் போதிய வைப்புத்தொகை திரட்ட முடியவில்லை.

(3) இவர்கள் பரம்பரையாக, நிரந்தரமாக உண்டியலில் ஈடுபட்டு வருகின்றனர். எனவே, இவர்களுடைய செயலறிவு இந்தியாவுக்கு இன்று மிக முக்கியமாகத் தேவைப்படும் மாற்றுச் சீட்டுச் சந்தையினை உருவாக்கப் பேருதவியாக விருக்கும்.

(4) கிராம மக்கள், சரியான வேலை நேரம், உரிய முறையில் பணம் பெறுதல் போன்ற கட்டுப்பாடுகளுக்கு அப்பாற்பட்டவர்கள். எனவே, இக் கட்டுப்பாட்டு முறைகளைக் கடைப்பிடிக்காத நாட்டு வங்கியர்களிடமிருந்து விவசாயிகள் எளிதில் கடன்பெற முடியும்.

(5) பிணையமற்றவர்கள், கடன்பெற இருக்கும் இருவழி களில் நாட்டு வங்கியர்களிடம் கடன்பெறுதலுமொன்றாகும். மற்றொருவழி முன்னரே குறிப்பிட்டபடி வட்டித் தொழிலர்களிட மிருந்து கடன் பெறுதல்.

நாட்டு வங்கியர்களின் புனரமைப்பு : இந்தியா இன்றுள்ள நிலையில் நாட்டு வங்கியர் பணிகளை அறவே அகற்றிவிட முடியாது. சிறு தொழில் நிறுவனங்கள் இவர்கள் உதவியின்றிப் போதிய கடன்பெற முடியாது எனும் நிலையில், அவர்களிடமுள்ள குறைபாடுகளைக் களைந்து அவர்களைப் புனரமைத்தல் இன்றியமை யாததாகும். அவர்களைப் புனரமைக்கும் வகையில் பல்வேறு வல்லுநர்களால் கீழ்க்காணும் திட்டங்கள் கொடுக்கப்பட்டுள்ளன :

(1) நாட்டு வங்கியர் உரிமம் பெறவேண்டுமென்று கட்டாயப்படுத்தப்பட்டால் அவர்கள், தொழிலை விட்டுவிடுவார் களாதலின், உரிமம் பெற்ற நாட்டு வங்கியர்களுக்கு, அவர்கள் வழங்கிய கடனைத் திருப்பப்பெற உதவியளித்தல், ரிசர்வ் வங்கி கடன் வசதி அளித்தல் போன்ற ஊக்குவிப்புகள் மூலம் அவர்கள் தங்கள் விருப்பப்படியே உரிமம் பெறும்படி தூண்டலாம்.

(2) காசோலைகளுக்கான பணத்தினையும், மாற்றுச் சீட்டு களுக்கான பணத்தையும் திரட்டும் வகையில், ரிசர்வ் வங்கியின் கிளைகளும், ஸ்டேட் வங்கியின் கிளைகளும் இல்லாத இடங்களில் நாட்டு வங்கியரை அந்த வங்கிகளின் முகவர்களாக நியமிக் கலாம்.

(3) ஒருசில நிபந்தனைகளை நாட்டு வங்கியர் பூர்த்தி செய்தால் அவர்களை ரிசர்வ் வங்கியின் உறுப்பினர்களாக்கி, அவர் களுக்குக் கடன் வசதிகளும், மறுகழிவு வசதிகளும் அளிக்கப்பட வேண்டும்.

(4) நாட்டு வங்கியர்களை வங்கியியத் தொழிலில் மட்டும் ஈடுபடும் வகையில் தூண்டுதல் வேண்டும், அவர்களுடைய வங்கியியல் அல்லாத இதர தொழில்களை விட்டுவிடுமாறு அவர் களைக் கேட்டுக்கொண்டு, அவர்கள் அவ்வாறு வங்கியியல் தொழிலில்மட்டும் ஈடுபடுவார்களேயானால் அரசு அவர்களை அரசு வங்கியர்களாக நியமிக்கத் தயங்குதல் கூடாது.

(5) அனைத்திந்திய வங்கியர் சங்கத்தில் நாட்டு வங்கியர் களும் உறுப்பினர்களாக அனுமதிக்கப் படவேண்டும்.

(6) நாட்டு வங்கியர் ஒன்றுக இணைந்து கூட்டுப்பங்கு வங்கிகள் அமைக்கலாம்.

(7) அவ்வாறு அமைப்பது கடினமானதாக அமைந்தால் நாட்டு வங்கியர்கள் செயல்பட்டு வரும் வணிக வங்கிகளில் பங்குநர்களாகலாம்.

(8) இவர்கள் வணிக வங்கிகளின் முகவர்களாக நியமிக்கப் படலாம்.

நாட்டு வங்கியரும் ரிசர்வ் வங்கியும்: மைய வங்கியக் குழுவின் பரிந்துரைகளையும், இதர குழுக்களின் பரிந்துரைகளையும் செயல்படுத்தும் வகையில் ரிசர்வ் வங்கி 1937ஆம் ஆண்டு, நாட்டு வங்கியர்களுடன் நேரடித் தொடர்புகொள்ளும் வகையில் திட்டம் ஒன்றினைத் தீட்டியது. அத் திட்டத்தின்படி நாட்டு வங்கியர் கீழ்க்காணும் சலுகைகளைப் பெறுவர்:

(i) நாட்டு வங்கியியர் ரிசர்வ் வங்கிடம் தங்களுடைய பெயர்களைப் பதிவு செய்துகொள்ளலாம்.

(ii) அவர்கள் ரிசர்வ் வங்கியில் கணக்குத் தொடங்கிக் கொள்ளலாம்.

(iii) அவர்கள் ரிசர்வ் வங்கியிடமிருந்து மறுகழிவு வசதிகள் பெறத் தகுதிபடைத்தவர்களாக்கப்படுவர்.

(iv) அரசுப் பத்திரங்களைப் பிணையாகக் கொடுத்து ரிசர்வ் வங்கியிடமிருந்து கடன் வசதிகள் பெறமுடியும்.

(v) அட்டவணையிலிட்ட வங்கிகளைப் போன்றே நாட்டு வங்கியரும் பணம்மாற்றும் வசதிகளை ரிசர்வ் வங்கியிடமிருந்து பெறமுடியும்.

ஆனால், ரிசர்வ் வங்கியிடம் தங்களைப் பதிவு செய்துகொண்டு மேற் குறிப்பிட்டுள்ள நன்மைகளை அடைய விரும்பும் நாட்டு வங்கியர் கீழ்க்காணும் நிபந்தனைகளைப் பூர்த்திசெய்தல் வேண்டும்:

(i) அவர்கள் வங்கியியத் தொழிலையும், இதர தொழிலையும் இணைக்காது வங்கியியத் தொழிலில்மட்டும் ஈடுபடவேண்டும்.

(ii) ஐந்தாண்டுக் காலத்திற்குள் அவர்கள் ஒவ்வொருவரும் ரூ. ஐந்து இலட்சம் தொகையாவது நடைமுறை முதலாகப் பெறுதல் வேண்டும்.

(iii) அவர்கள் தங்களுடைய கணக்குகளைச் சரியான முறையில் எழுதி அவற்றைத் தகுந்த தணிக்கையாளர்களைக் கொண்டு தணிக்கை செய்துகொள்ளுதல் வேண்டும்.

(iv) அட்டவணையிட்ட வங்கிகளைப் போன்று நாட்டு வங்கியர்களும் ரிசர்வ் வங்கிக்குக் குறிப்பிட்ட காலத்திற்கொரு முறை தங்கள் நடவடிக்கைகளைப் பற்றிய அறிக்கையினை அனுப்பி வைத்தல் வேண்டும்.

(v) ரிசர்வ் வங்கியின் அலுவலர்களைத் தங்கள் கணக்குகளை ஆய்வுசெய்ய அனுமதிக்க வேண்டும்.

(vi) பொதுமக்கள் இவர்களுடைய நடவடிக்கைகளை நன்கு அறிந்துகொள்ளும் வகையில் இவர்கள் தங்களுடைய கணக்கு களைச் செய்தித்தாட்கள் மூலம் வெளியிடவேண்டும்.

(vii) இவர்கள் பெருமளவில் வெற்றியுடன் செயல்பட ரிசர்வ் வங்கி கேட்கும் விவரங்களை அவ்வப்போது அனுப்பிவைத்தல் அவசியமாகும்.

(viii) நாட்டு வங்கியர்கள் கூட்டாண்மை மூலம் தொழில் புரிந்தால், அவர்களைப்பற்றிய முழு விவரங்களையும் ரிசர்வ் வங்கி கேட்கும்போது அதற்கு அனுப்புதல் வேண்டும்.

ஆனால், பெருப்பாலான நாட்டு வங்கியர், இதர தொழில் களை வங்கியியத் தொழிலுடன் இணைக்காமை, தங்களுடைய நடவடிக்கைகளைக் குறித்த கணக்குகளை வெளிப்படையாக வெளியிடுதல் போன்ற நிபந்தனைகளுக்கு உட்படாத காரணத் தினால் இத் திட்டம் கைவிடப்பட்டது.

வங்கியியக் குழுவின் பரிந்துரைகள்: 1972ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட வங்கியியக் குழுவின் அறிக்கை நாட்டு வங்கியர்களின் நிலையினை உயர்த்தும் வகையில் கீழ்க்காணும் பரிந்துரைகளை வெளியிட்டுள்ளது:

(1) நாட்டு வங்கியர் தொடர்ந்து தொழில் நடத்தும் வகையில் தங்களுடைய முழு விவரங்களையும் கொடுத்து ஒரு சான்றிதழ் பெறுதல் வேண்டும். அவர்கள் வங்கியியத் தொழிலில் மட்டும் ஈடுபடவேண்டும். நாட்டு வங்கியர்களுடைய வங்கியியச் சொத்துகளையும் பொறுப்புகளையும் தனித்தனியாகப் பிரித்து, அதாவது அவர்களுடைய தனிப்பட்ட சொத்துகளினின்றும் அவை பிரித்துக் காட்டப்பட வேண்டும்.

(2) நாட்டு வங்கியர்களை ரிசர்வ் வங்கி கண்காணிப்பதும், மேற்பார்வை செய்வதும், ஆய்வு செய்வதும் நடைமுறையில் இயலாது ஆதலின், இப் பொறுப்பினை ரிசர்வ் வங்கி அப் பகுதியி லுள்ள பெரும் வணிக வங்கியிடம் ஒப்படைத்தல் வேண்டும்.

(3) ரிசர்வ் வங்கிக்கும், நாட்டு வங்கியருக்குமிடையே நேரடித் தொடர்பு ஏற்படுதல் என்பது தேவையற்றது என்பது மட்டுமன்று, நடைமுறையில் இயலாததும்கூட. எனவே, நாட்டு வங்கியர் ஒழுங்கமைதி கொண்ட வங்கியியப் பிரிவுடன் வணிக வங்கிகள்மூலம் இணைக்கப் படவேண்டும். வட்டிவீதம் குறித்து வணிக வங்கிகளுக்கும், நாட்டு வங்கியருக்குமிடையே ஒருமித்த கருத்து நிலவுதல் வேண்டும். இவ் விருவகை நிறுவனங்களும் வெவ்வேறு வகையான கடனளிகளுக்கு வெவ்வேறு வட்டி வீதத்தில் கடனளிக்கலாம் என்ற கருத்துத் தெரிவிக்கப்பட்டது.

(4) வாணிபத்தில் ஈடுபடாமலும், குறைந்தது ரூ. ஒரு இலட்சத்தினை மூலதனமாகக்கொண்டு தொழில் தொடங்கியும் உரிய முறையில் கணக்குகள் எழுதியும், ரிசர்வ் வங்கிக்குத் தங்கள் நடவடிக்கைகள் குறித்து அறிக்கைகள் அனுப்பியும், நாட்டு வங்கியர் வணிக வங்கிகளிடமிருந்து மறுகழிவு வசதியினைப் பெறும் தகுதியினை அடைதல் வேண்டும்.

(5) வட்டித் தொழிலர் சட்டத்தினை நாட்டு வங்கியர்மீதும் கட்டாயமாகச் செயல்படுத்தி அவர்கள் என்ன நிபந்தனைகளை யொட்டிக் கடனளிகளுக்குக் கடன் வழங்குகின்றனர் என்பதனை எழுத்து மூலமாக அவர்களுக்கு விளக்குதல் வேண்டும்.

(6) நாட்டு வங்கியர்களுடைய நிதிய அறிக்கைகளை அலசி ஆராயும் பொறுப்பு அப் பகுதியிலுள்ள வணிக வங்கிகளிடமே ஒப்படைக்கப் படவேண்டும்.

(7) வணிக வங்கிகள் நாட்டு வங்கியர்களைப் பதிவு செய்யப்பட்ட நிறுமங்களாக மாற்ற ஆவன செய்தல் நலம்.

இந்தியா இன்று உள்ள நிலையில் நாட்டு வங்கியர்களுடைய பணி தவிர்க்க முடியாததாகும். எனவே, குழுவின் பரிந்துரைகளின்படி நாட்டு வங்கியர்களைச் செப்பனிட்டுத் திருத்தி அவர்களை உரிய முறையில் பயன்படுத்திக் கொள்வதன்வழி நாட்டுப் பொருளாதார நிலையினை உயர்த்திக் கொள்ளலாமென்பதில் ஐயமில்லை.

வினாக்கள்

(1) இந்திய விவசாயிகளுடைய கடன் தொல்லைக்கான காரணங்களை விளக்குக.

(2) வணிக வங்கிகள் வேளாண்மைக்கு உரிய அளவில் கடன் வசதி அளிக்காததன் காரணங்கள் யாவை?

(3) விவசாயிகளுக்குக் கடன் வழங்கும் முகமைகள் எவை எவை?

(4) வட்டித் தொழிலர் என்பவர் யார்? அவருடைய சிறப்புத் தன்மைகள் யாவை?

(5) வட்டித் தொழிலர்களை வகைப்படுத்துக.

(6) வட்டித் தொழிலர் கடைப்பிடிக்கும் தவருன முறைகள் யாவை?

(7) வட்டித் தொழிலர்கள் வட்டி தீரட்டும் முறையினை விளக்கிடுக.

(8) வட்டித் தொழிலர் கூடுதலான வீதத்தில் வட்டி திரட்டுவதற்கான காரணங்கள் யாவை?

(9) வட்டித் தொழிலர்களைக் கட்டுப்படுத்தும் சட்டங்களின் சரத்துகளை விவரிக்க.

(10) வட்டித் தொழிலர் நலிவடைந்து வருவதன் காரணங்கள் யாவை?

(11) வட்டித் தொழிலர்களைப் புனரமைக்கத் தீட்டப்பட்டுள்ள திட்டத்தினை விளக்கிடுக.

(12) வட்டித் தொழிலர்களுக்குக் கட்டாயமாக உரிமம் வழங்கப்படுவது குறித்த திட்டத்தின் விளைவுகளை ஆய்க.

(13) உரிமம் பெறும் வட்டித் தொழிலர்களுக்கு வழங்கப்படும் சலுகைகள் யாவை?

(14) வட்டித் தொழிலரின் எதிர்காலம்பற்றிக் குறிப்பு வரைக.

(15) நாட்டு வங்கியர் யாவர்? நாட்டு வங்கியரின் வகைகள் யாவை?

(16) நாட்டு வங்கியரின் சிறப்புத் தன்மைகளை விளக்குக.

(17) வட்டித் தொழிலரையும், நாட்டு வங்கியரையும் ஒப்பிடுக.

(18) நாட்டு வங்கியருக்கும், வணிக வங்கிகளுக்குமிடையே உள்ள வேறுபாடுகள் யாவை?

(19) நாட்டு வங்கியரின் பணிகளை விவரிக்க.

(20) நாட்டு வங்கியரிடம் காணப்பட்ட குறைபாடுகள் யாவை?

(21) நாட்டு வங்கியர் நலிவுற்று வருவதற்கான காரணங்களை விளக்குக.

(22) 'நாட்டு வங்கியர் இந்தியாவைப் பொறுத்தவரை தவிர்க்க முடியாதவர்கள்' இக் கருத்து ஏற்றுக்கொள்ளத் தக்கதா—இல்லையா என்பதனைக் காரணங்களுடன் விளக்குக.

(23) நாட்டு வங்கியர்களின் புனரமைப்புக்கான திட்டத்தினை விளக்குக.

(24) நாட்டு வங்கியரைப் புனரமைக்கும் வகையில் வங்கியியக் குழு கொடுத்துள்ள பரிந்துரைகள் யாவை?

14. வணிக வங்கிகளின் புதிய திட்டங்கள்

வணிக வங்கிகளின் கோட்பாடும், விதிமுறைகளும் நிலையாக இருத்தல் கூடாது. மாறும் சூழ்நிலைக்கேற்பத் தங்கள் நிலைகளை மாற்றிக்கொள்ளுதல் வேண்டும். அரசும் மாறும் சூழ்நிலைகளுக்கு ஏற்பச் சட்டத்தை மாற்றி வணிக வங்கிகளைக் கட்டுப்படுத்தி வருகின்றது. இவ்வத்தியாயத்தில் அரசால் இயற்றப்பட்ட புதிய சட்டங்களையும், வங்கியால் மேற்கொள்ளப்படும் புதிய திட்டங்களையும் விளக்கலாம்.

1. சமூகக் கட்டுப்பாடு : வணிக வங்கிகள் தனியார் துறையில் இயங்கி வருவதால் அவை நாட்டு வளர்ச்சிக்கு உறுதுணையாக இல்லை என்றும், நாட்டு நலனிற்கு எதிராகப் பணி புரிகின்றன என்றும் கருத்துத் தெரிவிக்கப்பட்டது. எனவே, வணிக வங்கிகள் எல்லாவற்றையும் நாட்டுடைமை ஆக்க வேண்டுமெனக் கருத்துத் தெரிவிக்கப்பட்டது. இக் கருத்துக்கு ஆதாரமாகக் கீழ்க் கண்ட காரணங்களும் கொடுக்கப்பட்டன :

(அ) வணிக வங்கிகள் பொருளாதாரத் திறன் ஒரே இடத்தில் குவிய வழிவகுக்கின்றன.

(ஆ) வங்கிகளின் நிர்வாகத்தில் தொடர்பு கொண்டுள்ளவர்கள் வங்கிப் பணத்தைத் தாங்கள் தொடர்பு கொண்டுள்ள தொழில் நிறுவனங்களில் முதலீடு செய்கின்றனர்.

(இ) வங்கிகள் வேளாண்மை, சிறு தொழில் நிறுவனங்கள் போன்றவற்றிற்குப் போதிய அளவு கடன் கொடுப்பதில்லை.

(ஈ) வங்கிகளின் நிதி பதுக்கல், ஊகவணிகம் போன்ற காரணங்களுக்காகவும் பயன்படுத்தப் படுகின்றது.

இக் குறைபாடுகளைக் களையும் வகையில் வங்கிகள் யாவும் நாட்டுடைமை ஆக்கப்பட வேண்டும் எனத் தீவிரமான கருத்து

தெரிவிக்கப்பட்டது. இருப்பினும் வங்கிகளுக்குத் தங்களைத் திருத்திக்கொள்ள ஒரு சந்தர்ப்பம் கொடுக்கும் முகத்தான் வேண்டி இத் திட்டம் ஒத்திப் போடப்பட்டு வங்கிகள்மீது சமூகக் கட்டுப்பாடு விதிக்கப்பட்டது. இத் திட்டத்தினை அப்போதைய மைய அரசின் நிதி அமைச்சராக இருந்த திரு. மொரார்ஜி தேசாய் அவர்கள் 1967ஆம் ஆண்டு டிசம்பர்த் திங்கள் 14ஆம் நாள் பாராளு மன்றத்தில் விளக்கினர்.

இத் திட்டத்தின் முக்கிய குறிக்கோள்களாவன :

(அ) வங்கிகளின் முறிவைத் தடுப்பதன்வழி, வங்கிய முறையினைப் பலப்படுத்தி நாட்டு மக்களிடையே வங்கிகள் குறித்து நம்பிக்கை ஏற்படச்செய்தல்.

(ஆ) வங்கிகளை இதர தொடர்புடைய நிறுவனங்களுடன் கூட்டாகப் பணிபுரியச் செய்து வங்கிகளை உரிய முறையில் வளர்ச்சி பெறச் செய்தல்.

(இ) கிராம மக்களுக்குப் போதிய வங்கி வசதி கிடைக்கச் செய்தல்.

(ஈ) வேளாண்மைக்கும் சிறு தொழில் நிறுவனங்களுக்கும் போதிய கடன்வசதி அளித்தல்.

(உ) அரசின் திட்டங்களைச் செயல்படுத்தும் வகையில் கடன் ஒதுக்கீடு செய்தல்.

(ஊ) அரசின் பணவீக்கக் கைக்கோள்களைச் செயல்படுத்த உதவுதல்.

சமூகக் கட்டுப்பாட்டினை வங்கிகள்மீது செயல்படுத்தப் பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. 1967 ஆம் ஆண்டு டிசம்பர்த் திங்களில் கடன் குழு நிறுவப்பட்டது அவற்றுள் முதலாவதாகும். தொழில், வேளாண்மை. கூட்டுறவு, வங்கியியல், வாணிபம் ஆகிய துறைகளில் இருந்து சார்பாளர்களை உறுப்பினர்களாகக்கொண்ட இக் குழுவின் முக்கியப்பணி கடன் திட்டம் தீட்டுதலே ஆகும். மைய அரசின் நிதி அமைச்சரை இதன் பெரும் தலைவராகவும், ரிசர்வ் வங்கியின் ஆளுநரைத் துணைப் பெருந் தலைவராகவும் இக் குழு கொண்டுள்ளது. வங்கிக் கடன் தேவைகளை அறிதல், வங்கி கடன் கொடுக்க வேண்டிய முக்கியத் துறைகளை நிர்ணயித்தல் போன்றவை இக் குழுவின் பணிகளாகும். இத் திட்டம் 1969 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 1 ஆம் நாள் முதல் செயல்படுத்தப்பட்டது. இத் திட்டத்தின்படி ஒவ்வொரு வங்கியும் கீழ்க்கண்ட விதிகளைக் கடைப்பிடிக்க வேண்டுமென வற்புறுத்தப் பட்டது :

(அ) ஒவ்வொரு வங்கியின் இயக்குநர் அவையிலும் 51 (ஐம்பத்து ஒரு) விழுக்காட்டுக்குக் குறையாத உறுப்பினர்கள் கணக்கியல், பொருளியல், வங்கியியல், கூட்டுறவு, வேளாண்மை, ஆகிய துறைகளில் செயலறிவு கொண்டவர்களாக இருத்தல் வேண்டும்.

(ஆ) ஒவ்வொரு வங்கியும் வங்கியியல் அறிவு கொண்டவரை முழுநேரப் பெரும் தலைவராக நியமித்தல் வேண்டும். ரிசர்வ் வங்கி அவ்வாறு நியமிக்கப்படும் இயக்குநர்களையும், பெருந்தலைவர், உதவிப்பெருந்தலைவர் ஆகியோரையும் ஒருசில குறிப்பிட்ட சந்தர்ப்பங்களில் பதவியினின்று நீக்கும் உரிமை படைத்துள்ளது.

(இ) வங்கிகள், இயக்குநர்களுக்கும், இயக்குநர்கள் தொடர்பு கொண்டுள்ள கூட்டு வணிகத்திற்கும் கடன் வசதியளிப்பது தடுக்கப்பட்டுள்ளது.

(ஈ) வங்கிகளில் நுழைபவரைத் தடைசெய்பவர்கள், வங்கியிலிருந்து வெளியேறுபவர்களைத் தடை செய்பவர்கள், வங்கிகளில் அலுவலகத்தினுள்ளிருந்து பணிசெய்ய மறுக்கும் பணியாளர்கள், வைப்பாளர்களுடைய நம்பிக்கையைக் குலைக்க முயற்சி செய்பவர்கள் ஆகியோர் தண்டிக்கப்படலாம்.

(உ) பெரும் தவறுகளைச் செய்த வணிக வங்கிகளை உடைமையாக்கிக் கொள்ளும் உரிமை மைய அரசுக்குக் கொடுக்கப்பட்டது.

(ஊ) வணிக வங்கிகள் வேளாண்மைக்குக் கடனளிப்பதை ஊக்குவிக்கும் வகையில் வேளாண்மை நிதிக் கூட்டுறு தொடங்கப்பட்டது.

சமூகக் கட்டுப்பாட்டுத் திட்டம் பெருமளவில் வணிகவங்கிகளால் ஏற்றுக்கொள்ளப்பட்டது. சமூகக் கட்டுப்பாட்டுத் திட்டத்தினைச் செயல்படுத்த வணிக வங்கிகள் முயற்சிகள் எடுத்து வந்தன. ஆனால், சமூகக் கட்டுப்பாட்டுத் திட்டத்தின் முழுப்பயன் தெரிவதற்கு முன்னரே அரசு பதினான்கு பெரும் வங்கிகளை நாட்டுடைமையாக்கியது. எனவே, நாட்டுடைமைத் திட்டம் செயல்படுத்தப்பட்டது.

(2) வங்கிகள் நாட்டுடைமையாக்கப்படுதல்: வணிக வங்கிகளைக் கட்டுப்படுத்தும் முகத்தான் வேண்டி வங்கிகளின்மீது சமூகக்கட்டுப்பாட்டுத் திட்டத்தினைச் செயல்படுத்திய மைய அரசு அத் திட்டம் உரிய பயனை அளிக்காது எனக் கருதியதினால், ஆறு திங்களில் அதாவது 1969ஆம் ஆண்டு சூலைத்திங்கள் 19ஆம் நாள், பதினான்கு பெரும் வங்கிகளை நாட்டுடைமையாக்கியது. இது குறித்த மேலும் பல விவரங்களை அடுத்த அத்தியாயத்தில் விளக்கலாம்.

(3) முனைவு வங்கித் திட்டம் (Lead Bank Scheme) 1968ஆம் ஆண்டு அக்டோபர்த்திங்கள் டாக்டர் காட்கில் தலைமையில் அமைக்கப்பட்ட தேசீயக் கடன் அவையின் ஆய்வுக் குழு (Study group of National Credit Council) வின் பரிந்துரையின்படி, பெருமளவில் வணிக வங்கியிய முறை பரவும் பொருட்டும் பெருமளவில் வைப்புகளைத் திரட்டும் பொருட்டும் பொருளாதார வளர்ச்சிக்காக வங்கிகள் கடனளிப்பதை ஆதரிக்கவும், ரிசர்வ் வங்கி 1969ஆம் ஆண்டு முனைவு வங்கித் திட்டத்தினைத் தீட்டியது. இத் திட்டத்தினை மாவட்ட நீதியில் செயல்படுத்த முடிவு செய்யப் பட்டது. முக்கியமாக வங்கி வசதியற்ற பகுதிகளில் இத் திட்டம் செயல்படுத்தப்பட வேண்டுமென்று முடிவு செய்யப்பட்டது.

இத் திட்டத்தின்படி பொதுத்துறை வங்கிகளான ஸ்டேட் வங்கி, அதனுடைய 7 துணை வங்கிகள், இதர பதினான்கு நாட்டுடைமையாக்கப்பட்ட வணிக வங்கிகள் ஆகியவையும் ஆந்திரா வங்கி, பாங்க் ஆப் ராஜஸ்தான் ஆகிய இரு தனியார் துறை வங்கிகளும் இத்திட்டத்தினைச் செயல்படுத்தத் தேர்ந்தெடுக் கப்பட்டன. இத் திட்டத்தின் கீழ் நாட்டிலுள்ள 338 மாவட்டங்கள் இவ் வங்கிகளுக்கிடையே பிரித்துத்தரப்பட்டன. முனைவு வங்கி ஒவ்வொன்றும் அதற்கென ஒதுக்கப்பட்ட மாவட்டங்களில் முனைவுப் பங்கேற்று அம் மாவட்டங்களில் உள்ள கடன் தேவை களைக் கணக்கெடுத்து, வங்கிகளை நிறுவிக் கடன் வசதிகளை விரிவு படுத்துகின்றது.

பொதுவாக முனைவு வங்கித் திட்டத்தின்கீழ் முனைவு வங்கி யாகப் பணியாற்றும் வங்கி கீழ்க்காணும் பணிகளைப் புரிகின்றது:

(1) மாவட்டங்களில் திரட்டக்கூடிய வைப்புத்தொகையைக் கணக்கிட்டு வங்கிய வசதிகளை எவ்வாறு வளர்ச்சிபெறச் செய்யலாம் என ஆய்வு செய்தல்.

(2) அம் மாவட்டங்களிலுள்ள தொழில் நிறுவனங்கள் எந்த அளவிற்கு வங்கிகளுடன் தொடர்புகொண்டுள்ளன எனக் கணக்கிடுதலும், எத்தனை தொழில் நிறுவனங்கள் நிதி வசதி பெற வட்டித் தொழிலரையும் நாட்டு வங்கியரையும் நம்பியிருக் கின்றன என அறிதலும்.

(3) அப் பகுதிகளில் உள்ள வேளாண்மைப் பண்டங்களைப் பாதுகாக்கப் போதிய வசதிகள் உள்ளனவாவென்று கணக்கிடு தலும் அவற்றைப் பண்டகங்களில் சேமித்துவைக்க உரிய நடவடிக்கைகள் எடுத்தலும்.

(9) கடனில் பங்கேற்றல்: ஒரே நிறுவனம் பெருமளவில் கடன்பெற விழையும்போது, ஒரு வங்கி மட்டும் தனித்துக் கடன் வழங்குவதில்லை. இதற்கு இரு காரணங்களுண்டு. ஒன்று அவ்வளவு தொகையை ஒரே வங்கியால் வழங்க முடிவதில்லை. இரண்டாவதாக, ஒரு வங்கி மட்டும் கடனளிப்பதால் ஏற்படும் இழப்பு வாய்ப்பினை ஏற்றுக்கொள்ள விரும்புவதில்லை. இந்த நிலையில் அக் கடன் தொகையினைப் பல நிறுவனங்கள் சேர்ந்து கொடுப்பதுண்டு. முன்னரே தம் வாடிக்கையாளர் ஒருவருக்குக் கொடுத்துள்ள கடனை மூன்றாவது நபர் ஒருவருக்கு விற்கும் பொருட்டு வங்கிகள் பங்கேற்புச் சான்றிதழ்கள் (Participants' Certificates) வெளியிடுகின்றன. இத் திட்டம் 1970 ஆம் ஆண்டு அயல் நாட்டு வங்கி ஒன்றுல் இந்தியாவில் முதன் முதல் அறிமுகப் படுத்தப்பட்டது. பங்கேற்புச் சான்றிதழை வெளியிடும் வங்கியே கடன் தவணைக் காலம் முடிந்த உடன் கடனைத் திருப்பிச் செலுத்த உறுதியளிக்கின்றது. பங்கேற்புச் சான்றிதழின் குறைந்தளவு மதிப்பு ரூ. 1 இலட்சமென்று நிர்ணயிக்கப்பட்டுள்ளதால், இத் திட்டம் எதிர்பார்த்த அளவு பரவவில்லை என்று கூறலாம்.

(10) வைப்புக் காப்பீட்டுக் கூட்டுறு: (Deposit Insurance Corporation) எதிர்பாராத வகையில் பல வங்கிகள் நொடித்ததன் காரணமாக வாடிக்கைக்காரர்கள் தங்கள் வைப்புத்தொகையினை இழந்ததுடன் வங்கிகளிடத்து மக்கள் கொண்டிருந்த நம்பிக்கை குறையலாயிற்று. இந்த நிலையினைப் போக்கி, வங்கிகள் நொடித்தாலும் அதனால் வாடிக்கைக்காரர்கள் பாதிக்கப்படுவதினின்று அவர்களைக் காப்பற்ற ஏற்படுத்தப்பட்ட நிறுவனமே வைப்புக் காப்பீட்டுக் கூட்டுறுவாகும். கிராமிய வங்கிய விசாரணைக் குழுவின் பரிந்துரையின்படி இக் கூட்டுறு 1962 ஆம் ஆண்டு சனவரித் திங்களில் தொடங்கப்பட்டது. இத் திட்டத்தில் சேர்ந்துள்ள வங்கிகளிலுள்ள வைப்பாளர்களுக்கு, அவ் வங்கிகள் நொடித்து விட்டால்கூட இக் கூட்டுறு ஒரு குறிப்பிட்ட தொகை வரை நிறையீடு செலுத்துகிறது. ஆரம்பத்தில் காப்பீடு செய்யப்பட்ட தொகை ரூ. 1500 ஆக இருந்தது. பின்னர் 1968 ஆம் ஆண்டில் இத் தொகை ரூ. 5,000 ஆக உயர்த்தப்பட்டு மீண்டும் 1970ல் ரூ. 10,000 மாக உயர்த்தப்பட்டது. காப்பீட்டுக்கட்டணமாக ஒவ்வொரு வங்கியும் ரூ. 100 வைப்புத் தொகைக்கு ஆண்டுக் கட்டணமாக 5 பைசா செலுத்த வேண்டும். 1971 ஆம் ஆண்டு முதல் இத் திட்டம் வணிக வங்கிகளுக்கு மட்டுமின்றி, மத்தியப் பிரதேசம், மகாராட்டிரம், ஆந்திரப்பிரதேசம், கோவா, டையூ, டாமன் போன்ற பகுதிகளிலுள்ள கூட்டுறவு வங்கிகளுக்கும் நீட்டிக்கப்பட்டுள்ளது. இத் திட்டத்தின்படி, இதில் பங்குபெறும்

1969 ஆம் ஆண்டு ரூ. 4646 கோடி வைப்புத்தொகை பெற்றிருந்த வணிக வங்கிகள் தங்கள் வைப்புத்தொகையினைச் சிறிது சிறிதாகப் பெருக்கி 1972-73ல் ரூ. 8,103 கோடி வைப்புத் தொகையாகப் பெற்றிருக்கின்றன.

தொடக்க காலத்தில் பெரும்பாலும் வங்கிகள் நகர்ப் புறங்களிலிருந்தே வைப்புத்தொகை திரட்டினும் சில ஆண்டுகளுக்குப் பிறகு கிராமங்களில் எளிதாக வைப்புத்தொகை திரட்டலாமென்பதனை உணர்ந்த வங்கிகள் கிராமங்களில் கிளை அலுவலகங்களைத் திறந்து வைப்புத்தொகை திரட்ட முனைந்தன.

(6) வங்கிக்கிளைப் பெருக்கம் : வங்கிகள் நாட்டுடைமையாக்கப்பட்ட பிறகு வங்கிக் கிளை அலுவலகங்கள் மிகப்பெருமளவில் பெருகிவருகின்றன. முனைவு வங்கித் திட்டமும் இதற்கு ஒரு காரணமாகுமென்று கூறலாம். மேலும் திறக்கப்படும் கிளை அலுவலகங்களில் ஒரு பகுதி கிராமப் பகுதிகளில் திறக்க உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. 1969ஆம் ஆண்டு 8321 வங்கியிய அலுவலகங்கள் இருந்தன. அது 1973ஆம் ஆண்டு 15362 ஆக உயர்ந்தது. 1969ஆம் ஆண்டு சிற்றூர்களிலிருந்த வங்கி அலுவலகங்களின் எண்ணிக்கை 1860. அது 1973ஆம் ஆண்டு 5561 ஆக உயர்ந்தது.

(7) கடன் வழங்கு முறையில் புதிய நோக்கு : வணிக வங்கிகள் பொதுவாகப் பெரிய அளவில் வணிக நிறுவனங்களுக்கு மட்டும் கடனளித்து வந்தன. அந்த நிலைமாறி இப்பொழுது வணிக வங்கிகள் தொழில் நிறுவனங்களுக்குப் பண்டங்களை உற்பத்தி செய்யக் கடனுதவி அளிக்கின்றன. மேலும், தொழில் நிறுவனங்களுக்கு ஆரம்ப காலங்களில் குறுகிய காலக் கடன் வசதிகளை மட்டுமே அளித்துவந்த வணிக வங்கிகள் இப்பொழுது நீண்ட காலக்கடன் வசதிகளையும் அளிக்க முன் வந்துள்ளன.

(8) தனி நபர் கடன் திட்டம் : பொதுமக்களால் ரொக்கம் கொடுத்து வாங்க முடியாத பண்டங்களை வாங்க வங்கிகள் தனி நபர் கடன் திட்டம் என்னும் தவணைக் கடன் திட்டத்தினைத் தொடங்கியுள்ளன. இத் திட்டத்தினை இந்தியாவில் அறிமுகப் படுத்திய பெருமை இந்தியன் ஓவர்சீஸ் வங்கியையேசாரும். இத் திட்டத்தின்படி நுவர்வோர் பண்டங்களின் விலையில் ஒரு பகுதியினை வங்கியில் செலுத்திவிட்டுப் பண்டங்களின் முழு விலைக்கான தொகையை வங்கியிடமிருந்து பெற்றுப் பண்டங்களை வாங்கி நுகர்கின்றனர். வாங்கிய கடன் தொகை குறிப்பிட்ட தவணைகள் மூலம் வங்கிக்குத் திருப்பிச் செலுத்தப்படும்.

(9) கடனில் பங்கேற்றல்: ஒரே நிறுவனம் பெருமளவில் கடன் பெற விழையும்போது, ஒரு வங்கி மட்டும் தனித்துக் கடன் வழங்குவதில்லை. இதற்கு இரு காரணங்களுண்டு. ஒன்று அவ்வளவு தொகையை ஒரே வங்கியால் வழங்க முடிவதில்லை. இரண்டாவதாக, ஒரு வங்கி மட்டும் கடனளிப்பதால் ஏற்படும் இழப்பு வாய்ப்பினை ஏற்றுக்கொள்ள விரும்புவதில்லை. இந்த நிலையில் அக் கடன் தொகையினைப் பல நிறுவனங்கள் சேர்ந்து கொடுப்பதுண்டு. முன்னரே தம் வாடிக்கையாளர் ஒருவருக்குக் கொடுத்துள்ள கடனை மூன்றாவது நபர் ஒருவருக்கு விற்கும் பொருட்டு வங்கிகள் பங்கேற்புச் சான்றிதழ்கள் (Participants' Certificates) வெளியிடுகின்றன. இத் திட்டம் 1970 ஆம் ஆண்டு அயல் நாட்டு வங்கி ஒன்றால் இந்தியாவில் முதன் முதல் அறிமுகப் படுத்தப்பட்டது. பங்கேற்புச் சான்றிதழை வெளியிடும் வங்கியே கடன் தவணைக் காலம் முடிந்த உடன் கடனைத் திருப்பிச் செலுத்த உறுதியளிக்கின்றது. பங்கேற்புச் சான்றிதழின் குறைந்தளவு மதிப்பு ரூ. 1 இலட்சமென்று நிர்ணயிக்கப்பட்டுள்ளதால், இத் திட்டம் எதிர்பார்த்த அளவு பரவவில்லை என்று கூறலாம்.

(10) வைப்புக் காப்பீட்டுக் கூட்டுறு: (Deposit Insurance Corporation) எதிர்பாராத வகையில் பல வங்கிகள் நொடித்ததால் காரணமாக வாடிக்கைக்காரர்கள் தங்கள் வைப்புத்தொகையினை இழந்ததுடன் வங்கிகளிடத்து மக்கள் கொண்டிருந்த நம்பிக்கை குறையலாயிற்று. இந்த நிலையினைப் போக்கி, வங்கிகள் நொடித்தாலும் அதனால் வாடிக்கைக்காரர்கள் பாதிக்கப்படுவதினின்று அவர்களைக் காப்பற்ற ஏற்படுத்தப்பட்ட நிறுவனமே வைப்புக் காப்பீட்டுக் கூட்டுறுவாகும். கிராமிய வங்கிய விசாரணைக் குழுவின் பரிந்துரையின்படி இக் கூட்டுறு 1962 ஆம் ஆண்டு சனவரித் திங்களில் தொடங்கப்பட்டது. இத் திட்டத்தில் சேர்ந்துள்ள வங்கிகளிலுள்ள வைப்பாளர்களுக்கு, அவ் வங்கிகள் நொடித்து விட்டால்கூட இக் கூட்டுறு ஒரு குறிப்பிட்ட தொகை வரை நிறையீடு செலுத்துகிறது. ஆரம்பத்தில் காப்பீடு செய்யப்பட்ட தொகை ரூ. 1500 ஆக இருந்தது. பின்னர் 1968 ஆம் ஆண்டில் இத் தொகை ரூ. 5,000 ஆக உயர்த்தப்பட்டு மீண்டும் 1970ல் ரூ. 10,000 மாக உயர்த்தப்பட்டது. காப்பீட்டுக்கட்டணமாக ஒவ்வொரு வங்கியும் ரூ. 100 வைப்புத் தொகைக்கு ஆண்டுக் கட்டணமாக 5 பைசா செலுத்த வேண்டும். 1971 ஆம் ஆண்டு முதல் இத் திட்டம் வணிக வங்கிகளுக்கு மட்டுமின்றி, மத்தியப் பிரதேசம், மகாராட்டிரம், ஆந்திரப்பிரதேசம், கோவா, டையூ, டாமன் போன்ற பகுதிகளிலுள்ள கூட்டுறவு வங்கிகளுக்கும் நீட்டிக்கப்பட்டுள்ளது. இத் திட்டத்தின்படி, இதில் பங்குபெறும்

வங்கியின் வைப்பாளர் ஒருவர், அவ் வங்கி கலைக்கப்பட்டாலும், மாற்றி அமைக்கப்பட்டாலும் அவர் அவ் வங்கியில் மொத்தமாகச் செலுத்தியுள்ள தொகையில் ரூ. 10,000 வரையிலான தொகையினை இக் கூட்டுரு முழுமையாகக் காப்பீடு செய்து அதனை அவ் வைப்பாளருக்குச் செலுத்தி விடுகிறது.

இக் கூட்டுரு ரிசர்வ் வங்கிக்குத் துணை நிறுவனமாகச் செயல் படுகிறது. இக் கூட்டுருவின் பணியினால் சிறிய அளவில் வைப்புத் தொகை செலுத்திவரும் ஏழை எளியோரின் நிதி பாதுகாக்கப் படுகிறது. பெரும் வங்கிகள் நாட்டுடைமையாக்கப்பட்ட நிதியில் இக் கூட்டுரு தொடர்ந்து இவ்வளவு முக்கியத்துவம் பெறுமா என்பது ஐயமே.

15. வணிக வங்கிகள் நாட்டுடைமை யாக்கப்படுதல்

வணிக வங்கிகளை நாட்டுடைமையாக்கும் திட்டம் 1948ஆம் ஆண்டுமுதல் இருந்து வருகின்றது. இந்தியா சுதந்திரம் பெற்ற உடன் காங்கிரஸ் கட்சி தனது குறிக்கோள்களில், வணிக வங்கிகளை நாட்டுடைமையாக்குதலையும் ஒரு குறிக்கோளாகச் சேர்த்திருந்தது. நாடு பொதுவுடைமைக் கோட்பாட்டினைச் செம்மையாகச் செயல்படுத்த வணிக வங்கிகள் நாட்டுடைமை யாக்கப்படுதல் இன்றியமையாதது என்னும் கருத்தும் பெருவாரி யாகக் கூறப்பட்டு வந்தது. ஒரு நாட்டின் பொருளாதார் மூன்னேற்றம் வணிக வங்கிகளை நாட்டுடைமையாக்குவதன் மூலம் பெருக முடியுமென்ற கருத்தும் தெரிவிக்கப்பட்டது.

1949ஆம் ஆண்டு ரிசர்வ் வங்கி நாட்டுடைமையாக்கப் பட்டது இப் பணியின் முதல் சுவடு எனப் பலர் கருதினர். அதே ஆண்டில் நிறைவேற்றப்பட்ட வங்கியக் கம்பெனிச் சட்டம் (இப்பொழுது வங்கிய ஒழுங்காற்றுச் சட்டம்) வணிக வங்கிகளை நெறிப்படுத்தி உரிய முறையில் செயல்படத் தூண்டுமென இத் துறையைச் சார்ந்த வல்லுநர்கள் கருதினர். இச் சட்டம் ரிசர்வ் வங்கிக்கு வணிக வங்கிகளைக் கட்டுப்படுத்தப் போதிய உரிமை யளித்தது. இந்த இரு நிகழ்ச்சிகளுக்குப் பிறகு வணிக வங்கிகளை நாட்டுடைமையாக்க வேண்டுமென்று கூறியவர்கள் சற்றுத் தணிந்தனர். ஆனால், சிறிது காலத்திற்குப் பிறகு இம்பீரியல் வங்கி ஐரோப்பியர்களால் கட்டுப்படுத்தப்பட்டு வருகின்றது என்பதனைச் சுட்டிக்காட்டி அதனை நாட்டுடைமையாக்க வேண்டு மென்று பலர் பரிந்துரைத்தனர். அப் பரிந்துரைகளுக்குச் சில காலம் அரசு செவிமடுக்கவில்லை எனினும் கிராமக் கடன் விசாரணைக் குழுவின் பரிந்துரையின்படி 1955 ஆம் ஆண்டு இம்பீரியல் வங்கி நாட்டுடைமையாக்கப்பட்டு 'இந்திய ஸ்டேட் வங்கி' நிறுவப்பட்டது. அதுமுதல் ஒருசிலர், எல்லா வணிக

வங்கிகளையும் நாட்டுடைமை யாக்கவேண்டுமென்று அரசை வலியுறுத்தி வந்தனர். அரசு அதற்கேற்றவாறு சட்டமியற்ற வேண்டுமென்றும் கட்டாயப்படுத்தத் தொடங்கினர்.

ஆனால், அதற்கு எதிர்மாறாக மற்றொருசாரார் வணிக வங்கிகளை நாட்டுடைமை யாக்குதல் நாட்டு வளர்ச்சிக்குகந்ததன்று என்று வாதாடத் தொடங்கினர், எனவே, வணிக வங்கிகளை நாட்டுடைமை யாக்குதலென்பது ஒரு பெரும் பிரச்சினையாகி விட்டது. நாட்டுடைமைக் கருத்தின் ஆதரவாளர்கள், தங்களுடைய கருத்தின் சார்பாக பல்வேறு காரணங்களைச் சுட்டிக் காட்டத் தொடங்கினர். அதுபோன்றே நாட்டுடைமைக் கோட்பாட்டுக்கெதிரான காரணங்களைச் சுட்டிக்காட்டினர். 1969 ஆம் ஆண்டுவரை இந்தியாவைப் பொறுத்தவரை இப் பிரச்சினையின் முடிவு பெரும் பிரச்சினையாகவே இருக்குமெனக் கருதப்பட்டது.

நாட்டுடைமையாக்கப்படுவதற்கான காரணங்கள்: வணிக வங்கிகளை நாட்டுடைமையாக்க வேண்டுமென்று கருத்துத் தெரிவித்தவர்கள் கீழ்க்காணும் காரணங்களைத் தங்களுடைய கருத்துக்கு ஆதரவாகத் தெரிவித்தனர்:

(1) வங்கிகள் ஈட்டும் இலாபம் அரசுக்குக் கிடைக்கு மென்றும் அதனை அரசு, திட்டங்களைச் செயல்படுத்தப் பயன் படுத்தலாமென்றும் கூறப்பட்டது.

(2) வங்கிகளின் இயக்குநர்கள் தவருன முறையில் நிதியினை முதலீடு செய்கின்றனர். இலாபம் ஈட்டுதல் ஒன்றே அவர்களுடைய நோக்கமாக உள்ளது. வங்கிகள் நாட்டுடைமை யாக்கப் பட்டால் வாடிக்கைக்காரர்களுடைய வைப்புத்தொகைக்குப் பாதுகாப்புக் கூடுதலாகும்.

(3) வங்கிகள் தனியார் துறையில் இயங்கி வருவதால் பொருளாதாரத் திறன் ஒரு சிலரிடம் குவிந்துவிடுகிறது. எனவே, அவர்களே தொழில் முற்றுரிமை பெறுகின்றனர். வங்கிகளின் இயக்குநர்கள் தாங்கள் தொடர்புகொண்டுள்ள நிறுவனங்களுக்கே கடன் வசதி யளிக்கின்றனர். எனவே, ஒருசில தொழில் நிறுவனங்கள் மட்டும் நிதிவசதி பெற்று வளர்ச்சிபெற வாய்ப்பேற் படுகின்றது. ஆனால், வங்கிகள் நாட்டுடைமை யாக்கப்பட்டால், நிதிவசதி எல்லாத் தொழில் நிறுவனங்களுக்கும் வழங்கப்படும். எனவே, எல்லாத் தொழில் நிறுவனங்களும் வளர்ச்சியுறலாம்.

(4) வங்கிகளின் இயக்குநர்கள் அதிக இலாபங் கருதி வங்கிகளின் நிதியினை ஊக வணிகத்தில் முதலீடு செய்தனர். எனவே,

வங்கிகளின் நிதிநிலை நீண்ட காலத்தில் பாதிக்கப்படக்கூடிய நிலை ஏற்படலாம்.

(5) பாதுகாப்பு என்னும் போர்வையில் வணிக வங்கிகள் காலங்கடந்த முதலீட்டுக் கோட்பாடுகளையே கடைப்பிடித்து வந்தன. இந்திய நாடு முக்கியமாக வேளாண்மை நாடாக விருந்தும், இந்திய வணிக வங்கிகள் வேளாண்மைக்குக் கடனுதவி அளிப்பதை விரும்பவில்லை. மேலும், தொழில் நிறுவனங்களுக்குள்ளும், நிலைப்படுத்தப்பட்டு நன்கு செயலாற்றி வரும் பெரும் தொழில் நிறுவனங்களுக்கு மட்டுமே நிதியுதவி அளிக்க முன் வந்தனவே தவிர, முன்னேறிவரும் சிறுதொழில் நிறுவனங்களை வணிக வங்கிகள் ஆதரிக்கவில்லை. இந்தியாவைப் பொறுத்தவரை 1967ஆம் ஆண்டு வங்கிகளின் கடனில் 70 விழுக்காட்டுக்கு மேல் ரூ. 5 இலட்சத்திற்கு மிகுதியான மூலதனத்தைக்கொண்ட தொழில் நிறுவனங்களுக்கே அளிக்கப் பட்டது. தனியார்துறை வங்கிகள் உடன் இலாபமீட்டுவதையே கருத்தாகக் கொண்டிருந்தனவே தவிர நாட்டின் தொழில் வளர்ச்சியில் அவற்றுக்கு அவ்வளவு நாட்டமில்லை. எனவே, நாட்டிலுள்ள நிதியினைப் பல்வேறு துறைகளுக்கிடையே உரிய முறையில் பகிர்ந்தளிக்க வங்கிகள் நாட்டுடைமை யாக்கப்பட வேண்டுமென்பது அடுத்த காரணமாகும்.

(6) தனியார் துறை வங்கிகள் முக்கியத்துறைகளுக்குக் கடன் வழங்குவதில்லை. எனவே, அரசு தீட்டிய திட்டங்களின் பலன் உரிய நோக்கத்தினை எய்தாமற் போகலாம். எடுத்துக் காட்டாக அரசு வேளாண்மையினை வளர்ச்சி செய்ய வேண்டித் திட்டம் தீட்ட, ஆனால் வங்கிகள் வேளாண்மைக்குப் போதிய கடன் வசதிகள் அளிக்காவிடின் அரசு தீட்டும் திட்டம் பயனற்று விடுகிறது. எனவே, அரசுத்திட்டம் உரிய பயனளிக்க வங்கிகள் நாட்டுடைமையாக்கப்பட வேண்டும்.

(7) வணிக வங்கிகள் கிராமங்களை அறவே புறக்கணித்தன. எனவே, கிராம மக்கள் வங்கிகளுடைய வசதிகளைப்பெற முடிவதில்லை என்பதுடன் கூட, கிராம மக்களுடைய சேமிப்பும் வங்கிகளால் திரட்டப்படாததால் அது உற்பத்திக்குப் பயன்படுத்தப்படுவதில்லை. 1967ஆம் ஆண்டு வங்கிகளுடைய மொத்த வைப்புத் தொகையில் 46 விழுக்காடு இந்தியாவிலுள்ள, பம்பாய், கல்கத்தா, டில்லி, சென்னை, அகமதாபாத் ஆகிய ஐந்து மாபெரும் நகரங்களிலிருந்து திரட்டப்பட்டிருந்தது. இந்த ஐந்து நகரங்களில் தான் வங்கிகளின் மொத்தக் கடனில் 65 விழுக்காடு முடக்கப் பட்டிருந்தது. இந்நிலை வளர்ந்த நகரங்கள் மேலும் வளர

வாய்ப்பளித்ததே தவிர வளர வேண்டிய நகரங்கள் வளர வாய்ப்பளிக்கவில்லை.

எனவே, வங்கிகளை நாட்டுடைமையாக்குவதன் மூலம் இம் முறையற்ற செயல் களையப்பட்டு எல்லா இடங்களிலும் கிளைகள் திறப்பதன் வழி, அவ்விடங்களிலிருந்து வைப்புத் தொகை திரட்டுவதுடன் கூட அப் பகுதி வளரும் வகையில் அங்குள்ள தொழில் நிறுவனங்களுக்குப் போதிய நிதிவசதியுமளிக்கலாம்.

(8) நாடு பொது உடைமை நோக்கில் விரைந்து செல்லும் நிலையில், வணிக வங்கிகள் நாட்டுடைமையாக்கப்படுவது இன்றியமையாததாகும்.

(9) எல்லா வணிக வங்கிகளும் நாட்டுடைமையாக்கப் பட்டால், இந்தியாவின் மைய வங்கியான ரிசர்வ் வங்கி, அதனுடைய பணவாக்கக் கைக்கோளினைச் (Monetary Policy) சிறப்பாகச் செயல்படுத்த முடியும். இந்தியாவைப் பொறுத்த வரை, வணிக வங்கிகள் மைய வங்கியுடன் தொடர்பின்றித் தனித்தியங்கி வந்தன வென்பதனை இங்குக் குறிப்பிடுவது சாலப்பொருந்தும்.

(10) நாட்டுடைமையாக்கம் செய்தல் மூலம் வணிக வங்கிகள் இலாப நோக்குடன் செயல்படுவதற்கு மாறுகப் பணி நோக்குடன் செயல்பட ஊக்குவிக்கலாம்.

(11) வங்கியியப் பணிகள் நிலைப்படுத்தப்படலாம். மேலும் வங்கிகள் மிகத்திறமையுடன் நிருவகிக்கப்படலாமாதலின் அவை குறைந்த வீத வட்டிக்குக் கடன் கொடுக்க வாய்ப்பேற் படலாமெனக் கூறப்பட்டது.

(12) பொதுமக்கள் நலனுடன் தொடர்பு கொண்டுள்ள வணிக வங்கிகள், பொதுப் பயன் நிறுமங்களாகின்றன. பொது வசதிக் கம்பெனிகள் யாவற்றையும் நாட்டுடைமையாக்க வேண்டு மென்று கூறப்படும் நிலையில் வணிக வங்கிகளையும் நாட்டுடைமை யாக்க வேண்டியது அவசியமேயாகும்.

நாட்டுடைமையாக்குதலை விரும்பாத குழுவினர், வணிக வங்கிகளை நாட்டுடைமையாக்குதல் என்பது கொள்கையளவில் இந்தியாவினைல் மட்டும் முடிவு செய்தல் தவருகும். இதர நாடுகளுடைய கருத்துகளை அறிந்த பிறகே நாட்டுடைமை யாக்கல் குறித்து இந்தியா முடிவு செய்யலாமென்று கருத்துத்

தெரிவித்தனர். ஆனால், இக் கருத்து ஏற்றுக்கொள்வதாக அமைய வில்லை. ஏனெனில் பிரான்ஸ், கிழக்குச் செர்மனி, ருஷ்யா போன்ற நாடுகள் தங்கள் நாடுகளிலுள்ள வணிக வங்கிகளை நாட்டுடைமை யாக்கும் திட்டத்தினை முன்னரே செயல்படுத்தத் தொடங்கி விட்டன. பிரான்ஸ் நாட்டில் 1946ஆம் ஆண்டே வணிக வங்கிகள் நாட்டுடைமையாக்கப்பட்டு விட்டன. இந்த நாடு களிலுள்ள வணிக வங்கிகள் இலாபகரமாகவும், பொதுமக்களுக்கு மிகவும் பயன்படுமாறும் செயல்பட்டு வருவது குறிப்பிடத்தக்க தாகும்.

இருப்பினும் வணிக வங்கிகளை நாட்டுடைமையாக்குவதற்கு எதிர்மாறான கருத்துக் கொண்டவர்கள் தங்களுடைய கருத்திற்குச் சாதகமாகக் கீழ்க்காணும் காரணங்களைக் குறிப்பிடுகின்றனர்:

(1) வங்கிகளை நாட்டுடைமையாக்குவதன் மூலம் அரசி னுடைய வருவாய் கூடுமென்ற கருத்து ஏற்றுக்கொள்ளத் தக்கதாக இல்லை. ஏனெனில், வணிக வங்கிகள் ஈட்டும் இலாபத்தில் பெரும்பகுதி வருமான வரியாகவும், ஊழியர்களுக்கு மேலூதிய மாகவும், காப்பு நிதியாகவும் செலுத்தப்பட்டு விடுகிறது. எனவே, எஞ்சி நிற்கும் நிகர இலாபம் மிகக் குறைவேயாகும். எடுத்துக் காட்டாக 1964ஆம் ஆண்டு இந்தியாவிலுள்ள எல்லா வணிக வங்கிகளும் ஈட்டிய இலாபம் ரூ. 34·98 கோடியாகும். இதில் ரூ. 17·96 கோடி அரசுக்கு வரியாகவும் ரூ. 3·33 கோடி காப்பு நிதியாகவும் ரூ. 5·25 கோடி வங்கி ஊழியர்களுக்கு மேலூதிய மாகவும் செலுத்தப்பட்டு விட்டது. எஞ்சிய தொகையான ரூ. 5·76 கோடி மட்டுமே பங்குநர்களுக்குப் பங்காதாயமாக வழங்கப்பட்டது.

வங்கிகள் நாட்டுடைமையாக்கப்பட்டால், மேலே குறிப் பிட்டபடி காப்புநிதி செலுத்தப்பட வேண்டும். ஊழியர்களுக்கு மேலூதியம் வழங்கப்பட வேண்டும். எனவே, அரசுக்குக் கூடுதலாகக் கிடைத்திருக்கக் கூடிய வருவாய் ரூ. 5·76 கோடி தான். இத் தொகையிலிருந்து பெற அரசு வணிக வங்கிகளின் பங்குநர் களுக்கு நட்ட ஈடு கொடுப்பதன்வழி ரூ. 91·97 கோடி செலவிட வேண்டிய நிலையிருந்தது.

(2) தனியார் துறை வங்கிகள் யாவும் தவறான முறைகளைக் கடைப்பிடிக்கின்றன என்று கூறுதல் ஏற்றுக்கொள்ளத்தக்கதாக இல்லை. வங்கிகள், ரிசர்வ் வங்கியின் கட்டுப்பாட்டில் செயலாற்றி வரும் நிலையில், வணிக வங்கிகளுக்குத் தவறான முறைகளைக் கடைப்பிடிக்க வாய்ப்பே இல்லை. வங்கியியக் கம்பெனிச் சட்டம்,

1949 (வங்கியிய ஒழுங்காற்றுச் சட்டம்) மைய வங்கிக்கும், மைய அரசுக்கும், வணிக வங்கிகளைக் கட்டுப்படுத்தும் வகையில் போதிய உரிமைகளைக் கொடுத்துள்ளது. வைப்புக்காப்புறுதிக் கூட்டுரு நிறுவப்பட்ட பிறகு வைப்பாளர்கள் நலன் நன்கு பாதுகாக்கப்பட்டு வருகின்றது. ஆனால், நாட்டுடைமையாக்கப் பட்ட பிறகு வங்கிப் பணியாளர்களின் பணித்தன்மை மாறுபடக் கூடுமாதலின், நாட்டுடைமையாக்கப்பட்ட பிறகே தங்களுடைய நலன் பாதிக்கப்படக் கூடுமென வாடிக்கையாளர்கள் கருதுகின்றனர்.

(3) தனியார் துறை வங்கிகளே, பொதுத்துறை வங்கிகளை விட விரைவான வளர்ச்சிபெற்று வருகின்றன வென்பது அடுத்து அவர்கள் கூறும் காரணமாகும்.

(4) தனியார் துறை வங்கிகளின் இயக்குநரவைகளில் பல்வேறு துறைகளைச் சார்ந்தவர்கள் இயக்குநர்களாக இருக்கின்றனர். எனவே, இவ் வங்கிகள் நாட்டுடைமையாக்கப் பட்ட வங்கிகளைவிடச் சிறப்பாகச் செயலாற்ற முடியும்.

(5) வணிக வங்கிகள் காரணமாகத் தொழில் துறையிலும், பொருளாதாரத் துறையிலும் முற்றுரிமை தோன்றியுள்ளது எனக் கூறுதல் ஏற்றுக்கொள்ளத்தக்கதாக இல்லை. அரசின் தொழில் கோட்பாடுகள் காரணமாகவே தொழில் வளர்ச்சி ஏற்படுகிறது. எனவே, அரசு அதுபோன்று வளர்ந்துவிட்ட நிறுவனங்களைக் கட்டுப்படுத்த வேண்டும். ஆனால், வங்கிகள் நிதிவசதி அளிக்காது அந் நிறுவனங்களைக் கட்டுப்படுத்துதல் என்பது இயலாத தாகும். அவற்றிற்குப் போதிய நிதிவசதி அளிக்கப்படாவிட்டால் அவை தங்களுடைய தொழிலை மூடிவிட வேண்டிய அவசியம் எழலாம். அவ்வாறு அத் தொழில் நிறுவனங்களை மூடுவதால் நாட்டு வளம் பாழ்படுத்தப்படும். மேலும், வணிக வங்கிகள் மட்டும் அப் பெரும் நிறுவனங்களுக்குக் கடன் கொடுப்பதில்லை. அரசு உடைமையிலுள்ள நிதிய நிறுவனங்களும் அத்தகைய பெரும் தொழில் நிலையங்களுக்குக் கடனுதவி புரிகின்றன. மேலும் வங்கிகள் நிதியுதவி யளித்தல் வங்கி நிருவாகத்தினரால் மட்டும் முடிவு செய்யப்படுவதில்லை. ரிசர்வ் வங்கியும் வணிக வங்கி களுடைய முதலீடுகளைக் கட்டுப்படுத்தும் தன்மை படைத் துள்ளது. எனவே, இந் நோக்கத்தினை எய்துவான்வேண்டி வணிக வங்கிகளை நாட்டுடைமையாக்க வேண்டிய அவசியமில்லை.

(6) பெருமளவில் வணிக வங்கிகள் கடன் கொடுப்பதால், வங்கிக் கிளை அலுவலகங்களின் மேலாளர்களும் வங்கிகளின்

இயக்குநர்களும் தங்கள் விருப்பப்படி கடன் கொடுக்கும் உரிமை பெற்றுள்ளனர் என்ற ஒரு தவருன கருத்துப் பரப்பப்படுகிறது. ஆனால், நடைமுறையில், வங்கிகள் நாட்டுடைமையாக்கப்படாத நிலையிலும் வங்கிகள் கடன் கொடுக்கும் முறை ரிசர்வ் வங்கியால்தான் நிர்ணயம் செய்யப்படுகின்றது.

(7) நாட்டுடைமை யாக்கப்படாத நிலையில் வணிக வங்கி அலுவலகங்களின் மேலாளர்கள் ஒருசில பிரச்சினைகள் குறித்த முடிவினை அவர்களே உடனுக்குடன் எடுக்கும் உரிமை பெற்றுள்ளனர். அவ்வாறு முடிவுகள் உடனுக்குடன் எடுக்கப்படுவதால் பிரச்சினைகள் எளிதில் தீர்க்கப்பட்டு வங்கிகள் உரிய முறையில் வளர்ச்சிபெற ஏதுவாகின்றது. ஆனால், வங்கிகள் நாட்டுடைமையாக்கப்பட்டால் அலுவலகங்களின் மேலாளர்கள் சிறு பிரச்சினைகள் குறித்தும் அலுவலக முறைப்படி தலைமையகத்துடன் தொடர்புகொண்டு அவற்றை முடிவுசெய்வர். இது வங்கி வளர்ச்சியினைத் தடை செய்யக்கூடும்.

(8) ஒவ்வொரு வங்கியிலும் பல்லாயிரக் கணக்கானவர்கள் பங்குநர்களாக விருப்பதால். தொழில் முற்றுரிமை என்ற பிரச்சினைக்கு இக்காலத்திய வங்கிகளைப் பொறுத்தவரை இடமே இல்லை.

(9) வங்கிகளின் இயக்குநர்கள் தொழில் நிறுவனங்களுடன் தொடர்பு கொண்டிருப்பதால், அவர்கள் தொழில் நிறுவனங்களைப் பற்றிய செயலறிவினைப் பெறுகின்றனர். இது வங்கிகள் சிறந்த முறையில் செயல்படப் பெரிதும் உதவும்.

(10) வணிக வங்கிகள் வேளாண்மைக்குக் கடனுதவி செய்யவில்லை என்பது முற்றிலும் உண்மை. இதற்கு முக்கிய காரணம் பொதுவாக வணிக வங்கிகள் பிணையெதுவுமின்றிக் கடன் வழங்குவதில்லை. ஆனால், இந்திய விவசாயிகள் நிலத்திலுள்ள பயிர்களைத் தவிர வேறு எந்தப் பிணையையும் கொடுக்கக்கூடிய நிலையிலில்லை. எனவேதான், வணிக வங்கிகள் வேளாண்மைக்குக் கொடுக்கும் கடன் மிகக் குறைவாக உள்ளது. ஆனால், வங்கிகள் சிறு தொழில் நிறுவனங்களுக்குக் கடன் கொடுப்பதில்லை எனும் குற்றச்சாட்டினை ஏற்றுக்கொள்வதற்கில்லை. ஏனெனில், வங்கியியக் கடனில் பெரும்பகுதி தொழில் நிறுவனங்களுக்கே அளிக்கப்பட்டு வருகின்றது.

வங்கிகள் வருவாய் ஈட்டும் திட்டங்களுக்கு மட்டுமே நிதியுதவி அளிக்கின்றன. நிவாரணங்களுக்கு நிதிவசதி வழங்குவதில்லை. இவை பிறர் நிதியினைக்கொண்டு தொழில்புரிவதே இதற்கு

முக்கிய காரணமாகும். வங்கிகள் நாட்டுடைமையாக்கப்பட்டாலும் அவை நிதியீனி முதலீடு செய்யும்போது வங்கியிய அடிப்படைக் கோட்பாடுகளினின்று வழுவமுடியாது. அவ்வாறு நாட்டுடைமை யாக்கப்பட்ட வங்கிகள் வங்கியியக் கோட்பாடுகளைக் கடைப்பிடிக் காது தொழில் நடத்தினால். வாடிக்கைக்காரர்கள் அத்தகைய வங்கிகளிடம் நம்பிக்கை இழப்பர். அவ் வங்கிகளும் தங்கள் தொழிலினை இழக்கும்.

(11) ஒருசில வணிக வங்கிகள். விவசாயிகளுக்கும் சிறு தொழில் நிறுவனங்களுக்கும் போதிய அளவில் கடன் கொடுக்க வில்லை என்ற கூற்று உண்மையே. அதற்கு வணிக வங்கிகளைக் குற்றம் சாட்டுதல் பொருத்தமன்று விவசாயிகள் ஏற்றுக் கொள்ளத்தக்க பிணையங்களைக் கொடுப்பதில்லை. சிறு தொழில் நிறுவனங்கள், தங்கள் உண்மை நிலையினை, வருமானவரித் துறை யினரிடமிருந்து மறைக்கும் பொருட்டு வங்கிகளுக்குக்கூடத் தெரிவிப்பதில்லை. எனவே, வணிக வங்கிகள் அத் தொழில் நிறுவனங்களுக்கு எந்த அளவுக்குக் கடன் கொடுக்கலா மென்பதனை அறிந்துகொள்ள முடிவதில்லை. இந்த நிலையிலும், அட்டவணையிலிட்ட வங்கிகள் 1965 ஆம்ஆண்டு மார்ச்சுத் திங்கள் இறுதிவரை சிறுதொழில் நிறுவனங்களுக்கு ரூ. 55 கோடி வரை நிதியுதவி அளித்திருந்தன. விவசாயிகளைப் பொறுத்தவரை வணிக வங்கிகள் கடன் கொடுக்காத காரணத்தினால், அவர்கள் நிலை பாதிக்கப்படுகிறது என்னும் கூற்றினை ஏற்றுக்கொள்வதற்கில்லை இந்திய ரிசர்வ் வங்கி கோடிக் கணக்கான ரூபாய்களைக் கூட்டுறவு நிறுவனங்கள் மூலம் விவசாயிகளுக்குக் கடனுதவி கொடுத்துதவு கிறது. எனவே, வங்கிகள் நாட்டுடைமை யாக்கப்பட்டாலும் நிலைமை முன்னேற வாய்ப்பில்லை.

(12) வங்கிகள் நாட்டுடைமையாக்கப்பட்டாலும் அவை இலாப நோக்குடன் செயல்படுவதைத் தடுக்கமுடியாது. வங்கிகள் இலாபம் ஈட்டாவிட்டால் அவை தொழில் புரிவ தென்பது இயலாததாகும். நாட்டுடைமையாக்கப்பட்ட ஸ்டேட் வங்கியே இலாபமீட்டும் நோக்கத்துடனேயே செயல்புரிந்து வருகிறது.

(13) பெரும் வங்கிகள் அதிக விழுக்காடு வைப்புத்தொகை யினைப் பெறுவதற்குக் காரணம் அவை மிகுதியான கிளை அலுவலகங்களைக்கொண்டு தொழில் புரிவதேயாகும். சிறு வங்கிகள் மிகக்குறைவான கிளை அலுவலகங்களைக் கொண்டுள்ள தால் அவற்றால் அதிக அளவு வைப்புத்தொகை திரட்ட முடியவில்லை. சிறு வங்கிகளை வளரச் செய்யத் திட்டங்களைத்

தீட்டியுள்ள மைய அரசும், ரிசர்வ் வங்கியும், அவற்றின் வளர்ச்சியினை விரைவில் காண உரிய முயற்சிகள் எடுத்து வருகின்றன. இந்நிலையில் நாட்டிலுள்ள ஒருசில பெரும் வங்கிகள் மட்டும் அதிக அளவில் வைப்புத்தொகை திரட்டுகின்றனவெனக் குறை கூறுவதில் பொருளில்லை.

(14) வங்கிகள் நாட்டுடைமையாக்கப்பட்டுவிட்டால் சிறு வங்கிகள்கூட அதிக அளவில் கிளைகள் திறக்க வாய்ப்புள்ளது என்ற கூற்றும் ஏற்றுக்கொள்ளத் தக்கதாயில்லை. சிறு வங்கிகள் தனியார் துறையில் செயலாற்றி வந்தால், திறமையான நிருவாகத்தினடிப்படையில், மிகுதியான இலாபமீட்டிப் பெருமளவில் கிளைகள் திறக்கலாம்.

(15) வங்கிகள் நாட்டுடைமையாக்கப்பட்டால் பணியாளர்கள் நாட்டு நலங்கருதி வங்கிகளுடன் ஒத்துழைத்துப் பணிபுரிவர் என்னும் கூற்று ஏட்டளவில் ஏற்றுக்கொள்ளத்தக்கதாக உள்ளது. நடைமுறையில் இது உண்மைக்குப்புறம்பானதேயாகும். இக் கூற்று உண்மையானால், நாட்டுடைமையாக்கப்பட்டுள்ள ரிசர்வ் வங்கி, ஸ்டேட் வங்கி போன்ற நிறுவனங்களில் வேலை நிறுத்தமே இருத்தல் கூடாது. ஆனால், நடைமுறையில் இதர தனியார்துறை வங்கிகளைவிட இவற்றில்தான் அடிக்கடி மேலாண்மையினருக்கும், ஊழியர்களுக்குமிடையே கசப்புணர்ச்சி ஏற்படுகிறது. இவ் வங்கிகளில்தான் அடிக்கடி வேலை நிறுத்தங்கள் நிகழ்கின்றன.

(16) பணவீக்கம் காரணமாக விலைவாசிகள் ஏறியுள்ள இந்நிலையில், வணிக வங்கிகளை நாட்டுடைமையாக்குவதன் மூலம் மட்டும் விலைவாசிகளைக் கட்டுப்படுத்த முடியாது. வளர்ந்துவரும் எந்த ஒரு நாட்டிலும் பண வீக்கத்தையும், விலைவாசி ஏற்றத்தினையும் தடுத்தல் இயலாது. எனவே, வணிக வங்கிகளை நாட்டுடைமையாக்குவதன் மூலம் பணவீக்கத்தினைப் போக்கலாமென்பதும், பண்டங்களின் விலைகளைக் குறைத்து விடலாமென்பதும் நடக்கக்கூடியவையல்ல.

மேற்கூறிய கருத்துகளில் ஒருசில ஏற்றுக்கொள்ளத்தக்கவை. முன்னேறிவரும் இந்தியாவில், பல்வேறு திட்டங்களை வங்கிகள் செயல்படுத்த வேண்டுமாயின் அவை தனித்தியங்குவதே சிறந்தது. இருப்பினும், ஒருசில வணிக வங்கிகள் தவறான கொள்கைகளைக் கடைப்பிடித்ததன் காரணமாக இந்திய அரசு வணிக வங்கிகளை நாட்டுடைமையாக்குதல் என்ற கோட்பாட்டினைச் செயல்படுத்த முடிவு செய்தது. நாட்டுடைமையின்

மூலம், கிராமங்களில் கிளைகளமைத்தல் வங்கியிய அலுவலகங் களைப் பரவலாக்குதல் போன்ற கோட்பாடுகளைச் செயல்படுத்தலா மென்றும் கருதப்பட்டது.

1969ஆம் ஆண்டு சூலைத்திங்கள் 19ஆம் நாள் இந்திய வங்கியிய வரலாற்றில் புரட்சிகரமான ஒரு நாளாகும். அத் தினத் தன்றே இந்தியாவிலுள்ள முக்கியமான பதினான்கு பெரும் வங்கிகள் நாட்டுடைமையாக்கப்பட்டன. வணிக வங்கிகளை நாட்டுடைமையாக்குவதற்கு 1955ஆம் ஆண்டு இம்பீரியல் வங்கியினை நாட்டுடைமையாக்கியதன்மூலம் வித்திடப்பட்டது. 1955ஆம் ஆண்டுதான் முதன் முதலாக இம்பீரியல் வங்கி நாட்டுடைமையாக்கப்பட்டு இந்திய ஸ்டேட்வங்கி நிறுவப்பட்டது. அதன் பிறகு இதர வங்கிகள் சிறப்பாகப் பணிபுரியுமென எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், மக்களும், அரசும் வங்கிகளின் வளர்ச்சியில் முழு மனநிறைவெய்தவில்லை. எனவே, 1967 ஆம் ஆண்டு வங்கிகளைக் கட்டுப்படுத்திச் சரியான பாதையில் செயல்படுத்தும் முகத்தான் சமூகக்கட்டுப்பாட்டுத் திட்டம் ஒன்று தீட்டப்பட்டு அத் திட்டம் 1968 ஆம் ஆண்டு செயல் படுத்தப்பட்டது. இத் திட்டத்தின் நோக்கம் முக்கிய வகையான நிறுவனங்களுக்குக் கடனளிப்பதும், வேளாண்மைக்குக் கடன் கொடுப்பதும், சிறுதொழில் நிறுவனங்களுக்குக் கடன் கொடுப்பதும் ஆகும். ஆனால், ஆறுதிங்கள்கள் கழித்துச் சமூகக் கட்டுப்பாட்டுத் திட்டத்தின் கீழ் வங்கிகள் உரிய வளர்ச்சி பெறவில்லை என அரசு கருதியதனாலும் வங்கிகளின் இயக்குநரவைகள் மாற்றப்பட்ட பிறகும் பெரும் தொழிலதிபர்கள் வங்கிகளின் இயக்குநரவைகளில் இடம்பெற்றதனாலும் வங்கிகள் நாட்டுடைமையாக்கப்படுவது இன்றியமையாததெனக் கருதப்பட்டது.

எனவே, வேளாண்மையை வளர்க்கவும், முக்கியமான தொழில் நிறுவனங்களுக்குக் கடனளிக்கவும், பின்தங்கிய வட்டாரங்களை முன்னுக்குக் கொண்டுவரவும், கிராமங்களில் வங்கியிய அலுவலகங்கள் தொடங்கவும் நாட்டிலுள்ள பதினான்கு வங்கிகள் நாட்டுடைமையாக்கப்பட்டன.

1969ஆம் ஆண்டு சூன் திங்கள் இறுதியில் பதினான்கு வங்கிகள் நாட்டுடைமையாக்குவதற்கு முன்பு இந்திய வங்கியிய நிலை கீழ்க்காணும் வகையில் அமைந்திருந்தது :

மொத்த வங்கிகளின் எண்ணிக்கை 89.

வங்கி அலுவலகங்களின் எண்ணிக்கை 8254.

வைப்புத்தொகை (கோடியில்) ரூ. 4,672.

கடன் (கோடியில்) ரூ. 3,614.

	தனியார் துறை				பொதுத்துறை	
	அயல்நாட்டு வங்கிகள் [1]	அட்டவணையிடப்பட்ட வங்கிகள்		அட்டவணையிடப்படாத வங்கிகள்		
		பெரும் வங்கிகள் [2]	இதர வங்கிகள்		இந்திய ஸ்டேட் வங்கி	ஸ்டேட் வங்கியின் துணை வங்கிகள்
வங்கிகளின் எண்ணிக்கை	15	14	36	16	1	7
கிளை அலுவலகங்களின் எண்ணிக்கை	130	4,130	1,324	216	1,566	888
வைப்புத்தொகை (ரூ. கோடியில்)	478	2,632	296	28	948	291
கடன் (ரூ. கோடியில்)	385	1,829	197	16	967	219

[1] 15 வங்கிகளில் 13 வங்கிகள்தாம் செயலாற்றுகின்றன. இதர விவரங்கள் 15 வங்கிகளைப்பற்றியவை.

[2] ரூ. 50 கோடிக்குமேல் வைப்புத்தொகை பெற்றிருந்ததனால் 1969ஆம் ஆண்டு சூலைத் திங்கள் 19ஆம் நாள் நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகள்.

வங்கிகள் நாட்டுடைமையாக்கப்பட்ட வரலாறு: 1969ஆம் ஆண்டு சூலைத் திங்கள் 19ஆம் நாள் சனிக்கிழமையன்று பாராளுமன்றம் செயல்படாததனால் இந்திய மக்களாட்சித் தலைவர் ஓர் அவசரச் சட்டத்தின்மூலம் ரூ. 50 கோடிக்கு மேல் வைப்புத் தொகை கொண்டிருந்த பதினான்கு பெரும் வங்கிகளை நாட்டுடைமை யாக்குவதற்கான ஆணை பிறப்பிக்க அதன்படி அரசு பதினான்கு வங்கிகளை நாட்டுடைமையாக்கியது. நாட்டுடைமை மசோதா பின்னர்ப் பாராளுமன்றத்தால் ஏற்றுக் கொள்ளப்பட்டுச் சட்டமாக்கப்பட்டது. இருப்பினும் நாட்டுடைமைச் சட்டம் முறையானதன்று எனச் சிலர் நாட்டு உச்ச நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்தனர். உச்ச நீதிமன்றம், நாட்டுடைமைச் சட்டம் செல்லுபடியாகுமென்றும் அதிலுள்ள சில சரத்துகள் மட்டும் மாற்றப்பட வேண்டுமென்றும் தீர்ப்புக்கூறியது. நாட்டுடைமை யாக்கப்பட்ட வங்கிகள், வங்கியிய ஒழுங்காற்றுச் சட்டப்படி வங்கிகள் மேற்கொள்ளக் கூடாத தொழில் எதனையும் செய்யக்கூடாது என்ற சரத்தும், அவ் வங்கிகளுக்குத் தரப்படும் நிறையீடு (Compensation) சரியான முறையில் கணக்கிடப்படவில்லை என்றும், பெயரளவுக்கு நிறையீடு என்ற முறையில் அரசு செலுத்தவிருப்பதாகக் குறிப்பிடும் சரத்தும் செல்லுபடியாகாதென உச்ச மன்றம் தீர்ப்புக் கூறியது. இவ்விரு சரத்துகளும் திருத்தப்பட்டு மீண்டும் ஒரு சட்டம் 1970ல் இயற்றப்பட்டது. இச் சட்டத்தின்படி அந்தக் கம்பெனிகள், வங்கியியத்தொழிலில் ஈடுபட அனுமதிக்கப்பட்டன. மேலும் சற்று உயர்ந்த வீதத்தில், ரொக்கமாகவும், அரசுப் பிணையங்களாகவும் நிறையீடு வழங்கத் தீர்மானிக்கப்பட்டது. மொத்தம் அரசு செலுத்தவேண்டிய நிறையீட்டுத் தொகை ரூ. 87·4 கோடியாகவிருந்தது.

நாட்டுடைமையாக்கப்பட்ட பதினான்கு வங்கிகள் அதே பெயர்களுடன் தொழில்புரிய அனுமதிக்கப்பட்டன. ஆனால், பெயர்களின் இறுதியிலிருந்த 'வரையறுக்கப்பட்டது' என்னும் சொல்லுக்கு ஈடான ஆங்கிலச் சொல்லான 'லிமிடெட்' என்னும் சொல்லும், ஒருசில வங்கிகள் பெயருக்கு முன்னர் இருந்த 'தி' (The) என்ற சொல்லும் நீக்கப்பட்டன. நாட்டுடைமையாக்கப்பட்ட பிறகு மைய அரசே இவ் வங்கிகளின் முழு உரிமையாளராயிற்று. ஒவ்வொரு வங்கிக்கும் தலைமை நிருவாக அலுவலராகப் பணியாற்றியவர் காப்பாளர் என்றழைக்கப்பட்டார். அரசு செலுத்த வேண்டிய நிறையீட்டுத் தொகையான ரூ. 87·4 கோடியினை ரொக்கமாகவோ, மைய அரசுப் பிணையங்களாகவோ வங்கிகள் விரும்பியவாறு கொடுக்க அரசு ஒப்புதல் அளித்தது. நிறையீடு வழங்குதல் கீழ்க்காணும் முறையில் அமைந்திருந்தது:

(i) ரொக்கமாகப் பெற விரும்பிய வங்கிகளுக்கு, மூன்று சமமான தவணைகள் மூலம் அத் தொகையினைப் பெறும் வகையில் ரிசர்வ் வங்கி மீது எழுதப்பட்ட காசோலைகள் கொடுக்கப்பட்டன. ஒவ்வொரு தவணைக்கான தொகைக்கும் 4 விழுக்காடு வீதம் வட்டி செலுத்தப்படும். (ii) மைய அரசுப் பிணையங்களைப் பெற்றுக் கொள்ள விரும்பிய வங்கிகட்கு அவற்றினுடைய விருப்பப்படி 4·5 விழுக்காடு வட்டியுள்ள 10 ஆண்டு தவணைப் பிணையங்களோ, 20 ஆண்டுத் தவணையுள்ள 5·5 விழுக்காட்டுப் பிணையங்களோ வழங்கப்பட்டன. (iii) நிறையீட்டுத் தொகையில் பகுதியை ரொக்கமாகவும், பகுதியை மேலே குறிப்பிட்டுள்ள இரண்டு வகைப் பிணையங்களில் ஒருவகைப் பிணையமாகவும் பெறும் வசதியும் அளிக்கப்பட்டது.

நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகளைப்பற்றிய விவரங்கள் கீழ்க்காணும் அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளன. அவை 1969ஆம் ஆண்டு சூன் திங்கள் 27ஆம் நாளிலிருந்த நிலை :

வங்கியின் பெயர்	நிறுவப்பட்ட ஆண்டு	அலுவலகங்களின் எண்ணிக்கை	மொத்த வைப்புத் தொகை [கு. ரூ. கோடியில்]	அளிக்கப்பட்டிருந்த கடன் தொகை [கு. ரூ. கோடியில்]
1. சென்ட்ரல் பாங்க் ஆப் இந்தியா	1911	564	448	323
2. பாங்க் ஆப் இந்தியா	1906	274	364	243
3. பஞ்சாப் நேஷனல் பாங்க்	1894	570	355	243
4. பாங்க் ஆப் பரோடா	1908	372	280	180
5. யுனைடெட் கமர்ஷியல் பாங்க்	1943	348	203	137
6. கனரா பாங்க்	1906	325	149	108
7. யுனைடெட் பாங்க் ஆப் இந்தியா	1950	175	146	108
8. தேனு பாங்க்	1938	234	124	76
9. யூனியன் பாங்க் ஆப் இந்தியா	1919	240	115	74
10. அலகாபாத் பாங்க்	1865	153	112	87
11. சிண்டிகேட் பாங்க்	1925	307	111	91
12. இந்தியன் பாங்க்	1907	217	80	60
13. பாங்க் ஆப் மகாராட்டிரா	1935	153	77	54
14. இந்தியன் ஓவர்சீஸ் பாங்க்	1936	198	68	45
		4,130	2,632	1,829

வங்கிகளுக்கு நிறையீடு ரொக்கமாகவும், அரசுப்பிணைய மாகவும் செலுத்தப்பட்டதென்று குறிப்பிட்டோம். அரசு, அவ்வாறு வெவ்வேறு வங்கிகளுக்குச் செலுத்தவேண்டிய விவரங்கள் கீழ்க்காணும் பட்டியலில் கொடுக்கப்பட்டுள்ளன.

நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகளுக்குச் செலுத்தப்பட வேண்டிய நிறையீட்டுத்தொகை.

வங்கியின் பெயர்	நிறையீட்டுத் தொகை [ரூ. கோடியில்]
1. தி சென்ட்ரல் பாங்க் ஆப் இந்தியா லிமிடெட்	17·5
2. தி பாங்க் ஆப் இந்தியா லிமிடெட்	14·7
3. தி பஞ்சாப் நேஷனல் பாங்க் லிமிடெட்	10·2
4. தி பாங்க் ஆப் பரோடா லிமிடெட்	8·4
5. தி யுனைடெட் கமர்ஷியல் பாங்க் லிமிடெட்	8·3
6. யுனைடெட் பாங்க் ஆப் இந்தியா லிமிடெட்	4·2
7. கனரா பாங்க் லிமிடெட்	3·6
8. தேனு பாங்க் லிமிடெட்	3·6
9. சிண்டிகேட் பாங்க் லிமிடெட்	3·6
10. தி யூனியன் பாங்க் ஆப் இந்தியா லிமிடெட்	3·1
11. அலகாபாத் பாங்க் லிமிடெட்	3·1
12. தி இந்தியன் ஓவர்ஸீஸ் பாங்க் லிமிடெட்	2·5
13. தி பாங்க் ஆப் மகாராஷ்டிரா லிமிடெட்	2·3
14. தி இந்தியன் பாங்க் லிமிடெட்	2·3
	87·4

ஸ்டேட் வங்கியில் கூடச் சிறிய விழுக்காடு தனிப்பட்ட வங்குநர்கள் இருக்கின்றனர். ஆனால், 1969ஆம் ஆண்டு

நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகளில் தனி நபர்களே பங்குதாரராக இல்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும். 1969 ஆம் ஆண்டிலிருந்த தனியார் துறை வங்கிகளில் 77 விழுக்காட்டுப் பகுதி நாட்டுடைமையாக்கப்பட்டுவிட்டது. அட்டவணையிலிட்ட வங்கிகள், அட்டவணையிலிடா வங்கிகள், அயல் நாட்டு வங்கிகள் ஆக 1770 கிளை அலுவலகங்களைக்கொண்ட 67 வங்கிகள் நாட்டுடைமையாக்கப்படவில்லை. அவை அனைத்தும் ரூ. 802 கோடி வைப்புத்தொகையாகப் பெற்றிருந்தன. பதினொரு வணிக வங்கிகள் நாட்டுடைமையாக்கப்பட்டபின் ஸ்டேட் வங்கி, ஸ்டேட் வங்கியின் 7 துணை வங்கிகள், 14 நாட்டுடைமையாக்கப்பட்ட பெரும் வணிக வங்கிகள் ஆக 22 வணிக வங்கிகள் பொதுத்துறை வங்கிகளாகத் திகழ்கின்றன. 14 வணிக வங்கிகள் நாட்டுடைமையாக்கப்பட்ட நேரத்தில், அதாவது, 1969 ஆம் ஆண்டு, ஸ்டேட் வங்கியும் அதனுடைய துணை வங்கிகளும் 2454 கிளை அலுவலகங்களையும் மொத்த வைப்புத்தொகையில் 27 விழுக்காட்டுப்பகுதியினைத் தங்களுடைய வைப்பாகவும் பெற்றிருந்தன. அதுபோன்று அந்த ஆண்டு நாட்டுடைமையாக்கப்பட்ட 14 வணிக வங்கிகள் 4,130 கிளை அலுவலகங்களையும் மொத்த வைப்புத்தொகையில் 56 விழுக்காட்டுப் பகுதியினை வைப்புத்தொகையாகவும் பெற்றிருந்தன. இவ்வாறு மேலும் பதினொரு வணிக வங்கிகள் நாட்டுடைமையாக்கப்படுவதன் மூலம் வங்கியிய அலுவலகங்களில் 80 விழுக்காட்டுப் பகுதியும், வங்கியிய வைப்புத்தொகையில் 85 விழுக்காட்டுப் பகுதியும் பொதுத் துறையின்கீழ்க்கொண்டு வரப்பட்டன.

புதிய வங்கிகளின் நிருவாகம்: ஒவ்வொரு வங்கியும் மைய அரசால் அமைக்கப்படும் 7 உறுப்பினர்களுக்கு மிகாத ஓர் இயக்குநரவை மூலம் நிருவகிக்கப்படும். மைய அரசே வங்கியின் நலன் கருதி ஓர் இயக்குநரை நீக்கிவிட்டு வேறு இயக்குநரை நியமிக்கும் உரிமை பெற்றுள்ளது. வங்கிகளின் பழைய பெருந்தலைவர்களே அந்தந்த வங்கியின் காப்பாளராக இருப்பாரென்றும் அரசு அறிவித்தது. அவ்வாறு அவர் காப்பாளராக இருக்க விரும்பாத நிலையில் புதிய நபரைக் காப்பாளராகவும் நியமிக்கலாமென்று அரசு அறிக்கை விளக்கிற்று.

புது வங்கிகளின் இயக்குநரவை அமைப்பு, புது வங்கிகளைக் கூட்டுருக்களாக மாற்றியமைப்பது, இரண்டு வங்கிகளை இணைப்பது போன்ற கொள்கைகளை மைய அரசு ரிசர்வ் வங்கியுடன் கலந்தாலோசித்து உரிய முறையில் திட்டம் தீட்டும். பிற வங்கிகளைப்போன்றே இவ் வங்கிகளும் ஆண்டிறுதியில் தங்கள் கணக்கு

கூ முடித்து மைய அரசு நியமிக்கும் தணிக்கையர்கூக் கொண்டு தணிக்கை செய்ய வேண்டும். தணிக்கையரின் அறிக்கை மைய அரசுக்கு அனுப்பப்படும். தணிக்கை அறிக்கையின் படிகள், அந்தந்த வங்கிக்கும், நாடாளுமன்றத்திற்கும் அனுப்பப்படுகின்றன. வங்கிகளின் நிகர இலாபத்தினை மைய அரசு பெற்றுக்கொள்கின்றது.

நாட்டுடைமையாக்கலின் நோக்கங்களும் விளைவுகளும் :

பதினான்கு பெரும் வங்கிகள் கீழ்க்கண்ட காரணங்களினால் நாட்டுடைமையாக்கப்பட்டன :

(1) ஒரு சிலரிடம் மட்டும் பொருளாதாரத்திறன் குவிவதைத் தடுக்கும் நோக்கத்துடன்.

(2) வேளாண்மை, சிறு தொழில்கள் போன்றவற்றுக்குப் போதிய கடன் கிடைக்க வழி செய்யும் முகத்தான் வேண்டி.

(3) தொழில் முனைவோர்களுக்குப் போதிய நிதிவசதி அளிப்பதன் மூலம் அவர்களை ஊக்குவித்து அதன்வழி நாட்டுப் பொருளாதார வளர்ச்சியினை வளர்க்க.

(4) வங்கியியல் மேலாண்மையினை ஒரு தொழிலாக மாற்றுவதற்கு முன்னேடியாக.

(5) வங்கியிய அலுவலர்களுக்குப் போதிய பயிற்சியளிக்க.

(6) வங்கி வசதியற்ற சிறு கிராமங்களில் வங்கியிய அலுவலகங்கள் தொடங்க.

வங்கிகள் நாட்டுடைமையாக்கப்பட்டதன் மூலம் ஒரு பெரும் புரட்சியே ஏற்பட்டுள்ளதென்று கூறலாம். இச் சாதனத்தின் வழி நாட்டுப் பொருளாதார வளர்ச்சியில் ஒரு திருப்பமே ஏற்பட்டுள்ளது. வங்கியியல் தொழில் வட்டித்தொழில் மட்டுமன்று என்பதனை வங்கியியரும் பொதுமக்களும் உணர்ந்துள்ளனர். நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகள் பொதுவுடைமைக் கோட்பாட்டினைச் செயல்படுத்தத் தொடங்கிவிட்டன. வங்கியிய முதலீட்டுக் கோட்பாடுகளிலும் மாபெரும் புரட்சியினைச் செய்துள்ளன. வங்கிக் கடன்கள் இப்பொழுதெல்லாம் பினை சார்ந்தவையாக இல்லாது நோக்கம் சார்ந்தவையாக மாறிவிட்டன. வெற்றிகரமான, இலாபகரமான திட்டமிருந்தால் வங்கிக்கடன் பெறலாமென்ற நிலை எழுந்துள்ளது. வங்கிகள் எளிய மக்களின் நாணயத்தில் நம்பிக்கைகொண்டு கடனளிக்க முற்பட்டன. நகர்ப்புறங்கள்தாம் வங்கிகளின் எல்லை என்பது பழங்கதையாகி விட்டது. கிராமங்களை அடைய வேண்டுமென்பது வங்கிகளுடைய புது நோக்காக அமைந்துள்ளது. நாட்டுடைமை ஆக்கப்பட்ட பிறகு

ரிசர்வ் வங்கி, வங்கிகள்மீது முழுக்கட்டுப்பாடு கொள்ளமுடிகிறது. பணவாக்கக் கைக்கோள்கள் செம்மையாகச் செயல்படுத்தப் படுகின்றன.

நாட்டுடைமையாக்கலின் முழுப்பயனும் அடைந்துவிட்ட தாகக் கூற முடியாதெனினும் வங்கிகள், நாட்டுடைமையாக்கப் பட்ட பிறகு பல துறைகளிலும் வளர்ச்சி பெற்றுள்ளனவென்று கூறலாம்.

கிளை வளர்ச்சி: நாட்டுடைமையாக்கப்பட்ட பிறகு வங்கிகள் கொண்டுள்ள கிளைப் பெருக்கம் குறிப்பிடத் தக்கதாகும். பெரும் பாலும் புதிய கிளை அலுவலகங்கள் சிறு நகரங்களிலும், கிராமங் களிலுமே தொடங்கப்பட்டுள்ளன. வங்கிகள் நாட்டுடைமை யாக்கப்பட்ட பிறகு எவ்வளவு கிளை அலுவலகங்கள் புதிதாகத் திறக்கப்பட்டுள்ளனவென்பது கீழ்க்காணும் அட்டவணை மூலம் அறியலாம்:

(1) இந்திய வங்கிகளின் கிளைப் பெருக்கம்: வங்கிகள் நாட்டுடைமையாக்கப்பட்ட ஐந்தாண்டுக் காலத்தில் வங்கிகளின் கிளை அலுவலகங்களின் எண்ணிக்கை பறத்தாழ இருமடங்காயிற்று. பெரும்பாலான கிளைகள் கிராமங்களிலும், சிறு நகரங் களிலும் அமைக்கப்பட்டன. கிளை அலுவலகங்கள் எந்த அளவுக்குப் பெருகின என்பது கீழ்க்காணும் பட்டியலிலிருந்து புலனாகும்:

வங்கிகள்	ஒவ்வோர் ஆண்டின் அலுவலக எண்ணிக்கை					ஜூன் 1974 இல் மொத்தக் கூட்டு வங்கி அலுவலகங்கள்
	ஜூன் 1969	ஜூன் 1970	ஜூன் 1971	ஜூன் 1973	ஜூன் 1974	
ஸ்டேட் வங்கியும் துணை வங்கிகளும்	2,462	2,935	3,519	4,430	4,721	2,262
நாட்டுடைமையாக்கப்பட்ட பதினான்கு வங்கிகள்	4,134	5,318	6,368	8,109	9,017	4,883
இதர இந்திய வணிக வங்கிகள்	1,536	1,747	1,996	2,693	3,065	1,529
	8,132	10,000	11,883	15,232	16,806	8,674

மேற் குறிப்பிட்டுள்ள அட்டவணை 1969ஆம் ஆண்டிலிருந்து 1974ஆம் ஆண்டுக்குள் எந்த அளவிற்குக் கிளை அலுவலகங்கள் பெருகியுள்ளன என்பதனை விளக்கும். 1972—73-ல் 1756 கிளை அலுவலகங்கள் திறக்கப்பட்டன. ஆனால், 1973—74-ல் 1593 கிளை அலுவலகங்கள் மட்டுமே திறக்கப்பட்டன. வேண்டிய இடத்திலிருந்து வங்கிகள் திறக்கவேண்டுமெனப் போதிய வேண்டுகோள் இல்லாததே இவ்வாறு கிளைகள் திறப்பது குறைந்ததற்குக் காரணமெனத் தெரிவிக்கப்பட்டது.

(2) கிராமச் சார்புமை: 1969ஆம் ஆண்டுக்கு முன்னர் இலாபமில்லை என்பதனைக் காரணம் காட்டிக் கிராமங்களில் வங்கியியல் அலுவலகங்கள் திறக்கப்படவில்லை. ஆனால், பதினான்கு வங்கிகள் நாட்டுடைமையாக்கப்பட்ட பிறகு இலாபங் கருதாது கிராமங்களிலும் வங்கியியல் அலுவலகங்கள் திறக்கப்பட்டன. 1972ஆம் ஆண்டு ஸ்டேட் வங்கி தொடங்கிய புதிய கிளை அலுவலகங்களில் 40 விழுக்காட்டுக்கு மேலான கிளை அலுவலகங்கள் கிராமப் பகுதிகளிலேயே திறக்கப்பட்டன. நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகள் கிராமங்களில் திறந்த வங்கி அலுவலகங்களின் எண்ணிக்கை 1969ஆம் ஆண்டிலிருந்ததைப்போன்று 1974-ல் இருமடங்காயிற்று. 1969ஆம் ஆண்டிலிருந்து 1974ஆம் ஆண்டுக்குள் புதிதாகத் திறக்கப்பட்ட 8804 புதிய அலுவலகங்களில் ஏறத்தாழ 4344 கிளை அலுவலகங்கள் கிராமப் பகுதிகளிலேயே திறக்கப்பட்டன. 1969ஆம் ஆண்டு கிராமங்களில் வங்கியியல் அலுவலகங்களின் எண்ணிக்கை 1831 ஆக இருந்தது. ஆனால், 1974ஆம் ஆண்டு அது 6,175 ஆக உயர்ந்தது. எனவே, பதினான்கு வணிக வங்கிகள் நாட்டுடைமையாக்கப்பட்டதன் விளைவாக 1974ஆம் ஆண்டில் கிராமங்களிலிருந்த வணிக வங்கிகளின் எண்ணிக்கை 1969ஆம் ஆண்டு அதாவது அவ் வங்கிகள் நாட்டுடைமையாக்கப்படுவதற்கு முன்பிருந்ததுபோன்று மூன்று மடங்காக உயர்ந்ததெனலாம்.

(3) வைப்புத்தொகை திரட்டுதல்: வங்கிகள் நாட்டுடைமையாக்கப்பட்ட பிறகு வைப்புத்தொகை மிக அதிகமாக வளர்ந்தது எனக் கூறலாம். நாட்டுடைமையாக்கப்பட்ட ஐந்தாண்டுக் காலத்திற்குள் வங்கிகளின் வைப்புத்தொகையின் அளவு இரு மடங்காகியுள்ளது. 1969ஆம் ஆண்டு ரூ. 4,646 கோடி வைப்புத்தொகை பெற்றிருந்த வங்கிகள் 1974ஆம் ஆண்டு ஏறத்தாழ ரூ. 10,695 கோடி வைப்புத்தொகை பெற்றிருந்தன. வங்கிகள், ஆண்டுத்தொகை அல்லது ஓய்வுக்காலத் திட்டம், விவசாயிகள் வைப்புத் திட்டம், காப்பீட்டுடன் இணைக்கப்பெற்ற

சேமிப்பு வங்கிக் கணக்கு போன்ற பல புதிய வகையான கணக்கு களைத் தொடங்குவதன் மூலம், வைப்புத் தொகையினைப் பெருக்கிக் கொள்ள ஆவன செய்கின்றன.

வைப்புத் தொகைப் பெருக்கம் (1969 முதல் 1974 வரை)

ஆண்டு	மொத்த வைப்பு (ரூ. கோடியில்)	வைப்புத் தொகை அதிகரிப்பு (ரூ. கோடியில்)	அதிகரிப்பு விழுக்காடு
1969 ஆம் ஆண்டு சூன் முடிய	4,646	677	13·5
1970 ஆம் ஆண்டு சூன் முடிய	5,275	629	13·5
1971 ஆம் ஆண்டு சூன் முடிய	6,216	941	17·9
1972 ஆம் ஆண்டு சூன் முடிய	7,596	1,380	22·2
1973 ஆம் ஆண்டு சூன் முடிய	9,018	1,422	20.0
1974 ஆம் ஆண்டு சூன் முடிய	10,635	1,617	18·0

1972, 73 ஆம் ஆண்டுகளில் அரசு தீட்டிய திட்டங்களின் காரணமாகவும் பணவீக்கத்தின் காரணமாகவும் வங்கிகள் பெருமளவில் வைப்புத்தொகை திரட்டின. இருப்பினும், பெரும் பகுதி நகர்ப்புறங்களிலிருந்து திரட்டப்பட்டதே தவிர, கிராமப் பகுதிகளிலிருந்து போதிய அளவு வைப்புத்தொகை திரட்டப்பட வில்லை எனக் குறிப்பிடலாம்.

(4) வைப்புத்தொகை இருமடங்கானதைப் போன்றே 1969 ஆம் ஆண்டிலிருந்து 1975 ஆம் ஆண்டு முடிவதற்குள் வங்கிகள் கடன் வழங்கிய தொகை இரு மடங்குக்குமேல் அதிகரித்தது. 1974 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட கடன் தொகை 1969-ல் வழங்கப்பட்ட கடன் தொகையைவிட 110 விழுக்காடு கூடுதலாகும். 1969 ஆம் ஆண்டு வழங்கப்பட்ட கடன் தொகை ரூ. 3,599 கோடியாகும். இத் தொகை 1974 ஆம் ஆண்டில் 7,733 கோடியாக உயர்ந்தது. பெரும் வங்கிகள் நாட்டுடைமை யாக்கப்பட்ட நோக்கங்களிலொன்று, முக்கியத் துறைகளுக்குக் கடன் வழங்குதல் என்பதேயாகும். எனவே, வேளாண்மை, சிறு

தொழில் நிறுவனங்கள், தனியாகத் தொழில் நடத்தும் பொறியாளர்கள், மருத்துவர்கள் போன்றவர்களுக்குக் கொடுத்த கடன் கணக்குகளின் எண்ணிக்கை மிக அதிகமான அளவில் உயர்ந்தது. 1969 ஆம் ஆண்டு இவ்வாறு கடன் பெற்றவர்களின் எண்ணிக்கை 2·60 இலட்சமேயாகும். இவ்வெண்ணிக்கை 1972-லேயே 15·59 இலட்சமாக உயர்ந்தது. வணிக வங்கிகள் முக்கியத் துறைகளுக்குக் கொடுத்த கடன் 1969ஆம் ஆண்டு ரூ. 488 கோடியாகவிருந்தது. இத் தொகை 1978ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் ரூ. 1367 கோடி உயர்ந்தது. ஏற்றுமதித் தொழிலிலீடுபட்டிருந்த தொழில் நிறுவனங்கள் பெருமளவில் கடன் வசதி பெற்றது குறிப்பிடத்தக்கதாகும். இதுவரை புறக்கணிக்கப் பட்டு வந்த சிறுதொழில் நிறுவனங்களும் போதிய அளவு நிதிவசதி பெற்றன. 1969-ல் ரூ. 593 கோடி கடன் வசதி பெற்ற சிறு தொழில் நிறுவனங்கள் துறை 1978-ல் ரூ. 1,170 கோடி பெற்றது. கடன் பெற்ற தொழில் நிறுவனங்களின் எண்ணிக்கையும் 56,983-லிருந்து 1,68,000 ஆக உயர்ந்தது. தொழில் நிறுவனங்களுக்கு நடைமுறை முதல் மட்டுமன்றித் தவணைக் கடனும் வணிக வங்கிகள் கொடுக்கத் தொடங்கியுள்ளது குறிப்பிடத்தக்கதாகும். இது குறித்த விவரங்களை முன்னதோர் அத்தியாயத்திலேயே விளக்கினேம்.

வேளாண்மைத் துறைக்கு வழங்கப்பட்ட கடன் மதிப்பு 1969ஆம் ஆண்டிலிருந்த ரூ. 188 கோடியிலிருந்து 1978-ல் ரூ. 567 கோடியாக உயர்ந்தது. இருப்பினும் மொத்த வங்கியியல் கடனில் இத் தொகை 9 விழுக்காடேயாகும். இந்தியாவின் மிக முக்கியத் தொழிலான வேளாண்மைக்கு வங்கிகள் நாட்டுடைமையாக்கப்பட்ட பிறகும் மொத்த வங்கியியல் கடனில் 10 விழுக்காட்டுக்குக் குறைவாகவே கடன் கொடுக்கப்படுவது வருந்தத் தக்கதாகும். வங்கிகளால் வேளாண்மைக்கு விதைகள், உரங்கள் வாங்கவும், நில மராமத்துச் செய்யவும், விவசாயிகள், கோழிப் பண்ணை போன்ற துணைப் பண்ணைகள் தொடங்கவும் கடன் வழங்கப்படுகின்றது. இருப்பினும் வழங்கப்படும் கடன் தொகை மிகவும் குறைவு. இன்னும் இத் தொகை கூடுதலாக்கப்பட வேண்டும்.

(5) நாட்டுடைமையாக்கப்பட்டதால் ஏற்பட்ட அடுத்த விளைவு வங்கிகள் அதிக அளவில் இலாபமீட்டியதேயாகும். வங்கிகள் 1970ஆம் ஆண்டு ஈட்டிய இலாபத்தைவிட 1972-73ஆம் ஆண்டில் 26 விழுக்காடு கூடுதலான இலாபம் ஈட்டின. இவ்வாறு இவ் வங்கிகள் அதிக அளவில் இலாபமீட்ட அதிக அளவில் வங்கிகள் கடன் வழங்கியதும் கடனுக்குரிய வட்டி

வீதத்தை அதிகப்படுத்தியதும் காரணங்களாக அமைந்தன. 1971ஆம் ஆண்டு ரூ. 142·1 கோடி இலாபமீட்டிய ஸ்டேட் வங்கி 1973-ல் ரூ. 207·3 கோடி இலாபமீட்டியது. இதர நாட்டுடைமையாக்கப்பட்ட வணிக வங்கிகளின் இலாபத்தொகை 1971-லிருந்த ரூ. 330·5 கோடியிலிருந்து 1973 ல் ரூ. 488·7 கோடியாக உயர்ந்தது. இலாப அதிகரிப்பு 48 விழுக்காடாகும். ரூ. 10 கோடிக்குமேல் வைப்புத்தொகை பெற்றிருக்கும் 24 அட்டவணையிலிட்ட வங்கிகள் இக் காலத்தில் தங்களுடைய இலாபத் தொகையினை ரூ. 38 கோடியிலிருந்து ரூ. 69·7 கோடியாகப் பெருக்கிக்கொண்டது குறிப்பிடத்தக்கதாகும். எனவே, தனியார்துறை வங்கிகள் ஈட்டிய இலாபத்தைப் பொதுத்துறை வங்கிகள் ஈட்டிய இலாபத்துடன் ஒப்பிடுமிடத்து, தனியார்துறை வங்கிகளின் இலாபம் மிக அதிகமென்று கூறலாம். இந்த நிலைக்கு முக்கியக் காரணம் பொதுத்துறை வங்கிகள் கிளைப்பெருக்கக் கோட்பாட்டினைச் செயல்படுத்த—அதாவது அதிக அளவில் கிளை அலுவலகங்கள் திறக்க—தங்களுடைய இலாபத்தில் பெரும் பகுதியினைச் செலவிட்டதேயாகும்.

(6) வங்கிகளின் நிருவாகத்தைப் பொறுத்தவரை நாட்டுடைமைக்குப் பிறகும் வங்கிகளின் நிலையில் எவ்வித மாற்றமுமில்லை இருப்பதாகத் தெரியவில்லை. வங்கியியல் மேலாண்மைத் தொழில் வளர்ச்சிக்குப் பெருமளவில் முயற்சிகள் எடுக்கப்பட்டதாகத் தெரியவில்லை. இதற்கு முக்கிய காரணம், நாட்டுடைமைக்குப் பிறகு பலர், இதனை எதிர்த்து நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்ததன் காரணமாக அரசு இதற்குத் தீவிர முயற்சிகள் எடுத்துக் கொள்ள முடியாததேயாகும். நாட்டுடைமைக்குப் பிறகும் வங்கிகளின் அலுவலர்கள் இதரப் பணியாளர்கள் நோக்கில் மாறுதல் ஏற்படவில்லை. இன்னும் வாடிக்கைக்காரர்கள் முழு மன நிறைவெய்தும் வகையில் வங்கிகள் பணிபுரியவில்லை. வங்கிப் பணியாளர்கள் மிகைநேர ஊதியம் பெறுவதிலேயே கருத்தாயிருக்கின்றனர் என்னும் குறைபாடும் இருந்து வருகிறது. இக் குறைபாடுகளைக் களைய அரசு உரிய நடவடிக்கைகள் எடுத்து வருவது மகிழ்ச்சிக்குரியதாகும்.

(7) வங்கிகள் நாட்டுடைமையாக்கப்பட்டவுடன் புதுப்புதுத் திட்டங்கள் தீட்டப்பட்டுச் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. அவற்றுள் ஒன்றேமுன்னோடி வங்கித்திட்டமாகும் (Lead bank scheme). இத் திட்டத்தின் மூலம் மைய அரசு நாட்டின் பல பகுதிகளையும் வளர்ச்சிபெறச் செய்ய வெவ்வேறு நடவடிக்கைகள் எடுத்து வருகிறது. இது குறித்த, இதர விவரங்களைச் சென்ற அத்தியாயத்தில் விளக்கினேம்.

(8) மாற்றுவீத வட்டித் திட்டத்தின் மூலம் நாட்டுடைமை யாக்கப்பட்ட வங்கிகள் சமூகத்தில் நலிந்தோருக்குக் குறைந்தவீத வட்டியில் கடன் கொடுத்து அவர்கள் நிலையினை உயர்த்தத் திட்டமிட்டுள்ளன.

மேற்குறிப்பிட்டுள்ள விவரங்களிலிருந்து வங்கிகள் நாட்டு டைமையாக்கப்பட்ட பிறகு அவை புரிந்துள்ள சாதனைகளை நன்கு அறிந்துகொள்ளலாம். இருப்பினும் பொதுமக்கள் இவ் வங்கிகளிட மிருந்து மேலும் பல சாதனைகளை எதிர்பார்க்கின்றனர். எனவே, வங்கிகள் கீழ்க்காணும் கருத்துகளை நோக்கில்கொண்டு செயல்பட வேண்டும் :

(1) வங்கிகள் திறந்துள்ள கிளை அலுவலகங்கள் போதா. இந்த நிலையிலும் 33,000 மக்களுக்கு ஒரு வங்கியியல் அலுவலகமே உள்ளது. இதனைத் தவிர்த்து நிலையை மேலும் உயர்த்த வங்கிகள் இன்னும் அதிக அளவில் கிளை அலுவலகங்கள் திறக்கவேண்டும்.

(2) வங்கிகள் இன்னும் நகர்சார்புமை உடையவை யாகவே திகழ்கின்றன. இது வங்கிய சம வளர்ச்சிக்கு உறுதுணை யாக அமையாது. எனவே, வங்கிகள், கிராமங்களில் மேலும் கிளை அலுவலகங்களைத் திறக்க முன்வர வேண்டும்.

(3) வங்கிகள் வைப்புத்தொகையை அதிகரிக்க மேலும் முயற்சிகள் எடுத்தல் வேண்டும்.

(4) வங்கிகள் வேளாண்மைக்கும் சிறுதொழில் நிறுவனங் களுக்கும் அளிக்கும் கடன் போதுமானதாக இல்லை. எனவே, இத் துறைகளுக்கு மேலும் கூடுதலாகக் கடன் வழங்க ஆவன செய்தல் வேண்டும்.

(5) கிராமப்புறங்களை மேலும் வளம்பெறச் செய்ய முனைவு வங்கித் திட்டத்தினைச் சிறந்த முறையில் செயல்படுத்தலாம்.

வங்கிகள் முன்னேறக் கொடுக்கப்பட்டுள்ள கருத்துரைகள் : இந்திய வணிக வங்கிகள் முன்னேற்றம் செய்யும் வகையில் கீழ்க் காணும் கருத்துகள் கொடுக்கப்பட்டுள்ளன :

(1) கிராமப் பகுதிகளில் பெருமளவில் கிளைகள் திறக்கப்பட விருப்பதால், வங்கிகளின் பணியாளர்கள் எளிமை வாய்ந்தவர்க ளாகவும், கிராம மக்களை நன்கு புரிந்துகொள்பவர்களாகவும் இருத்தல் அவசியம். அவசியமானால் அவர்களுக்குப் போதிய பயிற்சியுமளிக்கலாம்.

(2) புதிய கிளைகள், மையப் பகுதிகளில், எல்லோரும் எளிதில் செல்லக்கூடிய இடங்களில் நிறுவப்பட வேண்டும்.

(3) வங்கியியற் பணியாளர்களுக்குக் கொடுக்கப்படும் பயிற்சி போதுமானதாக இல்லை. மேலும். வங்கியியப் பணிக்கு, கலைத் துறை, அறிவியல் துறையைச் சேர்ந்த பட்டதாரிகளைப் பணியில் அமர்த்துவதைவிட, வங்கியியல் பாடங்களைக் கல்லூரி நிலையில் படிக்கும் வணிகவியல் பட்டதாரிகளைப் பணியிலமர்த்துவது மேலும் பொருத்தமானதாக அமையும். கிராமப்புறங்களிலுள்ள கிளை அலுவலகங்களில் பணிபுரியவிருக்கும் பணியாளர்களைக் கிராமப்புறங்களிலிருந்தே தேர்ந்தெடுத்துப் பணியிலமர்த்தலாம்.

(4) வங்கிகள் நாட்டுடைமையாக்கப்பட்ட பிறகு வங்கிகளின் தலைமைச் செயல் அலுவலர்களும் (Chief Executives), நிருவாக இயக்குநர்களும் ரிசர்வ் வங்கியின் கட்டுப்பாட்டின் கீழும் நிதியமைச்சின் கீழும் பணியாற்ற வேண்டியுள்ளதால், அவர்கள் தன்னிச்சையுடன் செயல்பட முடியவில்லை. எனவே, பிரச்சினைகளுக்கு உடனுக்குடன் தீர்வுகாண முடிவதில்லை. எனவே, வங்கிகளின் நிருவாகத்தினருக்குத் தனிப்பட்ட முறையில் செயல்பட உரிமை வழங்கவேண்டும். ரிசர்வ் வங்கிக்கு வங்கியியற் செயல் முறைகளை நிலைப்படுத்தும் பொதுக் கோட்பாடுகளை நிர்ணயிக்கும் உரிமை வழங்கப்படலாம். அக் கோட்பாடுகளுக்குட்பட்டு வங்கிகளின் நிருவாகத்தினர் தன்னிச்சையுடன் செயல்படுமளவிற்கு அவர்களுக்கு உரிமை வழங்கப்பட வேண்டும்.

(5) வங்கிகள் நாட்டுடைமையாக்கப்பட்ட பிறகு அவை புனரமைக்கப்படவேண்டும். நாட்டுடைமையாக்கப்பட்ட பிறகும் கூட ஒரே இடத்தில் பல வங்கியியல் அலுவலகங்கள் செயல்படுவது தேவையற்றதாகும். வங்கிகளுக்கிடையே போட்டி நிலவுவது தேவைதான். எனினும், அளவுக்குமீறிய நிலையில் போட்டியிருத்தல் விரும்பத்தக்கதன்று. அதிகமாக வைப்புத்தொகை திரட்ட வணிக வங்கிகள் போட்டி போட்டுக்கொண்டு விளம்பரத்திற்கெனக் கணக்கற்றுச் செலவுசெய்தல் அவசியந்தானா என்ற வினா எழுப்பப்பட்டு வருகிறது. அவ்வாறு தேவையற்றவகையில் செலவுசெய்வதனை விடுத்து, வைப்புகளுக்குச் சற்றுக் கூடுதலான வீதத்தில் வட்டி செலுத்தப்பட்டால் ஒவ்வொரு வங்கியும் மேலும் அதிக அளவு வைப்புகள் திரட்ட முடியுமென்ற கருத்துத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(6) ஒவ்வொரு வங்கியும், அனைத்திந்திய வங்கியாக வேண்டுமென்று முயற்சிசெய்து வருகின்றது. இது தேவையற்றதாகும். அனைந்திந்திய ரீதியில் பெரும் வங்கிகள் தோன்றுவதைவிட வட்டார ரீதியில் வங்கிகள் அமைக்கப்படுவது சிறப்பாக அமையும். அவ்வாறு வட்டார வங்கிகள் அமைக்கப்பட்டால் தேவைப்படும்போது அடுத்த வட்டாரங்களில் கிளைகள் திறந்தால்

கூட அது தலைமை அலுவலகம் உள்ள வட்டாரத்தில் மட்டும் தீவிரமாகத் தொழில் புரியலாம். கிராமங்களில் பெருமளவில் கிளைகளமைக்க முடியும். வேறு வட்டாரங்களுடன் தொடர்பு கொள்ளவேண்டிய சூழ்நிலையில் ஸ்டேட் வங்கி அல்லது வேறு அனைத்திந்திய நீதியில் செயல்படும் பெரும் வங்கிகள்மூலம் தொடர்பு கொள்ளலாம். அரசு அந்த வட்டாரத்தில் மேற் கொள்ளும் வளர்ச்சித் திட்டங்களைச் செயல்படுத்த இவ் வட்டார வங்கிகளை முகமையகங்களாகப் பயன்படுத்தலாம்.

(7) நிருவாகம்-பணியாளர்களுக்கிடையிலான உறவு நன் முறையில் அமைய எல்லா வங்கி ஊழியர்களுக்கும், அல்லது நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகளின் ஊழியர்களுக்காவது ஒரே மாதிரியான ஊதிய முறையைக் கடைப்பிடிக்க வேண்டும்.

(8) வங்கிகள் வைப்பாளர்களுக்கு வைப்பிற்காகச் செலுத்தும் வட்டிவீதம் அதிகரிக்கப்படவேண்டும்.

(9) விவசாயிகளுக்குக் கடன் வழங்குவதன் நோக்கம் முழுமையாக எய்தப்பட வேண்டுமாயின் எப்பொழுதும் கடன் தொகை ரொக்கமாகக் கொடுக்கப்பட வேண்டுமென்ற அவசிய மில்லை. கடன் தொகையானது உரம், விதைகள் வடிவில் அளிக்கப்பட்டால் கடன் வழங்குவதன் நோக்கம் முழுமையாக அடையப்படும். கடன் பெறும் விவசாயிகள் கடனை ரொக்கமாகப் பெற்றால் அதனைத் தவறுகப் பயன்படுத்தலாம். இதுபோன்ற சந்தர்ப்பங்களில் அதற்கு வாய்ப்பில்லை.

(10) ஒவ்வொரு கிராமத்திலும் வங்கியின் கிளை அலுவலகம் திறப்பது சாத்தியமானதன்று ஆனால், அதே நேரத்தில் கிராம மக்களுக்கு வங்கி வசதிகள் அளித்து, அவர்களிடமுள்ள சேமிப்புப் பணத்தைத் திரட்ட உரிய முயற்சிகள் எடுக்கப்படல் வேண்டும். எனவே, நடமாடும் வங்கிகள் தொடங்கப்படலாமென்பது சமீப காலத்தில் கொடுக்கப்பட்டுள்ள ஒரு சிறந்த திட்டமாகும். இதன்படி ஒரு நகரிலுள்ள வங்கிக் கிளை இயங்கு வண்டிகளைக் கொண்டு, அந் நகரின் சுற்றுப்புறங்களிலுள்ள இடங்களுக்கெல்லாம் சென்று மக்களுடைய சேமிப்பைத் திரட்டிக்கொண்டு வரலாம். இச் செயல் வங்கியியல் முறையினைக் கிராம மக்களுக்கிடையே எளிதில் பரப்புமென்பதில் ஐயமில்லை.

(11) மாறும் சூழ்நிலைகளுக்கேற்ப வங்கிகள் புதியமுறை வைப்புகள் மூலம் மக்களுடைய சேமிப்பைத் திரட்ட முயற்சிகள் எடுத்தல் அவசியமாகும். 'சிறுவர் சேமிப்புத் திட்டம்' 'பிக்மி வைப்புத் திட்டம்' போன்றவை குறிப்பிடத்தக்கவை.

(12) வங்கிகள் செயல்படுவது குறித்துப் பொதுமக்கள் கருத்தை அறியும்வண்ணம், ஒவ்வொரு வங்கியும் தனிப்பட்ட முறையில் ஓர் ஏட்டினைக்கொண்டு அதன்மூலம் பொதுமக்கள் கருத்தினை அறிந்து கொள்ளலாம். வங்கி செயல் புரிவதில் ஏதாவது குறைபாடு இருப்பின், அதனைத் திருத்திக்கொள்ள இத் திட்டம் வாய்ப்பளிக்கின்றது.

(13) வங்கியியல் தொழில் பொதுநலத் தொழிலாக்கப்பட்டு, தொழிலாளர் சங்கம் வங்கிகளின் நிருவாகத்தில் தலையிடுவது தடுக்கப்பட வேண்டும்.

(14) வாடிக்கைக்காரர்கள் தாமதமின்றி வங்கிகளிடமிருந்து பணம் பெற 'சடங்கின்றிக் காசோலை செலுத்தும் முறை' (Teller System) கடைப்பிடிக்கப்பட வேண்டும்.

(15) வங்கிகள் இப்பொழுது சிறுதொழில் நிறுவனங்களுக்குக் கடன் வசதி மட்டும் அளிக்கின்றன. அதனை மேலும் விரிவாக்கும் வகையில் தொழில்நுட்ப வல்லுநர்களைப் பணியிலமர்த்தி, அச் சிறு தொழில் நிறுவனங்களுக்குத் தொழில்நுட்பக் கருத்துரைகளும் வழங்கலாம்.

(16) தொழில் வளம் பெருகும் வகையில் நாட்டுடைமை யாக்கப்பட்ட வங்கிகள் வளர்ச்சியுரு வட்டாரங்களில் தொழில் நிறுவனங்கள் தொடங்க, பெருமளவில் கடன் வழங்க வேண்டு மென்பதுடன்கூட, பொதுவாக, தொழில் நிறுவனங்களுடன் இவை தொடர்பு கொண்டிருத்தல் மிக அவசியமானதாகும்.

வினாக்கள்

(1) வணிக வங்கிகள் நாட்டுடைமையாக்கப்படுவது குறித்த கருத்துகளை விளக்குக.

(2) வணிக வங்கிகள் நாட்டுடைமையாக்கப்படுவதற்கான காரணங்கள் யாவை ?

(3) வணிக வங்கிகள் நாட்டுடைமையாக்கப்படுவதால் விளையும் விளைவுகளை விளக்குக .

(4) 1969ஆம் ஆண்டு எந்தெந்த வணிக வங்கிகள் நாட்டுடைமையாக்கப்பட்டன ? நாட்டுடைமையினால் ஏற்பட்ட மாற்றங்கள் யாவை ?

(5) 1969ஆம் ஆண்டு என்ன நோக்கங்களுடன் பெரும் வங்கிகள் நாட்டுடைமை யாக்கப்பட்டன ? எந்த அளவிற்கு அந்த நோக்கங்கள் நிறைவேறின ?

(6) வங்கிகள் முன்னேறக் கொடுக்கப்பட்டுள்ள கருத் துரைகள் யாவை ?

மேற்கோள் நூற்பட்டியல்

(Bibliography)

1. Modern Banking — R. S. Sayers
2. An Out line of Money — Crousher
3. Banking Law and Practice — M. L. Tannan
4. Organised Banking — Agger
5. Indian Banking System — T. A. Vaswani
6. Currency and Banking — Dr. Mali Ram
7. Banking Law & Practice — P. N. Varslvney
8. Fundamentals of Banking Theory and Practice — A. K. Basu
9. A Review of Current Banking Theory and Practice — S. K. Basu
10. Banking in India — S. G. Panandikar and D. M. Mishani
11. Banking Theory and Practice — K. G. Shekhar
12. Law & Practice of Banking — S. R. Davar
13. The Brittish Banking Mechanism — W. Manning Dacey
14. Economics — Samuelsson
15. Reserve Bank of India Annual Reports
16. Reserve Bank of India Bulletin Issues
17. Commerce Weeklies
18. State Bank of India — Monthly Reviews

கலைச்சொற்கள்

A

Acceptance	—	ஏற்பு
Acceptance House	—	ஏற்பகம்
Administrator	—	நிருவாகர்
Advances	—	கடன்கள்
Agency	—	முகமை
Agency Houses	—	முகமையகங்கள்
Agency Services	—	முகமைப் பணிகள்
Agriculture	—	வேளாண்மை
Agriculturist	—	விவசாயி
Amalgamation of Banks	—	வங்கிகளின் இணைப்பு
Analysis	—	பகுப்பாய்வு
Apex Bank	—	உச்சி வங்கி
Asset	—	சொத்து

B

Bad debt	—	வராக் கடன்
Bank	—	வங்கி
Bank Agricultural	—	வேளாண்மை வங்கி
,, Central	—	மைய வங்கி
,, Commercial	—	வணிக வங்கி
,, Industrial	—	தொழில் வங்கி
Bank Draft	—	பணவிடை
Banker	—	வங்கியர்
Banking Companies Act	—	வங்கியியக் கம்பெனிச் சட்டம்
Banking Regulations Act	—	வங்கியிய ஒழுங்காற்றுச் சட்டம்
Bank rate	—	வங்கி வீதம்
Bill	—	சீட்டு

Bill of Exchange	—	மாற்றுச்சீட்டு
,, Treasury	—	கருவூலச்சீட்டு
,, Documentary	—	ஆவணஞ் சேர்ந்த மாற்றுச் சீட்டு
,, Foreign	—	வெளிநாட்டு மாற்றுச்சீட்டு, அயல்நாட்டு மாற்றுச்சீட்டு
,, Market	—	மாற்றுச்சீட்டுச் சந்தை
Board of Directors	—	இயக்குநரவை
Bonus	—	மேலுதியம்
Branch Banking	—	கிளை வங்கிமுறை
Branch Expansion	—	கிளைப் பெருக்கம்

C

Call Money	—	அழைப்புக் கடன்
Capital	—	முதல்
,, Authorised	—	அனுமதித்த முதல், ஆணை யுரிமைபெற்ற முதல்
,, Issued	—	வெளியிட்ட முதல்
,, Paid up	—	செலுத்திய முதல்
,, Subscribed	—	ஒப்பிய முதல்
Capital market	—	முதல் சந்தை
Cash credit	—	ரொக்கக் கடன்
Cash reserve	—	ரொக்கக் காப்பிருப்பு
Central Bank	—	மைய வங்கி
Chain Banking	—	தொடர் வங்கிமுறை
Chairman	—	பெருந்தகைவர்
Cheque	—	காசோலை
Clearing House	—	தீர்வகம்
Collateral Security	—	துணைப்பிணை
Commercial Bank	—	வணிக வங்கி
Co-operative Bank	—	கூட்டுறவு வங்கி
Co-operative credit	—	கூட்டுறவுக் கடன்
Correspondent Banking	—	தொடர்பு வங்கிமுறை
Creation of money	—	பணவாக்கம், பண உற்பத்தி
Credit	—	கடன்
Credit Contraction	—	கடன் சுருக்கம்
Credit Expansion	—	கடன் பெருக்கம், கடன் விரி வாக்கம்
Creditor	—	கடனாளர்
Cumulative Deposit	—	வளர் வைப்பு
Customer	—	வாடிக்கையாளர்

D

Days of Grace	—	கருணை நாள்கள்
Debenture	—	கடன்பத்திரம்
Demand draft	—	கேட்புப் பணவிடை
Deposit	—	வைப்பு
,, Demand	—	தேவை வைப்பு
,, Fixed	—	தவணை வைப்பு
,, Cumulative	—	வளர் வைப்பு
Deposit Banking	—	வைப்பு வங்கியியமுறை
Deposit at Call	—	அழைப்பு வைப்பு
Depression	—	மந்தம்
Derived Deposit	—	வருவிக்கப்பட்ட வைப்பு
Discount	—	தள்ளுபடி
Discounting of Bill	—	மாற்றுச்சீட்டுத் தள்ளுபடி செய்தல்
Dishonoured Bill	—	மறுக்கப்பட்ட உண்டியல்
Discount Houses	—	கழிவகங்கள்
Discount rate	—	கழிவு வீதம்
Dividend	—	இலாப ஈவு
Dividend Equalisation Fund	—	இலாப ஈவுச் சமன்பாட்டு நிதி
Documentary Bill	—	ஆவணஞ் சேர்ந்த மாற்றுச் சீட்டு
Doubtful debt	—	ஐயக் கடன்
Draft	—	பணவிடை
Drawee	—	வரையப்படுவோர், பெயரவர்
Drawer	—	வரைபவர்

E

Employee	—	பணியாள்
Encumbrance	—	வில்லங்கம்
Endorsement	—	மேலெழுத்து
Exchange Bank	—	நாணயமாற்று வங்கி
Ex-offio	—	பதவியால்

F

Finance	—	நிதி
Financial	—	நிதிய
Financial management	—	நிதிய மேலாண்மை
Fixed asset	—	நிலைச் சொத்து

Fixed capital	—	நிலைமுதல், நிலையான முதல்
Fixed deposit	—	நிலைவைப்பு
Foreign Bank	—	அயல்நாட்டு வங்கி
Foreign Bill	—	அயல்நாட்டு மாற்றுச்சீட்டு
	G	
General utility Services	—	பொதுப்பயன் பணிகள்
Goldsmiths	—	பொற்கொல்லர்கள்
Government Bonds	—	அரசு பத்திரங்கள்
Gratuity	—	பணிக்கொடை
Group Banking	—	தொகுப்பு வங்கியியமுறை
Guarantee	—	பொறுப்புறுதி
Guild	—	கழகம்
	H	
Hire Purchase System	—	வாடகைக் கொள்முதல் முறை
Holder	—	உடையவர்
Hundi	—	உண்டியல்
Hypothecation	—	அடைமானம்
	I	
Import	—	இறக்குமதி
Incentive	—	ஊக்குவிப்பு
Indigenous Banker	—	நாட்டுவங்கியர்
Industrial Bank	—	தொழில் வங்கி
Industrial Development Bank	—	தொழில்வள வங்கி
Industrial Finance	—	தொழில் நிதி
Industrial FinanceCorporation	—	தொழில் நிதியக் கூட்டுரு
Industrial, Large scale	—	பேரளவுத் தொழில்
,, Small scale	—	சிற்றளவுத் தொழில்
Inslation	—	பணவீக்கம்
Inland Bill	—	உள்நாட்டு மாற்றுச்சீட்டு
Insurance	—	காப்பீடு
Intermediary	—	இடைநிலையர்
Investment	—	முதலீடு
Investment Bank	—	முதலீட்டு வங்கி
	J	
Joint Sector	—	கூட்டுத்துறை
Joint Stock Bank	—	கூட்டுப்பங்கு வங்கி
Joint Stock Company	—	கூட்டுப் பங்குக் கம்பெனி

L

Labour — உழைப்பு
Laissez Faire — தலையிடாமை
Land Development Bank — நிலவள வங்கி
Lead Bank — முனைவு வங்கி
Leakage — பணமறைவு
Letter of credit — வாணிக உறுதிக் கடிதம்
Liberalised credit — தளர்த்தப்பட்ட கடன்
Licence — உரிமம்
Liquid assets — எளிவரல் சொத்துகள்
Liquidity — எளிவரல் தன்மை
Loan — கடன்
Long-term loan — நீண்டகாலக் கடன்

M

Management — மேலாண்மை
Manging Director — மேலாண்மை இயக்குநர்
Maturity — தவணைமுடிவு, கெடு
Maximun — பெரும
Medium-term loan — இடைக்காலக் கடன்
Mixed Banking — கலப்பு வங்கியியல்
Monetary Policy — பணவாக்கக் கைகோள்
Money at call — அழைப்புப் பணம்
Moratorium — கடன் ஒத்திவைப்பு
Multiplies — பெருக்கு மடங்கு

N

National Credit Council — தேசியக் கடன்குழு
Nationalisation — நாட்டுடைமையாக்கல்
Negotiability — மாற்றுமுறைத் தன்மை
Negotiable Instrument — மாற்றுமுறை யாவணம்

O

Organisation — அமைப்பு
Organised Sector — ஒழுங்கமைதிபெற்ற பகுதி
Overdraft — மேல்வரைப்பற்று, அதிகப்பற்று
Over head charges — பொதுச் செலவுகள்

P

Paid-up-capital — செலுத்தப்பெற்ற முதல்
Partnership — கூட்டாண்மை

Post-office Savings bank	—	அஞ்சலகச் சேமிப்பு வங்கி
Premium	—	முனமம்
Primary Deposit	—	முதன்மை வைப்பு
Promissory Note	—	கடனுறுதிச்சீட்டு
Public Sector	—	பொதுத்துறை

Q

Quorum	—	குறைவெண்
Quota	—	ஒதுக்களவு

R

Receipt	—	இரசீது
Recession	—	பின்னிறக்கம்
Recurring Deposit	—	தொடர்வைப்பு
Rediscount	—	மறுகழிவு
Refinance Corporation	—	மறுநிதியக் கூட்டுரு
Remittance	—	அனுப்புகை
Risk	—	இழப்பு வாய்ப்பு

S

Safe custody Deposit	—	பாதுகாப்பு வைப்பு
Safety	—	பாதுகாப்பு
Savings	—	சேமிப்பு
Savings Bank	—	சேமிப்பு வங்கி
Scheduled Bank	—	அட்டவணையிலிட்ட வங்கி
Security	—	பிணை
Secured loan	—	பிணைக் கடன்
Self liauidity	—	சுய எளிவரல் தன்மை
Small Scale Industry	—	சிற்றளவுத் தொழில்
Solvency	—	செல்நிலைத் தன்மை
Speculation	—	ஊக வணிகம்
Subsidiary	—	துணை
Surety	—	பிணையாள்

T

Technical	—	தொழில்நுட்பமான
Technique	—	நுட்பச் செயல்முறை
Teller System	—	சடங்கின்றிக் காசோலை செலுத்தும் முறை
Term loan	—	தவணைக்கடன்
Time Deposit	—	தவணை வைப்பு

Treasury Bill	—	கருவூலச் சீட்டு
Trustee	—	பொறுப்புரிமையாளர்

U

Under writer	—	ஒப்புறுதியாளர்
Undeveloped	—	வளர்ச்சியடையாத
Unit Banking	—	ஒற்றை வங்கியிய முறை, தனி வங்கியிய முறை
Un organised Money Market	—	அமைப்பற்ற பணச்சந்தை
Unsecured loan	—	பிணையற்ற கடன்

V

Value	—	மதிப்பு

W

Wage	—	கூலி
Ware house	—	பண்டகம்
Ware house receipt	—	பண்டக இரசீது
Window dressing	—	புறப்பகட்டு
Working capital	—	நடைமுறை முதல்